



– காலச்சக்கரம் நரசிம்மா

வானதி பதிப்பகம்

https://telegram.me/aedahamlibrary

# அத்திமலைத் தேவன் - பாகம் 2

# Athimalai Devan - Part 2

Author:

காலச்சக்கரம் நரசிம்மா

**Kalachakram Narasimha**

https://telegram.me/aedahamlibrary

பொருளடக்கம்

முன்னுரை

முதல் பாகத்தில்...

முதல் மற்றும் இரண்டாம் பாகத்திற்கான ஆதார நூல்கள்

1. நடுநிசியில் மந்திராலோசனை

2. வீரகொசுவன் கையில் ஒரு தலை

3. விமோச்சனம் தேடும் லோச்சனம்

4. உதயமானான் உதயசாகரன்!

5. முக்கண்ணனும், கரிகாலனும்

6. என்ன பார்வை உந்தன் பார்வை!

7. சீற்றம்மிகு வேகவதி! சீர்மிகு காவிரி!

8. கண்ணாலே கதை பேச வந்தவள்

9. புனலை எரிக்கும் கனல்கண்ணன்

10. பிரும்ம ஓலை

11. சகலகலா சகலைகள்

12. வண்டுக்கு வண்டு தாவும் மலர்

13. அகந்தை அழிந்தது

14. திசை மாறிய நதிகள்

15. கரிகாலனின் காலணிகள்

16. காஞ்சி பிறந்தது

17. உனக்கு அவள்! எனக்கு நீ!

18. மாப்பிள்ளை... மாயப் பிள்ளை

19. பாரத புழா! பாதக விழா!

20. கடிகையில் கலவரம்

https://telegram.me/aedahamlibrary

21. ஒரு வசீகரன்... ஒரு வசீகரி

22. ஆற்று மேடையில் ஒரு அந்திம நடனம்

23. கேட்டது ஒன்று... பெற்றது மூன்று

24. குருவுக்கு ஒரு பரீட்சை

25. கடலைக் கடைந்த காரிகை

26. மகத வீணையில் மகத்தான ரகசியம்

27. மாயமான மகுடம்

28. பிருத்வி பந்தனம்

29. அரசியின் விபரீத ஆசை

30. காஞ்சியை நோக்கிப் பாயும் கடற்கோள்

31. ஊனமாகிய ஹூனம்

32. முக்கூடலில் இரு குப்தர்கள்

33. கனவில் கண்டது கையில் கிடைத்தது

34. கூடல் நகரில் ரகசிய பாதை

35. மூன்றாம் பிறை உதித்தது

36. விண்ணில் பாய்ந்த வினோத ஒளி

37. பாலக்காட்டு பக்கத்திலே ஒரு அடப்பாவி ராஜா

38. பிரக்ஞுதாராவின் பொக்கிஷம்

39. தமையனுக்கு வெற்றிக்கன்னி

40. களப்பர காடவன்

41. ஜெயன் - விஜயன்

42. இலங்கைப் படையினர்

43. அம்பர வம்பர்கள்

44. யட்ச நேத்திரங்கள்

https://telegram.me/aedahamlibrary

45. சிம்மத்தை அடக்கிய சீனப் புலி

46. நான்கு ஐந்தானது

47. மலைகளின் சங்கமம்

48. உடைந்து போன நவரத்னம்

49. ஓலையில் அதிர வைக்கும் சேதி

50. மறுபிறவியை நோக்கி...

51. புதிய அத்தி

https://telegram.me/aedahamlibrary

# முன்னுரை

தெரியாமல் தேனீக்களின் கூட்டினைக் கலைத்து விட்டேன். விளைவு, தேனீக்கள் என்னைக் கொட்டித் தீர்த்துவிட்டன. ஆமாம். "அத்திமலைத்தேவன் என்கிற இந்த சரித்திர மர்ம புதினத்தின் நான்கு பாகங்களையும் ஒன்றாக அளித்திருக்கலாமே. எங்களால் அடுத்தது என்ன என்கிற ஆவலை கட்டுப்படுத்த முடியவில்லை. இரண்டாவது பாகம் எப்போது வரும்." என்று வாசகர்கள் என்னைத் துளைத்து எடுத்து விட்டனர். தேனீக்கள் கொட்டினால் வலி ஏற்படும். ஆனால் வாசகர்கள் கொட்டியது மனதுக்கு இதத்தைத் தந்தது. ஒன்பது நாவல்களை எழுதியும், உங்கள் நாவலை வழக்கம் போன்று கீழே வைக்க இயலவில்லை என்று ஒரே மாதிரியான பாராட்டுகளை இன்னமும் கேட்டுக் கொண்டேதான் இருக்கிறேன். தருமனின் இரதத்தின் சக்கரங்கள் பூமியில் பதியவில்லை. அவை பூமியில் பதிந்த அன்று கலியுகம் பிறந்ததாக பாரதம் கூறுகிறது. எனது நாவல்களும் கீழே வைக்கப்படாமல் உங்கள் கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கின்றன. என்று, எனது நாவல்களை உங்கள் கைகளில் ஏந்திக் கொண்டிருக்க இயலவில்லை என்கிற நிலை வருமோ, அன்று காலச் சக்கரத்தின் அச்சாணியாகிய எனது எழுத்தாணி கீழே வைக்கப்படும். அம்மாதிரி நிலை எந்நாளிலும் தோன்றக் கூடாது என்று அத்திமலையானை வேண்டுகிறேன்.

அத்திமலைத்தேவன் பலரையும் மலைப்பில் ஆழ்த்தி விட்டதை உணருகிறேன். சாணக்கியன் காஞ்சியில் தோன்றியவன் என்பதே பலருக்குத் தெரியவில்லை. சந்திரகுப்தன் ஒரு காட்டுவாசி என்பதும் பலரும் அறிந்திராத விஷயம். Incubator - இல் இன்று குழந்தைகளை வைத்து உயிர் வாழ வைப்பது போன்று, சாணக்கியன் பிந்துசாரனை இயற்கை Incubator - இல் வைத்துக் காப்பாற்றினான் என்பது பிரமிப்பினை ஏற்படுத்தும் விஷயம் என்று பலரும் கூறினார்கள். சாணக்கியன் பொக்கை வாயன். ஆனால் அவன் பற்களை இழந்த விதம் உருக்கத்தை ஏற்படுத்தியது என்று பலரும் தெரிவித்தனர். அத்திமரம், குறிப்பாக தேவ உடும்பர அத்திமரம் குறித்த தகவல்கள், பட்டுப்பூச்சி ஆருடம், என்று பல அறிய விஷயங்களை கற்றோம் என்று பலரும் கூறியது என்னை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

துர்தரா, திஸ்ஸரக்கா ஆகியோரின் கதாபாத்திரங்களை கண்டு மலைத்துப் போனவர்களும் உண்டு. அசோகன் கலிங்கத்துப் போரில் புரிந்த கொடுமைகளைப் பற்றி இதுவரை நான் அறிந்ததே இல்லை

https://telegram.me/aedahamlibrary

என்று பலரும் சொன்னார்கள். உண்மை. சரித்திரம் என்பது ஒருவரின் குணங்களை நேர்மறையாகவே சித்திரிக்கும். அவரது எதிர் மறை குணங்களை ஒருபோதும் பிரதிபலிக்காது. எனவேதான், சுத்த சத்வமாக சித்திரிக்கப்பட்ட சரித்திர பாத்திரங்களின் உண்மையான குண நலன்களை எனது புதினங்களில் நான் எழுதும் போது பலரால் அதனை ஜீரணிக்க முடியவில்லை. அசோகன் மரம் நட்டார் என்று நமக்குக் கூறப்பட்டதே தவிர அவன் மனைவி மரத்தை வெட்டினாள் என்று யாரும் நமக்குக் கூறவில்லை .

அத்திமலைத்தேவனில் நான் குறிப்பிட்ட சம்பவங்கள் மிகவும் கொடூரமாக உள்ளதாக சில பெண் வாசகர்கள் குறிப்பிட்டனர். நான் குறிப்பிட்டிருந்த சம்பவங்கள் அனைத்துமே உண்மை நிகழ்வுகள். சந்திரகுப்தன், பிபத்த தேவன் இருவரில் யார் மவுரிய மன்னன் என்பதற்காக நடைபெற்ற போட்டியில், சந்திரகுப்தன் பிபத்தனின் தலையை வெட்டியெறிந்த பிறகே மன்னன் ஆனான் என்கிற குறிப்புகள் சரித்திரத்தில் இருந்தன. நந்தன் கொலை, துர்தரா கொலை அனைத்துமே சரித்திரத்தில் பதிவு செய்யப்பட்ட சம்பவங்கள். கொலையை நான் சற்று எனது கற்பனை வர்ணனைகளுடன் விவரித்துள்ளேன். கொலைகள் நடந்தது உண்மை.

எனது நாவல்களிலேயே சங்கதாராவுக்குப் பிறகு பலரும் அலைபேசி மூலமாகவும் நேராகவும், என்னிடம் விவாதித்த நாவலாக அத்திமலைத்தேவன் இருக்கிறது என்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. எப்போது ஒரு புதினத்தைப் படித்துவிட்டு, வாசகர்கள் அதன் ஆசிரியரிடம் தொடர்பு கொண்டு “அப்படியா... இது உண்மையா? இந்த சம்பவம் உங்கள் கற்பனையா... அல்லது உண்மையா?” என்று தங்கள் ஐயங்களை நிவர்த்தி செய்து கொள்கின்றனரோ, அப்போது அந்தப் புதினம் அவர்களை மிகவும் பாதித்துவிட்டதாகப் பொருள். அவ்வகையில், சங்கதாராவிற்குப் பிறகு, அத்திமலைத்தேவன் வாசகர்களைப் பெரிதும் பாதித்து இருப்பதை உணர்கிறேன்.

2018 இறுதியில் சிக்கிம் மாநிலத் தலைநகரில் -- காங்டாக் நகரில் உள்ள ரும்டேக் புத்த விகாரத்தில் உள்ள ஒரு புத்த பிக்குவைச் சந்தித்தேன். நான் முதல் பாகத்தில் குறிப்பிட்டிருந்த போதி மரம், அதனை திஸ்ஸரக்கா சிதைத்தது, உரக சூத்ரம், தாமரை சூத்ரம் மற்றும் அத்திமர பெருமைகள் ஆகியவற்றைப் பற்றி நான் கூற, மலைப்பின் உச்சத்தில் அவர் நின்றார். அவர் "இந்த விவரங்களை எல்லாம் இந்த

https://telegram.me/aedahamlibrary

காலத்தில் புத்த பிக்குகளே அறிவதில்லை. வெறும் மனம் குவிதல் மற்றும் தியான பயிற்சிகளைத்தான் போதிக்கின்றோமே தவிர, புத்த தத்துவ சரித்திரங்களை நாங்களே போதிப்பதில்லை” என்றார்.

நான் அத்திமலைத்தேவன் எழுதுவதற்காக மேற்கொண்ட ஆராய்ச்சிகளின் போது, நான் எதிர் கொண்டிருந்த இன்னல்கள் அனைத்தும் அவரது பாராட்டினால் கதிரவனைக் கண்ட பனியாக மறைந்து போனது. அவரது புகழுரைகள் தந்த உத்வேகத்தில், சென்னை வந்தவுடன் இரண்டாவது பாகத்தை எழுதத் துவங்கினேன்.

கலைமகள் நிர்வாக ஆசிரியர் திரு கீழாம்பூர் அவர்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு எனது புதினம் அத்திமலைத்தேவனை அலசுவதற்கு ஒரு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அழைத்து, எனது கருத்துகளையும் கூறுவதற்கு என்னை அழைத்தார்.

பலரும் தங்களது சந்தேகங்களை எழுப்பினர்.

ஜனவரி, 29 செவ்வாய்க்கிழமை ஆழ்வார் பேட்டையில் நடைபெற்ற நிகழ்வில் TAG நிறுவன தலைவர் R.T. சாரி, திரு. ரவி தமிழ்வாணன், திரு. R.V.ராஜன் ஆகியோர் முன்னிலையில் திரு. சந்திரமோகன் என்னும் நாடக ஆசிரியர் மற்றும் எழுத்தாளர் எனது நாவலை விமர்சித்திருந்தார். கிடைக்கப் போவது பூமாலையா அல்லது காமாலையா என்று யோசித்து நின்ற வேளையில் எனக்குப் பாமாலையே சூட்டிவிட்டனர். அவர்களை அத்திமலையான் மிகவும் பாதித்திருக்கிறான் என்பதை புரிந்து கொண்டேன். ஒரு வாசகர் என்னிடம் ரகசியமாக வந்து, இதே டெம்போவில் மற்ற பாகங்களும் இருக்கும் அல்லவா? என்றும் கேட்டார். அதற்கு அத்திமலையான் அருள் புரிவார் என்று நம்புகிறேன்.

இன்னும் ஒரு வாசகர், தங்களது பத்திரிகை வேலையில் இருந்து விருப்ப ஓய்வு பெற்றுவிட்டுப் புதினங்களை எழுதுங்கள் என்றார். எனது தாய் தந்தையருக்கு மரியாதை செலுத்தும் விதமாகவும் இந்த நிகழ்வு அமைந்தது எனக்கு அதிக மகிழ்ச்சியைக் கொடுத்தது. அத்திமலைத்தேவன் நிகழ்ச்சியில் உரை நிகழ்த்துவதாக இருந்த எழுத்தாளர் சாருகேசி அவர்களால் உடல் நிலை காரணமாக பங்கேற்க இயலவில்லை. மறுநாள் விடியலில் அவர் காலமாகிவிட்டார். அவரது ஆசிகளுடன் எனது பணியினைத் தொடர்கிறேன்.

முழு திருப்தியுடன் இதோ அடுத்த பாகத்தை உங்களுக்கு சமர்ப்பிக்கின்றேன்.

https://telegram.me/aedahamlibrary

'காலச்சக்கரம்' நரசிம்மா.

**'98417 61552**

*****

https://telegram.me/aedahamlibrary

# முதல் பாகத்தில்...

உபபாண்டவர்களைக் கொன்று கண்ணனின் சாபத்தால் தெற்கே உள்ள அத்திவனத்திற்கு வந்து தவம் செய்கிறான், அஸ்வத்தாமா. நாக சோமா என்கிற சாவக (ஜாவா) நாட்டுப் பெண் ஒருத்தி அவனுக்குப் பணி விடைகளைச் செய்ய, அவளை மணந்து, இரட்டைக் குழந்தைகளைப் பெறுகிறான். குழந்தைகளிடையே அடையாளம் தெரிய வேண்டும் என்பதற்காக ஒரு குழந்தைக்கு தொண்டை என்கிற பல்லவக் கொடியை மாலையாக அணிவிக்கிறார்கள். மற்றொரு குழந்தைக்கு சந்திரகாந்த கொடியை அணிவிக்கின்றார்கள். மீண்டும் தீர்த்த யாத்திரையைத் தொடர்வதற்காக அஸ்வத்தாமா புறப்பட, நாக சோமா ஒரு மகனையும், அஸ்வத்தாமா பல்லவ மாலை அணிந்த மகனையும் இட்டுச் செல்கிறார்கள். தனது மகனை வேமுல்புரி (கடப்பா)வில் விட்டுவிட்டு, அஸ்வத்தாமா தனது வழியே செல்ல, அங்குள்ள மக்கள் அந்த மகனை புலிவேமு என்று பட்டமிட்டு அவனைத் தங்களது மன்னனாக ஆக்குகின்றனர். அவன் வம்சம் பல்லவ வம்சமாக உருவாகிறது. தொண்டை நாட்டை விரிவு செய்து, காஞ்சி வனம் என்கிற அத்திவனத்தை தனது ஆளுமையின் கீழே கொண்டு வருகிறான் புலிவேமு. தனது சித்தி மகன் பரப்பசுவாமியை அத்திவனத்தின் தலைவனாக நியமிக்கிறான்.

அத்திவனத்தில் உள்ள அத்திமலைத் தேவனின் ரகசியத்தை (வரதராஜ பெருமாள் கோயில்) அறிவதற்கு பரப்பசுவாமி முற்படுகிறான். ஆலய பொறுப்பாளரும், குருகுலம் நடத்தி வருபவருமான, காஞ்சனகுப்தர் மற்றும் அவர் மனைவி சாநேஸ்வரியை பலவந்தம் செய்ய, அவர்கள் மகன் விஷ்ணுகுப்தன் (கௌடில்யன் என்கிற சாணக்கியன்) அவர்களை ஏமாற்றி மன்னன் புலிவேமுவிடம் சிக்க வைக்க, அவன் அவர்களைத் தண்டிக்கிறான். இதனால் கோபம் கொண்ட, பரப்பசுவாமியின் மைத்துனன், விஷ்ணுகுப்தனின் பெற்றோரைக் கொல்ல, அவர்களுக்கு ஈமக்கிரியைகளைச் செய்யும் போது வேகவதி ஆற்றினுள் சக்தி வாய்ந்த அத்திமரத் துண்டுகளைக் கண்டு எடுக்கிறான். அதனை எடுத்துக்கொண்டு மன்னன் ஆகும் எண்ணத்துடன் வடக்கே போகிறான், விஷ்ணுகுப்தன்.

அஸ்வமேத யாகத்திற்காக நந்த மன்னன் தானநந்தா தேவ உடும்பர சமித்துகளைத் தேட, விஷ்ணுகுப்தன் தன்னிடம் உள்ள தேவ உடும்பரத்தை மன்னனுக்கு அளிப்பதற்காகச் செல்ல, அவனை மன்னர் குடும்பம் அவமானம் செய்து விரட்டுகிறது. அவர்கள் மீது வன்மத்தைக்

https://telegram.me/aedahamlibrary

கொண்ட கவுடில்யன், அவர்களைப் பழி வாங்க காட்டுவாசியான சந்தாவைத் தனது அடிமையாக்கி, நந்தாவை அரியணையில் இருந்து இறக்கி, சந்திரகுப்தனை மவுரிய மன்னன் ஆக அமர வைக்கிறான். அதற்கு முன்பாக, பட்டத்து இளவரசனை போட்டியில் கொல்கிறான் சந்திரகுப்தன். கவுடில்யனுக்குத் தெரியாமல், சந்திரகுப்தன் தானநந்தாவின் மகள் துர்தராவை மணக்க, அதனைக் கண்டு கவுடில்யன் எரிச்சல் அடைகிறான். துர்தராவுக்கும், கவுடில்யனுக்கும் கடும் பகை தோன்றுகிறது.

கவுடில்யனுக்காகப் பானத்தில் கலக்கப்பட்டிருந்த நஞ்சை, தான் குற்றமற்றவள் என்பதை நிரூபிக்க வேண்டி துர்தரா குடிக்க, விஷம் அவளைக் கொல்ல, அவள் வயிற்றில் உள்ள சிசுவை ஆட்டு கர்ப்பப்பையினில் (incubator) வைத்துக் காப்பாற்றி அந்த குழந்தைக்கு பிந்து சாரன் என்று பெயரிடுகிறான். பிந்துசாரன்

அந்தப்புர சுகங்களில் நாட்டம் செலுத்த, அவனது மகன் அசோகனை எதிர்கால நம்பிக்கை நட்சத்திரமாகக் கொள்கிறான், கவுடில்யன். பிந்துசாரனுக்கு சாணக்கியன் தனது தாயை வஞ்சித்துக் கொன்றான் என்பது தெரிய வர, அவனை நாடு கடத்துகிறான்.

அசோகன் கொடுங்கோலனாக வளர்ந்து பெண் பித்தனாகத் திகழ்கிறான். பட்டத்து இளவரசனைக் கொன்று ஆட்சியைப் பிடிக்கும் அசோகன், நான்கு மனைவியரைக் கொண்டிருக்கிறான். கலிங்கத்து இளவரசி திஸ்ஸரக்காவின் மீது மையல் கொண்டு அவளை அடைய போர் தொடுத்து ஒன்றரை இலட்சம் மக்களைக் கொன்று, அவளைக் கடத்துகிறான்.

அசோகனுக்கு போதி மரத்தடியில் ஞானம் பிறக்க, தனது வாழ்வை சீர்குலைத்த அசோகனை பழி வாங்க எண்ணிய திஸ்ஸரக்கா, போதி மரத்தினை ஆயிரம் விஷ முட்களால் சிதைத்துவிட, தேவ உடும்பரம் மடிகிறது. பௌத்தர்கள் தெற்கே உள்ள மற்றொரு தேவ உடும்பர மரத்தைத் தேடத் துவங்குகின்றனர். அசோகன் தனது மகள் சங்கமித்தாவையும், மகன் மகிந்தாவையும் தெற்கே உள்ள அத்தி வனத்திற்கு அனுப்ப, அவர்கள் அங்கே மரம் உள்ளதை அறிந்து தந்தை அசோகனுக்கு தகவல் அனுப்ப, தகவலை எடுத்துச் சென்றவர்களும், தகவலைப் பெற்ற தலைமை புத்த குரு புத்த மந்தாவும் கொல்லப்பட ரகசியம் போதி மரத்தினிலேயே கிடக்கிறது.

அசோகன் வழி வந்த மவுரிய மன்னன் பிருகதத்தனை அவன் தளபதி

https://telegram.me/aedahamlibrary

புஷ்ய மித்ராவே கொன்று அரியணையைக் கைப்பற்றுகிறான். போதி மரத்தை அடியோடு எரிக்கும் அவனது மாமியாரின் கையில் அத்திவனத்தைப் பற்றிய ரகசிய ஓலை கிடைக்க, அவள் தனது மகர வீணையில் ஓலையை பதுக்கி வைக்க, அவள் பரம்பரையில் உதித்த சமுத்திர குப்தனிடம் அந்த ஓலை கிடைக்கப் போகிறது.

அதனால்தான் அத்திமலை பற்றிய ரகசியம் வெளிவந்தது என்கிற குற்ற உணர்வுடன், பல்லவ மன்னன் திருலோச்சனனை எச்சரித்துவிட்டு, சாணக்கியன் வேகவதி நதியில் இறங்கி விடுகிறான்.

அத்திமலைத் தேவனுக்கு இனி வடபுலத்து மன்னர்களால் ஆபத்து வரும் என்கிற குறிப்பினை உணர்கிறான், பல்லவன்.

இனி...

*****

நிகழும் காலம்

கி.மு. 70 சதவாகனர் காலம்

தொடங்கி கிபி 500

சிம்மவிஷ்ணு காலம்

வரையிலான

காஞ்சியினைப் படம்பிடித்துக்

காட்டுகிறது.

*****

https://telegram.me/aedahamlibrary

# முதல் மற்றும் இரண்டாம் பாகத்திற்கான ஆதார நூல்கள்

தொல்லியல் கையேடுகள்:

* வரதராஜர் கோயில் கல்வெட்டுகள்

* ஏகாம்பரர் கோயில் கல்வெட்டுகள்

* திருவெக்கா கோயில் குறிப்புகள்

* காஞ்சிபுரம் மாவட்ட தொல்லியல் கையேடு

* 'வேலூர் மாவட்ட தொல்லியல் கையேடு

* பொருநராற்றுப்படை, பட்டினப்பாலை

* (பரிபாடல் 10: 129 - 131)

* கோயில் கோயிலொழுகு: டி.ஏ.ராஜகோபாலன்

* Chanakya biography (www.thefamouspeople.com <http://www.thefamouspeople.com)

* Outline of South Asian History

* சிம்ம விஷ்ணு - sarasvatam.in/en/tag/simhavishnu

* The Pallavas - (Page 25) books.googleco.in.

* மத்தவிலாச Mattavilasa Prahasana The Cambodians who ruled Tamil Nadu (sharmalanthevar.blogspot.com)

* Majumdar, Ramesh Chandra (2003). Ancient India. Delhi: Motilal Banarsidass.

* நந்திவர்மன் வரலாறு - மயிலை சீனி வேங்கடசாமி.

* The Kalabras and their impact on Life (M Arunachalm, UOM).

https://telegram.me/aedahamlibrary

* சங்க காலம் சோழர் வரலாறு ஆசிரியர் டாக்டர் மா. இராசமாணிக்கனார்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 1. நடுநிசியில் மந்திராலோசனை

முக்கூடல் கடிகை –--

பரந்து விரிந்த முக்கூடல் கடிகைதான் தொண்டை மண்டலத்தின் பெருமையின் சின்னமாகத் திகழ்ந்து கொண்டிருந்தது. வேறு எந்த நாட்டிலும், இத்தகைய கடிகை இல்லை. பல்கலைகளையும் போதித்து எல்லா நாடுகளுக்கும் மன்னர்களை தயார் செய்து அனுப்பிக் கொண்டிருந்தது முக்கூடல் கடிகை. தொண்டை நாடு சான்றோர் உடைத்து - என்று கூறுமளவுக்கு அறிஞர்களையும், கற்றவர்களையும் தன்னகத்தே கொண்டிருந்தது கடிகை. காணும் போதே அனைவருக்கும் பரவசத்தை ஏற்படுத்தும், கடிகை. பழமுதிர்சோலை மலை என்னும் மாலிருஞ்சோலை [1] மலையின் அடிவாரத்தில் தொடங்கி, கிழக்கில் முக்கூடல் சங்கமத்தின் அருகே உள்ள திருவேங்கடவன் கோயில் வரை விஸ்தீரணமாகப் பரவிக்கிடந்தது, முக்கூடல் கடிகை.

மாலிருஞ்சோலை மலையின் அடிவாரத்தில் கல்லினால் அமைக்கப்பட்ட தோரணவாயில் ஒன்று காணப்படும். அதன் உள்ளே வளைந்து நெளிந்து செல்லும் பாதையில் தொடர்ந்தால் இருமருங்கிலும் அடர்ந்த காடுகள் காணப்படும். தொடர்ந்து சென்றால், முக்கூடல் கடிகையைப் பராமரிக்கும் அதிகாரிகளின் மாளிகை முதலில் தென்படும். அதுவே ஒரு சிறிய

அரண்மனையை ஒத்திருக்கும். தொடர்ந்து சென்றால், முக்கூடல் கடிகையின் பிரதான கட்டிடம் வரும்.

அங்கேதான் பாடங்கள் போதிக்கப்பட்டன. ராஜாங்க விஷயங்களை போதிக்கும் அரசியல் தந்திரப் பாடங்கள், கஜானா கல்வியின் கணக்கு வழக்குகள், போர்முறைகள், சரித்திர பாடங்கள், பூகோளக் கல்வி, பிரபஞ்சக் கல்வி, மீமாம்ச ஆராய்ச்சி, வைணவம், சைவம், சாக்தம், கௌமாரம், காணபத்யம், சௌரம், சாக்கியம், பௌத்தம் என்று சமயக் கல்விகள் ஆகியவை பிரதான கட்டிடத்தில் போதிக்கப்பட்டன.

மரங்களின் அடியில் ஆங்காங்கே வேத முழக்கமும், ஆகம போதனைகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கும். இலக்கண, இலக்கியத்திற்கும் தனித்தனியாக பாட சாலைகள். கலை, இன்னிசை, நாடகம் ஆகியவற்றிற்குத் தனியாக பட்டறைகள் அமைக்கப்பட்டிருந்தன. பிரதான கட்டிடத்திற்குப் பின்பாக ஒரு பரந்த மைதானம் அமைக்கப்பட்டு, அதன் நடுவே வட்டவடிவில் கட்டிடம்

https://telegram.me/aedahamlibrary

ஒன்று காணப்படும். அதுவே வீரவிளையாட்டுகளைக் கற்கும் களரி. மற்போர், வாட்சண்டை, மான்கொம்பு சுழற்றுதல், தண்டம் சுழற்றுதல், குத்துச்சண்டை என்று மிடுக்கும், வீரமும் கொண்ட இளைஞர்கள் அங்கே எப்போதும் பயிற்சி செய்து கொண்டே இருப்பார்கள்.

களரியின் பின்பாக ஒரு பாதை புலப்படும். அதன் வழியே செல்வதற்கு யாருக்கும் அனுமதியில்லை. ஒத்தாடை அரண்மனையிலிருந்து வரும் காவலர்கள் இருவர் அந்த பாதையின் துவக்கத்தில் காவல் காத்துக் கொண்டிருப்பார்கள். அத்திமலை ஆலய அதிகாரிகளும், பட்டர்களும், அரண்மனை காவலதிகாரிகளும் மட்டுமே அந்த பாதையில் செல்வதற்கு அனுமதி உண்டு. அதுவும், ஒவ்வொரு திங்களும் அஸ்த நட்சத்திரத்தின் போது மட்டுமே, அவர்களாலும் அந்தப் பாதையில் செல்ல முடியும். அந்த பாதைக்கே குபேர ரகசியப் பாதை என்றுதான் பெயர்.

அந்த பாதையின் முடிவில்தான் வரங்குளம் என்னும் குளம் ஒன்று உண்டு. அருகில் உள்ள மாலிருஞ்சோலை மலையின் உச்சியில் உள்ள வரதநாராயணப் பெருமாள் ஆலயத்தின் அருகே இருந்த சுனையில் பொங்கும் நீர் வழிந்து அருவியாக பொழிந்து முக்கூடல் கடிகையின் உள்ளே பெருகி வரங்குளமாகத் தேங்கி நிற்கும். வரங்குளத்தின் மையத்தில் பாறைகளால் இயற்கையே அமைத்த திட்டு ஒன்று உண்டு. திட்டின் மையத்தில் உள்ள போஷண மண்டபத்தில்தான் அத்தியூரானின் பொக்கிஷங்கள் வைக்கப்பட்டிருந்தன. பிரம்மனின் அஸ்வமேத யாகத்தில் தோன்றிய அத்திமலைத் தேவனுக்கு தேகம் சமைத்துக் கொடுக்க வேண்டும் என்று பிரம்மன் உத்தரவிட, விஸ்வகர்மா தேவ உடும்பர மரத்தில் அவனுக்கு திருமேனி அமைத்துக் கொடுத்தான் அல்லவா? அப்போது குபேரன் தன்னிடம் இருந்த ஒப்பவரில்லா ஸ்ரீதள மணியை [2] அத்திமலைத் தேவனுக்கு சமர்ப்பித்திருந்தானே! அந்த ஸ்ரீதள மணிதான் அங்கே பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருந்தது. அஸ்த நட்சத்திரத்தன்று மட்டுமே ஸ்ரீதள மணியை அத்தியூரானுக்குச் சாற்றுவார்கள். அன்று அவனது தேககாந்தி எட்டுத் திக்கிலும் பரவும். சாணக்கியன் பாலகனாக வேகவதி ஆற்றங்கரையில் ஒரு நடுநிசியில் நின்றிருந்த போதில் அத்திமலையிலிருந்து ஒரு ஒளிவட்டம் தோன்றியதைக் கண்டான் அல்லவா? பதின்மூன்றாம் தாரகை சாங்கியம் என்று அவனது தாய் சானேஷ்வரியும் குறிப்பிட்டிருந்தாளே, அது ஸ்ரீதள மணியைக் குறித்துதான். அந்த மணியை அணிந்த அன்று அத்திமலையானை ஆராதித்தால், சகல சௌபாக்கியங்களும், வெற்றிகளும் சித்திக்கும் என்று அஸ்திகிரி தந்திரம் குறிப்பிடுகிறது.

https://telegram.me/aedahamlibrary

முக்கூடல் கடிகையின் வரங்குளம் பக்கம் யாரும் போகாத காரணத்தால், அங்கே ஸ்ரீதள மணியைப் பாதுகாப்புடன் வைத்திருந்தார்கள். குபேரப்பாதையின் துவக்கத்தில் நின்றிருந்த இரு காவலர்களும் சுவாரசியம் இல்லாமல் தொலைவில் தெரிந்த ஓலைக்குடிலையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அந்தக் குடிலினில் மாணவர்களுக்கு இலக்கிய பாடங்களை போதித்துக்கொண்டிருந்தார் அரண்மனையின் ராஜகுரு பரத்வாஜ சதகரணி. அரண்மனைப் பணியில் இருந்தாலும், மாணவர்களுக்கு கல்வி போதிப்பதில் பெரும் நாட்டத்தைக் கொண்டவர். கடிகை அவர் மனதிற்கு மிகவும் உகந்த இடம்.

கதிரவன் முக்கூடல் மாலிருஞ்சோலை மலையின் பின்பாக மறைய, சந்தியாகால கடமைகள் அழைப்பதை உணர்ந்து, இனியும் பாடம் நடத்தக் கூடாது என்று நினைத்து, தனது மாணாக்கர்களை அன்புடன் நோக்கினார்.

"சீடர்களே! இன்று நான் போதித்த பரிபாடல் செய்யுளின் விளக்கத்தை மனதில் வாங்கிக் கொண்டீர்கள் அல்லவா? உங்கள் கையில் இருக்கும் சுவடியில் நான் போதித்ததை எழுதி அதோ அந்தத் திண்ணையின் மீது வைத்துவிட்டு செல்லுங்கள். நான் சந்தியா ஆராதனத்தை செய்யச் செல்கிறேன்" என்றபடி வரங்குளத்தினை நோக்கி ஓடையாக பாய்ந்து கொண்டிருந்த அந்தச் சுனைநீரை நோக்கி நடந்தார். மாணவர்களும், மௌனமாக அமர்ந்து சுவடியில், தாங்கள் அன்று கற்ற பாடத்தின் விளக்கத்தை பதித்து, ஆசான் குறிப்பிட்டிருந்த மேடையின் மீது வைத்துவிட்டு அகன்றார்கள்.

சந்தியா ஆராதனையை முடித்துவிட்டு, மீண்டும் தனது தமிழ் இலக்கணத் துறையைச் சார்ந்த குடிலுக்கு வந்த சதகரணி, மாணவர்கள் வைத்துச் சென்ற சுவடிகளைச் சேகரித்தார்.

அவரிடம் பன்னிரண்டு மாணாக்கர்கள் தமிழ் இலக்கணம் பயின்றனர். மொத்தம் பன்னிரண்டு சுவடிகள் உள்ளனவா என்று கையில் சேகரித்திருந்த சுவடிகளை எண்ணத் துவங்கினார். ஆனால் அவரது கரத்தில் மொத்தம் பதின்மூன்று சுவடிகள் இருந்தன. அவர் முகம் குழப்பத்தில் ஆழ்ந்தது. தவறாக எண்ணி விட்டோமோ என்று மீண்டும் ஒருமுறை எண்ணத் துவங்கினார். மீண்டும் எண்ணி முடித்த போது அவர் முகம் திகைப்பில் ஆழ்ந்திருந்தது. யாரோ ஒரு மாணாக்கன் இருமுறை சுவடிகளில் பதிவுகளைச் செய்திருக்கிறான் போலும். சீடர்களின்

https://telegram.me/aedahamlibrary

பெயர்களை கவனித்தார். ஒரு சுவடியில் கிருஷ்ண பாதன் என்கிற பெயர் காணப்பட, அவரது நெற்றியில் சுருக்கங்கள் தோன்றின. கிருஷ்ண பாதன் என்கிற பெயரில் அவரிடம் எந்தச் சீடனும் பயிலவில்லை. அப்படியென்றால், இந்த சுவடியினை யார் அங்கே வைத்திருப்பார்கள்?

குழப்பத்துடன் சுற்றுமுற்றும் நோக்கினார். யார் இந்த கிருஷ்ண பாதன்? வேறு ஏதாவது வகுப்பறையைச் சேர்ந்த மாணவன் தவறுதலாக இங்கே தனது சுவடியை வைத்துவிட்டானா? அந்தச் சுவடியை வாசித்தார் சதகரணி. இல்லையே...! இவர் போதித்திருந்த பாடம் குறித்து தான் சுவடியில் விளக்கப்பட்டிருந்தது. பரிபாடலில் குறிப்பிடப்பட்டிருந்த வைகை ஆறு மற்றும் பாண்டியரின் பெருமைகளை விளக்கும் பாடலைத்தான் அன்று போதித்திருந்தார்.

'வருந்தாது வரும் புனல் விருந்து அயர் கூடல்*

அருங்கறை அறை இசை வயிரியர் உரிமை

ஒருங்கு அமர் ஆயமொடு ஏத்தினர் தொழவே'

என்று ‘உலக உயிர்கள் எல்லாம் பசி பிணி ஆகியவற்றால் துன்புறாமல் வளத்துடன் வாழ்வதற்காக, வறுமையினால் துன்புற்ற புலவர்கள் ஏந்திய கைகள் நிறையுமாறு கொடை வழங்கும் பாண்டியனைப் போல என்றென்றும் வையை ஓய்வின்றி வர வேண்டும்' என வாழ்த்திப் பாடுகின்றனர்.

ஆனால் என்ன இது...? பாடல் மாற்றப்பட்டுள்ளதே!

‘வருந்தாது வரும் விரிபுனல் விருந்து அயர் புகர்வீர்

அருங் கறை அறை இசை வயிரியர் உரிமை

ஒருங்கு அமர் சோழமோடு ஏத்தினர் தொழவே.'

'உலக உயிர்கள் எல்லாம் பசி பிணி ஆகியவற்றால் துன்புறாமல் வளத்துடன் வாழ்வதற்காக வறுமையினால் துன்புற்ற புலவர்கள் ஏந்திய கைகள் நிறையுமாறு கொடை வழங்கும் சோழனைப் போல என்றென்றும் காவிரி ஓய்வின்றி வர வேண்டும்' என்றல்லவா சுவடியில் காணப்படுகிறது.

வைகையாற்றையும், பாண்டியரையும் போற்றும் பரிபாடல் விளக்கத்தில், சோழனை வாழ்த்துமாறு சுவடியில் பதித்திருந்த அந்த

https://telegram.me/aedahamlibrary

கிருஷ்ண பாதன் யார்? தனது சிந்தையைக் கசக்கிப் பிழிந்து கொண்டிருந்தார், பரத்வாஜ சதகரணி.

அப்போது அவசரமாக அங்கே வந்தான் கடிகையின் பணியாளன், பாசிலை. சதகரணியின் செவியருகே குனிந்தான்.

“சுவாமி! உடனே வேங்கடவன் ஆலயத்திற்கு [3] செல்லுங்கள். தங்களுக்காக உள்படுகருமத்தலைவர் [4] அங்கே காத்திருக்கிறார்!” - பாசிலை கூறினான்.

குழம்பிப்போயிருந்த சதகரணிக்கு இப்போது படபடப்பு அதிகமானது. உள்படுகருமத்தலைவர் காத்திருக்கிறாரா? எதற்கு?

விரைவாகக் கடிகையைவிட்டு நீங்கி முக்கூடல் வேங்கடவன் ஆலயத்தினுள் நுழைந்தார்.

உள்படுகருமத்தலைவர் போஜகன் அவருக்காக ஆலய மண்டபத்தில் காத்திருந்தார். உடன் மன்னனின் ரகஸ்யாதிக்ருதன் [5] பரமேஸ்வரனும் நின்றிருந்தான்.

திருலோச்சன பல்லவனின் ராஜகுருவாகத் திகழ்ந்து வருபவர் பரத்வாஜ சதகரணி. கடைசி சதவாகன மன்னன் புலுமாவி விஜயபரத சதகரணியின் உடன் பிறந்த சகோதரன்தான் இவர். சதவாகனர்களைப் போன்றே பல்லவர்களும் பரத்வாஜ கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். பல்லவர்களைப் போன்றே சதவாகனர்களும் ரிஷபத்தைத் தங்கள் கொடியில் சின்னமாகக் கொண்டிருந்தவர்கள். புலி வேமு, புலி சோமா மன்னர்களுக்குப் பிறகு வேமுலம் சதவாகனர்களின் சிற்றரசாக மாறியது. சிமுகன், கங்கன், சதகரணி, சிவசுவாதி, கௌதமிபுத்திரன், வசிஷ்டபுத்திரன், சிவஸ்கந்தன், யஜன சதகரணி மற்றும் விஜயன் ஆகிய சதவாகன மன்னர்களுக்கு பல்லவம் தொண்டாற்றி வந்தது. சதவாகனப் படைகளின் தளபதியாக பல்லவ மன்னர்களே இருந்தது வழக்கம். மூன்றாம் புலுமாவி விஜய சதகரணி என்கிற மன்னனின் காலத்தில் பிளவுபடத் தொடங்கிய சதவாகன [6] ராஜ்யம், நான்கு பாகங்களாக உடைந்தது. வடபகுதிகள் சதவாகனர்களின் கிளை வம்சத்திடமும், மேற்கு பகுதி அபிரர்களிடம், தெற்குப்பகுதி பனவாசிகளிடமும் (கடம்பர்கள்), கிழக்கு பகுதி ஆந்திர இஷ்வாகு குலத்தவர் வசமும் வந்தன. தென் கிழக்குப் பகுதியை ஆண்ட பல்லவர் சதவாகனர்களிடமிருந்து தாங்கள் விடுதலை பெற்றதாக அறிவித்து, மீண்டும் பல்லவ சாம்ராஜ்யத்தை பலப்படுத்தினர். கடைசி சதவாகன

https://telegram.me/aedahamlibrary

மன்னன் புலுமாவி உயிர் துறக்க, அவனது சகோதரன் பரத்வாஜ சதகரணி, பல்லவனிடமே அடைக்கலம் புக, அவருக்கு அத்திமலை இறைபுணம்சேரி கிராமத்தில் நிலங்களை அளித்து அவரைத் தனது ராஜ குருவாக இருத்திக் கொண்டான், பல்லவன்.

ராஜகுருவைக் கண்டதுமே, போஜகனும், பரமேஸ்வரனும் பணிந்து வரவேற்றனர். போஜகனிடம் இருந்த பணிவு பக்தியாக வெளிப்பட்டது... ஆனால், பரமேஸ்வரன் தலைகுனிந்த போது அதில் முழுவதுமாக போலித்தனம் புலப்பட்டது. மன்னனின் ரகஸ்யாதிக்ருதன் என்பதால், தான் அனைவரையும்விட பெரியவன் என்கிற எண்ணத்தைக் கொண்டிருந்தான் போலும். சதவாகன பிரஜைகளை காஞ்சியிலே வசிப்பவர்கள் வெறுப்பது இயற்கைதான் என்றாலும், பரமேஸ்வரனுக்கு ராஜகுருவின் மீது சற்று அதிகமாகவே துவேஷம் காணப்பட்டது. அதற்குக் காரணம் உண்டு. பரமேஸ்வரனின் செவிகள் மன்னருக்குச் சொந்தமானவை. ஆனால் மன்னரின் செவிகளையே சொந்தமாக்கிக் கொண்டவர், ராஜகுருவன்றோ!

"மன்னரின் உத்தரவு! இன்று நள்ளிரவில் மன்னர் மந்திராலோசனை சபையைக் கூட்டியுள்ளார். அத்திமலையான் ஆலயத்து தலைமை பட்டர் அத்தங்கியை அழைத்துக்கொண்டு மந்திராலோசனைக்கு வந்து சேருங்கள்!” - பரமேஸ்வரன் நேரிடையாகத் தகவலைச் சொன்னான்.

திகைத்துப் போனார், சதகரணி. 'அர்ச்சகர் அத்தங்கியுடனா? மந்திராலோசனைக்கு அர்ச்சகர் எதற்கு?'

அவரது எண்ண ஓட்டத்தினை உணர்ந்தவராக, போஜகன் அவரை மதிப்புடன் நோக்கினார். “சுவாமி! மந்திராலோசனையே அத்தியூரானை பற்றியதுதான். எனவே, அவசியம் ஆலோசனையில் அத்தங்கி சுவாமி இருக்க வேண்டும்!” - போஜகன் கூறினார்.

“ராஜகுருவே! மந்திராலோசனையில் விவாதிக்கப்படவுள்ள விஷயம் மிகவும் ரகசியம். நீர் அத்தங்கியிடம் எச்சரிக்கை செய்து அழைத்து வாரும். மந்திராலோசனை விஷயங்களை மந்திரம் உச்சரிப்பது போன்று ஆலயத்திற்கு வருவோரிடமும், போவோரிடமும் கூறிக் கொண்டு இருக்கப் போகிறார்... அத்தங்கி!” - கேலியாகக் கூறிய பரமேஸ்வரன், தனது நகைச்சுவையை தானே ரசித்த வண்ணம் சிரித்தான்.

சதகரணி பதில் கூறவில்லை. அத்தியூரானைப் பற்றிய ரகசிய மந்திராலோசனை என்றதுமே அவருக்கு பிரச்னை விளங்கிவிட்டது. சாணக்கியன் வேகவதியில் இறங்கி உயிர் துறப்பதற்கு முன்பாக தனது

https://telegram.me/aedahamlibrary

தவறினை உணர்ந்து, திருலோச்சன பல்லவனிடம் தேவ உடும்பர அத்தியூரான் சிலைக்கு வடபுல மன்னர்களால் ஏற்படவுள்ள ஆபத்துகளைப் பற்றி எச்சரித்துவிட்டே சென்றிருந்தார். அதன் பிறகு, மன்னன் ஆலயத்தின் பாதுகாப்புகளை அதிகரித்தும் இருக்கிறான். இருப்பினும், அத்தியூரில் இப்போது காணப்படும் பௌத்தர்களின் நடமாட்டம் மன்னரின் மனதைக் கவலைப்படச் செய்துள்ளது. அசோகனின் மகள் சங்கமித்தாவும், மகன் மகிந்தாவும் அத்தியூரிலும், தருமநகரத்திலும், முக்கூடல் கடிகையிலும் அடிக்கடி காணப்படுவதாக ஒற்றர்களின் மூலம் வந்த தகவல்கள் மன்னரை வருத்திக்கொண்டிருக்கின்றன போலும்.

"அவசியம் அத்தங்கியை எச்சரித்து அழைத்து வருகிறேன்!" ராஜகுரு சதகரணி கூறினார். உடனே அவரிடம் விடைபெற்றுக் கொண்டு, மன்னரின் சார்பாக வேங்கடவனுக்கு பூசனைகளை நடத்துவதற்காக, வேங்கடவனின் சந்நிதிக்குச் சென்றனர், போஜகனும், பரமேஸ்வரனும்.

இருள் படரத் துவங்கியது. சதகரணி தனது மாட்டு வண்டியில் அத்தியூருக்குப் பயணமானார். அத்திமலை கோவிலின் கிழக்கு கோபுரத்தின் உச்சியில் தீபம் சுடர்விட்டு எரிவதை ஐயம்படுகையில் [7] இருந்தே காண முடிந்தது.

நள்ளிரவு -

அத்தங்கி [8] அத்திமலைத் தேவனின் கிழக்கு வாசல் [9] அருகே காத்திருந்தார். கோவிலில் இரவு ஆராதனை முடிந்து திருகாப்பினை சாற்றிவிட்டார்கள். கோபுரத்தின் உச்சியில் கொழுந்துவிட்டெரிந்த தீபகப்பரையைத் தவிர, ஆலயத்திலும் அதன் இருபுறமும் வரிசையாக நின்ற மனைகளிலும் இருள்தான் தாண்டவமாடியது. அத்தங்கி சுவாமியின் மனைவி லட்சுமி ராஜ்யம் தனது மனையின் திண்ணைத் தூணைப் பற்றிக்கொண்டு, ராஜகுருவின் மாட்டு வண்டியை நோக்கி நடந்து செல்லும், கணவன் அத்தங்கியை கவலையுடன் பார்த்துக்கொண்டிருந்தாள்.

மந்திரம் சொல்ல அத்திமலையான் ஆலயத்துக்குச் செல்பவர், மந்திராலோசனைக்குச் செல்கிறார் என்றால் மனைவியால் கவலைப்படாமல் இருக்க முடியுமா என்ன? ஒருவேளை, அத்தியூர் ஆலயத்தின் மீது வடபுல மன்னர்கள் யாராவது படை எடுத்து வரப் போகின்றனரா? அடிவயிற்றில் குப்பென்று கிளம்பிய அச்சத்தினால் மேனி நடுங்க, அத்திமலையான் ஆலயத்தினை நோக்கி கைகூப்பிவிட்டு

https://telegram.me/aedahamlibrary

மீண்டும் மனையினுள் நுழைந்தாள்.

ராஜகுருவும், அத்தங்கியும் மௌனமாகவே பயணித்தனர். தங்களையும் அறியாமல், வண்டி செலுத்துபவன் முன்பாக ராஜாங்க விஷயத்தைப் பேசிவிடப் போகிறோமே என்று தங்கள் வாயை இறுக்கமாக பந்தனம் செய்திருந்தனர். தருமநகரத்தைக் [10] கடந்து வண்டி ராஜ வீதியில் [11] நுழைந்தது. ஒத்தாடை அரண்மனையினுள் மாட்டு வண்டி நுழைய, அரண்மனை காவல் தலைவன் அவர்கள் இருவரையும் உள்ளே இட்டுச்சென்றான்.

மழை பெய்ததால் அரண்மனை குளிர்ந்துவிட்டிருந்தது. நள்ளிரவில் கருங்கல் தரையில் பாதரட்சைகள் ஒலிக்க ராஜகுரு சற்றே விரைவாக நடந்தார். மன்னரை தான் காக்க வைக்கக் கூடாது என்கிற பரபரப்பே அந்த விரைவுக்குக் காரணம். அத்தங்கி அவர் பின்பாக சற்றே அச்சத்துடன் தான் நடந்தார். மாலவன் கைங்கரியத்தைத் தவிர வேறு ஒன்றும் அறியாதவர். போயும் போயும் தன்னை எதற்கு மந்திராலோசனை கூட்டத்திற்கு அழைக்கிறார் மன்னர் என்பதே அவருக்குப் புரியவில்லை. ஒருவேளை பச்சை சார்த்தல் உற்சவம் குறித்து ஏதாவது திட்டமிடுகிறாரோ...?

அந்த இருளில் தொலைவில் அரண்மனையின் ஒரு பகுதியாக இருந்த ஒத்தாடையான் சந்நிதி கோபுரத்தின் மீது சுடர்விட்டுக்கொண்டிருந்த தீபக்கப்பரையினைத் தவிர வேறு ஒளியில்லை. எப்போதுமே மன்னர்கள் காலையில் எழுந்ததும் அருகே இருந்த கோவிலின் ராஜகோபுரத்தின் முன்பாகத்தான் கண் விழிக்க வேண்டும் என்பது ராஜ நியதி. [12]

மந்திராலோசனை அறையினுள் நுழைந்த ராஜகுரு, மன்னரின் அருகில் தனக்கு இடப்பட்டிருந்த ஆசனத்தில் சென்று அமர்ந்து கொள்ள, தான் எங்கே அமருவது என்று தயக்கத்துடன் அத்தங்கி சுற்றிப் பார்க்க, அவரை போஜகன் தனது ஆசனத்தின் பக்கலில் இருத்திக் கொண்டார். உயரமான தேகத்தை உடைய மன்னன் திருலோச்சனன் நடந்து வரும் போதே கம்பீரமாகக் காணப்படுவான். ஆனால், இன்று அவன் முகத்தில் பிரதிபலித்த கவலை ரேகைகளாலும், நடையில் இருந்த பரபரப்பினாலும், அந்த கம்பீரம் காணப்படவில்லை. தனது இருக்கையில் அமர்ந்து சுற்றி நோக்கிய மன்னனின் பார்வை நேராக அத்தங்கியின் மீதுதான் பதிந்தது.

“அர்ச்சகரே! இன்று அனைத்து ஆராதனைகளையும் செய்து

https://telegram.me/aedahamlibrary

கொண்டானா, அத்தியூரான்? ஆலயத்தில் ஒன்றும் பிரச்னை இல்லையே?” - மன்னன் கேட்க, அத்தங்கி மட்டுமல்லாமல், மந்திராலோசனைக்கு வந்திருந்த அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் அனைவருமே, மன்னனின் இந்தக் கேள்வியால் திகைத்துப் போயினர்.

“ஒரு குறைவும் இல்லை மன்னா? போக்யமாக அனைத்து ஆராதனைகளையும் அத்திமலைத்தேவன் செய்து கொண்டான்! வீரகொசுவன்[13] சீவேலியும் நடந்தது. தற்போது ஆலயம் வீரகொசுவன் வசம் உள்ளது."

அத்தங்கி சுவாமி அத்திமலையான் ஆலயத்தில் பிரச்னை ஒன்றும் இல்லை என்று கூறிய போதிலும், மன்னனின் முகத்தில் சமாதான அறிகுறிகள் தென்படவில்லை. சற்றே குழப்பத்துடன் திருலோச்சனன் ராஜகுருவை நோக்கித் திரும்பினான்.

“ராஜகுருவே, அத்தியூரானுக்கு பச்சை சாற்றுதல் வைபவம் எப்போது நடைபெற உள்ளது?" - மன்னன் கேட்டான்.

“வரும் சித்ர மாத ஹஸ்த நட்சத்திரம் கூடிய சுபதினத்தில்!” - ராஜகுரு கூறினார்.

தலைமையமைச்சர் கோலவிக்கிரம ஷர்மரை நோக்கினான், திருலோச்சனன்

"கோலவிக்கிரமரே! இம்முறை பச்சை சாற்றுதல் வைபவத்திற்கு நானும், அரசியார் சுலோச்சனா தேவியும் கலந்து கொள்வதாக அறிவித்திருந்தேன் அல்லவா. இப்போது அந்த முடிவினை மாற்றிக்கொண்டேன். அந்த வைபவத்தில் கலந்து கொள்வதை நான் தவிர்க்க நினைக்கிறேன்!” ------ பல்லவ மன்னன் கூறியதும், சபையே அதிர்ந்து போனது...

திருமணமாகி நான்கு ஆண்டுகள் ஆகியும் இன்னும் அரசியாரின் வயிற்றில் ஒரு வாரிசும் உருவாகவில்லை. மன்னருக்கு மனக்கவலை அதிகரித்துக் கொண்டே வந்தது. சென்ற ஆண்டு, ராஜகுரு அவரிடம் பச்சை சாற்றுதல் வைபவத்தினில் கலந்து கொண்டு, அத்தி மலைத் தேவனிடம் வேண்டினால், நிச்சயம் ஒரு இளவரசன் பிறப்பான் என்று கூறியிருந்தார். அப்போது அந்தக் கோரிக்கையினை உடனே ஏற்ற மன்னன், தான் அந்த வைபவத்திற்கு தலைமை ஏற்று நடத்துவதாக அறிவித்திருந்தான். இப்போது திருலோச்சனன் தான் அந்த பச்சை சாற்று வைபவத்தை தவிர்க்க நினைப்பதாக கூறியதும், அங்கு

https://telegram.me/aedahamlibrary

கூடியிருந்த அனைவருமே, ஸ்தம்பித்துப் போயினர்.

அத்தியூரானுக்கு உகந்த நிறம் பச்சை. பச்சை சாற்றுதல் சித்திரை - வைகாசி மாதங்களில் ஹஸ்த நட்சத்திரம் கூடிய நாளில் நிகழ்த்தப்படும் ஒரு சாங்கியம். ஊர் மக்கள் அன்று முழுவதும் பச்சை நிற ஆடைகளை அணிந்து, ஊர்வலமாக அத்திமலைக்குச் சென்று அவனுக்கு பச்சை வண்ண ஆடைகளைச் சாற்றி பூசனை செய்வார்கள். பச்சை பயிறு பொங்கல் இடுவார்கள். வெற்றிலை, துளசி மற்றும் அத்தியிலை ஆகியவற்றை அத்திமலைத் தேவனுக்கு சமர்ப்பணம் செய்வார்கள்.

இம்முறை மன்னனே பச்சை சாற்றுதல் வைபவத்திற்கு தலைமையேற்கப் போகிறான் என்பதை அறிந்ததும், ராஜகுரு ஆலய பொறுப்பாளர்கள் மற்றும் அர்ச்சகர்களிடம் பேசி சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

“மன்னவா! தங்கள் முடிவினில் ஏன் இந்த மாற்றம்?! நமது அத்தியூரான் மன்னர்களின் தேவன். அவர்களது அபிலாஷைகளை உடனடியாக நிறைவேற்றுவான். தேவராஜன் என்றுதானே அவனை அழைக்கிறோம். உங்களது மனக்கவலையை கட்டாயம் தீர்த்து வைப்பான். பச்சை சாற்றுதல் வைபவத்திற்குப் பிறகு பாருங்கள். உங்களது மடியில் ஒரு இளவரசன் தவழ்வான்.” - ராஜகுரு கூறினார்.

மன்னனுக்கு பெயர் சொல்ல ஒரு பிள்ளை தேவை. மன்னனை மட்டுமல்ல, மக்களையும் வாரிசில்லாத நாடு என்கிற பிரச்னை உறுத்திக்கொண்டுதான் இருக்கிறது. கையில் வெண்ணையை வைத்துக்கொண்டு எதற்காக நெய்க்கு அலைய வேண்டும்? கேட்கும் வரங்களை அள்ளித்தரும் அத்திமலையான் இருக்க, மன்னன் ஏன் இன்னும் பிள்ளையை பெற்றுக்கொள்ளவில்லை என்று வீதிகளில் மக்கள் பேசிக்கொண்டிருந்தது ராஜகுருவின் செவிகளை எட்டியது. தனது வீர்யத்திலும் ஆண்மையிலும் அதீத நம்பிக்கையினை கொண்டுதான் இதுகாறும் காத்திருந்த மன்னன், முதன்முறையாக பச்சை சாற்றுதல் வைபவத்தில் கலந்து கொள்கிறேன் என்று கூறியிருந்தான். இப்போது அவன் திடீரென்று அதைத் தவிர்க்கப் போவதாக அறிவித்ததும், ராஜகுரு வேதனை அடைந்தார். அவனுக்குத் தொடர்ந்து ஆறுதல் மொழிகளையும் கூறினார்.

திருலோச்சன பல்லவன், ராஜகுரு சதகரணியை யோசனையுடன் பார்த்தான். "எனது சகதலையன் [14] இளஞ்சேட்சென்னி கூட தனது பெயரைச் சொல்ல ஒரு மகனை ஈன்றுவிட்டுச் சென்றிருக்கிறான்.

https://telegram.me/aedahamlibrary

அவனுக்குப் பிறகு அந்த பச்சிளம் பாலகன் பிரதிநிதிகளின் மூலமாக நாட்டை ஆண்டு கொண்டிருக்கிறான். சோழ நாட்டில் கூட மனநிம்மதி நிலவுகின்றது. ஆனால் இங்கே மன்னனாக நான் அரியணையில் அமர்ந்திருந்தும், நாட்டில் குழப்பம் நிலவுகிறது. எனக்கு இன்னும் வாரிசு உருவாகவில்லை என்பது மக்களிடையே பெரும் பேச்சாக உள்ளது. எனவேதான், எனக்காக இல்லாவிட்டாலும், இந்த நாட்டிற்கு ஒரு இளவரசனை அத்திமலைத் தேவன் தந்தே ஆக வேண்டும். ஆனால், பச்சை சாற்றுதல் வைபவத்தில் கலந்து கொண்டால்தான் எனக்கு பிள்ளை பிறக்கும் என்றால், இப்போது அந்த வைபவத்தில் கலந்து கொள்ளும் மனநிலையில் நான் இல்லை.” - திருலோச்சனன் குரலில் ஒருவித அச்சம் புலப்பட்டது.

தலைமை அமைச்சர் கோலவிக்கிரமர் திகைப்புடன் மன்னனை நோக்கினார்.

"மன்னரே! தங்களது இந்த திடீர் முடிவுக்குக் காரணத்தை நாங்கள் அறியலாமா?”

திருலோச்சனன் சற்றே கண்களை மூடி தனது இருக்கையில் சாய்ந்தான். முந்தைய இரவு தான் கண்ட கனவினை இவர்களிடம் எப்படிச் சொல்வான்? அந்தக் கனவு கலைந்ததும் உறக்கம் பிடிக்காமல் ஒத்தாடை அரண்மனையின் உப்பரிகையில் நடுநிசியில் உலவிக் கொண்டிருந்தானே! அந்தக் கனவை எண்ணிய போது தன்னையும் அறியாமல் மன்னனின் தேகத்தில் ஒரு நடுக்கம் பரவியது.

திருலோச்சனனும் அவன் மனைவி லோச்சனா தேவியும் அத்திமலையான் கோயில் சன்னிதியில் உள்ளனர். ஆனைமலையின் மீது ஏறி சன்னிதியின் முன்பாக நிற்கின்றனர். சன்னிதியின் கதவுகள் திறக்கப்படவில்லை. எங்கும் மக்கள் பச்சையாடையை தரித்து, அத்திமலையான் தரிசனத்திற்காகக் காத்திருக்க, திடீரென்று டமாரங்கள் ஒலிக்க, மணிகள் முழங்க, அத்திமலையானின் சந்நிதிக் கதவுகள் திறக்கின்றன. தூப புகையின் ஊடே, மன்னன் அத்திமலையானை நோக்க, 'ஆ' என்கிற அலறல் அவனிடம் இருந்து எழுகிறது. உள்ளே அத்திமலையானின் சிலை காணப்படவில்லை.

திடுக்கிட்டு சுற்றும் முற்றும் பார்க்க, தொலைவில் அத்திமலையான் நடந்து செல்கிறான். ஓடிச்சென்று அவரை அணுகி, "தேவராஜனே! எங்கு செல்கிறீர்? பச்சை சாற்றுதலுக்காக நான் வந்திருக்கிறேன்!” - மன்னன் கூறுகிறான்.

https://telegram.me/aedahamlibrary

அத்திமலையானின் குரல் உக்கிரமாக ஒலிக்கிறது. "என்னைக் காக்கத் தவறிவிட்டாய், திருலோச்சனா...! என்னை அடைய பேராசைமிக்கவர்கள் காத்திருக்கிறார்கள். இனியும் உன் ராஜ்யத்தில் இருக்கமாட்டேன்!" - அத்திமலையான் கூறுகிறார்.

திருலோச்சன பல்லவன் அலறியபடி கண்விழித்திருந்தான். அதன் பின்னர் உறக்கம் வராமல் உப்பரிகையில் உலாவிக்கொண்டிருந்தான்.

தான் கண்ட கனவினை நினைத்து சற்று நேரம் அமைதியைக் கடைப்பிடித்தவன், பின்பு தனது ராஜ குருவையும், தலைமை அமைச்சரையும் மாற்றி மாற்றி நோக்கினான்.

“எனது சிந்தையை குழப்பும் ஒரு கனாவினை நேற்று கண்டேன். பச்சை சாற்றும் வைபவத்தின் போது, அத்தியூரானை தரிசிக்க அவனது சன்னிதி வாயிலில் நிற்க, கதவுகள் திறக்கின்றன. ஆனால், உள்ளே அத்தியூரானின் சிலை காணப்படவில்லை. சற்று தள்ளி அவன் நிற்பதை காண்கிறேன். 'நீ என்னை காக்கத் தவறி விட்டாய். இனி உன் ராஜ்யத்தில் இருக்கமாட்டேன்!' என்றபடி அத்திமலைத் தேவன் மறைந்து போகிறான். எனவேதான், பச்சை சாற்றும் வைபவத்தில் கலந்து கொள்ள தயங்குகிறேன்!” மன்னனின் குரலில் சற்றே நடுக்கம் காணப்பட்ட து.

ராஜகுரு உரத்த குரலில் சிரித்தார். 'போயும் போயும் இந்த கனவுதானா தங்களது மனக்குழப்பத்திற்கு காரணம்' என்கிற தொனியில் அவரது நகைப்பு ஒலித்தது.

“அத்தியூரான் பெரும் ஆற்றலைக் கொண்டவன். தன்னிடம் தீய எண்ணத்துடன் வருபவர்களை அப்போதைக்கு அப்போதே தண்டிப்பான். தன்னை பக்தியுடன் நாடிய மன்னர்களுக்கு எந்த குறையும் வைக்க மாட்டான். மன்னர்களின் மன்னன் அவன் என்பதாலேயே அவனை தேவாதிராஜன் என்று அழைக்கிறோம். மன்னா! நான் தங்களுக்கு இமயத்தை கைப்பற்றிய சேரன் செங்குட்டுவன் வரலாற்றினை கூறியிருக்கிறேன் அல்லவா? இமயத்திற்குச் செல்லும் வழியில் காஞ்சிக்கு வந்த அவனது படைகள் தங்குவதற்கு கூடாரங்களை அமைத்துத் தந்து, அவன் கங்கையை கடப்பதற்கு கலங்களைக் கொடுத்து உதவிய சதகரணியின் [15] வழித்தோன்றல்தான் நான். செங்குட்டுவனை அத்தி மலைக்கு அழைத்துச் சென்று அவனது அருளைப் பெற்றுத் தந்ததோடு, தனது நண்பனான மகத தேசத்து சஞ்சார்யரிடம் கூறி கனக - விஜயன்

https://telegram.me/aedahamlibrary

உள்ளிட்ட பன்னிருவரின் கூட்டணியை வீழ்த்த உதவியதை நினைவுபடுத்துகிறேன்." பரத்வாஜ சதகரணி மன்னருக்கு தைரியம் சொன்னார்.

“வெறும் கனவு என்று இதனை ஒதுக்கிவிட முடியாது, ராஜகுருவே! ஒற்றர்கள் மூலம் நான் அறிந்த சேதியை சொல்கிறேன். மவுரிய குல அசோகனின் மகன் தசரதன் புத்த கயையில் புத்தர் சிலை ஒன்றை நிறுவ எண்ணியிருக்கிறான். அதன் பொருட்டு தேவ உடும்பர அத்திமரத்தைத் தேடி வருகிறான். பௌத்தர்களுக்கு தேவ உடும்பரம் மிகவும் புனிதமானது. அசோகனின் மனைவியால் சிதைக்கப்பட்ட புத்த கயையில் இருந்த தேவ உடும்பர மரத்திற்கு மாற்றாக ஒரு தேவ உடும்பரத்தில் வடிக்கப்பட்ட புத்தர் சிலையை நிறுவ எண்ணியிருக்கிறான் தசரதன். அவனுக்கு ஆலோசனையை வழங்குபவர் புத்த கயையின் தலைமை பிக்கு, இங்கேதான் பிரச்சனை துவங்குகிறது. நமது அத்திமலையானை பற்றிய விவரங்கள் கசிந்துவிடப் போகிறதே என்கிற கவலைதான் என்னை வாட்டுகிறது.” --- மன்னர் சொல்ல, அந்த அறையில் அமைதி நிலவியது.

தலைமையமைச்சர் கோலவிக்கிரமர் பணிவுடன் எழுந்து நின்றார். "கவலைப்படத் தேவையில்லை அரசே! வீரகொசுவனைக் கடந்து ஒருவன் அத்திமலையானை நெருங்குவது என்பது இயலாத காரியம்!” -- தலைமை அமைச்சர் கூறினார்.

தலைமை அமைச்சர் மன்னருக்கு தைரியம் கூறிக் கொண்டிருந்த அதே நடுநிசி வேளையில், மூன்று பேர் [16] அத்தியூரான் ஆலயத்தின் கிழக்கு வாசல் பொற்றாமரை குளத்தின் கரையில் இருந்த மாமரத்தின் அடர்த்தியான கிளைகளின் பின்பாக அமர்ந்திருந்தனர்... நடுநிசி என்பதால், ஆலயமே காரிருளில் மூழ்கியிருந்தது. திவ்ய தாமாவின் கட்டளைப்படி மகிந்தா, அமரஜோதி மற்றும் தேவசேனன் மூவரும் முன்னிரவே, குளத்தருகே இருந்த மரத்தில் ஏறி பதுங்கியிருந்தனர். காஞ்சியில் உள்ள தேவ உடும்பர மரம், அந்த ஆலயத்தில்தான் இருக்க வேண்டும் என்பதை அவர்கள் யூகித்திருந்தனர். புத்த துறவிகளாக இவர்கள் ஆலயத்தினுள் நுழைந்தால், மற்றவர்கள் ஐயம் கொள்வார்கள் என்பதாலேயே இரவில் யாரும் அறியாமல் மரத்தின் மீது ஏறி மறைந்திருந்தனர்.

"எச்சரிக்கை இளவரசே! கோயில் கதவினை அடைப்பதற்கு முன்பாக வீரகொசுவன் என்பவனிடம் ஆலயத்தின் திறவுகோல் ஒப்படைக்கப்படும். திறவு கோலைப் பெறுவதற்காக வீரகொசுவன்

https://telegram.me/aedahamlibrary

சீவேலி என்று ஒரு சாங்கியம் நடைபெறும். அவன் உக்கிர ஆட்டம் ஆடும் வேளையில் யாரும் அவன் கண்களில் படமாட்டார்கள். காரணம், யார் என்ன என்று விசாரிக்காமல் அவர்களை வெட்டி சாய்த்துவிட்டு அவன் ஆடிக் கொண்டே போவான். தனது சுயநினைவில் அவன் இருக்கமாட்டான் என்று நம்பப்படுகிறது. நடுநிசி வரை அத்திமலையில்தான் சுற்றிக்கொண்டு இருப்பான். நடுநிசியில்தான் மலையிறங்கி கோவிலின் பிரகாரங்களை வலம் வருவான். விடியும்வரை, கோயில் பிரகாரங்களையே சுற்றிக்கொண்டு இருப்பான். இன்னும் சற்று பொறுத்து அவன் இந்த பக்கமாகத்தான் வருவான். நாம் அவன் கண்களில் படக்கூடாது. நமது சுவாசக் காற்றின் நுட்பமான ஒலிகூட அவனது செவிகளில் விழக்கூடாது." அமரஜோதி கூற, மகிந்தாவுக்கும், தேவசேனனுக்கும் அவரது கூற்று சற்றே விந்தையாக இருந்தது.

"நாம் பின்பற்றும் பௌத்தத்தில் உக்கிரம் என்னும் நிலை ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை. அனல் ஓம்பும் வைதீக மார்கத்தில்தான் உக்கிர தெய்வங்கள் இருக்கின்றன போலும்." மகிந்தா கூற, அந்த இருளின் ஊடே பிராகாரங்களை கூர்ந்து கவனித்தார், அமரஜோதி.

"இளவரசே! தேவசேனா! நான் கூறப்போவதை கவனமாக கேளுங்கள். இப்போதே நாம் மரத்தைவிட்டு இறங்கி, தேவ உடும்பர மரத்தைத் தேடத்துவங்கினால் வீரக்கொசுவனிடம் சிக்கிக்கொள்வோம். அவனுக்குத் தெரியாமல்தான் நாம் வந்த காரியத்தை கவனிக்க வேண்டும். வீரகொசுவனும் நம்மை கண்டுவிடக் கூடாது. நாமும் வந்த வேலையை கவனிக்க வேண்டும். அதற்கு ஓர் உபாயத்தை வைத்திருக்கிறேன்." கிசுகிசுத்த குரலில் அமரஜோதி கூறினார்.

“என்ன உபாயம் குருவே?" மகிந்தா கேட்டான்.

“எனது திட்டம் இதுதான். இன்னும் சற்று நேரத்தில் நாம் ஒளிந்திருக்கும் பொற்றாமரை குளம் [17] இருக்கும் பகுதியை நோக்கி, வடக்கு பிரகாரம் வழியாக வந்து, கிழக்கு பிரகாரத்தில் திரும்புவான், வீரகொசுவன். அவன் கிழக்கு பிரகாரத்தினை கடந்து தெற்கு பிராகாரத்தில் திரும்பியவுடன், நாம் மரத்தில் இருந்து குதித்து தேவ உடும்பரத்தைத் தேட வேண்டும். அவன் தெற்கு பிரகாரத்தைக் கடந்து மேற்கு பிராகாரத்தில் திரும்பும் போது நாம் தெற்கு பிரகாரத்தில் தேடுவோம். இப்படியே அவன் அடுத்த சுற்று வருவதற்குள் நாம் ஒவ்வொரு பிராகாரமாகத் தேடுவோம். உக்கிரத்துடன் செல்லும் வீரகொசுவன் வந்த வழியே திரும்பி வரும் வழக்கமில்லை என்று நான்

https://telegram.me/aedahamlibrary

அறிந்திருக்கிறேன். ஆக, நாம் மூவரும் அவன் பின்பாகவே அவன் அறியாதபடி சென்று, தேவ உடும்பர மரத்தினை தேடுவோம். புரிந்ததா?" - அமரஜோதி இருவரையும் எச்சரிக்கையுடன் நோக்கினார்.

தேவசேனன் அமரஜோதியை இடுங்கிய கண்களினால் பார்த்தான். "சுவாமி! எதற்கு இவ்வளவு எச்சரிக்கையினை மேற்கொள்ள வேண்டும்? இதோ நான் இடையினில் சொருகியுள்ள எனது வாளினால், வீரகொசுவனின் கதையை முடித்துவிடுகிறேன். அதன் பிறகு நாம் எவ்வித அச்சமும் இன்றி நமது பணியை கவனிக்கலாம் அல்லவா?"

அமரஜோதி சிரித்தார். "அவனது உடலில் இருக்கும் சக்தி உறையினில் இருந்து உனது வாளை உருவுவதற்குக் கூட காத்திருக்காது. க்ஷண நேரத்தில் அவனது வெட்டரிவாள் உனது தலையை கொய்துவிடும். திவ்ய தாமாவின் கட்டளையை ஏற்று நாம் வந்திருக்கிறோம். வீரகொசுவனை கொன்றால் நாட்டிலே பதற்றம் அதிகரிக்கும். நமது சங்கத்தின் காரியத்தை கெடுத்து நமது குருவுக்கு பிரச்னையை உண்டு பண்ணக்கூடாது, தேவசேனா! நான் சொல்லுவது போல் நடப்பதே உத்தமம்!" அமரஜோதி கூற, மகிந்தா தேவசேனனை கண்களாலேயே அடக்கினான். அமரஜோதியின் கண்கள் வடக்கு பிராகாரத்தின் மறுகோடியில் நிலைகுத்தி இருந்தன.

"எச்சரிக்கையுடன் இருங்கள்! அவன் நம்மை கடந்து செல்லும் வரை ஆடாமல், அசையாமல் கற்சிலைகளாக இருங்கள். அவன் கிழக்கு பிரகாரத்தை கடந்து தெற்கில் திரும்பியதும், நாம் மரத்தில் இருந்து இறங்குவோம்!" என்று மீண்டும் கூறியவர், இருளின் ஊடே கவனித்துக் கொண்டிருந்தார். மகிந்தாவும், தேவசேனாவும் கூட அவர் நோக்கிக் கொண்டிருந்த திக்கிலே கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

எங்கும் பூரண அமைதி நிலவிக் கொண்டிருக்க, திடீரென்று அமரஜோதியின் உடல் விறைத்தது. காற்றின் அலைகள் தொலைவில் இசைக்கப்படும் உடுக்கையின் ஒலியினை சுமந்து வந்து அவர்களது செவிகளில் புகுத்தின.

"அதோ வருகிறான்... வீரகொசுவன்! எச்சரிக்கை...!" மீண்டும் கிசுகிசுத்த அமரஜோதியின் குரலில் சற்றே அச்சம் தொனித்தது.

மகிந்தாவும், தேவசேனனும் நீண்ட வடக்கு பிராகாரத்தின் மறுகோடியைக் கவனித்தனர். முதலில் அவர்களுக்கு ஒன்றும் புலப்படவில்லை. பிறகு சிறு புள்ளியாக ஒரு வெளிச்சம் தோன்றியதை கவனித்தனர்.

https://telegram.me/aedahamlibrary

அந்த வெளிச்சப்புள்ளி இப்படியும் அப்படியுமாக ஆடி அசைவதைக் கண்டனர். இருவரையும் பரபரப்பு தொற்றிக் கொண்டது. அந்த வெளிச்சப் புள்ளி சிறிது சிறிதாக வளர, வீரகொசுவன் வேகமாக முன்னேறி வருகிறான் என்பதைப் புரிந்து கொண்டனர். இப்போது உடுக்கை சத்தம் பலமாகக் கேட்கத் துவங்கியது. அந்த இரவு வேளையில் பரந்து விரிந்த அந்த ஆலயத்தின் மதில்களில் உடுக்கையொலி மோதி அதிபயங்கரமாக எதிரொலிக்க, மகிந்தாவையும், தேவசேனனையும் கூட அச்சம் பற்றிக் கொண்டது.

"வீரகொசுவன் வந்தேனே...!

வடதிசை பாலகமார் எச்சரிக்கை...!

பாரா உஷார்...!”

அவன் தொலைவில் அலறியது எதிரொலித்து அந்த ஒலியலைகள் இவர்களது செவிகளை தாக்கின. உக்கிரமான அந்த குரல், மூவரையுமே நடுங்கச் செய்தது.

“நெருங்கி வருகிறான்... மூச்சுவிடாதீர்கள்...!” -- அமரஜோதி கூறினார்.

வீரகொசுவன் ஏந்தியிருந்த தீப்பந்தத்தின் வெளிச்சம் தங்கள் மீது படாதபடி மூவரும் மரத்தின் அடர்ந்த பகுதிக்கு மேலும் நகர்ந்து பதுங்கிக் கொண்டனர்.

ஒரு கையில் தீப்பந்தமும் மறுகையில் உடுக்கையும் ஏந்தி ஆடியாடி வந்து கொண்டிருந்தான், வீரகொசுவன். இப்போது அவனது உருவம் தெரியத் துவங்கியது. கட்டுமஸ்தான தேகத்துடன், உயரமாகக் காணப்பட்டான். வாலிப வயதில் தோன்றினாலும், முகம் உக்கிரத்துடன் காணப்பட்டதால், சற்றே முதிர்ச்சி காணப்பட்டது. கரிய நிற வேட்டியை அணிந்து, துளசி மாலையை அணிந்திருந்தான். காதில் குண்டலங்களும், கையில் ஸ்வர்ண கடாவும், பாதங்களில் வெள்ளித் தண்டைகளையும் அணிந்திருந்தான். நெற்றியில் சிந்தூரம் அணிந்து, தலை முடியை விரித்து தோளினில் புரளவிட்டிருந்தான். அகன்ற மார்பில் சந்தனத்தைத் தடவி அதன் மீது குங்குமத்தை அப்பியிருந்தான். கழுத்தில் சங்கு மற்றும் தாமரை மணி மாலைகளை அணிந்திருந்தான். அவன் ஆட்டத்திற்கேற்ப அவனது தண்டைகளும் குலுங்கின.

மரத்தில் பதுங்கியிருந்த மூவருக்குமே, வீரகொசுவனின் கடுமையான தோற்றம் இப்போது நன்றாகப் புலப்பட்டது. சுவாசத்தை கூட

https://telegram.me/aedahamlibrary

விடமறந்து, இலைகளின் ஊடே, அவனை நோட்டம் விட்டனர்.

நீண்ட வடக்கு பிராகாரத்தைக் கடந்து வேகமாக வந்த வீரகொசுவன் இவர்கள் பதுங்கியிருந்த குளக்கரை பகுதியினில் வந்து நின்றான். சரியாக இவர்கள் பதுங்கியிருந்த மரத்தை நோக்கி நின்று மரத்தையே உற்று கவனித்தான்.

மூவருக்கும் சப்தநாடியும் ஒடுங்கியது. இவர்கள் பதுங்கியிருந்த மரத்தையே உறுத்து நோக்கிக் கொண்டிருந்த வீரகொசுவன், திடீரென்று தனது நாவினை துருத்தி உக்கிர ஆட்டம் ஒன்றை ஆடினான். அவனது தலைமுடி கற்றைகள் அவனது முகத்தில் பரவி இன்னும் கோரமாகக் காட்டின...

சற்று நேரம் ஆடியவன், அப்படியே திரும்பி கிழக்கு பகுதியில் நடக்கத் தொடங்கினான், வீரகொசுவன்.

“வீரகொசுவன் வந்தேனே**...!**

குணதிசை பாலகமார் எச்சரிக்கை**...!**

பாரா உஷார்**...!**"

என்று கூச்சலிட்டபடி தொடர்ந்தான். அவன் கிழக்குத் திசையின் கோடிக்குச் சென்று மீண்டும் ஒரு வெறியாட்டத்தை ஆடிவிட்டு, தெற்கு பிரகாரத்தினில் நுழைந்ததும், மூவரும் அவசரமாக தாங்கள் பதுங்கியிருந்த மரத்தில் இருந்து இறங்கினர்.

அமரஜோதி அவசரமாக அங்கிருந்த காய்ந்த சருகுகளை தன்னிடமிருந்த சிக்கிமுக்கி கற்களின் உதவியோடு தீப்பிடிக்க வைத்து, தான் தயாராக வைத்திருந்த இரு சுளுந்துகளை கொளுத்தினார். ஒன்றை தேவசேனனிடம் அளித்தார், அமரஜோதி.

“தேவசேனா! நீ விரைந்து சென்று வீரகொசுவன் அறியாமல் அவனை பின் தொடர வேண்டும். வீரகொசுவன் இப்போது தெற்கு பிராகாரத்தில் இருக்கிறான். அவன் தெற்கு பிராகாரத்தை கடந்து மேற்கு பிராகாரத்தினுள் திரும்பியவுடன் சுளுந்தினை அசைத்துக் காட்டு. நாங்கள் கிழக்கு பிராகாரத்தைக் கடந்து தெற்கு பிராகாரத்தினுள் நுழைகிறோம். அவன் திடீரென்று ஓடத்துவங்குவான். அடுத்த சுற்று வரும் போது நாம் அவனிடம் சிக்கிக் கொள்ளக் கூடாது. அவன் நம்மை காணாதவாறு மிக நெருக்கமாக பின்தொடர வேண்டும். அவனது

https://telegram.me/aedahamlibrary

நடவடிக்கைகளை உன்னிப்பாக கவனித்து வா!” என்று சொல்ல, தேவசேனன், அந்த சுளுந்தை வாங்கிக் கொண்டு நடந்தான்.

அமரஜோதியும், மகிந்தாவும், கையில் இருந்த சுளுந்தின் ஒளியில், தேவ உடும்பர அத்தியைத் தேடத் துவங்கினர். பிராகாரத்தில் பலவித மரங்கள் காணப்பட்டாலும், அமரஜோதியின் கண்களில் தேவ உடும்பர மரம் எதுவும் தென்படவில்லை.

புத்த கயையில் இருந்த தேவ உடும்பர மரமான போதி மரம் அழிக்கப்பட்டதால், தட்சிணத்தில் இருக்கும் தேவ உடும்பரத்தினை தேடி கண்டுபிடித்து, அதனைக் கொண்டு புத்தர் சிலை ஒன்றைச் செய்து உடனடியாக புத்த கயையில் நிறுவ வேண்டும். ஆயிரம் வருடங்களுக்கு ஒருமுறை புத்தர் ஒருவர் அவதரிப்பார். அவரது அவதாரத்திற்கு தேவ உடும்பரம் மிகவும் தேவை.

புத்தகயையின் தலைமை பிக்கு உத்தரவிட்டிருந்ததால், திவ்ய தாமாவின் தலைமையில் தருமநகரத்தில் முகாமிட்டு, தேவ உடும்பரத்தைத் தேடிக்கொண்டிருந்தனர். அமரஜோதியின் குடிலில்தான் அனைவருமே தங்கியிருந்தனர். அத்தியூரான் ஆலயத்தில்தான் மற்றொரு தேவ உடும்பரம் இருக்க வேண்டும் என்று அமரஜோதி கூற, அதனைத் தேடி அவர்கள் அத்திமலைத் தேவனின் ஆலயத்திற்கு வந்திருந்தனர். வீரகொசுவனை நிழலாக பின்தொடர்ந்து அவனுக்குத் தெரியாமல், தேவ உடும்பர அத்தியை தொடர்ந்து தேடிக்கொண்டிருந்தனர்...

ஆலய நந்தவனத்தின் ஒவ்வொரு மரமாக அமரஜோதி நோட்டம்விட்டுக் கொண்டே செல்ல, அப்போது அவரது தோளினை பற்றி அசைத்தான், மகிந்தா.

"சுவாமி! அதோ பாருங்கள்! தேவசேனன் சுளுந்தினை அசைத்துக் காட்டுகிறான். வீரகொசுவன், தெற்கு பிராகாரத்தைக் கடந்து மேற்கினுள் திரும்பிவிட்டான் போலும், நாம் உடனே சென்று தெற்கு பிராகாரத்தில் நுழையலாம்!” மகிந்தா சொல்ல, அமரஜோதி நடையினில் வேகத்தைக் காட்டினார்.

இருவரும் தெற்கு பிரகாரத்தில் நுழைய, முன் போல் தேவசேனன், விரைந்து சென்று தெற்கு பிரகாரத்தின் மறுகோடியில் நின்று, தற்போது மேற்கு பிராகாரத்தில் சென்று கொண்டிருந்த வீரகொசுவனை நோட்டம்விடத் துவங்கினான். அதற்குள் தெற்கு பிராகாரத்தில் தங்களது தேடலை தொடங்கிவிட்டனர், அமரஜோதியும், மகிந்தாவும்.

https://telegram.me/aedahamlibrary

இப்போது மீண்டும் தேவசேனன் தனது சுளுந்தினை அசைத்துக் காட்ட, வீரகொசுவன் மீண்டும் வடக்கு பிராகாரத்தினுள் நுழைந்து அடுத்த சுற்றினை துவக்கி விட்டான் என்பதை புரிந்துகொண்டு, தேவசேனனை நோக்கி வேகமாகச் சென்றனர், அமரஜோதியும், மகிந்தாவும்.

ஆனால்...

என்ன இது...?

எதற்காக தேவசேனன் இவர்களை நோக்கி பரபரப்புடன் ஓடி வருகிறான். ஒருவேளை... வீரகொசுவன் அவனை பார்த்துவிட்டானோ? அவனை விரட்டிக் கொண்டு வந்த வழியே ஓடி வருகிறானா?

இருவருமே ஸ்தம்பித்து போய் நிற்க, தேவசேனன் மூச்சிரைக்க கையில் சுளுந்தை சுமந்தபடி ஓடி வந்தான்.

“என்ன நடந்தது, தேவசேனா?” - மகிந்தா பதற்றத்துடன் கேட்டான்.

“இளவரசே! கிழக்கும், தெற்கு பிராகாரங்களும் சந்திக்கும் இடத்தில், சற்று முன்பு நின்றேன் அல்லவா? மதிலின் ஓரமாக நின்று வீரகொசுவனை நோட்டம் விட்டேன். அப்போது எனது உடைவாளை மதில் சுவரின் மீது சாய்த்து வைத்துவிட்டு, அவனை கவனித்துக் கொண்டிருந்தேன். மீண்டும் எடுத்துக் கொள்ள மறந்து விட்டேன். நான் ஓடிச்சென்று எடுத்து வந்துவிடுகிறேன். நீங்கள் மேற்கு பிராகாரத்தில் அதற்குள் உங்களது தேடுதல்களை முடித்துவிடுங்கள்...” என்றான்.

“வேண்டாம், தேவசேனா! வீரகொசுவன் வடக்கு பிராகாரத்தைக் கடந்து கொண்டிருக்கிறான். விரைவில் கிழக்கில் திரும்பிவிடுவான். அவன் கண்களில் சிக்கிக் கொள்ளப் போகிறாய். வாள் போனால் போகட்டும்!” - அமரஜோதி கூறினார்.

"அதெப்படி சுவாமி? வாளைப் பார்த்து அவன் நாம் இங்கு வந்திருப்பதை அறிந்து கொண்டால் ஆபத்து அல்லவா. நான் கண்ணிமைக்கும் பொழுதில் ஓடிச் சென்று எனது வாளை எடுத்துக் கொண்டு வந்து விடுகிறேன்!” - தேவசேனன் ஓடினான்.

அதற்குள் அமரஜோதியும், மகிந்தாவும் மேற்கு பிரகாரத்தில் தேவ உடும்பரத்தைத் தேடி முடித்து, மேற்கு மற்றும் வடக்கு பிராகாரங்கள் சந்திக்கும் பகுதியில் நின்றனர்.

மகிந்தாவின் தேகம் சில்லிட்டது. வடக்கு பிராகாரத்தில், வீரகொசுவன்

https://telegram.me/aedahamlibrary

சுமந்து கொண்டு சென்ற தீப்பந்தத்தின் ஒளி புலப்படவில்லை. அங்கேயே நின்று தாங்கள் வந்த மேற்கு பிராகாரத்தையே நோக்கிக் கொண்டிருந்தனர்.

“வீரகொசுவன் கிழக்கில் திரும்பிவிட்டானே... தேவசேனன்... இன்னும் வரவில்லையே...?” சந்தேகத்துடன் கேட்டார், அமரஜோதி.

“வந்துவிடுவான். வேகமாக ஓடக்கூடியவன்தான்!” மகிந்தா கூறிக் கொண்டிருந்த போதே, மேற்கு பிரகாரத்தில் சுளுந்துடன் தேவசேனன் திரும்புவது தெரிந்தது.

"அதோ... தேவசேனன்!” - மகிந்தா கூற, அமரஜோதி சற்றே நிம்மதியுடன் ஓடிவரும் அந்த உருவத்தை பார்த்தார். அவரது பிடரியில் மயிர்கூச்சம் எடுத்தது.

சட்டென்று மகிந்தாவின் கரத்தை பற்றி இழுத்துக் கொண்டு, வடக்கு பிராகாரத்தில் திரும்பி, தாங்கள் பதுங்கியிருந்த குளக்கரையினை நோக்கி ஓடினார்.

“மகிந்தா... ஓடு! வருவது தேவசேனன் அல்ல, வீரகொசுவன்...” - இருவரும் உயிரை கையில் பிடித்துக் கொண்டு குளத்தினை நோக்கி ஓடினர்.

"அப்போது தேவசேனன்...?”

மகிந்தா கேட்டும், பதில் தராமல் ஓடுவதிலேயே கவனம் செலுத்தினார், அமரஜோதி. குளத்து நீரில் சுளுந்தினை நனைத்து அமரஜோதி அதனை அணைப்பதற்கும், வீரகொசுவன் உக்கிரத்துடன் அலறியபடி வடக்கு பிராகாரத்தினுள் நுழைவதற்கும் சரியாக இருந்தது. தாங்கள் முன்னர் பதுங்கியிருந்த அந்த அடர்ந்த மரக் கிளைகளிடையே இருவரும் மீண்டும் மறைந்து கொண்டனர்.

வீரகொசுவன் விரைவாக வந்து கொண்டிருந்தான். மகிந்தா அச்சத்துடன் அமரஜோதியைப் பார்த்தான்.

“தேவசேனன் எங்கே?”

“உஷ்! பேச வேண்டாம் இளவரசே!” அமரஜோதி எச்சரித்தார்.

வேகமாக அவர்கள் பதுங்கியிருந்த பகுதியை நோக்கி வீரகொசுவன் ஓடி வர, அமரஜோதி. அவனது ஓட்டத்தில் காணப்பட்ட மாறுதலை உடனே புரிந்து கொண்டார். சென்ற முறை அவன் வந்த போது அவன் கரத்தில்

https://telegram.me/aedahamlibrary

இருந்த உடுக்கையை ஒலித்துக் கொண்டே வந்தான். இம்முறை அவனிடமிருந்து உடுக்கையொலி எழவில்லை. அவன் கால்களின் தண்டை சத்தம் மட்டுமே கேட்டது. வீரகொசுவன் அவர்கள் இருந்த பகுதிக்கு வந்துவிட்டான். ஒரு கரத்தில் இன்னும் தீப்பந்தத்தை ஏந்திப் பிடித்திருந்தான். உடுக்கையினை ஒலித்த மற்றொரு கரத்தில் இப்போது.

அமரஜோதியும், மகிந்தாவும் உறைந்து போயினர். வீரகொசுவனின் இடக்கரத்தில், தேவசேனனின் துண்டிக்கப்பட்ட தலை ஊசலாடிக் கொண்டிருந்தது. திறந்திருந்த தேவசேனனின் கண்களில் இன்னும் பீதி நிறைந்திருந்தது.

அதிர்ச்சியில் மகிந்தா தனது கண்களை மூடிக் கொண்டான்.

**[1]** இன்றைய பழைய சீவரம்தான் பழமுதிர்சோலை என்கிற மாலிருஞ்சோலை மலை. நரசிங்கப் பெருமாள் மற்றும் வரதநாராயணப் பெருமாள் ஆலயம் ஆகியவை மலையின் மீது இருந்ததால், இம்மலையை ஸ்ரீவரம் என்று அழைத்தனர். மாலிருஞ்சோலை என்னும் பழமுதிர்சோலை என்கிற பெயரில் பழம் மற்றும் ஸ்ரீவரம் என்கிற பெயரும் இணைந்து பழ ஸ்ரீவரம் என்று அழைக்கப்பட்டு, தற்போது பழைய சீவரம் என்று அழைக்கப்படுகிறது.

**[2]** முதல் பாகத்தில் ஸ்ரீதள மணியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளேன். திருமாலின் மார்பில் உள்ள ஸ்ரீவத்சம் என்கிற மருவில் இலக்குமி அமர்ந்திருக்கிறாள். பொதுவாக ஆங்கிலத்தில் **Heart - throb** என்று காதலிப்பவர்களைக் கூறுவார்கள். இலக்குமியிடம் வாத்சல்யத்தைக் கொண்டிருப்பதால், திருமாலின் மார்புப் பகுதிக்கு ஸ்ரீவத்சம் என்று பெயர். அத்திமலையானின் ஸ்ரீவத்சமாக அணிவிக்கப்படுவதுதான், ஸ்ரீதள மணி. மிகவும் சக்தி வாய்ந்த யட்ச மரகத மற்றும் நீல கற்கள் அமைந்த வேலைப்பாடுகளுடன் ஸ்வர்ணத்தில் காணப்படும் ஸ்ரீதள மணியின் மையத்தில் இலக்குமியின் உருவம் செதுக்கப்பட்டிருந்தது.

[3] வேங்கடவன் கோயில்: காஞ்சி செங்கல்பட்டு சாலையில் சீவரம் அருகே திருமுக்கூடல் கிராமத்தின் வெளியே ஆற்றின் கரையில் இந்திய தொல்பொருள் துறை கட்டுப்பாட்டில் அமைந்திருப்பது அப்பன் வெங்கடேசப் பெருமாள் திருக்கோயில். சதவாகன மற்றும் பல்லவ மன்னர்களால் ஆராதிக்கப்பட்ட வேங்கடவன். நின்ற நிலையில் சங்கு சக்கரங்களோடு சுமார் 7 - 8 அடிகள் உயரத்தில் மார்கண்டேயரும் பூமாதேவியும் மண்டியிட்டு வணங்கி இருக்க திருக்குடந்தை அருகில் அமைந்துள்ள ஒப்பிலியப்பனை நினைவுபடுத்தும் தோற்றத்தில் அருள்

https://telegram.me/aedahamlibrary

பொங்க அமைந்துள்ளார்.

[4] உள்படுகருமத்தலைவர்: உள்துறை அமைச்சருக்கு உதவியாக உள்நாட்டு விவகாரங்களை கவனித்துக் கொள்ளும் அதிகாரி.

[5] ரகஸ்யாதிக்ருதன்: மன்னரின் அந்தரங்கக் காரியதரிசி.

[6] தற்போதைய கர்நாடக பெல்லாரி, மாவட்டம் தான் சதவாகனர்களின் தாயகமாக இருந்தது. கங்கன்ஹள்ளி என்னும் கிராமத்தில் எழுப்பப்பட்ட சுண்ணாம்பு ஸ்தூபி ஒன்று கிறிஸ்துவுக்கு முந்தைய காலங்களில் ஆட்சி புரிந்த சதவாகன மன்னர்களின் பெருமைகளைப் பற்றி கூறுகிறது.

[7] ஐயம்படுகை பகுதி இப்போது ஐயம்பேட்டை என்று அழைக்கப்படுகிறது. சாத்திர விவகாரங்களில் உள்ள ஐயங்களை நீக்கி, மக்களுக்கு நேர்பாதையைக் காட்டுபவரை ஐயத்தை நீக்குபவர்கள் என்று அழைத்து வந்தனர். ஐயம்பேட்டை (ஐயம் படுகை) கிராமவாசிகள் கல்வெட்டுகளை மற்றும் செப்பேட்டுகளை வடிப்பதில் திறமை பெற்ற மேதாவிகள். ஐயத்தை நீக்குபவர்கள் என்பதால் நாளடைவில் இவர்கள் ஐயர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

**[8]** அத்தங்கி என்பது காரணப் பெயர். அத்தன் என்றால் அப்பன். அப்பனான அதாவது மூலமூர்த்தியான அத்திமலையானுக்கு அங்கமாகச் செயல்பட்டதால் தலைமை அர்ச்சகர் அத்தங்கி என்று அழைக்கப்பட்டார்.

[9] பொதுவாகவே வைணவ ஆலயங்களும், சிவாலயங்களும் கிழக்கு திசையை நோக்கித்தான் அமைந்திருக்கும். பிரம்மன் கிழக்கு நோக்கி அமர்ந்து செய்த அஸ்வமேத யாகத்தில் அவனை நோக்கி காட்சி தந்ததால், காஞ்சிபுரத்தில் அனைத்து திருமால் ஆலய மூர்த்தங்களும் மேற்கு நோக்கித்தான் காட்சி தருவார்கள் என்று நான் அறிந்திருக்கிறேன். ஆனால் அத்தியூரை ஆராய்ச்சி செய்த போது அத்திமலையான் கிழக்கு நோக்கி கோவில் கொண்டிருந்ததையும், சீவரத்தில் இருந்த வரதநாராயணப் பெருமாள் வரதராஜனாக பிரதிஷ்டை செய்யப்பட்ட போது கிழக்கை நோக்கி இருக்கும் வண்ணம் ஸ்தாபிதம் செய்யப்பட்டதாக அறிந்தேன். நந்திவர்மன் காலத்தில் வரதர் மட்டுமல்லாமல், காஞ்சியில் உள்ள அனைத்து ஆலயங்களும் மேற்கு நோக்கி திருப்பி அமைக்கப்பட்டன. இதற்கு அரசியலே முழுக்காரணம். நந்திவர்மன் இட்ட உத்தரவுக்கு என்ன காரணம் என்பது மூன்றாம் பாகத்தில் தெரிய வரும்.

https://telegram.me/aedahamlibrary

[10] தருமநகரத்தில்தான் உக்கிர சரஸ்வதிக்கு கோயில் ஒன்றும், அதனைச் சுற்றி எழுமால் கோயில் (ஏழு திருமால் கோவில்கள்) இருந்தன என்பதை முதல் பாகத்திலேயே குறிப்பிட்டு உள்ளேன்.

[11] ஒத்தாடை என்கிற ஏகாம்பரேஸ்வரர் ஆலயம் உள்ள பகுதியையும், தருமநகரம் என்கிற காமாட்சி அம்மன் கோயில் உள்ள பகுதியையும் இணைக்கும் வீதிதான் ராஜ வீதி. இப்போதும் அந்த பெயருடனேயே விளங்குகிறது அந்த வீதி.

[12] எல்லா ஆலயங்களிலும் முகப்பு நுழைவாயிலின் மீது ராஜகோபுரம் அமைத்திருப்பார்கள். ஆலயத்தின் மற்ற எல்லா கோபுரங்களை காட்டிலும் ராஜகோபுரம் உயர்ந்து காணப்படும். இந்த கோபுரம்தான் நாட்டின் மன்னனுக்கும், அண்ட சராசரங்களை ஆளும் இறைவனுக்கும் இடையே உள்ள தொடர்பு. ஒரு நாட்டின் மன்னன், காலையில் எழுந்ததும் ராஜ கோபுரத்தைக் காண வேண்டும். கோபுரத்தைச் சுற்றி கருடன் பறந்தால், அவன் ஆட்சி நல்ல முறையில் நடந்து கொண்டிருப்பதாகப் பொருள். இரவு இடியிடித்து மழை பெய்திருப்பினும், கோபுரத்திற்கு எவ்வித பாதிப்பும் இல்லாமல் இருக்கும். என்று இடிதாக்கி, கோபுரம் சேதம் அடைகிறதோ, அன்று நாட்டை ஆளும் மன்னன் நீதி வழுவிவிட்டான் என்று பொருள். அவனது ஆட்சியில் தர்மம் இல்லை என்றும் பொருள். எனவே, மன்னர்கள் தங்களது ஆட்சியின் முறையைப் பற்றி அறிவதற்காக காணும் கோபுரமே ராஜ கோபுரம். உப்பரிகை மீது ஏறி திருலோச்சன பல்லவனும் அன்றாடம் ஒத்தாடையான் கோயிலின் ராஜகோபுரத்தை காண்பது வழக்கம். ராஜா காணும் கோபுரம் ராஜகோபுரம். 'கூரை மீது ஏறி கோயிலைக் காணாதவன், வானம் ஏறி வைகுந்தம் போவது எப்போது?' என்னும் பழமொழி இதனைக் குறித்தே உண்டானது. உப்பரிகை மீது ஏறி தனது ஆட்சியின் நிலைமையினை பற்றி உணராதவன், நல்லது செய்து எங்கனம் முக்தி அடையப் போகிறான் என்பது இதன் பொருள். வழக்கம் போல், கூரை ஏறி கோழி பிடிக்காதவன் வானம் ஏறி வைகுந்தம் போவது எப்போது என்று மருவிவிட்டது.

[13] வேலூர் மாவட்டத்தில் வாலாஜாபேட்டைக்கு அருகில் பாலாற்றிலிருந்து பிரிந்து செல்லும் ஓர் ஓடையே இடையில் சில நீரோடைகளை இணைத்துக்கொண்டு கொசத்தலையாறாகப் பாய்ந்தது. பிறகு அது திருத்தணி, திருவள்ளூர், பொன்னேரி வட்டங்கள் வழியாக சென்னை எண்ணூர் அருகே வங்காளவிரிகுடா கடலில் கலக்கிறது.

https://telegram.me/aedahamlibrary

இதன் புராண பெயர் விருத்த க்ஷீர நதி. கொசத்தலையாற்று பள்ளத்தாக்கு பகுதியில்தான் சுமார் ஐந்து இலட்சம் முதல் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக பாலாறு ஓடியிருக்கக்கூடும். இதனை செயற்கைக்கோள்கள் மூலம் எடுக்கப்பட்ட படங்களும், தொல்லியல் சான்றுகளும் ஊர்ஜிதப்படுத்துகின்றன. இன்றும் பனப்பாக்கம், திருமால்பூர் போன்ற பகுதிகளில் நிலம் ஆற்று மணற்பாங்காகக் காட்சியளிக்கின்றது. கலிங்கத்து பரணி பாடிய செயங்கொண்டார் சுமார் 1100 வருடங்களுக்கு முன்பாக கருணாகர தொண்டைமான் வடக்கு நோக்கி காஞ்சியில் இருந்து படையுடன் புறப்பட்ட போது பாலாறு காஞ்சியின் வடக்கில் ஓடியதாகக் கூறுகிறார். ஆனால் இப்போது பாலாறு காஞ்சியின் தெற்கே ஓடுகிறது. அதே போன்று, காவேரிபாக்கம் அருகில் உள்ள கொண்டாபுரம் கல்வெட்டுகள் அவ்வூர் ஈஸ்வரன் கோவிலுக்கு வடக்கே பாலாறு ஓடுவதாகக் கூறுகின்றன. ஆனால் அந்தக் கோவிலுக்குத் தெற்கே இப்போது பாலாறு ஓடுகிறது. (வேலூர் மாவட்ட தொல்லியல் கையேடு, மதிவாணன், 2011). சிங்கநெஞ்சம் என்கிற தொல்துறை அதிகாரி அண்மையில் பாலாறு சென்னை பகுதியில் ஓடியிருந்ததற்கு ஆதாரம் தந்து, தற்போதைய சென்னையில் ஓடும் ஆறுகளான அடையாறும், கூவமும், பாலாற்றின் அடையாளங்களே என்று கூறுகிறார்.

**<http://timesofindia.indiatimes.com/articleshow/66587121.cms?utm_source=contentofinterest&utm_medium=text&utm_campaign=cppst>.**

பாலாற்றின் ஒரு கிளை பூண்டி நீர் தேக்கத்திற்குச் செல்ல, அதன் கிளையாக இன்றைய குசஸ்தலை ஆறு ஓடுகிறது. குசஸ்தலை என்பது வடமொழி சொல் என்றே பலரும் நினைத்திருக்கின்றனர். ஆனால், பாலாறு மற்றும் குசஸ்தலை ஆறுகளின் கரையில் குயவர்கள் என்கிற கொசுவர்கள் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். கொசுவர் தலைவன் கிராமத்தின் கரையில் ஓடிய பாலாற்றின் கிளை ஆறு கொசுவன் தலையன் ஆறு என்று அழைக்கப்பட்டு தற்போது குசஸ்தலை ஆறு என்று அழைக்கப்படுகிறது. அத்திமலைத் தேவனை தங்கள் குலதெய்வமாக வணங்கிய கொசுவர்கள், ஆலய மடைப்பள்ளிக்கு சட்டி பானைகளை அன்றாடம் அனுப்பி வந்திருக்கின்றனர். ஒரு நாள் சமைத்த கலயங்களில் மறுநாள் சமைக்கும் வழக்கம் அந்த காலத்தில் இல்லை. ஆலய பூஜைகள் முடிந்ததும், திறவுகோலை, கொசுவர் தலைவனிடம் ஒப்படைத்து விடுவார்கள். கொசுவர் தலைவன் தங்கள் குலதெய்வத்தினை இரவு வேளைகளில் காவல் காப்பது வழக்கம்.

https://telegram.me/aedahamlibrary

வீரகொசுவன் சீவேலி என்பது, கொசுவர் தலைவன் உக்கிர ஆட்டம் ஆடியபடி கோவிலை காத்து வருவது. கோவிலினுள் நுழைய முயலும் யாரையும் அவன் உக்கிர ஆட்டத்தின் போது வெட்டி வீழ்த்தலாம். அவனுக்கு தண்டனை கிடையாது. காரணம், அவன் அத்திமலையானின் உக்கிரத்தை கொண்டுவிடுகிறான் என்பது நம்பிக்கை.

[14] சகதலையன் என்பது சகலை அல்லது சகலபாடி என்று கூறுகிறோமே இன்று, அதைத்தான் குறிக்கிறது. அக்காள் தங்கையை மணந்தவர்கள் சகலைகள். ஒரு பெண்ணின் கணவனை தலையன் என்று அழைப்பது வழக்கம். வீட்டுக்கு வரும் மூத்த மாப்பிள்ளைதான் தலையன். அடுத்ததாக வரும் மாப்பிள்ளை சகதலையன். சகதலைவன் என்கிற சொல் சகலையாக மாறியது. CAPTAIN, VICE CAPTAIN என்றும் கொள்ளலாம். மூத்த மகனை தலைச்சன் என்று சொல்வது போன்று மூத்த மாப்பிள்ளையை தலையன் என்றும் பின்வரும் மாப்பிள்ளைகளை சகதலையர்கள் என்றும் அழைத்தனர். சகதலையனே இன்றைய சகலை. சங்கநூல்களால் அறியப்பெற்ற சோழ அரசர்களுள், காலத்தால் முதற்கண் வைத்துச் சிறப்பிக்கப்படுபவன், உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னிதான். இளஞ்சேட்சென்னி, கரிகாற் பெருவளத்தானை பெற்றுப் புகழ் கொண்ட பேறுடையான் ஆவான்; இது, ஆசிரியர் முடத்தாமக் கண்ணியார், பொருநராற்றுப் படையில், கரிகாலனே, உருவப்பஃறேர் இளையோன் சிறுவன் என்று பெயரிட்டு அழைப்பதால் தெளிவாகும். இளஞ்சேட்சென்னியின் மனைவி, அழுந்தூரில் வாழ்ந்த வேளிர்குடியிற் பிறந்த பெருமாட்டியாராவார்; இது, 'மன்னர் பாங்கிற் பின்ன ராகுப்' என்ற தொல்காப்பியம் அகத்திணையியல் சூத்திர உரையில்,' உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி, அழுந்தூர்வேளிடை மகட்கோடலும், அவன் மகன், கரிகாற்பெருவளத்தான், நாங்கூர்வேளிடை மகட் கோடலும்' என்று நச்சினார்க்கினியர் கூறுவதால் உறுதியாகும்; அவ்வுரையின் பிற்பகுதி, உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியின் மகன் கரிகாலன் என்ற பொருநராற்றுப்படைக் கொள்கையை உறுதி செய்வதும் தெரிகிறது. இளஞ்சேட் சென்னியின் மனைவியின் தங்கையைத்தான் பல்லவ திருலோச்சனன் மணந்திருந்தான். இளஞ்சேட்சென்னி, மகன் கரிகாலன் பிறப்பதற்குச் சில நாட்களுக்கு முன்னரே இருங்கோவேள் என்பவனால் கொலை செய்யப்பட்டான்.

[15] சிலப்பதிகாரத்தில் சேரன் செங்குட்டுவன் இமயத்தை நோக்கி படை எடுத்துச் சென்ற போது, காஞ்சியை ஆண்ட சதகரணி என்கிற மன்னன் செங்குட்டுவனுக்கு உதவியதாக கூறுகிறார், இளங்கோவடிகள்.

https://telegram.me/aedahamlibrary

சதகரணி என்பான் சதவாகன மன்னன். காஞ்சிக்கு வந்த செங்குட்டுவனின் படைகளுக்கு உணவு, நீர் மற்றும் கூடாரங்களை அமைத்துத் தந்து சதகரணி செங்குட்டுவனின் இமயம் கைப்பற்றும் முயற்சிக்காக, அத்திமலையானுக்கு விசேட ஆராதனைகளைச் செய்து அவன் வெற்றிபெற வேண்டி வாழ்த்துகிறான். இந்த சதகரணி மன்னனைத்தான் சிலப்பதிகாரம் 'நூறுவர் கண்ணார்' என்று கூறுகிறது. நூறுவர் என்றால் வடமொழியில் சதம். கர்ணர் என்பதை கரணி என்று கொள்ளலாம். இந்த மன்னனின் வழியில் தோன்றியவர்தான், பல்லவ ராஜகுரு பரத்வாஜ சதகரணி.

[16] அசோகனின் தம்பி விதசோகன்தான் துறவறம் ஏற்று திவ்ய தாமா என்னும் பெயரினை ஏற்றிருந்தான் என்பதை முதல் பாகத்தில் தெரிவித்திருந்தேன்.

அமரஜோதி, முக்கூடல் கடிகையில் பௌத்த தத்துவத்தை போதித்து கொண்டிருப்பவர்.

மகிந்தா, மகேந்திரன் என்கிற அசோகனின் மகன்.

தேவசேனன், அசோகன் அனுப்பிய ரகசிய படையினைச் சேர்ந்தவன்.

[17] பொற்றாமரைக் குளம் இப்போதைய காஞ்சி வரதர் கோயிலில் வடகிழக்கில் கிழக்கு ராஜகோபுரம் அருகே உள்ளது. இதில்தான் காஞ்சி பெருந்தேவி தாயார் அவதரித்தார் என்கிறார்கள்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 2. வீரகொசுவன் கையில் ஒரு தலை

இரவெல்லாம் மந்திராலோசனையில் கழித்ததால் உறக்கத்தை இழந்து, கண்கள் சிவந்த நிலையில் காலை விஸ்வரூப தரிசனத்திற்காக அத்திமலையானின் ஆலயத்தின் கிழக்கு வாயிலினுள் நுழைய முயன்ற அத்தங்கி பட்டர், திடீரென்று ஆலயத்தின் கதவுகள் மீண்டும் மூடப்படுவதை கண்டு திகைத்தார். கோயிலின் வாயிலில் நிவாசநாத பட்டர் குழப்பத்துடன் நின்றிருந்தார்.

“என்ன நடக்கிறது, நிவாசரே?” - அத்தங்கி கேட்க, உதட்டைப் பிதுக்கி தனக்கு ஒன்றும் தெரியாது என்பதை அவர் தெரியப்படுத்த முயல, சரியாக, ஆலயக் கதவின் திட்டி வாசல் வழியாக வெளியே வந்தார், கோயில் அதிகாரி, கூர்மாச்சாரியர். அவரைக் கண்டதும் பாய்ச்சலுடன் அவரை அணுகினார், அத்தங்கி.

“என்ன நடந்தது சுவாமி?” - அத்தங்கி கேட்டார்.

“என்னவென்று சொல்வது? வீரகொசுவனின் கரத்தில் ஒரு வேற்று நாட்டவனின் தலை ஊசலாடிக்கொண்டிருந்தது... வீரகொசுவன் மயக்க நிலையில் அமர்ந்திருந்தான். மூர்ச்சையை தெளியவைத்தால், வழக்கம் போல் அவனுக்கு ஒன்றுமே நினைவில் இல்லை. தலை கொய்யப்பட்டவனின் தேகம் தெற்கு பிரகாரத்தில் கிடந்தது. தகவலை உடனே மன்னருக்குத் தெரியப்படுத்த வேண்டும். நீங்களும் என்னுடன் அரண்மனைக்கு வாருங்கள்.” - கூர்மாச்சாரியர் அத்தங்கியை அழைத்தார்.

'மீண்டும் அரண்மனைக்கா?' திகைத்தார், அத்தங்கி. நள்ளிரவில் தானே மன்னர் அவரிடம் கவலையுடன் கேட்டிருந்தார் - 'அத்திமலையானின் ஆலயத்தில் பிரச்னை ஒன்றும் இல்லையே' என்று. அத்திமலையான் போக்யமாக தனது ஆராதனைகளை நடத்திக் கொண்டான். வீரகொசுவனின் வசம் ஆலயம் உள்ளது என்று பெருமையுடன் இவரும் கூறியிருந்தாரே. இப்போது எங்கிருந்து வீரகொசுவனின் கரத்தில் தலை ஒன்று முளைத்தது...? எந்த முகத்துடன் மன்னர் முன்பாக நிற்பது?

அத்தங்கி தயங்கினார். “நான் ஆலயத்தை தூய்மைப்படுத்த புண்யாவசன பணிகளை கவனிக்கிறேன். நிவாசநாத பட்டரை நீர் அழைத்துச் செல்லுங்கள்” என்றவர் தனது சகாவைப் பார்த்துத் தலையசைத்தார்.

https://telegram.me/aedahamlibrary

அவரது சமிக்ஞையைப் புரிந்து கொண்டு நிவாசநாதர் கூர்மாச்சாரியரைப் பின்தொடர்ந்தார். -

அத்தங்கி அத்திமலைக்குச் செல்லாமல் கிழக்கில் நடக்கத் துவங்கி பிராகாரத்தை வலம்வரத் தொடங்கினார். நடுநிசியில் இவர் அரண்மனைக்குச் சென்றிருந்த போது ஆலயத்தில் ஏதோ நடந்திருக்கிறது. கொல்லப்பட்ட மனிதன் யார்? எதற்காக ஆலயத்தினுள் வந்தான்? வேற்று நாட்டவன் என்று கோயில் அதிகாரி கூறுவதை கேட்டால், உளவறிய வந்திருப்பவனோ?

தெற்கு பிராகாரத்தில் திரும்பியவுடன் அந்த வாள் அவரது கண்களில் பட்டது. மதிலின் மீது சாய்த்து நிறுத்தப்பட்டிருந்தது. வெட்டுண்ட மனிதனின் வாளாக இருக்கக்கூடும்! பார்க்கும் போதே வடபுல வீரர்கள் பயன்படுத்தும் போர்வாள் என்பது புரிந்தது. எதற்காக அந்த மனிதன் வாளுடன் நடுநிசியில் ஆலயத்துக்கு வந்தான்? அரண்மனை அதிகாரிகள் வரும் வரை, அதனைக் கையால் தொடக்கூடாது!

யோசனையுடன் தொடர்ந்து பிராகாரத்தை வலம் வந்தார். சற்று தொலைவில், ஒரு இருவாட்சி செடியருகே அந்த மனிதனின் தலையற்ற உடல் நிலத்தில் கிடந்தது. கழுத்திலிருந்து பொங்கிப் பரவிய குருதி பிராகாரத்தில் வழிந்தோடியிருக்க, ஈக்கள் அந்த உடலை மொய்க்கத் தொடங்கியிருந்தன. 'துவாதசி அதுவுமாக ஆலயத்தில் இப்படி ஒரு துர்சம்பவமா? அத்தியூரானே! என்ன கொடுமை இது?'

அவரது பார்வை அந்த உடலின் அருகே கிடந்த வீரகொசுவனின் வெட்டரிவாளின் மீது படர்ந்தது. வெகு காலத்திற்குப் பிறகு, வீரகொசுவன் தனது அரிவாளுக்கு வேலை கொடுத்திருக்கிறான். அத்தங்கியின் பாட்டனார் காலத்தில் ஆலயத்தினுள் புகுந்த ஒரு கள்வனை அப்போதைய கொசுவத்தலைவன் வெட்டி சாய்த்திருந்தான். அதற்குப் பிறகு, இதோ, இந்த அயல்நாட்டவன் தான் வீரகொசுவனின் வெட்டரிவாளுக்கு பலியாகியுள்ளான்.

அதற்குமேல் அங்கு நிற்க திராணி இல்லாமல் போக, அத்தங்கி பட்டர் அவசரமாக அத்திமலையை நோக்கி நடந்தார். சிறிது தொலைவு சென்றதும், அவருக்கு ஏதோ உறைக்க, சடாரென்று நின்று, தான் வந்த வழியே திரும்பி நோக்கினார். ஏதோ அனர்த்தம் நிகழ்ந்திருப்பது புரிந்தது வந்த வழியே திரும்பி நடந்தவர், குழப்பத்துடன் இறந்தவனின் உடலை நோக்கினார். மீண்டும் ஏதோ ஒன்று அவரது சிந்தையை உறுத்தியது. ஆலயத்தினுள் அத்துமீறி நுழைந்த ஒருவனை

https://telegram.me/aedahamlibrary

வீரகொசுவன் கொன்றிருக்கிறான். ஆனால்...

அத்தங்கி பட்டர் குழப்பத்துடன் ஆலயத்தின் தெற்கு பிராகாரத்தை மேலும் கீழுமாக இரு முறை நோக்கினார். பிறகு இறந்தவனின் உடலையும், வீரகொசுவனின் வெட்டரிவாளையும் வெறித்துப் பார்த்தார். உடனே தனது சிந்தையை உறுத்திக்கொண்டிருந்த விவரம் என்ன என்பது அவருக்குப் புலப்பட்டது. 'வீரகொசுவனின் வாளினால் தலை கொய்யப்பட்டு இறந்திருக்கிறான், அந்த மனிதன். ஆனால்... அவனது வெட்டரிவாளினில் குருதி படர்ந்த கறையை காணோமே! ஒருவேளை, அந்த மனிதனின் போர்வாளினையே பறித்து அவனது தலையை கொய்துவிட்டானா, வீரகொசுவன்?'

பிராகாரத்தின் திருப்பத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த அந்த மனிதனின் போர்வாளினை நோக்கி விரைந்தார். வாளினை மேலும் கீழுமாக உற்று நோக்கியவர் அதிர்ந்தார். அந்த வாளினிலும் குருதி கறை படிந்திருக்கவில்லை.

'இது என்ன மாயம்? வீரகொசுவனின் வெட்டரிவாளிலும் குருதி படிந்திருக்கவில்லை. இறந்தவனின் வாளினிலும் குருதி படிந்திருக்கும் அடையாளம் இல்லை. அப்படியென்றால்...?

வீரகொசுவன் தனது வாளையும் உபயோகிக்கவில்லை. அந்த மனிதனின் வாளையும் பிரயோகிக்கவில்லை என்றால் எங்ஙனம், அவன் அந்த மனிதனின் தலையைக் கொய்தான்?'

அத்தங்கிக்கு தலை சுற்றியது. இந்த விவரத்தை கோயில் அதிகாரி கவனித்தாரோ இல்லையோ? பட்டருக்கு ஒன்றுமே புலப்படவில்லை. அவருக்கு வேண்டியதெல்லாம் ஆலய கடமைகளுக்கு இடையூறு நேராதபடி, அந்த உடலை அங்கிருந்து உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும் என்பதே. ஆலயத்தில் கொலை சம்பவித்து விட்டதால், அத்தியூரான் பிரதிமையின் சானித்தியம் கெடக்கூடாது என்பதற்காக ஒரு தர்ப்பை புல் மாலையை அத்திமலைத் தேவனுக்கு சாற்றும் எண்ணத்துடன் பிராகாரத்தைச் சுற்றி நடந்து அத்திமலையின் மீது ஏறினார். தர்ப்பை புல்லினால் ஒரு மாலையை தயாரித்து சந்நிதிக்குச் சென்றவர், கதவினை திறந்து திரையை விலக்கினார். அத்தியூரானின் மேனியை நோக்கியவர், பிரமித்துப் போய் நின்றார். நான்கைந்து கருந்தேள்கள் அத்தியூரானின் மேனியின் மீது ஊர்ந்து கொண்டிருந்தன. அப்படியென்றால், அத்தியூரான் உக்கிரத்தில் இருப்பதாகப் பொருள். அத்தங்கி பட்டரின் வாய் உலர்ந்து போனது.

https://telegram.me/aedahamlibrary

***

மயங்கிப் போன மகிந்தாவை ஓடம் ஒன்றில் ஏற்றி வேகவதியில் பயணித்து தும்ப வனத்தை [1] நோக்கிச் சென்று கொண்டிருந்தார் அமரஜோதி. பால்யத்தில் இருந்தே மகிந்தாவின் உயிர் தோழன் தேவசேனன். இலங்கை மன்னன் திஸ்ஸாவும், அவன் மகள் அனிலாவும் புத்த மதத்தை ஏற்பதற்கு சித்தமாக இருப்பதாகவும், தங்கள் நாட்டில் புத்த மதத்தை ஸ்தாபிதம் செய்வதற்கு, புத்த பிக்குகளை அனுப்புங்கள் என்று புத்த கயைக்கு மடல் அனுப்பிய போது, அசோகன் அனுப்பிய குழுவினில் மகிந்தாவும், சங்கமித்தாவும் ஆர்வத்துடன் இணைந்தனர். இலங்கை செல்லும் வழியில், இலங்கைக்கு பயணிக்கும் சாக்கினில், அத்தியூரில் தேவ உடும்பரத்தை தேடிப் பார்ப்பது என்கிற எண்ணத்தில்தான் அத்தியூருக்கு வந்திருந்தனர். தனது ஆருயிர் நண்பன் தேவசேனன் குழுவில் இடம்பெறுமாறு பார்த்துக் கொண்டான் மகிந்தன். தேவசேனன் மாபெரும் போர் வீரன் என்றும் தனக்கு பாதுகாப்பாக இருப்பான் என்றும் கூறி, திவ்ய தாமாவிடம் அனுமதி பெற்றுத்தான், அவனை அத்தியூரான் ஆலயத்திற்கு அழைத்து வந்திருந்தான். ஆனால், துண்டிக்கப்பட்ட உயிர் நண்பனின் தலையினைக் கண்டதும், அதிர்ச்சிக்குள்ளாகி மயங்கி விட்டான் மகிந்தா.

அமரஜோதி செய்வதறியாது திகைத்து நின்றார். மயங்கிய மகிந்தா, மரத்திலிருந்து விழாத வண்ணம் அவனைப் பிடித்துக் கொண்டவர், வீரகொசுவன், தனது உலாவினை முடிக்கும் வரை மரத்தின் மீதே இருந்தார். விடியற்காலை, அவனுடைய காவல் முடிந்து, ஆலய வாசல் திறந்ததும், அவசரமாக மரத்தில் இருந்து இறங்கி வெளியே நழுவியிருந்தார். மயக்கமுற்றிருந்த மகிந்தாவை சுமந்து செல்ல வேண்டியிருந்ததால், தேவசேனனின் வாளைக்கூட அவரால் அப்புறப்படுத்த இயலவில்லை.

ஒருவாறு மகிந்தாவுடன் வேகவதி நதிக்கரையை அடைந்தார் அமரஜோதி. ஓடம் ஒன்று தென்னைமரக் கன்று ஒன்றினில் பிணைக்கப்பட்டிருந்தது. ஓடக்காரன் இன்னும் விழித்திருக்கவில்லை போலும். மகிந்தாவை ஓடத்தில் ஏற்றிய அமரஜோதி, தானும் ஏறிக்கொண்டு மரத்தினில் பிணைத்திருந்த கயிற்றினை விடுவித்தார். படகை தும்புரு வனத்தை நோக்கிச் செலுத்தினார்.

தும்ப வனத்தை அடைந்ததும், மகிந்தாவைச் சுமந்து கொண்டு தருமநகரத்தில் உள்ள தனது குடிலுக்குச் சென்றார். பொழுது

https://telegram.me/aedahamlibrary

புலர்வதற்கான அறிகுறிகள் தோன்றின. தேவ உடும்பரத்தை தேடிச் சென்றவர்கள் அதைக் கண்டுபிடித்தார்களா என்கிற ஆவலில் உறங்காமல் விழித்துக்கொண்டு அவர்களுக்காகக் காத்திருந்த சங்கமித்தா, அமரஜோதி மகிந்தாவைச் சுமந்தபடி வருவதைக் கண்டதும் திடுக்கிட்டாள்.

“என்ன நடந்தது, சுவாமி?”

அமரஜோதி மகிந்தாவை மஞ்சத்தில் கிடத்தும் வரை அவளது கேள்விக்கு பதில் கூறவில்லை. பிறகு அவளைத் துயரத்துடன் நோக்கினார்.

"சங்கா! தேவசேனன் வீரகொசுவனால் சிரச்சேதம் செய்யப்பட்டான். அதை கண்ணுற்ற அதிர்ச்சியில் உனது சகோதரன் மயங்கிவிட்டான். எங்களால் தேவ உடும்பர வ்ருட்சத்தைத் தேடிக் கண்டுபிடிக்க இயலவில்லை." ஏமாற்றத்துடன் சொன்னார், அமரஜோதி.

“தேவசேனன் திறமையான போர் வீரனாயிற்றே! அவனால் வீரகொசுவனை எதிர்க்க முடியவில்லையா?” - ஈனஸ்வரத்தில் கேட்டாள், சங்கமித்தா.

"அவனது வாளை, பதுங்கியிருந்த இடத்தில் மறந்து விட்டுவிட்டான். அதை மீண்டும் எடுத்து வரச் செல்லும் போதுதான் அநியாயமாக வெட்டுண்டான்!” அமரஜோதி கூறினார்.

“இப்போது என்ன செய்வது?” - கவலையுடன் சகோதரன் மகிந்தாவை நோக்கினாள்.

“சிறிது காலம் அமைதியை கடைப்பிடிக்க வேண்டியது தான். தேவசேனனைப் பற்றி விசாரணைகள் எழும். நம் மீது அரண்மனையின் கவனம் திரும்பலாம். அவன் நமது குழுவைச் சேர்ந்தவன் அல்ல என்பதாகவே அதிகாரிகளுக்குக் கூற வேண்டும். சிறிது காலம் கழியட்டும், பிறகு நமது தேடுதல் படலத்தை துவக்குவோம்...” என்று அமரஜோதி கூறிக்கொண்டிருக்கும்போதே, ஆம்ரபாலி நடனமாடும் அன்னமாக அங்கே தோன்றினாள்.

“இளவரசருக்கு என்ன ஆயிற்று?” - ஆம்ரபாலி கேட்டாள்.

"அதிர்ச்சிதரும் காட்சி ஒன்றைப் பார்த்தார். அதனால் மயங்கிக் கிடக்கிறார்!” என்று மட்டும் அமரஜோதி கூறினார்.

https://telegram.me/aedahamlibrary

“அவனது ஆருயிர் நண்பன் தேவசேனன், தலை வெட்டப்பட்டு மரித்தான். அதனால், இளவரசன் மூரச்சையாகிவிட்டான்!” என்று சங்கமித்தா கூறியதும், ஆம்ரபாலியின் முகத்தில் எவ்வித உணர்வும் இல்லை.

"நினைத்தேன்... வீரனாக இருந்தாலும், தேவசேனன் விவேகம் அற்றவன். அவனைப் போய் இளவரசர் தேடுதல் வேட்டைக்கு அழைத்துச் செல்கிறாரே என்று அப்போதே எண்ணினேன். நமது மார்கத்திற்கு மிகவும் தேவையான தேவ உடும்பரத்தைத் தேடுவதற்கு வீரம் மட்டும் இருந்தால் போதாது! விவேகமும் வேண்டும்!” - ஆம்ரபாலி கூற, அமரஜோதியும், சங்கமித்தாவும், ஒருவரையொருவர் நோக்கினர்.

“நான்தான் உங்களுக்குக் கூறினேன் அல்லவா. அத்தி மலையில் உள்ள ரகசியத்தை அறிவதற்கு இப்படியெல்லாம் திட்டமிட்டால் நடக்காது. விஷயத்தை என்னிடம் விடுங்கள். நான் பார்த்துக் கொள்கிறேன்.” - ஆம்ரபாலி கூறினாள்

“முதலில் இளவரசரை கவனிப்போம். பிறகு இதனைப் பற்றி விவாதிப்போம்!” - அமரஜோதி எரிச்சலுடன் கூறினார்.

“இளவரசருக்கு ஓய்வு தேவை. அவர் உறங்கட்டும். நீங்கள் திட்டமிட்ட காரியம் எதுவும் நடைபெறவில்லை. உட்கார்ந்த இடத்தில் ஞானம் போதிப்பவர்களால் என்று மார்க்கம் வளர்ந்தது? என்னை மாதிரி திறமைகளைக் காட்டி, பிற சமயத்தினரின் வைராக்கியங்களை உடைப்பவர்களால்தான், நமது மார்க்கம் வளரும்.” - கேலியுடன் கூறிய ஆம்ரபாலி, அமரஜோதியை அலட்சியத்துடன் நோக்கினாள்.

“அமரஜோதியாரே, என் வழியில் நான் போகிறேன். எப்படியாவது அத்திமலை ரகசியத்தை அறிந்து வருகிறேன்.” ஆம்ரபாலி கூறினாள்.

***

கபிலவஸ்துவில் சித்தார்த்தன் பிறந்தது முதல் அவன் புத்தனாக போதி மரத்தடியில் அமர்ந்தது வரை, நடைபெற்ற விருத்தாந்தங்களை நாட்டிய நாடகமாக முக்கூடல் கடிகையின் திறந்தவெளி அரங்கில் ஆம்ரபாலி நடத்திக் கொண்டிருந்தாள். மாலை மயங்கி, ஆங்காங்கே தீபஸ்தம்பங்களில் ஒளிர்விடும் எண்ணெய்க் கப்பரைகள் வைக்கப்பட்டுவிட்டன. வெண்மை நிற நடன உடையணிந்து ஆபரணங்களைப் பூட்டியிருந்த ஆம்ரபாலி தேவதை போன்று ஜொலித்தாள். நாட்டிய சாத்திரத்தின் நியதியை ஒவ்வொரு அங்க

https://telegram.me/aedahamlibrary

அசைவிலும் கடைப்பிடிப்பவள் தான். ஆனால் அன்று அவளுடைய கவனம் முழுவதும், தூண் ஒன்றில் சாய்ந்தபடி அவளை வைத்த கண் வாங்காமல் நோக்கிக் கொண்டிருந்த அந்த வாலிபனின் மீதுதான் இருந்தது. அத்திமலைத் தேவன் ஆலயத்தின் அதிகாரி கூர்மாச்சாரியரின் மகன் சங்கர்ஷணன். அவனை இலக்காக வைத்துதான் ஆம்ரா நாட்டியமாடிக் கொண்டிருந்தாள். தனது கடைக் கண்ணை அவன் புறமாகத் திருப்பி அசைத்து அவனது அகன்ற கண்களுக்குத் தூண்டில் போட, தன்னையும் அறியாமல் அவனது கண்கள் அவளது வேல்விழிகளில் சிக்கிக் கொண்டன. கண்ணால் வலைவிரித்தாளே தவிர, அவளிடம், அவனது கண்கள் மட்டும் சிக்கவில்லை. செவி, வாய், கண், மூக்கு, உடல் என்கிற ஐம்புலன்களும் சிக்கிவிட்ட நிலையில்தான் இருந்தான் சங்கர்ஷணன்.

ஆம்ரபாலியின் தண்டைகள் எழுப்பிய ஒலியினில் சங்கர்ஷணன் மகுடிக்குக் கட்டுப்பட்ட நாகம் போல மாறினான். அவள் அரங்கின் எந்த மூலைக்குச் சென்று அபிநயம் பிடித்தாலும், அவனது கண்களும் அவள் பின்னாடியே ஊர்ந்து சென்றன. நவரசத்தில் அவள் எந்த ரசத்தைக் காட்டுகிறாள் என்பதை சங்கர்ஷணனின் கண்களை நோக்குபவர்கள் கண்டுகொள்வார்கள். அவனது விழிகளில் ஆம்ரபாலியின் ஒவ்வொரு அசைவினையும் படம் வரைந்து கொண்டிருந்தான், சங்கர்ஷணன்.

நாட்டிய நாடகம் முடிந்த போது, சங்கர்ஷணன் பூரணமாக தன்னையே அவளிடம் இழந்திருந்தான். அது தானே ஆம்ரபாலியின் நோக்கம். தான் விரைவில் அத்திமலை ரகசியத்தை அடைந்துவிடுவோம் என்கிற நம்பிக்கை அவளுள் எழுந்தது. நாடகம் முடிந்ததும், இவளது ஒப்பனை அறையின் அருகே சங்கர்ஷணன் குட்டிகளை ஈன்ற பூனையைப் போன்று இப்படியும் அப்படியுமாக உலாவிக் கொண்டிருந்தான்.

எப்போது இவள் அறையைவிட்டு வரப்போகிறாளோ என்று வெகுநேரம் படபடப்புடன் காத்திருந்தான் போலும். இவள் வெளியே வந்தவுடன் தாவி வந்து ஆம்ராவின் முன்பாக நின்றான்.

“பெண்ணே! வெகு அற்புதம்! இப்படியொரு நடன நாடகத்தை நான் பார்த்ததேயில்லை.” - சங்கர்ஷணன் பாராட்டினான்.

“எம்மிடம் இல்லாதது உம்மிடம் உள்ளது. உம்மிடம் இல்லாதது எம்மிடம் உள்ளது. இருப்பதை நாம் இருவரும் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளலாமே!” ஆம்ரா, வேடிக்கையாகப் பேசுவது போன்று அவனை முழுவதுமாகக் கைப்பற்றும் முயற்சியில் இறங்கினாள்.

https://telegram.me/aedahamlibrary

“பெண்ணே... நீ கூறுவது புரியவில்லை!” - சங்கர் ஷணனின் நெற்றியில் குழப்ப ரேகைகள் தோன்றின.

“இல்லை. எனது நாட்டியத்தை பாராட்டுகிறீர்கள். ஆனால் உங்கள் நாட்டு கலைகள் எனக்கு பிரமிப்பினை தருகின்றன. நீங்கள் எனது நடனத்தை ரசித்தது போன்று நான் உங்கள் நாட்டை ரசித்துக் கொண்டு இருக்கிறேன் நீங்கள் உங்கள் ரசனையை வெளிப்படுத்திவிட்டீர்கள். என்னால் அப்படிச் செய்ய இயலவில்லை. அவ்வளவே!” சொற்களுக்கு ஒப்பனை செய்யத் துவங்கினாள், ஆம்ரபாலி.

அடுத்ததாக அவனை முழுவதுமாக தனது முந்தானையில் கட்டி வைக்க வேண்டும்! எந்த ஆண்மகனும் விரும்பாத ஒன்று, ஒரு பெண் அவனை கத்தரித்துவிடுவது போன்று பேசுவதுதான். ஒரு பெண் தன்னை உதாசீனப்படுத்துவதை எந்த ஒரு வாலிபனாலும் தாள முடியாது.

"உங்களது பாராட்டுகளுக்கு நன்றி. நான் உடனடியாக தருமநகரம் வரை செல்ல வேண்டும்!” - அங்கிருந்து நழுவுபவளைப் போன்று, ஆம்ரா இரண்டடிகளை எடுத்து வைக்க, உடனேயே, அவளை வழிமறிப்பது போன்று நின்றான், சங்கர்ஷணன்.

“நான் ஒத்தாடை அரண்மனைவரை போகிறேன். உங்களை வழியில் தருமநகரத்தில் இறக்கிவிடுகிறேன். ஒத்தாடை அரண்மனையின் கஜானா கணக்காளரின் உதவியாளனாக இருக்கிறேன். எனது இரதம் இங்கேதான் உள்ளது." - சங்கர்ஷணன் கூறினான்.

முகத்தினில் போலி வியப்பினை காட்டினாள், ஆம்ரா.

"தங்களது தந்தை அரண்மனையில் பணிபுரிகின்றவரா?”

அவள் கேட்டதும், சங்கர்ஷணன் இதுதான் தக்க தருணம் என்று தனது பெருமைகளை அவளுக்குத் தெரியப்படுத்தினான்.

"இல்லை... பெண்ணே! அத்திமலைத் தேவன் ஆலயத்தின் அதிகாரி அவர். நான் இங்கே முக்கூடல் கடிகையில்தான் தமிழ் இலக்கணமும், கஜானா பராமரிப்பு கல்வியும் பயின்று, முதல் மாணாக்கனாக தேர்ச்சி பெற்றேன். எனது ஆசானின் அருளினால், அரண்மனை பணி என்னைத் தேடி வந்தது!”

"தங்களை பார்த்தாலே எதையும் உடனடியாக கிரஹித்துக் கொள்ளும் ஆற்றலை உடையவர் என்பது நன்கு புலப்படுகிறது. கதிரவன் கடல் நீரிலிருந்து நீரை உறிஞ்சுவது போன்று, கலைகளை உறிஞ்சி

https://telegram.me/aedahamlibrary

அனுபவிப்பர் என்பது தங்கள் விஸ்தீரமான நெற்றியை பார்த்தாலே என்னால் அறிய முடிகிறது! – நவநீதலேபனம் [2] செய்தாள், ஆம்ரா. ஞானத்தின் இருப்பிடம் நெற்றி. அதீத சிந்தனையினால் தலை சூடாகாமல் இருக்கவே குளிர் திரவியங்களை நெற்றியில் சின்னங்களாக இட்டுக் கொள்கிறோம். அத்தகைய நெற்றியைத்தான் குறி வைத்திருந்தாள், ஆம்ரா. ஒரு சிறு பிறையாக சந்தனத்தைத் தீற்றியிருந்தான் சங்கர்ஷணன். அவனது நெற்றியை கிழித்துக்கொண்டு, அவனது சிந்தையை தனது வசம் சிறைப்படுத்தத் துவங்கி இருந்தாள் ஆம்ரா.

"என்னுடன் பயணிப்பதில் உங்களுக்கு ஆட்சேபம் இல்லையே?” சங்கர்ஷணன் கேட்க, ஆம்ரபாலி புன்னகைத்தாள். சங்கர்ஷணன் சிரித்தபடி தனது கரத்தால் அவளை வரவேற்பது போன்று சமிக்ஞை காட்டிவிட்டு முன்பாக நடந்தான். அவனைத் தனது கண்களால் மதிப்பிட்டபடி பின்தொடர்ந்தாள், ஆம்ரா. பலமுறை ஆணாக வேடமேற்று நடனமாடியிருக்கிறாள், ஆம்ரபாலி. அதற்காக பல்வேறு ஆண்களின் நடைகளைக் குறித்து ஆராய்ந்து செய்து இருக்கிறாள்.

ஒரு ஆணின் நடையைக் கொண்டே அவனது குணாதிசயங்களை அறிந்துவிடலாம். கஜநடை, சிம்ம நடை, ரிஷபநடை, கர்தவ நடை என்று நான்கு வகை ஆண்களுக்குரிய நடைகள் உள்ளன [3]. பெண்களுக்கு, ஹம்ச நடை, மயூர நடை, ம்ருக நடை, மற்றும் கோ நடை என்று நான்கு நடைகள் உள்ளன. யானை ஒன்று தனது நான்கு கால்களால் நடந்தாலும், இரண்டு முன்னங்கால் களை நிலத்தில் அழுந்தாது. காரணம், அந்த கால்களில் அதன் உணர்வு மண்டலங்கள் உள்ளன. அந்த கால்களை நிலத்தில் வைக்கும் போது நில அதிர்வுகளைக் கொண்டு, தொலைவில் நடமாடும் ஜந்துக்களின் அசைவுகளை அறிந்து விடும். எனவேதான் முன்னங்கால்களை அழுந்தாமல் யானை நடப்பதால், அதன் உடல் இடமும், வலமுமாக நடக்கும் போது அசையும். தன்னைச் சுற்றி நடைபெறும் நிகழ்வுகளை உணர்ந்து எச்சரிக்கையுடன் நடக்கும் ஆண்மகன் கஜ நடையை கொண்டிருப்பான். தன்னை யாராலும் வீழ்த்த முடியாது என்கிற தன்னம்பிக்கையுடன் நடப்பவன் சிம்ம நடையைக் கொண்டிருப்பான். பலம் மட்டுமே கொண்டிருந்து, உணர்வுகளற்ற ஜடமாக பிரச்னை வந்த போது சமாளித்து கொள்ளலாம் என நினைப்பவன் ரிஷப நடையைக் கொண்டிருப்பான். பலமும் இன்றி, உணர்வுகளுமின்றி, நடக்க வேண்டுமே என்று நடப்பவன், கழுதை நடையினைக் கொண்டிருப்பான்.

https://telegram.me/aedahamlibrary

ஆம்ரபாலி தனது முன்பாக நடந்து செல்லும் சங்கர்ஷணனின் உடற்கூறினை கண்களால் அளந்தாள் இவளை நோக்கி வரும் போது கழுதை நடையினைக் கொண்டிருந்தான். இவள் தன்னுடன் பேசுவாளா அல்லது உதாசீனப்படுத்துவாளா என்கிற பதற்றத்தில் தனது நடையில், கவனம் செலுத்தாமல் இவளை நோக்கி வந்தான். இப்போது அவள் தன்னை கவனித்தபடி பின் தொடர்கிறாள் என்பதை உணர்ந்ததும், சிம்ம நடையில் செல்கிறான். 'அவனது இயற்கையான நடை இதுவல்ல. இவளை மயக்க வேண்டும் என்பதற்காக வெளிப்படுத்தும் போலி நடை. இத்தகைய போலியான ஆண்களை எளிதாக வசப்படுத்தி காரியங்களை சாதித்து விடலாம்! இவன் மூலமாக அத்திமலை ரகசியத்தை எளிதாக பெற்றுவிடலாம்!' - நம்பிக்கையுடன் அவனை பின்தொடர்ந்தாள்... ஆம்ரபாலி

***

வீரகொசுவனின் கையால் ஒரு அன்னிய தேசத்தவன் அத்திமலையான் ஆலயத்தில் தலை கொய்யப்பட்டு இறந்தான்.

கூர்மாச்சாரியரும், நிவாசநாத பட்டரும் சேதியை அரண்மனைக்கு வந்து தெரிவித்த போது அதைக் கேட்ட அரண்மனை அதிகாரி மணிவண்ண திருமணி உடனே தலைமையமைச்சர் கோலவிக்கிரமரின் மாளிகைக்கு அவர்களை இட்டுச் சென்றான். நடந்ததை அவர்கள் வாயினாலேயே அறிந்த கோலவிக்கிரமர் அதிர்ந்து போனார். முந்தைய இரவுதான் மன்னர் தான் கண்ட கெட்ட கனவினை பற்றி கூறி, தான் பச்சை சாற்றும் வைபவத்தில் கலந்து கொள்ளத் தயங்குவதாகக் கூறியிருந்தார். மறுநாள் உதயத்தில் இம்மாதிரி ஒரு சம்பவம், ஆலயத்தில் நடக்கிறது என்றால், மன்னனின் குழப்பம் அதிகரிக்கத்தானே செய்யும்.

“விஷயம் வெளியே பரவ வேண்டாம், திருமணியே! ஆலயத்தினுள் யாரையும் அனுமதிக்காதீர்கள்! உடனடியாக அதிகாரிகளை அனுப்பி சவத்தை கைப்பற்றுங்கள்! சவத்தை கைப்பற்றியதும், அர்ச்சகரே, நீங்கள் செய்ய வேண்டிய நியமங்களை செய்துவிடுங்கள். நான் மன்னரிடம் இது குறித்து ஆலோசிக்கிறேன்!” என்றபடி அவர்களை அங்கிருந்து அனுப்பி வைத்தார்.

திருலோச்சன பல்லவன் கொலுமண்டப உப்பரிகையில் மல்யுத்த வீரர்களுடன் பயிற்சி செய்துகொண்டிருந்தான். அவசரமாக உப்பரிகைக்கு நடந்தார், கோலவிக்கிரமர்.

உப்பரிகையின் மல்லிகைப் பந்தலின் அடியில் சென்று நின்றார்

https://telegram.me/aedahamlibrary

விக்கிரமர். தொலைவில் இரத்தின கம்பளத்தின் மீது மல்யுத்த வீரன் ஒருவனின் குரல்வளையினை தனது நீண்ட வலக்கையினால் வளைத்துப் பிடித்து, நழுவ முயன்று கொண்டிருந்த அவனது சிரசினை இடது கையினால் அழுத்திக் கொண்டிருந்த திருலோச்சனன், தற்செயலாக மல்லிகைப் பந்தலின் அருகே ஏற்பட்ட அசைவினை உணர்ந்து அந்தப் பக்கமாக நோக்க, கவலையுடன் நின்றிருந்த தலைமை அமைச்சர் கோலவிக்கிரமர் அவனது கண்களில் தென்பட்டார்.

அவரது முகத்தைக் கண்டதுமே, ஏதோ தலைபோகும் பிரச்னை என்பதனை யூகித்த மன்னன் தனது கிடுக்கிப் பிடியினைத் தளர்த்த, அந்த மல்யுத்த வீரன் எழுந்து விலகிப் போனான். ரகஸ்யாதிக்ருதன் பரமேஸ்வரன் மன்னரை நோக்கி நடந்து தனது கைகளில் இருந்த பட்டு ஒத்துவராடையை [4] திருலோச்சனனிடம் நீட்டினான்.

மன்னன் முகத்தையும், புஜங்களையும் துடைத்துக் கொண்டு, மீண்டும் ஒத்துவராடையை பரமேஸ்வரனிடம் நீட்ட, அவன் தயக்கத்துடன் விலகினான். மன்னரும், தலைமை அமைச்சரும் முக்கியமாக எதையோ விவாதிக்கப் போகிறார்கள். மன்னனுக்கு பணிவிடை செய்தபடி விஷயத்தை கிரஹிக்கலாம் என்று பார்த்தால், மன்னன் தலையசைத்து விட்டான். தலையசைக்காமல் இருந்தால், நீயும் இருக்கலாம் என்பது மன்னனின் உத்தரவு. பரமேஸ்வரன் அகன்றதும், மன்னன் தலைமையமைச்சரைக் கேள்வியுடன் நோக்கினான்.

"என்ன நடந்தது, கோலவிக்கிரமரே?”

ஈனஸ்வரத்தில் துவங்கினார், கோலவிக்கிரமர். "மன்னா! ஒரு அபவாதம் நடந்துவிட்டது. அத்திமலையான் சன்னிதியில் ஒரு கொலை சம்பவித்துவிட்டது. இன்று ஆலயத்தின் திருகாப்புகளை நீக்கிய போது, சீவேலி முடிந்து மயங்கி அமர்ந்திருந்த வீரகொசுவனின் கரத்தில் ஒரு அந்நிய நாட்டவனின் தலை இருந்தது. அந்த மனிதனின் தேகம் தெற்கு பிராகாரத்தில் கிடந்தது. அருகேயே அவனது உடை, வாளும் இருந்தது. அந்த மனிதன் எதற்காக நடுநிசியினில் ஆலயத்தினுள் பிரவேசித்தான் என்பது தெரியவில்லை. வீரகொசுவன் உலாத்தலைப் பற்றி அறிந்திருந்தால் அவன் ஆலயத்தினுள் பிரவேசித்து இருக்கமாட்டான். எனவே, இவன் ஆலயத்தைப் பற்றி இதுவரை எதுவும் அறியாதவனாக இருக்கக் கூடும்.” - தலைமையமைச்சர் கூறினார்.

திருலோச்சன பல்லவனின் முகம் இருளடைந்தது. தான் கண்ட கனவினை எண்ணி கலங்கிக்கொண்டிருந்தவனுக்கு, கோலவிக்கிரமர்

https://telegram.me/aedahamlibrary

கொணர்ந்த சேதி பெரும் கலவரத்தையே உண்டு பண்ணியது. அச்சத்துடன் விக்கிரமரை நோக்கியவன் மல்லிகைப் பந்தலின் கீழிருந்த திண்ணையில் சடாரென்று அமர்ந்துவிட்டான்.

"விக்கிரமரே! நான்தான் கூறினேனே, நான் கண்ட கனவு, இந்த துர்சம்பவத்திற்கு ஏற்கனவே கட்டியம் கூறியாகிவிட்டது. இப்போது என்ன செய்வது? இந்த சம்பவம் எத்தகைய அனர்த்தத்தை விளைவிக்கக் கூடும்? ராஜகுரு எங்கே? அவரைத்தான் கேட்க வேண்டும்…" கலவரத்துடன் முணுமுணுத்தான், திருலோச்சனன்.

மன்னனின் கரங்கள் சற்றே நடுங்குவதைக் கண்டார், கோலவிக்கிரமர். சற்றுமுன் மல்யுத்த வீரனின் கழுத்தினை வளைத்துப் பிடித்திருந்த உறுதியான கைகளா இவை? மனதிற்குள் நினைத்தார், தலைமையமைச்சர்.

"மன்னவா! கவலை காரியத்தைக் கெடுக்கும். இறக்கும் முன்பாக சாணக்கியர் தங்களை சந்தித்து எச்சரிக்கை செய்தது போல்தானே நடந்து வருகிறது. வடபுலத்தில் இருந்து நமது அத்திமலைத் தேவனுக்கு பிரச்னைகள் வரும் என்பது எதிர்பார்த்த ஒன்றுதானே. நாம் எச்சரிக்கை நடவடிக்கைகளையும், பாதுகாப்பினையும் பலப்படுத்தி உள்ளோம். வீரகொசுவனின் உக்கிரத்தைக் கடந்து அத்திமலையானை ஒருவனும் நெருங்க முடியாது என்கிற எச்சரிக்கையினை இந்த சம்பவத்தின் மூலம் அத்திமலையான் உணர்த்துகின்றானோ என்னவோ?" - மன்னனின் கலங்கிய மனதைத் தேற்றினார்.

"அசோகன் அனுப்பிய அந்த பௌத்தக் குழுவினருக்கும், இந்த சம்பவத்திற்கும் தொடர்பு உள்ளதா? இறந்தவன் அவர்களுடைய கூட்டத்தைச் சேர்ந்தவனா?" - மன்னன் கேட்டான்.

"இறந்தவன் ஒரு போர் வீரன். பௌத்தத் துறவி இல்லை. அவர்களது குழாத்தில் அனைவருமே துறவிகள். இலங்கைக்கு போகும் வழியில் இங்கே தங்கி காஞ்சியை சுற்றிப் பார்த்து வருவதாக கூறுகிறார்கள். அவர்களை கண்காணிக்கும் பணியும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது, மன்னா!" விக்கிரமர் கூற, தலையசைத்தான், திருலோச்சனன்.

சற்று தொலைவில் தெரிந்த ஏகாம்பரேஸ்வரன் என்கிற ஒத்தாடையான் கோயில் கோபுரத்தைப் பார்த்தான்.

என்ன செய்வது? தானே அத்தியூர் சென்று ஆலயத்தை மேற்பார்வையிட வேண்டுமா?

https://telegram.me/aedahamlibrary

“தற்போது அத்திமலை ஆலயத்தின் நடை சாற்றப்பட்டுவிட்டதா? நான் அங்கே செல்ல வேண்டுமா?”

“நடை சாற்றப்பட்டுவிட்டது, மன்னா! ஆனால் தற்போது தாங்கள் அங்கே செல்ல வேண்டிய அவசியம் இல்லை. விடியலில், மன்னர் அவசரமாக அத்தியூர் ஆலயத்திற்குச் சென்றார் என்றால் மக்களிடையே கேள்விகள் எழும். மேலும், ஆலயத்தினுள் சம்பவித்துள்ள துர்மரணம் இன்னும் ரகசியமாகவே உள்ளது. கோயில் பட்டர்கள், அதிகாரி கூர்மாச்சாரியர், திருமணி, மற்றும் நமக்கு மட்டுமே இந்த தகவல்கள் தெரியும். மிகவும் ரகசியமாக வைத்திருக்கிறோம். வீரகொசுவனுக்கே நடந்தது எதுவுமே தெரியவில்லை. அவனை பொற்றாமரை குளத்தின் அருகே உள்ள மண்டபத்தில் படுக்க வைத்திருக்கிறோம்..” - விக்கிரமர் கூறினார்.

"நல்ல வேலை செய்தீர்கள். உடனடியாக சந்நிதியினை தூய்மைபடுத்தும் சாங்கியங்களை செய்து ஆலய ஆராதனங்களை தொடங்குங்கள். மக்களுக்கு இந்த விவரங்கள் தெரியவே வேண்டாம்!” - மன்னன் சொன்னான்.

“அரசே! எல்லா ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன. மணிவண்ண திருமணி ஏற்கனவே உடலை கைப்பற்றி, விசாரணைகளை நடத்திக் கொண்டிருக்கிறார். அத்தங்கி பட்டர் சாங்கியங்களை செய்து வருகிறார். நான் வந்த காரியம்... என்னவென்றால்...” தயக்கத்துடன் விக்கிரமர் இழுக்க, மீண்டும் ஒத்தாடையான் கோயில் ராஜ கோபுரத்தை நோக்கிக் கொண்டிருந்த மன்னன், வியப்புடன் 'என்ன' என்பது போன்று அவரைப் பார்த்தான்.

"இந்த சம்பவத்தினால், அத்திமலையான் உக்கிரத்தை கொண்டிருப்பான். அவனை குளிர்விக்க ஒரே வழி, நமது பச்சை சாற்றும் வைபவத்தை இன்னும் விமரிசையாக கொண்டாட வேண்டும். அதற்கு தாங்கள் அந்த வைபவத்தை தலைமையேற்று நடத்த வேண்டும். மன்னனே தங்களை வழிநடத்தினால், மக்கள் உத்வேகத்துடன் வைபவத்தில் கலந்து கொள்ளுவார்கள்!” - விக்கிரமர் கூறினார்.

அதுவரை அந்தப்புரத்தில் இருந்து நழுவி, அங்கே நடைபெற்றுக்கொண்டிருந்த உரையாடலை ரகசியமாக செவிமடுத்துக்கொண்டிருந்த அணிமா கோதை என்கிற சுலோச்சனாதேவி, தான் உள்ளே நுழைவதற்கு தக்க தருணம் அதுவே என்பதை உணர்ந்து, தற்செயலாக மல்லிகைப் பந்தலை நோக்கி

https://telegram.me/aedahamlibrary

வருபவளைப் போன்று அங்கே பிரவேசித்தாள்.

"ஓ...!" என்று போலி வியப்பை காட்டியபடி, "ஆலோசனை நடக்கிறது போல் உள்ளதே. ஆராதனைக்கு பவழ மல்லி பறிக்கலாம் என்று வந்தேன்..." என்றபடி வந்து மன்னனின் தோளினைப் பற்றினாள். நடந்ததை அறிந்தால் அவள் மனம் பதைபதைக்கக் கூடும் என்று எண்ணிய மன்னன், சட்டென்று பதிலளித்தான்.

"ஒன்றும் இல்லை... தேவி! தலைமை அமைச்சர் பச்சை சாற்றும் வைபவத்தில் நம்மை கலந்து கொள்ளும்படி வற்புறுத்துகின்றார். அதைப் பற்றிதான் விவாதித்துக் கொண்டிருக்கிறோம்!" - மன்னன் ஓரக்கண்களால் விக்கிரமரை எச்சரித்தான். நடந்த சம்பவங்களைப் பற்றி அரசியிடம் எதுவும் கூற வேண்டாம் என்கிற எச்சரிக்கை அதில் புலப்பட, விக்கிரமர் மௌனம் சாதித்தார்.

"ஆம் மன்னவா! நாம் அவசியம் அதில் கலந்து கொள்ளத்தான் வேண்டும். எனது சகோதரி நறுங்குழல் நாய்ச்சியின் மகன் கரிகாலனைப் போன்று நமக்கும் ஒரு தெய்விகம் பொருந்திய மகன் பிறக்க அத்திமலையானை வேண்டுவோம்! நாம் அவசியம் அதில் கலந்து கொள்ளத்தான் வேண்டும்!" - சுலோச்சனாதேவி கூற, மன்னன் தலையசைத்தான்.

"நல்லது விக்கிரமரே! நானும் அரசியாரும், பச்சை சாற்றும் வைபவத்தில் பங்கேற்கிறோம்! நீங்கள் அனைத்து ஏற்பாடுகளையும் செய்துவிடுங்கள்!" என்றபடி மன்னர் தலையசைக்க, தன்னை மறந்து எதையாவது உளறிவிடப் போகிறோமே என்கிற அச்சத்தில் உடனடியாக தலைவணங்கிவிட்டு அங்கிருந்து கழன்று கொண்டார், கோலவிக்கிரமர்.

தான் கண்ட கனவினையும், அத்திமலையான் கோயிலில் வீரகொசுவனால் செய்யப்பட்ட கொலையைப் பற்றியும் சிந்தித்துக்கொண்டிருக்க, அணிமா கோதை, தனது பங்கிற்கு விசனப்பட்டுக் கொண்டிருந்தாள். இந்த சம்பவம் தங்களது பல்லவ ராஜ்யத்திற்கு கேடு விளைவிக்கக் கூடுமா? தற்போதுதான் சதவாகனர்களிடம் இருந்து விடுதலை பெற்று, தன்னாட்சியை நிறுவியுள்ளான், திருலோச்சனன். பல்லவம் பேரரசாக மாறும் அறிகுறிகள் தோன்றி வரும் போது, இத்தகைய அச்சானியங்கள் தோன்றுவானேன். இவளுக்கு தைரியம் கூறுவதற்கு அக்கா நாய்ச்சியை தவிர யார் இருக்கிறார்கள்? அக்கா நாய்ச்சியையும் அவள் மகன்

https://telegram.me/aedahamlibrary

கரிகாலனையும் [5] பச்சை சாற்றும் வைபவத்திற்கு அழைத்தால் என்ன?

தனது மனதில் தோன்றியதை கணவனிடம் உரைத்தாள் அணிமா கோதை.

திருலோச்சனன் யோசித்தான். சுலோச்சனாவுக்கு இன்னும் சோழ புகார் நகரில் நடைபெற்ற நிகழ்வுகளைப் பற்றித் தெரியாது. இளஞ்சேட்சென்னியின் மரணத்திற்கு பிறகு இருங்கோவேளும் ஆத்திவளவனும் புகார் நகரை தங்களது அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்திருந்தனர். அவர்களுக்கு அஞ்சி நறுங்குழலி பரசலூரான் அக்ரஹாரத்தில் ஒரு அந்தணகுல பெண்ணாக பதுங்கியிருப்பதாக புலவர் உருத்திரங்கண்ணனார் இவனுக்கு தகவல் அனுப்பியிருந்தார். இப்போதைய சூழ்நிலையில் நறுங்குழலியோ, கரிகாலனோ வெளியே நடமாடுவது ஆபத்து என்கிற போது, பச்சை சாற்றும் வைபவத்திற்கு எங்கனம் அவர்களை அழைப்பது? அவர்கள் புகார்பட்டினத்தில் தற்போது இல்லை என்கிற விவரத்தையும் அவளிடம் சொல்லத் துணிவின்றித் தொலைவில் தெரிந்த ஒத்தாடையான் கோபுரத்தையே பார்த்துக் கொண்டே இருந்தான்.

[1] தும்ப வனம் என்கிற தும்புரு வனத்தில்தான் பிரம்மன் அத்திமலையானை நோக்கி அஸ்வமேத யாகத்தை புரிந்தான். தற்போது காஞ்சி விளக்கொளி பெருமாள் கோயிலுக்குப் போகும் வழியில் தும்ப வனம் உள்ளது.

[2] நவநீதலேபனம் என்றால் வெண்ணை தடவுதல் என்று பொருள். காக்கை பிடிப்பது, சோப்பு போடுவது என்று பொருள். வெண்ணை தானும் உருகி மற்றவரையும் உருக்கும் பொருள். ஒருவர் உறுதியான நபர் என்கிற போது, அவருக்கு வெண்ணை தடவி அவரது உறுதியை குலைப்பதுதான் நவநீதலேபனம் என்பார்கள். உறுதியான பிரம்மச்சரியத்தை கடைப்பிடித்த அனுமன் பிரும்மச்சாரி. திருமணம் போன்ற குடும்ப பிரச்னைகளுக்கு உதவமாட்டான் என்பதற்காக அவன் மீது வெண்ணையை தடவி அந்த காலத்தில் கோரிக்கைகளை வைப்பார்கள். சீதையை தேடுவதற்கு கடல் கடக்க வேண்டும். ஹனுமனிடம்தான் அதற்குரிய ஆற்றல் உள்ளது என்று ஜாம்பவான் நவநீதலேபனம்தான் செய்தார். ஒருவேளை தன்னிடம் அந்த ஆற்றல் உள்ளதோ என்று நினைத்து உடனே பாய்ந்து கிளம்பினார் ஹனுமான். உண்மையில் அவருக்கு அந்த ஆற்றல் இருந்ததோ இல்லையோ, ஜாம்பவான் வெண்ணையை தடவி ஹனுமனை கடல் கடக்கச் செய்ததால், காரியம் நிறைவேறியது. ஒரு காரியம் வெற்றிகரமாக நடக்க

https://telegram.me/aedahamlibrary

வேண்டும் என்றால், ஹனுமனுக்கு வெண்ணை தடவினால் போதும் என்கிற வழக்கம் அதனால்தான் வந்தது.

[3] மாலவனை தான் மணப்பதாக கண்ட கனாவினை தோழிக்கு உரைக்கும் போது, கோதை மாலவனின் நடையழகை வர்ணிக்கிறாள். வடமதுரையிலிருந்து புறப்படும் போது, கஜநடையாகவும் (வாரணமாயிரம் சூழ நடக்கிறான்), ஸ்ரீவில்லிபுத்தூர் வீதிகளில் சிம்ம நடையாகவும் (கோளரி மாதவன் நடக்கிறான்) மணப்பந்தலில் ரிஷபநடை (காளை புகுதல்) என்று மாலவனின் நடையை வருணிக்கிறாள்.

[4] ஒத்துவராடை: டவல்.

[5] திருலோச்சன பல்லவனும், கரிகாலனின் தந்தை இளஞ்சேட் சென்னியும் சகலைகள் என்பதை முதல் பாகத்திலேயே தெரிவித்திருந்தேன். முதல் பாகத்தில் கரிகாலனைப் பற்றி நான் குறிப்பிட்டிருந்தது குறித்து சிலர் சந்தேகங்களை எழுப்பி இருந்தனர். இமயம் சென்று வென்ற கரிகாலன் எப்படி மாகதர் காலத்தில் இருந்திருக்க முடியும் என்று? இதனை சற்றே விரிவாக விளக்குகிறேன். இளஞ்சேட்சென்னியின் மகன் கரிகாலன் வேறு... இமயத்தை வென்ற கரிகாலன் வேறு. இவன் பிற்காலத்தை சேர்ந்தவன். பின்னர் காலத்து கரிகாலனுக்கு இரண்டு தலைமுறை முந்தியவன் இளஞ்சேட் சென்னியின் மகன்.

நீலகண்ட சாஸ்திரி, கரிகாலன் கி.பி. 190 - இல் ஆட்சி செய்ததாகக் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் அந்த காலகட்டத்தில் அவனது வடநாட்டுப் படையெடுப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள வஜ்ர தேசம், மகதம், அவந்தி போன்ற தேசங்கள் கிறிஸ்துவுக்கு முன்பான காலத்திலேயே வீழ்ச்சியை அடைந்துவிட்டன. மகதம் நான்காம் நூற்றாண்டில் வீழ்ச்சியை அடைந்தது. அவந்தி மூன்றாம் நூற்றாண்டில் அழிந்தது. இதை பார்க்கும் போது இளஞ்சேட் சென்னியின் மகன் கரிகாலன் நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்தவனாக இருத்தல் வேண்டும். இதிலிருந்து இளஞ்சேட்சென்னி மகன் கரிகாலனும், இமயத்தை வென்ற கரிகாலனும், இரு வேறு கரிகாலர்கள் என்பதை அறியலாம்.

முதற் கரிகாலனைப் பாடியவர் கழாத்தலையார். வெண்ணிக்குயத்தியார் என்பவர் கழாத்தலையார் தமக்கு காலத்தால் முற்பட்டவர் என்று தெளிவுறக் கூறுகிறார். இவ்விரு புலவர்களும் பெருஞ்சேரலாதன்

https://telegram.me/aedahamlibrary

அல்லது பெருந்தோள் ஆதன் என்பவனைக் கரிகாலன் தோற்கடித்த செய்தியைக் கூறியுள்ளனர். பெருஞ்சேரலாதன் புறப்புண் நாணி வடக்கிருந்தான். அப்போது அவனை கழாத்தலையார் பாடினார். பெருஞ்சேரலாதனை வென்ற கரிகால் வளவனை வெண்ணிக்குயத்தியார் பாராட்டியுள்ளார்.

இது போலவே வேறொரு வெண்ணிப் போரினைப் பற்றி பொருநராற்றுப் படையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனைப் பாடியவர் முடத்தாமக் கண்ணியார். அப்போர், கரிகாலனுக்கும் சேரன் மற்றும் பாண்டியனுக்கும் நடந்தது. போரில் கரிகாலன் அவ்விருவரையும் கொன்று, வெற்றிபெற்றான். பொருநராற்றுப்படை என்பது கரிகாலனைப் பாராட்டி இயற்றப்பெற்ற நீண்ட அகவற்பா. அதனில் வெண்ணிப் போரில் மாண்ட சேரனின் பெயரோ, பாண்டியனின் பெயரோ குறிப்பிடப்படவில்லை. இப்போர், கழாத்தலையார் குறித்திருந்த போராக இருந்திருக்குமாயின் பாண்டியன் போர் செய்ததாக அவர் குறித்திருக்க வேண்டும். வெண்ணிக்குயத்தியாரும் பாண்டியனைப் பற்றி ஒன்றும் குறித்திலர். இவ்விருவரும் குறித்த வெண்ணிப் போராக இது இருந்திருந்தால் சேரன் புறப்புண் நாணி வடக்கிருந்ததை முடத்தாமக்கண்ணியார் குறிப்பில் உரைத்திருப்பார்.

மேலும், வெண்ணிவாயிலில் நடந்த பெரும் போரில் கரிகாலன் வேந்தரையும் பதினோரு வேளிரையும் வென்றான் என்று பரணர் பாடியுள்ளார். அவரே பின்பாக இயற்றிய செய்யுளில் அரசர் ஒன்பதின்மர் வாகை என்னும் இடத்தில் கரிகாலனுடன் நடத்திய போரில் தோற்றனர் என்று குறித்துள்ளார். இப்போர் செய்திகள் பிற்கால கரிகாலனை (இமயம் சென்று வென்ற கரிகாலனைப்) பற்றி நீண்ட பாக்களால் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்மூலம் முதற் கரிகாலன் அழுந்தூரை ஆண்ட சென்னி மரபினனாக இருக்கலாம்...

இந்நுட்பமான ஆராய்ச்சியால், இமயம் சென்ற கரிகாலன் இரண்டாம் கரிகாலன் என்றும், வெண்ணிக்குயத்தியாரால் பாடப்பெற்றவன் முதற்கரிகாலன் என்பதும் அறியலாம். இதனால், ஆராய்ச்சியாளர் கணக்கின்படி முதற்கரிகாலன் இரண்டாம் கரிகாலனுக்கு ஏறத்தாழ இரண்டு தலைமுறை முற்பட்டவன் ஆவான். ஆகவே, அவன் காலம் கிமு 120 - 90 எனக் கொள்ளலாம். சாணக்கியர் கிமு 283 - இல் இறக்கிறார். அதற்கு முன்பாக திருலோச்சன பல்லவனை சந்திக்கிறார். திருலோச்சன பல்லவனின் காலம் கிமு 250 - 200 என்று கணக்கிட்டால்) முதற் கரிகாலன் அவர்களது சமகாலத்தவராக இருந்திருக்க வேண்டும்.

https://telegram.me/aedahamlibrary

இளஞ்சேட்சென்னி வேளிர் நாங்கூர் சிற்றரசர் இரும்பிடர்த்தலையாரின் சகோதரி நறுங்குழலாளை காதலித்து மணக்கிறான். அவனது சிற்றப்பன் மகன் ஆத்திவளவன் என்பானும் நறுங்குழலாளை காதலிக்க, இருவருக்கும் இடையே போட்டி மூள, கரிகாலனின் மீது வன்மம் கொள்கிறான் ஆத்திவளவன். பகைவர்களோடு சூழ்ச்சிகளை மேற்கொள்ளும் அவனுக்கு அஞ்சி, கர்ப்பிணியான நறுங்குழலாள் அண்ணன் இரும்பிடர்த்தலையாரிடம் தனது தங்கை அணிமாகோதைக்கு மணமுடிக்கச் சொல்ல, இரும்பிடராரும், தனது நண்பர் ருத்ராக்ஷர் என்னும் கவிஞரை நாடி, அணிமாகோதைக்கு மணமுடிக்க உதவுமாறு கேட்கிறார். ருத்ராக்ஷர்தான் உருத்திரங்கண்ணனார் என்கிற பெயரில் வளைய வரும் பெருங்கவிஞர். இவர் பட்டினப்பாலை பாடியவர். பொருநராற்றுப்படையைப் பாடியவர் முடத்தாமக்கண்ணியார். அவரது அறிவுரையின்படி திருலோச்சன பல்லவனுக்கு அணிமாகோதையை மணமுடிக்கிறார், இரும்பிடர்த்தலையார். திருமணத்திற்கு முன்பாக இளஞ்சேட்சென்னி நஞ்சு கலந்த உணவை உண்டு மரணம் அடைய, இரும்பொறையும், ஆத்திவளவனும் செய்த சதி என்பதை அறிகிறார்கள். கர்ப்பிணியான நறுங்குழலி கரிகாலனைப் பெற, பிறந்ததில் இருந்தே கரிகாலனைக் கொல்வதற்கு சூழ்ச்சிகள் நடக்கின்றன. இரும்பிடர்த் தலையாரும் அணிமாகோதைக்கு மணமுடித்து விட்டு, நறுங்குழலாளையும் அவளது மகன் கரிகாலனையும் ஒளித்து வைக்கிறார்.

பின்னாளில் கரிகால் சோழன் தமிழ்ப்புலவர்களை ஆதரித்தவன். இரும்பிடர்த்தலையாரின் நண்பரும் தங்களுக்கு உதவிய புலவருமான - பட்டினப்பாலையை பாடிய உருத்திரங் கண்ணனாருக்கு பதினாறு ஆயிரம் கழஞ்சு (பொன்) பரிசளித்தான் என்கிற சேதி கரிகாலனின் தமிழ் பற்றினை விளக்குவதாகும். பட்டினப்பாலையை இயற்றிய கடியலூர் உருத்திரங் கண்ணனார்தான் பத்துப்பாட்டில் உள்ள பெரும்பாணாற்றுப் படை என்கிற செய்யுளையும் இயற்றியுள்ளார். பெரும்பாணாற்றுப் படை தொண்டைமான் இளந்திரையன் என்னும் பல்லவ அரசனின் மீது பாடப்பட்டது. பட்டினப்பாலை கரிகாலனின் மீது பாடப்பட்டது.

ஆகவே, இவர் கரிகாலன், இளந்திரையன் ஆகிய சகோதர மன்னர்களின் அன்புக்குரியவராக வாழ்ந்தார் என்பதை அறியலாம். இவரது வரலாற்றினை அறிவதற்கான சான்று எதுவும் இல்லை. கடியலூர் என்பது இவர் பிறந்த ஊர். இவ்வூர் எதுவென்று தெரியவில்லை. இவர் தொண்டைமானையும் சோழனையும் பாடியிருப்பதால் இந்த ஊர் சோழ நாட்டிலோ, அல்லது தொண்டை

https://telegram.me/aedahamlibrary

நாட்டிலோதான் இருந்திருக்க வேண்டும். இவர் கூறியிருக்கும் இயற்கை காட்சிகளும், நிகழ்வுகளும், உவமைகளும், அக்கால காவிரிபூம்பட்டினத்தை நமது மனக் கண்ணில் படம் பிடித்துக் காட்டும் வகையில் அமைந்துள்ளது.

(Old Sangam Age inscriptions and also sthala puranam of great ancient Saiva shrine at Parasalur, near Mayavaram says that in order to escape the murder plot hatched by conspirators Karikal Valavan stayed there in disguise of a vedic and agama sastra lecturer for eight years. Pattinappalai, written in praise of Karikala also describes this incident, but without mention of the fable of the burnt limb)

*****

https://telegram.me/aedahamlibrary

# 3. விமோச்சனம் தேடும் லோச்சனம்

அத்தியூரே கோலாகலத்துடன் காணப்பட்டது. எங்கு நோக்கினும் பசுமை நிறம்தான். அத்திமலையானுக்கு பச்சை சாற்றுதல் வைபவத்தை அன்று கொண்டாடிக் கொண்டிருந்தனர். பச்சைப் பசேல் என்கிற வயல்வெளிகளுக்கு சவால்விடுவது போன்று, வீதிகளும், இல்லங்களும் பசுமை கம்பளத்தைப் போர்த்திக் கொண்டன. வெண்மை பிரவாகமாகப் பெருகிக்கொண்டிருந்த வேகவதியும் கூட, ஊர்மக்கள் மிதக்கவிட்ட அத்தி இலைகளால் பசுமையாகவே காட்சி தந்தது. முதியவர்கள், இளைஞர்கள், பெண்கள், குழந்தைகள் என்று அனைவருமே கையில் அத்தி இலையினை ஏந்தி மனதிற்குள் தங்கள் பிரார்த்தனைகளை உச்சரித்தபடி, வேகவதியில் நீராடி, அத்தி இலையை மிதக்கவிட்டனர்.

அத்திமலையானுக்குப் பச்சை வேட்டியை சமர்ப்பித்துவிட்டு, அவனுக்கு பூசனைகளைச் செய்து விட்டு, அவசரமாக அனைவரும் முக்கூடல் விரைவார்கள். தாங்கள் வேகவதியில் வேண்டுதலுடன் மிதக்க விட்ட அத்தியிலை, முக்கூடல் சங்கமத்தில் மீண்டும் கிடைத்தால், அத்திமலையான் தங்களது பிரார்த்தனையை நிறைவேற்றி வைப்பான் என்பது நம்பிக்கை. சிலருக்கு அம்மாதிரி தாங்கள் மிதக்கவிட்ட இலைகள் கிடைக்கப் பெற்றிருக்கிறார்கள். பலருக்குக் கிடைத்ததாகவே தெரியவில்லை. ஆனால் ஒரோவழியாக வந்த நம்பிக்கை என்பதால், தொடர்ந்து செய்து கொண்டிருக்கின்றனர். ஆனால் இது குறித்து பலரும் கவலைப்படுவதில்லை. மிதக்கவிட்ட இலை கிடைக்கின்றதோ இல்லையோ, அத்திமலையான் பலருக்கும் நன்மைகளை செய்துகொண்டுதான் இருக்கிறான்.

மன்னர் திருலோச்சனன் ஒத்தாடை அரண்மனையிலிருந்து அத்தியூர் புறப்பட்டுவிட்டான் என்கிற சேதி வந்ததுமே, சங்கர்ஷணன் அவசரமாக ஆம்ரபாலியை அழைத்துக்கொண்டு ஆலயத்தின் மேற்குப்புற பின் வாயிலின் வழியே அத்திமலையானின் ஆலயத்தினுள் பிரவேசித்தான். மன்னர் தனது பிரார்த்தனையை முடித்துக் கொள்ளும் வரையில் யாராலும் அத்திமலையானின் சந்நிதியினுள் பிரவேசிக்க முடியாது. மன்னர் தனது பிரார்த்தனையை முடித்துக் கொண்ட பின்னரே ஏனைய அதிகாரிகள் அனுமதிக்கப்படுவார்கள். பிறகே பொதுமக்கள் தங்களது பிரார்த்தனைகளைச் செய்யமுடியும்.

அத்திமலை ரகசியத்தைப் பற்றி சங்கர்ஷணனிடம் கேட்டு அவனால்

https://telegram.me/aedahamlibrary

எந்தத் தகவலும் தெரிவிக்க முடியவில்லை. கோயில் அதிகாரி கூர்மாச்சாரியார் தனது மகனிடம் கூட இரகசியத்தை தெரிவிக்கவில்லை. இவள் தனது தேகத்தை வருத்திக் கொண்டு அவனுக்கு உட்பட்டதுதான் மிச்சம். அவன் ஆலயத்தைப் பற்றி ஒன்றுமே அறிந்திருக்கவில்லை.

சரி! அவனது செல்வாக்கினை பயன்படுத்தி ஆலயத்தினுள் நுழைந்து நாமே இரகசியத்தை அறிவதுதான் உத்தமம் என்கிற முடிவுக்கு வந்தாள் ஆம்ரபாலி.

'ஒரே ஒருமுறை உங்கள் அத்திமலைத் தேவனை தரிசிக்க வேண்டும் என்று ஆவலாக உள்ளது. என்னை பச்சை சாற்றுதல் வைபவத்தின் போது அழைத்துச் செல்ல முடியுமா?' என்று இறைஞ்சும் குரலில் கேட்டிருந்தாள், ஆம்ரபாலி. அவளது பேரழகில் முழுவதுமாகக் கட்டுப்பட்டிருந்த சங்கர்ஷணனுக்கு, அவளை உள்ளே அழைத்துச் செல்வதில் என்ன தவறு என்று தோன்றி விட்டது. இருப்பினும், மன்னர் தரிசித்துவிட்டுச் செல்லும் வரை அவளை உள்ளே அழைத்துச் செல்ல முடியாது. சன்னிதி, அரண்மனை அதிகாரிகளின் கட்டுப்பாட்டினில் இருக்கும். மன்னர் முக்கூடல் புறப்பட்டுச் சென்றதும், அதிகாரிகளின் தரிசனத்தின் போது ஆம்ரபாலியை இட்டுச்செல்லலாம் என முடிவு செய்தான்.

சங்கர்ஷணன் கேட்டுக் கொண்டபடி தனது நடையுடை பாவனையை சற்றே மாற்றியிருந்தாள். ஆம்ரபாலி. வடபுலத்து பாணியில் சேலையை அணிபவள், அன்று பசுமை வண்ணச் சேலை ஒன்றை பல்லவ நாட்டு பாணியில் உடுத்தி, முந்தானையை மடித்து இடையினில் சொருகியிருந்தாள். நாட்டிய ஆபரணங்களை அணியாமல், வெறும் பச்சை மரகத காதணிகளை அணிந்திருந்தாள். நடையில் ஒய்யாரத்தை குறைத்துக்கொண்டு சேலைத் தலைப்பினால் தேகத்தைப் போர்த்திக் கொண்டு தலையை குனிந்தபடி சங்கர்ஷணன் பின்பாக நடந்தாள். தொலைவில் இருந்து காண்பவர்களுக்கு, கோவிலதிகாரி கூர்மாச்சாரியாரின் மகன், சங்கர்ஷணனுக்கு திருமணம் நடந்து, அவன் மனைவியுடன் ஆலயத்திற்கு வந்திருப்பதாகவே நினைப்பார்கள்.

சங்கர்ஷணன் மேற்கு வாயிலில் இருந்து ஆலயத்தின் வடபுறமாக நடந்தான். சந்நிதியில் அமைச்சர் பெருமக்கள், ராஜகுரு, மற்றும் அவனது தந்தை ஆகியோர் குழுமியிருப்பார்கள். இப்போது அங்கே சென்றால், ஆம்ரபாலி காட்சிப் பொருளாக மாறிவிடுவாள். கேள்விகள் எழும். எனவே. மன்னர் புறப்பட்டுச் செல்லும் வரையில், பொற்றாமரை

https://telegram.me/aedahamlibrary

குளத்தின் மறுபக்கத்தில் உள்ள சிறிய அறையில் மறைந்து கொள்ள வேண்டியதுதான். யாத்திரை செய்யும் பெண்கள், பொற்றாமரை குளத்தில் நீராடிவிட்டு சேலை மாற்றிக் கொள்வதற்காக இரண்டு மூன்று அறைகளை எழுப்பியிருந்தனர், கோயில் அதிகாரிகள். கதவுகளுடன் கூடிய அந்த அறைகள் குளக்கரையின் மறுபக்கத்தில் இருந்தன.

குளத்தினைக் கடந்து ஆண்கள் யாரும் மறுபக்கம் செல்லுவதில்லை. யாத்ரீகப் பெண்களும், நீராடிவிட்டு, பிரார்த்தனைகளைச் செலுத்தவும், மன்னர் தம்பதிகளைக் காணவும் சென்றுவிட்டிருந்ததால், அந்த அறைகளின் பக்கமாக யாரும் காணப்படவில்லை. ஆங்காங்கே, வண்ண வண்ணச் சேலைகள், மரங்களில் பிணைக்கப்பட்டு காய்ந்து கொண்டிருந்தன. சேலைகளின் ஊடே மறைந்து கடைசியாக இருந்த அறையை நோக்கி நடந்தான். இருவரும் உள்ளே நுழைந்து அறையின் கதவினைத் தாளிட்டுக் கொண்டனர்.

“நீ இங்கேயே பத்திரமாக இரு, ஆம்ரா! நான் சந்நிதிக்குச் சென்றுவிட்டு வருகிறேன். மன்னர் வரும் போது நான் இல்லையென்றால், தந்தையார் கேள்வி கேட்பார்?” - சங்கர்ஷணன் கூறினான்.

"பகலிலேயே இந்த அறையினில் இருள் தாண்டவமாடுகிறது. வௌவால்களின் துர்நாற்றம் வேறு. என்னால் இங்கே எப்படி தனித்து இருக்க முடியும்? சற்று நேரம் எனக்குத் துணையிருங்கள். மன்னர் வந்ததும், மேள சத்தம் கேட்குமல்லவா? அப்போது புறப்பட்டுச் செல்லுங்கள்...”

அத்திமலை ரகசியத்தை இன்னும் சற்று நேரத்தில் அறியப் போகிறோம் என்கிற குதூகலத்தில், அவனது தோளினில் சரிந்து தனது கைகளை அவனது கழுத்தினில் மாலையாக சாற்றினாள் ஆம்ரா. அதனால் கிறங்கிய சங்கர்ஷணன் ஆம்ராவை ஆதூரத்துடன் அணைத்து தனது சிரசை அவளது தலையினில் வைத்தான். அப்படியே மயக்க நிலையில் இருந்தனர், இருவரும். தவறு! சங்கர்ஷணன் மட்டுமே மயக்க நிலையில் இருந்தான். தற்போதைய மௌரிய அரசன் தசரதன் இவளை பலமுறை அணைத்து சல்லாபம் புரிந்திருக்கிறான். அவனையே தனது நடிப்புத் திறமையினால் மயக்கியிருந்த ஆம்ராவுக்கு, இந்த கோயிலதிகாரியின் மகன் எம்மாத்திரம். அவனுக்காகவே தான் பிறந்தவளைப் போன்று முகத்தை வைத்துக்கொண்டு அவனது முகத்தையே ஏறிட்டு நோக்கிக் கொண்டிருந்தாள். அப்படியே, உறைந்து போன நிலையில் அவர்கள் இருக்க, வெளியே ஓர் உருவம் அவர்கள் தங்கியிருந்த அறையை நோக்கி நகர்ந்து வந்தது.

https://telegram.me/aedahamlibrary

அறையினை நெருங்கிய அந்த உருவம், மூடியிருந்த கதவினை வெளிப்புறம் தாளிட்டுவிட்டு, வந்த சுவடு தெரியாமல் நகர்ந்து சென்றது. தாங்கள் அந்த அறையில் சிறை வைக்கப்பட்டுவிட்டதை அறியாமல், இன்னும் மயக்க நிலையிலேயே இருந்தனர், சங்கர்ஷணனும், ஆம்ராவும்.

***

தனது மனைவி சுலோச்சனா என்கிற அணிமா கோதையுடன் இரதத்தை நோக்கி நடந்தான். இருவரும் பசுமை ஆடைகளையே அணிந்திருந்தனர். மன்னன் பசுமை வண்ணத்தில் பட்டு பீதக ஆடையையும், தளிர் மாவிலை பசுமையில் அங்கவஸ்திரமும் அணிந்திருந்தான். செவிகளில் மரகதங்கள் மின்னலிட்டன. பசுமை கற்களை கொண்ட ஆபரணங்களை பூட்டியிருந்தான். அவனது காலணிகள் கூட, பசுமைத் தழைகளால் தயாரிக்கப்பட்டிருந்தது. சுலோச்சனாவும், பசுமை நிற கச்சையும், சேலையும் அணிந்திருந்தாள். அவள் மேனியிலும் மரகதங்கள் பளிச்சிட்டன. கைவளைகளும் பசுமைக் கற்களுடன்தான் காணப்பட்டன.

இரதத்தினை நோக்கி நடந்த இருவரும், ஒத்தாடையான் ஆலய கோபுரத்தை நோக்கிக் கைகூப்பிவிட்டு இரதத்தில் ஏறினர். இரதம் புறப்பட்டதும், பின்பாக தாதியர் சிலர் வில்வண்டி ஒன்றில் ஒரு வெள்ளிப் பெட்டகத்துடன் ஏறினர். அரசனும், அரசியும், வேகவதியில் நீராடியபின் ஆடைகளை மாற்றிக் கொள்ள வேண்டுமே. பெட்டகம் முழுவதும் பசுமை வஸ்திரங்கள் தான் நிறைந்திருந்தன.

“நன்றாக நினைவில் கொள் தேவி! முதலில் நாம் அத்தியோலை சடங்கைப் புரிய வேண்டும். வேகவதியில் நீராடிவிட்டு அத்தி இலையை கையில் ஏந்தி, நமது குலம் தழைக்க ஒரு ஆண்மகவை எமக்கு தா, அத்திமலைத் தேவா!' என்கிற கோரிக்கையுடன் இலையை மிதக்கவிட வேண்டும். புரிந்ததா?” - திருலோச்சன பல்லவன் கூற, தலையசைத்தாள், சுலோச்சனா.

"சிந்தையிலும், செயலிலும் அந்த கோரிக்கையைத்தான் வைத்திருக்கிறேன், நாதனே. எனது சுவாசக் காற்று கூட, பட்டத்துக்கு ஒரு இளவரசன் வேண்டும் என்றுதான் ஒலிக்கிறது. அது அத்திமலைத் தேவனின் செவிகளில் இதுவரை விழவில்லை என்பதுதான் வருத்தமே...” - சுலோச்சனா கூறினாள்.

ராஜவீதியின் வழியே இரதம் உருண்டோடியது. அத்தியூரின் தெற்காகச்

https://telegram.me/aedahamlibrary

சென்ற இரதம் வேகவதி ஆற்றின் கரையை அடைந்தது. அங்கிருந்து அத்திமலையானின் ஆலயம் தெரிந்தது. இருவரும் அத்திமலையை நோக்கிக் கைகூப்பிவிட்டு, ஆற்றில் இறங்கினர்.

தாதிகள் மாற்று வஸ்திரத்தை தயாராக எடுத்து வைக்க, திருலோச்சன பல்லவனும், சுலோச்சனாவும் வேகவதியில் மூழ்கி எழுந்தனர். மன்னரும், அரசியும் நீராடுவதற்கு வசதியாக, அந்தப் பகுதியில் பொதுமக்கள் நீராட முடியாதபடி தடுப்புகளை அமைத்திருந்தனர். தொலைவில் மன்னரும் அரசியும், வேகவதியின் சுழல் வேகத்தில் சிக்கிவிடக் கூடாது என்பதற்காக ஓடங்களில் பாதுகாவலர்களும், நீச்சல் வீரர்களும் நிறுத்தப்பட்டிருந்தனர்.

ராஜகுரு, பரத்வாஜ சதகரணி மன்னனுக்கும், அரசிக்கும், ஆளுக்கொன்றாக அத்தி இலைகளை அளித்தார். அதில் மங்கல அரிசி மணிகள் வைக்கப்பட்டிருந்தன. இடுப்பளவு நீரில் அத்திமலையை நோக்கி நின்றனர், அரசனும், அரசியும்.

'அத்திமலைத் தேவா! எனது குலம் தழைக்க ஒரு ஆண்மகவை எமக்கு தா!' - என்கிற கோரிக்கையுடன் கைகளில் ஏந்தியிருந்த அத்தி இலைகளை மிதக்க விட்டனர், அரச தம்பதிகள். நீரில் அந்த இலைகளை மிதக்கவிடும் முன்பாகத்தான் அரசனும், அரசியும் அந்த இலையை கவனித்தனர். அந்த அத்தி இலையில் மூன்று கண்கள் இருந்தன. இதுவரை, அவர்கள் மூன்று கண்கள் உடைய அத்தியிலையைப் பார்த்ததில்லை. இது விசேடமான அத்தி இலைகள் போலும். ஒருவேளை, அத்திமலையான், தங்கள் கோரிக்கை நிறைவேறும், என்பதை இந்த இலைகள் மூலம் சூசகமாகச் சொல்கிறானோ? புதிய நம்பிக்கையுடன் அந்த இலைகளை வேகவதி ஆற்றில் மிதக்கவிட்டனர், அரச தம்பதிகள்.

பிறகு, கரையேறி ஆடைகளை மாற்றிக்கொண்டு அத்திமலையான் ஆலயத்தை நோக்கி நடந்தனர்.

ரகஸ்யாதிக்ருதன் பரமேஸ்வரன் ஓரக்கண்களால், நீச்சல் வீரன் அற்புதநாடனை நோக்கினான். 'மன்னர் மிதக்கவிட்ட அத்தி இலைகளை முக்கூடலில் என்னிடம் கிடைக்குமாறு செய். மன்னனிடம் அதனை அளித்து அவரது நன்மதிப்பினில் இன்னும் உயருகிறேன். நான் உயர உயர நீயும் உயர்வாய்...' என்கிற தகவல் அந்த பார்வையில் தொனித்தது.

கண்களை மூடி திறந்து சமிக்ஞை செய்த அற்புதன் தனது கூர்மை

https://telegram.me/aedahamlibrary

மிகுந்த கண்களால், அரச தம்பதிகள் மிதக்கவிட்ட இலைகளைப் பின்தொடர்ந்தான்.

“ராஜகுருவே! முக்கூடலில் நாங்கள் மிதக்கவிட்ட இலைகள் தான் கிடைக்கும் என்பது என்ன நிச்சயம்? வேகவதி முழுவதுமாக அத்தி இலைகள்தான் மிதந்து கொண்டிருக்கின்றன. இதில் எங்களது இலைகள்தான் கிடைக்கும் என்பது என்ன நிச்சயம்? சுழலில் சிக்கி இலைகள் திசை மாறலாம் அல்லவா? அப்படியே கிடைத்தாலும், அது நாம் மிதக்கவிட்ட இலைகள் தான் என்பது என்ன உறுதி?” - வேளிர் அழுந்தூர் இளவரசியான அணிமா கோதை பச்சை சாற்றும் வைபவத்தை முதன்முதலாகக் காண்கிறாள். அவளுக்கு எல்லாமே வியப்பாக இருந்தது.

சதகரணி லேசாக சிரித்தபடி அவளுக்கு விளக்கினார்.

"அரசியாரே! இந்த சடங்கிற்கு அத்தியோலை அனுப்புதல் என்று பெயர். மக்கள் தங்கள் பிரார்த்தனைகளை அத்திமலைத் தேவனுக்கு ஓலை அனுப்பி அவனிடம் வேண்டுவார்கள். நீங்கள் பார்க்கவில்லையா? மக்கள் தங்களது பெருவிரலை புனுகு குழைவினில் பதித்து தங்கள் ரேகையை தாங்கள் மிதக்கவிட உள்ள இலைகளில் பதிப்பார்கள். இதற்காகவே ஐயம் படுகை சுவடி எழுதுபவர்கள் வேகவதி நதியில் குவிந்திருப்பார்கள். பெருவிரல் ரேகையை வைத்து தான் முக்கூடலில் கிடைக்கும் இலைகள் யாருடையவை என்று அனுமானிப்பார்கள். அதனால்தான், அரண்மனையில் உங்கள் பெருவிரல் ரேகைகளை இலைகளில் பதிக்கச் சொன்னேன்!” - ராஜகுரு விளக்கினார்.

நம்பிக்கையின்மையுடன் தனது கணவனைப் பார்த்தாள், சுலோச்சனா. என்ன சடங்கு இது! வேகவதியில் மிதக்கவிட்ட இலை முக்கூடலில் கிடைக்குமா என்ன? வைக்கோலினில் கூட ஸ்வர்ண ஊசியை தேடி எடுத்துவிடலாமே.

அரச தம்பதியர் ஆலயத்தினை நெருங்க, முரசுகளும், டமாரங்களும், கொம்பு வாத்தியங்களும் முழங்கத் துவங்கின. முரசு ஒலிப்பதைக் கேட்டு, ஆம்ராவின் அணைப்பினில் மயங்கியிருந்த சங்கர்ஷணன் சுயநினைவுக்கு வந்தான்.

"மன்னர் வந்துவிட்டார் போல் உள்ளதே. ஆம்ரா! நான் சந்நிதிக்குச் சென்றுவிட்டு பிறகு உன்னை அழைத்துச் செல்ல மீண்டும் வருகிறேன். மன்னரின் கண்களில் நீ பட வேண்டாம். ஐயங்கள் எழலாம்!” என்றபடி அவளிடமிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு, மூடியிருந்த கதவை

https://telegram.me/aedahamlibrary

நோக்கி நகர்ந்தான். கதவின் தாழ் நீக்கி, திறக்க முயன்றவன், கதவினை திறக்க முடியவில்லை என்பதை உணர்ந்து அதிக பலத்துடன் இழுத்தான். ஆனால், வெகு நேர போராட்டத்திற்குப் பிறகே, கதவு வெளிப்புறம் தாளிடப்பட்டிருப்பதை புரிந்து கொண்டான். கதவைப் பற்றியபடி கலவரத்துடன், ஆம்ரபாலியை திரும்பி நோக்கினான்.

“கதவு வெளிப்புறம் தாளிடப்பட்டிருக்கிறது, ஆம்ரா!” - சங்கர்ஷணன் கூறினான்.

அதிர்ச்சியுடன் அவனைப் பார்த்தாள், ஆம்ரா! சங்கர்ஷணனுக்கு தன்னையே விருந்தாக்கி, அத்திமலை ரகசியத்தை அறிந்து புத்த தர்மத்திற்குத் தேவைப்படும் தேவ உடும்பரத்தைக் கவர்ந்து சென்றுவிட வேண்டும் என்கிற திட்டத்துடன்தான் சங்கர்ஷணனுடன் அலைந்து கொண்டிருந்தாள். இவள் இவ்வளவு சிரமங்களை மேற்கொண்டு இருந்தும், இப்போது இந்த கோயில் அதிகாரியின் மகனால் எல்லா பிரயாசைகளும் வீணானதே!

"மூடனே! நேராக நாம் சன்னிதிக்குச் சென்றிருக்கலாம். நீதான் சற்று நேரம் மறைந்திருப்போம் என்று இந்த இருட்டு அறைக்கு என்னை அழைத்து வந்தாய். இங்கே சிறைபடுவதற்கா அத்தியூருக்கு வந்தேன்? என்ன செய்வாயோ ஏது செய்வாயோ தெரியாது. உடனடியாக நான் அத்திமலை ரகசியத்தை அறிய வேண்டும்!” - உக்கிரத்துடன் கூறினாள். விஷமாக சொற்களை ஆம்ரா கக்கியதும் தான் தன்னிலையினை உணர்ந்து கொண்டான், சங்கர்ஷணன். அவளது காதல் வெறும் நாடகமே என்பதைப் புரிந்து கொண்டான். அதையறியாமல் காதல் போதையில் அவளை ஆலயத்திற்கு அழைத்து வந்துவிட்டோமே என்று தன்னையே நொந்து கொண்டான். அவளது கோபம் ஒருபுறம், தாங்கள் அங்கே பதுங்கியிருப்பதை யாரோ அறிந்து கொண்டனர் என்கிற அச்சம் ஒருபுறமுமாக சங்கர்ஷணனை அலைக்கழிக்க, இன்னும் பலத்தை பிரயோகித்து அந்த அறைக்கதவுடன் போராடிக் கொண்டிருந்தான். அத்திமலைத் தேவனை, போதி மரத்துக்காரி காணக்கூடாது என்பது போன்று அந்தத் தேக்கு மரக்கதவு அசைந்து கொடுக்க மறுத்தது.

திருலோச்சன பல்லவனும் சுலோச்சனாவும் ஆலயத்தினுள் நுழைந்து முதலில் பொற்றாமரை குளத்தினை நோக்கி நடந்தனர். தங்கள் தலையில் குளத்து நீரை புரோட்சணம் செய்துகொண்டு, அத்திமலையை நோக்கி நடந்தனர். கிழக்கு வாசலின் வழியாக நுழைந்த மன்னனின் பார்வை உருண்டோடி, தெற்கு பிராகாரம் பக்கமாகப் பாய்ந்தது. 'அங்குதான்... கொலை நடந்ததா?' என்பது போன்று, மன்னன்

https://telegram.me/aedahamlibrary

ராஜகுருவை நோக்க, அவர் சங்கடத்துடன் தலையசைத்தார். அத்திமலைக்கு ஏறிச் சென்று அரச தம்பதிகள் நிற்க, ஆராதனைகள் தொடங்கின. மன்னர் அளித்த பச்சை பீதாம்பரமும், மரகத மாலையும் அத்திமலைத் தேவனுக்குச் சாற்றினர். அரசன் அத்திமலையான் மேனியை உற்றுப் பார்த்தான்.

'வீர்யத்தின் உறைவிடமான தேவப்பெருமானே! உனது முகம் எனக்கு சற்று உக்கிரமாகப்படுகிறது. கடந்த திங்கள் உனது ஆலயத்தில் நடந்த துர்சம்பவத்தால் இந்த கோபமோ? அதற்காக என்னையோ, எனது ராஜ்யத்தையோ தண்டித்துவிடாதே. உனது அருளால் எனக்கு ஒரு மகன் பிறக்க வேண்டும்...! அவன் பெரும் வீரனாக உன்னையும், உனது ஆலயத்தையும் காப்பான். சாம்ராஜ்யங்களை அமைப்பவனும் நீதான், அழிப்பவனும் நீதான். தேவராஜனே! மன்னர்களின் ஆண்டவனே! எனது ராஜ்ஜியம் உனது தேவ உடும்பர அத்திமரத்தை போன்று பிரம்மாண்டமானதாக பரவ அருள் புரிய வேண்டும்!' - மன்னன் வேண்டிக் கொண்டிருந்தான்.

சுலோச்சனா பெரிதாக ஒன்றும் வேண்டிக் கொள்ளவில்லை. தாங்கள் வேகவதியில் மிதக்கவிட்ட, அத்தி இலைகள் கிடைக்கும்படி அருள் செய். இலைகள் கிடைக்கவில்லை என்றால், மன்னன் மனம் உடைந்து போவான்...! - என்றுதான் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாள்.

மன்னனின் சார்பாக, அத்திமலைத் தேவனுக்கு பச்சைப்பயறு பொங்கல் நிவேதனம் செய்யப்பட்டது. மன்னர் பிரார்த்தனையை முடித்துவிட்டு, முதல் நபராக முக்கூடல் புறப்பட்டதும், பொதுமக்கள் அத்திமலையானுக்குப் பூசனைகள் செய்யலாம்.

மன்னனின் பரிவாரம், ஐயம்படுகை வழியாக முக்கூடலை நோக்கிச் சென்றது. வழியில் மாலிருஞ்சோலை மலை வரதநாராயணப் பெருமாள் ஆலயத்தையும், நரசிங்கப் பெருமாள் ஆலயத்தையும் நோக்கி கரங்களை குவித்தான், மன்னன்.

இதற்கிடையே –

வேகவதி ஆற்றில் மன்னனும் அரசியும் மிதக்கவிட்ட அத்தி இலைகளின் பின்பாகவே நீந்திச் சென்ற அற்புதநாடன், ஒரு கட்டத்தில் பாய்ந்து சென்று அந்த இரண்டு இலைகளையும் அபகரித்துக் கொண்டான்.

மன்னரின் பரிவாரம் முக்கூடலை அடைவதற்குள், இவன் சென்று இலைகளை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். மன்னர்

https://telegram.me/aedahamlibrary

அறியாமல் அந்த இலைகளை பரமேஸ்வரன் வசம் ஒப்படைக்க வேண்டும் என்கிற தங்களது திட்டத்தின்படி இலைகளை பத்திரப்படுத்தி விட்ட நிம்மதியில் முக்கூடலை நோக்கி நீந்திக் கொண்டிருந்தான்.

திடீரென்று –

வேகவதியின் உக்கிரம் அதிகமானது. நீர் பாய்ச்சல் அதிகரிக்க, வேகவதி இன்னும் வேகத்தைக் காட்டத் துவங்கியது. ஒரே சீராக நீந்திக்கொண்டிருந்த அற்புத நாடன், திடீரென ஆற்றில் வெள்ளப்பெருக்கு அதிகமாவதைக் கண்டு திகைத்தான். அதிக பிரயாசையுடன் நீந்தத் தொடங்கினான். ஆனால்...

ஆற்றின் ஒரு திருப்பத்தினில் இவனை விழுங்குவதற்காகக் காத்திருந்த சுழலை அவன் கவனிக்கவில்லை. அந்தச் சுழல் பகுதியை நோக்கி இவன் நீந்த, அது அவனை ஆவேசத்துடன் புரட்டித் தள்ளியது. தான் சுழலில் சிக்கிவிட்டோம் என்பதை அவன் புரிந்து கொள்வதற்குள் அவனை புரட்டி எடுத்துவிட்டது, வேகவதி ஆறு. அற்புத நாடன் கையில் ஏந்தியிருந்த அத்தி இலைகள் அவன் கரத்தைவிட்டு நழுவ, அதை எட்டிப்பிடிக்கக் கூட தோன்றாமல், தனது உயிரைக் காப்பாற்றிக் கொள்ளப் போராடிக் கொண்டிருந்தான்.

அப்போது –

கரைப்பகுதியில் ஒரு அசைவு. ஓர் உருவம் ஆற்றினுள் பாய்வதை, தற்செயலாகக் கண்டான், அற்புதன். தன்னை காப்பாற்றவே ஒருவன் தன்னை நோக்கி நீந்தி வருவதாக எண்ணிய அவன், சற்றே தனது போராட்டத்தினைக் குறைத்துக் கொண்டான். அந்த உருவம் நீந்தி வந்து தனது தலைமுடியைக் கற்றையாகப் பிடித்து இழுத்துச் செல்லும் என்று நினைத்தபடி அற்புதநாடன் காத்திருக்க, விரைவாக நீந்தி வந்த உருவம், அற்புதன் நழுவவிட்டிருந்த மன்னர் மற்றும் அரசி மிதக்கவிட்டிருந்த அத்தி இலைகளைச் சேகரித்துக்கொண்டு திரும்பி வந்த வழியே நீந்தத் துவங்கியது.

அதனைக் கண்ட அற்புதன் அதிர்ச்சி அடைந்தான். அவனை அழைப்பதற்காக வாயைத் திறந்தவன், உள்ளே நீர் வேகமாக பாய்ந்து நிறைக்க, திணறிப் போனான். இரு கரங்களை மட்டும் நீரின் மேலே ஆட்டியபடி அந்த உருவத்தை அழைக்க, அந்த உருவமோ திரும்பிப் பாராமல் நீந்திக்கொண்டே இருந்தது. வேகவதி அற்புதனை உருட்டிக்கொண்டு போனது.

https://telegram.me/aedahamlibrary

முக்கூடல் வேங்கடவன் ஆலயத்தையும் தரிசித்து விட்டு, பாலாறு, செய்யாறு மற்றும் வேகவதி சங்கமிக்கும் முக்கூடலை அடைந்தனர் அரச தம்பதிகள். ஆற்றங் கரையின் சற்றே மேடான பகுதியில் துணியினால் ஒரு விதானம் அமைக்கப்பட்டிருக்க, அதன் கீழே இரு இருக்கைகள் போடப்பட்டிருந்தன. ஆற்றங்கரையில் அடித்த பலத்த காற்றில் விதானம் படபடத்துக் கொண்டிருக்க, மன்னனும், அரசியும் இதமான அந்த காற்றினை ரசித்தபடி அந்த இருக்கைகளில் அமர்ந்தனர்.

ராஜகுரு தலையசைக்க, நீச்சல் வீரர்கள் நீரில் பாய்ந்து மன்னர் மிதக்கவிட்டிருந்த அத்தியிலைகளைத் தேடத் தொடங்கினார்கள். அரசி நம்பிக்கையின்மையுடன் தனது இதழ்களைக் கடித்தபடி அவர்களை நோக்கிக் கொண்டிருந்தாள். இவர்கள் மிதக்கவிட்ட இலைகள் கிடைத்தால், பிள்ளை வரம் கேட்ட இவர்களது பிரார்த்தனைக்கு அத்திமலையான் செவி சாய்த்து விட்டதாக பொருளாமே! படபடப்புடன் அந்த நீச்சல் வீரர்களையே நோட்டம்விட்டுக் கொண்டிருந்தாள், சுலோச்சனா.

தனது திட்டப்படி, மன்னரின் செவிகளில் தான் உரைப்பது கேட்கும் வண்ணம் நின்றான்... ரகஸ்யாதிக்ருதன் பரமேஸ்வரன்.

"அற்புதநாடன் கூட இலைகளைத் தேடிக் கொண்டிருக்கிறான்! சிறந்த நீச்சல் வீரன். அவன் எப்படியும் இலைகளைக் கண்டெடுத்து விடுவான்!" - பரமேஸ்வரன் கூறினான்.

நீச்சல் வீரர்கள் இன்னும் இலைகளைத் தேடிக் கொண்டிருந்தார்கள். சுலோச்சனா அவர்களைக் காண்பதும், பின்பு அவநம்பிக்கையுடன் மன்னனைக் காண்பதுமாக இருந்தாள். பரமேஸ்வரனோ, இன்னும் அற்புதனை காணவில்லையே என்று பரபரத்துக் கொண்டிருந்தான்.

'பாவி! விரைவாக வந்து தொலைய வேண்டியது தானே. மன்னரின் நன்மதிப்பை பெறுவதற்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் காத்திருக்க, இவன் ஏன் இன்னும் தாமதப்படுத்துகிறான்?'

உச்சி வானிற்கு வந்துவிட்டான் கதிரவன். இனி அவன் தேர்க்கால் இறங்குமுகமாகச் செல்லப் போகிறது என்பதை உணர்ந்த பரத்வாஜ சதகரணி கவலையுடன் மன்னரைப் பார்க்க, மன்னனும், சற்றே ஏமாற்றத்துடன் அவரைக் காண...

அப்போது –

https://telegram.me/aedahamlibrary

மன்னர் அமர்ந்திருந்த மேடான பகுதியை நோக்கி, ஆற்றினில் ஓர் உருவம் நீந்தி வந்தது. இலைகளைத் தேடிக் கொண்டிருந்த வீரர்களின் ஊடே நீந்தி வந்த அந்த உருவம், அருகே புலப்பட்டதும், நீந்தி வந்தது ஒரு சிறுவன் என்பதை மன்னரும், ராஜகுருவும் அறிந்து கொண்டனர். வியப்புடன் அந்தச் சிறுவனையே பார்க்க, ஆற்று வெள்ளத்தினை அனாயாசமாக நீந்தி லாவகமாக கரை ஏறினான் அந்தச் சிறுவன். தெப்பலாக ஈர உடையுடன் நின்றவன், தனது ஆடையின் நீரைப் பிழிந்தபடி சற்று நேரம் நின்றவன், பிறகு மெதுவாக மன்னனை நோக்கி நடந்தான்.

'இலையைத்தானே எதிர்பார்த்தேன். தெய்விக பாலகனையே அத்திமலைத் தேவன் கொடுத்து விட்டானே?' என்கிற எண்ணத்தோடு பிரமிப்பும் சேர அந்த சிறுவனையே பார்த்துக்கொண்டிருந்தாள், சுலோச்சனா.

கம்பீரமாக நடந்து வந்த அந்தச் சிறுவனை இமை கொட்டாமல் நோக்கிக் கொண்டிருந்தான், திருலோச்சனன்.

'யார் இந்தச் சிறுவன்? எதற்காக என்னை நோக்கி வருகிறான்?' வியப்புடன் ராஜகுருவைப் பார்த்தான், மன்னன். ராஜகுருவும், குழப்பத்துடன் அந்தச் சிறுவனையே பார்த்துக்கொண்டிருக்க, அவன், நேராக மன்னனின் முன்பாக வந்து நின்று, வணங்கினான்.

“பல்லவ வேந்தே! வாழி! தாங்கள் வேகவதியில் மிதக்க விட்ட, அத்தி இலைகளை நான் கொண்டு வந்திருக்கிறேன். இதோ! பெற்றுக் கொள்ளுங்கள்!” என்று இடையில் பிணைத்திருந்த சுருக்குப் பை ஒன்றில் இருந்து இலைகளை எடுத்து மன்னரின் முன்பாக நீட்டினான், அந்தச் சிறுவன்.

அரச தம்பதிகள் மட்டுமல்ல, கூட்டத்தினரே பிரமித்து நின்றார்கள். முதல் முறையாக அத்தியோலை அனுப்பும் வைபவத்தில் மன்னர் கலந்து கொள்ள, அவருக்கு அத்தியோலை கிட்டுகிறதா என்று காண்பதற்கு அத்தியூர் மட்டுமல்லாமல், தருமநகரம், ஒத்தாடை என்று பல பகுதிகளில் இருந்து வந்த மக்கள் கூடியிருந்தனர். அனைவருமே தெய்விகக்களையுடன் காணப்பட்ட அந்தச் சிறுவனைக் கண்டு மலைத்துப் போயினர். அத்தி மலைத்தேவனே சிறுவன் உருவில் வந்திருக்கின்றானோ?

தனது முன்பாக இலைகளை நீட்டியபடி பணிவுடன் நின்ற அந்தச் சிறுவனையே பிரமிப்புடன் நோக்கிக் கொண்டிருந்த அரச தம்பதிகள்,

https://telegram.me/aedahamlibrary

அவன் நீட்டிய இலைகளைப் பெற்றுக்கொண்டு அவற்றை ஆராய்ந்தனர்.

சந்தேகமேயில்லை. இவர்கள் வேகவதியில் மிதக்க விட்ட அதே அத்தியோலைகள்தான். இவர்களது பெரு விரல் ரேகை அவற்றினில் பதிந்திருந்தன. மேலும், இரண்டுமே இவர்கள் மிதக்கவிட்ட முக்கண்களைக் கொண்ட இலைகள் தான். பரவசத்துடன் அந்தச் சிறுவனை நோக்கினாள், சுலோச்சனா. 'இவனைப் போன்று ஒரு மகனை எனக்கு தா!' - என்று மனதார அத்திமலைத் தேவனிடம் வேண்டினாள்.

"யாரப்பா நீ?" - மன்னன் உணர்ச்சி மிகுதியால் மௌனமாகி அமர்ந்திருப்பதைக் கண்ட சதகரணி, உற்சாகத்துடன் அந்தச் சிறுவனிடம் வினவினார்.

"அய்யா! எனது பெயர் கிருஷ்ண பாதன்!" - அந்தச் சிறுவன் கூறியதுமே, பரத்வாஜ சதகரணிக்கு தூக்கிவாரிப் போட்டது. தனது வகுப்பறையில் பதின்மூன்றாவதாக வைக்கப்பட்டிருந்த அந்தச் சுவடியின் விளக்கம் அவரது கண்களுக்கு முன்பாக நிழலாடியது. காவிரியையும், சோழ மன்னனையும் போற்றி பரிபாடலுக்கு விளக்கமளித்திருந்த அந்த கிருஷ்ண பாதன் இவன்தானோ? ஐயமும், மலைப்பும் கலந்த அவரது பார்வை அந்தச் சிறுவனை எடைபோட்டது.

மிகவும் கம்பீரமாக இருந்தான். வயதுக்கு மிஞ்சிய வளர்த்திதான். முகத்தில் அரச லட்சணங்கள் தென்பட்டன. ஒரு மன்னனின் முன்பாக நிற்கிறோம் என்கிற அச்சமோ, தயக்கமோ இல்லை. நிமிர்ந்த நெஞ்சும், நேர்பார்வையும், தெளிவான உரையும், அவனை அசாதாரண பாலகனாக காட்டியது.

“கிருஷ்ண பாதா! இலைகளைக் கொண்டு வந்து தந்தமைக்கு எனது நன்றி. உனக்கு என்ன வேண்டும் கேள்?” திருலோச்சனனின் குரலில் மகிழ்ச்சி கொப்பளித்தது.

கிருஷ்ண பாதன் மன்னனையே உற்றுப் பார்த்தான். "மன்னரே! நான் உங்கள் நாட்டின் விருந்தாளி. வந்த இடத்தில் உமக்கு நான் உதவினேன், அவ்வளவே! உங்களது பிரார்த்தனை பலிக்க வேண்டுமே என்பதற்காகவே ஆற்றினில் குதித்து அத்தியிலைகளை கொணர்ந்தேன். அவ்வளவே! இதற்காக நான் பிரதி உபகாரங்களை கேட்க விரும்பவில்லை!” கிருஷ்ண பாதன் கூறினான்.

https://telegram.me/aedahamlibrary

“இல்லை பாலகா! நீ ஏதாவது கேட்டுத்தான் தீர வேண்டும். எங்களுக்கு பெரிய உதவியை செய்திருக்கிறாய்!” குரல் தழுதழுக்க சுலோச்சனா கூறினாள்.

சற்றே யோசித்த கிருஷ்ண பாதன் பிறகு மன்னரை நோக்கினான்.

"மன்னா! உங்கள் நாட்டில் விருந்தாளியாக நான் எவ்வளவு காலம் தங்கப் போகிறேன் என்பது தெரியவில்லை. நான் தங்குவதற்கு வசதியாக ஒரு ஜாகையினை ஏற்பாடு செய்து தந்தால் போதுமானது" என்றான்.

மன்னன் குதூகலத்துடன் அவனைப் பார்த்தான். "நீ எங்கும் தங்கத் தேவை இல்லை. நீ உனது நாட்டிற்கு கிளம்பும் வரை, எனது அரண்மனையிலேயே தங்கலாம். உனக்கு எல்லா வசதிகளும் அங்கே கிடைக்கும். புறப்படு!"

திருலோச்சனன் எழுந்து அரசி மற்றும் கிருஷ்ண பாதனுடன் தனது இரதத்தினை நோக்கி நடந்தான். அந்தச் சிறுவன் பல்லவ மன்னனுடன் கிளம்பிப் போவதை இரு கண்கள் பெருமிதத்துடன் நோட்டம் விட்டுக் கொண்டிருந்தன.

'சேரும் இடத்தைச் சேர்ந்துவிட்டாய், கிருஷ்ண பாதா! உனது தாய்க்கு உடனடியாக இந்தத் தகவலை சொல்ல வேண்டும்!' என்று தனக்குள் கூறியபடி அங்கிருந்து நகர்ந்தது, அந்த உருவம். அவர் ருத்ராக்ஷர் என்கிற உருத்திரங்கண்ணனார்.

அதே சமயம் –

பரமேஸ்வரனின் உக்கிரமான நேத்திரங்களும் அந்தச் சிறுவனை வெறித்துக் கொண்டிருந்தன. தன்னை உயர்த்திக் கொள்ள வேண்டி இவன் காத்திருக்க, எங்கிருந்தோ வந்த அந்தச் சிறுவன் மன்னனின் அபிமானத்தைப் பெற்றுக் கொண்டானே!

மன்னனின் இரதம் ஒத்தாடையை நோக்கிப் புறப்பட்டது. முக்கூடலில் இருந்து அத்தியூர் ஆலயத்தை மீண்டும் அடைந்த போது, கிருஷ்ண பாதன் திடீரென்று ஓடும் இரதத்தினில் இருந்து கீழே குதித்தான்.

திருலோச்சன பல்லவன் திகைத்து இரதசாரதியை நோக்கிக் கையசைக்க, இரதம் நின்றது.

“கிருஷ்ண பாதா! எதற்காக இரதத்தினில் இருந்து கீழே குதித்தாய்?”

https://telegram.me/aedahamlibrary

வியப்புடன் கேட்டான், திருலோச்சன பல்லவன்.

"மன்னா! இன்று காலை அத்திமலைத் தேவனை தரிசித்தீர்கள் அல்லவா? அவன் தங்களுக்கு எப்படி காட்சியளித்தான்?" கிருஷ்ண பாதன் கேட்டான்.

குழப்பத்துடன் அவனை நோக்கினான், மன்னன். "சற்றே அவன் உக்கிரமாக இருப்பதாக எனக்குத் தோன்றியது, கிருஷ்ணா!"

"உண்மை! உக்கிரமாகத்தான் காட்சி தருகிறான். நானும் தங்களுக்கு பின்னர் அவனை தரிசித்தேன். அவனது உக்கிரத்திற்கு காரணம் உண்டு, அரசே. அவனுக்குத் தீங்கு இழைக்கும் எண்ணத்துடன், ஒரு வாலிபனும், ஒரு நங்கையும், ஆலயத்தில் பதுங்கியுள்ளனர். அவர்களை அப்புறப்படுத்தினாலே போதும், அவனது உக்கிரம் வடிந்துவிடும்!" கிருஷ்ண பாதன் கூறினான்.

'வேகவதி ஆற்றினில் இறங்கி உயிர் துறந்த சாணக்கியன்தான் இந்த கிருஷ்ண பாதனாக மீண்டு வந்திருக்கின்றானா?' - ஆச்சரியத்துடன் அவனை நோக்கினான், மன்னன்.

"யார் அவர்கள்?" மன்னன் கேட்டான்.

"அத்தியூர் ஆலய அதிகாரியின் மகன் சங்கர்ஷணனும், மவுரியத்தில் இருந்து வந்திருக்கும் ரகசிய படையின் வேவுப்பணி பார்க்கும் ஆம்ரபாலி என்கிற நடன நங்கையும்தான். அவர்களை நான் பொற்றாமரைக் குளக்கரையில் உள்ள அறை ஒன்றில் சிறைப்படுத்தியிருக்கிறேன்!" என்றான்.

"தலைமை அமைச்சரே! உடனடியாக அவர்களை கைது செய்யுங்கள்!" இரதத்தினில் இருந்தபடியே கர்ஜித்த பல்லவனின் கண்கள் மட்டும் கிருஷ்ண பாதனையே பிரமிப்புடன் நோக்கின.

'சந்தேகமேயில்லை. இவன் சாணக்கியனின் மறுபிறவி தான்.' திருலோச்சனனின் மனம் கூவியது. மீண்டும் இரதத்தினில் ஏறிய கிருஷ்ண பாதனை அணைத்து உச்சி முகர்ந்தாள், சுலோச்சனா. அவள் அங்ஙனம் உச்சி முகர்ந்த போது அவன் சிரசில் வீசிய காவிரி மண்ணின் மணம் அவளுக்கு எதையோ உணர்த்தியிருக்க வேண்டும். சடாரென்று அவனை விடுவித்து அவன் முகத்தினை ஆராய முற்பட்டாள். அவன் முகத்தில் தனது சகோதரி பூங்குழல் நாய்ச்சியின் நிழல் தெரிவதை அப்போதுதான் உணர்ந்தாள்! உறைந்து போனாள்.

https://telegram.me/aedahamlibrary

அதே சமயம் -

ராஜகுரு பரத்வாஜ சதகரணிக்கும் ஏதோ உறைத்தது. கிருஷ்ண பாதன் அளித்திருந்த சுவடி விளக்கத்தைக் கொண்டு அவன் சோழ நாட்டவன் என்பதனை உணர்ந்திருந்தார்.

திருலோச்சன பல்லவனின் சகதலையன் இளஞ்சேட் சென்னி கொலையுண்ட பிறகு, அவன் மனையாள் பூங்குழல் நாய்ச்சியும், மகன் கரிகாலனும் போன இடம் தெரியாமல் இருந்தது. அவர்களைப் பற்றிய ஒரு தகவலும் கிடைக்கவில்லை என்று மன்னனும், அரசியும் அவ்வப்போது வருந்திக் கொண்டிருந்தனர்.

இப்போது...

இந்தச் சிறுவன் இங்கே விருந்தாளியாக வந்திருப்பதாக கூறுகிறான். பெயரோ கிருஷ்ண பாதன்! யோசித்தபடி பல்லக்கில் வந்த பரத்வாஜ சதகரணியின் சிந்தையில் மின்னல் அடித்தது.

வடமொழியில் கிருஷ்ண பாதன் என்றால், தமிழில் கரிகாலன் தானே?

பரவசத்துடன் தனது பல்லக்கில் இருந்து எட்டிப் பார்த்த ராஜகுரு இரதத்தினைக் கவனிக்க, அரசியார் கிருஷ்ண பாதனை உணர்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருப்பது புலப்பட்டது.

தனது தமக்கை பூங்குழல் நாய்ச்சியின் மகன் கரிகாலனை, சுலோச்சனா என்கிற அணிமா கோதை இனம் கண்டு கொண்டாள், என்பது அவருக்குப் பார்த்த மாத்திரத்திலேயே புரிந்து போனது.

*****

https://telegram.me/aedahamlibrary

# 4. உதயமானான் உதயசாகரன்!

தருமநகரம்!

கதிரவன் உதித்து உச்சி வானை எட்டிப்பிடிக்க வேண்டும் என்பதற்காக கிழக்கில் ஊர்ந்து கொண்டிருந்த நேரம். அமரஜோதி முக்கூடல் கடிகைக்கு புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருந்தார். அவரது குடிலின் பின்புறம் நந்தவனத்தில் அமைக்கப்பட்டிருந்த நான்கைந்து குடில்களில் திவ்ய பாதா தலைமையில் தாமரை சூத்ரங்களை உச்சரித்துக் கொண்டிருந்தனர். அசோகனின் மகன் மஹிந்தா, மகள் சங்கமித்தா, அவளது கணவன் அக்ரிப்ரம்மா, மகன் சுமனா, ஆம்ரபாலி உள்பட அனைவருமே கண்களை மூடி, தாமரை சூத்திரங்களை உருப்போட்டபடி தியானித்துக் கொண்டிருந்தனர்.

சரியாக, உள்படுகருமத்தலைவர் போஜகனும், மன்னனின் ரகஸ்யாதிக்ருதன் பரமேஸ்வரனும், உடன் ஆம்ரபாலியுடன் அமரஜோதியின் குடிலின் முன்பாக புரவியில் வந்து இறங்கினர். தனது கண்களை மூடித்திறந்து அவர்களை வரவேற்பது போன்று தலையசைத்தார், அமரஜோதி.

உள்படுகருமத்தலைவர் நேராக விஷயத்திற்கு வந்தார். “உங்கள் குழாமைச் சேர்ந்த இந்த பெண் அத்திமலை ஆலயத்தில் கையும் களவுமாக பிடிபட்டாள். உங்களது உளவு வேலைகள் நிரூபணம் ஆகியுள்ளன. உங்கள் ஆஸ்ரமத்தில் தங்கியிருப்பவர்கள் நடவடிக்கைகள் ஐயத்தை உண்டுபண்ணுவதாலும், நமது பல்லவ ராஜாங்கத்திற்கு எதிராக பல செயல்களை புரிகிறார்கள் என்றும் அறியப்படுகிறது. இன்று இரவுக்குள் உங்கள் குடிலில் தங்கியிருப்பவர்கள் அனைவரும் பல்லவ நாட்டின் எல்லையை விட்டுச் சென்றுவிட வேண்டும் என்பது மன்னரின் உத்தரவு." - தனது கையில் ஏந்தியிருந்த மன்னரின் இலச்சினையினை தாங்கிய ஓலையைப் பிரித்துப் படித்தபடி, போஜகன் கூற, அமரஜோதி கெஞ்சலுடன் போஜகனைப் பார்த்தார்.

"அவர்கள் அத்தியூரையும், முக்கூடல் கடிகையையும் சுற்றிப் பார்க்கவே வந்திருக்கிறார்கள். மன்னரைச் சந்தித்து விளக்கம் அளிக்க எனக்கு ஒரு வாய்ப்பினை நல்குங்கள்!” - அமரஜோதி கேட்டார்.

"நள்ளிரவில் அத்திமலையான் ஆலயத்தைச் சுற்றி வருகிறீர்கள். பல்லவர்கள் ஏமாந்தவர்கள் என்கிற நினைப்பில் தான் நடுநிசியில்

https://telegram.me/aedahamlibrary

அத்திமலையான் ஆலயத்தின் மரங்களில் பதுங்கி இருந்தீர்களா? இன்றிரவுக்குள் புறப்படவில்லையென்றால், விளைவுகளைச் சந்திக்க நேரிடும்!” பரமேஸ்வரன் காட்டமான குரலில் கூற, அதற்குள் குடில்களில் உச்சாடனங்கள் நின்று போயின. ஏதோ பிரச்னை என்பதை மட்டும் புரிந்து கொண்டனர், திவ்ய பாதாவின் தலைமையிலான ரகசியப் படையினர்.

போஜகனும், பரமேஸ்வரனும் புறப்பட்டுச் சென்றதும், அனைவரும் அவசரமாகக் கூடினர்.

மஹிந்தா அமரஜோதியை அமைதியாகப் பார்த்தான். “பிக்குவே! நாங்கள் இலங்கை செல்ல வேண்டிய நேரம் வந்துவிட்டது. இலங்கை மன்னன் திஸ்ஸனும் அவனது சகோதரி அனுலாவும் புத்த தத்துவத்தை ஏற்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். அதோடு அனுலா எனது சகோதரிக்கு பெரிய பொறுப்பு ஒன்றையும் தந்திருக்கிறார். [1] சுமார், 80 நங்கைகள் பிக்குணிகளாக மாறுவதற்கு சித்தமாக உள்ளனராம். நாங்கள் அங்கே சென்று புத்த தத்துவங்களை போதிக்க வேண்டும். இனியும் இங்கே தங்குவதில் பயனில்லை." - மகிந்தா கூறினார்.

திவ்ய பாதாவும் தலையசைத்தார். "ஆம் அமரஜோதி! நாங்கள் அத்தியூரில் தேவ உடும்பர மரத்தைத் தேடி அலுத்துவிட்டோம். மரம் இங்கே இருந்தால் நமது கண்களில் படாமல் இருக்குமா என்ன? இல்லை சனாதனர்கள்தான் அதனை பெட்டகத்தில் பூட்டி வைத்திருக்கக் கூடுமா? எங்கேயோ தவறு நடந்திருக்கிறது. இங்கே தேவ உடும்பர மரம் இருப்பதற்கான சுவடுகளே இல்லை. நீர் தொடர்ந்து தேடுதல் பணியைச் செய்து கொண்டு இருக்கவும். அப்படியே இங்கு இருந்தாலும், இனி தசரதன் மூலம் படைபலத்தால் அதனை கைப்பற்றுவோம்! அதுவரை, இங்கே இருப்பதில் பயனில்லை. நாம் இங்கே இருந்தால் அவர்களது எச்சரிக்கையுணர்வு அதிகமாகும். பாதுகாப்பினை மேலும் மேலும் பலப்படுத்திக் கொண்டு இருப்பார்கள்!” - திவ்யபாதா கூறினார்.

“நாம் இலங்கைக்கு புறப்படுவோம். அங்கே நான் கொண்டு வந்த போதியின் கிளையினை நட்டு, போதி தருமத்தை வளர்ப்போம்!” சங்கமித்தா கூறினாள்.

ஆம்ரா அலட்சியமாக அவர்களை நோக்கினாள். “பாவம்! இலங்கை மன்னன் திஸ்ஸனும், அனுலாவும் கண்டார்களா என்ன, இந்த போதி கிளை வெறும் அரசமரத்தின் கிளை என்று. நீங்கள் இலங்கை செல்லுங்கள். நான் வரவில்லை. நான் இங்கேயே இருந்து தேவ

https://telegram.me/aedahamlibrary

உடும்பர ரகசியத்தை அறிந்து, அதனை கைப்பற்றாமல் வரப்போவதில்லை. நமது புத்த கயையினில், புத்தர் சிலையாக இந்த தேவ உடும்பரத்தை ஸ்தாபிதம் செய்யும் வரையில் நான் ஓயப்போவதில்லை!" ஆம்ராவின் குரல் அந்த பகல் வேளையிலும் அமானுஷ்யத்தை எதிரொலித்தது

"என்ன செய்யப் போகிறாய், ஆம்ரா?" சற்றே பதற்றத்துடன் கேட்டான், மஹிந்தா.

"நான் இலங்கை வரப்போவதில்லை. இங்கிருந்து சேர நாட்டிற்கு தப்பிவிடப் போகிறேன். அங்கே எனக்குத் தெரிந்த கலைகளை வளர்க்கப் போகிறேன்." - கலகலவென்று சிரித்தபடி கூறினாள்.

அன்றிரவு –

திவ்ய பாதாவின் தலைமையில் அனைவரும் முக்கூடலில் இருந்து மாவிலக்கைக்கு [2] புறப்பட்டனர். ஓடத்தினில் ஏறுவதற்கு முன்பாக தன்னைச் சுற்றி நோக்கினாள், சங்கமித்தா. தந்தை அசோகனும், புத்த கயை தலைவர் புத்த மந்தாவிற்கும் அளித்திருந்த வாக்கினை நிறைவேற்றாமல் தான் இலங்கைக்குப் புறப்படுகிறாள். இவள் இருவருக்கும் அனுப்பிய தகவலுக்கு எவ்வித பதிலும் கிடைக்கவில்லை. அசோகன் துறவறம் ஏற்று தக்ஷசீலம் சென்றுவிட்டதாகவும், புத்த மந்தா திஸ்ஸரக்காவினால் கொல்லப்பட்டதாகவும் தூதன் மூலம் தகவல் வந்தது. சங்கத்தின் புதிய தலைமை பிக்குவாக பத்மசீலர் பொறுப்பேற்றதையும் அறிந்திருந்தனர். தற்போது இலங்கைக்கு பலவந்தமாக விரட்டியடிக்கப்படும் சூழ்நிலையில், அங்கிருந்தபடி தேவ உடும்பர மரத்தைத் தேட சிலையை கண்காணிக்க வேண்டியதுதான். மனதினுள் நினைத்தவள், ஜாடையாக சகோதரன் மகிந்தாவை நோக்கினாள்.

'நமது குழாமில் நாட்டியக்காரி ஆம்ரபாலியை காணவில்லையே?' கண்களால் அவன் கேட்க, அவனுக்கு மட்டும் கேட்கும்படியாக மெல்லிய குரலில் முணுமுணுத்தாள்.

"அவள் சேர நாட்டுக்குத் தப்பிச் செல்கிறாள்! அங்கிருந்தபடி நமக்குத் தேவையான பணிகளைச் செய்து கொண்டிருப்பாள்!" - சங்கமித்தா, ஓடத்தில் ஏற, அவளைத் தொடர்ந்து அவள் கணவன் அக்ரிபிரம்மா, மகன் சுமனா மற்றும் பௌத்த பிக்குகள் ஓடத்தில் ஏறினார்கள். மாவிலக்கை துறைமுகத்தைவிட்டு ஓடம் இலங்கைக்குப் புறப்பட்டது.

https://telegram.me/aedahamlibrary

***

"கிருஷ்ண பாதன் நமது நாட்டில் காலை பதித்த வேளைதான், நமக்கு சிங்கக்குட்டியைப் போன்ற மகன் பிறந்திருக்கிறான்" - சுலோச்சனா தங்கத்தொட்டிலில் கைகால்களை உதைத்தபடி விளையாடிக் கொண்டிருந்த தனது மகனைப் பெருமிதத்துடன் பார்த்தாள்.

திருலோச்சனனும் பரமானந்தத்தில் மூழ்கியிருந்தான். பச்சை சார்த்தி அத்திமலையானிடம் பிள்ளை வரம் வேண்டியது வீண் போகவில்லை. இதோ அவனது குலக்கொழுந்தும், பல்லவ ராஜ்யத்தின் வருங்கால வாரிசும், தங்கத்தொட்டிலில் தவழ்ந்து கொண்டிருக்கிறது. கைகால்களை உதைத்தபடி, பார்வை நிலைப்படாமல் சுற்றுமுற்றும் நோக்கிக் கொண்டிருந்த தனது குழவியை நோக்கினான். இதென்ன, குழந்தையின் நெற்றியில் இவ்வளவு நீண்ட சுட்டியை சூடியிருக்கிறாள், சுலோச்சனா! வியப்புடன் அந்தச் சுட்டியை நோக்கினான். ஸ்வர்ண சுட்டியினில் கருநீலக் கல்லை பதித்திருக்க, சுற்றி கருகமணிகளின் வேலைப்பாடுகளுடன் மிகவும் அழகாகக் காட்சி தந்தது அந்தச் சூடாமணி. குழந்தையின் நெற்றியை மறைத்துக் கொண்டிருந்தது.

"தேவி! குழந்தைக்கு ஏன் இவ்வளவு பெரிய சூடாமணியை அணிவித்திருக்கிறாய்? காண்பதற்கு மிகவும் கனமாகத் தோன்றுகிறது. குழந்தைக்கு வேதனையை தரப்போகிறது..." - திருலோச்சனன் கூறினான்.

"ராஜகுருவின் உத்தரவு!" - சுலோச்சனா கூற, வியப்புடன் அவரை பார்த்தான்.

அவனிடம் விளக்கிக் கூறுவதற்கு அதுவே தக்க தருணம் என்பதைப் புரிந்துகொண்ட பரத்வாஜ சதகரணி, மன்னனின் பின்பாக வந்து நின்று, அவனது செவிகளில் கிசுகிசுத்தார்.

"மன்னா! தாங்கள் முக்கண்கள் கொண்ட அத்தி இலையினை பெருமானுக்கு சமர்ப்பித்த பலன், அந்த ஒத்தாடை முக்கண்ணனே தங்கள் மகனாகப் பிறந்திருக்கிறான். சற்றே அந்தச் சுட்டியை விலக்கிப் பாருங்கள்!" என்றார்.

திருலோச்சனன் குழந்தையின் நெற்றியில் தனது வலிமை மிகுந்த கரத்தினை மிருதுவாக எடுத்துச் சென்று குழந்தையின் நெற்றியில் கைவைத்து, அதன் சுட்டியை சற்றே விலக்கியவன், அதிர்ந்து போனான்.
-

https://telegram.me/aedahamlibrary

பரமசிவனின் நெற்றியில் துலங்கும் மூன்றாவது கண் போன்று, குழந்தையின் நெற்றியிலும் கண்ணை போன்ற ஒரு அடையாளம் தென்பட்டது.

“ராஜகுருவே! என்ன இது?”

“அத்தியூரான் தனது சகோதரியின் கணவன் ஒத்தாடையானையே உமக்கு மகனாக அனுப்பியுள்ளான். இளவரசனின் நெற்றியில் மூன்றாவது கண்ணாகத் திகழுகின்றது இந்தத் தழும்பு. [3] மகேஸ்வரனைப் போன்று இந்த பல்லவத்தை விரிவு செய்து ஆளப்போகின்றான். அவன் முக்கண்ணனின் அவதாரமே. எனவேதான் அவரை த்ரிநேத்ர உதயகுமார பல்லவன் என்று அழைப்போம். முக்கண்ண இளந்திரையன் தொண்டைமான் என்று தமிழுலகம் அவனை புகழும். அனல் பார்வையால் எதிரிகளை துவம்சம் செய்யப் போகும் உங்கள் மகனின் நெற்றி தீட்சண்யத்தை குளிர்விக்கவே நீலக்கல் சூடாமணியை அணிவிக்கச் சொன்னேன்...!” பரத்வாஜ சதகரணி கூறியதும், புளகாங்கிதத்துடன் தனது மகனை கையில் எடுத்துக் கொண்டான், திருலோச்சனன்.

"முக்கண்ண இளந்திரைய தொண்டைமான்!” தனது மகனது பெயரை மூன்று முறை உச்சரித்தான், திருலோச்சனன்.

***

கரிகாலன் அரியணையைக் கைப்பற்றிவிட்டான். மாமன் இரும்பிடர்த்தலையார் அவனது உரிமைகளைப் பெற்றுத்தர பெரும் போரையே நடத்தி, சேரன், பாண்டியர்களின் கூட்டுச் சதியை முறியடித்திருந்தார். கரிகாலன் பதவி ஏற்றதும், முதலில் பரசலூர் அக்கிரகாரத்தில் அந்தணப் பெண்மணி வேடத்தில் பதுங்கியிருந்த தனது தாய் நறுங்குழல் நாய்ச்சியை பூம்பட்டினத்திற்கு அழைத்து வந்தான். கரிகாலன் பதவி ஏற்பதை கண்ணீருடன் பார்த்துக்கொண்டிருந்தாள், நாய்ச்சி.

"அன்னையின் பாதங்களில் விழுந்து ஆசி வாங்கு, கரிகாலா!” - இரும்பிடர்த்தலையார் கரிகாலனிடம் கூறினார். தனது பாதங்களை நோக்கி குனிந்த கரிகாலனை பதைபதைப்புடன் தடுத்து நிறுத்தினாள், நாய்ச்சி.

“மகனே! எவ்வளவு பெரிய சாதனையைச் செய்து விட்டு, எனது காலில் விழுகின்றாய். ஆசி வாங்கும் போது கூட நீ தலை வணங்கவே கூடாது.

https://telegram.me/aedahamlibrary

உன்னைச் சுற்றிலும் எதிரிகள் இருப்பதை அறியமாட்டாயா?!" - நாய்ச்சியின் கண்களில் நீர் உருண்டோடியது.

"சகோதரி! எதிரிகள் அனைவருமே, சுவாசத்தை வெளியிடக் கூட பயந்து பதுங்கி இருக்கின்றனர். உனது மகனை என்ன நினைத்தாய். கலைமகள், அலைமகள், மலைமகள் ஆகிய மூன்று தேவிகளும், கரிகாலனின் செவிலிகளாகவே திகழ்கின்றனர்!" -- இரும்பிடர்த் தலையார் கூறினார்.

சரியாக, பணியாள் செங்கோடன் உள்ளே வந்தான்.

"மன்னவா! கவிஞர் ருத்ராக்ஷர் [4] வந்திருக்கிறார்!" –

"அவரை அழைத்து வா!" – இரும்பிடர்த் தலையார் கூற இளந்திரையன் அகன்றான். கவலை தோய்ந்த முகத்துடனும், கலங்கிய கண்களுமாய் உள்ளே வந்த ருத்ராக்ஷரை திகைப்புடன் பார்த்தனர், இரும்பிடர்த் தலையாரும், நாய்ச்சியும்.

"புலவரே! முகத்தில் ஏன் இந்த கவலை? தங்கள் மனதை வருத்தும் நிகழ்வு யாது?" - நாய்ச்சிதான் கேட்டாள்.

பரசலூர் அக்கிரகாரத்தில் அந்தணப் பெண்ணாக இவளை மாற்றி இவளை எதிரிகளிடம் இருந்து காப்பாற்றியது, புலவர் பெருமான்தானே. பாலகன் கரிகாலனை கிருஷ்ண பாதன் என்கிற அந்தணச் சிறுவனாக வேடமிட்டு முக்கூடல் கடிகைக்கு அழைத்து சென்று கல்வியை போதிக்கச் செய்தது அவர்தானே. இனி அவரது நலத்தை இவர்கள்தானே பேண வேண்டும்.

ருத்ராக்ஷர் கரிகாலனையே சற்று நேரம் உறுத்துப் பார்த்தார். பின்பு இரும்பிடர்த் தலையாரை நோக்கினார்.

"திருலோச்சன பல்லவன் மரணப்படுக்கையில் கிடக்கிறான். அவனது மகன் உதயகுமாரனை தொண்டைமான் இளந்திரையனாக பல்லவ அரியணையில் அமர்த்த தலைமை அமைச்சர். கோலவிக்கிரமரும், ராஜகுரு பரத்வாஜ சதகரணியும் முடிவு செய்து விட்டனர்!" - ருத்ராக்ஷர் கூறினார்.

"எனது தம்பி அரியணை ஏறப் போகின்றானா? அம்மா! நான் உடனே எனது தம்பியை சந்தித்து வாழ்த்து தெரிவிக்க வேண்டும்!" - கரிகாலன் களிப்புடன் அன்னையை நோக்கினான்.

https://telegram.me/aedahamlibrary

“ஆம் சகோதரரே! நானும் எனது தங்கை அணிமா கோதையை பார்த்து நாளாகிவிட்டது. மேலும் கரிகாலன் அரியணை ஏறியதும், அத்திமலைத் தேவனுக்கு பூசனைகள் செய்வதாக நேர்ந்திருக்கிறேன். நாம் அனைவரும் ஒத்தாடைக்குச் செல்வோமா?” - நாய்ச்சி கேட்க, இரும்பிடர்த் தலையார் அவளுக்கு பதில் கூறாமல் தொடர்ந்து ருத்ராக்ஷரின் முகத்தையே நோக்கிக் கொண்டிருந்தார். புலவரின் கவலை தோய்ந்த முகத்திற்கு காரணத்தை முதலில் அறிய வேண்டுமே என்கிற பதற்றம் அவரிடம் காணப்பட்டது.

“இரும்பிடர்த் தலையாரே! நான் மேற்கொண்ட அத்தனை பாதுகாப்பு நடவடிக்கைகளும் அனர்த்தமாகி விட்டன. இளந்திரையனை வளர்க்கும் பொறுப்புகளை தனது ரகஸ்யாதிக்ருதன் பரமேஸ்வரனின் வசம் ஒப்படைத்துவிட்டார், கோலவிக்கிரமர். அணிமா கோதை வசம் அவளது மகனை ஒப்படைத்தால், அவர் தனது தமக்கையின் சொல்படி கேட்டு நடப்பாள். பல்லவ தேசத்தின் கட்டுப்பாடு சோழ நாட்டில் இருக்கும் என்று கருதி, இங்ஙனம் செய்திருக்கின்றனர். அந்த பரமேஸ்வரன் ஒரு நச்சுப் பாம்பு. சோழர்களையும், கரிகாலனையும் பரம வைரிகளாகக் கருதுபவன். இந்த பரமேஸ்வரன் வேறு யாருமல்ல. நமது இளஞ்சேட் சென்னிக்கு துரோகம் விளைவித்த அவனது சிற்றப்பன் மகன் ஆத்திவளவனின் மகளை மணம் புரிந்து கொண்டு இருப்பவன். அவன் வசம் நமது இளந்திரையன் இருப்பது சோழத்திற்கும், பல்லவத்திற்கும் உள்ள நல்லுறவை பாதிக்கும் என்று கவலைப்படுகிறேன்!”

புலவர் கூறியதும், இரும்பிடர்த் தலையாரின் முகம் இருளடைந்தது. அண்ணன் கரிகாலனையும், தம்பி இளந்திரையனையும் இணைத்து பலம் கொண்ட ஒரு அணியை உருவாக்க வேண்டும் என்று திட்டம் தீட்டி, புலவர் ருத்ராக்ஷரை அவ்வப்போது ஒத்தாடைக்கு அனுப்பி, அணிமாகோதைக்கு ஆலோசனைகளை வழங்கிக் கொண்டிருந்தார். இப்போது நிலைமை மாறிக் கொண்டிருக்கிறது என்கிறாரே புலவர்.

தங்கை நாய்ச்சியை நோக்கினார், இரும்பிடரார். "நாய்ச்சி! நீ அவசியம் ஒத்தாடை அரண்மனைக்குச் செல்ல வேண்டும். நீயும் கரிகாலனும், இளந்திரையனுடன் பேசி, அவனை மீண்டும் அணிமாகோதையின் வசம் ஒப்படைக்க வேண்டும். நான் அங்கே சென்றால், எனது விஜயம் அரசியலாக்கப்படும். நீ அத்திமலையான் ஆலயத்தில் பூசனைகளைச் செய்யச் சென்றால் கேள்விகள் எழாது.” -- இரும்பிடரார் கூறினார்.

“நல்ல யோசனை! எவ்வளவு விரைவாக இளந்திரையனை பரமேஸ்வரனின் வசமிருந்து மீட்கின்றோமோ, அவ்வளவு நன்மைகள்

https://telegram.me/aedahamlibrary

அவனுக்கு உண்டாகும்!” ருத்ராக்ஷர் கூறினார்.

ஆனால் –

பரமேஸ்வரனின் முழுக்கட்டுப்பாட்டினில் ஏற்கனவே வந்துவிட்டிருந்தான், இளந்திரையன்.

"கரிகாலனிடம் நாம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும், இளவரசே! பாண்டியர், சேரர்களை வென்று அரியணை ஏறியிருக்கும் அவன் வடபுலம் பக்கம் தனது பார்வையைச் செலுத்துவான். நாம் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும்!” -- பரமேஸ்வரன் விஷவிதையை இளந்திரையனின் மனதில் விதைத்தான்.

"கரிகாலன் எனது பெரியம்மாவின் மகன். எனக்கு எதிராக படைத்திரட்டுவானா...?” -- சந்தேகத்துடன் வினவினான், இளந்திரையன்.

“நீங்கள் சகோதரராக இருக்கலாம். ஆனால் பல்லவ அரியணைக்கும் உரியவர் தாங்கள். அதை மனதில் கொள்ளுங்கள். தங்கள் மீது உள்ள பாசத்தைவிட, உங்கள் அரியணையின் மீது கரிகாலன் அதிக பாசம் கொண்டிருக்கலாம் அல்லவா?”

பரமேஸ்வரனின் தூண்டிலில் சிக்கியது பல்லவ மீன்.

“ஆம்! நீங்கள் கூறுவதும் சரிதான். விழிப்புணர்வுடன் இருப்பதில் தவறில்லைதான். ஆனால் நான் முக்கண்ணன். எனது நெற்றியில் கண் உள்ளது. ஒத்தாடை ஈஸ்வரனின் அருளால் பிறந்தவன். ஏன்? என்னையே ஒத்தாடையானின் அவதாரம் என்றே கூறுகிறார்கள். எனக்கு எதிராக நிற்பவர்களை எனது நெற்றிக்கண்ணால் எரிப்பேன்.” - பாலகன் இளந்திரையன் எக்காளத்துடன் கூவினான்.

தனது விஷ மருந்து வேலை செய்யத் துவங்கிவிட்டதை கண்ட பரமேஸ்வரன் முழு திருப்தியுடன் இளந்திரையனின் கையைப் பிடித்தான்.

“வாருங்கள் இளவரசே! மற்போர் பயிற்சிக்கு செல்வோம்!” என்றவன் சடாரென்று ஏதோ நினைவுக்கு வந்தது போன்று, இளந்திரையனின் முன்பாக மண்டியிட்டு, அவனது செவிகளில் கிசுகிசுத்தான்.

“இளவரசே! உங்கள் தந்தை மரணப் படுக்கையில் கிடக்கிறார். நீங்கள் அரியணை ஏறும் பருவம் இன்னும் வரவில்லை. இந்தத் தருணத்தில்

https://telegram.me/aedahamlibrary

நமது நாட்டில் குழப்பத்தை உண்டு செய்து, நம்மை கரிகாலன் வீழ்த்தக் கூடும். கரிகாலன் குமாரன்தான் என்றாலும், அவனுக்கு பக்கபலமாக இருப்பவர் உங்கள் மாமன் இரும்பிடர்த் தலையார். அவருக்கு தேவையான ஒரு பொக்கிஷம் நமது நாட்டில் உள்ளது. அந்த பொக்கிஷத்தை சோழ நாட்டிற்கு எடுத்துச் செல்ல அவர் ரகசியமாக திட்டம் தீட்டி வருகிறார். அந்த பொக்கிஷத்தை இழக்காமல் காவல் காக்க வேண்டும்!" - பரமேஸ்வரன் கூறினான்.

"அது என்ன பொக்கிஷம்?" - வியப்புடன் கேட்டான் இளந்திரையன்.

"வேறு என்ன? உலக ராஜ்யங்களை நம் வசப்படுத்தும் அத்திமலைத் தேவனின் சிலைதான் அந்த பொக்கிஷம். வையத்திலே தற்போது நம்மிடம் மட்டுமே தேவ உடும்பர மரத்தினால் செய்யப்பட்ட மூர்த்தம் உள்ளது. அந்தச் சிலையை வைத்திருப்பவர்களை எதிரிகளால் ஜெயிக்க முடியாது. வளங்களை அள்ளித்தரும் தெய்வம் அத்திமலைத்தேவன். எனவேதான், இரும்பிடர்த்தலையார் அதனை அடையத் துடிக்கிறார். கரிகாலனை உலகச் சக்கரவர்த்தியாகத் திகழச் செய்ய வேண்டும் என்கிற வெறி அவருக்கு!"

பரமேஸ்வரன் மூளைச்சலவை செய்து இளந்திரையன் மனதில் அவனது அண்ணன் கரிகாலன் மீதும் மாமன் இரும்பிடர்த்தலையார் மீதும் வன்மத்தை வளர்த்தான்.

"அத்திமலையானை நெருங்கினால், கரிகாலனையும், இரும்பிடராரையும் எனது நெற்றிக்கண்ணால் எரித்துக் கொல்வேன்!" சபதம் செய்தான், இளந்திரையன்.

மற்போர் பயிற்சி முடிந்து இளந்திரையனை அரண்மனையில் மீண்டும் கொண்டுவிடுவதற்காக இரதத்தினில் சென்றான். ராஜ வீதி வழியாகச் சென்று, ஒத்தாடை அரண்மனைக்குள் இரதம் நுழைந்த போது, சரியாக புரவி ஒன்றில் சோழ நாட்டுத் தூதுவன் ஒருவன் எதிர்ப்பட்டான். கோலவிக்கிரமரிடம் தூதுவர் செல்ல, பரமேஸ்வரன் அரண்மனைக்குச் செல்லாமல், ஒத்தாடையான் ஆலயத்தின் மறுபுறத்தில் இருந்த கோலவிக்கிரமரின் மாளிகையை நோக்கிச் சென்றான்.

ஓலையைப் படித்து முடித்த கோலவிக்கிரமர், யோசனையுடன் விட்டத்தை நோக்க, சரியாக உள்ளே நுழைந்தனர், பரமேஸ்வரனும், இளந்திரையனும்.

இளவரசனைக் கண்ட கோலவிக்கிரமர் அவசரமாக எழுந்தார்.

https://telegram.me/aedahamlibrary

"அத்திமலையானை தரிசிக்கவும், தனது சிற்றன்னையை காணவும், சோழ மன்னர் கரிகாலனும், அவரது தாயார் அரசியார் நறுங்குழல் நாய்ச்சியாரும் வரும் ஏகாதசி அன்று ஒத்தாடை வர இருக்கிறார்கள்!" - கோலவிக்கிரமரின் குரல் உணர்ச்சியின்றி ஒலித்தது.

இளவரசே! நான் கூறியது உண்மையாகிப் போனது பார்த்தீர்களா?' என்பது போன்று பரமேஸ்வரன் இளந்திரையனை நோக்க, அவன் யோசனையுடன் தனது நெற்றியில் இருந்த மூன்றாவது கண்ணாகத் திகழ்ந்த வடுவினைத் தனது சுட்டு விரலால் வருடிக் கொண்டான்.

[1] கி.மு. 281-இல் பிறந்த சங்கமித்தா, கி.மு. 250-இல் இலங்கையில் கால்களை பதித்தாள். அங்கேயே கி.மு. 202-இல் மரணம் அடைந்தாள். தீபவம்சம் என்கிற நூலில், அவளுடன் பதினோரு பிக்குணிகள் இலங்கையில் வந்து இறங்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சங்கமித்தாவுடன் பயணித்த பிக்குணிகள் உத்திரா, ஹேமா, பசபாலா, தசிகா, பெகு, பபதா, மத்தா, மலா, தர்மதசி ஆகியோர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பதினோரு பிக்குணிகள் என்று குறிப்பிடப்பட்டாலும், இலங்கைக்கு சென்றவர்களில் ஒன்பது பெயர்களே தீபவம்சத்தில் காணப்படுகின்றன. புத்த மந்தாவுக்கு ஓலை எடுத்துச் சென்ற பத்ராவும், விஷ்வாங்கன்னும் மரணமுற்றனர். தேவசேனன் வீரகொசுவனால் கொல்லப்பட்டான். ஆக, பதினோரு பிக்குணிகள் என்பது சங்கமித்தாவையும், பத்ராவையும் சேர்த்து சொல்லியிருப்பார்கள்.

A legend mentioned related to the journey of Sangamitta to SriLanka is that Nagas encircled the Bodhi tree. Sangamitta drove them away by assuming the form of Garuda (half-man half-bird form).[8] Sanghamitta was 32 years of age when she took this journey. Her son Samanera was already in Sri Lanka as he had joined his uncle Mahindra's mission to spread Buddhism.[2][4] Sangamitta performed the formal Pabbajja ordination of Princess Anula. Anula was the first Sri Lankan woman to be ordained as a bhikkuni.

[2] மாவிலக்கை மரக்காணத்திற்கு அருகில் இருந்த துறைமுகம்

[3] பல்லவ இளந்திரையன் என்கிற தொண்டைமான் இளந்திரையனுக்கு நெற்றியில் மூன்றாவது கண்ணைப் போன்ற வடு உண்டு. அவன் தன்னை முக்கண்ணன் என்றே அழைத்துக் கொண்டான். இந்த மூன்றாவது கண் உள்ளதால் தான் மிகவும் சக்தி கொண்டவன் என்கிற செருக்கினை கொண்டு கரிகாலனோடு மோதினான்.

https://telegram.me/aedahamlibrary

[4] ருத்ராக்ஷர் என்று தேவநாகரியிலும் உருத்திரங்கண்ணனார் என்று தமிழிலும் அழைக்கப்பட்ட இவர் பெரும்பாணாற்றுப் படை மற்றும் பட்டினப்பாலையையும் பாடியவர். கடியலூராரைச் சேர்ந்தவர் என்று கூறப்பட்டவர். இக்கடியலூர் எங்கு உள்ளது என்று இதுவரை அறியப்படவில்லை. தொண்டைமான் இளந்திரையன் மற்றும் கரிகாலன் சமகாலத்தவர் என்பதாலும், இருவருக்குமே ஆலோசனைகள் கூறி வந்ததாலும், இவர் அப்போது மிகவும் புகழ் பெற்றிருந்த காஞ்சி முக்கூடல் கடிகையில் வசித்திருக்கக் கூடும். உருத்திரங்கண்ணனார் என்பது ருத்திரனின் மூன்றாவது கண்ணைக் குறிக்கும் என்றும் கொள்ளலாம். தொல்காப்பியத்தில் “ஊரும் பெயரும் உடைதொழிற் கருவியும் யாரும் சார்த்தி அவையவை பெறுமே” (மர-74) என்னும் நூற்பாவிற்கு உறையூர் ஏணிச்சேரி முடமோசி பெருங்குன்றூர் பெருங்கவுசிகன் கடியலூர் உருத்திரங் கண்ணனார் அந்தணர் மரபினன் என்று கூறுகிறார். காஞ்சி திருவெக்கா பெருமாளைப் பற்றி பெரும்பாணாற்றுப் படையில் பாடியுள்ளார்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 5. முக்கண்ணனும், கரிகாலனும்

திருலோச்சன பல்லவன் மஞ்சத்தினில் படுத்தபடியே தான் மன்னனாக ராஜ்ய பரிபாலனம் செய்து கொண்டிருந்தான். சுலோச்சனா அவனருகே அமர்ந்து அவனுக்கு பணிவிடைகளைச் செய்து கொண்டிருந்தாள். கோலவிக்கிரமர் மன்னனைச் சந்தித்து அன்றாடம் நாட்டு நடப்புகளைப் பற்றி விவரித்து வந்தார். தனது தமக்கை நறுங்குழல் நாய்ச்சி ஒத்தாடை வரவிருப்பதாக கோலவிக்கிரமர் கூறியதும் சுலோச்சனா அகமகிழ்ந்தாள் அவளது மனநிலைக்கு ஆறுதல் மொழிகளைக் கூறுவதற்குக் கூட மனிதரில்லை. இந்நிலையில் மகன் இளந்திரையன் என்கிற உதயசாகரனை கவனிப்பதற்கும் அவகாசம் இல்லாமல், கணவனுக்கு பணி விடைகளைச் செய்து கொண்டிருந்தாள். தமக்கை அருகில் இருந்தால், இளந்திரையனை அவள் வசம் ஒப்புவிக்கலாம். பரமேஸ்வரன் இளஞ்சேட் சென்னியின் மீதும், அவனது மகன் கரிகாலனின் மீதும் வன்மம் கொண்டிருந்தான். அந்த வன்மத்தை இளந்திரையனின் மனதினுள் விஷ வித்தாக விதைத்திருந்தான்.

ஒரு நாள் இளந்திரையன் உறங்கிவிட்டானா என்பதை காண்பதற்காக அவன் நித்திரை செய்துகொண்டிருந்த அறையினுள் நுழைந்தாள், சுலோச்சனா. அவன் ஆழ்ந்த நித்திரையில் இருந்தான். கணவனுக்குப் பணிவிடை செய்யவே காலம் போதவில்லை என்கிற போது, மகனை எங்கே கவனிப்பது என்கிற ஆதங்கத்தினை அனல் பெருமூச்சாக வெளியிட்ட சுலோச்சனா, குனிந்து அவனது நெற்றியில் ஒரு முத்தத்தை பதித்துவிட்டு அவன் மஞ்சத்தைவிட்டு நீங்கி இரண்டடிகளே நடந்திருப்பாள்.

அப்போது ---

திடீரென்று இளந்திரையனின் கணீரென்ற குரல் கேட்டது. திடுக்கிட்டு திரும்பி நோக்கினாள்.

"முக்கண்ணன் ஈசனாகிய நான் ஈரேழு லோகங்களையும் எனது குடையின் கீழ் கொண்டு வருவேன். ஒத்தாடையான் ஈசனே திருலோச்சனனின் மகனாக, முக்கண்ணன் தொண்டைமான் இளந்திரையனாக அவதரித்திருக்கிறேன். என்னை எவராலும் வெல்ல முடியாது. சேர, சோழ பாண்டியர்களாகிய மூவருமே இந்த பல்லவனின் சக்தியை உணர்ந்து என்னைப் பணியவேண்டும். குறிப்பாக, வளங்களை வாரித் தரும் தேவர்களுக்கெல்லாம் அரசன், ராஜ்யதேவன்

https://telegram.me/aedahamlibrary

அத்திமலையானை அபகரிக்க சூழ்ச்சி செய்யும் கரிகாலனை ஒழிப்பேன். அவனது உயிரை நீக்கியாவது, அத்திமலையானை காப்பேன்!” என்று உறக்கத்தின் ஊடே, இளந்திரையன் பிதற்றிக்கொண்டிருக்க, உறைந்து போனாள், சுலோச்சனா.

உறங்கும் போதே இவ்வளவு வன்மமா? கரிகாலனுக்கு எதிராக விஷ ஊசியினை இளந்திரையனது குருதியில் அன்றாடம் செலுத்தி வந்ததன் வினை என்பதை புரிந்து கொண்டாள், சுலோச்சனா.

திருலோச்சனன் மஞ்சத்தைவிட்டு நகர முடியாத நிலையில் கிடக்க, இவள் யாரிடம் உதவி கோருவாள்? தலைமை அமைச்சர் கோலவிக்கிரமரும், இவளுக்கு அனுசரணையாகப் பேசுவது போல் பேசிக்கொண்டு, மறைவில் பரமேஸ்வரனுக்கு ஆசி வழங்கிக்கொண்டிருப்பதாக அறிந்திருந்தாள். ராஜகுரு பரத்வாஜ சதகரணியும், ஜோதிட ரீதியாக நாட்டில் குழப்பங்கள் விளையும் என்று அச்சுறுத்திக் கொண்டிருக்கிறாரே தவிர, பிரச்னைகளை தீர்க்க உபாயம் ஒன்றையும் கூறமாட்டேன் என்கிறார். கணவன் திருலோச்சனனின் மரணம் எந்த தருணத்திலும் சம்பவிக்கும் என்பதை இவளே உணர்ந்திருந்தாள். அதுகுறித்து கணிக்க, ராஜகுருவின் ஜோசியம் தேவை இல்லை. ஆனால் மகன் இளந்திரையனின் எதிர்காலம் குறித்து அவர் கணித்ததுதான் இவளுக்கு கவலையைத் தந்தது. தன்னை ஈசனாக எண்ணி இறுமாந்திருக்கும் இளந்திரையன், கரிகாலனோடு போர் புரிவான், என்று அவர் கூறிய போது இவளுக்கு நகைக்கவே தோன்றியது.

"அண்ணனுக்கு எதிராக தம்பி போர் புரிவானா? உங்கள் நவக்கிரகங்களுக்கு சற்றே ஓய்வு கொடுங்கள். தொடர்ந்து பணியாற்றுவதால் அவர்களின் சித்தம் கலங்கிவிட்டது போலும்!” என்று சற்றே காட்டத்துடன் பதில் தந்திருந்தாள். ஆனால் இங்கே நடப்பது என்ன?

கரிகாலனின் மீது இவ்வளவு வன்மத்தினை கொண்டிருக்கிறானா, இளந்திரையன்? ஐயோ! இதனால் எவ்வளவு அனர்த்தங்கள் உண்டாகப் போகின்றதோ? பாவம் கரிகாலன்! பிறப்பதற்கு முன்பே தந்தையைப் பறிகொடுத்துவிட்டிருந்தான். கர்ப்பத்தில் அவனை சுமந்த போதே, பல அவச்சொற்களுக்கு இலக்காகியிருந்தாள், நறுங்குழல் நாய்ச்சி. இளஞ்சேட்சென்னியின் சிற்றப்பனின் மகன் ஆத்திவளவன் அவளைப் பற்றி பரவச் செய்த அவதூறுகளை மனதிலும், கர்ப்பத்தில் கரிகாலனையும் சுமந்கொண்டு, உடலாலும், மனதாலும் எவ்வளவு

https://telegram.me/aedahamlibrary

வேதனைகளை அனுபவித்திருந்தாள்?

வேளிர் நாங்கூர் இளவரசிகளாக நாய்ச்சியும், அணிமாவும் இணைபிரியாமல் தான் இருந்தனர். இளஞ்சேட் சென்னி வேட்டையாடியபடி வர, அவனது பார்வையில் சிக்கினாள், நறுங்குழல் நாய்ச்சி. கண்டதும் காதல் மலர்ந்தது. தனது காதலை ஏற்றுக்கொள்ளும்படி நாய்ச்சி வேண்டிய போது, தனக்கு எதிரிகள் அதிகம் என்பதாக இளஞ்சேட்சென்னி கூறியதாக நாய்ச்சி வந்து கூறினாள். எதிரிகள் அதிகமாக உள்ளவனையே தான் மணக்க விரும்புவதாக தனது சகோதரன் இரும்பிடர்த் தலையரிடம் கூறியிருந்தாள். திருமணமும் நடந்தேறியது. கர்ப்பமுற்றிருந்த தமக்கைக்கு உதவியாக வந்திருந்தாள் அணிமா கோதை. இளஞ்சேட்சென்னி இருங்கோவேள் என்பவனால் கொல்லப்பட்டுவிட, கர்ப்பிணியான நறுங்குழல் நாய்ச்சியைப் பற்றி ஆத்திவளவன் அவதூறுகளை பரப்பிக் கொண்டிருந்தான். தனக்கு ஏற்பட்டிருந்த அவப் பெயர் தனது தங்கையின் வாழ்வினை பாதித்துவிடக் கூடாது என்பதற்காக சகோதரன் மற்றும் ருத்ராக்ஷர் மூலம் அவளை திருலோச்சன பல்லவனுக்கு திருமணம் செய்வித்திருந்தாள். தமக்கையின் சோக வாழ்க்கை மனதின் ஓரத்தில் சுலோச்சனாவை வருத்திக்கொண்டு தான் இருந்தது. மகன் இளந்திரையன் தனது பெரியன்னையுடனும், அண்ணன் கரிகாலனுடனும் நல்லுறவு கொண்டிருப்பான் என்று இவள் எதிர்பார்க்க, நடப்பது என்ன?

அத்திமலையானை கரிகாலன் அபகரிக்க முயன்றால், அவனை கொல்வேன் - உறக்கத்தில் இளந்திரையன் வெளிப்படுத்திய வன்மம், சுலோச்சனாவை திடுக்கிட வைத்தது. ஒத்தாடைக்கு வரும் தமக்கை நாய்ச்சியையும் அவள் மகன் கரிகாலனையும், இளந்திரையனோடு நன்கு பழக வைத்து, அவன் மனதில் பரமேஸ்வரனால் விதைக்கப்பட்ட அந்த கசப்புணர்வை அடியோடு நீக்க வேண்டும் என்று எண்ணியபடி தனது கணவனின் அறையை நோக்கி நடந்தாள்.

***

"எச்சரிக்கை இளவரசே! அவனோ கரிகாலன்! நீரோ முக்கண்ணன். நெற்றியில் உள்ள கண்ணும், கரிகட்டை காலும் எங்ஙனம் சமமாகும்? கண் நோக்கும் திசையில் கால் பாய வேண்டுமே தவிர, கால் செல்லும் திசையில் கண் செல்லக்கூடாது!" - கோலவிக்கிரமர் கூற, பரமேஸ்வரன் தனது பங்குக்கு இளந்திரையனின் செவியில் கிசுகிசுத்தான்.

https://telegram.me/aedahamlibrary

“உங்களை தொண்டை நாட்டு அரியணையில் அமர வைக்க நாங்கள் தயாராகும் நிலையில், எதற்காக கரிகாலனும், அவனது தாயும் அவசரமாக இங்கே வர வேண்டும்? நோய்வாய்ப்பட்டுக் கிடக்கும் அரசரைக் காண பல்வேறு சந்தர்ப்பங்கள் கிட்டியும் வராதவர்கள், இப்போது வருவானேன்?” - பரமேஸ்வரன் கூற, இளந்திரையனின் மனதில் சந்தேகம் பரவியது.

"நான் வேண்டுமென்றால் அவர்களை சந்திக்காமல் இருந்துவிடட்டுமா?” - இளந்திரையன் கேட்க, கோலவிக்கிரமர் வெற்றிப் புன்னகையுடன் பரமேஸ்வரனை நோக்கினார்.

“அது தவறு இளவரசே! கரிகாலன் சோழ நாட்டு மன்னன். உங்களால் அவனைத் தவிர்க்க முடியாது. நிச்சயம் தாங்கள் அவனை சந்திக்க வேண்டும். ஆனால் உங்களது மூன்றாவது கண்ணை நன்கு திறந்து அவனை பஸ்பமாக்கிவிடுங்கள். தாங்களும் மன்னன் ஆகப் போகிறீர்கள். அதனை நினைவினில் கொள்ளுங்கள்!” - பரமேஸ்வரன் கூறினான்.

“அவனது இலக்கு நமது அத்திமலையான் சிலை. அத்திமலையானை வைத்திருப்பவர்களுக்கு தோல்வியே கிடையாது என்று அறிந்திருக்கிறான். நமது முக்கூடல் கடிகையில் நமது ராஜகுருவிடமே கிருஷ்ண பாதன் என்கிற பெயரில் பாடம் பயின்றிருக்கிறான். அத்திமலையானின் அருளால், திக்விஜயம் செய்து உலகையே தனது சோழ குடையின் கீழ் கொண்டு வர வேண்டும் என்றெல்லாம் கருத்துகளை சுவடியில் பதித்திருந்தானாம். இந்நிலையில் தாயும் மகனும் அத்திமலையானுக்கு பூசனைகள் செய்வதற்காக இங்கே வருகிறார்கள் என்று அறிவிக்கப்பட்டிருப்பது எனக்கு கரிகாலனின் மீது சந்தேகமாக இருக்கிறது!” - கோலவிக்கிரமர் கூற, இளந்திரையன் யோசனையுடன் இப்படியும் அப்படியுமாக உலவத் துவங்கினான். அரசனாவதற்கு அடையாளமே அதுதானே! நடந்து கொண்டே யோசித்தால் நல்ல யோசனை உடன் நடக்கும். அமர்ந்து கொண்டே யோசித்தால், சிந்தையும் அமர்ந்துவிடும். கிடந்து கொண்டே யோசித்தால், யோசனை கிடப்பில் போடப்படும். எனவேதான் அரசர்கள் நடைபயின்று கொண்டே யோசிப்பார்கள் போலும்.

"நான் அவனை சந்திக்கிறேன். ஆனால் மிகவும் எச்சரிக்கையாக இருப்பேன்!” இளந்திரையன் கூறினான்.

"உனது மூன்று கண்களால் அவனை எச்சரிக்கையுடன் அளவிடு.

https://telegram.me/aedahamlibrary

எங்களது நான்கு கண்களால் உன்னைச் சுற்றி பாதுகாப்பு வளையத்தை உருவாக்குகிறோம்!" பரமேஸ்வரன் கூறினான்.

ராஜவீதியை மிக ஆடம்பரமாக அலங்கரிக்கச் செய்திருந்தாள், சுலோச்சனா. தமக்கை வருகிறாள் என்கிற குதூகலத்தில் தானே முன்னின்று வரவேற்பு ஏற்பாடுகளைக் கவனித்திருந்தாள். கோலவிக்கிரமரும், பரமேஸ்வரனும் உரிய வரவேற்பு ஏற்பாடுகளைச் செய்வார்களோ, மாட்டார்களோ என்கிற கவலையில், தானே அவற்றினை மேற்பார்வையிட்டிருந்தாள்.

ராஜவீதி எங்கும் நந்திக் கொடிகளும், புலிக் கொடிகளும் படபடத்துக் கொண்டிருந்தன. தென்னை பந்தலில், கமுகு மற்றும் மாவிலை தோரணங்களுடன், அத்தி இலைகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. நறுமண புஷ்ப மாலைகள் ஆங்காங்கே தொங்கவிடப்பட்டிருந்தன.

கவரிகளை ஏந்தியிருந்த யானைகள் இரு பக்கலிலும் நிறுத்தப்பட்டிருந்தன. ஒத்தாடை அரண்மனை வாயிலில், பதவி ஏற்ற பிறகு மன்னனாக வரும் கரிகாலனை துதித்து கவிபாட புலவர்கள் வண்ண தலைப்பாகைகளுடனும், கைகளில் சுவடிகளுடனும் காத்திருந்தனர். அருகே இருந்த மேடையில் சுலோச்சனாவும், இளந்திரையனும் காத்திருந்தனர். இளந்திரையன் மிகவும் ஆடம்பரமாக அலங்கரிக்கப்பட்டிருந்தான். வரப்போகும் கரிகாலனை விட தாங்கள் கம்பீரமாகவும், அழகாகவும் காட்சியளிக்க வேண்டும் என்று கூறி, பரமேஸ்வரன் அவனை படாடோபமாக அலங்கரிக்க ஏற்பாடுகளைச் செய்திருந்தான். சுலோச்சனாவுக்கு தனது மகனின் அலங்காரம் அதீதமாகப் பட்டாலும், அவன் கரிகாலனை வரவேற்க வந்து நின்றதே பெரிய விஷயமாகத் தோன்றியதால், கருத்து ஒன்றும் கூறாமல், மௌனத்தைக் கடைப்பிடித்தாள். கரிகாலன் மீது கொண்டுள்ள வன்மத்தினால் அவனை வரவேற்க இளந்திரையன் வரமாட்டான் என்றே நினைத்திருந்தாள்.

தொலைவில் துந்துபி முழங்கியது. கரிகாலனும், நாய்ச்சியும் வந்து கொண்டு இருந்தனர்.

“அம்மா! கரிகாலன் பிறப்பதற்கு முன்பாகவே அவனது தந்தை இளஞ்சேட்சென்னி இறந்துவிட்டாராமே?” - இளந்திரையன் கேட்க, துணுக்குற்றாள், சுலோச்சனா. யாரோ கற்றுத் தந்த பாடம் என்பதை புரிந்து கொண்ட சுலோச்சனா, மகனை நிதானமாகப் பார்த்தாள்.

“நீ யார், உதயசாகரா?”

https://telegram.me/aedahamlibrary

“முக்கண்ணனின் மகன். ஈசனின் அவதாரம்!” இளந்திரையன் கர்வத்துடன் கூறினான்.

சுலோச்சனா நகைத்தாள். “மகனே! நீ யார் என்று நான் கேட்டவுடன், திருலோச்சன பல்லவரின் மகன் என்று நீ கூறவில்லை. ஈசனின் மகன் என்றே கூறினாய். உனது தகப்பன் மன்னர் பெருமான் என்றுதானே நான் கூறினேன். நீ உன்னை ஈசனின் மகன் என்கிறாயே. உனது பிறப்பின் மீது உனக்கு என்ன அவநம்பிக்கை? தாய் என்பது நம்பிக்கை. தகப்பன் யார் என்பதை தாய் உரைப்பதால் மட்டுமே சேய் தந்தையை நம்புகிறது. நான்கு வருடங்களாக பிள்ளை இல்லாத எங்களுக்கு பிறந்த உன்னை, ஈசனின் மகன் என்கிறாய். அப்படி இருக்க, கரிகாலனின் பிறப்பை ஏன் கொச்சைப்படுத்துகிறாய்? இது யார் போதித்த பாடம் என்று எனக்கு தெரியும். நீ எப்படி தெய்வக் குழந்தை என்று நம்புகிறாயோ, எனது மூத்த மகன் கரிகாலனும் தெய்வக் குழந்தைதான். உன்னை சுமப்பதற்கு முன்பாகவே இந்த இரு கைகளும் அவனை ஏந்தி சுமந்துள்ளன. தவறு மகனே! உனது பெரியன்னையைப் பற்றி இன்னொரு முறை அவதூறு பேசாதே!” காட்டத்துடன் கூறினாலும், பனித்து விட்டிருந்த தனது கண்களைச் சேலை முந்தானையால் துடைத்துக் கொண்டாள், சுலோச்சனா.

நாய்ச்சியையும், கரிகாலனையும் சுமந்து கொண்டு வந்த இரதம் இவர்கள் நின்ற மேடையின் அருகே வந்து நிற்க, இருவரும், நிதானமாக நடந்து வந்து மேடையில் ஏறினர். தமக்கையும், தங்கையும் பாய்ந்து வந்து ஒருவரையொருவர் அணைத்துக் கொண்டனர். அவர்கள் பாசப்பரிமாற்றத்தை நெகிழ்ச்சியுடன் பார்த்தபடி நின்ற கரிகாலன், பிறகு தனது பார்வையை இளந்திரையனின் பக்கமாகத் திருப்பினான்.

“தம்பி!” - வாஞ்சையுடன் நான்கடி எடுத்துவைத்து இருகைகளை விரித்தபடி நெருங்கி வந்தான், கரிகாலன். அவன் தன்னை அணைத்துக் கொள்வதை தவிர்க்கும் விதமாக, அவனது இருகைகளையும் தனது கைகளால் பற்றிக் கொண்ட இளந்திரையன், "நலமாக உள்ளீரா, சோழ மன்னரே?” என்றான்.

“இதென்ன, இளந்திரையா? சோழ மன்னரே... என்று ராஜாங்க ரீதியாக பேசுகிறாய். முதன்முதலில் உன்னைக் காண வந்துள்ளோம். இரத்தம் அல்லவா பேச வேண்டும். வாய் நிறைய அண்ணா என்றல்லவா அழைக்க வேண்டும்.” நாய்ச்சி அவனைக் கடிந்து கொண்டாள்.

“பெரியம்மா! என்ன இருந்தாலும், அண்ணன் மாபெரும் மன்னன்.

https://telegram.me/aedahamlibrary

அதுவும் சாதாரண மன்னனா? போரிட்டு தனது உரிமைகளை நிலைநாட்டிக் கொண்டு இருக்கும் மாவீர மன்னன். அவனை நான் உரிய மரியாதையுடன் அழைப்பது தானே முறை?” இளந்திரையன் கேட்டான்.

“எனக்கு பாதுகாப்பு அளித்தது உனது தந்தையும் தாயும். நான் பதுங்கி இருந்தது உனது நாட்டு முக்கூடல் கடிகை. எனவே என்னை அண்ணா என்று நீ அழைப்பதுதான் முறை!” என்றபடி இளந்திரையனின் தயக்கத்தினைப் பொருட்படுத்தாமல், அவனை இறுக அணைத்துக் கொண்டான், கரிகாலன். தொலைவில் நின்று தன்னையே உறுத்துப் பார்த்துக்கொண்டிருந்த கோலவிக்கிரமரையும், பரமேஸ்வரனையும், நான் என்ன செய்வது என்பது போல பார்த்தான்.

“தம்பி! நான் தங்கப் போகும் மூன்று நாட்களிலும், நீ என்னைவிட்டுப் பிரியவே கூடாது!” என்றபடி தனது அணைப்பினை இன்னும் இறுக்கினான். தொலைவில் நின்ற பரமேஸ்வரனையும், அவனது மனையாள் பொன்னுருகுவையும் சாடையாகப் பார்த்தான். தனது தந்தை இளஞ்சேட்சென்னியை இரும்பொறையுடன் கொன்ற அவனது சிற்றப்பன் ஆத்திவளவனின் மகள் அவள் என்பதைப் புரிந்து கொண்டான். 'தந்தையைப் பார்க்க முடியவில்லை. ஆனால் அவனைக் கொன்றவனின் மகளைக் காண முடிந்தது. தனது தந்தைக்கு உணவில் நஞ்சினைக் கலந்து கொடுத்தனர். இப்போது இவன் தம்பிக்கு சிறிது சிறிதாக மனதினில் நஞ்சினைக் கலக்கின்றனர். உங்களது சதியை முறியடிப்பேன்' என்று மனதினுள் சபதம் ஒன்றை செய்தான், கரிகாலன்.

***

பழமுதிர்சோலை என்கிற மாலிருஞ்சோலை மலை [1]

நரசிங்கப் பெருமாள் ஆலயம் மலைமேலும் அந்த மலையின் மீது இன்னும் சற்று உயரத்தில் ஸ்ரீவரத நாராயணப் பெருமாள் ஆலயமும் கம்பீரமாக நிற்க, நாய்ச்சியும், சுலோச்சனா என்கிற அணிமாவும் தத்தம் மகன்களோடு ஆலய தரிசனம் செய்துவிட்டு வெளியே ஆலய நந்தவனத்தில் அமர்ந்து தங்களது இளமைக்கால நினைவுகளில் மூழ்கியிருக்க, கரிகாலனும், இளந்திரையனும் மலையின் உச்சிக்குச் சென்று அங்கிருந்து கிழக்கே தெரிந்த முக்கூடல் கடிகையினையும், மேற்கே தெரிந்த அத்தியூரானின் ஆலய கோபுரத்தையும், வெகு தொலைவில் தென்பட்ட ஒத்தாடை அரண்மனை மடங்களையும், ஒத்தாடையான் ஆலய கோபுரத்தையும் நோட்டம் விட்டுக்

https://telegram.me/aedahamlibrary

கொண்டிருந்தனர். பாலாற்றின் காற்றும், வேகவதியின் காற்றும், மலையின் உச்சியில் வந்து மோதிக் கொள்ள, குமாரர்களுக்கு சுவாசிப்பதே சிரமமாக இருந்தது. ஆனால் தொலைவில் தெரிந்த முக்கூடல் சங்கமம் கண்களுக்கு விருந்தளிக்க, சுவாசிப்பதில் உள்ள சிரமத்தினை ஒரு பொருட்டாகவே அவர்கள் எண்ணவில்லை போலும்.

“எப்படி இருக்கிறது பார்த்தாயா... எங்கள் தொண்டை நாடு? மாலிருஞ்சோலை மலை மற்றும் முக்கூடல் சங்கமத்தை போன்று ஒரு காட்சி சோழ நாட்டில் கிடைக்குமா?” அகம்பாவத்துடன் கரிகாலனை பார்த்தான் இளந்திரையன்.

"கிடையாதுதான். ஆனால் நீ பெருமைப்படும் விஷயம் இதுவாக இருக்கக் கூடாது. காரணம், எங்கள் காவிரிக் கரையில் கூட இதைவிட அருமையான காட்சிகள் கிடைக்கும். காவிரி புகும்பட்டினத்திற்கு வந்து பார். நீயே புரிந்து கொள்வாய். ஆனால் நீ பெருமைப்பட வேண்டிய விஷயம் ஒன்று எங்கள் நாட்டில் இல்லை. அதோ உச்சியில் ஓங்கி உயர்ந்த தீபஸ்தம்பத்துடன் கம்பீரமாக நிற்கிறது பார், உங்களது முக்கூடல் கடிகை. அதை எண்ணித்தான் நீ பெருமைப்பட வேண்டும். சோழ நாடு சோறுடைத்து, பாண்டி நாடு முத்துடைத்து, சேர நாடு தந்தமுடைத்து என்பது போன்று, உங்கள் தொண்டை நாடு சான்றோர் உடைத்து என்று கூறலாம். நான் அந்த முக்கூடல் கடிகையில்தான் பலகாலம் பதுங்கியிருந்தேன் தெரியுமா? அதோ தெரியும் தீபஸ்தம்பத்தின் உச்சியில் பதுங்கியபடி எனது எதிர்காலத் திட்டங்களை தீட்டியிருக்கிறேன். நான் மன்னனாக மீண்டும் பதவியேற்க உதவியதே முக்கூடல் கடிகை, மற்றும் நமது அத்திமலைத் தேவன்தான் தெரியுமா? எனக்கு மட்டும், அனுமனை போன்று சக்தி இருந்தால், அத்திமலைத் தேவனின் ஆலயத்தையும், முக்கூடல் கடிகையையும், எனது சோழ நாட்டிற்கு சுமந்து சென்று, காவிரிக் கரையில் அவற்றை நிறுவுவேன். அத்திமலையான் அருள் இருந்தால் போதும். காந்தாரத்தில் துவங்கி, பாண்டிய தேசம் வரை எனது சோழ குடையின் கீழ் கொணருவேன்!” - மெய்ம்மறந்த நிலையில் கரிகாலன் பேசிக் கொண்டிருக்க, வெலவெலத்துப் போனான், இளந்திரையன்.

அனுமனை போன்று அத்திமலை ஆலயத்தையும், முக்கூடல் கடிகையையும் சுமந்து சென்று காவிரிக் கரையில் வைப்பானாமே? காந்தாரத்தில் துவங்கி பாண்டிய தேசம் வரை தனது குடையின் கீழ் கொண்டு வருவானாமே. அப்படியென்றால், இடையில் இருக்கும் தொண்டையூர் பல்லவத்தையும் கைப்பற்றுவான் என்றுதானே

https://telegram.me/aedahamlibrary

பொருள்?

கோலவிக்கிரமரும், பரமேஸ்வரனும், கூறியது சரியாகப் போனது. இவன் அத்திமலைத் தேவனைக் கைப்பற்ற அலைகிறான்.

“என்ன பேசுகிறோம் என்பதைத் தெரிந்துதான் பேசுகிறாயா அண்ணா? மகத நாட்டு அசோகனின் செல்வங்கள் இங்கே காஞ்சியில் அலைந்து அத்திமலைத் தேவனை கடத்த திட்டம் தீட்டினார்கள் தெரியுமா? கடைசியில் வீரகொசுவனின் வெட்டரிவாளுக்கு அவர்களில் ஒருவன் இரையாக, மற்றவர்கள் தலைதெறிக்க ஓடிய கதையை நீ அறிவாயா? எங்கள் அத்திமலைத் தேவனை நெருங்கவே முடியாது. நீ எங்கே சுமந்து கொண்டு சோழநாடு செல்வது?” வேடிக்கையாகச் சொல்வது போன்று, மறைமுக எச்சரிக்கை ஒன்றை கரிகாலனுக்கு விடுத்தான், இளந்திரையன்.

“எனக்குத் தெரியாத கதையா? உங்கள் வீரகொசுவனால் கொலை செய்யப்பட்ட அந்த மகத ஒற்றன் தேவசேனன் பற்றித்தானே கூறுகிறாய். அவன் கதை முடிக்கப்பட்ட விதம் தெரியுமா?” -- கரிகாலன் கேட்டான்.

"ஆம்! மரத்தில் பதுங்கியிருந்தபடி அத்திமலைத் தேவனை அபகரிக்கத் திட்டம் தீட்டிக் கொண்டிருந்தனர். வீரகொசுவன் பின்பாகவே சென்று கொண்டிருந்த தேவசேனனை ஒரு கட்டத்தில் அவன் பார்த்துவிட அவனது வாளுக்கு தேவசேனன் இரையானான். அவனது உடலில் அத்திமலையானது உக்கிரம் இறங்கி இருக்கும் போது கோவிலினுள் நுழைய எவ்வளவு துணிச்சல் வேண்டும்? நீ உனது வீரத்தினை அத்திமலையானிடம் காட்டாதே! அவனது உக்கிரத்தின் முன்பாக நீ பொசுங்கிப் போவாய்.” இளந்திரையன் முகம் சிவக்கக் கூறினான்.

“நான் அத்திமலைத் தேவனின் பக்தன். அவனது மகன். அவன் கரிவரதன். நான் கரிகாலன். தீயில் சிக்கிய நான் கருகவில்லை. காரணம் தீயிலிருந்து வெளிவந்த அத்திமலைத் தேவன் என்னைக் காப்பாற்றினான். அவன் என்னை ஒன்றும் செய்யமாட்டான். அவன் என்னைக் காப்பாற்றியதற்குப் பிரதிபலனாகத்தான் நான் அவனைக் காப்பாற்றினேன்." கரிகாலன் கூறினான்.

“உலகையே ரட்சிக்கும் அத்திமலைத் தேவனை நீ காப்பாற்றினாயா? இது என்ன கட்டுக்கதை?” - சிரிக்கத் துவங்கினான், இளந்திரையன்.

“ஆம்! தேவசேனன் எப்படி இறந்தான் என்பதை முதலில் உனது

https://telegram.me/aedahamlibrary

தலைமையமைச்சரிடம் கேள்... பிறகு உனக்கே நான் சொல்வது உண்மை என்பது புரியும்!" கரிகாலன் கூற, அவர்கள் மேலே பேச முடியாமல், இருவரது தாய்மாரும் அங்கே வர, அனைவரும் ஒத்தாடை அரண்மனைக்குப் புறப்பட்டனர்.

அரண்மனைக்குச் சென்றதுமே, கரிகாலனும், நாய்ச்சியும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஜாகைக்குச் செல்ல, காலம் தாமதிக்காமல், இளந்திரையன் ஒத்தாடை ஆலயத்தின் மறுபுறம் இருந்த தலைமை அமைச்சர் கோலவிக்கிரமரின் மாளிகைக்குச் சென்றான்.

"தமையனுடன் பழமுதிர்சோலை சென்றீரே, இளவரசே! எப்படி இருந்தது அனுபவம்? ஆலய தரிசனம் நிகழ்ந்ததா?" கோலவிக்கிரமர் கேட்டார்.

"அதெல்லாம் இருக்கட்டும். சில ஆண்டுகளுக்கு முன்பாக, நமது அத்தியூரான் ஆலயத்தில், வீரகொசுவனால் கொல்லப்பட்டானே, தேவசேனன்... அவனது இறப்பு எப்படி நிகழ்ந்தது?" இளந்திரையன் கேட்க, திகைத்தார், தலைமை அமைச்சர்.

"வீரகொசுவன் அவனை வெட்டிக் கொன்றது ஊருக்கே தெரியுமே!" விக்கிரமர் கூறினார்.

"இல்லை! தாங்கள் எதையோ மறைக்கிறீர்கள். தேவசேனன் இறந்தது உண்மை. ஆனால் வீரகொசுவன் கொல்லவில்லை. தனக்கு ஒன்றுமே தெரியாது என்று தான் அவன் கூறியிருந்தான். இல்லையா?" இளந்திரையன் கேட்டான்.

"இல்லை இளவரசே! தாங்கள் இன்னும் பாலக பிராயத்தைக் கடக்கவில்லை. அந்த சம்பவங்கள் குறித்து தாங்கள் அறியாமல் இருப்பதே நல்லது என்று நினைக்கிறேன். தங்களது தந்தையின் உத்தரவு, அந்த சம்பவத்தினை மூடி மறைக்க வேண்டும் என்பது." - கோலவிக்கிரமர் கூறினார்.

"இருக்கலாம். ஆனால் இப்போது நான் மன்னன் ஆகும் நிலையில் உள்ளேன். எனது மகுடாபிஷேகத்திற்கு தாங்களே ஏற்பாடுகளைச் செய்து வருகிறீர். ஆகவே, நடந்தது என்ன என்பதைக் கூறுங்கள்!" - இளந்திரையன் என்கிற உதயசாகரனின் குரலில் உறுதி தென்பட்டது.

கோலவிக்கிரமர், பார்வையை அருகிலிருந்த ஒத்தாடையான் ஆலயத்தை நோக்கித் திருப்பினார். "இளவரசே! வீரகொசுவன் உள்ளே அத்தியூரான்

https://telegram.me/aedahamlibrary

ஆவிர்பவித்திருந்தான். எனவே அவனுக்கு ஒன்றும் நினைவில் இல்லை. அவன் தான் தேவசேனனைக் கொன்றிருக்க வேண்டும். ஆலயத்தில் வேறு யாரும் இல்லை!” தலைமையமைச்சர் கூறினார்.

“அதை எப்படிக் கூறுகிறீர்கள்? அவனது வாளினில் குருதிக்கறை இருந்ததா?”

இளந்திரையன் கேட்க, திகைத்தார் கோலவிக்கிரமர். இளந்திரையனை அரசனாக்கி கைப்பாவையாக ஆட்டி வைக்க இவர் திட்டம் தீட்டியிருக்க, இவரையே கேள்வி கேட்டு அசர வைக்கின்றானே. திருலோச்சன பல்லவனுக்கும் இவருக்கும் மட்டுமே தெரிந்த இரகசியத்தைப் பற்றி கேட்கிறானே.

உண்மையில் வீரகொசுவன் தான் தேவசேனனைக் கொன்றான் என்பதற்கு ஆதாரம் எதுவும் கிட்டவில்லை. வீரகொசுவனின் வாளிலும் இரத்தக்கறை படிந்திருக்கவில்லை. தேவசேனனின் உடை, வாளிலும் குருதிக்கறை படிந்திருக்கவில்லை. கொல்லப்பட்ட தேவசேனன், அசோகன் அனுப்பி இருந்த குழாமைச் சேர்ந்தவன் என்பது மட்டுமே தெரிந்திருந்தது. ஆலயப் பணிகளுக்கு தொய்வு ஏற்படாத வண்ணம், சம்பவத்தை மறைத்து விட்டிருந்தனர். இப்போது இளவரசர் ஏன் அதனைப் பற்றி கிளறுகின்றார்?

"இல்லை இளவரசே! வீரகொசுவன் ஏந்தியிருந்த வெட்டரிவாளினில் இரத்தக்கறை இல்லை. தேவசேனனது உடைவாளிலும் குருதி படிந்திருக்கவில்லை!” - மெல்லிய குரலில் கூறினார், கோலவிக்கிரமர்.

“என்றால்... வேறு யாராவது அவனை வெட்டி வீழ்த்தி இருக்கலாம் அல்லவா?” - இளவரசன் கேட்க, மிடறு விழுங்கினார், தலைமை அமைச்சர்.

“இருக்கலாம். ஆனால் ஆலயத்தில் அவர்கள் இருவரை தவிர வேறு யாருமே இல்லையே?” விக்கிரமர் சமாளித்தார். -

இளந்திரையன் மௌனம் சாதித்தான். கரிகாலன் இந்த சம்பவத்தினை பற்றி எப்படி அறிந்து கொண்டான்? அன்றைய இரவு ஆலயத்தில் என்னதான் நடந்தது? கரிகாலனிடம் கேட்க வேண்டும்.

மறுநாள் அத்திமலைத் தேவனின் ஆலயத்தில் பூசனை நடந்து கொண்டிருக்க, இளந்திரையனும், கரிகாலனும் மட்டும், ஆலய பிராகாரத்தினை வலம் வந்து கொண்டிருந்தனர்.

https://telegram.me/aedahamlibrary

தெற்கு பிராகாரம் அருகே திரும்பியதும், கரிகாலன் நின்றான்.

"தம்பி! இங்குதான் அந்த சம்பவம் நடந்தது. வீரகொசுவன் ஆவேசத்துடன் இங்கே நடந்து சென்று கொண்டிருந்தான். நான் அதோ அந்த மதிலுக்கும், மரத்துக்கும், இடையே இருந்த பிளவில் நின்று கவனித்துக் கொண்டு இருந்தேன். மூன்று பேர் வீரகொசுவன் பின்பாகவே நடந்து சென்றனர். ஒருவன் தனது உடைவாளினை மதிற்சுவரின் மீது சாய்த்து வைத்துவிட்டு அதனை மறந்து சென்றான். பின்பு அதனை எடுப்பதற்காகத் திரும்பி வந்த போது நான் அவனை வழிமறித்து அவனது தலையை சீவினேன். காரணம், அவன் அத்திமலை ரகசியத்தை அறிய வந்திருந்தான். இதோ இந்த உடைவாளினால்தான் அவன் தலையை சீவினேன். பிறகு, நான் பதுங்கியிருந்த மரத்தின் பின்பாகவே சென்று நின்றேன். அடுத்த சுற்று வந்த வீரகொசுவன் தனது வெட்டரிவாளை வீசி எறிந்துவிட்டு, வெட்டுண்டு கிடந்த தேவசேனனின் தலையை எடுத்துக் கொண்டு சென்றான். இதுதான் நடந்தது." கரிகாலன் விளக்கினான்.

"நீ எப்படி ஆலயத்தினுள் நுழைந்தாய்? வீரகொசுவனின் கண்களில் இருந்து எப்படித் தப்பினாய்?" இளந்திரையன் கேட்டான்.

"இளந்திரையா! உனது நாட்டு இரகசியங்களை உன்னைவிட நான் அதிகம் அறிந்து கொண்டவன். எனவே, அத்திமலையான் உன் வசத்தில் இருப்பதைவிட எனது வசத்தில் இன்னும் பாதுகாப்புடன் இருப்பான். கவலைப்படாதே! வா! சந்நிதிக்கு போகலாம்!" என்றான், கரிகாலன்.

"நீ எப்படி ஆலயத்தினுள் பிரவேசித்தாய், என்று கூறவே இல்லையே?" - இளந்திரையன் விடாப்பிடியாகக் கேட்டான்.

"யாரிடமும் கூறாதே! நாம் சென்ற பழமுதிர்சோலை மலையிலிருந்து அத்தியூர் ஆலயத்திற்கும் முக்கூடல் கடிகைக்கும் சுரங்கப்பாதை ஒன்று உள்ளது. படையெடுப்புகளின் போது ஆலயத்தார்கள் கோயில் செல்வங்களுடன் பதுங்கிக் கொள்ளவும், தப்பிச் செல்வதற்காகவும் அமைக்கப்பட்ட சுரங்கம். கடிகையில் கிருஷ்ண பாதன் என்கிற சிறுவனாக பதுங்கி இருந்த நான், அங்கே பௌத்தர்கள் பகுதியில் நடைபெறும் சதியாலோசனைகளை அறிவதற்கு அந்தச் சுரங்கத்தைத்தான் உபயோகித்தேன். அவர்களது சதியை அறிந்துதான், சுரங்கம் வழியாக வந்து தேவசேனனைக் கொன்றேன்! இந்த விவரம் நம்மோடு இருக்கட்டும்! உனது தலைமை அமைச்சரிடம் கூடச் சொல்லாதே! காரணம், இந்த சுரங்கம் இருப்பது உனக்கு மட்டுமே

https://telegram.me/aedahamlibrary

தெரிந்தால், நாளை உனக்கு அது உபயோகப்படும். உனது எதிரிகளால்

ஆபத்து உண்டாகும் போது நீ சுரங்கத்தின் வழியாக தப்பலாம்..." கரிகாலன் அவனை எச்சரித்தான்.

தன்னைவிட கரிகாலன் பெரும் அறிவாளி, சுத்த வீரன் என்பதனை புரிந்து கொண்டான், இளந்திரையன். தனது தந்தைக்கே தெரியாத இரகசியங்கள் எல்லாம் கரிகாலன் வசம் உள்ளன என்பதை அறிந்து கொண்டதும் பொறாமைத் தீ இன்னும் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. இவன் வெறும் கரிகாலன். நான் முக்கண்ணன். அதனை மறந்து பேசுகிறான், அண்ணன் தான் யார் என்பதை அவன் புரிந்து கொள்ள வேண்டும்.

"அத்திமலையான் இந்த அத்திவனத்தில்தான் என்றும் இருப்பான். அவன் எனக்குரியவன். அவனை நீ எப்படி உரிமை கோரலாம்? திருவரங்கத்தில் உறங்கிக்கொண்டிருக்கும் திருமாலை வைத்திருக்கும் நீ... விழித்திருந்து காவல் புரியும் எனது மாலவனுடன் உரிமை கொண்டாடுகிறாய், கரிகாலா?" ஆவேசத்துடன் கேட்டான், இளந்திரையன்.

"அத்திமலையான் கரிவரதன். அவனுக்கு இந்த கரிகாலன் மீது பாசம் அதிகம். தனக்கும், கரிகாலனுக்கும் இடையே தடுப்பு உண்டாக்குபவர்களைப் பொசுக்கி விடுவான்..." கரிகாலன் சிரித்தான்.

"அவன் பொசுக்குவதற்கு முன்பாகவே, நான் உன்னை பொசுக்கிவிடுவேன்."

இளந்திரையனின் குரலில் வன்மம் மிகுந்திருந்தது.

"எப்படி?" கரிகாலன் குரல் கேலியுடன் ஒலித்தது.

“நான் முக்கண்ணனின் அவதாரம். எனது நெற்றிக் கண்ணை திறந்தேன் என்றால், நீ பொசுங்கிவிடுவாய்!” என்று தனது சுட்டுவிரலால் நெற்றியில் தட்டிக் கொண்டு நின்றான், இளந்திரையன். முதன்முறையாக, தம்பியின் நெற்றியில் ஈசனின் மூன்றாவது கண்ணைப் போன்று அமைந்திருந்த அந்த வடுவினை வியப்புடன் நோக்கினான், கரிகாலன்.

[1] இப்போது உள்ள பழைய சீவரம்தான் பழமுதிர்சோலை மலை. நரசிங்கப் பெருமாள் ஆலயம் இப்போதும் உள்ளது. ஆனால் இந்த இடத்திற்கு ஸ்ரீவரம் என்று பெயர் வருவதற்கு காரணமான ஸ்ரீவரத

https://telegram.me/aedahamlibrary

நாராயணப் பெருமாள் ஆலயம் இங்கே இல்லை. அந்த பெருமாளைத்தான் தற்போது காஞ்சியில் வரதராஜராக எழுந்தருளச் செய்திருக்கிறார்கள்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 6. என்ன பார்வை உந்தன் பார்வை!

ஆம்ரபாலி அந்த அடர்ந்த அடவியில் மேற்காக நடந்து கொண்டே இருந்தாள். மனித நடமாட்டத்தைக் கண்டே ஒரு வாரமாகிவிட்டிருந்தது. இருப்பினும் தனியொருத்தியாக எவ்வித அச்சமுமின்றி அவள் நடந்து கொண்டே இருந்தாள். முந்திரிப்பூ மலைக் காடுகளில் உள்ளே வந்தால், மனிதன் உயிரை விடவேண்டியதுதான். திக்கு திசை தெரியாமல், எப்போது எதிர்ப்படும் வனவிலங்குகளிடம் சிக்கி சின்னாபின்னம் ஆவான் என்று யாருக்குமே தெரியாது. சேர நாட்டின் வட புலத்தில் அடர்ந்து விரிந்திருந்த இந்தக் காடுகளில் இங்கும் அங்குமாக வனவாசிகள் வசித்தனர் என்றாலும், அவர்களே சில அடர்த்தியான பகுதிகளுக்குச் செல்ல அச்சப்படுவார்கள்.

ஆனால் பல்லவ தேசத்திலிருந்து நழுவி சோழ நாட்டிற்குப் போகாமல் கொங்கு மலைக் காட்டினை கடந்து, இப்போது முந்திரிப்பூ மலைக்குள் நுழைந்திருந்தாள். இதுவரை எந்த ஆபத்தையும் அவள் சந்திக்கவில்லை என்பது அவளுக்கே வியப்பாக இருந்தது. காட்டாறு ஒன்றின் கரையில் சற்றே இளைப்பாறிய போது, உடலின் களைப்பினைப் போக்க வேண்டி சற்றே நடன முத்திரைகளை ஆடிப் பார்க்க, மூங்கில் குழாய் ஒன்றில் நீர் சேந்துவதற்காக வந்த வனவாசி ஒருவன், இவளை வியப்புடன் பார்த்தான். இவளது நடன முத்திரைகளைப் பார்த்து திகைத்து, பிறகு அச்சத்துடன் அங்கிருந்து அகன்றான். பல கொடிய விஷமுள்ள பாம்புகளையும், ஓநாய்களையும் பார்த்தாலும், அச்சப்படாமல் தனது வழியே சென்று கொண்டிருந்தாள். ஒரு அடர்ந்த மரத்தின் கிளை தாழ்ந்து பூமியைத் தொடுமளவுக்கு நீண்டிருக்க, அதனைப் பற்றிக்கொண்டு மரத்தின் மீது ஏறி, இரவினைக் கழித்திருந்தாள், ஆம்ரபாலி.

விடிந்ததும் மரத்திலிருந்து இறங்கியவள், தொலைவில் ஆறு ஒன்று பெருக்கெடுத்து ஓடும் ஓசை கேட்க, அந்தப் பக்கமாக விரைந்தாள். ஆற்றில் இறங்கி, முகம் மற்றும் கைகால்களை சுத்தம் செய்தவள், நிமிர்ந்து பார்த்த போது ஓலைக்குடில் ஒன்று அவள் கண்களில் பட்டது. அடர்ந்த காட்டில் குடிலா? யாராவது வனவாசி அங்கே வசிக்கின்றனரா? ஆனால் குடில் அமைக்கப்பட்ட விதத்தினை பார்த்தால், நாகரிக உலகில் இருந்த யாரோதான் அதனை அமைத்திருக்க வேண்டும் என்று கூறும் விதமாக இருந்தது அந்தக் குடில். அந்தக் குடிலினையே பார்த்தபடி நின்றிருந்தாள். அங்கே சென்று உண்பதற்கு ஏதாவது கிடைக்குமா என்று கேட்டுப் பார்க்கலாமா? குடிலில் வசிப்பது யார் என்று

https://telegram.me/aedahamlibrary

தெரியாமல் எப்படி அங்கே செல்வது? ஆபத்தை விளைவிக்கக் கூடிய ஆண்மகன் யாராவது அங்கே இருந்தால்...? தனியொருவளாக, அந்தக் காட்டில் அவளால் என்ன செய்ய முடியும். அந்தக் குடிலைத் தவிர்ப்பதே நல்லது என்று முடிவு செய்து, உயரத்தில் இருந்த அந்தக் குடிலை நெருங்காமல், எதிர்ப்புறமாக நடக்கத் துவங்கினாள், ஆம்ரபாலி.

சிறிது தூரமே சென்றிருப்பாள்.

திடீரென்று ஒரு மேடான பாறையில் இருந்து ஒரு சிறுத்தை அவள் முன்பாக பாய்ந்து வழியை மறைத்தபடி நின்றது. முதன்முறையாக அந்த அடவியில் சிறுத்தை ஒன்றைக் காணுகிறாள். சற்றே அரண்டு போனாள், ஆம்ரபாலி. அந்தச் சிறுத்தையினைக் காணும் போதே, இரவெல்லாம் இரை கிடைக்காமல், சோர்வான கண்களுடன், நாவினைத் தொங்கவிட்டபடி இவளை எப்படியும் உணவாக்கிக் கொள்வது என்கிற தீர்மானத்துடன், பாய்வதற்குத் தயாராக நின்றது, அந்தச் சிறுத்தை,

என்ன செய்வது என்று தோன்றாமல், ஆம்ரபாலி அந்தச் சிறுத்தையின் கண்களையே நோக்க, அதுவும் அவளையே உறுத்துப் பார்த்துக் கொண்டிருந்தது. அதன் வால் நிமிர, கால்களைப் பின்பாக நகர்த்த, இதோ... தன் மீது பாயப் போகிறது என்கிற அச்சத்துடன், கண்களை மூடிக் கொண்டு தாக்குதலை எதிர்நோக்குவதற்கு தயாரானாள். ஆனால் என்ன இது... உறுமல் சத்தம் கூட கேட்காமல் அமைதியாக உள்ளதே, தன் மீது பாயாமல் சிறுத்தை என்ன செய்கிறது? மெதுவாக ஆம்ரா கண்களைத் திறந்தாள். வியப்பினால் கண்கள் விரிந்தன. சிறுத்தை இவளைக் கடந்து பின்பாக தனது பார்வையை செலுத்தியிருக்க, அதன் கண்கள் அப்படியே உறைந்து போயிருந்தன.

திரும்பி நோக்கியவள் அரண்டு போனாள்.

அங்கே ஒரு பெண் நின்றிருந்தாள். மத்திய பிராயத்தினள் என்றாலும் அந்தப் பெண்ணின் முகமும், உடலும் வசீகரமாக இருந்தது. அவளது பார்வை அந்த சிறுத்தைப் புலியின் கண்களினுள் பதிந்திருந்தது. அந்தச் சிறுத்தையின் பார்வை அவளது பார்வையில் சிக்கி வசியப்பட்டிருந்தது.

அந்தச் சிறுத்தையின் பார்வையை வசப்படுத்திய நிலையிலேயே, தனது இதழ்களை அசைக்காமல், பேசினாள், அந்தப் பெண். "பெண்ணே! விரைவாகச் சென்று அந்தக் குடிலினுள் பதுங்கிக் கொள். நான் அதனை எனது நோக்கு பார்வையில் இருந்து விடுவிக்கும் போது உன்னைப் பார்த்ததையே மறந்துவிடும். விரைந்து செல்!” என்று கூற, சடாரென்று திரும்பி, அந்தக் குடிலினை நோக்கிச் சென்று, உள்ளே மறைந்தாள்,

https://telegram.me/aedahamlibrary

ஆம்ரா.

குடிலின் சாளரத்தின் வழியாக கண்களை மட்டும் வெளிக்காட்டி நோக்க, தனது உடலை ஒருமுறை சிலிர்த்த படி, அங்கிருந்து சிறுத்தை அகன்று செல்வதைக் கண்டாள், ஆம்ரா.

அந்தப் பெண் குடிலினை நோக்கி நிதானமாக நடந்து வந்தாள். அவளைத் திகைப்புடன் பார்த்துக்கொண்டு நின்றாள், ஆம்ரா. யார் இவள்...? இந்த அடவியில் தனியாக என்ன செய்கிறாள்? தனது பார்வையாலேயே அந்த சிறுத்தையினை அடக்கிவிட்டாளே! பிரமிப்புடன் நிற்க, அந்தப் பெண் உள்ளே நுழைந்து ஆம்ரபாலியை நோக்கினாள். சிறுத்தையை நோக்கிய போது அவளது பார்வையில் இருந்த தீட்சண்யம் இப்போது இல்லை. ஆனால் அலட்சியம் அதிகம் இருந்தது.

“நீ எந்த நாட்டைச் சேர்ந்தவள்? இந்தக் காட்டில் எப்படிச் சிக்கிக் கொண்டாய் பெண்ணே?”

"அம்மா! நான் எந்த தேசத்தவள் என்பதே எனக்குத் தெரியாது. எனது பாட்டியார், கலிங்க தேசத்துப் பெண். மன்னன் அசோகன் கலிங்கத்தின் மீது படை எடுத்த போது, கடத்தப்பட்ட பெண்களுள், எனது பாட்டியும் ஒருவர். அவரை மகத வீரன் ஒருவன் மணந்து கொள்ள, அவர்களது மகன் மூலமாகப் பிறந்தவள் நான். எனது பெயர் ஆம்ரபாலி. நாட்டியம் ஆடுபவள். அசோகரால் இலங்கைக்கு அனுப்பப்பட்ட குழுவில், அவரது மகள் சங்கமித்தாவின் தோழியாக நான் காஞ்சிவனத்துக்கு வந்தேன். அங்கே, பல்லவ மன்னன் எங்களை நாட்டைவிட்டு வெளியேறச் சொல்ல, அவர்கள் இலங்கைக்குப் புறப்பட்டனர். நான் மட்டும், அங்கிருந்து தப்பி, சேர நாட்டை நோக்கிச் செல்கிறேன். வழியில்தான், இந்த சிறுத்தையிடம் சிக்கிக் கொண்டேன்." - ஆம்ரபாலி விளக்கினாள்

ஒருகணம்தான் –

வியப்புடன் அவளை நோக்கினாள் அந்தப் பெண். பிறகு இடிஇடியென நகைக்கத் துவங்கினாள்.

"பெண்ணே! விதி எவ்வளவு வலியது பார்த்தாயா? நாம் எல்லாவற்றையும் புறக்கணித்துவிட்டு, அடவியில் அமைதியாக வாழ்ந்தாலும், பழைய நினைவுகளை விதி மீண்டும் நம்மிடம் கொண்டு சேர்த்து விடுகிறது அன்றோ? அவ்வகையில், நான் மறந்திருந்த நினைவுகளை... உன் மூலமாக மீண்டும் நினைவு கூர்ந்திருக்கிறது, விதி”

https://telegram.me/aedahamlibrary

என்றவள், ஆம்ராவை உறுத்துப் பார்த்தாள்.

"என்னை யார் என்று நினைக்கிறாய், பெண்ணே?"

தன்னைக் கேட்ட அந்தப் பெண்ணை, ஆம்ரா திகைப்புடன் நோக்க, அவள் தொடர்ந்து சிரித்துவிட்டு, திடீரென்று அமைதியானாள்.

“அசோகனால் கலிங்கத்தில் இருந்து கடத்தப்பட்டு, வாழ்வை இழந்து, புத்த சபையின் தலைவர் போதி மந்தாவை கொன்று, நாடோடியாக திரிந்து, இதோ இந்த அடவியில் ஐக்கியமாகிவிட்ட, நான்தான் அசோகனின் மனைவி திஸ்ஸரக்கா.” - என்று அந்தப் பெண் கூற,

திகைத்துப் போனாள் ஆம்ரா. போதி கயையில் சிதைக்கப்பட்ட தேவ உடும்பரத்திற்கு மாற்றாக தட்சிணத்தில் உள்ள தேவ உடும்பரத்தைத் தேடி வந்தால், மரத்தை சிதைத்த திஸ்ஸரக்காவையே சந்திக்க நேர்ந்துள்ளதே!

“மகாராணி... தாங்களா? தங்களைப் பற்றி சங்கமித்தா மூலமாக நான் அறிந்திருக்கிறேன்!” என்றவள் திஸ்ஸராவைப் பணிந்தாள். அவளது தலையில் கைவைத்தாள், திஸ்ஸா.

"கலிங்க ரத்தமும் உனது உடலில் ஓடுவதால் மட்டுமே உன்னை ஆசீர்வதிக்கிறேன், ஆம்ரா! ஒருவேளை நீ மகத நாட்டின் குருதியை மட்டுமே கொண்டிருந்தால், அந்த சிறுத்தைக்கே உன்னை விருந்தாக்கி இருப்பேன்!” திஸ்ஸா கூறினாள்.

"அரசியாரே! இன்னுமா உங்களது வன்மம் அடங்கவில்லை?" ஆம்ரா வியந்தாள்.

“எப்படி அடங்கும், ஆம்ரா! எனது வாழ்வை சூறையாடிவிட்டு, அசோக சக்கரவர்த்தியாக முத்திரை பதித்து விட்டு, துறவறத்தை நாடி தனக்கு விமோசனத்தைத் தேடிக் கொண்டான். நான் இன்பத்தையே காணாதவள். வெறும் துன்பத்தை மட்டுமே அனுபவித்திருக்கிறேன். எனவேதான் இந்த அடவியில் தங்கி, மனவமைதி காண்கிறேன். இப்போது மனது அமைதியாக இருந்தாலும், மகத மன்னனை மன்னிக்க இயலாமல் தவிக்கிறேன் இப்படியே முடிந்துவிடும் என் வாழ்க்கை. ஆனால், வெகு காலத்திற்குப் பிறகு ஒரு மனித முகத்தை அதுவும் ஒரு பெண்ணைச் சந்திக்கிறேன். சிறிது காலம், என்னுடைய விருந்தாளியாக தங்கிவிட்டு, பிறகு சேர நாட்டிற்குச் செல்வாயாக!” திஸ்ஸரக்கா கூறினாள்.

https://telegram.me/aedahamlibrary

திஸ்ஸா கேட்டுக் கொண்டபடி, அந்தக் குடிலிலேயே தங்கிவிட்டாள், ஆம்ரா. ஒன்றிரண்டு தினங்களிலேயே திஸ்ஸாவும், ஆம்ராவும் மிகவும் நெருங்கிவிட்டனர். ஆம்ரா அவ்வப்போது அவளுக்கு பாடியபடி நடனம் ஆடிக் காட்ட, திஸ்ஸா அவளுக்கு தனது வாழ்க்கையை கதையாக கூற, அவளது வாழ்க்கையையே ஒரு நாள் நாட்டியமாக ஆடிக்காட்டினாள், ஆம்ரா.

நெகிழ்ந்து போனாள், திஸ்ஸா.

"ஆம்ரா! சேர நாட்டிற்குப் போய் என்ன செய்யப் போகிறாய்? நீ என்னுடன் இந்தக் குடிலிலேயே தங்கி விடு" என்று திஸ்ஸரக்கா கூற, ஆம்ரபாலியும் அங்கேயே தங்கிவிட்டாள்.

ஒரு நாள் நள்ளிரவு –

உறங்கிக் கொண்டிருந்த ஆம்ரா திடீரென விழித்துக் கொண்டாள். யாரோ எழுப்பிய ஓலம் ஒன்று அவளது உறக்கத்தினைக் குலைத்திருந்தது. திடுக்கிட்டு எழுந்து அமர்ந்தவள், அருகில் திஸ்ஸா இல்லாததைக் கண்டதும் எழுந்து சாளரத்தின் வழியே பார்த்தாள். தொலை தூரத்தில் ஆற்றின் நடுவே ஒரு பாறையின் மீது அமர்ந்து எங்கோ வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள், திஸ்ஸரக்கா. இந்த நடுநிசியில், அச்சமின்றி இப்படி அமர்ந்திருக்கிறாரே! குடிலைவிட்டு நீங்கி திஸ்ஸரக்காவை நோக்கி நடந்தாள், ஆம்ரா. அவளது பின்பாகச் சென்று நின்று, அவளது தோளினைத் தொட்டாள். அனலைத் தொட்டவளைப் போன்று பதைபதைப்புடன் பின்வாங்கினாள், ஆம்ரா. பார்வையா அது? எவ்வளவு உக்கிரம்?

அவளை லட்சியம் செய்யாமல் மீண்டும் தான் வெறித்துக்கொண்டிருந்த திக்கிலேயே மீண்டும் நோக்க ஆரம்பித்தாள்.

“மகாராணி! உறங்காமல் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?”

ஆம்ரா கேட்டும் பதிலளிக்காமல் தொடர்ந்து வெறித்துக்கொண்டிருந்தாள் திஸ்ஸரக்கா. தான் அவளிடம் பேசினாலும், பதிலளிக்கும் நிலையில் அவள் இல்லை என்பதை புரிந்து கொண்ட ஆம்ரா, மீண்டும் குடிலை நோக்கி நடந்தாள். அதற்குப் பிறகு தொடர்ந்து திஸ்ஸரக்காவின் ஓலம் கேட்டுக்கொண்டே இருந்தது.

மறுநாள் ஆம்ரா திஸ்ஸாவிடம் ஒன்றும் கேட்கவில்லை. ஆனால் திஸ்ஸரக்காவே அவளை சந்தேகத்துடன் பார்ப்பதும், பிறகு தனக்குள்

https://telegram.me/aedahamlibrary

யோசிப்பதுமாக இருந்தாள். பிறகு, ஆம்ராவை நோக்கி வந்து அவளது கையைப் பற்றினாள்.

“நான் உன்னை எச்சரிக்க மறந்துவிட்டேன், ஆம்ரா. அமாவாசை இரவுகளில் நான் மிகவும் உக்கிரமாக இருப்பேன்... நான் உபாசனை செய்யும் உக்கிர தேவதை தூமாதேவியின் வசம் இருப்பேன். அன்று என்னை மறந்துவிடுவேன். மனவமைதி கிட்டாமல், தூமாதேவியை உபாசிக்கத் துவங்கினேன். மவுரியத்தின் மீது வஞ்சம் கொண்டிருந்த நான் எனது உக்கிரம் வடியக்கூடாது என்றுதான் தூமாதேவியை உபாசித்தேன். இப்போது உக்கிரத்துடன் இருக்கிறேனே தவிர மனவமைதி கிட்டவில்லை. உக்கிரத்தையும் நீக்க முடியவில்லை. இப்படி மனவமைதி இன்றி இருக்கிறேன்!” - திஸ்ஸரக்கா சோகத்துடன் ஒலித்தாள்.

அவளை அனுதாபத்துடன் நோக்கினாள், ஆம்ரா. இன்னும் பழைய சம்பவங்கள் அவள் மனதை பாதித்துக் கொண்டிருக்கின்றன. தனக்கு அடைக்கலம் கொடுத்த அவளுக்கு மன ஆறுதலைத் தர வேண்டும், என நினைத்தாள்.

"மகாராணி!”

"என்னை மகாராணி என்று அழைக்காதே, ஆம்ரா. மிகவும் அருவருப்பாக உணர்கிறேன். அசோகனின் ராணியாக நான் என்னைக் கருதவில்லை.” - கசப்புடன் சொற்களை உதிர்த்தாள், திஸ்ஸா.

"அம்மா! கலிங்கத்தை நாசம் செய்து, உங்களது வாழ்வை குலைத்த அசோகனுக்கே மன அமைதி கிட்டியது. தங்களுக்குக் கிட்டாதா என்ன? ஆனால் கோபத்தால் நீங்கள் இந்த வையகத்திற்கு, புத்தனின் தர்மத்திற்கு பெரும் தீங்கினைச் செய்துவிட்டீர்கள் என்பதை அறிவீர்களா? நான் ஏன் இந்தக் காட்டினில் திரிகிறேன் என்று கேட்டீர்கள் அல்லவா? தங்களது கோபத்தின் விளைவாகத்தான் நான் இன்று நாடோடியாகத் திரிகிறேன். இல்லையேல், அரசவையில் நிம்மதியாக நாட்டியம் ஆடிக் கொண்டிருப்பேன்.” புதிராக பேசினாள், ஆம்ரா.

திஸ்ஸரக்காவின் விழிகள் திகைப்பினால் விரிந்தன. "எனது கோபத்தால் நீ இந்தக் காட்டில் திரிகிறாயா? எப்படி?”

“அம்மா! கோபத்தில் நீங்கள் ஒரு பெரிய கொலையை செய்திருக்கிறீர்கள். நினைவில் உள்ளதா?” - ஆம்ரா கேட்டாள்.

https://telegram.me/aedahamlibrary

"புரிகிறது. புத்த கயையின் தலைமை குரு புத்த மந்தாவை நான் வெட்டிச் சாய்த்ததைப் பற்றி குறிப்பிடுகிறாய் அல்லவா? அசோகனை திருத்திப் பணி கொள்கிறேன் என்கிற பெயரில் எனது வஞ்சம் தீர்க்கும் திட்டங்களுக்கு தடையாக இருந்தார். எனவே அவரை அப்புறப்படுத்தினேன்!" குரோதத்துடன் கூறினாள், திஸ்ஸா.

"அம்மா! ஒரு தலைமை குரு மறைந்தால், அவரைவிட ஞானம் மிக்கவர் தலைமை பதவிக்கு வருவார். அவரது கொலை புத்த தர்மத்தை பாதிக்கவில்லை. ஆனால் நீங்கள் செய்த மற்றொரு கொலைதான் புத்த தருமத்திற்கு பெரிய தீங்கினை விளைவித்திருக்கிறது. நினைவில் இருக்கிறதா? அசோக மன்னர் தியானத்தில் அமர்ந்தாரே - அந்த போதி மரத்தினை நீங்களும் உங்கள் தோழியரும் ஆயிரம் நஞ்சு முட்களால் சிதைத்தீர்களே. அந்த மரம் எவ்வளவு விசேடமானது தெரியுமா? மூவாயிரம் வருடங்களுக்கு ஒருமுறை தோன்றும் புத்தர்பிரான் அவதாரம் செய்வதற்கு தேவையான மரம். அதைத்தான் தாங்கள் நாசம் செய்துவிட்டீர்கள். உலகிலேயே இரண்டு தேவ உடும்பரங்கள் மட்டுமே படைக்கப்பட்டன. ஒன்றை தாங்கள் அழித்துவிட்டீர்கள். மற்றொன்று, சாணக்கியன் பிறந்த ஊரான அத்தியூரில் இருப்பதாக அறிந்து, மன்னர் அசோகனால் ஒரு குழு தட்சிணத்திற்கு அனுப்பப்பட்டோம். மன்னரின் தம்பி திவ்ய பாதா, மகன் மகிந்தா, மகள் சங்கமித்தா உள்பட பதினாறு பேர் அத்தியூருக்கு வந்தோம். அங்கே ஒரு ஆலயத்தில் தேவ உடும்பரம் இருப்பதாக அறிந்தோம். ஆனால் அதனைத் தேடும் பணியில் தேவசேனன் என்கிற மகிந்தாவின் நண்பன் கொல்லப்பட்டான். நாட்டை ஆண்ட பல்லவ மன்னனுக்கு எங்கள் குழாம் மீது சந்தேகம் பிறந்து எங்களை உடனே இலங்கைக்கு புறப்படச் சொல்லி விட்டான். நான் மட்டும், சேர நாட்டுக்கு தப்பிச் செல்லும் வழியில் இங்கே வந்தேன். இப்போது புரிகிறதா, உங்கள் கோபத்தால் எத்தனை அனர்த்தங்கள் விளைந்துவிட்டன என்று!" ஆம்ரா கூறினாள்.

அவள் கூறுவதை அமைதியாகக் கேட்ட திஸ்ஸா விரக்தியுடன் சாளரம் அருகே சென்று அதன் வழியாகத் தொலைவில் பாய்ந்து கொண்டிருந்த காட்டாற்றைப் பார்த்துக்கொண்டு நின்றாள்.

பிறகு பெருமூச்சு ஒன்றைச் சிந்தியபடி, ஆம்ராவைத் திரும்பி நோக்கினாள். "தவறுதான்! இப்போது இருக்கும் பக்குவம் இளமையில் இல்லை. அசோகனை துன்புறுத்த அவனுக்கு உகந்ததை எல்லாம் பழி தீர்த்தேன். இப்போது பழி உணர்ச்சி இல்லை. மன அமைதியும் இல்லை!" -- திஸ்ஸா கூறினாள்.

https://telegram.me/aedahamlibrary

"பத்தே நாட்களில் தங்களுக்கு மனவமைதி கிடைக்க என்னிடம் தியானம் பழகுங்கள். உங்களது தூமாதேவியின் உக்கிர உபாசனையை கைவிட்டு, புத்ததேவன் வசம் சிந்தனையைத் திருப்புங்கள். உங்கள் அமைதிக்கு நான் உத்திரவாதம் தருகிறேன்!" ஆம்ரா கூற, அவளை சற்று நேரம் வியப்புடன் பார்த்தபடி நின்ற திஸ்ஸா, அவளை நோக்கி நகர்ந்து சென்று சிநேகத்துடன் அவளது கையை மீண்டும் பற்றினாள்.

குடிலுக்கு எதிரே இருந்த அரசமரத்தின் கீழ் திஸ்ஸாவுக்கு தியானப் பயிற்சியை துவக்கினாள். உரக சூத்திரம் கூறும் புத்த தத்துவத்தையும் அன்றாடம் விளக்கிக் கூற, திஸ்ஸாவின் உக்கிரமான முகத்தில் மெதுவாக சாந்தம் பரவியது. பத்தே நாட்களில் தனது மனது லேசாகிப் போனதை உணர்ந்தாள் திஸ்ஸா. விரைவிலேயே, ஆம்ராவின் உதவியின்றி ஆழ்நிலை தியானத்திற்கு தன்னை பழக்கப்படுத்திக் கொண்டாள். உட்படுத்தினாள். நாளடைவில், மனம் அமைதியடைய, அமாவாசை அன்று உக்கிரத்துடன் ஓலமிடுவது போன்ற செயல்கள் நின்று போயின. ஆம்ரா வந்ததும்தான் தனது மனநிலை மாறிவிட்டது என்பதை புரிந்து கொண்ட திஸ்ஸா, ஆம்ராவுடன் மிகவும் நெருக்கத்தைக் காட்டினாள்.

"நீ எனக்கு மனவமைதியை தந்தாய். அதற்கு பிரதிபலனாக, நான் கற்ற அத்தனை கலைகளையும் உனக்குப் போதிக்கிறேன். தேவ உடும்பரத்தை நாசம் செய்த நானே அதற்கு பிராயச்சித்தத்தை செய்கிறேன். வர்மக் கலை என்கிற பெரும் செல்வத்தை நான் பெற்றிருக்கிறேன். அந்தக் கலையை உனக்கு போதிக்கிறேன். தேவ உடும்பரத்தைத் தேடும் உனக்கு அதனைத் தேடி பெறுவதற்கு உரிய சக்தி படைத்தவளாக மாற்றிக் காட்டுகிறேன்!" திஸ்ஸா கூறினாள்.

"என்னுடைய அமைதியை தாங்கள் எடுத்துக் கொண்டு, தங்களுடைய உக்கிரத்தை எனக்குத் தருகிறேன் என்று சொல்கிறீர்கள் போலும்!" சிரித்தபடி ஆம்ரா கூற, அவளது நகைச்சுவையை ரசித்த திஸ்ஸா கலகலவென்று நகைத்தாள்.

"அசோகன் என்னைக் கடத்துவதற்கு முன்பாக சிரித்தவள் நான். அதற்குப் பிறகு இப்போதுதான் சிரிக்கிறேன்! நாளை முதல் உனக்கு வர்மக்கலைப் பாடங்கள் துவக்கம்!" என்றாள் திஸ்ஸா.

மறுநாள் சூரியோதயத்திற்கு முன்பாகவே ஆம்ராவுக்கு பாடங்களை போதிக்கத் துவங்கினாள்.

"நோக்கு பார்வை உள்பட வர்மக் கலை முழுவதையும் உனக்கு

https://telegram.me/aedahamlibrary

போதிக்கிறேன். உனது வருங்காலத்திற்கு பாதுகாப்பாகவும், இருக்கும். இந்தக் கலையைக் கொண்டு நீ வளங்களை பெறலாம்!" திஸ்ஸா கூற, உடனேயே சம்மதித்துவிட்டாள். அன்றே வர்மக்கலைப் பாடத்தை போதிக்கத் துவங்கினாள், திஸ்ஸரக்கா.

ஸ்பர்ஷ வர்மம் மற்றும் நோக்கு வர்மத்தின் சாகைகளை ஆம்ராவுக்கு போதித்தாள், திஸ்ஸா. தனக்குத் தெரிந்த அத்தனை கலைகளையும் ஆம்ராவுக்கு போதித்ததோடு, மற்ற சமயங்களில் அன்றாடம், குடிலின் முன்பாக இருந்த ஆலமரத்தின் கீழ் தியானம் செய்யத் துவங்கினாள், திஸ்ஸா. ஒன்றிரண்டு ஆண்டுகள் அந்த அடவியிலேயே தங்கியிருந்த ஆம்ரா, வர்மக்கலையின் அத்தனை சாகைகளையும் கற்றறிந்தாள்.

ஒரு நாள், ஆம்ராவை அருகே அழைத்தாள், திஸ்ஸா.

"ஆம்ரா! நிலவுலகில் இருந்து நான் புறப்படும் நேரம் வந்துவிட்டது. தியான நிலையிலேயே வடக்கிருந்து உயிர் நீக்கப் போகிறேன். எனது தேகத்தைப் புதைத்துவிட்டு, பிறகு, நீ சேர நாட்டிற்குப் புறப்படலாம். எனது ஆசிகள் மட்டுமே நான் உனக்கு விட்டுச் செல்லும் சொத்து!" என்றபடி தான் வழக்கமாகத் தியானிக்கும் ஆலமரத்தின் கீழ் சென்று தியானத்தில் ஆழ்ந்தாள், திஸ்ஸா. அன்று மாலையே அவளது உடலில் உயிர் இல்லை என்பதைப் புரிந்து கொண்டு அவளது தேகத்தை அந்த மரத்தின் கீழேயே புதைத்துவிட்டு, தெற்கு நோக்கி நடக்கத் தொடங்கினாள் ஆம்ரா.

வழியில் எதிர்ப்பட்டது ஒரு யானை. அவளை குரோதத்துடன் நோக்கிய அந்த ஒற்றை யானை ஆவேசமாக முன்னேற, தான் கற்ற நோக்குப் பார்வையை அந்த யானையின் மீது பிரயோகப்படுத்தி அதன் கண்களை வசப்படுத்தினாள். அவளது பார்வைக்குக் கட்டுண்ட அந்த யானை, முன்னோக்கி வந்து அவளைப் பணிந்தது. பிறகு அவள் முன்பாகக் குனிந்து தனது முன்னங்காலை தூக்கிக் காட்ட, அவள் அதன் மீது ஏறி, யானையின் முதுகில் தொற்றிக் கொண்டாள். யானை அந்தக் காட்டினைக் கடந்து, சேர நாட்டின் எல்லையை அடைந்து நின்றது. யானையின் மீதிருந்து இறங்கிய ஆம்ரபாலி, அந்த யானையைத் தட்டிக் கொடுத்து விட்டு, சேர நாட்டினுள் நுழைந்தாள்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 7. சீற்றம்மிகு வேகவதி! சீர்மிகு காவிரி!

திருலோச்சன பல்லவன் அரியணை ஏறிவிட்டான். பதவி ஏற்ற சில தினங்களிலேயே கரிகாலனின் தாய் நறுங்குழல் நாய்ச்சி நோய்வாய்ப்பட்டாள். தனது தமக்கையைக் காணச் செல்ல வேண்டும் என்று சுலோச்சனா இளந்திரையனிடம் வற்புறுத்திக் கொண்டே இருந்தாள்.

தம்பியின் மகுடாபிஷேகத்திற்கு வந்திருந்த கரிகாலன், பதவி ஏற்றதும் தனது சோழ நாட்டிற்கு ஒருமுறை விஜயம் செய்ய வேண்டும் என்று அன்புடன் அழைத்திருந்தான். சோழ நாட்டிற்கு ஒருமுறை விஜயம் செய்வது நல்லது. அண்ணன் மீது பாசம் இல்லாவிட்டாலும், இரு நாட்டு மக்களிடையே ஒரு பிணைப்பு ஏற்படுவதற்கு ஏதுவாக உங்களது விஜயம் இருக்கும் என்று கோலவிக்கிரமரும், இளந்திரையனின் சோழ நாட்டு விஜயத்திற்குப் பச்சைக் கொடியைக் காட்டியிருந்தார்.

அன்னையுடன் சோழ நாட்டிற்குப் புறப்பட்டான், தொண்டைமான் இளந்திரையன். தனது தாய் நாடான வேளிர் நாங்கூர் பகுதிக்கு விஜயம் செய்துவிட்டு, பிறகு புகார் நகரை நோக்கிச் சென்றார்கள்.

என்ன இது, எங்கு பார்த்தாலும் நீர் பாய்கிறது? மூன்று நதிகளைக் கொண்டிருந்து முக்கூடல் சங்கமம் என்று இவன் கர்வப்பட்டுக் கொண்டிருக்க, சிறு ஓடைகள், வாய்க்கால்கள் என்று எங்கு பார்த்தாலும் நீர்வளம். தான் ஈன்ற குஞ்சுகள் தன்னைச் சுற்றி விளையாடியபடி, கோழி ஒன்று நகருவதைப் போன்று, காவிரித்தாய் ஓடைகள், சிற்றோடைகள், வாய்க்கால்கள் என்று தண்ணீர் பாய்ந்து ஓடிக்கொண்டிருக்க, பெருமையுடன் நடமிட்டுக் கொண்டு ஊர்ந்து கொண்டிருந்தாள். இவனது தொண்டையூரில் பாயும் வேகவதி, கோபாவேசத்துடன், எதிர்பட்டவைகளை உருட்டிக் கொண்டு பெரும் ஒலியினை எழுப்பிக் கொண்டு உக்கிரத்துடன் பாய்ந்து கொண்டிருந்தாள். ஆனால் காவிரி நதியோ, ஆண்கள் மட்டுமே நிறைந்திருந்த சபையில் நுழைந்த நங்கையைப் போன்று, அமைதியுடன், ஆர்ப்பாட்டம் இன்றி, தனது நீராடையை ஒரே சீராக அமைத்துக் கொண்டு, நடுவே பாறைகள், நிலப்பகுதிகள் என்று தெரியாமல், நளினமாக எவ்வித ஆரவாரமுமின்றி பெருகிக் கொண்டிருந்தாள்.

“என்னம்மா... இது! காவிரி நதி மாபெரும் நதி என்பார்கள். நமது வேகவதியின் வேகம் கூட அதற்கு இல்லையே...” – இளந்திரையன்

https://telegram.me/aedahamlibrary

கேட்டான்.

“அந்தந்த பகுதிகளின் தன்மையையே நதிகள் கொண்டிருக்கும். வேகவதி கற்றறிந்த சான்றோர்கள் வசிக்கும் பகுதியில் பாய்கிறாள். எனவே மேதாவிலாசமும், கர்வமும் அதிகம் கொண்டு மிகவும் ஓசை செய்கிறாள். காவிரி மற்றவர்களுக்கு உணவளிக்கும் சோழ பெருவள நாட்டில் பாய்கிறாள். மற்றவர்களுக்கு உணவளிக்க வேண்டும் என்கிற கருத்தை மட்டுமே சிந்தையில் கொண்டு ஒரு தாயின் உணர்வோடு ஓடுகிறாள். எனவே தான் அவளிடம் அமைதி உள்ளது.” - சுலோச்சனா கூறினாள். அடுத்து தனது மனதில் எழுந்த கருத்தை மட்டும் மகனிடம் கூறாமல் விட்டாள்.

'காவிரி கரிகாலனைப் போன்று இருக்கிறாள். வேகவதி உன்னைப் போன்று இருக்கிறாள்!' - சுலோச்சனா இதனைக் கூறாமல் விட்டதற்கு காரணம் உண்டு. இவனது கோபத்தைக் கிளறும் வண்ணம் எதாவது பேசி அந்த கோபத்தை கரிகாலனின் மீது செலுத்திவிடப் போகிறானே, என்கிற எச்சரிக்கை உணர்வுதான் அவளை தொடர்ந்து பேசா வண்ணம் கட்டிப் போட்டது.

கரிகாலன் இவர்களை வரவேற்க கோலாகல ஏற்பாடுகளைச் செய்திருந்தான். வாத்யங்கள், வேத அத்தியனங்கள், நாட்டியங்கள், நாடகங்கள் என்று அமர்க்களப்படுத்தினான். பெரியன்னையைப் பார்க்கச் சென்றனர் இருவரும். சுலோச்சனா தமக்கை நாய்ச்சியுடன் தங்கிவிட, அண்ணனும் தம்பியும் மட்டும் இரதம் ஏறி ஊரைச் சுற்றி வலம் வந்தனர்.

இளந்திரையனின் கண்கள் வியப்பால் விரிந்தன. எங்கு பார்த்தாலும், போரடித்துக் கொண்டிருந்தனர். மலைகளாக நெல்மணிகள் குவிக்கப்பட்டிருந்தன. வீதிகளில் மாடுகளுக்கு இணையாக யானைகளும் தென்பட்டன.

"போருக்குத் தானே யானைகளை பயன்படுத்துவார்கள். போரடிப்பதற்கு கூடவா?” - இளந்திரையன் கேட்டான்.

“நெல் விளையும் வேகத்திற்கு எங்கள் நாட்டின் மாடுகள் ஈடு கொடுப்பதில்லை. போர்க்களத்திற்குக் சென்று வேகம் பழகிய யானைகளைப் போரடிக்கும் களத்திற்கும் அனுப்புகிறோம்! பாரதத்தில் பாஞ்சாலிக்கு கிடைத்த அட்சயபாத்திரம்தான், சோழ நாடாக இப்போது திகழ்கிறது!” - கரிகாலனின் குரலில் காணப்பட்டது நன்றி கலந்த பெருமைதான் என்றாலும், இளந்திரையனின் செவிகளில் அது

https://telegram.me/aedahamlibrary

கர்வமான சொற்களாகவே ஒலித்தது.

தனது நாட்டைப் பற்றி கர்வம் கொள்வதற்கு யாருக்குமே உரிமை உண்டு. ஆனால் தொண்டை நாட்டை அவன் குறைத்து மதிப்பிடுவதாகவே, இளந்திரையன் நினைத்தான். 'அண்ணனுக்கு காட்டமான பதிலொன்றைத் தந்து அவனது கர்வத்தை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும்!' - மனதினுள் நினைத்தான், இளந்திரையன்.

"என்ன செய்வது! அட்சயபாத்திரமாக உனது நாடு இருந்தாலும், உனக்குப் பிரச்னைகள் ஏற்பட்ட போது உனது அட்சயபாத்திரமா உதவியது? எனது நாட்டில் தானே அடைக்கலம் புகுந்தாய். எங்கள் முக்கூடல் கடிகையில்தானே கல்வியைக் கற்றாய். செவிக்கு உணவு இல்லாத போது சிறிது வயிற்றுக்கு ஈயப்பட வேண்டும். நெல்மணி வளர்ந்து குவிந்தாலும், வயிறு கொள்ளுமளவு தான் உண்ண முடியும். எங்கள் நாட்டு கல்விவளம் அப்படிப்பட்டதல்ல. எப்போதும், யார் வேண்டுமானாலும், கற்கலாம். கலைமகளின் கை வீணை எங்கள் தொண்டை நாடு!" என்றதும், அவன் குரலில் இருந்த காட்டத்தை உணர்ந்தான், கரிகாலன்.

"உண்மை தம்பி! உனது நாட்டில் கலைமகளும், எனது நாட்டில் திருமகளும் தாண்டவமாடுகின்றனர். நாம் இருவரும் ஒற்றுமையாக பரஸ்பரம் உதவி செய்து கொண்டு ஆட்சி செய்தோம் என்றால், இருவருக்குமே நல்லதுதானே. கலைமகளும், திருமகளும் சேர்ந்தால், வீரமகளும் உடன் சேருவாள்!" --- கரிகாலன் கூறினான்.

"யாருடனும் சேரும் நிர்பந்தம் தொண்டை நாட்டுக்கு இல்லை. நானும் நீயும் அக்கா தங்கை பெற்றவர்கள் என்கிற ஒரு பந்தத்தினை தவிர, நம் இருவரின் நாடுகளுக்கும் வேறு ஒரு பிணைப்பு இருப்பதாக நான் நினைக்கவில்லை." - இளந்திரையன் கூறினான்.

கரிகாலன் பொறுமையைத் திரட்டிக் கொண்டான். "தம்பி, நீ என்னைவிட ஐந்து பிராயங்கள் இளையவன். நீ காட்டமாகப் பேசினாலும், எனக்கு உன் மீதுள்ள பாசம் இம்மியும் குறையாது. நமது இரு நாடுகளுக்கும் பெரிய பிணைப்பு உண்டு. எங்கள் நாட்டின் வளத்திற்கு அத்திமலையானின் அருள்தான் காரணம் என்று நாங்கள் நினைக்கின்றோம். தை மாதம் பிறக்கும் போது, பச்சை பயறு பொங்கல் இட்டு, அரங்கன் சந்நிதியிலும் வைகுந்த விண்ணகரிலும் [1] பூசனைகள் செய்கிறோம். உங்கள் முக்கூடல் வேங்கடவனும், எங்களது விண்ணகர் வேங்கடவனும் நம்மைப் போலவே அண்ணன் தம்பிகள் என்றுதானே

https://telegram.me/aedahamlibrary

நாம் கருதிக் கொண்டிருக்கிறோம்.” -- கரிகாலன் கூறினான்.

இளந்திரையன் பதிலளிக்கவில்லை. சுற்றியுள்ள வயல்வெளிகளையும், அவற்றில் குவித்து வைக்கப்பட்டிருந்த நெல்மணிகளையும் சற்றே பொறாமையுடன் பார்த்தபடி இரதத்தில் பயணித்துக் கொண்டிருந்தான்.

ஒரு திருப்பத்தில் கிராமவாசிகள் சிலர் பணிவுடன் நிற்க, அவர்களைக் கண்டதும் கரிகாலன் தனது இரதத்தை நிறுத்தினான்.

கரிகாலனை வணங்கிய அவர்களது முகத்தில் தென்பட்ட விசனத்தை உணர்ந்து கொண்டான்.

“என்ன நடந்தது, கிராமவாசிகளே?”

"வளங்களை வாரியளிக்கும் மன்னவரே! காவிரியில் நீர் பெருக்கு அதிகமாகிவிட்டது. எங்கள் பகுதியில் ஆற்றின் கரை பலமில்லாத காரணத்தால், பெருகியோடும் நீர் எங்கள் கிராமங்களை மூழ்கச் செய்து விட்டது. எப்போது நீர் அதிகமாகுமோ என்கிற அச்சத்தில்தான் நாங்கள் வாழ்கிறோம். எங்களுக்கு ஓர் தீர்வினை ஏற்படுத்தித் தர வேண்டும் மன்னா!” -- இறைஞ்சும் குரலில் கேட்டனர், கிராமவாசிகள்.

கரிகாலன் அவர்களது கிராமப் பகுதியை நோக்கி இரதத்தினைத் திருப்பினான்.

இளந்திரையனே திகைத்துப் போனான். இதென்ன கடலா... இல்லை ஆறா? வீடுகள் இருந்ததற்கு அடையாளமாக அதன் கூரை உச்சிகள் மட்டும்தான் கண்களுக்குப் புலப்பட்டன. நீலக்கம்பளமாக எங்கும் நீர்தான்... இறைவன் நானே நீரின் அடியில்தான் இருக்கிறேன் என்பது போன்று பாதி மூழ்கிய நிலையில் தனது ஆலயக் கோபுரத்தினை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார், ஈசன்.

யோசனையுடன் மீண்டும் தனது தேருக்கு வந்தான், கரிகாலன். இருவரும் மீண்டும் அரண்மனைக்கு மௌனமாகத் திரும்பினர். இரதத்தைவிட்டு இறங்குவதற்கு முன்பாக, திடீரென்று தனது தம்பி இளந்திரையனின் கையைப் பிடித்தான், கரிகாலன்.

“தம்பி! உன்னால்தான் இந்தப் பிரச்னைக்கு ஒரு தீர்வு ஏற்பட வேண்டும். உன்னிடம் ஒரு உதவி கோரப் போகிறேன். நீ மீண்டும் தொண்டை நாட்டிற்கு புறப்படும் போது ராஜாங்க முறைப்படி, பல்லவ வேந்தனிடம், சோழ வேந்தன் வைக்கும் கோரிக்கையாக உன் முன்பாக வைக்கப் போகிறேன். அண்ணனாகக் கேட்டால், தம்பி நீ யோசிப்பாய்.

https://telegram.me/aedahamlibrary

எனவே ஒரு மன்னனிடம், இன்னொரு மன்னன் வைக்கும் கோரிக்கையாக நீ அதனை ஏற்று, எனக்கு உதவ வேண்டும்” என்றான் கரிகாலன்.

மறுநாள் ஒத்தாடைக்கு புறப்படும் வரை, கரிகாலன் தன்னிடம் என்ன உதவியை எதிர்பார்க்கிறான் என்று யோசித்துக் கொண்டே இருந்தான், இளந்திரையன்.

மறுநாள் -

இளந்திரையனும், சுலோச்சனாவும் ஒத்தாடைக்குப் புறப்படத் தயாராக நிற்க, அவர்களது இரதம் அரண்மனை வாயிலில் வந்து நின்றது. தங்கையை வழியனுப்புவதற்காக, நடக்க முடியாத நிலையிலும், அமர்ந்த நிலையிலேயே, நாய்ச்சியை வாயிலுக்கு சுமந்து வந்து அங்கே அமர வைத்திருந்தனர். தமக்கையிடம் பிரியாவிடை பெற்ற சுலோச்சனா இரதத்தினில் ஏறி அமர்ந்தாள். கரிகாலனிடம் விடைபெற்றுக் கொண்டு, இளந்திரையன் தனது இரதத்தை நோக்கி நகர்ந்த போது, திடீரென்று அவனது தோளில் கை வைத்தான், கரிகாலன்.

"தம்பி! அதோ பார்!” கரிகாலன் சுட்டிக்காட்ட அந்தப் பக்கமாக திரும்பி நோக்கினான், இளந்திரையன். நூறு வண்டிகளில் அடுக்கப்பட்டிருந்த நெல்மூட்டைகளை வியப்புடன் பார்த்தான்.

"தொண்டை மண்டல மன்னரே!” - கரிகாலன் அழைத்தான்.

தம்பி என்று அழைக்காமல், தொண்டை மண்டல மன்னரே என்று கரிகாலன் அழைத்ததும், அவன் குறிப்பிட்டிருந்த, அந்த உதவியைக் கேட்கப் போகிறான், என்பதனை யூகித்தான், இளந்திரையன். அண்ணனின் முகத்தைக் கேள்வியுடன் நோக்கினான்.

“இந்த நூறு வண்டிகளில் எங்கள் நாட்டில் விளைந்த நெல்மணிகளை அத்திமலையானுக்கு காணிக்கையாக அனுப்புகிறேன். ஒவ்வொரு ஆண்டும், அறுவடை முடிந்ததும், சோழத்தின் சார்பாக அத்திமலையானுக்கு நெல்மூட்டைகளை அனுப்பி அவருக்கு அன்றாட நிவேதனத்திற்கு ஏற்பாடு செய்கிறோம். இப்போது தாங்கள் வந்திருப்பதால், அதனை தங்களிடமே ஒப்படைக்கிறேன். நாங்கள் செய்யும் இந்தக் காணிக்கையினால்தான் அத்திமலையான் எங்கள் நாட்டினை வளமுடன் வைத்திருக்கிறார். இதனை ஏற்றுக் கொண்டு, எங்களுக்கு அவனது இன்னருளை பெற்றுத்தர வேண்டுகிறேன். அத்திமலையான் நிவேதனத்திற்கு எங்கள் நாட்டில் விளைந்த

https://telegram.me/aedahamlibrary

நெல்மணிகளைக் கொடுத்து நமது இரு நாட்டிற்கும் உள்ள உறவினை பலப்படுத்த நினைக்கிறேன். இதற்கு பிரதிபலனாக, பல்லவ மன்னரே, உங்களிடம் ஒரு கோரிக்கை வைக்கிறேன். தொண்டை நாட்டு கடற்கரைகளில் உறுதியான பாறைகள் மிகுந்து உள்ளன. காவிரியின் கரைகளை பலப்படுத்தி, அதற்கு குறுக்காக ஒரு அணையினைக் கட்ட நான் திட்டமிட்டிருக்கிறேன். எங்களது திட்டத்திற்கு உங்களது உதவி தேவை. உங்கள் நாட்டின் கற்பாறைகளை தந்து உதவினால் பேருதவியாக இருக்கும்.”

தம்பியின் முகத்தைக் கூர்ந்து கவனித்தபடி வேண்டுகோள் விடுத்தான், கரிகாலன்.

முகத்தில் எவ்வித உணர்வும் காட்டவில்லை என்றாலும், உள்ளத்தில் கரிகாலனை அவமானம் செய்ய ஒரு சந்தர்ப்பம் கிடைத்துவிட்டதில் பூரித்துப் போயிருந்தான், இளந்திரையன். அண்ணனை அர்த்தத்துடன் நோக்கினான்.

“நீங்கள் அண்ணனாக தம்பியிடம் உதவி கேட்டிருந்தால், நான் இங்கேயே முடிவைச் சொல்லியிருப்பேன். ஆனால், நீங்கள் மன்னனாக கோரிக்கை விடுத்திருப்பதால், நான் எனது அமைச்சரவையைக் கலந்தாலோசித்து விட்டு, பதில் தருகிறேன்...” என்றபடி தேர் ஏறினான், இளந்திரையன். நூறு மாட்டு வண்டிகள் பின்தொடர, ஒத்தாடைக்கு தாயுடன் கிளம்பினான், இளந்திரையன்.

***

"அத்திமலைத் தேவனுக்கே அவன்தான் படியளக்கின்றானாம். அதனால்தான் அவன் நாடு வளமாக உள்ளதாம், என்னிடமே கர்வத்துடன் கூறுகிறான்!” - கோலவிக்கிரமரிடமும், பரமேஸ்வரனிடமும் வெறுப்புடன் கூறினான், இளந்திரையன்.

“என்ன ஆணவம்? நமது நாட்டில் கல்வி கற்று, நமது அத்திபெருமானின் அருளினைப் பெற்றுக்கொண்டு மன்னனாகத் திகழ்கிறான். இதில் பெருவளத்தான் என்கிற பெயர் வேறு. அவன் அளித்த நெல்மணிகள் நமது அத்திமலைத் தேவனுக்கு எதற்கு? நமது தெய்வத்திற்கு உணவளிக்க நமக்குத் தெரியாதா?" -- கோலவிக்கிரமர் எரிச்சலுடன் கூறினார்.

“அதுதானே. அவன் அளித்த நெல்மூட்டைகளை வேகவதியில் வீசி எறிவோம். தேவையில்லை நமக்கு! அவனுக்கு நாம் கற்பாறைகளைக்

https://telegram.me/aedahamlibrary

கொடுத்து உதவ வேண்டுமா என்ன? முடியாது? கற்பாறைகளை அவனுக்குக் கொடுத்துவிட்டால், நாளை கடற்கரை வலிமை இழந்துவிடும். கடல் சீற்றத்தை யார் தாங்குவது?" - பரமேஸ்வரன் கூற, இளந்திரையன் யோசித்தான்.

“எனது தாயை எப்படி சமாளிப்பது என்று தெரியவில்லையே...” இளந்திரையன் முணுமுணுத்தான்.

"மன்னா! கரிகாலனின் கர்வத்திற்கு காரணமே அவனது நாட்டின் வளம்தானே. அந்த வளம் எதனால் உண்டாகிறது? நீர் வளம் மிகுந்திருப்பதுதானே காரணம். அந்த நீர் வளத்திற்கு காரணம் காவிரி நதி. கற்பாறைகளை கொடுத்துதான் நாம் கரிகாலனுக்கு உதவ வேண்டும் என்பதில்லை. காவிரி நதியை வற்றச் செய்து, அவனது நாட்டின் வளத்தையும் குறைப்போம். வெள்ளப் பிரச்சனையும் தீர்த்து வைப்போம்." -- சதித்திட்டங்களின் ஊற்றுக்கண்ணாகத் திகழ்ந்த பரமேஸ்வரன் இளந்திரையனை தனது வசப்படுத்தினான்.

“எப்படிச் செய்வது?” - இளந்திரையன் வியப்புடன் கேட்டான்.

"தங்களுக்குத்தான் மூன்றாவது கண் உள்ளதே. காவிரியை உங்களது மூன்றாவது கண்ணால் வெறித்து நோக்குங்கள். பிறகு பாருங்கள்.” - பரமேஸ்வரன் சிரித்தான்.

"உண்மையாகவா? காவிரியை எரித்துவிடுவதற்கு நான் அதன் கரையில் அமர்ந்து கொள்ள வேண்டுமே... என்னை மீண்டும் சோழ நாட்டிற்கா போகச் சொல்லுகிறீர்கள்? - திகைத்தான், இளந்திரையன்.

"தேவையில்லை! காவிரி இங்கே வரும். அன்றாடம் அதனை வெறித்து நோக்கி வற்ற செய்யுங்கள்!” பரமேஸ்வரன் கூறினான்.

இளந்திரையனின் கட்டளையின் பேரில் கரிகாலன் அத்திமலையானுக்கு அனுப்பியிருந்த நெல்மணி மூட்டைகள் வேகவதியில் வீசப்பட்டன. ஒற்றன் ஒருவன் ஒரு குடத்தில் கொணர்ந்த காவிரி நீரை ஒரு குடுவையில் நிரப்பி அன்றாடம் அதனைத் தனது கண்களால் வெறிக்கத் துவங்கினான், இளந்திரையன்.

அவனுக்கு நெற்றிக் கண்ணாகத் திகழ்ந்த அந்த கரிய வடுவில் ஒருவித எரிச்சலை உணர்ந்தான். தனது மூன்றாவது கண் செயல்படுவதை அவனால் உணர முடிந்தது. ஒரு நாள் காலை, இளந்திரையன் காவிரியாற்று நீரைத் தனது நெற்றிக் கண்ணால் வெறித்துவிட்டு,

https://telegram.me/aedahamlibrary

புறப்பட்டுப் போனதும், பரமேஸ்வரன் குடுவையில் இருந்த நீரின் அளவைப் பார்த்தான். குடுவை முழுவதுமாக இருந்த நீர் இப்போது அளவில் குறைந்திருந்தது. வெற்றிப் புன்னகையுடன் மீண்டும் குடுவை நீரை வைத்துவிட்டு, அகன்றான், பரமேஸ்வரன்.

[1] வைகுண்ட விண்ணகர் - ஒப்பிலியப்பன் கோவில்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 8. கண்ணாலே கதை பேச வந்தவள்

ஆம்ரபாலியை சேர நாட்டின் எல்லையில் இறக்கி விட்டு, அவளைப் பணிந்த அந்த யானை, மீண்டும் நடந்து சென்று காட்டினுள் மறையும் வரை அதனையே நோக்கிக் கொண்டிருந்தாள். பிரம்மாண்டமாக இருந்த அந்தக் காட்டு யானையை தனது பார்வையினால் வசியப்படுத்தி சேர நாட்டிற்கு தான் வந்து சேருவோம் என்று சிறிதும் எதிர்பார்த்திராத ஆம்ரா, இறந்து போன திஸ்ஸரக்காவை நன்றியுடன் நினைத்தாள். எவ்வளவு பெரிய கலையை இவளுக்கு போதித்திருக்கிறார்! இத்தகைய வர்மக்கலை இவளுக்குப் பாதுகாப்பாக இருக்கும் போது, இனி ஆடவர்களை மயக்குவதற்கு காமரசம் பொங்கும் பார்வையினை எதற்காக வீச வேண்டும். மயக்கியதற்கு கூலியாக அவர்களுக்கு தன்னையே அர்ப்பணிக்க வேண்டியிருந்தது. இனி அந்த தொல்லைகள் கிடையாது. நோக்கு பார்வையினைக் கொண்டு அனைவரையும் ஆட்டிப் படைக்கலாம்.

குதூகலத்தோடு சேர நாட்டினுள் காலடி வைத்தாள். மேகங்கள் சூழ்ந்த ஒரு நெடிய மலையிலிருந்து பெரும் வீழ்ச்சியாக பாய்ந்துகொண்டிருந்தது ஒரு ஆறு. காட்டின் மூலிகைச் செடிகளை முறித்துக்கொண்டு பச்சை பிரவாகமாகப் பெருக்கெடுத்து ஓட, அந்த நதியில் இறங்கி நீராட முடிவு செய்தாள்.

தனது ஆடைகளைக் களைந்து பாறை ஒன்றின் மீது வைத்துவிட்டு நிர்வாணமாக ஆற்றில் இறங்கி நீராடத் துவங்கினாள். வனத்தில் யார் வரப் போகின்றனர் என்கிற அலட்சியத்துடன் உடலின் அசதி நீங்க இப்படியும் அப்படியுமாக நீந்திக்கொண்டிருந்தாள். எங்கும் அமைதி. அருவி உயரத்திலிருந்து விழும் ஒலி மட்டும்தான் கேட்டுக்கொண்டிருந்தது. பெயர் தெரியாத பறவைகள் நடுநடுவே அருவியொலிக்கு சுருதி சேர்ப்பது போன்று கூவின.

மூலிகை இலைகள் மேனியை வருடிக்கொண்டு செல்ல, அதன் நறுமணம் ஆம்ராவை கிறங்கச் செய்தது. தன்னையே மறந்து இவள் நீராடிக் கொண்டிருந்த போதுதான், தற்செயலாக ஆற்றின் மறுபக்கம் கவனித்தாள். ஒரு வாலிபன் பாறை ஒன்றில் அமர்ந்து இவளையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான். தனது நிர்வாணத்தை அவன் கண்டிருப்பானோ? முகத்தை திருப்பாமல், இவளையே நோட்டம் விட்டுக் கொண்டிருக்கின்றானே.

https://telegram.me/aedahamlibrary

ஆம்ராவுக்கு ஆத்திரம் தலைதூக்கியது. ஏகாந்தமாக இருக்கிறோம் என்று இவள் சுதந்திரத்தை அனுபவிக்க முயல, சரியாக மோப்பம் பிடிக்கும் ஓநாயாக யாராவது வந்துவிடுகின்றனரே. ஆனால் முன்பு போல் அந்த வாலிபனால் இவளுக்கு ஆபத்து உண்டாகும் என்று அச்சப்படவில்லை. வர்மக்கலையைக் கொண்டு அவனை தண்டிக்க வேண்டும். இவளை உறுத்துப் பார்க்கும் அவனது கண்பார்வையினை செயலற்றுப் போகச் செய்ய வேண்டும் என்கிற எண்ணம்தான் அவளுள் தோன்றியது. கரையை நோக்கி நீந்தியவள், தனது தேகத்தை துடைத்துக் கொள்ள கூட தோன்றாமல், அவசரமாகத் தனது ஆடைகளை எடுத்துக்கொண்டு ஒரு மரத்தின் பின்பாக மறைந்தாள். ஆடைகளை அணிந்தவள், மீண்டும் ஆற்றில் குதித்து எதிர்ப்புறம் அந்த வாலிபன் அமர்ந்திருந்த பாறையை நோக்கி நீந்தினாள். அவள் வருவதை அந்த வாலிபனும் பார்த்துக்கொண்டே இருந்தான். ஆனால், அமர்ந்திருந்த நிலையை விட்டு அசையவில்லை. கோபத்துடன் கரை ஏறியவள், அந்த வாலிபனின் முன்பாகச் சென்று நின்றாள்.

‘நாகரிகம் தெரியாதவனா நீ? ஒரு பெண் நீராடுவதை இப்படித்தான் வெறித்து நோக்குவாயா?' - என்று கேட்பதற்காக வாய் திறந்தவள் திகைத்தாள்.

அவள் வந்து நின்ற ஒலியைக் கிரகித்து இப்படியும் அப்படியுமாக நோக்கினான், அந்த வாலிபன்.

“பத்ரஷீலா! வந்துவிட்டாயா? சுள்ளி சேகரிக்க இவ்வளவு தாமதமா?” என்றபடி அவன் கைகளை காற்றில் இப்படியும் அப்படியும் வீசிய பிறகுதான், அந்த வாலிபன் பார்வையற்றவன் என்பதை உணர்ந்தாள். பாவம்! இவள் நீராடிக்கொண்டிருந்ததை அவன் காணவில்லை. தற்செயலாகவே அந்தப் பக்கமாக வெறித்திருக்கிறான். அவனிடம் என்ன பேசுவது என்று இவள் யோசிக்கும் முன்பாக ஆம்ராவின் பின்பாக குரல் கேட்டது.

"எனது அண்ணனுக்கு கண் பார்வை கிடையாது. எனவே நான்தான் வந்திருப்பதாக நினைத்து உங்களை தவறாக நினைத்து விட்டான். அண்ணா! நான் வந்துவிட்டேன். யாரோ ஒரு பெண்மணி உன் முன்பாக நிற்கிறார். அவரை நான் என்று நீ நினைத்துவிட்டாய்!" - கையில் சுள்ளிகளுடன் நின்ற ஒரு சிறுமி கூறினாள். அந்த வாலிபனின் தங்கை பத்ரஷீலாவாக இருக்க வேண்டும்....

அந்த அழகிய வாலிபனின் சிவந்த முகத்தில் பதற்றம் பரவியது.

https://telegram.me/aedahamlibrary

"மன்னித்துவிடுங்கள் அம்மணி! பார்வை இல்லாததால் நடந்த தவறு. நீங்கள் யார்? இந்தக் காட்டில் என்ன செய்கிறீர்கள்?”

“நான் மகத நாட்டைச் சேர்ந்த நாட்டியக்காரி. நாடோடியாகத் திகழ்ந்து நாட்டியம் ஆடி வயிற்றினைக் கழுவுகிறேன். மற்றபடி என்னைப் பற்றி சொல்வதற்கு வேறு ஒன்றும் இல்லை!” - ஆம்ரா கூறினாள்.

"கண்பார்வை இருக்கிறது அல்லவா... அது போதுமே!” -- அந்த வாலிபனின் குரலில் ஒலித்த வேதனை ஆம்ராவின் இதயத்தினைத் தாக்கியது.

“போதும் அண்ணா! அவர்களுக்கு உன் வேதனை எதற்கு? அக்கா! எனது பெயர் பத்ரஷீலா. எனது அண்ணனின் பெயர் வல்லபன். இந்த அருவி பாரதபுழை என்னும் ஆறாக ஓடுகிறது. காரணம், பாண்டவர்கள், தங்கள் வனவாசத்தின் போது தங்கிய இடம் இது. இந்த ஆற்றின் கரையில் உள்ள நாவாய் [1] அக்ரஹாரத்தை சேர்ந்தவர்கள் நாங்கள். எனக்கு தாய் கிடையாது. தந்தை முகுந்தநாயகர் வேதபாடசாலை நடத்துகிறார்.”

"என் பெயர் ஆம்ரபாலி! உனது அண்ணன்தான் என்னை மன்னிக்க வேண்டும், பத்ரஷீலா. நான் நீராடுவதை அவர் பார்த்துக்கொண்டிருப்பதாக நினைத்து அவரை கண்டிப்பதற்காகவே கோபத்துடன் வந்தேன். வந்த பிறகுதான் தெரிந்தது நிலைமை!” -

அவள் குரலில் ஒலித்த இரக்கத்தை செவியுற்றதும் அந்த வாலிபனிடம் சற்றே கோபம் பரவியது.

"என்ன செய்வது? எனது கர்மா அப்படி. சிறு தங்கையை சுள்ளி சேகரிக்க வைத்துவிட்டு, நான் எதற்கும் பிரயோஜனப்படாமல் பாறையில் அமர்ந்திருக்கிறேன். கொடிய விலங்கு வந்து எங்களை தாக்கினால் கூட என்னால் ஒன்றும் செய்ய இயலாது. நான் வரமாட்டேன் என்றுதான் சொன்னேன். பத்ரஷீலா தான் தனக்கு ஆண்துணை வேண்டும் என்று என்னை வலுக்கட்டாயமாக அழைத்து வந்தாள்..." வல்லபன் மனம் வெதும்ப அவனது முகத்தையே கவனித்தாள், ஆம்ரா. அந்த வாலிபனின் முகம் எவ்வளவு அழகாக இருக்கிறது. வட்டமான முகம். கதிரவனை போன்று மிளிரும் தேஜஸ். அகன்ற நாசி. வாழை மடலெனக் காதுகள். கண்களும் விரிந்து நீண்டிருந்தன, அவற்றில் ஒளி இல்லை என்கிற குறையே தவிர. அவனது முகத்தையே வெறித்துக் கொண்டிருந்தாள், ஆம்ரா.

https://telegram.me/aedahamlibrary

சுள்ளிகளைச் சேகரித்து வந்திருந்த பத்ரா, அதனை ஒன்றாகக் கட்டி, இடையினில் வைத்துக் கொண்டாள்.

“அக்கா! வாருங்களேன். எங்கள் கிராமத்தில் வந்து தங்குங்கள். எங்கள் வீடு சிறியதுதான். எனது தந்தையும், அண்ணனும், நானும் மட்டும்தான் இருக்கிறோம். உங்களுக்கு ஆட்சேபணை இல்லையென்றால், நீங்களும் எங்களுடன் வந்து தங்கலாம். வசதிகள் இல்லையென்றாலும், மனநிம்மதிக்கு உறைவிடம் எங்கள் வீடு!” பத்ரா கூறினாள்.

ஆம்ராவோ தொடர்ந்து வல்லபனையே வெறித்துப் பார்த்தாள். அவன் பிறவிக்குருடன் அல்லன். யாரோ அவனது கண் பார்வையினை வர்மக்கலையின் மூலம் பந்தனம் செய்திருக்கிறார்கள் என்பது பார்க்கும் போதே தெரிந்தது. அசோகனின் மகன் குணாளனை, திஸ்ஸரக்கா வர்மக்கலையை பிரயோகித்து குருடனாக்கிவிட்டிருந்தாளே. அந்த திஸ்ஸரக்காதானே, ஆம்ராவுக்கு ஆசான். அவளிடம் கற்ற கலை, ஆம்ராவுக்கு வல்லபனின் நிலையினை உணர்த்தியது.

"பத்ரா! உனது அண்ணனுக்கு எப்படி பார்வை பறிபோனது?" ஆம்ரா கேட்டாள்.

"ஆற்றில் தண்ணீர் எடுக்கப் போன எனது தாய், ஊர்த் தலைவரின் காளைமாடு முட்டியதால், உயிர் துறந்தாள். நியாயம் கேட்கப் போன எனது அண்ணனுடன், ஊர்த்தலைவரின் தம்பி மோதினான். அப்போது நிகழ்ந்த மற்போரில் எனது அண்ணனின் முகத்தை அவன் பலமாகத் தாக்க, எனது அண்ணன் பார்வையை இழந்துவிட்டான்." - சோகத்துடன் கூறினாள் பத்ரா.

"வல்லபரே! எனது நாட்டியத்தை காண விருப்பமா?" - திடீரென்று ஆம்ரா கேட்க, திகைத்தான் வல்லபன்.

“இது என்ன கேள்வி பெண்ணே! நொந்த புண்ணில் வேலினை பாய்ச்சுவது போன்று கேட்கிறாய். எனது இயலாமை உனக்கு நகைப்புக்கு இடமளிக்கிறதா என்ன?” - அவன் குரலில் காட்டம் தொனித்தது. பத்ரஷீலாவின் முகத்தில் படர்ந்திருந்த நட்பு கூட அவள் அவ்வாறு கேட்டதும் மறைந்து போனது.

“உங்களுக்கு நான் எவ்வளவு அழகாக இருக்கிறேன் என்று காட்ட வேண்டாமா...?” என்று கூறியபடி ஆம்ரா, வல்லபனை நெருங்கி நின்றாள். தனது சுட்டுவிரலை நீட்டி பத்ராவைத் திரும்பி நிற்கச் சொல்ல, அவளும் தன்னை அறியாமல், வல்லபனுக்கு முதுகினை காட்டி

https://telegram.me/aedahamlibrary

நின்றாள்.

அடுத்து என்ன நிகழ்கிறது என்று வல்லபன் அறிவதற்குள், தனது இடசுட்டுவிரலை அவனது நெற்றியின் மையத்தில் பதித்துச் சுழற்றியவள், அவனது நெற்றிப் பொட்டில் முஷ்டியால் குத்த வலியால் துடித்துப் போனான், வல்லபன். அவனது பிடரியினில் ஒருமுறை வெட்டியவள், அவனை நிலத்தில் சரிய விட்டாள். அண்ணனின் அலறலைக் கேட்டு பதைபதைப்புடன் திரும்பினாள் பத்ரா... அவனை நோக்கி ஓடிச் சென்று குனிந்தவளை தடுத்தாள், ஆம்ரா.

"அவசரப்படாதே. உனது அண்ணனுக்கு ஒன்றும் ஆகவில்லை. இருளில் இருந்து ஒளியினுள் எழப் போகிறார் வல்லபர்!" என்று கூறியபடி அலட்சியப் புன்னகையோடு நிலத்தில் கவிழ்ந்து கிடந்த அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

வலி சற்றே மட்டுப்பட, நிலத்தில் பதிந்திருந்த தலையை நிமிர்த்திப் பார்த்தான். இருளை எதிர் கொள்ளத் தயாரான அவனது கண்களில் கொலுசு அணிந்த இரு அழகான கால்கள் தென்பட்டன. 'என்ன இது...!' திகைப்புடன் கண்களை அகல விரித்தான். வெண்மை ஆடை ஈரத்தில் நனைந்திருக்க தேவதையைப் போன்ற ஒரு பெண்ணின் தேகம் தென்பட்டது. தலையை உயர்த்திக் கொண்டே போக, அழகிய புன்முறுவலுடன் நின்ற ஆரணங்கு ஒருத்தி காட்சி அளித்தாள். அவளது அழகு பிரமிப்பினை ஏற்படுத்த, தான் பார்வையை திரும்பப் பெற்றிருக்கிறோம் என்பதைக் கூட உணராமல், அவளையே நோக்கிக் கொண்டிருந்தான்.

"என்ன வல்லபரே! நான் அழகாக இருக்கிறேனா?" ஆம்ரா சிரித்தபடி கேட்டாள். "நொந்த புண்ணில் நான் இப்போது சந்தன குழைவினைப் பூசிவிட்டேன் என்று நினைக்கிறேன்..." என்று ஆம்ரா சொல்ல, பிறகுதான் தன் நிலையை உணர்ந்தான்.

"எனக்கு கண்பார்வை கிடைத்துவிட்டது. பத்ரா... எங்கே இருக்கிறாய்? எனக்கு பார்வை வந்துவிட்டது!" என்று குதூகலத்துடன் கூவ, பத்ரா, ஓடிச்சென்று அவனை அணைத்துக்கொண்டாள்.

"அண்ணா! உனக்கு கண்பார்வை வழங்கிய இந்த அக்கா நம் குலதெய்வம் கலைவாணிதான்" - என்று கதறியபடி ஆம்ராவின் பாதங்களில் விழ முற்பட்டாள்.

அவளை தடுத்து நிறுத்தினாள், ஆம்ரா. "நான் கலைவாணி அல்ல.

https://telegram.me/aedahamlibrary

கலைகளை வாணிபம் செய்பவள். என்னை தெய்வமாக்காதே. உனது அண்ணனுக்கு கண் பார்வை போகவில்லை. வர்மக்கலையை பிரயோகப்படுத்தி யாரோ அவரது பார்வையை பந்தனம் செய்திருந்தனர். நான் அந்த பந்தனத்தை நீக்கினேன். அவ்வளவே!” - என்றாள்.

"எனக்குப் பார்வை தந்த உங்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். எனது தந்தை வயதான காலத்தில் மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறார். எனது தங்கைக்கும் தக்க பாதுகாப்பு தேவை. இந்த நிலையில் நான் கண்பார்வையில்லாமல் கிடக்கிறேனே என்று மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தேன். எனது குடும்பத்தின் பிரச்னைகளை நொடியில் தீர்த்து விட்டீர்கள். தாங்கள் எனது குடிலுக்கு வரத்தான் வேண்டும். எனக்கு பேருதவி செய்த உங்களை அழைத்துச் செல்லாமல் இருந்தால், எனது தந்தை என்னை மிகவும் கோபிப்பார்!” வல்லபன் இறைஞ்சினான்.

“சரி! நான் வருகிறேன்!” ஆம்ரா சொல்ல, பத்ரா ஆனந்தத்துடன் முன்பாகச் செல்ல, அவளுக்கு அடுத்து வல்லபன் நடக்க, அவனைத் தொடர்ந்து நடந்தாள், ஆம்ரா. அவனது நடை சிம்ம நடையாக இருப்பதைக் கவனித்தாள்.

அசோகன் அவையில் நடனம் ஆடும் குமரியாக பதின்பிராயத்தில் அறிமுகமானாள். நடனம் மட்டுமே புரிந்து கொண்டிருந்த அவள், பதினாறு பிராயத்தில், தசரதனின் அந்தப்புரத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டாள். இது வரை ஆம்ரா அரசியல் காரணங்களுக்காகவும், எதிரிகளை வீழ்த்துவதற்கும் மட்டுமே அம்பாக ஏவப்பட்டிருந்தாள். அவள் எத்தகைய சமயங்களிலும் எந்த ஆண் மகனின் மீதும் மையல் கொண்டது கிடையாது. அத்திமலை ரகசியத்தை அறிவதற்கு பல்லவர்கள் மீது ஏவி விடுவதற்காகவே அவளைக் குழுவில் சேர்த்திருந்தான் அசோகன். இப்போது முதன்முறையாக ஒரு எளிய வேதியன் இவள் மனதை அசைத்துப் பார்த்தான். அந்த வாலிபனின் கம்பீரத்தை ரசித்தபடி அவன் பின்பாக நடந்து கொண்டிருந்தாள், ஆம்ரா. அவனிடம் தான் காதல் வசப்பட்டுவிடுவோமோ! காதல் எல்லாம் இவளது வாழ்க்கையில் கிடையாது. பின் ஏன் இந்த வாலிபன் தனது மனதைக் கவர்கிறான்?

மனநிம்மதிக்கு உறைவிடமான தனது குடிலுக்கு பெரிய பிரச்னையினை ஆம்ராவின் உருவில் அழைத்துக் கொண்டு போவதை அறியாமல், வல்லபனும், பத்ராவும் தங்களது நாவாய் கிராமத்தை நோக்கி நடந்து

https://telegram.me/aedahamlibrary

கொண்டிருந்தனர்.

[1] திருநாவாய் என்னும் வைணவ திவ்யதேசம், கேரளாவில் பட்டம்பி அருகில் பாரத புழா ஆற்றின் கரையில் உள்ளது.

*****

https://telegram.me/aedahamlibrary

# 9. புனலை எரிக்கும் கனல்கண்ணன்

பொழுது புலர்வதற்கான அறிகுறிகளே இன்னும் தென்படவில்லை. கோயில் அர்ச்சகர்கள் சிலர் மட்டும் பிரம்ம முஹூர்த்தத்தில் மன்னன் கரிகாலனின் பெயரில் ஹோமங்களை வளர்க்க வேண்டும் என்பதற்காக நீராடி, தூய ஆடைகளை அணிந்து ஆலயங்களுக்குச் சென்று கொண்டிருந்தனர். அன்று மன்னன் கரிகாலனின் பிறந்தநாள். புகார் நகரமே அதனைக் கோலாகலமாகக் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பதுங்கி வாழ்ந்த மன்னன், பட்டத்து யானையால் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டு, மன்னனாக மாலை சூடப்பட்டு, சூழ்ச்சிகளை வென்று, போரில் வெற்றிவாகை சூடியிருந்ததால், இந்த பிறந்தநாளையும் கோலாகலமாகக் கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்திருந்தார், புதிய தலைமையமைச்சர், உய்யுலகர். மக்களுக்கு எல்லாமே புதிது. எதிரிகளின் அடக்குமுறை ஆட்சியில் வெதும்பிக் கிடந்த சோழ நன்மக்கள், கரிகாலனின் நல்லாட்சியில் ஆனந்தத்தால் திக்குமுக்காடிக் கொண்டிருந்தனர். எத்தகைய மன்னன் தங்களை ஆள வேண்டும் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தனரோ, அத்தனை நற்குணங்களையும் கொண்டிருந்தான், கரிகாலன். கரிகாலன் பதவிக்கு வந்ததையே கனவாக நினைத்து தங்களையே நம்ப முடியாமல் வாழ்ந்தனர் மக்கள். கரிகாலனை கொண்டாடுவதற்கு, தங்களுக்கு கிட்டிய வாய்ப்பாகவே அந்த பிறந்த நாள் வைபவத்தை எண்ணினர், மக்கள். ஆனால், கரிகாலன் தான் தனது பிறந்தநாளைக் கொண்டாடும் மனநிலையில் இல்லை. பெருவளத்தான் என்று நாடு அவனை கொண்டாட, கடந்த இரு வருடங்களாக, அவன் நாட்டை வறட்சி வாட்டிக் கொண்டிருந்தது. ஆற்றோரம் இருந்த கிராமங்கள் கூட நீர் அதிகமின்றி சிரமப்பட்டுக் கொண்டிருக்க, உழவுப்பணி பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. எனவேதான், தனது பிறந்த நாளைக் கொண்டாடும் மனநிலையில் அவன் இல்லை.

வெண்காட்டு சிவனார் ஆலய அர்ச்சகர், ஆலவாய தீட்சிதர், அந்த இருள் நீங்காத வேளையில் ஆலயத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தார். ஆலயத்திற்குச் சென்று ஹோமத்திற்கான பணிகளைத் துவக்க வேண்டும். புதன் கிரகத்தின் ஆளுமை பெற்ற அந்த சிவஸ்தலத்தில், நாடாளும் மன்னனின் பெயரில் யாகம் செய்தால், நல்லாட்சி நிலைக்கும் என்கிற நம்பிக்கையில், ஊர்ப் பெரியவர்கள் மன்னனின் பிறந்தநாளை முன்னிட்டு அன்று ஹோமம் வளர்க்கத் திட்டமிட்டிருந்தனர்.

வாய் சிவன் நாமத்தை ஜெபித்துக் கொண்டிருக்க, தீட்சிதர் நிதானமாக

https://telegram.me/aedahamlibrary

ஆலயத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தார். அவரது வீடு ஆலயத்தின் மிக அருகேதான் இருந்தது. இருப்பினும், இன்னும் இருள் போர்வை விலகவில்லை என்பதால், பாதை புலப்படாமல் ஒவ்வொரு அடியாக எண்ணி நடந்து கொண்டிருந்தார். கோபுரத்தின் உச்சியில் எரிந்து கொண்டிருந்த தீப கப்பரையும் அணைந்து விட்டிருந்ததால், கோபுரம் இருக்கும் திக்கு கூட தெரியவில்லை.

தனது மனையிலிருந்து புறப்பட்டு சில அடிகளே நடந்திருப்பார். திடீரென்று ஒலித்த அந்த கிசுகிசுத்த குரல் அவரை திடுக்கிடச் செய்து, மேலே தொடரமுடியாமல் தடுத்தது.

“சற்றே நில்லும், தீட்சிதரே! மிக அவசரம்! மிக அவசரம்!"

அந்த கிசுகிசுத்த குரலில் ஒலித்தது, பதற்றமா, எச்சரிக்கை உணர்வா?

“யார்... யார்...?” - திகிலுடன் ஒலித்தார், தீட்சிதர். அவரது நாசியை மூலிகை வாசம் தாக்கியது. அர்ச்சகர் மேனியெங்கும் பூசியிருந்த திருநீறும், அந்த மூலிகை மணமும் சேர்ந்து அங்கே ஒரு ரம்யமான வாசத்தினைப் படரச் செய்தது. மன்னருக்கு இன்னும் மறைமுக எதிரிகள் இருக்கத்தான் செய்தனர். அவர்களில் யாராவது தனது வழியை மறைத்து நிற்கின்றாரோ என்கிற சந்தேகம் தீட்சிதருக்கு.

"மிக அவசரம், தீட்சிதரே! நான் குதம்பைச் சித்தன். காவிரிக்கரையில் மோன நிலையில் அமர்ந்திருக்கிறேன். அதைத் தவிர என்னைப் பற்றி நீர் தெரிந்து கொள்ள வேண்டியது ஒன்றுமில்லை. ஆனால், காவிரி நதிக்கு பெரிய ஆபத்து நிகழ்ந்து கொண்டிருக்கிறது. கா விரிந்தால், கரி வாழும். மன்னன் பிறந்தநாளுக்காக அனலோம்பச் செல்லும் தாங்கள் அதைவிட ஒரு முக்கியமான பணியைச் செய்தால், காவிரித் தாயின் அருளுக்கு பாத்திரமாவீர்கள். இந்த ஆபத்தை மன்னன் உணர வேண்டும். மிக அவசியம், அவசரமும் கூட. நான் தரும் ஓலையை எப்படியாவது அரண்மனைக்குச் சென்று மன்னரிடம் சேர்ப்பித்துவிடுங்கள்!” - என்றது அந்தக் குரல்.

உடனேயே தீட்சிதரின் கையில் ஓர் ஓலை திணிக்கப்பட்டது. மூலிகை மணம் தனது நாசியைவிட்டு அகல, குதம்பைச் சித்தர் புறப்பட்டுப் போய்விட்டார் என்பதை புரிந்துகொண்டு யோசனையுடன் நின்றார்.

ஹோம காரியம் முக்கியம்தான். ஆனால் மிகவும் அவசியம், அவசரமும் கூட என்று சித்தர் கூறியிருக்க, ராஜாங்க காரியம்தான் ஹோம காரியத்தைவிட அப்போதைக்கு முக்கியம் என்று நினைத்தவர்,

https://telegram.me/aedahamlibrary

நாட்டையே வாழ வைக்கும் காவிரி அன்னைக்கு ஆபத்து என்றால், தான் விரைந்து செயல்பட வேண்டும் என்கிற தீர்மானத்திற்கு வந்தவராக, புகார் நகரை நோக்கி விரைந்தார். வெண்காட்டில் இருந்து புகார் நகர் பெரும் தொலைவில் ஒன்றும் இல்லை. வேகநடை போட்டால், சூரியோதயத்திற்குச் சென்றுவிடலாம். தீட்சிதர், கோயிலுக்கு எதிர்புறமாக நடந்தார்.

சூரிய கிரணங்கள் கரிகாலனின் அரண்மனைக்குள் நுழைந்து அனைவரது உடலிலும் புத்துணர்ச்சியைப் பாய்ச்சிக் கொண்டிருந்த நேரம், அர்ச்சகர் ஓட்டமும் நடையுமாக அரண்மனையினுள் பிரவேசித்தார். மன்னரின் பிறந்தநாள் அன்று விடியலில் அர்ச்சகர் ஒருவரின் வருகை எவ்வித சந்தேகத்தையும் எழுப்பவில்லை. அவரைத் தடுத்து, கேள்வியெழுப்பிய ஒன்றிரண்டு காவலர்கள் கூட, ‘மன்னருக்கு ஓலை கொண்டு வந்திருக்கிறேன். மிக அவசியம். அவசரமும் கூட!' என்று சித்தர் கூறிய வாக்கியத்தை கிளிப்பிள்ளை போன்று உரைக்க, நேராக தலைமையமைச்சர் உய்யுலகரின் அறைக்குச் சென்று அமரவைக்கப்பட்டார். ஹோமப் பணிகள் இருப்பதை உணர்ந்து, அதிகாரிகள் சுட்டிக்காட்டிய பஞ்சணை நாற்காலியில் அமராமல், வெறும் தரையில் அமர்ந்து கொண்டார், அர்ச்சகர்.

உய்யுலகருக்கு தகவல் சென்று அவர் அரண்மனை வளாகத்தில் இருந்த தனது ஜாகையில் இருந்து தனது அலுவலக அறைக்கு விரைந்து வந்தார்.

பவ்யத்துடன் எழுந்து நின்ற அர்ச்சகர், ஓலையை அவரிடம் நீட்டியபடி பேசினார். "தலைமை அமைச்சரே! வெண்காட்டு சிவனார் கோயில் அர்ச்சகன் நான். மன்னர் பிறந்த நாளைக்கு ஹோமங்கள் வளர்ப்பதற்காக பிரம்ம முஹூர்த்தத்தில் ஆலயத்திற்கு செல்லும் வழியில், குதம்பைச் சித்தர் என்பவர், இதை மன்னரிடம் சேர்த்து விடும்படி கூறினார். மிகவும் அவசரம் என்று அவர் கூறியதால் அரண்மனை வந்தேன்!” தீட்சிதர் நீட்டிய ஓலையினை வியப்புடன் நோக்கினார், உய்யுலகர்.

ஓலையை உடனே படித்துப் பார்த்தார்.

'அனலால் புனலுக்கு கேடு. கரிக்கோ உடனே அரங்கத்திற்கு வரவும்.

அங்கிருந்து காவிரிக் கரையோரமாக மேற்கே வரவும். நான் அங்கே காத்திருப்பேன். அவசரம்!' - என்று மட்டுமே அந்த ஒலியினில் குறிப்பிடப்பட்டிருந்தது.

https://telegram.me/aedahamlibrary

சற்று நேரம் யோசித்துக் கொண்டு நின்றார், உய்யுலகர். "ஐயா. ஹோமத்திற்கு நேரமாகிவிட்டது. அடியேன் விடை பெறுகிறேன்!" என்று அர்ச்சகர் கைகூப்ப, அவரை நோக்கித் தலையசைத்துவிட்டு கரிகாலனின் பள்ளியறையை நோக்கி நடந்தார், உய்யுலகர்.

***

கலுவத்தில் சூரணத்தைப் பொடி செய்து கொண்டிருந்த தோழி செவ்வந்தியை, பலவீனத்துடன் நோக்கினாள் நறுங்குழல் நாய்ச்சி. நாய்ச்சியால் அடியோடு நடமாட முடியவில்லை. மஞ்சத்திலேயே கிடந்தாள். கரிகாலனின் திருமணத்தைக் கண்டுவிட்டால், கிளம்பிவிடலாம் என்கிற வைராக்கியத்தோடு உயிரை உறுதியாகப் பிடித்துக் கொண்டு காத்திருந்தாள். அன்று அவளது ஆருயிர் மகனின் பிறந்த தினம். வழக்கமாக, பிறந்த தினத்தன்று, கதிரவன் எழுவதற்கு முன்பாகவே அவள் ஈன்ற சூரியன் தோன்றி அவளது பாதங்களில் பணியும். ஆனால் இன்று சூரியன் உச்சி வானை நோக்கி ஊர்ந்து சென்று கொண்டிருக்க, இன்னும் கரிகாலனை காணவில்லை. அவன் வருவான் என்று எதிர்பார்த்துக் காத்திருந்து, அவன் வராமல் போக, ஆற்றாமை அதிகமாகி, தோழி செவ்வந்தியை வாய் திறந்தே கேட்டுவிட்டாள்.

"செவ்வந்தி! ஏன் இன்னும் எனது மகன் வரவில்லை? இன்று அவனது பிறந்த நாள் ஆயிற்றே! என்னிடம் ஆசி வாங்கிய பின்தானே ஆலயத்திற்கே செல்வான்?" - ஈனஸ்வரத்தில் கேட்டாள், நாய்ச்சி.

“அரசியாரே! மன்னர் தனது பிறந்த நாளை கொண்டாடப் போவதில்லை என்று அரண்மனையில் பேசிக்கொண்டிருந்தனர். அதனால்தான் தங்களிடம் ஆசி வாங்க வரவில்லையோ என்னவோ?” - கலுவத்தினில் பொடித்திருந்த சூரணத்தை, வாழைஇலைவிடலை ஒன்றில் சேகரித்தபடி செவ்வந்தி கூற, நாய்ச்சி முகம் சுருங்கினாள்.

இரும்பிடர்த்தலையாரிடம் தனது மகன் கரிகாலனின் திருமணம் குறித்து பேசி ஒரு முடிவுக்கு வந்திருந்தாள், நாய்ச்சி. தனது சகோதரன் இரும்பிடர்த்தலையாரின் மகள் நறுமலராளை கரிகாலனின் மனையாளாக ஏற்க அவள் திட்டமிட்டிருந்தாள். பிறந்த நாள் பரிசாக, கரிகாலனிடம் அந்த தகவலைத் தெரிவிக்க வேண்டும் என்கிற ஆவலில்தான், அவன் ஏன் இன்னும் வரவில்லை என்று செவ்வந்தியிடம் கேட்டாள்.

கரிகாலன், தனது பிறந்த நாளை கொண்டாடப் போவதில்லை

https://telegram.me/aedahamlibrary

என்கிறாளே இவள்? என்ன காரணம்? - நாய்ச்சி திகைத்தாள்.

“பிறந்த நாளை கொண்டாடப் போவதில்லையா? ஏன்?"

நாய்ச்சியின் கேள்விக்கு என்ன பதில் கூறுவது என்று குழம்பி மௌனம் சாதித்தாள் செவ்வந்தி. மன்னரின் தாயான அரசிக்கே காரணம் தெரியாத போது, தோழியாகிய தனக்கு எப்படி விவரங்கள் தெரிந்திருக்கக் கூடும் என்று நினைத்து வாளாயிருந்துவிட்டாள் போலும்.

“நான் உடனே கரிகாலனைப் பார்க்க வேண்டும்! ஏற்பாடு செய்?” - செவ்வந்தியிடம் கூறினாள், நாய்ச்சி.

அவசரமாக சூரணத்தை அரசியின் வாயில் புகட்டி விட்டு, பருகுவதற்கு சிறிது நீரை தந்துவிட்டு, அவளது கட்டளையை நிறைவேற்றுவதற்காக அறையைவிட்டு அகன்றாள், செவ்வந்தி.

செவ்வந்தி தகவலை அரண்மனையதிகாரிக்குத் தெரிவிப்பதற்கு முன்பாகவே கரிகாலன் திருவரங்கத்திற்கு கிளம்பிச் சென்றுவிட்டிருந்தான். தனது பிறந்த நாள் ஆகையால், அரங்கமா நகரில் கோயில் கொண்டிருக்கும் மாலவனை தரிசிக்க அரங்கம் சென்றிருப்பதாகவே பலரும் நினைத்துக் கொண்டிருந்தனர். ஆனால், தரிசனம் முடிந்ததும் தனது தலைமை அமைச்சர் உய்யுலகரை நோக்கி கண்ணசைத்தான், கரிகாலன். இருவரும் தத்தம் புரவிகளில் ஏறியதும், காவிரிக் கரையோரமாக மேற்கே பயணித்தனர்.

காவிரிக்கரையோரம் படர்ந்திருந்த காடுகளைக் கடந்து சென்று கொண்டிருந்தனர். உய்யுலகர் காவிரியாற்றை வெறித்துப் பார்த்துக்கொண்டே வந்தார்.

உய்யுலகருக்கு மட்டுமல்ல! காவிரியை நோட்டம் விட்டபடி வந்து கொண்டிருந்த கரிகாலனுக்கும் ஏதோ விசித்திரமாகப் பட்டது. என்ன என்று சொல்வதற்கு தோன்றாதபடி காவிரி பொலிவு இழந்து காணப்பட்டதாகத் தோன்றியது. உய்யுலகருக்கு ஏதாவது தோன்றியிருக்குமா என்கிற எண்ணத்தில் அவரைத் திரும்பி நோக்கினான், கரிகாலன்.

"அமைச்சரே! சித்தர் நம்மை அவசரமாக அழைத்ததற்குக் காரணம் தங்களுக்கு புலப்பட்டதா?” - கரிகாலன் கேட்க, தலையசைத்து மறுத்தார், உய்யுலகர்.

https://telegram.me/aedahamlibrary

“ஒன்றும் புரியவில்லை மன்னா! ஆனால் நமது காவிரியாறு சற்றே தனது பொலிவினை இழந்ததாகத் தோன்றுகிறது. ஏன் என்று தெரியவில்லை!” தலைமையமைச்சர் கூற, இருவரும் தங்கள் புரவிகளில் தொடர்ந்து கொண்டிருந்தனர். தான் கண்களில் படும் வரை தொடர்ந்து மேற்கே பயணம் செய்து கொண்டிருக்கும்படி ஓலையில் குதம்பைச் சித்தர் கூறியிருந்தார் என்பதால் தொடர்ந்து பயணித்துக் கொண்டிருந்தனர். பிற்பகலும் வந்துவிட்டது. இருவரும் தொடர்ந்து மேற்கே சென்று கொண்டிருந்தனர்.

திடீரென்று -

கரிகாலனின் புரவி கனைக்க, அதற்கு பதில் தருவது போன்று, உய்யுலகரின் புரவியும் கனைத்தது. குதிரைகள் நிற்க, திடீரென்று காவிரியில் இருந்து எழுந்து வருபவரைப் போன்று, கரையைக் கடந்து அவர்கள் முன்பாகத் தோன்றினார், குதம்பைச் சித்தர்.

“உனது பிறந்த நாளில் உன்னை இந்த வனாந்தரத்திற்கு பயணம் செய்ய வைத்துவிட்டேன், கரிகாலா! விஷயம் மிகவும் அவசரம் என்பதால் வேறு வழியில்லை. இருவரும் என் பின்னால் வாருங்கள்!" சித்தர் கூற, கரிகாலனும், உய்யரும் தங்கள் புரவிகளில் இருந்து இறங்கி அவரை பின்தொடர்ந்தனர். காவிரி ஆற்றின் மையத்தில் இருந்த அந்த சிவனாரின் ஆலயத்தைப் பிரமிப்புடன் கவனித்தான், கரிகாலன்.

“இதென்ன ஆற்றின் மையத்தில் ஆலயம்?” - சித்தரைக் கேட்டான் கரிகாலன்.

“ஆம் கரிகாலா! நீர் குறைந்தால் மட்டுமே வெளிப்படும் ஈசன் இவர். இப்போது நம் கண்களுக்கு நட்டாற்றேஸ்வரர் [1] புலப்படுகிறார் என்றால், காவிரி வற்றி வருகிறது என்று பொருள்!” - சித்தர் கூற, கரிகாலனும், உய்யுலகரும் திகைத்தனர்.

"காவிரி வற்றி வருகிறதா?” - கலவரத்துடன் கேட்டார் உய்யுலகர்.

"ஆம்! அதற்காகத்தான் உன்னை அவசரமாக வரவழைத்தேன். காவிரி வற்றி வருவதற்கான காரணத்தை நீங்கள் அறிய வேண்டாமா?” - குதம்பைச் சித்தர் ஆலயத்தினுள் நுழைந்து தீபத்தை ஏற்ற, இருவரும், தீப ஒளியில் சிவனாரை தரிசித்தனர்.

“உனது நாட்டின் ஜீவநதியாக உள்ள காவிரி வறண்டு வருவதால்தான் வறட்சி உன் நாட்டினுள் நுழைந்துள்ளது. இதற்கு காரணமே, உனது

https://telegram.me/aedahamlibrary

சகோதரன் உன் மீது கொண்டுள்ள துவேஷம்தான்!” - குதம்பைச் சித்தர் கூற, திடுக்கிட்டான் கரிகாலன்.

“என் சகோதரனா?” - அரண்டு போனான், கரிகாலன்.

"ஆம்... தொண்டைமான் இளந்திரையன். அவன் உன் மீது வன்மம் கொண்டிருக்கிறான். அதனால்தான் காவிரி நதியை வற்றச் செய்து கொண்டிருக்கிறான்!” - சித்தர் கூறினார்.

“அவனால் எப்படி காவிரியை வற்றச் செய்ய முடியும்?” - வியப்புடன் கேட்டான் கரிகாலன்.

“உனது சகோதரன் இளந்திரையனின் நெற்றியில் ஒரு மூன்றாவது கண் இருப்பதை கண்டிருக்கிறாயா?” - சித்தர் கேட்டார்.

"ஆம்; பார்த்திருக்கிறேன்! ஒருமுறை என்னையே தனது நெற்றிக்கண்ணை திறந்து பொசுக்கிவிடுவேன் என்று எச்சரித்திருக்கிறான்!” - கரிகாலன் கூறினான்.

“ஆம்! ஒரு குடுவையில் காவிரி நீரைச் சேகரித்து வைத்து, அன்றாடம் தனது நெற்றிக்கண்ணைத் திறந்து அதனை எரித்து வருகிறான். அவன் ஒத்தாடை ஈசனின் அருள் பெற்றவன். எனவேதான் அவனது மூன்றாவது கண்ணுக்கு வலிமை உள்ளது. அதன் தீட்சண்யம் தாங்காமல் காவிரி வறண்டு போகிறது. குடதிசையில் மழைக்குப் பஞ்சமில்லை. இருப்பினும் காவிரியில் நீர் வந்தும் வற்றுகிறது என்றால், பல்லவன் இளந்திரையனின் நெற்றிக்கண் பார்வையே காரணம்.” - குதம்பைச் சித்தர் கூற, உறைந்து போனான், கரிகாலன்.

"சித்தரே! அவனை எப்படி தடுப்பது? காவிரியை காப்பதற்கு என்ன வழி?” கவலையுடன் கேட்டான் கரிகாலன்.

[1] காவிரியின் மத்தியில் இருக்கும் சிவன் கோவில்களில் கரூர் ஈரோடு பாதையில் சாவடி பாளையம் அருகே காவிரி ஆற்றின் மத்தியில் காவிரியில் நீர் அளவு குறைந்தால் மட்டுமே, வெளிப்படும் நட்டாற்றேஸ்வரர் கோயில் உள்ளது. நட்டாற்றில் விட்டுவிட்டான் என்று நாம் நம்மைக் கைவிட்டவர்களைப் பற்றி குறிப்பிடுவோம். நட்டாறு என்றால் நடு ஆறு. நடு ஆற்றில் கோயில் கொண்டிருந்ததால் இவர் நட்டாற்றேஸ்வரர். கரிகாலனிடம் காவிரிக்கு ஆபத்து என்று சித்தர் கூறிய இடம் இதுவாக இருக்கலாம். ஆதாரமில்லை.

*****

https://telegram.me/aedahamlibrary

# 10. பிரும்ம ஓலை

தனது குடிலின் திண்ணையில் படுத்திருந்தான் வல்லபன். எதிர்த் திண்ணையில் படுத்திருந்த அவனது தந்தை முகுந்தநாயகர் உறங்கிவிட்டிருந்தார். வல்லபனுக்கு உறக்கம் பிடிக்கவில்லை. தனது குடிலின் உள்ளே ஒரு பேரழகி உறங்கிக்கொண்டிருக்கும்போது எந்த வாலிபனுக்குத்தான் உறக்கம் பிடிக்கும். உறங்குபவளும் ஒரு சாதாரண நங்கையா என்ன? நடன மாது மட்டுமா? இவனுக்கு மீண்டும் பார்வையைத் திருப்பித் தந்தவள் அன்றோ. இல்லையென்றால், இன்னும் இவன் தனது அன்றாட அலுவல்களுக்கு தந்தையையோ இல்லை தங்கையையோ நாடிக் கொண்டிருக்கக்கூடும். தனக்கு கண்பார்வை அளித்த ஆம்ரபாலிக்கு தன்னால் என்ன கொடுக்க இயலும் என்று யோசித்துக் கொண்டிருந்தான். காட்டில் இருந்து கண்களில் ஒளியுடன் அவன் திரும்பியதைக் கண்ட முகுந்தநாயகர், தனது கண்களில் ஆனந்தக் கண்ணீருடன் ஆம்ராவை கைகுவித்து நன்றி கூறினார்.

"அம்மா! நான் வணங்கும் விசாரதா தேவிதான் உன்னை வரவழைத்து என் மகனுக்கு பார்வையளித்திருக்கிறாள். உனக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்?" - முகுந்தநாயகர் கூறினார்.

“கைம்மாறு எல்லாம் பெரிய வார்த்தைகள், பண்டிதரே! எனக்கு இப்போது தேவை மிகவும் அற்ப விஷயமே. சிறிது காலத்திற்கு உங்கள் குடிலில் தங்குவதற்கு எனக்கு அனுமதி தர வேண்டும்!” - ஆம்ரா கேட்டாள்.

“கரும்பு தின்பதற்கு கூலி கேட்கிறாயே! நீ எவ்வளவு காலம் வேண்டுமானாலும் எங்களுடன் தங்கலாம்.” -- முகுந்தநாயகர் கூறினார்.

“வாருங்கள் அக்கா! இனி நீங்கள் எங்கள் குடும்பத்தில் ஒருவர்!” என்று தாவி வந்து ஆம்ராவை உள்ளே அழைத்துக்கொண்டு சென்றாள், பத்ரசீலா,

தந்தைக்கு உதவியாக வேதபாடசாலை பணிகளைக் கவனித்த வல்லபன், பிறகு நாவாய் கிராமத்தின் மையத்தில் இருந்த மாலவன் [1] ஆலயத்திற்குச் சென்றான்.

ஆலயத்தின் உள்ளே நுழைந்ததும், நாராயணாத்ரி பட்டர் வல்லபனை புன்னகையுடன் பார்த்தபடி நாவாய் முகுந்த பெருமானுக்கு ஆரத்தியைக்

https://telegram.me/aedahamlibrary

காட்டினார். வல்லபன் கண்மூடி பிரார்த்தனை செய்தான். அவனுக்கு துளசியும் திவ்ய சந்தனமும் அளித்தபடி அவன் கண்களை ஊடுருவி நோக்கினார், பட்டர்.

“உனது வீட்டுக்கு யாரோ பெண் வந்திருப்பதாக நம் கிராமம் முழுவதும் ஒரே பேச்சாக இருக்கிறது. ஆனால் வீட்டு வாயிலில் ஆரத்தி சுழற்றியதற்கான அறிகுறி ஒன்றும் புலப்படவில்லை. ஆக, அவள் உனது மனையாளாக இருக்க முடியாது. உன் தந்தைக்கும் வயது ஏறிவிட்டதால், உனக்கு சிற்றன்னை வரவும் வாய்ப்பில்லை. பிறகு, ஒரு வாலிபன் உள்ள வீட்டில் தங்கியிருக்கும் அந்தப் பெண் யார்?" - பட்டர் கேட்க, திணறினான், வல்லபன்.

“எனக்கு கண்பார்வை கொடுத்த தெய்வம்தான் எனது வீட்டில் தங்கி இருக்கிறது. அவளை என்னிடம் அனுப்பிய இதோ, இந்த நாவாய் முகுந்தனை கேளுங்கள். கூறுவான்!” என்று மட்டும் கூறிவிட்டு புறப்படுவதற்கு எத்தனித்தான்.

“வல்லபா! நான் பொழுது போகாமல் ஊர்வம்புகளை விசாரிப்பதற்காக உன்னை இந்த கேள்வி கேட்கவில்லை. கும்ப அமாவாசை அன்று பித்ரு பலி கொடுத்த அன்றைக்கு தேவ பிரஷ்ணம் கூறினாரே, ஊர் பெரியவர் உன்னத பரந்தாமர். உனக்கு நினைவில் உள்ளதா? ஒரு பெண்ணால், நமது நாவாயின் அந்தணக்குடிக்கு பெரும் ஆபத்து நேரும் என்று கூறினாரே. அந்த கவலையில்தான் உன்னைக் கேட்டேன். திடீரென்று உனது குடிலில் புதிய பெண் ஒருவள் முளைத்திருக்கிறாளே! அவளைப் பற்றி விசாரிக்கவே உன்னிடம் இந்த விஷயத்தைப் பிரஸ்தாபித்தேன்!”

பட்டர் கூற வல்லபன் யோசனையுடன் நாவாய் முகுந்தனைப் பார்த்தான்.

“சுவாமி! இதோ இந்த நாவாய் முகுந்தனை எனது பதினான்கு வயதில் தரிசித்தேன். அதற்குப் பிறகு அவனைக் காணும் பாக்கியம் எனக்குக் கிட்டவில்லை. இப்போது இருபத்து நான்கு பிராயங்களில் மீண்டும் அவனை தரிசித்தபடி நிற்கிறேன். அந்தப் பெண்ணின் கருணையால் மட்டுமே, இப்போது பெருமானை தரிசிக்க முடிகிறது. ஆபத்து விளைவிப்பவளாக இருந்தால், இப்போது அடியேனால், மாலவனை தரிசிக்க முடியுமா என்ன? உன்னத பரந்தாமர் கூறியது போல், அந்தப் பெண் இவளாக இருக்காது. அப்படி இம்மியளவு சந்தேகம் இருந்தால்கூட எனது தந்தை அந்தப் பெண்ணை அகத்தினுள் அனுமதித்திருக்கமாட்டார். எனது தந்தை மனிதர்களின் மனதினை

https://telegram.me/aedahamlibrary

படிப்பவர் என்பது தங்களுக்கு தெரியும் அல்லவா?" -- வல்லபன் கேட்டான்.

"தெரியும் வல்லபா! ஒரு எச்சரிக்கை உணர்வில்தான் கேட்டேன்! நமது ஆலயத்தில் ஒவ்வொரு வருடமும் பிரம்ம ஓலை படிப்பவர் உனது தந்தைதான். அவருக்கு பிறகு நீதான் அந்த ஓலையினை தொடர்ந்து படிக்கப் போகிறாய். பிரம்ம ஓலை என்பது பிரம்ம ரகசியம். அதனால்தான் உனது வீட்டில் புதிதாக ஒரு பெண் வந்திருப்பதால், அவளைப் பற்றி விசாரிக்க நேர்ந்தது. தவறாக இருந்தால் மன்னித்துக் கொள்!" என்றபடி பட்டர் தொடர்ந்து தனது பணியினைக் கவனிக்கச் செல்ல, வல்லபன் பிராகாரத்தை வலம் வரச்சென்றான். ஆனால் சற்று முன் பட்டர் கூறிய விவகாரம் அவன் மனதை ஆக்கிரமித்தது உண்மைதான். ஒவ்வொரு அமாவாசை அன்றும் அந்தணக்குடியைச் சேர்ந்த பிராமணர்களும், ஊர்மக்களும் பாரத புழை ஆற்றில் பித்ருக்களுக்கு பலி [2] சமர்ப்பிப்பது வழக்கம்.

கடந்த கும்ப மாசத்தில் பித்ருக்களுக்கு பலி பூசை சமர்ப்பித்துக் கொண்டிருந்த போது ஊர் பெரியவரான உன்னத பரந்தாமர் பாரத புழை ஆற்றில் நின்று கொண்டு பலி சடங்குகளை மேற்பார்வை இட்டுக் கொண்டிருந்த போது ---

அவரது காலை யாரோ பற்றிக் கொண்டது போன்ற உணர்வு. திடீரென்று தலைவிரித்த பெண்ணின் உருவில் எழுந்த பேரலை ஒன்று அவரை மூடி மறைத்தது. அந்த அலை விலகிய போது, கண்கள் சிவக்க, உக்கிரத்துடன் நின்றிருந்தார் உன்னதர்.

"எச்சரிக்கை! நாவாய் பிரம்ம ஓலைக்கு ஆபத்து. அதை வாசிக்கும் அந்தணர்குடிக்கும் ஒரு பெண்ணால் ஆபத்து மிகவும் எச்சரிக்கை தேவை!" என்று அலறியபடி பாரத புழா ஆற்றிலேயே மயங்கி விழுந்தார். அந்த சம்பவத்தைத் தான் நாராயணாத்ரி பட்டர் நினைவுபடுத்தி இருந்தார்.

உண்மைதான்! பட்டர் கூறிய சம்பவத்தை தந்தை முகுந்தநாயகர் ஏற்கனவே வல்லபனிடம் கூறியிருந்தார் நமது குடியில் பத்ரஷீலாவைத் தவிர வேறு யார் பெண் என்றுதான் யோசித்துக்கொண்டிருந்தார்கள். குருடனான தன்னை எந்தப் பெண் கணவனாக ஏற்கப் போகிறாள்?

ஆக, பத்ராவை தவிர வேறு எந்தப் பெண்ணும் தங்கள் குடியில் தற்போதைக்கு இல்லை. வழியில் போகும் பெண்ணால் தங்கள் குடிக்கு

https://telegram.me/aedahamlibrary

ஆபத்து என்று உன்னத பரந்தாமர் ஆவேசித்துக் கூறியதையும் முகுந்தநாயகரின் குடும்பம் பெரியதாக நினைத்துக்கொள்ளவில்லை. முகுந்தநாயகரின் மனைவி விசாலாக்ஷி காளை மாடு முட்டி மரணத்திருந்ததால் உன்னதர் அங்ஙனம் கூறியிருக்கிறார் என்றே முடிவு கட்டிவிட்டிருந்தனர். மேலும், ஒரு பெண்ணினால் என்ன ஆபத்து விளைந்துவிடப் போகிறது என்றும் நினைத்திருந்தார்கள். மகனுக்கு கண் பார்வை அளித்தவள் என்கிற நன்றியுணர்வும் தோன்றியிருந்தது. அந்த நன்றியுணர்வினில் ஆம்ராவிற்கு புகலிடம் தந்துவிட்டிருந்தனர். ஆம்ரபாலி ஆபத்தானவளா?

ஆனால் அவளை பார்க்கும் போது எந்த ஆபத்தும் தெரியவில்லையே. அவள் ஒரு நடன மாது. நடனத்தோடு வர்மக்கலையைக் கற்றிருக்கிறாள். பேரழகியான அவளுக்குப் பாதுகாப்பு முக்கியம் என்பதால் வர்மக் கலையினை கற்றிருக்கிறாள். மற்றபடி அவளை எப்படி ஆபத்தானவளாகக் கருத முடியும்?

யோசனையுடன் ஆலயத்தினை வலம் வந்தவன், தனது குடிலுக்குத் திரும்பினான். பத்ரா உணவை சமைத்துக் கொண்டிருந்தாள்.

"அண்ணா! விரைவாக கேழ்வரகு களியைப் பருகு. நாம் சுள்ளி சேகரிக்க காட்டுக்குச் செல்ல வேண்டும் அல்லவா?" - பத்ரா கூற, அவளை அன்புடன் நோக்கினான், வல்லபன்.

"இனி நீ எதற்கு, பத்ரா? எனக்குத்தான் கண்பார்வை கிடைத்துவிட்டதே. நான் மட்டும் காட்டிற்குச் சென்று சுள்ளிகளை சேகரிக்கிறேன். நீ ஆம்ராவுடன் குடிலிலேயே இரு. பாவம், அவளுக்கு துணை யார் இருக்கிறார்கள்?" - வல்லபன் ஆவலுடன் ஆம்ராவின் முகத்தை நோக்கினான்.

“அப்படியென்றால், நாம் ஆம்ராவையும் உடன் அழைத்துப் போகலாம். இவ்வளவு நாட்களாக சுள்ளி சேகரிக்கும் பணியில் பாரதபுழை அருவியின் அழகை நோக்காமல் இருந்துவிட்டேன். இன்று ஒருமுறை, அருவி நீரில் நீராடி, அதன் அழகை அணுவணுவாக ரசிக்கப் போகிறேன். இன்று மட்டும் நான் உன்னுடன் அடவிக்கு வரத்தான் போகிறேன்!" பத்ரா பிடிவாதமாகக் கூறினாள்.

“நான் பல வருடங்களாக அடவியில் அலைந்து திரிந்து விட்டேன். அடவியிலேயே இரு வருடங்கள் வசித்திருக்கிறேன். எனவே, மீண்டும் அடவியைக் காணும் ஆசை எனக்கில்லை. நான் குடிலிலேயே தங்கி உங்கள் தந்தையாரை கவனித்துக் கொள்கிறேன். நீங்கள் இருவரும்

https://telegram.me/aedahamlibrary

காட்டிற்குச் சென்று வாருங்கள்.” - ஆம்ரா கூறினாள்.

அதுவரை கண் பார்வையளித்திருந்த ஆம்ராவின் மீது வெறும் நன்றியுணர்ச்சியை மட்டுமே கொண்டிருந்தான், வல்லபன். ஆனால், நான் குடிலிலேயே தங்கி உங்கள் தந்தையாரைக் கவனித்துக் கொள்கிறேன் என்று கூறியதும், அவள் மீதுள்ள நன்றியுணர்ச்சி பிரேமையாக மாறியது. இவளை ஏன் நமது வாழ்வினில் இணைத்துக் கொண்டு நிரந்தரமாக தந்தையை கவனிக்கும் பொறுப்பினைத் தரக்கூடாது? இந்த எண்ணம் எழுந்ததும் வல்லபனின் பார்வை அவள் மீது காதலுடன் படர்ந்தது.

நயன மொழியை பேசும் நடனமாதிற்கா, பார்வைகளின் பொருள் விளங்காது? அவனது மனதை தனது கையகப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தானே அந்த வசனத்தை உதிர்த்திருந்தாள். மனதை மனதால் சிறைப்படுத்த வேண்டிய அவசியம் அவளுக்கில்லை. இவளுக்குத் தேவை தேவ உடும்பர மரம். இலங்கைக்குச் சென்று விட்டிருந்த அசோகனின் ரகசியப் படையின் சார்பாக சேர நாட்டிலிருந்து செயலாற்றப் போகும் இவளுக்கு அனுசரணையாகத் திகழ்ந்து செயலாற்றுவதற்கு உற்ற மனிதர்கள் வேண்டும். வல்லபனையும், பத்ராவையும் அதற்காகவே அவள் குறி வைத்திருந்தாள். இது புரியாமல், அவள் மீது காதல் பார்வை வீசுகிறான், வல்லபன். வீசட்டுமே. அத்தியூர் சங்கர்ஷணனை போன்று வல்லபனும் ஒரு கருவியே. அலட்சியப் புன்னகையுடன் அவனை நோக்கி மயக்கும் பார்வை ஒன்றை வீசினாள், ஆம்ரா. அந்த நயன மொழிகளின் பரிமாற்றத்தை கண்டும் காணாதவளாக இருந்தாள், பத்ரஷீலா. விரைவிலேயே, ஆம்ரா தனக்கு அண்ணியாகி விடுவாளோ என்கிற எண்ணம் எழ, உற்சாகம் பொங்க, அண்ணனுடன் காட்டிற்குக் கிளம்பினாள்.

அவர்கள் சென்றதும், முகுந்தநாயகருக்கு உணவினை வழங்கினாள், ஆம்ரா. அவர் திண்ணையில் சென்று ஓய்வாக அமர்ந்ததும், தானும் சிறிது உண்டுவிட்டு, குடிலின் திண்ணையை நோக்கிச் சென்றாள். ஏதோ சுவடிகளை வாசித்துக்கொண்டிருந்தார், முகுந்தநாயகர். மதியத்தில் உறங்கக் கூடாது என்கிற கருத்தினைக் கொண்டவர் என்பதால், சுவடிகளை வாசித்தபடி கண்களில் சொக்கிய உறக்கத்தை விரட்டியடித்துக் கொண்டிருந்தார்.

நளினமாக நடந்து சென்று, திண்ணையில் அவருக்கு முன்பாக அமர்ந்தாள், ஆம்ரா.

https://telegram.me/aedahamlibrary

"சுவாமி! தங்களிடம் உங்கள் ஊர் நாவாய் [3] முகுந்தனின் ஆலயத்தைப் பற்றிய புராணத்தைக் கேட்க விரும்புகிறேன். எனக்கு அதனைக் கூற வேண்டும்!" -- ஆவலுடன் குரலை ஒலிக்கச் செய்தாள், ஆம்ரா.

"உங்கள் ஊர் என்று ஏனம்மா பிரித்துச் சொல்கிறாய். இனி இதுவே உன் ஊரும் கூட. நாவாய் முகுந்தன் உனது பெருமானும் கூட. எங்கள் குடும்பத்தில் நீயும் ஒருத்தியாகிவிட்டாய்!" - உணர்ச்சியுடன் அவளை நோக்கினார், முகுந்தநாயகர். அந்தணக்குடியைச் சேராதவள் என்றாலும், மகனுக்கு பார்வையை அளித்தவள் அவள். அவளே குடும்ப விளக்காக அவனுக்கு வழிகாட்டியாக இருந்துவிட்டுப் போகட்டும்.

"சுவாமி! இதைவிட பெரிய பேற்றினை நான் பெற முடியுமா? கலைமகள் தாண்டவமாடும் இந்தக் குடிலில் நிரந்தரமாக நான் வசிக்கப் போகிறேனா? என்னால் தங்கள் கருணையை தாள முடியவில்லை. உங்கள் மனம் கோணாமல் நடந்து, குடும்பத்தின் பெயரை விளங்க வைப்பேன்!" -- நாடகக் கலைஞரின் பங்கினைத் திறம்படச் செய்தாள், ஆம்ரா.

கண்கள் பனிக்க அவளை வாஞ்சையுடன் பார்த்தார்... முகுந்தநாயகர்.

"அனைத்தையும் நான் சொல்கிறேன், ஆம்ரா. ஆத்ரேய கோத்திரத்தை சேர்ந்தவர்கள் நாம். இந்த நாவாய் கிராமம், உனக்கு முக்கியத்துவமில்லாத சிறு கிராமமாகத் தோன்றலாம். விடியல், பகல், மாலை, இரவு என்று நான்கு காலங்கள் ஒரு தினத்தை நிர்ணயிப்பது போன்று, கிருதயுகம், த்ரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்று நான்கு யுகங்களைக் கொண்டது ஒரு சதுர்யுகம். அந்தணர்களுக்கு சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு கடமைகள் கிடையாது. எனவே சூரியன் அஸ்தமனம் ஆனவுடன், அவர்கள் ஓய்வு பெற்றுவிட வேண்டும். எனவேதான், இரவுக்கு ஒப்பான கலியுகத்தில் வேதியக் கடமைகளுக்கு மதிப்பு இருக்காது. அந்தணர்களுக்கும் மதிப்பு இருக்காது. இப்போது நிகழும் கலியுகம், ஒரு நாளின் இரவு நேரம் போன்றது. மீண்டும் கடமையாற்ற விடியலுக்காகக் காத்திருக்கிறோம். சதுர்யுகத்தின் முடிவுக்கு இந்த நாவாய் கிராமம்தான் கட்டியம் கூறப் போகின்றது. நமது பாரத புழை ஆற்றின் மறுகரையில் பிரம்மனுக்கும், சிவனுக்கும் ஒரு கோயில் உள்ளது. அந்த பிரம்மனின் ஆலயத்தில் ஒரு பிரம்ம ஓலை உள்ளது. அந்த ஓலையினை ஒவ்வொரு கைசிக ஏகாதசி அன்றும் நான்தான் நாவாய் முகுந்தன் கோயிலில் வாசிப்பேன். இந்த பெருமையை பெற்ற நம் குடும்பத்தினை நீதான் போற்றி பாதுகாக்க வேண்டும். வல்லபனை மணந்து, ஒரு மகனை ஈன்று, இந்த பட்டோலை

https://telegram.me/aedahamlibrary

வாசிக்கும் பெருமையினை நமது குடும்பத்தின் கைவிட்டு போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்!” குரலில் நெகிழ்ச்சியுடன் கூறினார், முகுந்தர்.

பாவம் இந்த முதியவன். மேலே மேலே கற்பனைகளை வளர்த்துக் கொண்டு இறுதியில் ஏமாறப் போகிறாரே! சற்றே அவருக்காக பரிதாபப்பட்டாள், ஆம்ரா. ஆனால் அதே சமயம் அவரது கற்பனையை எண்ணி அருவருப்பும் அசூயையும் அடைந்தாள்.

மவுரிய மன்னன் தசரதன், தான் அசோகனின் மகன் என்பதையும் பொருட்படுத்தாமல், மஞ்சத்தில் இவள் கால்களை வருடிவிட்டுக் கெஞ்சியிருந்தான்.

“ஆம்ரபாலி, எவளிடமும் கிட்டாத அனுபவத்தை உன்னிடம் கண்டேன். மஞ்சத்தையே நடன மேடையாக்கிவிடுகிறாய். உன்னுடன் உறவு கொள்ளும் போது வானத்தில் பறப்பது போன்றும், நீரில் நீந்துவது போன்றும், வனங்களில் திரிவது போன்றும், பர்வதங்களில் ஏறி இறங்குவது போன்றும் உணர்கிறேன். உனது தேகத்தினை எனது கட்டுப்பாட்டினில் தராமல், நீ உனது நடன அசைவுகளை வெளிப்படுத்துவதால் உன்னுடன் கழிக்கும் போது என்னை மறக்கிறேன்! இந்த மகிழ்ச்சி எனக்கு நிரந்தரமாக வேண்டும். நடனத்தை விட்டுவிட்டு, என்னுடைய அந்தப்புரத்தின் நாயகியாக நிரந்தரமாக வாசம் செய். உன்னை நான் மணந்து கொள்கிறேன்!” மன்னனே அவளது பாதங்களைப் பற்றி கேட்டிருக்க, அவனை அலட்சியப் பார்வை பார்த்திருந்தாள், ஆம்ரா.

“தவமிருந்து பூமிக்கு வரவழைக்கப்பட்ட ஜீவநதியை குடுவையில் அடைக்க வேண்டாம் அரசே. எனது வழியில் நான் ஓடிக்கொண்டே இருப்பேன். நீர் எப்போது வேண்டுமானாலும் இந்த நதியில் நீராடிக் கொள்ளலாம்!” என்று கூறி அவனது பேராசைக் குமிழியை தனது ஊசிவிழியால் உடைத்திருந்தாள். அந்தப்புர வாழ்வையே உதாசீனப்படுத்தியவளுக்கு, அந்தணக்குடியில் அனலோம்பும் ஆடவருக்குப் பணிவிடைகளைச் செய்திருக்கத் தோன்றுமா என்ன?

"நிச்சயம் நம் குடும்பப் பாரம்பரியத்தை காப்பேன், தந்தையே!”

அவள் தந்தையே என்று விளிக்க உருகிப் போனார், முகுந்தர். அவரை உருக வைப்பதுதானே அவளது திட்டம்.

"நல்லது ஆம்ரா! இந்த ஆலயத்திற்கு நாவாய் என்று பெயர் வந்ததற்கு

https://telegram.me/aedahamlibrary

காரணம் உள்ளது. எல்லா ஆலயங்களின் பின்பாக நிகழ்ந்து முடிந்த ஒரு புராண சம்பவம் காரணமாக இருக்கும். ஆனால் இந்த நாவாய் ஆலயத்தின் புராணம் மட்டும் நடக்கப் போகும் புராணத்தை மையமாகக் கொண்டது. கலியுகம் முடிந்ததும் மகாபிரளயம் தோன்றும். அச்சமயம் பெரிய ஓடம் ஒன்று நாவாய்க்கு வரும். இங்கிருந்து அந்த ஓடம் புறப்படும் போது, அதில் சத்தியவிரதர் என்கிற முனிவரும், சப்த ரிஷிகளோடு மூலிகை வித்துகளையும் ஓடத்தில் ஏற்றிக்கொண்டு, ஜீவராசிகளில் ஒவ்வொன்றையும் எடுத்துக்கொண்டு, பிரளய வெள்ளத்தில் சஞ்சரிப்பார்கள். இங்கிருந்து ஓடம் கிளம்பப் போவதால், இந்த ஆலயத்திற்கு நாவாய் என்று பெயர்.” - முகுந்தநாயகர் கூறினார்.

"ஓடம் வருமா? எங்கிருந்து வரும், தந்தையே?” - ஆம்ரா நாட்டியம் புரிவதற்காகப் பல சனாதன புராணங்களை கற்றிருக்கிறாள். ஆயினும், முகுந்தர் கூறிய பிரளயத்திற்கு பின் நிகழ உள்ள புராணம், அவளை உண்மையிலேயே ஈர்த்திருந்தது.

முகுந்தர் அவளை வாஞ்சையுடன் நோக்கினார். "மகளே. நான் வாசிக்கும் பிரம்ம ஓலையில் அதுவும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

"கதிரும், மதியும்,

முனியும் இணைந்து

பூசனையில் தங்கலில்,

புனலெழுந்து காசினியை

சீரணிக்கும் காலம்

தேவதரு உடலளிக்க

கலிக்கோவின் கரிநாவாய்

அத்திக்கால் புறப்பட்டு

இத்திக்காய் யுகங்கடந்து

வித்தளிக்கச் செல்ல

முக்கொம்பு மீனும் வழியுரைத்திடுமே."

https://telegram.me/aedahamlibrary

ஆம்ரா கேள்வியுடன் முகுந்தரை நோக்கினாள். “இந்தப் பாட்டின் பொருளை அடியாளுக்கு விவரியுங்கள், சுவாமி. எனக்குப் புரியவில்லை!” - ஆம்ரா கூறினாள்.

தனது வருங்கால மருமகளுக்குத்தானே பாட்டினை விளக்குகிறோம் என்கிற எண்ணத்தில் தன்னை மறந்து அவளது கேள்விக்குப் பதிலளித்துக் கொண்டிருந்தார், முகுந்தநாயகர்.

"அம்மா! கதிர் என்றால், சூரியன். மதி என்றால் சந்திரன். முனி என்றால் குரு கிரகம். மூன்று கிரகமும் உத்தராயன திரிதியை கூடிய தினத்தில், பூச நட்சத்திரத்தில் ஒன்றாக நிலைப்படும் போது, பிரளயம் ஏற்படும். கடல் பொங்கி பூமியை மூடும். அப்போது குண திக்கிலிருந்து நாவாய் ஒன்று குடதிசை ஆலயமான நாவாய் முகுந்தனின் ஆலயத்திற்கு வரும். அந்த ஓடத்தில், சப்த ரிஷிகளும், சத்திய விரதர் என்கிற முனிவரும், எல்லா ஜீவராசி மற்றும் மூலிகை வகைகளில் ஒவ்வொன்றும் பிற யுகத்தை கடந்து மீண்டும் படைப்பினை உருவாக்க, அடுத்த யுகத்தை நோக்கிச் செல்லும். இங்கிருக்கும் நாவாய் முகுந்தன், ஒரு மச்சத்தின் வடிவில் அந்தப் படகை தனது கொம்பினால் இழுத்துச் செல்வார், என்கிறது, அந்த பிரம்ம ஓலை. அதை என் குடும்பத்தினர்தான் தொடர்ந்து வாசித்து வருகிறோம்.” பெருமையுடன் கூறினார், முகுந்தநாயகர்.

“அந்த ஓடம் எங்கிருந்து வரும்?” - ஆம்ரா ஆவலுடன் கேட்டாள்.

"கிழக்கு திசையிலிருந்து வரும். ஆனால் அந்தப் பாட்டில் குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை!” முகுந்தநாயகர் தனது கையில் இருந்த சுவடிகளைப் பார்த்தபடி கூற, அவர் தன்னிடம் எதையோ மறைப்பதாக உணர்ந்தாள், ஆம்ரா.

முழுமையான விளக்கத்தை முகுந்தநாயகர் தரவில்லை. அவர் மறைக்க முயலும் தகவலை அறிந்து கொள்ள வேண்டும் என்கிற ஆவல் உந்தித்தள்ள, தனது நோக்கு பார்வையை பிரயோகப்படுத்தி அவரிடமிருந்து விஷயத்தைத் தெரிந்து கொள்வது என்று முடிவு செய்தாள். நோக்குப் பார்வையின் வசியத்தில் அனைத்து விவரங்களையும் கக்குவார் அன்றோ!

குனிந்து தனது சுவடிகளை நோக்கிக்கொண்டிருந்த முகுந்தநாயகர், திடீரென்று ஆம்ரா மௌனமாகி விட்டதை உணர்ந்து அவளை நிமிர்ந்து நோக்க, அவள் தன்னையே வெறித்து நோக்கிக்கொண்டிருப்பதைக் கண்டு திகைத்தார். அவளது பார்வையை நோக்கியவர், தன்னையும் அறியாமல், தனது நெற்றியின் மையத்தில் ஒரு குறுகுறுப்பினை

https://telegram.me/aedahamlibrary

உணர்ந்தார். பட்டென்று நூலிழை ஒன்று அறுபட்டது போன்று, அவரது நினைவுகளும், உணர்வுகளும் அவரைவிட்டு விலக, முகுந்தரை தனது வசம் எளிதாகக் கொண்டு வந்தாள், ஆம்ரா.

“பண்டிதரே! உங்கள் மகன் காட்டில் இருந்து திரும்பி வருவதற்குள் நாம், அந்த பிரம்மனின் ஆலயத்திற்குச் சென்று அந்த ஓலையை எடுத்து வருவோமா? அந்த ஓலையை எனக்கு முழுவதுமாக படித்துக் காட்டி நீங்கள் எனக்கு விளக்க வேண்டும்.” - ஆம்ரா கேட்டாள்.

ஆம்ராவின் நோக்கு பார்வையில் வசியப்பட்டிருந்த முகுந்தர் மெதுவாக திண்ணையைவிட்டு இறங்கி பிரம்மனின் ஆலயத்தை நோக்கி நடந்தார். பாரதபுழா ஆற்றின் குறுக்காக இரு தென்னை மரங்கள் சரிந்து இயற்கையாக பாலங்களை அமைத்திருந்தன. போவதற்கு ஒரு மரமும், வருவதற்கு ஒரு மரமுமாக அந்த தென்னை மரங்கள் இருகரைகளையும் இணைத்திருக்க, இயந்திர கதியில் முகுந்தர் அந்த மரத்தின் மீது ஏறி அக்கரையை நோக்கி நடந்தார். முதியவர் தள்ளாட்டத்தினால் நீரில் விழுந்துவிடப் போகிறாரே என்று சற்றே பதற்றப்பட்டாள். ஆனால் அவரோ சற்றும் நிலைகுலையாமல் அந்த மரத்தினைக் கடந்து காட்டின் உள்ளே சென்று பிரம்மனின் ஆலயத்தை அடைந்தார். அதன் அருகே சிவாலயம் ஒன்றும் இருந்தது.

ஆலயத்தினுள் நுழைந்த முகுந்தர் ஆலயத்தில் ஓலைப்பெட்டியில் பத்திரப்படுத்தி இருந்த பிரம்ம ஓலையை எடுத்து ஆம்ராவிடம் நீட்டினார். அந்த ஓலையை பத்திரப்படுத்திக் கொண்ட ஆம்ரா, மீண்டும் குடிலுக்கு முகுந்தருடன் வந்தாள்.

“இப்போது இந்த ஓலை கூறும் சேதியை விளக்கமாக விவரியுங்கள்!” ஆம்ரா கட்டளையிட, முகுந்தர், உடனே விளக்கிக் கூறத் தொடங்கினார்:

“இந்த நாவை ஆலயத்தில் தான் கலியுகம் முடிவுபெறப் போகிறது. சூரியன், சந்திரன், மற்றும் குரு கிரகங்கள், சுக்லபட்சத்து திரிதியை திதியன்று பூசம் நட்சத்திரத்தில் ஒன்றாக இருக்கும் நேரம், கடல் பொங்கி பிரளயம் ஏற்படும் என்று பாகவத புராணம் கூறுகிறது. அப்போது உலகமே நீரில் மூழ்க, அத்திவனத்தில் இருந்து தேவ ராஜனே தேவ உடும்பரத்தால் அமைக்கப்பட்ட நாவாயாக இங்கே வருவான். சத்தியவரதர் மற்றும் சப்தரிஷிகள், ஜீவராசிகள் மற்றும் மிருகங்களில் வகைக்கு ஒன்று, மூலிகை வித்துக்கள் என்று அனைத்தையும் சேகரித்து பத்திரப்படுத்திக்கொண்டு யுகத்தை கடந்து பயணம் செய்வார்கள்.

https://telegram.me/aedahamlibrary

நாவாய் முகுந்தன் அந்த ஓடத்தை பெரிய மீனாக தனது கொம்பினில் கட்டி இழுத்துச் செல்வான். இதுதான் இந்த பிரம்ம ஓலை கூறும் செய்தி!" முகுந்தன் கூறினார்.

"தேவ உடும்பர தோணியா?" - பிரம்மிப்பில் ஆழ்ந்தாள். 'என்றால், தேவ உடும்பரம் அத்தியூரில்தான் உள்ளது என்பதற்கு ஆதாரமாக பிரும்ம ஓலை கிடைத்திருக்கிறதே. இது புத்தபிரானின் கருணை அல்லால் வேறு எதுவாக இருக்க முடியும்?' - ஆம்ரா பரவசத்துடன் நினைத்தாள்.

"நல்லது பண்டிதரே. சற்று நேரம் உறங்கி ஓய்வெடுங்கள். எனக்கு பணிகள் உள்ளன!" ஆம்ரா கூற, பிற்பகல் நேரங்களில் உறங்கியே வழக்கம் இல்லாத முகுந்தர் உறங்கிப் போனார்.

ஆம்ராவின் சிந்தை வேகமாக வேலை செய்தது. திஸ்ஸாவின் உதவியால் வர்மக்கலை ஆற்றலை கரைத்துக் குடித்துவிட்டாள். மத யானை, பாயும் சிறுத்தை, மனித வர்க்கத்தை அவள் இனி அடக்கி ஆளலாம். அந்த சக்தியை பிரயோகப்படுத்தி தனக்கென்று ஒரு படையை உருவாக்கி, தேவ உடும்பரத்தை கவர்ந்து புத்த கயைக்கு எடுத்துச் செல்ல வேண்டியதுதான். நோக்கு பார்வை வசியத்தில் இருந்து முகுந்தரை விடுவித்துவிட்டு அவள் உள்ளே சென்றாள். மவுரிய மன்னன் தசரதன், இலங்கையில் உள்ள திவ்யதாமா, மகிந்தா மற்றும் சங்கமித்தா ஆகியோரிடம் இவள் உடனே தொடர்புகளை ஏற்படுத்த வேண்டும். நாவாய்க்கு தேவ உடும்பர மரத்தினால் அமைக்கப்பட்ட ஓடம் கலியுகத்தின் முடிவில் தோன்றும். அது அத்திவனத்தில் இருந்துதான் வரும் என்றால், தேவ உடும்பர மரம் அங்கேதானே உள்ளது. இனி செயலில் இறங்க வேண்டியதுதான். மவுரிய மன்னன் தசரதன், இலங்கையில் உள்ள மகிந்தா, சங்கமித்தா ஆகியோரிடம் தொடர்பு கொள்வதற்கு, முக்கூடல் கடிகையில் புத்த தத்துவத்தை போதிக்கும் அமர ஜோதியை அணுகுவது தான் ஒரே வழி என்பதை உணர்ந்தாள், ஆம்ரா.

அமரஜோதிக்கு ஓலை ஒன்றை எழுதத் துவங்கினாள், ஆம்ரா.

வல்லபனும், பத்ரஷீலாவும் காட்டில் சுள்ளிகளைச் சேகரித்துக்கொண்டு தங்களது குடிலுக்குத் திரும்பிய போது, இன்னும் முகுந்தநாயகர் ஆழ்ந்த உறக்கத்தில் தான் இருந்தார். அவர் எழுந்து கொண்டாலும், தான் பிரம்ம ஓலையை எடுத்து ஆம்ராவிடம் அளித்து விட்டதை அவர் அறியமாட்டார். பகல் வேளைகளில் உறங்கினால் கடிந்து கொள்ளும் தங்களது தந்தை ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பதை ஆச்சரியத்துடன்

https://telegram.me/aedahamlibrary

பார்த்தபடி நின்றிருந்தனர், வல்லபனும், பத்ராவும்.

[1] பாரதபுழா கரையில் திருநாவாய் ஆலயமும், மறுகரையில் பிரம்மன் மற்றும் சிவனுக்கு ஒரு ஆலயமும் உள்ளது. கல்கி அவதாரம் முடித்தபின் மகாபிரளயம் முடிவும் ஏற்பட்டவுடன், மீண்டும் படைப்புத் தொழிலை செய்வதற்கு வேண்டி, ஜீவராசிகளில் ஒன்றை சேகரித்துக் கொண்டு ஓடம் ஒன்றில் பிரம்மன் புறப்படுவதற்காக காத்திருப்பதாக கூறப்படுகிறது. கல்கி அவதாரம் எடுக்கப் போகும், விஷ்ணுவும், உலகை அழிக்கப் போகும் சிவனும், மீண்டும் படைப்பைத் துவக்க ஓடத்தில் செல்லப் போகிற பிரம்மனும் ஒன்றாக இங்கே கோயில் கொண்டிருப்பதாகவும் நம்பப்படுகிறது.

[2] பித்ருக்களுக்கு பலி சாய்ப்பதை வாவு பலி என்று இன்றும் நடத்தி வருகிறார்கள். வாவு என்றால் அமாவாசை. பலி என்பது தர்ப்பண பூசை. கும்ப மாசமான மாசி அமாவாசையில் இந்த வாவு பலி மிகவும் விசேடமாக கொண்டாடப்படும்.

[3] நாவாய் என்றால் ஓடம்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 11. சகலகலா சகலைகள்

ஒரு குடுவையில் காவிரி நீரைச் சேகரித்து வைத்து, அன்றாடம் தனது நெற்றிக்கண்ணைத் திறந்து அதனை எரித்து வருகிறான். அவன் ஒத்தாடை ஈசனின் அருள் பெற்றவன். எனவேதான் அவனது மூன்றாவது கண்ணுக்கு வலிமை உள்ளது. அதன் தீட்சண்யம் தாங்காமல் காவிரி வறண்டு போகிறது. குடதிசையில் மழைக்குப் பஞ்சமில்லை. இருப்பினும் காவிரியில் நீர் வந்தும் வற்றுகிறது என்றால், பல்லவன் இளந்திரையனின் நெற்றிக்கண் பார்வையே காரணம்! குதம்பைச் சித்தர் இவ்வாறு கூறியதும், கரிகாலன் கலவரத்துடன் தனது தலைமை அமைச்சர் உய்யுலகரை நோக்கினான். உச்சி வெயிலின் கிரணங்கள் வெளியே நிலத்தைப் பிளந்து கொண்டிருந்த போதிலும், காவிரியின் மையத்தில் இருந்த அந்த சிவாலய கருவறையில் இருள் தாண்டவமாடிக் காண்டிருந்தது. சிறு முத்துத்துளியாக ஒளிர்ந்து கொண்டிருந்த விளக்கு பெரிதாக வெளிச்சத்தை அளிக்கவில்லை. எனவே, கரிகாலனால், சித்தரின் முகத்தையோ, உய்யுலகரின் முகத்தையோ காண இயலவில்லை.

சோழ மண்ணிற்கு உயிர் நாடி காவிரியாறு. வற்றாத அந்த நதியினைத் தனது நெற்றிக்கண்ணால் எரித்து இளந்திரையன் வற்றச் செய்கின்றானாமே? இவன் மீது உள்ள வெறுப்பினை, எதற்காக காவிரியின் மீது காட்டுகிறான்?

கரிகாலன் சற்று நேரம் மௌனத்தைத் கடைப்பிடித்தான். தனது தம்பியின் செய்கையினால் கரிகாலன் மனம் நொந்திருக்கிறான் என்பதை உணர்ந்த உய்யுலகர் அவனை சமாதானம் செய்யும் எண்ணத்துடன் பேசத் துவங்கினார்.

"மன்னா! நாம் ருத்ராக்ஷரை அனுப்பி இளந்திரையனுக்கு நற்புத்தி புகட்டுவோம்.”

கரிகாலன் உய்யரை இடைமறித்தான். “பயனில்லை உய்யரே! இப்போதெல்லாம் அவன் உருத்திரங்கண்ணனாரை மதிப்பதில்லை. என்னோடு அவர் உறவாடுவதால், என்னை முக்கூடல் கடிகையில் தங்க வைத்ததால், அவரும் இளந்திரையனுக்கு எதிரியாகிவிட்டார். அவரை தனது அவையில் கூட கவிபாட விடுவதில்லை, எனது தம்பி! என்னிடம் தனிமையில் புலம்பி தீர்த்து விட்டார், புலவர்!” - கரிகாலன் வேதனையுடன் கூறினான்.

https://telegram.me/aedahamlibrary

“அப்படியானால் இளந்திரையன் மீது உடனே போர் தொடுப்போம்!”

உய்யர் கூற, கரிகாலன் அவர் நின்ற பக்கமாக நோக்கினான்.

"என்ன காரணத்தைச் சொல்லி அவன் மீது போர் தொடுப்பது? காவிரியை வற்றச் செய்கிறான் என்பதைக் காரணமாகக் கூறினால் யாரும் நம்பமாட்டார்கள். ஏற்கவும் மாட்டார்கள். தொண்டை நாட்டின் அரியணைக்கும், அத்திமலைத் தேவனை அபகரிப்பதற்கும் நான் ஏற்கனவே திட்டம் தீட்டி வருவதாக அவனிடம் சொல்லப்பட்டிருக்கிறது. அவனும் அதை நம்பிக்கொண்டிருக்கிறான். இந்நிலையில் அவன் மீது நான் போர் தொடுத்தால், அந்த நம்பிக்கை உண்மையாகி விடும் அல்லவா?”

நட்டாற்றேஸ்வரரையே வெறித்து நோக்கிக் கொண்டிருந்த குதம்பைச் சித்தர், திடீரென்று கரிகாலனை நோக்கினார்.

“கரிகாலா! விசனப்படாதே. பொன்னியாக அகம்பாவத்துடன் திரிந்த இந்த காவிரியையே இறை சக்தி கர்வ பங்கம் செய்து, ஜீவநதியாக மக்களுக்கு பயன்படச் செய்தார். இளந்திரையன் தான் முக்கண்ணனின் பிறவி என்கிற செருக்கினால், இத்தகைய செயலில் ஈடுபட்டிருக்கிறான். உனது எதிரிகளின் வசம் அவன் சிக்கியிருக்கிறான். காவிரியையும் காத்து, உனது தம்பியையும் நீ மீட்க வேண்டும். ஆத்திவளவனின் மருமகன் பரமேஸ்வரனின் துர்போதனையால் அவன் சோழ நாட்டின் ஜீவாதாரமான காவிரியை வற்றடிக்க முயல்கிறான். உன்னால் மட்டுமே அவனது அந்த செயலைத் தடுக்க முடியும்!”

“எப்படி சுவாமி?” -- கரிகாலனின் கண்களுக்கு சித்தரின் முகம் புலப்படவில்லை என்றாலும், அவரது சிரசின் மீதுள்ள கொண்டையை வைத்து அவர் நின்ற பக்கத்தை அனுமானித்து அவரை நோக்கினான்.

"முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும். வைரத்தினை வைரத்தால்தான் அறுக்க வேண்டும். ஒத்தாடையான் என்னும் ஏகாம்பரேசன் மிகவும் இளகிய மனம் படைத்தவன். வரங்களை அள்ளித் தருபவன். பத்தர்களுக்கு வேண்டிய வரங்களை அளித்துவிட்டு, தான் வெறும் ஒத்தாடையை மட்டுமே அணிந்திருக்கிறான். ஒத்தாடையான் ஆலயம் தொண்டை நாட்டின் அரண்மனை வளாகத்தில் உள்ளது. எனவே அவன் தனது மன்னனுக்கு மூன்றாவது கண்ணை அளித்திருக்கிறான். பிள்ளை இல்லையே என்று அவன் தந்தை திருலோச்சன பல்லவன் வேகவதி ஆற்றில் அத்தியோலை இட்ட போது, அந்த இலை முக்கண் இலையாக இருந்த தாம். எனவேதான்,

https://telegram.me/aedahamlibrary

இளந்திரையன் முக்கண்ணோடு பிறந்திருக்கிறான். அந்த முக்கண் இருக்கும் வரை அவனை ஒன்றும் செய்ய முடியாது. அந்த மூன்றாவது கண்ணை உடனே நீக்க வேண்டும். அப்போதுதான் காவிரியை காக்க முடியும்!” - குதம்பைச் சித்தர் கூற, கரிகாலன் கலங்கிப் போனான்

"ஒத்தாடையான் அவனுக்கு மூன்றாவது கண்ணை அளித்திருக்கிறான். அந்தக் கண்ணை நீக்குவது ஒத்தாடையானை அவமதிப்பது போன்று ஆகாதா?” -- கரிகாலன் கேட்டான்.

"கரிகாலா! மூன்றாவது கண் என்பது நெற்றியில் ஏன் வைத்திருக்கிறான், பரமன். ஞானத்தை கொண்டு நல்வழியில் நடக்க உதவும் கண் என்பதால் அதனை நெற்றியில் வைத்திருக்கிறான். மிகுதி கண்கள் இரண்டும் எலும்பு கூட்டின் பள்ளங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. ஈனப் பிறவிகள் ஊனக் கண்களால் மட்டுமே உலகைக் காண்பார்கள். ஞானம் பெற்றவர்கள் நெற்றிக் கண்ணால் மட்டுமே உலகைக் காண்பார்கள். ஞானத்தின் அடையாளமாகத் தனக்கு அளிக்கப்பட்ட மூன்றாவது கண்ணை திறந்து அகந்தையை வெளிப்படுத்துகிறான். நீ ஒரு காரியம் செய். உன்னால் மட்டுமே அதனை செய்ய முடியும். நீ அத்திமலையானின் ஆலயத்தில் அவனது சந்நிதியில் மோன நிலையில் அமர்ந்திரு. காவிரியை காப்பாற்று என்று அவனிடம் இறைஞ்சு. வளத்திற்கு அதிபதியான தேவன் உடும்பர மூர்த்தம். உனக்கு அவனே நல்வழி காட்டுவான்!" - குதம்பைச் சித்தர் கூறினார்.

"நான் அத்தியூர் போவதா? என்ன காரணத்தைக் கூறுவேன்? இப்போது எனக்கும் என் தம்பிக்கும் உறவு சரியில்லை. எனது எதிரிகள் எல்லோரும் தொண்டை நாட்டில் புதிய அணி ஒன்றை அமைப்பதாக ஒற்றர்கள் கூறுகிறார்கள். சேரனும், பாண்டியனும் தங்களது புதிய நம்பிக்கையாக இளந்திரையனைக் காண்கிறார்கள். மதயானைகளால் சூழப்பட்ட புலியாக இருக்கிறது சோழ தேசம்!” - கரிகாலன் மனம் வெதும்பினான்

"கரியதாக இருப்பதெல்லாம் மதயானை அல்ல, கரிகாலா! கரிவரதனாக அவன் நிற்கும் போது கரிகாலன் எதற்குத் தயங்க வேண்டும்? நீ உடனே அத்திமலையானை நாடு. அவனே நல்வழி காட்டுவான்."

யோசனையுடன் நட்டாற்றேஸ்வரனை நோக்கினான், கரிகாலன்.

"அத்திமலையான் முன்பாக தியானத்தில் இருக்க வேண்டும் என்றால், நான் மன்னனாக அத்தியூர் போகக் கூடாது. சாதாரண ஒரு

https://telegram.me/aedahamlibrary

பிரஜையாகவே செல்கிறேன். சித்தரே! நீர்தான் எனக்கு ஆசி வழங்க வேண்டும். காவிரியை காக்கவும், எனது தம்பியை எதிரிகளிடம் இருந்து மீட்கவும் நான் உடனே அத்திமலைத் தேவனை நாடுகிறேன்!” - கரிகாலனின் குரல் தீர்மானத்துடன் ஒலித்தது.

***

பரசலூரில் அந்தணச் சிறுவனின் வேடமணிந்து பதுங்கி இருந்தது போலவே, இம்முறை இளந்திரையனுக்குத் தெரியாமல், அத்திமலைத் தேவன் சந்நிதிக்குச் செல்ல வேண்டும். ஆனால் இவன் வருவது மிகவும் ரகசியமாக இருக்க வேண்டும். இவனை அவர்கள் இனம் கண்டுவிட்டால், பிறகு இப்போது விட்ட குறை, தொட்ட குறையாக இருக்கும் உறவு, அறுபட்டு விடும். கரிகாலனுக்கும், தனது அண்ணன் இரும்பிடர்த் தலையாரின் மகள் நறுமலராளை மணம் பேசியிருந்தாள், இவனது தாய் நாய்ச்சி. இவனது திருமணத்திற்கு தனது சகோதரி அணிமா கோதையையும், இளந்திரையனையும் அழைத்து நறுமலராளின் தங்கை, செங்கமலத்தை இளந்திரையனுக்கு மணமுடிக்க வேண்டும் என்பது அவளது திட்டம்.

அண்ணன் தம்பிகளாகத் திகழ்ந்து ஒற்றுமை ஏற்படவில்லை என்றாலும், சகலையர்களாகத் திகழ்ந்தால் ஒற்றுமையாக இருக்கத்தானே வேண்டும். தனது மகன் கரிகாலனுக்கு தொண்டை நாடு என்றும் நட்பு நாடாக இருக்க வேண்டுமென்றால், ஒரே குடும்பத்தில் பெண் எடுப்பதுதான் சிறந்த வழி என்று நினைத்த நாய்ச்சி, அதற்காக தனது பிறந்த வீடான வேளிர் நாங்கூர் குடும்பத்துடன் பேசித் திட்டம் தீட்டியிருந்தாள். ஒரு மருமகன் கரிகாலன். ஒரு மருமகன் இளந்திரையன் என்று நாய்ச்சி, கூறியதும், உடனே தனது சம்மதத்தினை நல்கியிருந்தார், இரும்பிடர்த்தலையார்.

சோழத்திற்கு சகலமாகத் திகழும் காவிரியை வற்றச் செய்பவன், இவனுக்கு சகதலையனாக (சகலை) இருக்கச் சம்மதிப்பானா?

குதம்பைச் சித்தர் அவனை ஆசீர்வதிக்கும் விதமாக தனது கரத்தினை கரிகாலனின் சிரசினில் வைக்க, அவனது எண்ண ஓட்டம் தடைபட, அவரை இருகரம் குவித்து வணங்கினான்.

"நட்டாற்றேஸ்வரர் உத்தரவால்தான் நான் உன்னை இங்கே வரச்செய்தேன். ஆற்றின் அடியில் வாசம் செய்பவர் அவர். நீர் வற்றிக்கொண்டிருப்பதால், அவரது வாசஸ்தலம் பாதிக்கப்பட்டுள்ளது. அவரது உத்தரவின் பெயரில்தான் நீ காவிரியைக் காக்கச் செல்கிறாய்.

https://telegram.me/aedahamlibrary

இளந்திரையனுக்கு மூன்றாவது கண்ணை அளித்ததும் ஈசன் தான். காவிரியை காக்க உன்னை அனுப்புவதும் ஈசன் தான். நினைவில் கொள். அத்திமலையான் சந்நிதியில் மோன நிலையில் அமர்ந்திரு. அவன் பார்த்துக் கொள்வான். காரணம், கலியின் காக்கும் நாயகன், அத்திமலையான்!" - குதம்பைச் சித்தர் கூற, அவரை மீண்டும் பணிந்துவிட்டு, உய்யுலகருடன் ஆலயத்தைவிட்டு வெளியே வந்தான். புகார் நகரை நோக்கி அவர்கள் செல்ல, குதம்பைச் சித்தர் அவர்கள் இருவரும் புரவியில் செல்வதை வெகு நேரம் பார்த்துக்கொண்டிருந்தார்.

"கலியின் ஆட்டம் வேகமாகத் துவங்கிவிட்டது. ஆத்மா என்று ஒன்று இருப்பதையே வருங்காலம் ஏற்காது. இந்நிலையில் இறைவனுடன் உறவு கொள்வதற்காக படைக்கப்பட்ட ஆத்மாவை மறந்துவிட்டதால் வந்த வினைதான், இளந்திரையனின் சூழ்ச்சி. கரிகாலன் வெற்றியுடன் திரும்ப அருள் செய்!" என்று நட்டாற்றேஸ்வரனிடம் வேண்டியபடி மீண்டும் ஆலயத்தினுள் பிரவேசித்தார், குதம்பைச் சித்தர்.

***

மாவிலக்கை துறை.

கலம் ஒன்றில் தனது பானைகளுடன் வந்து இறங்கியிருந்தான் கரிகாலன். துறைமுகத்தில் இருந்த இலச்சினை அதிகாரியின் கேள்விகளுக்கு பதிலளித்துக் கொண்டிருந்தான், கரிகாலன். அவனது கூரிய கண்கள், அருகே நின்ற பரமேஸ்வரனை கவனிக்கத் தவறவில்லை. எங்கோ பயணித்துவிட்டு, மனைவி பொன்னுருகுவுடன் தனது இரதத்திற்காகக் காத்திருந்தான் போலும். மன்னனின் அந்தரங்க ஆலோசகன் அருகில் நிற்பதை கண்டதும், தான் மிகவும் நேர்மையுடன் கடமையாற்றுவதை அவன் காண வேண்டும் என்பதற்காக கலத்தில் வந்து இறங்கியிருந்த பயணிகளை அதட்டிக் கொண்டிருந்தான், இலச்சினை அதிகாரி. கரிகாலன் அந்த அதிகாரியின் முன்பு நின்றதும், தனது விழிகளை உருட்டினான், அதிகாரி.

"நீ யார்? எங்கிருந்து வருகிறாய்? எதற்கு தொண்டை நாட்டிற்குள் வந்திருக்கிறாய்?"

சமயோசிதத்திற்கு மற்றொரு பெயர் கரிகாலன் அல்லவா? அவனது கண்கள் அருகே நின்ற பரமேஸ்வரனின் செவிகளை குறி வைத்தன.

"அய்யா! எனது பெயர் நிலவேந்தன். வேளிர் நாங்கூர் பகுதியை சேர்ந்தவன். எனது குலத் தொழிலான மண் பாண்டங்களை செய்து

https://telegram.me/aedahamlibrary

உயிர் பிழைக்கிறேன். தற்போது காவிரிக் கரையில் கடும் வறட்சி நிலவுகிறது. பாண்டங்களைச் செய்ய நீர் போதவில்லை. காவிரியைவிட, வளமான தொண்டை நாட்டில் பிழைக்கலாம் என்று வந்திருக்கிறேன். முக்கூடல் என்று மூன்று ஆறுகள் பாயும் தொண்டை நாடு அல்லவோ வளமான பூமி. அநியாயமாக, கரிகாலனைப் போய் பெருவளத்தான் என்று புகழ் பாடுகிறார்கள், அறிவிலிகள்! தொண்டையர்கோன் இளந்திரையன் அல்லவோ, பெருவளத்தான். நான் உங்கள் நாட்டில் குடியேறும் வேளை, பெருவளத்தான் என்கிற பெயரும், கரிகாலனைவிட்டு நீங்கி, உங்கள் மன்னனிடம் குடியேறப் போகிறது. பாருங்கள்!" - என்று சொற்கட்டுமானத்தில் இறங்கினான், கரிகாலன்.

"மூன்று மாதங்கள் இங்கே தங்குவதற்கு அனுமதி தருகிறோம். அதன்பின் நீ புறப்பட வேண்டும்" என்று சுவடியில் எழுதி இலச்சினையை வைத்தான் அதிகாரி.

கரிகாலனின் பேச்சை ரசித்தபடி நின்ற பரமேஸ்வரன் அவனைப் பாராட்டும் விதமாகப் பார்த்தான்.

"பலே! காவிரிக்கரையில் வறட்சியா! அதிகாரியே! நல்ல சேதி கொண்டு வந்திருக்கிறான். அவனுக்கு மூன்று மாதம்தானா? ஒரு வருடம் வாசம் செய்யும் அனுமதியை தா!" - குதூகலத்துடன் கூறினான், பரமேஸ்வரன். காவிரியை வற்றச் செய்யும் திட்டத்திற்கு சூத்திரதாரியே இவன்தானே. தனது திட்டம் பலிதம் ஆனது என்பதை இந்த வியாபாரி மூலமாகவே மன்னனுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

"வியாபாரியே. நீ ஒரு வருடம் தொண்டை நாட்டில் தங்கி வியாபாரம் செய்யலாம். வியாபாரம் செய்யக் கூடிய பகுதிகள் தருமநகரம், மாலிருஞ்சோலை, மற்றும் முக்கூடல். ஒத்தாடை அரண்மனை மற்றும் அத்தியூர் பகுதிகளில் வெளிநாட்டவர் செல்ல தடை உள்ளது. தடையை மீறினால், உடனே நீ தொண்டை நாட்டில் இருந்து வெளியேற்றப்படுவாய்! இரவு நேரங்களில் நீ குயவர்கள் வசிக்கும் பகுதியில்தான் வாசம் செய்ய வேண்டும். தொண்டை நாட்டின் மேற்கு எல்லையில் உள்ள கொசத்தலை கிராமத்தில்தான் நீ தங்க வேண்டும். கொசத்தலை கிராமத்தின் தலைவனிடம் இந்தச் சுவடியை காண்பித்து அங்கே தங்குவதற்கு அனுமதி கோரு! இரவு நேரங்களில் நீ வியாபாரம் செய்யக் கூடாது. எனவே, இரவு நேரங்களில் நீ கொசுவன்தலை கிராமத்தைவிட்டு செல்லக் கூடாது..." என்று சுவடியில் இருந்த கட்டளைகளை வாசித்துக் காட்டிய அதிகாரி அதில் இலச்சை ஒன்றை வைத்து கரிகாலனிடம் நீட்டினான்.

https://telegram.me/aedahamlibrary

"அய்யா! அத்தியூர் செல்லக் கூடாதா? எல்லாம் வல்ல அத்திமலைத் தேவனை தரிசிக்க வேண்டும் என்று வெகு நாட்களாக மனதினுள் ஒரு ஆசை. அதற்கு மட்டும் அனுமதி தாருங்கள்!" - கரிகாலன் கேட்க, அதிகாரி தலையசைத்து மறுத்தான்.

"சுவடியில் கூறியுள்ளபடி நடந்து கொள்!" - அதிகாரி கூற, அவனை இடைமறித்தான், பரமேஸ்வரன்.

"அத்தியூரில் வியாபாரம் செய்யத்தான் அனுமதி இல்லை என்று சுவடியில் கூறப்பட்டுள்ளது. நீ பக்தனாக அத்திமலைத் தேவனை எப்போது வேண்டுமானாலும் தரிசிக்கலாம்!" - பரமேஸ்வரன் கூறிவிட்டு பொன்னுருகுவுடன் கிளம்பிச் சென்றான்.

கரிகாலனின் தந்தை இளஞ்சேட்சென்னிக்கு நஞ்சு கலந்த உணவை அளித்துக் கொன்ற இருங்கோவேளின் வலதுகரம் அத்திவளவனின் மகள் தான் பொன்னுருகு கணவனுடன் தனது இரதத்தை நோக்கி அவள் செல்வதைப் பார்த்துக்கொண்டே இருந்தான் கரிகாலன். பொன்னுருகுவை நோக்கும் போது, தனது தந்தையின் நினைவு தோன்ற, தான் காணாத தந்தையை எண்ணி மறுகத் துவங்கினான்.

'எனது தந்தையை கொன்றவனின் இரத்தம் அதோ போகிறது' மனதினுள் புழுங்கியபடி கரிகாலன் பொன்னுருகுவை நோக்க, சரியாக அவளும் திடீரென திரும்பி கரிகாலனை நோக்கினாள். சற்று நேரம் இவனை வெறித்து நோக்கியவள், கணவனுக்குப் பின்பாக இரதத்தினில் ஏறினாள்.

மாவிலக்கை துறைமுக அதிகாரி அளித்திருந்த சுவடியை வீரகொசுவனிடம் நீட்டினான், கரிகாலன்.

"தம்பி! ஒரு வருடத்திற்கு இங்கே நீ வியாபாரம் செய்யலாம். ஆனால் இரவு நேரங்களில் என் அனுமதியின்றி கிராமத்தைவிட்டு வெளியே செல்லக் கூடாது. உனக்கு ஒரு குடிலை ஒதுக்கச் சொல்கிறேன்!" என்றான் வீரகொசுவன்.

"தொண்டையா! இந்த வியாபாரியை நமது கிராம தேவதை சேமாயி ஆலயத்தின் அருகே உள்ள குடிலில் தங்க வை... அப்படியே, நமது கிராமத்தின் சட்ட திட்டங்களையும் கூறு!" என்று கூறி, இலச்சினையை கரிகாலனிடமே திருப்பி அளித்தான் வீரகொசுவன்.

தொண்டையனுடன் நடந்தான் கரிகாலன்.

https://telegram.me/aedahamlibrary

“அய்யா! நீங்கள் எந்த நாட்டில் இருந்து வருகிறீர்கள்.” - தொண்டையன் கேட்டான்.

“நான் வேளிர் நாங்கூரைச் சேர்ந்தவன். பிழைப்பிற்காக இங்கே வந்திருக்கிறேன்.” - கரிகாலன் கூறினான்.

சேமாயி ஆலயம் வரை அவன் கேட்கும் கேள்விகளுக்குப் பொறுமையாகப் பதிலளித்து வந்த கரிகாலன், அந்த கிராமதேவதை ஆலயத்தை நோக்கினான். அவன் எதிர்பார்த்ததைவிட பெரியதாக இருந்தது ஆலயம். கோவிலின் பின்பாக சற்று ஒதுங்கி காணப்பட்டது ஒரு குடில். மூங்கில் கழிகளாலும், தென்னம் ஓலைகளாலும் பின்னப்பட்டிருந்தது.

பரசலூரில் இதைவிட வசதிக்குறைவான குடிலில் பதுங்கி இருந்திருக்கின்றனர், இவனும் இவனது தாயும். முக்கூடல் கடிகையின் தீப கோபுரத்தின் படிகளில் இரவு முழுவதும் கழித்திருக்கிறான். வெளவால்கள் பலமுறை இவனது முகத்தைத் தாக்கிச் சென்றிருக்கின்றன. அதையெல்லாம் கருத்தில் கொண்டால், இந்தக் குடில் இவனுக்கு சொர்க்கபுரி.

கரிகாலன் கொண்டு வந்த பானைகளை குடிலின் உள்ளே அடுக்கினான், தொண்டையன். பெரிய பானை ஒன்றை சுமக்க முடியாமல் திணறியபடி கொண்டு வந்து வைத்தான். அந்த பானையின் வாய் மஞ்சள் துணியால் கட்டப்பட்டிருந்தது.

"இந்த பானையில் என்ன வைத்திருக்கிறீர்கள்? மிகவும் கனமாக உள்ளதே?" - தொண்டையன் கேட்க, மிடறு விழுங்கினான், கரிகாலன். உள்ளே உடைவாளை வைத்திருக்கிறேன் என்றா கூற முடியும்?

"எனது ஆடைகள், உணவு சமைக்க திரவியங்கள், எனது பூஜா விக்கிரகங்கள் ஆகியவற்றை வைத்திருக்கிறேன். அதனால்தான் அந்த பானை கனத்திருக்கிறது!” - தொண்டையனிடம் கூறிய கரிகாலன் அவன் தொடர்ந்து கேள்விகளைக் கேட்க இயலாதபடி, அவன் உள்ளங்கையில் ஒரு வெள்ளிக் கட்டியை வைத்தான். தொண்டையன் தலை வணங்கியபடி வெளியேற, குடிலின் கதவை அவன் பின்பாக மூடுவதற்காகச் சென்றான், கரிகாலன். சட்டென்று மீண்டும் தனது காலை உள்ளே வைத்து நுழைந்தான், தொண்டையன்.

"மன்னிக்க வேண்டுகிறேன், ஐயா! ஒரு முக்கியமான தகவல். இரவு துவங்குவதற்கு முன்பாக எங்கள் கிராமத் தலைவர் பச்சைவாரணர்,

https://telegram.me/aedahamlibrary

சேமாயி கோவிலுக்கு வந்து உடுக்கை அடித்து வணங்கிவிட்டு, அத்திமலை ஆலயத்திற்கு காவல் புரியச் செல்லுவார். அந்த சமயத்தில் தாங்கள் உங்கள் குடிலைவிட்டு வெளியே வராமல் இருப்பது நல்லது. அவர் வெறியாட்டம் ஆடி வெட்டரிவாளுடன் அத்திமலையான் ஆலயத்திற்குச் சென்றதும், சந்நிதியில் இருக்கும் சாவி அவர் வசம் ஒப்படைக்கப்படும். இரவு முழுவதும் அவர் ஆலயத்தில்தான் காவல் புரிவார். சேமாயி ஆலயத்தில் என்ன அரவம் கேட்டாலும் தாங்கள் வெளியே செல்ல வேண்டாம். அவர் கண்களில் அந்நேரம் படுவது மிகவும் ஆபத்து.” தொண்டைமான் எச்சரிக்க, அதனை முதல் முறையாக கேட்பது போன்று கண்களில் அச்சத்தைக் காட்டினான், கரிகாலன்.

“இதைத் தெரிந்துமா, எனக்கு இந்தக் குடிலை தந்தார், உங்கள் கிராமத் தலைவர்? அவர் பெயர் வீரகொசுவன் என்றுதானே கூறினார்கள். நீ பச்சைவாரணர் என்று சொல்கிறாயே!” - கரிகாலன் கேட்க, தொண்டையன் விளக்கினான்.

"அய்யா! அவர் பெயர் பச்சைவாரணர். ஆனால் கொசுவதலை கிராமத்தின் தலைவரை நாங்கள் வீரகொசுவர் என்றுதான் அழைப்போம்! நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள்!” என்று கூறிவிட்டு, தொண்டையன் அகல, கரிகாலன் கதவை மூடித் தாளிட்டான்.

இவன் அறியாதவனா என்ன? வீரகொசுவன் சீவேலியாக வந்து கொண்டிருந்த போதே, அவனது கண்களில் படாமல், தேவசேனனைக் கொன்றுவிட்டு, அவன் வருவதற்குள் பதுங்கிக் கொண்டானே. வீரகொசுவனின் ஆட்டம் ஒன்றும் இவனுக்குப் புதியது அல்லவே. எத்தனையோ நாட்கள், முக்கூடல் சுரங்கத்தின் வழியாகச் சென்று அத்திமலையானின் ஆலயத்தில் காவல் புரிந்து கொண்டிருக்கும் வீரகொசுவனைக் கண்டிருக்கிறானே.

அன்று இரவு –

குடிலில் படுத்தபடி அத்திமலையான் கோயிலுக்குச் சென்று அவனது சந்நிதியில் ஒரு இரவு முழுவதும் தியானம் செய்யச் சொல்லியிருந்தாரே, குதம்பைச் சித்தர். நாட்டிற்குள் நுழைவதற்கே இவ்வளவு கட்டுப்பாடுகள். ஆலயத்திற்குள் எப்படிப் பிரவேசிப்பது? சந்நிதிக்குள் எப்படி நுழைவது...?

தன்னையும் அறியாமல் உறங்குவதற்காகக் கண்களை மூடினான். அப்போது கர்ஜனையாக எழுந்த ஓலம் ஒன்று அவனது உறக்கத்தை விரட்ட, எழுந்து அமர்ந்தான், கரிகாலன். சீவேலி செல்வதற்காக

https://telegram.me/aedahamlibrary

வீரகொசுவன் புறப்பட்டுக்கொண்டிருக்கிறான் என்பதை உணர்ந்த கரிகாலன், குடிலின் சாளரத்தின் வழியாக வெளியே கவனித்தான்.

கருமை வண்ண வேட்டி அணிந்து, மார்பு முழுவதும் சந்தனம் பூசியிருக்க, நெற்றியில் சிந்தூரத்தைப் பூசியிருந்தான், வீரகொசுவன். தலையில் ஒரு கிரீடத்தை அணிந்து, ஒரு கையில் வெட்டரிவாளையும், மற்றொரு கையில் தீப்பந்தத்தையும் ஏந்தியிருந்தான். வழக்கமாக தலையின் உச்சியில் கொண்டையாகக் கிடக்கும் தலைமுடி அவனது சிரசின் இருபக்கங்களிலும் வழிந்திருந்து, தோளினில் பரவிக் கிடந்தது.

இன்னும் உக்கிரம் அவனைப் பற்றியிருக்கவில்லை. சேமாயி ஆலயத்தை வலம் வந்து, ஓலமிட்டு உக்கிரத்தை வரவழைத்துக் கொண்டிருந்தான். அவனையே கரிகாலன் வெறித்துப் பார்க்க, சிறிது சிறிதாக வீரகொசுவன் ஆவேச நிலையை அடைந்து, பிறகு உக்கிரத்துடன் அத்தியூருக்குப் புறப்பட்டுச் சென்றான். அவனையே யோசனையுடன் பார்த்தபடி நின்றிருந்தான், கரிகாலன்.

மறுநாள் -

தருமநகரத்தில் தனது மண்பாண்டங்களை விற்று விட்டு, தனது குடிலினை நோக்கி நடந்து கொண்டிருந்தான், கரிகாலன். கிராமத்தின் முதலிலேயே இருந்த வீரகொசுவன் குடிலினை கடக்கும் போது அவன் வாயில் திண்ணையில்தான் அமர்ந்திருந்தான். அருகில் ஓடிக்கொண்டிருந்த குசவன்தலை ஆற்றினில் நீராடி விட்டு வந்திருந்தான் போலும். தனது ஈரக் கூந்தலை உலர்த்திக் கொண்டிருக்க, தொண்டையன் அவனது ஈரத் தலைமுடிக்கற்றைக்கு அகில் மற்றும் அருகம்புல் பொடியைத் தணலில் இட்டு தூபமாகப் போட்டு, உலர்த்திக்கொண்டிருந்தான்.

தலையைச் சரித்திருந்த வீரகொசுவன், கரிகாலனைப் பார்த்ததும் சினேகமாகச் சிரித்தான்.

“நிலவேந்தரே! இன்றைய வியாபாரம் எப்படி?” - வீரகொசுவன் கேட்க, அவனது புன்னகையைத் தனது புன்முறுவலால் கரிகாலன் எதிர் கொண்டான்.

“பரவாயில்லை, தலைவரே! மோசமில்லை!”

“எங்கள் குலதெய்வம் அத்திமலையான் வந்தாரை கைவிடமாட்டான்!” - தனது கைவிரல்களால் கூந்தலில் அளைந்தபடி கர்வத்துடன் கூறினான்.

https://telegram.me/aedahamlibrary

'அதைத்தான் நானும் எதிர்பார்க்கிறேன்!' மனதினுள் கூறியபடி தனது குடிலை நோக்கி நடந்தான், கரிகாலன். முந்தைய இரவே, அவனுள் ஒரு திட்டம் தோன்றியிருந்தது. வியாபாரத்திற்குச் செல்லும் போது, வழியில் ஜலதாரை விதைகளைப் பறித்து வந்திருந்தான். தனது குடிலுக்கு வந்ததும், ஜலதாரை விதைகளை அரைத்து விழுதினைத் தாமரை இலை ஒன்றில் தடவியிருந்தான்.

காலையில் தயாரித்திருந்த கம்பங்கூழைச் சிறிது அருந்திவிட்டு, வீரகொசுவனுக்காகக் காத்திருந்தான். இன்னும் மாலை மயங்காத நேரம் என்பதால், வீரகொசுவன் வருவதற்கு அவகாசம் இருந்தது...

அன்று மட்டும் வீரகொசுவன் அத்திமலையான் ஆலய காவலுக்குச் செல்லப் போவதில்லை. அவனுக்கு பதிலாக கரிகாலன்தான் வீரகொசுவனாக சீவேலியில் பங்கு கொள்ளப் போகிறான். வீரகொசுவனாகச் சென்று, அத்திமலையான் சன்னிதியில் தியானம் செய்யப் போகிறான். வீரகொசுவனை பார்க்கக் கூடாது என்னும் நியதி ஊரில் நிலவுவதால், இவன் வீரகொசுவனாகச் செல்வதை யாரும் அறியமாட்டார்கள். இவன் தியானம் முடிந்து வரும் வரை, வீரகொசுவன் இவனது குடிலில் மயங்கிக் கிடப்பான். பிரக்ஞையை இழக்கச் செய்யும் ஜலதாரை விதைகளை பிரயோகப்படுத்தி கரிகாலன் காரியத்தை முடிக்கப் போகிறான். காலையில் அவனை சேமாயி ஆலயத்தில் கிடத்திவிட்டால், அவனுக்கு ஒன்றும் நினைவிருக்காது. ஆவேசித்து தான் மயங்கிவிட்டதாக நினைப்பான். தனக்கு இவ்வளவு எளிதாக ஒரு வாய்ப்பு கிட்டும் என்று கரிகாலன் சிறிதும் எதிர்பார்த்திருக்கவில்லை. முந்தைய நாள் வீரகொசுவன் காவலுக்குக் கிளம்பிச் செல்வதைக் கண்டபோது, அவனுக்குத் தோன்றிய யுக்தி இது.

கிராமம் அடங்கிவிட்டது. தொலைவில் வீரகொசுவன் தண்டை ஒலிக்க நடந்து வரும் சத்தம் கேட்க, கரிகாலன் தனது திட்டத்தைச் செயல்படுத்த தயாரானான். ஜலதாரை விதை கலவை தடவப்பட்டிருந்த தாமரையிலையைக் கையில் தயார் நிலையில் வைத்தான். மெதுவாகத் தனது குடிலைவிட்டு நழுவி, சேமாயி ஆலயத்தினுள் நுழைந்து அவளது சந்நிதியின் பின்பாக இருளில் பதுங்கிக் கொண்டான், கரிகாலன்.

வீரகொசுவன் சேமாயி தேவதையைக் கும்பிட்டுவிட்டு, அவளை வலம் வரும் நேரத்தில் காரியத்தை முடித்துவிட வேண்டும். கையில் தாமரை இலையுடன் தயாராக நின்றான், கரிகாலன்.

தண்டையொலி மிக நெருக்கமாகக் கேட்டு, பின்பு நின்றதும் அவன்

https://telegram.me/aedahamlibrary

சந்நிதி முன்பாக வந்து நின்று சேமாயியைத் தொழுகிறான் என்பதைப் புரிந்து கொண்டான், கரிகாலன். 'இதோ அவன் வலம் வரத் தொடங்குவான். மொத்தம் மூன்று முறை சந்நிதியை வலம் வருவான். முதல் சுற்றிலேயே அவனை மயங்கச் செய்ய வேண்டும்.' தனக்குள் கூறியபடி வலம் வருவதற்கு உரிய அந்த சிறிய பிராகாரத்தையே நோட்டம் விட்டுக் கொண்டிருந்தான்.

"ஹா... ஹா...”

வீரகொசுவன் ஓலமிடத் தொடங்கினான். முதல் இரண்டு சுற்றில் ஆவேசத்தை வரவழைக்க முயன்று, இறுதிச் சுற்றில்தான் ஆவேசம் கொள்வது வீரகொசுவனின் வழக்கம்.

‘ஜல்... ஜல்... ஜல்...'

திடீரென்று தண்டைகள் குலுங்க, தான் நின்ற இடத்தில் துள்ளிக் குதித்து ஆடுகிறான், வீரகொசுவன் என்பதைப் புரிந்து கொண்டான், கரிகாலன். இதோ... சந்நிதியை வலம் வரத்தொடங்கப் போகிறான்.

“ஹா...!” என்று மீண்டும் ஒருமுறை கர்ஜித்த வீரகொசுவன், வலம் வருவதற்காக சந்நிதியை சுற்றத்துவங்க, தீப்பந்தத்தின் வெளிச்சம் பிராகார கற்பாறை சுவரினில் பிரதிபலித்தது. தண்டைகளின் ஒலியும் நெருங்கி வர, தாமரை இலையைக் கையில் ஏந்தி வீரகொசுவனின் முகத்தினை அதனால் மூடுவதற்கு தயாராக நின்றான்.

ஒலியும், ஒளியும் கரிகாலன் நின்ற பக்கமாக நெருங்கி வந்தன. வீரகொசுவன் இவன் பதுங்கியிருந்த பக்கமாகத் திரும்ப, ஒருகணம் வீரகொசுவனின் உக்கிரமான கண்கள், கரிகாலனின் கண்களைக் கவனித்தன. அவனைக் கண்டு அந்த கண்களில் செம்மை ஏறுவதற்கும், கரிகாலன் தான் ஏந்தியிருந்த தாமரை இலையினை அவனது முகத்தில் அழுத்துவதற்கும் சரியாக இருந்தது. கர்ஜனையாக குரல் எழுப்ப முயன்ற வீரகொசுவன், ஓலமிட முடியாமல் திணற, தான் பற்றியிருந்த தாமரை இலைக்கு கரிகாலன் இன்னும் சற்று அழுத்தத்தைத் தர, வீரகொசுவன் மயங்கிச் சாய்ந்தான். மயங்கியிருந்த வீரகொசுவனை சுமந்துகொண்டு தனது குடிலுக்குச் சென்றவன், அவனது ஆடைகளையும், தண்டைகளையும் தான் அணிந்து கொண்டான். தனது கூந்தலை இருபுறமும் வழியவிட்டு, வீரகொசுவனின் கிரீடத்தை அணிந்து கொண்டான். தனது நெற்றியில் சிந்தூரத்தைத் தீட்டிக்கொண்டு, வீரகொசுவன் அணிந்திருந்த மலர் மாலையையும் தரித்துக் கொண்டான். சீவேலிக்குப் புறப்பட அவன் தயார். மறக்காமல், மயங்கிக்

https://telegram.me/aedahamlibrary

கிடந்த வீரகொசுவனின் கை மற்றும் கால்களைக் கட்டி விட்டு, வாயில் துணிப் பந்து ஒன்றையும் அடைத்தான்.

பிறகு அத்தியூருக்கு கிளம்பிவிட்டான். "ஹா...!" என்று ஓலம் எழுப்பியபடி, தண்டைகள் ஒலிக்க கரிகாலன் அத்தியூரை நோக்கி ஓடத் துவங்கினான்.

அத்தியூரை அடைந்ததும், ஆலயத்தின் கிழக்குக் கோபுரத் திட்டி வாசல் இவனுக்காகத் திறந்து வைக்கப்பட்டிருந்தது. அதன் வழியாக உள்ளே இறங்கியவன் நேராக அத்திமலையான் சந்நிதிக்குச் சென்று சந்நிதி வாயிலில் துவாரபாலகரின் முன்பாக இவனுக்காக வைக்கப்பட்டிருந்த திறவுகோல்களை கையில் எடுத்தான். மிகவும் சிரமப்பட்டு, அந்த திறவுகோல்களைக் கொண்டு அத்திமலைத் தேவனின் சந்நிதியை திறந்தான். சந்நிதியின் உள்ளே நுழைந்து மீண்டும் கதவுகளை மூடிக் கொண்டான்.

பச்சை ஆடை அணிந்து மிகவும் விசேடமாக அலங்கரிக்கப்பட்ட அத்திமலைத் தேவன் மிகவும் கம்பீரமாக நின்றார். அவரை கைகூப்பித் தொழுதவன், அவருக்கு முன்பாக அமர்ந்து தியானத்தில் இறங்கினான். கரிகாலன் தன்னை மறந்து அத்திமலைத் தேவனை உபாசித்தபடி மோன நிலையில் அமர்ந்தான்.

தங்கள் அத்திமலைத் தேவன் சந்நிதியில், கரிகாலன் ஆழ்ந்த தியானத்தில் இருப்பதை அறியாமல், இளந்திரையன் அமைதியாக உறங்கிக்கொண்டிருந்தான்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 12. வண்டுக்கு வண்டு தாவும் மலர்

வல்லபன், அந்தகாரத்தில் மூழ்கியிருந்து மீண்டும் பார்வையை பெற்ற போது, முதலில் அவனது கண்களில் பட்டது ஆம்ரபாலிதான். அவள் வேதியப் பெண் இல்லை. வயதிலும் இவனுக்கு சரிசமமாகவோ, இவனைவிட மூத்தவளாக இருக்கக்கூடும். அவளது உயரமும், அழகும், வடபுலத்தைச் சேர்ந்தவள் என்பதை தெரியப்படுத்தின. இவன் உயரமாக இருந்தாலும், கருத்திருந்தான். அவள் நாட்டிய மாது. இவனது வாயில் வேதசாகைகள் நர்த்தனமாடும். இவ்வளவு வேறுபாடுகள் இருவரிடையேயும் இருக்க, எப்படி அது நிகழ்ந்தது என்று தெரியவில்லை. வல்லபன் ஆம்ராவிடம் காதல் வயப்பட்டு விட்டான். அவள் தன்னைத் தேடிவந்து பார்வையை அளித்ததே தன்னுடன் வாழ்க்கையில் பயணிக்கத்தான் என்று நினைக்கத் துவங்கியிருந்தான்...

காட்டில் சுள்ளிகளைச் சேகரித்துக்கொண்டிருந்தாலும், அவனது மனம், தங்கள் நாவாய் குடிலினில் தங்கியிருந்த ஆம்ரபாலியையே வட்டமிட்டது. ஆம்ராவை காண வேண்டும் என்கிற ஆதங்கம் மனதில் எழ, சுள்ளிகளை அவசரமாகச் சேகரித்தான். பத்ரஷீலா நீராடுவதற்காக அப்போதுதான் அருவிப் பக்கமாகச் சென்றிருந்தாள். எனவே, சுள்ளிகளைச் சேகரித்துவிட்டு, ஆம்ராவுக்காக, கனிகள், தேன், தேகத்தை அழகுப்படுத்தக் கூடிய மூலிகைகள் எனத் தேடி சேகரித்துக் கொண்டிருந்தான், வல்லபன்.

மாலை சூரியன் மேற்கில் இறங்கிக்கொண்டிருந்த வேளையில் தனது குடிலில் நுழைந்த போது என்றும் இல்லாத திருநாளாக தந்தை முகுந்தநாயகர் ஆழ்ந்த நித்திரையில் இருப்பதைக் கண்டு திகைத்தான். தந்தைக்கு உடல் நலமில்லையோ என்று எண்ணி அவரை எழுப்புவதற்கு முயல, உள்ளேயிருந்து குரல் கொடுத்தாள் ஆம்ரா.

"அவர் உறங்கட்டும். பிற்பகல் முழுவதும் சுவடிகளைப் படித்துக்கொண்டிருந்தார். நான் தான் சற்றே ஓய்வு எடுங்கள் என்று அவரை பலவந்தமாக உறங்கச் செய்தேன். வயோதிகத்தில் சற்றே கோட்பாடுகளை தளர்த்திக் கொள்ள வேண்டும். தேகத்திற்கு ஓய்வு அவசியம்." ஆம்ரா கூற, அவளது அக்கறை மிகுந்த சொற்கள், வல்லபனை நெகிழச் செய்தன. 'தாய் இருந்தால் செய்திருக்க வேண்டிய செயலை, ஆம்ரா செய்திருக்கிறாள். இவள் மட்டும் எனக்கு மனையாளாக அமைந்தால், நான் பெரும்பேற்றினை பெற்றவனாகத்

https://telegram.me/aedahamlibrary

திகழ்வேன்' என்று எண்ணியபடி பெண்கள் அறியா வண்ணம் தனது கடைக்கண் பார்வையால் ஆம்ராவை அளந்தான்.

இருபதின் பருவத்தைக் கடந்து கொண்டிருப்பாள் அவள் என்று யூகித்தான். இன்னும் ஐந்தாறு வருடங்களில் முதிர்கன்னியாகி விடுவாள். நாட்டியத்திற்காக தனது வாழ்வினை அர்ப்பணித்துவிட்டதாகக் கூறுகிறாள். எவ்வளவு காலம்தான் நாட்டியத்தைப் புரிந்து கொண்டிருக்க முடியும்? பெண்ணாகப் பிறந்தவளுக்கு தாய்மையும், குடும்ப இயலும்தானே விலையுயர்ந்த ஆபரணங்கள். அதை அவளுக்குப் புரிய வைக்க வேண்டும். அன்றிரவே அவள் தனித்திருக்கும் வேளையில், தனது காதல் மனதை திறந்து காட்ட முடிவு செய்தான், வல்லபன்.

விளக்கேற்றும் நேரத்தில் எழுந்த முகுந்தர், சோர்வுடன் காணப்பட்டார். சிறிது பால் மட்டும் அருந்தி விட்டு, மீண்டும் திண்ணையிலே படுத்து உறங்கிவிட்டார். பத்ரஷீலா முகுந்தன் ஆலயத்தை கூட்டி, மெழுகி கோலமிடுவதற்காக கிராமத்து சிறுமிகளுடன் சென்றிருந்தாள்.

அதுவே தனது காதலை தெரிவிப்பதற்கு உரிய தருணம் என்று நினைத்த வல்லபன் குடிலினுள் நுழைந்தான். சரியாக, பிரம்மன் ஆலயத்தில் களவாடி இருந்த பிரம்ம ஓலையினை ஒரு வஸ்திரத்தில் புதைத்து, அதன் ஓரங்களை தைத்துக்கொண்டிருந்தாள். நாவாய் ஆலயத்தின் புராணம், தேவ உடும்பரம் அத்தியூரில் இருப்பதை ஊர்ஜிதப்படுத்திவிட்டது. எனவே, நமது பணியைத் துவக்க வேண்டியதுதான் என நினைத்து அமரஜோதிக்கு தகவல் அனுப்பிக் கொண்டிருந்தாள். அத்தியூருக்கு எப்படி ஓலை அனுப்புவது என்று ஆம்ரா மனதினுள் சிந்தித்துக் கொண்டிருக்க, அவளுக்கு தனது மனதை எப்படித் தருவது என்கிற யோசனையோடு உள்ளே நுழைந்தான் வல்லபன்.

அவன் குடிலினுள் வருவதை அறியாமல் இவள் ஆழ்ந்த சிந்தனையில் இருக்க, கால்களை லாகவமாக மடித்து மரப்பலகையினில் அமர்ந்து அவள் அந்த வஸ்திரத்தை தைத்துக்கொண்டிருக்க, அவளது அழகை பருகியபடி வந்து நின்றான், வல்லபன். யாரும் இல்லை. உனது காதலை அவளிடம் தெரிவிப்பதற்கு இதுவே தக்க தருணம். மனம் அவனைத் தூண்டிவிட, அவளது கவனத்தை கவருவதற்காக தொண்டையை செருமினான், வல்லபன்.

"ஆம்ரா!” நெகிழ்ச்சியுடன் அவனது குரல் ஒலிக்க, திடுக்கிட்டுத் திரும்பி நோக்கினாள் அவள். அவனது முகத்தை நோக்கிய அடுத்த கணம்,

https://telegram.me/aedahamlibrary

அவனது எண்ண ஓட்டத்தை புரிந்து கொண்டுவிட்டாள். நாட்டிய தாரகையாயிற்றே. ஒரு மனிதன் காதல் வயப்பட்டுவிட்டால், மனம் ஒரு குரங்கை போல அல்லவா தாவும். உடற்கூறின் மொழியும், சிந்தையின் ஓட்டமும், மனதின் பாய்ச்சலும் வெவ்வேறு திக்கில் அல்லவா பயணிக்கக்கூடும். வல்லபனின் கண்களில் தென்பட்ட பனிமூட்டம் அவன் தன்னிடம் கிறங்கிப் போயிருக்கிறான் என்பதை உணர்த்தியது.

எந்நேரமும் தன் மீது காதல் கணையினை அவன் ஏவக்கூடும் என எதிர்பார்த்து தயார் நிலையில்தான் இருந்தாள். அந்தக் குடும்பம் தனது திட்டத்திற்கு பயன்படும் என்பதற்காக முகுந்தருடன் தனித்திருக்கும் போது அவரைக் கவர, பணிவிடைகளைச் செய்து இல்லற இயலை பேணும் நல்லறத்தை அறிந்த பெண்ணாகவும், பத்ரஷீலாவின் மீது தாயன்பைப் பொழிபவளாகவும் தன்னைக் காட்டி கொண்ட ஆம்ரா, வல்லபனிடம் தனித்திருக்கும் போது தனது அழகைக் காட்டியே அவனை வீழ்த்தினாள். முதியவரின் மற்றும் ஒரு சிறுமியின் நம்பிக்கையைப் பெறுவதற்காக அதிக பிரயாசை செய்து நடிக்க வேண்டி இருந்த ஆம்ராவுக்கு, வல்லபனை மயக்க நடிக்க வேண்டிய அவசியம் இல்லாமல் போனது. அவளது அழகில் அவன் கிறங்கிப் போய்விட்டிருந்தான். ஆனால், அவனை எங்ஙனம் உபயோகப்படுத்துவது என்று இன்னும் அவள் தீர்மானித்திருக்கவில்லை ஆதலால், அவனது காதலைப் புரிந்து கொள்ளாதவளாகவே பாவனை செய்து கொண்டிருந்தாள்.

“ஆம்ரா!” குழைவுடன் வல்லபன் அழைத்தான்.

தான் தைத்துக்கொண்டிருந்த வஸ்திரத்தை அருகே வைத்துவிட்டு, பரபரப்புடன் எழுந்து நின்றாள், ஆம்ரா.

“இந்தக் குடில் உனக்கு வசதியாக இருக்கிறதா? எனது தந்தையும், தங்கையும் உன்னுடன் நன்றாகப் பழகுகின்றனரா?” --- வல்லபன் எப்படிப் பேச்சைத் துவக்குவது என்று தெரியாமல் கேட்டான்.

“மௌரியத்தில் எனது கிருகத்தில் இருக்கும் போது எப்படி உணர்ந்தேனோ அப்படியே உணருகிறேன், சுவாமி. உங்களது தந்தை எனது அறிவுப் பசியைத் தீர்க்கிறார். உமது தங்கை எனது வயிற்றுப் பசியைத் தீர்க்கிறாள். வேறு எனக்கு என்ன வேண்டும்?” அவனை கடைக்கண்களால் கவனித்தபடி கூறினாள், ஆம்ரா.

பஞ்சேந்திரியங்களுக்கும் பசி உண்டு என்பதை அறியமாட்டாளா என்ன? இருப்பினும் வேண்டும் என்றே அறிவுப் பசி மற்றும் வயிற்றுப்

https://telegram.me/aedahamlibrary

பசியைப் பற்றி குறிப்பிட்டாள். வாலிப வயதில், இந்த பசிகள் பெரிய பொருட்டாகத் திகழாது. தேகப்பசியைத் தீர்த்துக் கொள்ளவே மனம் ஆலாய் பறக்கும் என்பதை அறிந்து தான், அவனது தேகத்தை வாட்டிக் கொண்டிருக்கும் காதல் தீயைக் கொழுந்துவிட்டு எரியச் செய்யவே, அங்ஙனம் கூறினாள்.

அவள் எதிர்பார்த்தது போலவே, வல்லபன் அவளது வலையினில் விழுந்தான்.

“ஆம்ரா! செவிக்கு உணவு இல்லாத போது மட்டுமே வயிற்றுக்கு ஈயப்பட வேண்டும். கதிரவன் ஒளிர்விடும் போது மட்டுமே செவியின் பசியை தீர்க்க முடியும். வயிறு கொள்ளும் வரை மட்டுமே வயிற்றின் பசியை தீர்க்க முடியும். அறிவுப் பசியும், வயிற்றுப் பசியும் முதுமையில் நின்று போகும். ஆனால் பசி எடுக்கும் காலங்களில் மட்டுமல்லாமல், சதா சர்வகாலமும் மனதிற்கும், தேகத்திற்கும் சுகமளித்து, முதுமையிலும் ஏன் இம்மையிலும் இதமளிக்கும் அட்சயபாத்திரம் ஒன்று உள்ளது. அது ஒவ்வொருவரின் வாழ்க்கைக்கும் இன்றியமையாதது. அறிவுப் பசியைத் தீர்க்க எனது தந்தையும், வயிற்றுப் பசியைத் தீர்க்க எனது தங்கையும் இருப்பது போலவே, அந்த பசியைத் தீர்க்க என்னால் மட்டுமே முடியும். காரணம், அந்த பசியைத் தீர்க்கும் அட்சயபாத்திரம் என் வசமே உள்ளது.” காதல் உணர்வில் பேசிக் கொண்டிருந்தான், வல்லபன்.

"ஊர் பெயர் நாவாய் என்பதாலோ என்னவோ உங்கள் வாய்ப் பேச்சினால் என்னை நாணம் கொள்ள வைக்கிறீர்கள். உண்டி சுருங்குதல் பெண்டிற்கு அழகு என்பதுதான் நாட்டியக் கலையில் நான் கற்ற முதல் பாடம். அறிவைக் கட்டுப்படுத்துதல்தான் வர்மக் கலையில் நான் கற்ற முதல் பாடம். ஆனால், தேகத்தைச் சுருக்கவோ, கட்டுப்படுத்தவோ நான் இன்னும் பயிலவில்லை. அதற்கான பாடமும் கற்கவில்லை. உண்மை! தேகப் பசி அதிகரிக்கும் இளமைப் பருவத்தில் தான் நான் இருக்கிறேன். ஆனால் காதல் பாடத்தைக் கற்கும் வாய்ப்பு அடியாளுக்குக் கிட்டவில்லை. காரணம் எனது வாழ்க்கை நடனக்கலைக்கே அர்ப்பணிக்கப்பட்டு விட்டது. எனவே, அறிவுப் பசிக்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்கிறேன். அறிவு வாழ வேண்டும் என்பதற்காக வயிற்றுக்குச் சிறிது அளிக்கிறேன். அவ்வளவே!"

அவனது விரகத்தைத் தூண்டச் செய்யும் சொற்களைத் தேர்ந்தெடுத்து அவனது தகிப்பினை அதிகரிக்கச் செய்தாள், ஆம்ரா. வல்லபனும் மற்போர் கற்றவன்தான்... அனலோம்பும் குலத்தில் பிறந்திருந்தாலும், உள்ளத்தில் உக்கிரக்கனலையும் கொண்டிருந்தான். இரவு வேளைகளில்

https://telegram.me/aedahamlibrary

கிராம வாலிபர்கள் அனைவரும், ஆற்றங்கரையில் மற்போர், வில்லம்பு மற்றும் ஈட்டி எறிதல் போன்ற பயிற்சிகளில் ஈடுபடுவார்கள். மற்ற எல்லா வாலிபர்களை விட வல்லபன் ஈட்டி எறிவதில் வல்லவனாகத் திகழ்ந்தான். காரணம், ஈட்டி எறிதலுக்கு மனம் குவிதல் வேண்டும். அனலோம்பும் வல்லபனுக்கு மனம் குவிதல் மிக எளிதாக இருந்தது. காட்டுப் பன்றியை வேட்டையாடி கொல்வதற்கு கிராம இளைஞர்கள் வல்லபனைத் தான் அழைத்துப் போவார்கள். அவனும், வராக பெருமானிடம் வேண்டி மன்னிப்பு கேட்டுவிட்டு, பிறகே ஈட்டியை ஏவி அந்தப் பன்றியை கொல்வது வழக்கம்.

கட்டுடலும், இளமையும் அவனது ஆடையை மீறி வெளியே புலப்பட, ஆம்ரா அவனைக் கிறங்கும் கண்களால் மேலும் கீழும் பார்த்தாள். பதின்மூன்று பிராயத்தில் மன்னன் அசோகனின் அவையில் நாட்டிய மாதாக நுழைந்தாள். அப்போது திஸ்ஸரக்காவின் மயக்கத்தில் முழுவதுமாகக் கிடந்ததால், அசோகன் சிறுமியான இவளை ஒரு பொருட்டாகவே மதிக்க வில்லை. அசோகன் துறவு பூண்டு தசரதன் மன்னனாக பதவியேற்றதும் இவளும் ஆஸ்தான நர்த்தகியாக உயர்வு பெற பலமுறை தசரதனின் அந்தப்புரத்திற்குச் சென்றிருக்கிறாள். மன்னனுக்கு பணிவிடை செய்யும் விதமாகவே தன்னை அர்ப்பணித்து இருந்தாள். மவுரியத்தின் எதிரிகளை வீழ்த்தவும், ராஜாங்க காரியங்கள் விக்னமின்றி நடக்கவும் இவள் பலருக்குப் பயன்பட்டிருக்கிறாள். ஏன்? அத்திமலை ரகசியத்தை அறிவதற்காக சங்கர்ஷணனுடன் ஒரு இரவை கழித்திருக்கிறாள். அந்த ஏமாற்று பேர்வழி ஒன்றும் அறியாதவன் என்பதை பிறகே அறிந்திருந்தாள். இதுவரை உடலால் உறவு கொண்டிருந்தாளே தவிர, மனதினால் யாரையும் தீண்டியதில்லை. நல்லறத்தையும், இல்லறத்தையும் சேர்ந்து கடைப்பிடிக்கும் வல்லபனின் மீது எங்ஙனம் அவளுக்கு காதல் பிறக்கும்? தனக்குப் பெரிய எதிர்காலத் திட்டங்கள் இருக்க, அவற்றைச் செயல்படுத்திவிட்டு, இளமை பிரியாவிடை பெறும் போது, புத்த கயையின் ஜோதியில் ஐக்கியம் ஆகிவிட வேண்டும் என்கிற தீர்மானத்தில் இருந்தாள், ஆம்ரா. எனவே, வல்லபனின் காதல் அவளை கிஞ்சித்தும் பாதிக்கவில்லை.

“என்னிடம் காதல் பாடம் ஒப்புவிக்கின்றீரே, சுவாமி! நான் பௌத்த தர்மத்தைக் கடைப்பிடிப்பவள் என்பதை தாங்கள் அறியமாட்டீரா?” வியப்புடன் குறும்புப் பார்வை ஒன்றை அவன் மீது வீசினாள். அந்தப் பார்வையால் நிலைகுலைந்தான், வல்லபன்

"தர்மம் எதுவாக இருந்தால் என்ன? தர்மபத்னியாக இருப்பதற்கு காதல்

https://telegram.me/aedahamlibrary

தர்மத்தை அறிந்திருந்தால் போதாதா?" - வல்லபன் கேட்டான்.

"இல்லை வல்லபரே! தாங்களோ அனலோம்பும் தர்மத்தை செய்பவர். நாங்களோ அக்னியை தொழுவதில்லை. நாம் இருவரும் வாழ்க்கையில் எப்படி இணைவது?" - ஆம்ரா கேட்டாள்.

"உனக்குத் தெரியுமா, ஆம்ரா? தசாவதாரம் எடுத்த எங்கள் மாலவனின் ஒன்பதாவது அவதாரமே பௌத்தம் தான். எனவே நாம் இருவரும் இணைவதில் பிரச்னை ஒன்றும் இருக்காது. உன்னை திருமணம் செய்தேன் என்றால், எனது வாழ்க்கை பூரணத்துவத்தை பெறும்!" உணர்ச்சியுடன் கூறினான், வல்லபன்.

யோசிப்பவளைப் போன்று முகத்தை வைத்துக் கொண்டாள் ஆம்ரா. இவனுடன் காதல் நாடகத்தை அரங்கேற்றுவதால், இவளுக்கு என்ன பிரயோஜனம் கிட்டும் என்றுதான் யோசித்துக் கொண்டிருந்தாளே தவிர, அவன் காதலை ஏற்றால் தனக்குப் பாதிப்பு உண்டாகுமா என்று அவள் யோசிக்கவில்லை. பொதுவாக ஒரு காதலன் தனது காதலை தெரிவிக்கும் போது, இவன் நம்மை உண்மையிலேயே காதலிக்கிறானா, இல்லை மது உண்ணும் வண்டாக வந்து, தேனை அருந்திவிட்டு பறந்து சென்றுவிடும் ஏமாற்றுக்காரனா என்றே ஒரு பெண் சந்தேகம் கொள்வாள். ஆம்ராவுக்கு அந்த கவலை இல்லை. காரணம், வண்டு விட்டு வண்டு தாவும் மலர் அவள்! தான் ஏமாற்றப்படுவோம் என்கிற அச்சத்தை என்றுமே கொண்டவள் இல்லை.

அவள் யோசிப்பதைக் கண்டதுமே நம்பிக்கையுடன் இன்னும் நெருங்கி வந்தான், வல்லபன்.

"ஆம்ரா! எனக்கு கண்பார்வை அளித்தாய். உயிர் கொடுத்தவன் தெய்வம். உடல் கொடுத்தவன் தந்தை. ஞானப்பால் கொடுத்தவள் தாய். சீர் கொடுத்தவள் சகோதரி. நீ எனக்கு கண் கொடுத்திருக்கிறாய். கண் மனித தேகத்தின் சாளரம் அல்லவா? அந்த சாளரத்தின் வழியாக இந்த உலகை நான் காண்பதற்கு நீயே காரணம். கண் தானே உலகையும் நோக்கி தன்னையும் காண வைக்கிறது. எனது கண்களில் நீதான் தெரிகிறாய். உனது கண்களில்தான் நான் என்னையே காண்கிறேன். எனவே எனது காதலை ஏற்றுக்கொண்டு என்னை பாக்கியவானாக மாற்று." - வல்லபன் கேட்டான்.

காதல் வயப்படும் போது வாலிபர்களின் கற்பனைகள் எவ்வளவு புதுமையாகத் தோன்றுகிறது. அவர்கள் பேசும் வசனங்கள்தான் எவ்வளவு இனிமையாக இருக்கின்றது. அந்த இனிமையில் தானே

https://telegram.me/aedahamlibrary

பெண்கள் மயங்கிவிடுகிறார்கள்? ஆனால் ஆம்ராவுக்கு இதெல்லாம் புதுமையா என்ன? மஞ்சத்தில் அசோகனின் மகன் தசரதன் இவளை எப்படியெல்லாம் புகழ்ந்திருக்கிறான்!

புராண தசரதனுக்கு ஆயிரம் மனைவிகள் என்பார்கள். அந்த ஆயிரம் மனைவிகள் சேர்ந்தாலும் தர முடியாத இன்பத்தை நீ ஒருவளே எனக்கு அளித்துவிட்டாய், என்று காதல் போதையில் பிதற்றினானே.

அவன் மட்டுமா! படை வீரர்கள் இவளை போர்க் களத்திற்கு ஒப்பிட்டுப் பேசுவார்கள் என்றால், வணிகர்கள் இவளது சிரிப்பைத் தங்க நாணயங்களின் ஒலிக்கு ஒப்பிடுவார்கள். ஏன்? சங்கர்ஷணன் கூட அத்திமலை ரகசியத்தைக் காட்டிலும் மிகவும் உயர்ந்தது மன்மத ரகசியம் என்றெல்லாம், உளறிக்கொட்டிக் கொண்டிருந்தானே.

முதன்முதலாக வல்லபனின் இறைஞ்சல் தனது தேகத்திற்காக மட்டும் இல்லாமல் தனது மனதினை யாசகம் கேட்கும் விதமாக அமைந்துள்ளதை சற்றே வியப்புடன் பார்த்தாள். அவளை ஆசையுடன் பார்த்துக் கொண்டிருந்தானே தவிர, அதில் காமம் தென்படவில்லை. இருப்பினும், ஒரு அந்தணனுடன் நாடகத்திற்காகக் கூட இவளால் காதல் புரிய முடியுமா என்ன?

வல்லபனை எப்படிக் கையாள வேண்டும்? அவனால் என்ன பிரயோஜனம் என்று தெரியாத நிலையில், இப்போது ஏதாவது காரணத்தைக் கூறி அவனைத் தட்டிக் கழிக்க நினைத்தாள், ஆம்ரா.

“வல்லபரே! இப்போதைக்கு நான் தங்கள் தந்தையின் செவிலி. உங்கள் தங்கைக்கு சகோதரி. அந்த உறவுக்குரிய கடமைகளை நான் ஆற்ற வேண்டும். அந்த கடமைகளை முடிக்கும் வரை உங்களுடன். எவ்வித உறவையும் ஏற்படுத்த நான் விரும்பவில்லை. உறவு ஏற்படுமா, ஏற்படாதா என்பதை இப்போதைக்குக் கூற முடியாது. உங்கள் தங்கை பத்ரஷீலாவுக்கு முதலில் திருமணம் ஆக வேண்டும். அதுவரை உங்கள் காதலை ஏற்கும் நிலையில் நான் இல்லை.” சாதுர்யமாக அவனைக் கழட்டிவிடவே, இவ்வாறு கூறினாள், ஆம்ரா. ஆனால் தனது தங்கையின் திருமணம் வரையில் தான் அவனைக் காதலிக்க விரும்பவில்லை என்று அவள் கூறுவதாக நினைத்து, அவளது நல்லெண்ணத்தை எண்ணி புளகாங்கிதம் அடைந்தான், வல்லபன்.

"நல்லது. ஆம்ரா! நாளை காலை குருகுலம் துவங்கியதும் உனக்கு ஒரு காட்சியைக் காட்ட இருக்கிறேன்!” - வல்லபன் கூறிவிட்டு, உற்சாகத்துடன் குடிலைவிட்டு வெளியேறினான்.

https://telegram.me/aedahamlibrary

மறுநாள் –

சுவடியை பதுக்கியிருந்த வஸ்திரத்தை ஆம்ரா தைத்துக் கொண்டிருந்த போது, குடிலினுள் நுழைந்து, சாளரத்தருகே சென்று நின்ற வல்லபன், ஆம்ராவை அருகே அழைத்தான். ஆம்ரா அவனை நோக்கிச் செல்ல, வல்லபன் சாளரத்தின் வழியாக ஒருவனைக் காட்டினான்.

குருகுலம் தொடங்குவதற்கு முன்பாக, ஆலமரம் ஒன்றின் கீழே இருந்த மேடையை, கூட்டி சுத்தப்படுத்தி, நீரால் மொழுகி, அழகான கோலம் ஒன்றை வரைந்து கொண்டிருந்தாள், பத்ரஷீலா. சரியாக அவள் கோலமிடும் போது, ஒரு அழகிய குமரன் குருகுலத்தை நாடி வந்தான். மிக அழகாக இருந்தான். நெடிய தேகம். கட்டான உடலமைப்பு. உடலெங்கும் ருத்ராக்ஷங்களை பூட்டியிருந்தான். நெற்றியில் திருநீற்றுக் கீற்றுகள். மையத்தில் யாக தீட்சையினால் ஒரு புள்ளியை வைத்திருந்தான். வேட்டியை கச்சமாகக் கட்டி, அதன் மீது மான்தோலை கட்டி, அதன் மேல் ஒரு வஸ்திரத்தை கட்டியிருந்தான். செவிகளில் கர்ண குண்டலம். அவனது தீர்மையான நாசியும், குவிந்த உதடுகளும், முகவாயில் உள்ள குழியும் அவனை மிகவும் கம்பீரமாகக் காட்டின. அப்போதுதான் பால்ய பருவத்தைவிட்டு, குமார பருவத்தினில் காலடி வைத்ததற்கு அடையாளமாக, இளமை கொப்பளிக்கத் தொடங்கி இருந்தது.

இதுவரை ஆம்ரா கண்டிருந்த வாலிபர்களிடம் இல்லாதிருந்த ஒரு குணத்தை முதன்முறையாக அந்தக் குமரனின் கண்களில் கண்டாள். எதையும் என்னால் செய்ய முடியும் என்கிற ஒரு துடிப்பு அவனது கண்களில் இருந்தது. உலகத்திலேயே தான் மட்டுமே வாழ்வது போன்றும், தான் மட்டுமே அத்தனை கலைகளையும் கரைத்துக் குடிக்கப் போகிறோம் என்பது போலவும் அந்த குமரன் பார்த்த பார்வை இருந்தது. அகந்தையா, மேதாவித்தனமா என்று கூற முடியாத அளவு தீர்மையான பார்வையைக் கொண்டிருந்தான்.

வரும் போதே “ந தர்ம நிஸ்டோஸ்மி... நசாத்மா வேதி நபக்திமான்... தவச் நேத்ராரவிந்தே அகிஞ்சநன்!” என்று சமஸ்க்ருதத்தில் கூறியபடி வர அவனது வெண்கலக் குரலைக் கேட்டு அதிர்ந்து போனாள், ஆம்ரா. என்ன கம்பீரம்! மற்றவர்களை ஆகர்ஷிக்கும் குரல். அவன் குரலைக் கேட்டால் உலகமே ஸ்தம்பித்துவிடும், இசையாக ஒலித்தான் அந்த குமரன். அசோகனுக்கு குரல் சற்றே கரடுமுரடாக இருக்கும். தசரதனுக்கு பெண்மையின் குரலாக ஏற்ற இரக்கத்துடன் இருக்கும். சங்கர்ஷணனின் குரல் நிதானமாக ஒலிக்காமல், கற்பாறைகளில் புரண்டு ஓடும்

https://telegram.me/aedahamlibrary

ஆற்றினை ஒத்திருக்கும். ஆனால், இந்தக் குமரனின் குரல், பிசிறில்லாமல், இடி இடிப்பது போன்று மற்ற ஒலிகளை அடக்கிவிடும் விதமாக இருப்பதைக் கவனித்தாள். ஆண்களுக்கு கம்பீரக் குரல் தேவை. ஆனால் இந்தக் குமார பருவத்திலேயே இவனது குரல் இவ்வளவு கம்பீரமாக ஒலிக்கிறது என்றால், இளமையின் உச்சத்தில் இருக்கும் போது எவ்வளவு கம்பீரமாக இருக்கும்! அவனையே வைத்த கண் வாங்காமல் நோக்கினாள் ஆம்ரா. முகுந்தரிடம் கல்வி கற்க வந்திருப்பவன் என்பதை மட்டும் அவளால் யூகிக்க முடிந்தது.

“அந்தக் குமரனின் பெயர், பரமபுருஷன். நாங்கள் பரமன் என்று அழைப்போம். எங்கள் குருகுலத்தின் தலைமை மாணவன். இப்போது அவன் கூறியதற்கு பொருள் விளங்குகிறதா?” -- புன்முறுவலுடன் கேட்டான் வல்லபன்.

ஆம்ரா தனது இதழ்களைப் பிதுக்க, வல்லபன் விளக்கினான்.

“ந தர்ம நிஸ்டோஸ்மி... நசாத்மா வேதி நபக்திமான்... தவச் நேத்ராரவிந்தே அகிஞ்சநன் என்றால் நான் நிஷ்டையை அறியாதவன். ஆத்ம வேதியும் அல்லன். உனது தாமரை போன்ற கண்களுக்கு முன்னால் மிகவும் எளியவன் என்று அவன் கூறுகிறான்!” -- வல்லபன் கூறினான்.

அதிர்ந்து போனாள் ஆம்ரா. "அழகான வாக்கியம். யாரிடம் கூறுகிறான்?”

"அதோ கோலமிட்டுக் கொண்டிருக்கிறாளே, எனது தங்கை, பத்ரஷீலா அவளை நோக்கித்தான் கூறுகிறான். இன்று உனக்கு ஒரு காட்சி காட்டுவதாக கூறினேனே. இந்தக் காட்சியைப் பற்றிதான் கூறினேன். அவன் பத்ரஷீலாவை காதலிக்கிறான். அவனுக்கு யாரும் இல்லையென்பதால் அதைக் காரணம் காட்டி அவளால் அவனது காதலை தட்டிக்கழிக்க முடியவில்லை. மேலும், எனக்கு கண்பார்வை இல்லை என்கிற காரணத்தால், தான் மணமாகிச் சென்றுவிட்டால், நானும், தந்தையும் தவிக்கப் போகிறோமே என்கிற எண்ணத்தில் அவனது காதலை ஏற்காமல் இருந்தாள். எனக்குத்தான் நீ காதல் கண்களைக் கொடுத்துவிட்டாயே. இனி அவர்கள் காதலிப்பதில் தடை என்ன? அவன் கல்வியை முடித்ததும் அவர்கள் திருமணம் நடைபெற உள்ளது. அதற்குப் பிறகு எனது காதலை ஏற்றுக் கொள்வதில் உனக்கு தயக்கம் இல்லையே?” வல்லபன் கேட்டான்.

அவனுக்கு பதில் கூறாமல், பரமனை மீண்டும் ஏறிட்டு நோக்கினாள்,

https://telegram.me/aedahamlibrary

ஆம்ரா. உண்மையிலேயே பத்ரா பாக்கியசாலி. எவ்வளவு கம்பீரமாக இருக்கிறான், பரமன்.

"மிகவும் பொருத்தமானவனைத்தான் மருமகனாகத் தேர்ந்தெடுத்து இருக்கிறீர்கள். ஆனால் எனது கண்மணி பத்ராவை பத்திரமாக கவனிப்பானா? அவனது குடும்பப் பெரியோர்களிடம் பேசிப் பார்த்தீர்களா?" வல்லபன் கேட்ட கேள்விக்கு விடையளிக்காமல், தான் அவனை எதிர்கேள்வி கேட்டாள், ஆம்ரா.

“பால்யத்தில் இருந்தே அவனைத் தெரியும். அவன் தந்தை ஒரு பெரிய வேத பண்டிதர். அவர் சர்ப்பம் தீண்டி இறக்க, அவனது தாய் பாமினி மிகவும் சிரமப் பட்டுதான் அவனை வளர்த்தாள். எங்களது குருகுலத்தில் அவனை ஒப்படைத்துவிட்டு, தான் தனது தமையன் வீட்டில் தங்கி இருக்கிறாள். இவன் இங்கே எங்கள் குடிலில்தான் தங்கியிருந்தான். பத்ரா வயதுக்கு வந்ததும், காட்டிற்கு அப்பால் இருக்கும் அவனது மாமன் வீட்டில் இருந்து வருகிறான். இரண்டு திங்கள் காலம், மாமனுடன் அத்தியூருக்கு தீர்த்த யாத்திரை சென்றிருந்தான். இப்போதுதான் வருகிறான்" என்றான் வல்லபன்.

"அத்தியூருக்கா? அங்கே எதற்குப் போனார்கள்?" -- தன்னையும் அறியாமல் அவள் கேட்டுவிட்டாள்: அவளது குரலில் ஒலித்த பரபரப்பைக் கவனியாமல், வல்லபன் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தான்.

"பரமன் எனது தந்தையிடம் கற்க வேண்டியவற்றை நிறைவு செய்யப் போகிறான். மேலே, அவனுக்கு பிரம்ம சூத்ரங்களை ஆராய வேண்டும் என்கிற ஆசை. முக்கூடல் கடிகையில் மட்டுமே பிரம்ம சூத்திரங்கள் போதிக்கப்படுகின்றன என்பதால் அவன் அங்கே கல்வி பயில ஆசைப்படுகிறான். அவனை அங்கு சேர்ப்பதற்காகவும், அத்திமலைத் தேவனை தரிசிப்பதற்காகவும், அவனது மாமன் மற்றும் தாயுடன் அத்தியூர் சென்று விட்டு வந்திருக்கிறான்!" வல்லபன் கூற, அதற்கு மேல் பொறுப்பாளா, ஆம்ரா? பரமனுடன் எப்படியாவது தொடர்பினை ஏற்படுத்திப் பேச வேண்டும் என்று நினைத்தாள்.

வல்லபனை வேதனையுடன் பார்த்தாள், ஆம்ரா.

“என்ன சொல்கிறீர்கள், வல்லபரே. ஒரு திங்கள்தான் ஆகின்றது, உங்கள் குடும்பத்தாரை சந்தித்து. யாரும் இல்லாத எனக்கு யானை பலத்தை தந்துவிட்டது உங்கள் குடும்பம். குறிப்பாக பத்ரஷீலா எனது கருத்தைக் கவர்ந்து விட்டாள். அவளைவிட்டு நான் எங்ஙனம் பிரிந்து

https://telegram.me/aedahamlibrary

இருக்க முடியும்? தயை கூர்ந்து உங்களது வருங்கால மருமகப் பிள்ளையிடம் கூறுங்கள். நம் பத்ரஷீலாவை மணந்து கொண்டு நாவாய் கிராமத்திலேயே இல்லறம் நடத்தச் சொல்லுங்கள். நாமும் அவர்களை கவனித்துக் கொள்ளலாம். எனக்கும் பத்ரஷீலாவுடன் பொழுது போகும்!”

தேனில் ஊறிய பலாச்சுளைகளாக இவள் பேச, நெகிழ்ந்து போனான், வல்லபன்.

‘எவ்வளவு நல்ல எண்ணம் படைத்தவள். இவளை நான் மனையாளாகக் கொண்டுவிட்டால், அப்புறம் எனக்கு குறைகளே ஏற்பட வாய்ப்பில்லை!' வல்லபன் பார்வையில் அவள் மீது கொண்டிருந்த காதலோடு மதிப்பும் அதிகரித்தது.

"ஆம்ரா! எங்களுக்கு மட்டும் பத்ராவை பிரிய ஆசையா? எனது தந்தையே அவனிடம் கேட்டுப் பார்த்து விட்டார். பிரம்ம சூத்ரங்களை கற்க, அவன் அத்தியூர் போக வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருக்கிறான். நாங்கள் என்ன செய்ய?” - வல்லபன் கூறினான்.

“எனது எதிர்கால நாத்தியின் வருங்கால கணவனிடம் நான் பேசி அவரது மனதை மாற்றுவதற்கு முயன்று பார்க்கட்டுமா?” ஆம்ரா வேண்டுமென்றேதான் அவ்வாறு கேட்டாள்.

‘எதிர்கால நாத்தியின் வருங்கால கணவன்' என்று ஆம்ரா கூறியதும், பிரமிப்புடன் அவளை நோக்கினான், வல்லபன். தனது காதலை ஏற்பதற்கு அந்த கணமே அவள் சித்தமாகி விட்டாள் என்பதைப் புரிந்து கொண்டதும், உற்சாக வெள்ளத்தில் மிதந்தான் வல்லபன்.

"உண்மையாகவே, என் காதலை ஏற்றுக் கொள்கிறாயா, ஆம்ரா?” வல்லபன் அவளை பிரேமையுடன் இன்னும் நெருங்கினான்.

"முதன் முதலாக நான் ஆற்றில் நீராடிய போது, தாங்கள் என்னை வெறித்துப் பார்ப்பதாகக் கருதி உங்களிடம் சண்டையிட வந்தேன் அல்லவா? உண்மையில் உங்களுடன் சண்டையிட வரவில்லை. எதிர் கரையில் இருந்து, உங்களது கம்பீரமான உருவத்தைக் கண்டு மலைத்துப் போனேன். சண்டையிடும் பாவனையில் உங்கள் அழகைக் கண்டு களிக்கவே கரை கடந்து வந்தேன். ஆனால், தாங்கள் என்னைக் காணவில்லை. தங்களுக்கு பார்வை இல்லை என்பதை அறிந்ததும், துடித்துப் போனேன். இவ்வளவு கம்பீரமான தங்களுக்கு ஒரு குறை உள்ளதே என்று கண்கலங்கினேன். அப்போதுதான், தங்களது பார்வை

https://telegram.me/aedahamlibrary

பந்தனம் செய்யப்பட்டுள்ளது என்பதை உணர்ந்தேன். இந்த கம்பீரமான உருவத்திற்கு குறை ஒன்றும் இருக்கக்கூடாது என்கிற ஆதங்கத்திலேயே உங்களது பார்வையைத் திருப்பித் தந்தேன். உண்மையில் சொல்கிறேன். கண்டதும் தங்கள் மேல் மையல் கொண்டேன். ஆனால், அறம் வளர்க்கும் அந்தணர் குலமானதால், எனது காதலை நீர் ஏற்பீரோ என்கிற அச்சத்தில்தான் இதுகாறும் எனது காதலைக் கூறாமல் தவிர்த்தேன். மேலும், நான் தங்களை மயக்கிவிட்டேன் என்று உங்கள் நாவாய் கிராமத்தினர் பழிக்கக் கூடாது அல்லவா. எனவேதான், பத்ரஷீலாவுக்கு திருமணம் நடக்கும் வரை எனது காதலை மனதின் ஆழத்தில் புதைக்க எண்ணினேன். ஆனால், பரமபுருஷர், எனது காதல் மனதை விடுவித்துவிட்டார். இனி எனக்கு ஒருவித அச்சமும் இல்லை. நீங்கள் அக்னியில் ஆஹுதிவிடும்போது, நான் தங்கள் தோளினைப் பற்றி நிற்கத் தயார்!”

சூழ்ச்சி செம்பில் புகழ்ச்சி முலாம் பூசி, வல்லபனுக்கு சமர்ப்பிக்க, அவன் அவளது கைகளை இறுகப் பற்றி தனது நெஞ்சில் வைத்துக் கொண்டான்.

கண்களை மூடி அவன் அந்த அனுபவத்தை ரசித்துக் கொண்டிருக்க, அவனை அருவருக்கும் கண்களுடன் நோக்கினாள், ஆம்ரா. சட்டென்று அவளைத் தனது பக்கமாக இழுத்து மார்பில் சரித்துக் கொண்டான், வல்லபன்.

நேற்று வரை கம்பீரமாகத் தோன்றிய வல்லபன், பரம புருஷனைக் கண்டதும் மிகவும் சிறுத்துப் போனதை உணர்ந்தாள், ஆம்ரா. மன்னர்களின் போர்க்களம் போன்ற மார்பினில் புரண்டிருந்தவள்தான் ஆம்ரா. ஆனால் இப்போது வல்லபனின் மார்பு அவளுக்கு உறுத்தியது. உறுத்தியது அவனது வெண்புரிநூல்தான் என்று முதலில் நினைத்தாள். ஆனால் உறுத்தியது சற்று முன் அவள் கண்டிருந்த அந்த குமரன், பரமனின் உருவம் என்பதை விரைவிலேயே உணர்ந்து கொண்டாள்.

"சரி... விடுங்கள். நான் எனது நாத்தியையும் அவளது வருங்கால கணவனையும் சந்திக்க ஆவல் கொண்டிருக்கிறேன். எனக்கு அவனை அறிமுகம் செய்யுங்கள். அவனை அத்தியூர் போகா வண்ணம், இங்கேயே இருக்கச் செய்கிறேன்!" - ஆம்ரா கூற, குதூகலத்துடன் அவளை அழைத்துக்கொண்டு வெளியே சென்றான், வல்லபன்.

கோலமிட்டுக் கொண்டிருந்த பத்ரா நாணத்துடன் ஓரக்கண்களால் பரமனைக் கவனித்துக் கொண்டிருக்க, அவன் வைத்த கண் வாங்காமல்

https://telegram.me/aedahamlibrary

பத்ராவையே உற்று நோக்கிக் கொண்டிருந்தான். அவனது உருவம் இப்போது முழுவதுமாக புலப்பட, முதன்முறையாக தனது மனதில் ஒருவித படபடப்பு தோன்றுவதை கவனித்தாள், ஆம்ரா. இதுவரை இவள் சந்தித்த, உறவாடிய எந்த ஆண்மகனும் இவளுள் ஏற்படுத்தாத அந்தப் படபடப்பினை இவள் முதன்முறையாக உணர்ந்தாள். அவனது மெல்லிய தேகமும், உயரமும், அவளுக்குள் ஒரு பிரமிப்பினை ஏற்படுத்தின.

ஆனால் இவர்கள் தன்னை நோக்கி வருவதை கவனியாமல், பத்ராவையே வெறித்துக் கொண்டிருந்தான், பரமன். ஆம்ராவுக்கு அது சற்று ஏமாற்றத்தைத் தர, தனது கால் நூபுரங்களை வேண்டுமென்றே ஒலி எழுப்பியபடி அன்னமாக நடந்தாள் ஆம்ரபாலி. மேடையில் தான் காட்டும் சாகசங்களை அந்தத் தருணத்தில் அவள் பிரயோகிக்க, சப்திக்கும் அவளது நூபுரங்கள் பரமனின் செவியைக் கிழித்துக்கொண்டு உட்புக, சட்டென்று அவர்கள் வரும் திக்கில் நோக்கினான் பரமன்.

பார்வையற்ற வல்லபனுக்கு மட்டும்தான் ஆம்ரா கண் கொடுத்திருந்தாளா என்ன? மேதாவிலாசம் தெறித்த பரமனின் கண்கள் கூட அப்போதுதான் பார்வையைப் பெற்றன போன்று, செயலற்றுப் போய் நின்றன.

அப்போது, அவனது கண்களை பத்ராவின் புறமாக வலுக்கட்டாயமாக திருப்பி வைத்தாலும் அவை நிச்சயம் அவளை நோக்க மறுக்கும்.

தன்னை நோக்கி வரும் அந்த தேவலோக மங்கை யாராக இருக்கக் கூடும் என்கிற கேள்வி இதயத்தில் எதிரொலிக்க, அவள் யாராக இருக்கக்கூடும் என்கிற ஆராய்ச்சியை மேற்கொள்ளக் கூட சக்தியின்றி ஆம்ராவையே வெறித்தான். ஆனால் உலகின் சிறப்பான எல்லாமே தனது மேதாவித்தனத்திற்கு அடிமை என்கிற எண்ணம் மேலோங்க, அவனது கண்கள் தமக்கு ஏற்பட்டிருந்த பிரமிப்பினை உமிழ்ந்து விட்டு, அகந்தையைப் போர்த்திக் கொண்டன. தனக்குப் பின்பாக ஆவலுடன் வந்து நின்ற, பத்ரஷீலாவைக் கூட பரமன் திரும்பி நோக்கவில்லை.

*****

https://telegram.me/aedahamlibrary

# 13. அகந்தை அழிந்தது

கரிகாலன் தொடர்ந்து தியானத்திலேயே இருந்தான். கதிரவனின் இரதம் கிழக்கு வானில் புறப்பட்டுச் செல்வதற்கு தயாராக இருக்க, விடியலை அறிவிக்க பறவைகள் கட்டியம் கூற, அவனோ தனது ஆழ்நிலை தியானத்தில் இருந்து சற்றும் மீளவில்லை. கண்மூடி, அத்திமலையானின் முன்பாக வீரகொசுவனின் ஆடையில் அமர்ந்திருந்தான். இனியும் அவனது தியானம் தொடர்ந்தால், பல அனர்த்தங்கள் நிகழும் என்று அத்திமலையானுக்கே தோன்றிவிட்டதாலோ என்னவோ அவனை எழுப்புவதற்கு தயாராகிவிட்டார் போலும். ஒரு பெரிய பல்லி ஒன்று அத்திமலையான் சிலையின் பின்னால் இருந்து கரிகாலன் அமர்ந்திருந்த பக்கமாக வந்தது. அவனையே தனது இலக்காகக் கொண்டது போன்று, வேகமாக ஊர்ந்து சென்று கரிகாலன் முன்பாக சென்று நின்றது. அத்திமலையானின் முன்பாக அமர்ந்து தியானம் செய்து கொண்டிருந்த கரிகாலனின் வலது கால் பெருவிரல் அந்த பல்லியின் கண்களை கவர்ந்து இழுத்தன. அதன் கண்களுக்கு தாமரை ரேகையை கொண்ட கரிகாலனின் கருத்த வலதுகால் பெருவிரல், ஒரு சிலந்தி பூச்சியைப் போன்று தோன்றியிருக்க வேண்டும். விரைந்து சென்று அதனை கவ்விப் பிடிப்பதற்காக வாயை திறந்தபடி முன்னேற, தனது கால் பெருவிரலில் ஏதோ ஊர்வதை உணர்ந்து, தியானம் கலைந்து கண்களைத் திறந்தான், கரிகாலன். பறவைகளின் இரைச்சல்கள் பொழுது புலரப்போவதை அறிவிக்க, பரபரப்புடன் தியானத்தை முடித்துக் கொண்டு எழ முற்பட்டவன், காலில் மிருதுவாக ஏதோ தட்டுப்பட, குனிந்து கவனித்தான். ஒரு பெரிய பல்லி அவனது வலது கால் பெருவிரலின் மீது தொற்றிக் கொண்டிருந்தது. சட்டென்று, கரிகாலன் காலை உதற, அந்த பல்லி சட்டென்று விலகி, விடுவிடுவென்று அத்திமலைத் தேவனின் சிலைக்குப் பின்பாகச் சென்று பதுங்கியது.

கோயில் அர்ச்சகர்கள் வருவதற்குள் இவன் கிளம்ப வேண்டும். மீண்டும் ஒருமுறை அத்திமலையானை வணங்கிவிட்டு, தனது வெட்டரிவாளையும், தீப்பந்தத்தையும் எடுத்துக்கொண்டு சந்நிதியைவிட்டு வெளியே வந்தவன், திறவுகோல்களால் சந்நிதிக் கதவை மூடிவிட்டு, ஆலயத்தைவிட்டுக் கிளம்பினான். வீரகொசுவனின் உடையில் வேகமாக கொசுவன்தலை கிராமத்தை நோக்கி ஓடத்துவங்கினான். சூரியன் இதோ உதயமாகிவிடுவேன் என்று செம்மைக் கம்பளத்தை வானில் விரித்த நேரம், தனது குடிலினுள்

https://telegram.me/aedahamlibrary

நுழைந்தான். இன்னமும் வீரகொசுவன் மயக்க நிலையில்தான் இருந்தான். அவசரமாக தான் அணிந்திருந்த அவனது ஆடைகளைக் களைந்து அவனுக்கு அணிவித்தான். பிறகு அவனை சுமந்து கொண்டு சேமாயி ஆலயத்தின் முன்பாக கிடத்திவிட்டு, மறக்காமல் அவனது வெட்டரிவாளையும், தீப்பந்தத்தையும் அவனது கைகளில் சொருகிவிட்டு, ஒன்றுமே நடக்காதது போன்று உறங்குவதற்கு சென்றான்.

மயக்கம் நீங்கி வீரகொசுவன் எழுவதற்கு சற்றே தாமதம் ஆகிவிட்டது. அன்று உக்கிரம் அதிகமாக இருந்திருக்கக்கூடும். அதனால்தான் தான் எழுவதற்கு நேரமாகி விட்டது என்று கூறியபடி பலவீனமாக நடந்து சென்றான், வீரகொசுவன். அவனை எதிர் கொண்ட தொண்டையன் வியப்புடன் வீரகொசுவனை பார்த்தான்.

“தலைவரே! இதென்ன இன்று இவ்வளவு தாமதமாக வந்துள்ளீர்கள்?”

“மற்ற எல்லா நாட்களைவிட, இன்று அத்தியூரானுக்கு உக்கிரம் அதிகம் போலும். சீவேலிக்குப் புறப்படுவதற்கு சேமாயி தாயிடம் அனுமதி கோரி வணங்குவேன் அல்லவா. அப்போதே எனது நினைவினை இழந்து விட்டேன்!” வீரகொசுவன் கூறிக்கொண்டிருந்தான்.

அன்று பிற்பகல் கரிகாலனுக்கு பணிவிடை செய்வதற்காக அவனது குடிலினுள் நுழைந்தான், தொண்டையன். குடில் காலியாகவே இருந்தது. கரிகாலன் அதில் தங்கியிருந்த அடையாளமே காணப்படவில்லை.

“ஐயா நிலவேந்தரே!” குரல் கொடுத்தான், தொண்டையன். பதில் இல்லை. தொண்டையன் சுற்றும்முற்றும் பார்க்க, அவனது கண்களில் தென்பட்டது ஓர் ஓலை. அவசரமாக அதனை எடுத்து மேலும் கீழும் பார்த்தான். அவனுக்கு வாசிக்கத் தெரியாது என்றாலும், நிலவேந்தன் ஏதோ தகவலை தெரிவித்திருக்கிறான் என்பதை புரிந்து கொண்டு ஓலையுடன் வீரகொசுவனை காணச் சென்றான். தொண்டையன் நீட்டிய ஓலையை வாங்கிப் படித்தான், வீரகொசுவன்.

'ஐயா! பிழைப்பு தேடித்தான் நான் தொண்டை நாட்டிற்கு வந்தேன். நேற்றிரவு நான் தங்கியிருந்த குடிலின் அருகே இருந்த ஆலயத்தில் தங்களது உக்கிரம் நிறைந்த ஆட்டத்தைக் காண நேர்ந்தது. உங்களது கோப கர்ஜனையும், தண்டைகள் ஒலிக்க, நீங்கள் ஆடிய வெறியாட்டத்தையும், வெட்டரிவாளை சுழற்றியபடி நீங்கள் ஆலயத்தை வலம் வந்ததையும் கண்ணுற்றேன். நான் சாளரம் வழியாக உங்களைக் கவனிப்பதை நீங்கள் பார்த்துவிட, என்னை வெட்டுவதற்காக ஓடி

https://telegram.me/aedahamlibrary

வந்தீர்கள். நல்லவேளை! கதவை தாளிட்டிருந்தேன். பிறகு நீங்கள் கர்ஜித்தபடியே ஓடிச் சென்றுவிட்டீர்கள். தங்களைக் காணவே எனக்கு பயமாக உள்ளது. நான் மீண்டும் எனது ஊரான வேளிர் நாங்கூருக்கே செல்கிறேன். உதவிகளுக்கு நன்றி!'

- நிலவேந்தன்.

"பாவம்! எனது ஆட்டத்தைப் பார்த்து பயந்து விட்டான், போலும்!" - வீரகொசுவன் பரிதாபத்துடன் ஓலையை பத்திரப்படுத்தினான். நாளை நிலவேந்தனை தேடி அதிகாரிகள் யாராவது வந்தால், அந்த ஓலையைக் காட்ட வேண்டும் அல்லவா?

அத்தியூரில் இருந்து கிளம்பிய கரிகாலன் நேராக காவிரிக்கரையின் மையத்தில் கோயில் கொண்டிருந்த நட்டாற்றேஸ்வரர் ஆலயத்தை நோக்கிச் சென்றான். உன்னை பத்திரமாக சேர்க்க வேண்டிய இடத்தில் சேர்த்துவிட்டேன், இனி உன் பாடு என்பது போன்று, சூரியன் அஸ்தமித்துக் கொண்டிருக்க, இருள் பரவத் தொடங்கியது. மரம் ஒன்றில் தனது புரவியைப் பிணைத்துவிட்டு காவிரி ஆற்றில் இறங்கி மையத்தில் இருந்த ஆலயத்தை நோக்கி நடந்தான், கரிகாலன்.

ஆற்றுப் படுகையின் பாறைகள் தற்போது நன்கு புலப்பட்டன. அவற்றின் மீது நடந்து ஆலயத்தை அடைந்தான். கரிகாலனின் மனது கனத்தது. பொங்கி பிரவாகமாக பாயும் காவிரிக்கா இந்த வறட்சி நிலை? ஒருவனது நெற்றிக் கண்ணின் திறமையால் தண்ணீரை வற்றச் செய்துவிட முடியுமா? முடியும் என்று நிரூபித்து விட்டானே, இளந்திரையன். உண்மையிலேயே அவன் ஒத்தாடை சிவனாரின் அருள் பெற்றவன்தானோ! இவனுக்காக இல்லாவிட்டாலும், இவன் நாட்டு மக்களுக்காக காவிரியை காப்பாற்றியே தீர வேண்டும். குதம்பைச் சித்தர் கூறியது போன்று அத்திமலைத் தேவனின் சந்நிதியில் தியானத்தை வெற்றிகரமாக முடித்துவிட்டேன். எனது தியானத்தினால், காவிரி வற்றாமல் இருக்குமா?

ஆலயத்தின் கருவறையில் ஒரே ஒரு விளக்கு சுடர்விட்டுக் கொண்டிருக்க, அவன் நட்டாற்றீசனை வணங்கிவிட்டு, சுற்றுமுற்றும் பார்த்தான்.

"சித்தரே! கரிகாலன் வந்திருக்கிறேன்!" - கரிகாலன் குரல் கொடுக்க, சிவலிங்கத்தின் பின்புறத்திலிருந்து எழுந்து வந்தார், குதம்பைச் சித்தர்.

"நான் இங்கே இருக்கிறேன், கரிகாலா! போன காரியம் நல்லபடியாக

https://telegram.me/aedahamlibrary

முடிந்ததா?" - சித்தர் கேட்டார்.

"மிக எளிதாக முடிந்தது, சித்தரே! ஆலயத்தை காவல்காக்கும் வீரகொசுவனாகச் சென்று, அத்திமலையானின் சந்நிதியில் எனது தியானத்தை முடித்தேன்!" - கரிகாலன் கூறினான்.

"தியானம் செய்தாய். நல்லது. வேறு ஏதாவது நடந்ததா?" -- சித்தர் ஆவலுடன் கேட்டார்.

"இல்லை சுவாமி! அமைதியாகவே சென்றது எனது தியானம். நான் வந்ததும் போனதும் யாருக்குமே தெரியாது!" - கரிகாலன் கூறினான்.

"நான் கேட்பதை நீ புரிந்து கொள்ளவில்லை, கரிகாலா! உனது தியானத்தை கலைப்பது போன்று அனுபவம் ஏதாவது கிட்டியதா?" - சித்தர் தொடர்ந்து கேட்டார்.

"இல்லையே சுவாமி! எவ்வித இடையூறுமின்றி தியானத்தை செய்தேன்!" - கரிகாலன் கூற, சித்தர் யோசனை செய்தபடி கருவறையைவிட்டு ஆலயத்தின் வெளியே வந்து நின்றார்.

"ஈசனே! இதென்ன சோதனை! காவிரியன்னையைக் காப்பாற்ற முடியாதா?" தனக்குள் முணுமுணுத்தபடி காவிரி ஆற்றின் மிகுந்திருந்த தண்ணீரையே வெறித்துப் பார்த்தபடி நின்றிருந்தார், குதம்பைச் சித்தர்.

திடீரென்று கரிகாலனின் பக்கமாகத் திரும்பினார், சித்தர். "யோசித்து சொல், கரிகாலா! நீ தியானத்தில் இருக்கும் போது, ஏதேனும் சப்தங்களைக் கேட்டாயா? யாராவது பேசும் சப்தம், மணி ஒலிக்கும் சத்தம், இல்லை கௌளியின் சூசகக் குரல்... எதையாவது கேட்டாயா?" - சித்தர் அவனை ஆழமாகப் பார்த்தார்.

"இல்லை சுவாமி. சத்தம் எதுவும் கேட்கவில்லை. நான் என்னையே மறந்த நிலையில்தான் தியானம் செய்து கொண்டிருந்தேன். ஆனால் பொழுது புலர்வதைக் கூட அறியாமல் தியானித்துக் கொண்டிருந்த என்னை எழுப்பியது ஒரு கௌளிதான். எனது கால் கட்டை விரலைச் சுற்றிப் படர்ந்திருந்தது அந்த கௌளி!"

கரிகாலன் கூறியதும் சித்தரின் முகத்தில் பிரகாசம் தோன்றியது. "எவ்வளவு பெரிய அனுபவத்தை பெற்றிருக்கிறாய், கரிகாலா. ஒன்றுமே நடக்கவில்லை என்று கூறுகிறாயே. இனி என்ன செய்ய வேண்டும் என்று எனக்குத் தெரிந்துவிட்டது!" என்றவர், கரிகாலனை ஒரு பாறையின் மீது அமரச் சொன்னார். தான் நிலத்தில் அமர்ந்தவர்,

https://telegram.me/aedahamlibrary

சட்டென்று அவன் சற்றும் எதிர்பார்க்காத நிலையில், அவனது காலைப் பற்றி தனது மடியின் மீது வைத்து அவனது வலது பெருவிரலை உற்று நோக்கினார். அவரது கண்கள் வியப்பினால் விரிந்தன.

"கரிகாலா! அத்திமலையான் பேசிவிட்டான். நீ அவன் அருள் படைத்தவன்தான். அவனது ராஜ்யத்தை ஆளும் இளந்திரையனை காட்டிலும் உன் மீது அதிகக் கருணை கொண்டிருக்கிறான். காவிரித் தாயை தனது நெற்றிக் கண்ணால் எரித்து வரும் இளந்திரையனிடமிருந்து காவிரியை காக்க ஒரு வழி புலப்பட்டுவிட்டது!" - சித்தர் கூறினார்.

"எப்படி!?" - வியப்புடன் கேட்டான் கரிகாலன்.

"இளந்திரையனின் நெற்றிக்கண்ணுக்கு விடை கூறப் போகிறது உனது கால் பெருவிரல். சற்று அப்படியே எழாமல் இரு. இதோ வருகிறேன்!" என்ற சித்தர், மீண்டும் ஆலயத்தினுள் சென்று மறைந்தார். மீண்டும் அவர் திரும்பி வந்த போது அவர் கையில், ஒரு குடுவையில் எண்ணெய் இருந்தது.

"கரிகாலா! தெய்வங்கள் நம்முடன் தொடர்பு வைத்துக்கொண்டுதான் இருக்கின்றன. நாம்தான் அவை நமக்குக் கூறும் சூசக தகவல்களைப் புரிந்துகொள்ளாமல் இருக்கிறோம். உனது கால் பெருவிரலில் ஒரு கௌளி படர்ந்ததாக நீ நினைக்கிறாய். அது ஒரு தற்செயலான சம்பவம் என்றும் நினைக்கிறாய். ஆனால், அத்திமலையான் இந்த சம்பவத்தின் மூலம் பெரிய தெளிவினை நமக்கு ஏற்படுத்தி இருக்கிறான்!" - சித்தர் கூறினார்.

அவர் கூறியது கரிகாலனுக்குப் புரியாமல் போக, அவரையே வெறுமையுடன் நோக்கினான். பிறகு மெதுவான குரலில் பேசினான்.

"சுவாமி! தாங்கள் தான் எனக்குப் புரிய வைக்க வேண்டும். இறைவன் பிரபஞ்சத்தின் ஒவ்வொரு நிகழ்வையும் திட்டமிட்டு நடத்துகிறான் என்பதில் எனக்கு இம்மியும் ஐயம் இல்லை. ஆனால் இப்போது தாங்கள் கூறுவது எனக்குப் புரியவில்லை!" கரிகாலன் கூற, தான் கொண்டு வந்த எண்ணையை அவனது வலதுகால் பெருவிரலில் தடவி நீவிவிட்டார், சித்தர்.

"கரிகாலா! உனக்குத் தெரியுமா! ஆண்களின் பௌருஷம் [1] அவர்களது கால்களின் பெருவிரலில்தான் உள்ளது. அத்திமலையான் சந்நிதியில் உனது கால் பெருவிரலை கௌளி ஒன்று கௌவியது என்றால், உனது

https://telegram.me/aedahamlibrary

கால் பெருவிரலால் இளந்திரையனின் நெற்றிக் கண்ணை அழிக்கப் போகிறாய். அவனது நெற்றிக்கண் அகம்பாவத்தின் அடையாளம். உனது கால் பெருவிரல் அடக்கத்தின் மொத்தவுருவம். உனது அடக்கத்தால் அவனது அகம்பாவத்தை ஒழிக்கப் போகிறாய்." - சித்தர் கூறினார்.

"எனது கால் விரலில் கௌளி படர்ந்ததற்கு பொருள் இதுவா, சித்தரே!" - வியப்புடன் கேட்டான், கரிகாலன்.

"ஆம் கரிகாலா! அத்திமலையானின் சந்நிதியில் இரு கௌளிகள் உள்ளன. உண்மையில் இந்த கௌளிகள் இரண்டுமே முனிகுமாரர்கள். ஸ்ருங்கிபேரர் என்ற முனிவருக்கு ஹேமன், சுக்லன் என்று இரண்டு மகன்கள் இருந்தனர். இவர்கள் கௌதம முனிவரிடம் வித்தை பயின்றனர். இவர்கள் இருவரும் விஷ்ணு பூஜைக்குத் தீர்த்தம் கொடுக்கும் பணியினை மேற்கொண்டிருந்தனர். ஒரு நாள் கொண்டு வந்த தீர்த்தத்தை மூடாமல் வைக்க, அதில் ஒரு பல்லி விழுந்துவிட்டது. இதை அறியாத இவர்கள் அத்தீர்த்ததை அப்படியே கொண்டு வந்து கௌதம முனிவரிடம் கொடுக்க, முனிவர் அதை பெற்றுக்கொண்ட போது அதில் இருந்த பல்லி வெளியில் தாவி ஓடியது. அதைக் கண்டு கோபமுற்ற கௌதம முனிவர் அவர்கள் இருவரையும் நோக்கி பல்லியாகக் கடவது என்று சாபம் அளித்தார். இருவரும் முனிவரின் பாதங்களில் விழுந்து வணங்கி, மன்னிப்பு கோர, உடனே முனிவர் அத்திமலையான் அருளால் சாபம் நீங்கும் என்று கூற அவர்கள் நற்கதியை அடைந்தனர். இன்னமும் அவர்கள் அத்திமலையான் சந்நிதிக்கு வந்து அவனுக்கு பணிவிடைகள் செய்து வருகின்றனர் [2]. உனது காலை பற்றியது அவர்களில் ஒருவர்!" என்று சித்தர் கூற, கரிகாலன் திகைத்துப் போய் அமர்ந்திருந்தான்.

"சுவாமி! இப்போது நாம் என்ன செய்ய வேண்டும்?" - கரிகாலன் கேட்டான்.

சித்தர் கண்களை மூடி சற்று நேரம் மோன நிலையில் அமர்ந்தார். கண்களை திறவாமலேயே திடீரென்று பேசத் துவங்கினார்.

"நண்டு பீடிக்கும் பதினெட்டாவது நாளில் நல்லது நடக்கும்" என்றார் சித்தர்.

கரிகாலனுக்கு அவர் கூறியது விளங்கவில்லை என்றாலும் அவரே கண்களை திறந்து விளக்கம் கூறுவார் என்று அமைதி காத்தான்.

https://telegram.me/aedahamlibrary

கண்களைத் திறந்த சித்தர் கரிகாலனை வெறித்தார். “நண்டு பீடிக்கும் பதினெட்டாம் நாள் நல்லது நடக்கும். நண்டு என்பது கடக மாசமான ஆடி மாசத்தை குறிக்கும். ஆடித்திங்களின் பதினெட்டாவது நாள் காவிரி பெருக்கெடுத்து ஓடும். இங்கே உள்ள நட்டாற்றேஸ்வரர் ஆற்றின் அடியில் மறைந்து கொள்வார். ஆறு பெருக்கெடுத்து ஓட, வறட்சி நீங்கும்!” சித்தர் கூற, உற்சாகத்துடன் எழுந்து நின்று, அவரை வணங்கினான், கரிகாலன்.

"அது போதும் சுவாமி. காவிரி பெருக்கெடுத்து ஓடினால், எனது உதரத்தின் உள்ளே பாலாறு ஓடும்!” கரிகாலன் சொன்னான்.

“ஆனால் அதற்கு முன்பாக நீ செய்ய வேண்டிய காரியம் ஒன்று உள்ளது. இளந்திரையனின் கர்வத்தை அடக்க வேண்டும். ஆடித்திங்களின் பதினெட்டாம் நாள் பிரம்ம முகூர்த்தத்தில் நீராடி, பசுமை வண்ண ஆடையை அணிந்து, அத்திமலையானை பூஜித்துவிட்டு, உனது கொலு மண்டபத்தில் எனக்காகக் காத்திரு. நான் வருகிறேன். தொண்டைமான் இளந்திரையனின் முழு உருவ ஓவியம் ஒன்றை கொலுமண்டபத்தில் நிறுத்தி வை. மறவாமல் அவனது நெற்றிக் கண்ணும் அந்த ஓவியத்தில் தீட்டப்பட்டிருக்க வேண்டும். என்ன செய்ய வேண்டும் என்பதை அன்று உரைக்கிறேன். இப்போது நீ புறப்படலாம்!”

குதம்பைச் சித்தர் கூற, நட்டாற்றேஸ்வரரை வணங்கி விட்டு புகார் நகருக்கு கிளம்பினான், கரிகாலன். மீண்டும் கரையை நோக்கி நடந்தான். ஆற்றில் ஆங்காங்கே தென்பட்ட தண்ணீரைத் தவிர, காவிரி வறண்டு போய்க் காணப்பட்டது. இன்னும் ஒரு திங்களில் காவிரியாறு பெருகியோடும் என்கிறாரே சித்தர். அவர் மீது பாரத்தினை போட்டுவிட்டு நம் பணியை செய்வோம், என்று நினைத்தபடி தனது புரவியின் மீது ஏறினான்.

***

கடக மாதம் என்கிற ஆடித் திங்களின் பதினெட்டாம் நாள். பிரம்ம முஹூர்த்தம் தொடங்கிவிட்டிருந்தது இன்னும் பறவைகளே விழித்தெழுந்து இசைபாடத் தொடங்கவில்லை. இருள் போர்வை இன்னும் நீக்கப்படுவதற்கான அறிகுறிகளே இல்லை. கரிகாலன் எழுந்து நீராடிவிட்டு, பூசனைகளைச் செய்து, பின்பு கொலுமண்டபத்திற்கு வந்துவிட்டான். உய்யுலகர் மற்றும் ஒன்றிரண்டு அமைச்சர்கள் மற்றும் சில வேதியர்கள் மட்டுமே அங்கே நின்றிருந்தனர். குதம்பைச் சித்தர் வரும் போது அதிகக் கூட்டம் இருக்க வேண்டாம்

https://telegram.me/aedahamlibrary

என்றே குறிப்பிட்ட சிலரை மட்டுமே கொலுமண்டபத்திற்கு அழைத்திருந்தான், கரிகாலன்.

இவனது அரியணைக்கு நேர் எதிராக தெற்கு திக்கினை பார்த்து மணை ஒன்றில் நிறுத்தப்பட்டிருந்தது, இளந்திரையனின் ஓவியம். நெற்றியில் மூன்றாவது கண்ணுடன் கம்பீரமாக நின்றிருந்தான், இளந்திரையன்.

'தம்பி! இங்ஙனம் செய்வதற்கு என்னை மன்னித்துவிடு. காவிரித் தாயை மீட்பதற்காக இதனைச் செய்ய வேண்டி இருக்கிறது. மற்றபடி உன்னைத் துன்புறுத்தும் எண்ணம் எனக்கு இல்லை!' - மனதினுள் கூறியபடி, குதம்பைச் சித்தரின் வரவுக்காகக் காத்திருந்தான்.

குதம்பைச் சித்தரும் வந்தார். வரும்பொழுதே, இளந்திரையனின் ஓவியத்தை உற்று நோக்கியபடி வந்தவரது முகத்தில் பூரண திருப்தி நிலவியது.

“ஓவியம் மிக நேர்த்தியாக உள்ளது, கரிகாலா. அவனது நெற்றிக்கண் மிகவும் சிறப்பாகத் தீட்டப்பட்டுள்ளது. இந்த ஓவியத்தை தீட்டியவனுக்கு பாராட்டுகள். இனி உனது சகோதரனின் கர்வத்தை ஒடுக்கும் நேரம் வந்துவிட்டது. இப்படி என் அருகே வந்து நில்!” - குதம்பைச் சித்தர் கூற, கரிகாலன் அவரது பக்கலில் வந்து நின்றான்.

தனது கண்களை மூடி தியானம் செய்த குதம்பைச் சித்தர், கரிகாலனை நோக்கினார்.

"தனது நெற்றிக்கண்ணினால் காவிரியைச் சுட்டெரிக்கிறான் இளந்திரையன். ஏன் தெரியுமா? அவனது தமையனான நீ கரிகால் பெருவளத்தான் என்று பெயர் பெற்றதால். காவிரியின் அருளால் தான் உன் நாடு வளத்துடன் விளங்குவதாக அவன் எண்ணியிருக்கிறான். அவனது நெற்றிக்கண்ணை அழிப்பதன் மூலம் அவனது கர்வத்தை நீ ஒடுக்கப் போகிறாய், கரிகாலா. அன்று கூறினேன் அல்லவா? அவனது நெற்றிக்கண்ணுக்கு விடையினை தரப்போவது உனது கால் பெருவிரல். நீ உனது கால் பெருவிரலை அவனது நெற்றிக்கண்ணில் வைத்து அதனை அழுத்து. பிறகு நடப்பதை பார்!” - குதம்பைச் சித்தர் கூறினார்.

கரிகாலன் தனது கரங்களை கூப்பியவன், பிறகு தனது வலது காலை உயர்த்தி பெருவிரலை ஓவியத்தின் முன்பாக உயர்த்தினான். தனது பாதத்தினை ஓவியத்தின் முகம் உள்ள பகுதிக்கு சமன்படுத்தி பிறகு தனது மற்ற விரல்களை தாழ்த்தி பெருவிரலினை மட்டும் ஓவியத்தின் நெற்றியை நோக்கி குறி வைத்தான். பிறகு பெருவிரலை மெதுவாக

https://telegram.me/aedahamlibrary

ஓவியமாக நின்ற இளந்திரையனின் நெற்றிக் கண்ணின் மீது பதித்தான். பெருவிரலுக்கு அழுத்தம் தந்து, நெற்றிக்கண் பகுதியில் மிதிக்க, ஓவியத்தில் நெற்றிப் பகுதியில் துளை ஒன்று விழுந்தது.

கரிகாலன் இளந்திரையனின் நெற்றிக் கண்ணை தனது வலது கால் பெருவிரலால் நசுக்கிய அதே நேரம் -

ஒத்தாடை அரண்மனையில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த இளந்திரையன் அலறிக்கொண்டு எழுந்தான். தனது நெற்றிப்பகுதியில் திடீர் எரிச்சல் ஏற்பட, நெற்றியைப் பிடித்துக்கொண்டு துடிதுடித்தான்.

மன்னன் படும் அவதியைக் கண்ணுற்ற காவலன் சுலோச்சனாவுக்கு தகவலைத் தர, அவள் பதறியபடி ஓடி வந்தாள். தலைமை அமைச்சர் கோலவிக்கிரமருக்கும், பரமேஸ்வரனுக்கும் தகவல் சென்றது.

“ஐயோ! அகம்பாவத்தால் சகோதரனுக்கு கேடு விளைவிக்க எண்ணி காவிரித்தாயை வற்றச் செய்ய முனைந்தேனே! ஞானக் கண்ணை பெற்றிருந்தும் அக்கிரமச் செயலுக்கு துணை போனேனே! அதனால் வந்த வினைதான், எனது நெற்றிக்கண்ணுக்கு கேடு விளைந்தது...” என்று ஓலமிட்டான், இளந்திரையன்.

கரிகாலனுக்கு எதிராக கொம்பு சீவி, தங்கள் சூழ்ச்சி வலையைப் பின்னி, துவேஷ திரையினைக் கொண்டு அவனது ஞானக்கண்ணை மறைத்திருந்த கோலவிக்கிரமரும், பரமேஸ்வரனும் திகைப்பினால் உறைந்து போய் நிற்க, தனது நெற்றியை இரு கைகளாலும் மறைத்தபடி புலம்பிக் கொண்டிருந்தான், இளந்திரையன். சுலோச்சனா அவனது கைகளைப் பற்றி விலக்க, இளந்திரையனின் நெற்றியில் மூன்றாவது கண் துலங்கிய இடத்தில் குருதி பீறிட்டு வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

“வைத்தியரை அழைத்து வாருங்கள்!” - வீறிட்டு அலறினாள், அவனது தாய் சுலோச்சனா.

அதே சமயம் –

பேரிடி ஒன்று ஒலித்தது. காவிரிக்கரையில் எழும்பிய இடியின் முழக்கம் வேகவதியின் கரை வரை எதிரொலித்தது. பிரம்ம முஹூர்த்தத்தில் தனது பெருவிரலைப் பதித்திருந்தான் கரிகாலன். ஆனால் சூரியன் உதிப்பதற்கு பிறகு வாய்ப்பே எழவில்லை. குடதிசையில் அலை அலையாகப் புறப்பட்ட கருமேகங்கள் காவிரியின் மீதாகவே ஊர்ந்து,

https://telegram.me/aedahamlibrary

அதன் கரையின் இருமருங்கிலும் குவியத்தொடங்கின. பாஞ்சாலியின் துகிலை துச்சாதனன் பறிக்க, அவளது மேனியை கௌரவர்கள் உறுத்துப் பார்க்க, எக்கணமும் அவளது நிர்வாணம் வெளிப்பட்டுவிடும் என்கிற நிலையில், திடீரென்று கண்ணனின் அருள் துகிலாக அவள் மீது பரவி மூடியது போன்று, வறட்சி துச்சாதன கரங்கள் காவிரித் தாயின் நீல ஆடையை உரிக்க, அதனால் அவளது படுகையின் கற்பாறைகளும், நிலமும் வெளிப்பட, கிருஷ்ண பாதனான கரிகாலனின் அருளினால், அவளது மேனியின் மீது மேக ஆடைகள் மூடியது போன்று இருந்தது, அந்தக் காட்சி.

ஆற்றின் மீது குவிந்த மேகங்கள், தங்களது பணியை உடனே நிறைவேற்றத் தொடங்கின. பன்னீர் தெளிப்பது போன்று துவங்கிய தூறல், காலம் கடக்க, பேய் மழையாக மாறியது. மாதம் மும்மாரி பெய்ய வேண்டும். ஒரு நாள் முழுவதும் மழை பெய்து, பத்து நாட்களுக்கு வெயில் காய்ந்து, மீண்டும் ஒரு நாள் முழுவதும் மழை பெய்து, மீண்டும் பத்து நாளைக்கு காய்ந்து, கடைசி ஒரு நாளில் மீண்டும் மழை பெய்ய வேண்டும். இதுதான் மாதம் மும்மாரி, ஆனால் காவிரி தனது நீர்வளத்தை இழப்பதற்கு வசமா என்பதுபோன்று வானம் பொத்துக் கொண்டு மழை பொழிந்து கொண்டே இருக்க, காவிரியில் நீர் வரத்து அதிகமாகியது. குதம்பைச் சித்தர் நட்டாற்றேஸ்வரர் ஆலயத்தில் இருந்து பரமானந்தத்துடன் வெளியே வந்தார். மழையில் நனைந்தபடி இரு கைகளையும் இறக்கைகளைப் போன்று விரித்து வானை நன்றியுடன் நோக்கினார்.

"கரிகாலா! கரிவரதன் அருள் பெற்ற உனது கால் பெருவிரலின் ஈகைதான் காவிரித்தாயை காப்பாற்றியது!” - குதம்பைச் சித்தர் பேருவகையுடன் கூற, அதனை ஆமோதிப்பது போன்று பேரிடி ஒன்று மீண்டும் ஒலித்தது.

நட்டாற்றேஸ்வரர் ஆலயத்தை காவிரி சூழ ஆரம்பித்தது.

“நட்டாற்றேஸ்வரா! மணியொலியாக இடி முழங்க, தீப ஆராதனையாக மின்னல் வெட்ட, அபிஷேகப் பிரியனான உனக்கு காவிரித்தாய் அபிஷேகம் செய்கிறாள். இன்னும் சற்று நேரத்தில் நீரின் அடியில் உனது யோக நிலையை தொடரலாம்!” என்றபடி கரையை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

நட்டாற்றேஸ்வரர் ஆலயம் இருந்த சுவடே தெரியாமல், காவிரி ஆறு ஆலயத்தை மூடியது. அந்த ஆலயத்தை மட்டுமா காவிரி மூடியது. எனது

https://telegram.me/aedahamlibrary

ஆற்றலையா இளந்திரையன் தனது நெற்றிக் கண்ணால் பொசுக்கினான். அவனது அரண்மனையை மூழ்கடிக்கிறேன் பார் என்று சொல்வது போன்று கரைகளை உடைத்துக்கொண்டு சோழ நிலங்களில் பரவத் துவங்கினாள், காவிரி. பெருவளத்தான் ஆட்சியில் வறட்சியா என்று புலம்பிய கிராமத்தவர்கள், திடீரென்று காவிரி பொங்குவதை கண்டு கலங்கிப் போய் நின்றனர்.

[1] ஒரு ஆணின் கால்விரலில்தான் அவனது பௌருஷம் அடங்கியுள்ளது. அவனது காலில் அவன் மனைவி விழுந்து அவனது விரல்களை பற்றும் போது அவனது ஆற்றலை உந்தச் செய்கிறாள். அந்த ஆண் இறக்கும் போது அவனது ஆற்றல் தீர்ந்துவிட்டது என்பதை குறிக்கவே அவனது கால் பெருவிரல்களை மட்டும் கயிற்றால் பிணைத்துவிடுகிறார்கள்.

[2] தங்க பல்லி, வெள்ளி பல்லி என்ற இந்த பல்லிகளின் உருவத்தை இன்றும் வரதராஜர் ஆலயத்தின் கருவறை அருகே தரிசிக்கலாம்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 14. திசை மாறிய நதிகள்

சேர நாட்டின் வடபுலத்தில், அதற்குப் பெரிய அரணாகத் திகழ்ந்தது, முந்திரிப்பூ மலைக் காடுகள். அந்த வனப்பகுதியில் நுழைந்தவர்கள் மீண்டு வெளிவந்ததாக சரித்திரமே கிடையாது என்கிற போது ஆம்ரா அந்த காடுகளைக் கடந்து நாவாய் கிராமத்திற்கு வந்து முகுந்த நாயகரின் குடும்பத்தோடு ஐக்கியம் ஆனது பெரிய சாதனைதான். நீண்ட நாள் உயிர் வாழ வேண்டும் என்கிற ஆசை உள்ளவர்களுக்கும், தங்கள் தேகத்தின் மீதே மோகம் கொண்டிருப்பவர்களுக்கும் இம்மாதிரி வனாந்திரங்களில் திரிவதற்கு அச்சமாக இருக்குமே தவிர, ஆம்ரபாலிக்கு அச்சம் எதுவும்தான் கிடையாதே. புத்த மார்கத்தில் ஆழ்ந்தவளுக்கு ஆத்ம ஞானம் அடைவது தான் குறிக்கோள். எனவேதான் துணிவுடன் காட்டைக் கடந்து வந்திருந்தாள்.

'புத்த கயையினில் இருந்த தேவ உடும்பர மரம் சிதைக்கப்பட்டுவிட்டது. அடுத்த புத்தரின் அவதாரத்திற்கு மிகவும் தேவையான தேவ உடும்பர விருட்சம் அத்தியூரில் உள்ளது. அதை எப்படியாவது புத்தகயைக்கு கவர்ந்து சென்று, அந்த மரத்தில் புத்தருக்கு ஒரு திருமேனியை செதுக்க வேண்டும்.'

தலைமை புத்த பிக்குவின் கட்டளை இது. அவர் இப்போது கொல்லப்பட்டு விட்டாலும், அவர் விதித்திருந்த கட்டளைக்கு மட்டும் அழிவில்லை. அதை நிறைவேற்றியே தீரவேண்டும் என்கிற உத்வேகம் அவளுள் நிரம்பியிருந்தது. ஆச்சரியம் என்னவென்றால், தலைமை புத்த பிக்கு, போதி மந்தாவை யார் கொன்றிருந்தாளோ, அவளையும் சந்தித்து தனது ஆசானாக ஏற்றுக் கொண்டிருந்தாள் இவள். திஸ்ஸரக்காவிடம் அடவியில் தங்கியிருந்து வர்மக்கலையைக் கற்றுக் கொண்டது, அவளுக்கு மாபெரும் அனுபவம்.

அதுமட்டுமா?

அத்தியூரைவிட்டு பல்லவ திருலோச்சனனால் வெளியேற்றப்பட்ட திவ்யதாமாவின் குழாத்தோடு இலங்கை போகாமல், தான் பெரிதாக எதையோ சாதிக்கப் போவதாக அனைவரிடமும் சவால் ஒன்றை விடுத்திருந்தாள். தேவ உடும்பரத்தைக் கண்டுபிடித்து, அதை புத்த கயைக்கு எடுத்துச் சென்றால், புத்த தர்மம் நிலைத்திருக்கும் வரை, இவளது பெயரும் நிலைத்திருக்குமே என்கிற எண்ணத்தில்தான் தனியே

https://telegram.me/aedahamlibrary

சேர நாட்டிற்கு தப்பி வந்திருந்தாள். அத்தியூரில் இருக்கும் அமரஜோதியுடன் மீண்டும் எப்படித் தொடர்பு ஏற்படுத்திக்கொள்வது என்று இவள் யோசித்துக் கொண்டிருக்க, சந்தர்ப்பம் தானாகவே கனிந்து இருக்கிறது...

முகுந்தநாயகரின் தலைமை சீடனும், பத்ரஷீலாவின் வருங்காலக் கணவனுமான பரமபுருஷனைக் கண்டதும் வியப்பில் ஆழ்ந்து போனாள், ஆம்ரா.

ஆம்ராவுக்கு எப்போதுமே ஆண்களைப் பற்றி உயர்ந்த எண்ணம் கிடையாது. கலிங்கத்திலிருந்து அசோகனால் திஸ்ஸரக்கா கவரப்பட்டு வந்த போது சிறைபிடிக்கப்பட்ட பல பெண்களில் இவளது தாயும் ஒருவள். இவளது தந்தை யார் என்பது இவளது தாய்க்கே தெரியாது. அசோகனின் சபையில் முதன்முதலாக நாட்டியம் ஆடிய அன்று, சபையோர் இவளை வியப்புடன் நோக்கினர். 'யார் இந்த புதியவள்?' என்று அசோக சக்கரவர்த்தியே கேட்டிருந்தார். இவளது தாய் ஸ்வரணரேகா ஒரு மூலையில் இருந்து வந்து, எனது மகள் மன்னரே!' என்று சொன்ன போது, அவையோர் மட்டுமல்லாமல், கலிங்கத்து படையெடுப்பில் பங்கேற்று அவையில் இருந்த படைத் தளபதிகள் தொடங்கி, வாயிலில் காவல் புரிந்த வீரர்கள் வரையில் ஸ்வர்ணரேகாவை பார்த்ததும் திகைத்து, பிறகு ஆம்ரபாலியை குழப்பத்துடன் நோக்கினர்.

நடனம் புரிந்த இந்த ஆம்ரபாலி எனது மகளாக இருக்கக் கூடுமா? என்பதே அவையில் பலரின் இதயத்தில் எதிரொலித்த கேள்வி.

'நல்லது! மகளை நன்றாக தயார் செய்திருக்கிறாய்!' என்றபடி தான் அணிந்திருந்த முத்துமாலையைக் கழற்றி இவள் புறமாக வீச, கூனிக்குறுகி தனது தாய் அந்த முத்துமாலையை குனிந்து எடுத்து நிமிர்ந்த போதுதான், ஆம்ரா அந்த முத்துகளை பார்த்தாள். கையில் அவள் வைத்திருந்த பரிசு முத்துகளை இல்லை. கலிங்கத்து அமைச்சர் ஒருவரின் மகளான அவள் கடத்தப்பட்டு, மவுரியத்தின் இச்சைகளை பூர்த்தி செய்து, அதற்குப் பரிசாக அவள் கண்களில் உருண்டோடிய கண்ணீர் முத்துகளைத்தான் ஆம்ரா பார்த்திருந்தாள்.

“தாயே. பொதுவாக இன்னாரின் மகள் என்று தந்தை பெயரை கூறித்தானே, சபையில் அறிமுகப்படுத்துவது வழக்கம். நீ எனது மகள் என்று மட்டும் கூறினாயே. எனது தந்தை யார் தாயே...?" - அன்றிரவு ஆம்ரா கேட்க, அவளது தாய் ஸ்வர்ணரேகா கூறினாள்.

https://telegram.me/aedahamlibrary

"பகலில் போர்க்களத்தில் வீரர்களாக வாளேந்தி வந்த மவுரிய வீரர்கள், இரவில் கோழைகளாக முகத்தை மறைத்துக்கொண்டுதான் மஞ்சத்தில் என்னுடன் போர் புரிந்தனர். அசோகனைவிட நான் பலசாலி, தெரியுமா, ஆம்ரா! போர்க்களத்தில் அசோகன் ஒரு நாளைக்கு இருபது பேரைதான் எதிர் கொண்டிருப்பான். ஆனால் பாசறை மஞ்சம் என்னும் போர்க்களத்தில் நான் ஒரே நாளில் ஐம்பது பேரைக் கூட எதிர் கொண்டிருக்கிறேன். எனது கண்களும், கைகளும் கட்டப்பட்ட நிலையில்தான் நான் பல வீரர்களால் ஆட்கொள்ளப்பட்டேன். நீ கர்ப்பத்தில் உருவானதும், பாசறையில் விளையாட்டு பொம்மையாக இருந்த என்னை அரண்மனைக்கு அனுப்பிவிட்டனர். உனது தந்தை யார் என்று கேட்டால் நான் என்ன பதில் சொல்வேன்? மவுரிய படையே உனது தந்தைதான்! இதை சொல்வதற்கு உனக்குக் கூச்சமாக இருக்கிறது என்றால், உனது தந்தை அசோகன் என்றே சொல்!" -- ஸ்வர்ணரேகா கூறியதும், ஆம்ராவினுள் ஏதோ முறிந்தது.

மவுரியப் படை வீரர்களின் மீது மட்டுமின்றி ஆண் வர்க்கத்தின் மீதே கோபம் பிறந்தது. "ஆண்களின் முன்பாக ஆடுவதற்கா எனக்கு நடனத்தை பயில வைத்தாய். நான் இனி வாளேந்தி ஆண்களை வெட்டி வீழ்த்தப் போகிறேன்" என்று ஆவேசமாக ஆம்ரா கர்ஜிக்க, ஸ்வர்ணரேகா திடுக்கிட்டு போனாள்.

தனது மனக்குமுறல்களை மகளிடம் கொட்டியது தான் செய்த மிகப்பெரிய தவறு என்று நினைத்தவள், மகளின் உக்கிரத்தை குறைப்பதற்காக புத்த கயையின் தலைமை குரு புத்த மந்தாவிடம் மகளை அழைத்துச் சென்றிருந்தாள், ஸ்வர்ணரேகா.

"மகளே! உனது கோபம் நியாயமானது. ஆனால் நமது ஆதிதேவரின் அரவணைப்பில் நாம் எல்லாவற்றையும் துறக்கிறோம். கோபத்தைத்தான் முதலில் துறக்க வேண்டும். எல்லாவற்றையும் யோசித்து பார்த்தால், ஒரு சிறு இச்சையாகத் தொடங்கி பேரிச்சையாகப் பரவுகிறது. தம்பிக்காக வந்த மணமகளின் மீது இச்சை கொண்டான், அசோகன். அந்த இச்சையினால் லட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். அசோகன் இச்சை தீர்ந்ததா? அந்த நாட்டின் அரியாசனத்தின் மீதும் இச்சை கொண்டான். சிறைப்பட்ட பெண்களின் மீது தங்கள் இச்சைகளைத் தீர்த்துக் கொண்டனர். அந்த இச்சையின் எச்சமாக நீ பிறவி எடுத்துவிட்டாய். இதில் நீ செய்த தவறோ, உன் தாய் செய்த தவறோ இல்லை. அசோகன் கொண்ட இச்சைதான் இதற்கெல்லாம் மூல காரணம். ஆனால் நீ ஒன்றை புரிந்து கொள்ள

https://telegram.me/aedahamlibrary

வேண்டும். உனக்கு சகோதரிகள் இருக்கின்றனரா? ஸ்வர்ணரேகா?”

"ஆம் சுவாமி! அமைச்சராக இருந்த எனது தந்தை சதபதருக்கு நாங்கள் நான்கு மகள்கள்!” - ஸ்வர்ணரேகா கூறினாள்.

"அவர்கள் எல்லோரும் எங்கே?” - போதி மந்தா கேட்டிருந்தார்.

“சுவாமி! எனது தாயும் அவர்களும் காமரூபம் தப்பிச் சென்றுவிட்டனர். நான் மட்டும்தான் அரண்மனையில் இருந்தேன்!” - ஸ்வர்ணரேகா கூறினாள்.

“ஏன் இருந்தாய், ஸ்வர்ணா? நீயும் தப்பிச் சென்றிருக்கலாமே?” போதி மந்தா கேட்க, அவள் தயங்கினாள்.

"இல்லை சுவாமி! எங்கள் இளவரசி திஸ்ஸரக்காவின் மெய்க்காவலன் பிரமோத சந்தனை நான் காதலித்தேன். நானும் அவரும் ரகசியமாக சந்தித்து தப்பிச் செல்ல முயன்ற போது, மவுரிய வீரர்களிடம் சிக்கிக் கொண் டோம். எனது கண்ணெதிரே பிரமோதனை கொன்று விட்டு, என்னை சிறைபிடித்தனர், மவுரிய வீரர்கள்!” - கண்ணீர் விட்டபடி கூறினாள், ஸ்வர்ணா.

போதி மந்தா புன்னகைத்தார். "பார்த்தாயா ஆம்ரா! உனது தாய் நினைத்திருந்தால் தனது சகோதரிகளுடன் தப்பிச் சென்றிருக்கலாம். ஆனால் அவள் பிரமோதனின் மீது வைத்த இச்சைதான் அவளை தடுத்து நிறுத்தியது. அந்த இச்சைதான் அவளை முதலை போன்று இழுத்து அதலபாதாளத்தில் தள்ளியது. இச்சையை, தடுக்க இயலவில்லை என்றால், பேரழிவினை சந்திக்க வேண்டும் என்பதற்கு உனது தாயின் வாழ்க்கையே ஒரு உதாரணம். கோபமும் பழி வாங்க வேண்டும் என்கிற எண்ணமே ஒரு இச்சைதான். நமது ஆத்மா முக்தி பெறுவதற்காக இந்த தேகத்தை சமைத்திருக்கின்றனர். இந்த தேகமே பஞ்ச பூதங்களின் கலவை. உனக்கு தேகத்தை கொடுத்தவன் எவன் என்று கேட்பது வீண். பஞ்ச பூதங்கள்தான் உனது தந்தை. பஞ்சபூதங்கள் சமைத்த இந்த தேகம் அவற்றின் உள்ளே ஒடுங்கிவிடும். இச்சைகளைத் தவிர். வாழ்வினில் சுகப்படுவாய்” என்று ஞானத்தை போதித்திருந்தார், போதி மந்தா.

“வருந்தாதே அம்மா! இனி பிரமோத சந்தரையே எனது தந்தையாகக் குறிப்பிடுகிறேன்!” என்றபடி தாயை அணைத்துக் கொண்டாள்.

புத்த மந்தாவின் உபதேசத்தைக் கேட்டு தன்னிலையினை உணர்ந்திருந்தாள், ஆம்ரா. எதன் மீதும், குறிப்பாக ஆண்களின் மீது

https://telegram.me/aedahamlibrary

இச்சைக் கொள்ளக் கூடாது என்று உறுதி பூண்டிருந்தாள். ஆண்களின் மீது கோபம் மட்டும் மாறவேயில்லை. இச்சை கொள்பவர்கள் பேரழிவினை நாடுகிறார்கள் என்கிற புத்த தத்துவத்தினை உணர்ந்து, தான் இச்சை கொள்வதை தவிர்க்கத் தொடங்கினாள். இவள் மீது இச்சை கொண்டு அணுகிய மன்னன் தசரதனுக்கு மட்டும் கட்டுப்பட்டாள். மன்னன் ஆணைப்படி அரசியல் காரணங்களுக்காக, எதிரி நாட்டு உளவாளிகளை இவள் திருப்திப்படுத்தினாள்.

யாராவது வீரன் இவளை அணுகினால், இவள் அவனிடம் கேட்கும் ஒரே கேள்வி. நீ கலிங்கத்துப் போரில் பங்கேற்றாயா? என்பதுதான். அவன் ஆமாம் என்று கூறினால், அடுத்தகணம் அவன் வெளியேற்றப்படுவான்.

தன்னை மிகவும் ஈர்த்துவிட்ட, புத்த மார்க்கத்துக்கு தேவையான தேவ உடும்பரத்தைக் கைப்பற்றும் இச்சை ஒன்றைத் தவிர, வேறு எதன் மீதும் இவள் மனதில் இச்சை தோன்றப் போவதில்லை என்கிற இவளது வைராக்கியத்திற்கு சோதனையாக வந்து நின்றான், பரமபுருஷன். அவனது அழகிய உருவம், இவள் மனதில் முதன் முறையாக ஒருவித சலனத்தை உண்டுபண்ணியது.

என்ன ஒரு உயரம். எவ்வளவு அழகான குழல்கள்? மேடான நெற்றி, மிக தீர்மையான நாசி. விரிந்த நீல முண்டகங்களாக கண்கள், துருத்திக்கொண்டு இருக்காமல், அடங்கி கிடக்கும் செவிகள். அதிக பருமன் இல்லாமல், மெலிந்தும் காணப்படாத தேகம், சதுரமான தோள்கள், மலைத்தொடரைப் போன்று விரிந்து பரந்திருக்கும் மார்பு, மலையடியில் கிடக்கும் பள்ளத்தாக்கினைப் போன்று ஒட்டிய வயிறு, மெல்லிய இடை, வலிமை பொருந்திய துடைகள், நீண்ட கால்கள், சிவந்த பாதங்கள் என்று இப்படி ஒரு கம்பீரத்தை முதன் முறையாகக் காண்கிறாள், ஆம்ரா. ஒரு அந்தணனுக்கு போய் இவ்வளவு ராஜகம்பீரமா?

போர்க்களத்திற்குத் தேவையான தேகத்தைக் கொண்டிருப்பவன் யாகசாலையில் அமர்ந்திருப்பதா? சிம்மகர்ஜனை செய்ய வேண்டியவன், வேத சாகைகளை உச்சரிப்பதா? தீப்பிழம்பாக அனலைக் கக்கி எதிரிகளை எரிக்க வேண்டியவன் அக்னிஹோத்ரம் செய்வதா? இது என்ன விந்தை? அவரவர்கள் உடலமைப்பைக் கொண்டு தான் அவர்களுக்கு உரிய பணிகள் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இவனுக்கு விதிக்கப்பட்ட கடமைக்கும், இவனது உடலமைப்புக்கும் தொடர்பே இல்லையே.

https://telegram.me/aedahamlibrary

கண்களால் நோக்கியபடி, சிரித்த முகத்துடன் வந்த வல்லபனைக் கண்டு திகைத்தான், பரமபுருஷன். அவன் தான் குடும்பத்துடன் தீர்த்த யாத்திரை செய்துவிட்டு, இரண்டு திங்கள்கள் கழிந்து இப்போதுதானே வருகிறான்.

"வல்லபரே! உமக்கு பார்வை வந்துவிட்டதா?" - பரமன் பிரமிப்புடன் அவனைப் பார்க்க, வல்லபனின் இதயத்தில் திரண்டிருந்த பிரியத்தை வாரி அவனது கண்கள் ஆம்ராவின் மீது அபிஷேகம் செய்தன.

“எல்லாம் இந்த ஆம்ராவின் தயவு. சுள்ளி சேகரிக்கச் சென்ற நான், பார்வையையும், பார்யாளையும் பெற்று வந்து சேர்ந்தேன். இவள் ஆம்ரபாலி. வறண்டிருந்த எனது நெஞ்சில் பால் ஊற்றியவள்! ஆம்ரா! இவன் எனது தங்கையின் வருங்கால கணவன். இது ஆம்ரபாலி! எனது வருங்கால மனைவி!” - வல்லபன் கூற, அந்த அறிமுகத்தை சிறிதும் விரும்பாமல், அவனை அருவருப்புடன் நோக்கிய ஆம்ரா, அவனைக் காணச் சகியாதவளைப் போன்று உடனேயே பரமனின் பக்கம் திரும்பி நோக்கினாள்.

நூபுரங்களின் இனிமையான ஒலியைக் கேட்டுதான் பத்ரஷீலாவை வைத்த கண் வாங்காமல் நோக்கிக் கொண்டிருந்த பரமன் திரும்பினான். வானில் இருந்து இறங்கிய மின்னல் ஒன்று தன்னை நோக்கி வருவதைக் கண்டு பிரமிப்புடன் அந்த திக்கில் நோக்கினான். மேனி அழகு புலப்படாத வண்ணம், கண்ணன் திரௌபதிக்கு அளித்த வளர்சேலையையே எடுத்து தங்கள் தேகத்தைச் சுற்றிக்கொண்டு நடக்க முடியாமல் நடந்து செல்லும் அந்தணப் பெண்களை மட்டுமே கண்டிருந்தவனுக்கு, நாட்டியத் தாரகை ஆம்ரா தனது நளினமான இடையில் அணிந்திருந்த தைத்த உடையும், மார்பகங்களை மட்டும் மறைத்திருந்த கச்சையும், மேலே போட்டிருந்த மெல்லிய மாராப்பும் பரமனின் நேத்திரங்களைத் தெறித்து விழச்செய்தன.

உடனே தனது பின்பாக வந்து நின்ற பத்ரஷீலாவை திரும்பி ஏற இறங்க நோக்கினான். சற்று முன்பு அன்றலர்ந்த தாமரையைப் போன்று தோன்றிய பத்ரஷீலா, தற்போது உச்சி வானில் ஜொலிக்கும் சூரியனின் ஒளியில் ஏற்றப்பட்ட அகல்தீபமாகத் தோன்றினாள். வல்லபனோடு வந்து நின்ற அந்தப் பெண்ணின் தேககாந்தி பரமனைத் திணறச் செய்துவிட்டது என்றாலும், அவனிடம் இயற்கையிலேயே காணப்பட்ட மேதா விலாசம், அவனை எச்சரிக்கை செய்து அவன் மனதைப் பிணைத்துப் போட்டது. -

https://telegram.me/aedahamlibrary

‘நமக்கு பிரயோஜனப்படாத பொருட்களை நினைத்து பார்ப்பது கூட வீண்! நாம் உயருவதற்கு இம்மாதிரி சிந்தனைகள் தடைக்கற்களாக விளங்கும்!' என்று சிந்தை இடித்துரைக்க, தனது பார்வையை வல்லபனின் பக்கமாக திருப்பினான். ஆனால், மனம் மட்டும் அந்தப் பெண்ணையே வட்டமடித்தது.

தேவலோக நங்கையரை ஒத்திருக்கும் அவளது வதனத்தை மீண்டும் ஏறிட்டு நோக்கத் துடித்த கண்களை அடக்கி அவற்றை அலட்சியம் என்கிற திரையினால் மூடினான்.

ஆம்ராவின் கண்கள் இன்னும் பரமனை அளந்து கொண்டுதான் இருந்தன.

இவன் தனக்கு பிரயோஜனப்படுவானா என்றுதான் அவளது மனமும் கேட்டுக் கொண்டிருந்தது. ஆனால் இவன் எனக்குரியவன் என்பது போன்று அவனை ஒட்டி புளகாங்கிதத்துடன் நின்று கொண்டிருந்தாள் பத்ரஷீலா.

"எனது குரு பத்னி மறைந்ததால், இந்தக் குடில் சோபையினை இழந்திருந்தது. இப்போது வல்லபரின் பத்னி வந்துவிட்டதால், அந்தக் குறை தீர்ந்துவிடும்!” -- பரமன் கூற, வல்லபன் ஆவலுடன் ஆம்ராவைப் பார்த்தான்.

என்ன பதில் கூறப் போகிறாள்?

“பரமபுருஷரே! ஆண்களுக்கு பெண்களை பார்த்தாலே சோபிதமாகத்தான் தோன்றும். ஆனால் சோபை என்பது அவரவர் கண்களில்தான் இருக்கிறது. அன்பு நிறைந்த கண்களால் ஒருவரையொருவர் பார்க்கும் போது அனைத்துமே சோபிதமாக இருக்கும். நான் வணங்கும் புத்தபிரான் போதித்த புத்த தர்மம் அதைத்தான் கூறுகிறது.” --- ஆம்ரா கூறினாள்.

"கண்ணிலே அன்புடன் ஒருவரையொருவர் பார்க்க வேண்டும் என்கிறீர்கள். அதெப்படி சாத்தியம்? பத்ரஷீலாவிடம் வல்லபன் காட்டும் அன்பிற்கும், நான் காட்டும் அன்பிற்கும் வேறுபாடு இருக்கிறதே. அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் என்று கூறினாலும், இடம், பொருள் ஏவல் பார்த்துதானே அன்பையே பொழிய முடியும்?” மாயாவாதத்தில் ஆர்வம் கொண்டிருந்த பரமன் சற்றே காட்டத்துடன் பேசினான்.

https://telegram.me/aedahamlibrary

“அன்பு என்பது ஒளியைப் போன்றது, பரமரே! சூரியஒளி எங்கும் வியாபிப்பது போன்று, அன்பும் வையகமெங்கும் பரவக் கூடியது.”

“ஓ...! சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு அன்பை செலுத்தக் கூடாது இல்லையா?” - இடக்குடன் பரமன் கேட்க, உள்ளுக்குள் திகைத்துப் போனாள், ஆம்ரா.

“அப்படியில்லை. நான் சொல்ல வந்தது ஒளி எல்லாவிடத்திலும் பாயவல்லது. ஒளியை ஏற்க மறுக்கும் நமது குடிலின் சில இருள் சூழ்ந்த மூலைகளைப் போன்று, சில சிந்தைகளும் பிடிவாதமாக அன்பு ஒளியை ஏற்க மறுக்கின்றன.” - ஆம்ரா கூறினாள்.

"அன்பை பற்றிய உங்களது பார்வை தவறானது. சூரியவொளி என்பது சூரியன் தோன்றும் போது உண்டாகி, அவனுடன் மறைகிறது. அன்பு என்பது நீர் போன்றது. நீர் பல வகைப்படும். கடல், ஆறு, ஓடை, ஏரி, குளம், குட்டை, கிணறு என்பது போன்று நாம் காட்டும் அன்பிலும் பல்வேறு நிலைப்பாடுகள் உள்ளன. எல்லாம் நீர்தான் என்றாலும், கடல் நீரும், கிணற்று நீரும் ஒன்றாகுமோ? அன்பும் அத்தகையதே. சிலர் காட்டும் அன்புகளை ஏற்க முடியாது. சிலரது அன்பை ஏற்கலாம் என்பதே சரி! மனிதப் பிறவி பொய்மையானது. எல்லாம் மாயை. நாம் பிறவி எடுப்பதற்கு முன்பாகவோ, நமது பிறவி முடிந்தபிறகோ ‘நாம்' என்கிற நிலையே இருக்கப் போவதில்லை என்கிற போது, உலகமே நமக்கு சொந்தம் இல்லை என்கிற போது, சொந்தம் இல்லாத ஒரு வஸ்துவின் மீது நாம் ஏன் அன்பைச் செலுத்த வேண்டும்?”

அவர்களது வாதம், வல்லபனுக்கும், பத்ரஷீலாவுக்கும் அலுப்பினை உண்டாக்கியிருக்க வேண்டும்.

"புரிகிறது பரமா! சொந்தம் இல்லாத ஒன்றின் மீது எதற்கு அன்பு செலுத்த வேண்டும் என்று நீ வலியுறுத்தி சொல்வதில் இருந்து, உனது திருமணத்திற்கு விரைவில் ஏற்பாடு செய்யச் சொல்கிறாய் என்பதை புரிந்து கொண்டேன். விரைவில் தந்தையிடம் இதைப் பற்றி சொல்கிறேன்!” நகைச்சுவையாக வல்லபன் கூற, உள்ளுக்குள் அதிர்ந்தான், பரமன். அந்தப் பெண்ணிடம் விவாதிப்பது போன்று, அவளது அழகை ரசித்துக் கொண்டிருந்தானே தவிர, தான் பேசியது, இப்படி ஒரு பொருளை தோற்றுவிக்கும் என்பதை அவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. ஆம்ரா என்னும் அந்தப் பேரழகியைச் சந்திப்பதற்கு முன்பாக வல்லபன் திருமணத்தைப் பற்றி பேசியிருந்தால் கூட இவன் மகிழ்ச்சியில் திளைத்திருப்பான். ஆனால்... இப்போது,

https://telegram.me/aedahamlibrary

பத்ராவுடன் திருமணம் என்கிற நினைப்பே அவனுக்கு அருவருப்பினைத் தந்தது.

இவன் குமார பர்வத்தில் இப்போதுதான் நுழைந்திருந்தான். ஆனால் ஆம்ராவைப் பார்க்கும் போது அவள் இவனைவிட அதிக பிராயங்களைக் கொண்டிருக்கக் கூடும் என்பது தெளிவானது. வல்லபனின் சம வயதை ஒத்திருக்கக்கூடும். எனவேதான் அவன் அவளை மணப்பதற்குத் துடிக்கிறான். எத்தகைய அதிர்ஷ்டத்தை செய்திருக்க வேண்டும் வல்லபன். இந்தப் பேரழகை அவனா ஆளப்போகிறான். அவன் ஒன்றும் கல்வியில் பெரிய மேதாவி இல்லை. மற்போர் புரிந்து உடலைக் கட்டுக்கோப்பாக வைத்திருக்கிறான். ஆனால் உடலில் இருக்கும் வலிமை மனதில் இல்லாதவன். ஆனால் என்ன செய்வது? இளமைப் பருவத்தை அந்தகாரத்தில் கழித்திருந்தான். ஆனால் இந்தப் பெண் அவனுக்கு கண்பார்வை அளித்தாள் என்கிறானே. மாய மந்திரம் கற்றவளா? ஒருவேளை, பேரழகியாக வலம்வரும் முந்திரிப்பூ காடுகளில் டாகினி என்கிற துர்தேவதை அழகிய பெண்ணின் உருவில் வந்து ஆண்களின் உயிரை உறிஞ்சிக் குடித்துவிடும் என்று பால்யத்தில் கதைகளைக் கேட்டிருக்கிறான். கிராமத்து சிறுவர்கள் வனப்பகுதிகளுக்குச் சென்றுவிடக் கூடாது என்பதற்காக ஊர் பெரியவர்கள் பரப்பிவிட்ட கட்டுக்கதை என்றுதான் இவன் நினைத்திருந்தான். ஒருவேளை இவள் அத்தகைய டாகினி தேவதையாக இருக்குமோ? ஒரு பெண்ணால் எப்படி கண்பார்வை இழந்தவனுக்கு மீண்டும் ஒளியை அளிக்க முடியும்? -

முகுந்தர் குடிலைவிட்டு வெளியே வந்து கையில் சுவடிகளுடன் ஆலமரத்தை நோக்கி நடக்க, பரமனும், தனது சக மாணவர்களை அழைத்துக்கொண்டு ஆலமரத்தை நோக்கி நடந்தான். அவன் போவதையே வெறித்தபடி நின்றிருந்தாள் ஆம்ரா. பரமன் அவளது மனதில் ஏகப்பட்ட சலனங்களை உண்டாக்கியிருந்தான். அவன் இவளிடம் கடுமையாக வாதம் செய்ய முற்பட்டதே, அவன் தன்னால் ஈர்க்கப்பட்டுவிட்டான் என்கிற உணர்வினை அவளுக்குத் தந்தது. இருப்பினும், அவனுக்கு ஒரு சோதனையை வைத்தாள்.

வர்மக்கலையில் ஒரு பாடம் மயன பந்தனம்! தன்னை உதாசீனம் செய்பவரையும், வெறுப்பவரையும் கூட வசியம் செய்து கட்டிவிடலாம். மயன பந்தனத்தில் ஒரு அனுகூலம் உண்டு. மற்ற எல்லா பந்தனங்களையும் செய்யும் போது பந்தனம் செய்யப்படுபவரின் கண்ணினுள் ஆழமாக நோக்கிட வேண்டும். ஆனால், மயன பந்தனத்தை

https://telegram.me/aedahamlibrary

செய்யும் போது, கண்ணை நோக்கிட தேவையில்லை. ஆணாக இருந்தால், அவனது வலதுகால் பெருவிரலையும், பெண்ணாக இருந்தால் அவளது இடது செவிமடலையும் நோக்கி, வர்மக்கலை நாடி மந்திரத்தை ஜபிக்க வேண்டும். கண்டதும் பரமனிடம் ஈர்ப்பு கொண்டுவிட்டாள், ஆம்ரா. அதுவும், தேகத்தைக் கடந்து எந்த ஆண்மகனும் இவளுடன் உறவாட முடியாது என்கிற நிலைமையைப் பொய்யாக்கி, முதன்முதலாக மனத்திற்கு இதமளிக்க வந்த ஆண்மகனாக பரமன் இவளைப் பெரிதும் பாதித்துவிட்டிருந்தான். அவனைத் தன்வசப்படுத்த வேண்டும் என்கிற எண்ணத்தில், அவனுடன் வாதம் செய்கையில், அவ்வப்போது நாணத்துடன் நிலத்தை நோக்குவது போன்று அவனது கால் கட்டை விரலை, மயன பந்தனம் செய்துவிட்டிருந்தாள். நடந்து செல்லும் போது அவன் ஒருமுறையேனும் திரும்பிப் பார்த்தால், இவளது பந்தனம் வேலை செய்வதாக பொருள். ஆனால் ஆலமரம் அருகே சென்று குருவின் முன்பாக அமரும்வரை பரமன் இவளைத் திரும்பி நோக்கவேயில்லை. பெருமூச்சுடன் குடிலை நோக்கி நடந்தாள்.

“நீ ஒன்றும் மனதினுள் வருந்தாதே, ஆம்ரா. சற்றே அகந்தை பிடித்தவன் பரமன். இப்போது கல்வியை முடித்து அத்தியூர் முக்கூடல் கடிகை சென்று மேற்கல்வி கற்க உள்ளான். அதனால், அகந்தை இன்னும் பரிபூரணமாக அவனது பேச்சில் இழைந்தோடுகிறது. அதிகம் கற்றுவிட்ட அகம்பாவம். எனது தந்தை போதிக்காத பல விஷயங்களைக் கூட தேடிக் கற்றுக்கொள்கிறான். அவன் அத்தியூர் கிளம்புவதற்குள், பத்ரஷீலாவை அவனுக்கு மணமுடித்து அனுப்பிவிட்டால், பிறகு நாம் நமது எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்கலாம்!" ஆசையுடன் வல்லபன் பேச, அவளது சிந்தை எல்லாம் தன்னை திரும்பிப் பாராமல் சென்றுவிட்ட பரமனையே சுற்றிக் கொண்டிருந்தது.

அடுக்களைக்குச் சென்று உணவு தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தாள் பத்ரஷீலா. தந்தை, அவரிடம் கல்வி பயிலும், மாணாக்கர்கள் பன்னிருவர், வல்லபன், ஆம்ரா மற்றும் தனக்கு என்று இனி ஒரு நாளைக்கு பதினாறு பேருக்கு இவள் உணவு தயாரிக்க வேண்டும். ஆனால் மற்றவர்களைப் பற்றி எண்ணாமல், வருங்கால கணவன் உண்பதற்காக உணவு தயாரிக்கிறோம் என்கிற எண்ணம் உற்சாகத்தை அளிக்க, இங்கும் அங்கும் ஓடியபடி அடுக்களைப் பணிகளைச் செய்து கொண்டிருந்தாள்.

"நான் உதவி செய்கிறேன் பத்ரா!” - வேண்டாவிருப்பாகத்தான்

https://telegram.me/aedahamlibrary

கேட்டாள் ஆம்ரா. அவளுக்கு சற்றே ஓய்வு எடுத்துக்கொண்டு, சற்று முன் தான் சந்தித்திருந்த மன்மத புருஷனைப் பற்றி சிந்திக்க வேண்டும் போல இருந்தது.

“தேவையில்லை! எனது வருங்கால கணவனுக்காக நானே எனது கையால் உணவு தயாரித்து பரிமாற வேண்டும். அவர் அதை ரசித்து சுவைக்க வேண்டும். எனது கைப்பக்குவம் மட்டுமே உணவில் தெரிய வேண்டும்!” - காதலனை எண்ணி சிலாகித்தபடி கூறினாள் பத்ரஷீலா.

இதை பத்ரா குறிப்பிட்டிருக்கவே வேண்டாம். பரமன் உண்ணப் போகும் உணவு தன்னால்தான் தயாரிக்கப்பட வேண்டும் என்று தனக்கு பத்ரா சவால் விடுவதாகவே நினைத்தாள், ஆம்ரா.

"நன்றாக இருக்கிறது, உன் நியாயம். இன்றைய உணவு உனது எதிர்காலத்தை மட்டும் நிர்ணயிக்கப் போவதில்லை. எனது எதிர்காலமும் இன்றைய உணவில்தான் அடங்கியுள்ளது. நீ சிறு பெண். நானோ உன்னைவிட பல வயது மூத்தவள். நீ பணி செய்ய, நான் சோம்பி இருப்பதா? நானும் பணி செய்வேன்!”

பிடிவாதமாக பத்ராவுக்கு உதவத் தொடங்கினாள், ஆம்ரா.

“அக்கா... புரிந்துவிட்டது! உனது கைப்பக்குவத்தால் எனது அண்ணனை மயக்க நினைக்கிறாய் போலும்.” - ஆம்ராவைக் கேலி செய்தாள், பத்ரா.

மனதில் எழுந்த அருவருப்பு மற்றும் அசூயையினை முகம் பிரதிபலிக்காத வண்ணம், ஒரு அகன்ற புன்முறுவலை வெளிப்படுத்தினாள், ஆம்ரா.

“வல்லபர் என்று ஏன் தனிமைப்படுத்துகிறாய்! புருஷர்கள் அனைவரும் பரம சந்தோஷத்தை அடைய வேண்டும் என்பதே எனது ஆசை. பரம என்னும் சொல்லே மிகவும் சக்திமிக்கவன் என்று பொருள். மனிதன் குணங்களை நிர்ணயிப்பதே அவன் உண்ணும் உணவு அல்லவா? சாத்வீகத்தை நாம் இதமான வார்த்தைகளைப் பேசி உணவின் மூலம் புருஷர்களுக்குச் செலுத்துகிறோம். அவர்களுக்கு அந்த உணவு வீர்யமாக மாறுகிறது. கடுமையான சொற்களைப் பேசி அவர்களுக்கு உணவு அளிக்கும் போது அதனால் அவர்கள் உண்ணும் உணவு நஞ்சாக மாறி, அவர்களது செயல்பாடுகளைப் பேதலிக்க வைக்கிறது. புருஷர்கள் பௌருஷம் என்கிற ஊர்தி மட்டுமே! அதற்கு அக்னி சக்தியாகத் திகழ்வது மனைவியே. எனவே பதிக்கு அக்னி சக்தியாகத் திகழும் நாம்

https://telegram.me/aedahamlibrary

பத்னி என்று அழைக்கப்படுகிறோம். புருஷ சக்திக்கு ஆதார சக்தி பத்னியே! மனைவியோ தாயோ மட்டுமே புருஷனுக்கு உணவு பரிமாற வேண்டும். ஆகவே, உன் காதலர், என் காதலர் என்று பிரித்துப் பேசாதே. பரம புருஷர்களுக்கு நாம் இருவருமே உணவு தயாரிப்போம்!”

ஆம்ராவின் பேச்சில் சூட்சும சூரணம் அதிகமாகவே இருக்க, சிறு பெண்ணான பத்ரஷீலாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவளால் முடிந்தது, ஆம்ராவின் முகத்தை வெறித்து, மலங்க மலங்க விழிப்பது மட்டுமே.

ஆம்ராவின் முகத்தையே வெறித்துக்கொண்டிருந்த பத்ரா வியப்படைந்தாள்.

“இது என்ன அக்கா? நீ அணிந்திருக்கும் சீரமைக்கி [1] சற்றே உயர்ந்திருக்கிறது. உனது இடது செவி மடல் மடிந்திருக்கிறதே. இது என்ன விசித்திரம்...?”

“செவி மடிந்திருக்கிறதா...? என்ன சொல்கிறாய்?” - திகைப்புடன் நிற்க, பத்ரா தனது வட்ட வடிவக் கைக்கண்ணாடியை அவளிடம் காட்ட, ஆம்ரா ஓரக்கண்களால் தனது மடிந்திருந்த இடது செவி மடலை நோக்கினாள். அவளது முகம் இருண்டது.

இப்போது அவளுக்குப் புரிந்து போனது. இவள் பரமனை எண்ணி ஏங்கிக் கொண்டிருக்கிறாள். அவனையே நினைந்து கொண்டிருக்கிறாள், அவனை வசப்படுத்த எண்ணி, அவனது வலதுகால் பெருவிரலில் அவனை மயன பந்தனம் செய்வித்திருந்தாள். ஆனால் அவன் இவளை ஒருமுறை கூட திரும்பி நோக்காமல் சென்றுவிட்டிருந்தான். தனது மயன பந்தனம் ஏன் அவனைக் கட்டுப்படுத்தவில்லை என்று இவள் இங்கே யோசித்துக் கொண்டிருக்க, இவளுக்கு முன்பாகவே அவன் இவளது செவிமடலை மயன பந்தனம் செய்திருக்கிறான்.

அதனால்தான் வயதில் இளைய அந்த குமரனை எண்ணி இவள் மருகிக் கொண்டிருக்க, அவன் இவளுக்கு வசப்படாமல் அவனது பணிகளைச் செய்து கொண்டிருக்கிறான். பந்தனம் செய்யப்பட்டவர்களால் மற்றொருவரை பந்தனம் செய்ய முடியாது என்பதை அவள் அறியாதவளா என்ன?

அந்த குமரன், பரமபுருஷன், வர்மக்கலையினை அறிந்தவன் என்பது புரிந்து போனது. தனக்கு சவால்விடக் கூடிய ஒரு ஆண் மகன்

https://telegram.me/aedahamlibrary

அருகேயே இருக்கிறான் என்பதை நினைத்ததும், அவளுள் இன்னது என்று புரியாத ஓர் உணர்வு எழுந்தது. இதுவரை இவள்தான், மவுரிய மன்னன் தசரதன் தொடங்கி சாதாரண போர் வீரன் வரை அனைவரையும் அடக்கி ஆண்டிருக்கிறாள். சங்கர்ஷணன், வல்லபன் என்று இவள் தொடர்ந்து அடங்கிப் போகின்ற ஆண்களையே சந்தித்திருந்ததால், வாழ்க்கை சுவாரசியப்படவில்லை. தன்னையே பந்தனம் செய்யும் குமரன் ஒருவன் தோன்றி விட்டான் என்பதை அறிந்ததும், அவளுக்கு மிகவும் சுவாரஸ்யமாக இருந்தது. எனது திறமைகளுக்கு சவால்விடும் ஆண்மகனை அடக்கி தன்வசப்படுத்துவதில்தான் எத்தனை இன்பம் இருக்கிறது.

'பரமபுருஷா! உன்னை அடக்கி எனது வசப்படுத்தி, உன்னைக் கொண்டு தேவ உடும்பர விருட்சத்தை கண்டுபிடித்து அதனை புத்த கயைக்கு கொண்டு போகிறேன்! எனக்கு பணி செய்யவே, புத்தபிரான் உன்னை அனுப்பியுள்ளார்!'

அடுக்களையிருந்து ஏதோ வேலையாக கொல்லைப் புறம் செல்வது போன்று சென்று, அங்கிருந்து மரத்தின் நிழலில் சுவடிகளை வாசித்துக் கொண்டிருந்த பரமபுருஷனை நோக்கினாள்.

தான் பயின்றிருந்த ஈசாவாசிய உபநிஷத்தை மற்ற மாணவர்களுக்கு உபதேசித்துக் கொண்டிருந்தான், பரமன். வாய் உபநிஷத்தின் பொருளைக் கூறிக் கொண்டு இருந்தாலும், மனம் வேறு எதையோ பற்றி நினைத்துக் கொண்டிருந்தது. அத்தியூருக்கு பிரம்ம சூத்திரங்களைக் கற்பதற்காகப் போக உள்ளான், என்கிற எண்ணத்தை ஏற்படுத்திவிட்டான். ஆனால் அத்தியூருக்கு அதற்கா போகிறான்? கேட்டதை கொடுக்கும் கற்பகத் தரு தேவ உடும்பரத்தைத் தேடி கண்டுபிடிக்க அல்லவோ செல்கிறான். உலகில் உள்ள எல்லா உயர்ந்த பொருட்களும் இவனுக்குத்தானே கிடைக்க வேண்டும். அவற்றை தனது மேதவிலாசத்தைக் கொண்டு கைப்பற்றும் அத்தனை திறமைகளையும் படைத்திருக்கிறான். தேவ உடும்பரம் என்ன? சந்தன மரத்தினை கடைந்து செய்யப்பட்ட தேகத்தைக் கொண்டிருக்கும் அந்தப் பேரழகுப் பெட்டகம், வல்லபனின் வருங்கால மனையாள், ஆம்ராவும் இவனுக்கு உரியவளாகத் திகழ வேண்டும் என்று தானே கண்டதுமே அவளை வசப்படுத்த எண்ணி, அவளது இடது செவிமடலை மயன பந்தனம் செய்திருந்தான்.

வசியக்கலை, வர்மக்கலை என்று கருமை வண்ண எதிர்மறை கலைகளை பரமனுக்கு போதித்ததே நாவாய் கிராம தலைவர்

https://telegram.me/aedahamlibrary

சந்திரசூடனின் தம்பி அதிபீஷணன் தான். ஊர்த்தலைவர் சந்திரசூடருக்கு ஊர்த்தலைவர் என்கிற முறையில் நாவாய் ஆலயத்தில் தானே பிரம்ம ஓலை வாசிக்க வேண்டும் என்கிற ஆர்வம். ஆனால் முகுந்தரின் செல்வாக்கு ஆலயத்தில் கொடிகட்டிப் பறக்க அவரால் ஒன்றும் செய்ய இயலவில்லை. அவரது ஆற்றாமையை உணர்ந்த அவரது சகோதரன், அதிபீஷணன், அந்த அதிகாரத்தை தான் வாங்கித் தருவதாகக் கூறி, முகுந்தர் குடும்பத்தைப் பழி வாங்கத் தொடங்கினான். முகுந்தரின் மனைவி நீர் சேந்தி வருவதற்காக பாரத புழா ஆற்றுக்குச் செல்வதை பார்த்த அதிபீஷணன், புல்கட்டை மேய்ந்து கொண்டிருந்த காளையின் கண்களை உறுத்து நோக்கி, அதனை வசப்படுத்த, அது ஆவேசத்துடன் பாய்ந்து சென்று முகுந்தரின் மனைவியை முட்டித் தள்ளி தாக்க அவள் அதிர்ச்சியிலேயே உயிரை விட்டிருந்தாள். நியாயம் கேட்க வந்த வல்லபனின் பார்வையையும் மற்போர் புரிகையில் பந்தனம் செய்துவிட்டிருந்தான், அதிபீஷணன்.

'பிரம்ம ஓலை ரகசியத்தை அறிந்து வா' என்று தனது சீடன் பரமனை முகுந்தரின் குடும்பத்தின் மீது ஏவி விட்டிருந்தான். எதிர்மறைக் கலைகளைக் கற்றவன் என்கிற அபவாதம் தனக்கு ஏற்படக் கூடாது என்பதற்காகத் தானே நாவாய் ஆலயத்தில் பிரும்ம ஓலை படிக்கும் முகுந்தநாயகரின் குடிலில் வேதாகம சாத்திரங்களைக் கற்கும் மாணாக்கனாகச் சேர்ந்திருந்தான், பரமன்.

தேவ உடும்பரத்தின் பெருமையைப் பற்றி கூறி, அதனைத் தேடிவர நீ அத்தியூர் சென்று வா என்று அதிபீஷணன் கூறி இருந்ததால் மட்டுமே, முக்கூடல் கடிகையில் சேர்ந்து மேலே கல்வியை தொடரப் போவதாக தனது குடும்பத்தாருக்கும், முகுந்தரின் குடும்பத்திற்கும் கூறியிருந்தான். இந்நிலையில் அத்தியூரில் இருந்து வந்திருந்த ஆம்ரா, தனக்கு கண்பார்வையை அளித்தவள் என்று அறிமுகம் செய்த போது ஸ்தம்பித்து போனான், பரமன்.

ஒருபுறம் தனது பேரழகால் இவனை மயங்கச் செய்தாள் என்றால், பந்தனம் செய்யப்பட்ட வல்லபனின் கண்களை விடுவித்து அவனுக்குப் பார்வையை அளித்தவள் என்றதும், திகைப்பின் உச்சத்திற்குச் சென்றான். அத்தியூரில் இருந்து வந்தவள், பேரழகு படைத்தவள், வர்மக் கலையினால் கட்டப்பட்ட கண்களை விடுவிக்கும் வல்லமை படைத்தவள் என்பதை அறிந்ததும் அவள் மீது அவனுக்கு ஈர்ப்பு அதிகமானது. வர்மக்கலை பந்தனத்தை அவிழ்க்கும் வல்லமை படைத்தவள் என்றால் பந்தனம் செய்யும் வித்தையையும்தானே

https://telegram.me/aedahamlibrary

அறிந்திருப்பாள். அவள் அடிக்கடி குனிந்து நிலத்தைப் பார்க்கும் போதே இவனுக்கு ஐயம் எழுந்தது... ஒருவேளை இவனது கால் பெருவிரலை பார்க்கிறாளோ என்று. அவள் தன்னை பந்தனம் செய்வதற்கு முன்பாக அவளை பந்தனம் செய்துவிட வேண்டும் என்று அவளது செவிமடலை உற்று நோக்கி அவளை மயன பந்தனம் செய்துவிட்டிருந்தான்.

அந்தப் பெண் எப்படிப்பட்டவள்? தேவ உடும்பர ரகசியத்தை அறிந்தவளா? அதனை பெறுவதற்கு உதவுவாளா? அதிபீஷணன் முந்திரிப்பூ மலைக்காட்டின் டாகினி தேவதையை உபாசிப்பவன். அவள் மூலம் எப்படியாவது தேவ உடும்பரத்தை கைப்பற்றுவேன் என்று சூளுரைத்திருக்கிறான். தேவ உடும்பரம், ஒரு மனிதனை உலகிற்கே சக்கரவர்த்தியாக்கும் என்றால் நாம் ஏன் அந்த தேவ உடும்பரத்தை கைப்பற்றக் கூடாது? உலகில் உள்ள எல்லா சிறப்புகளும் தனக்கே கிடைக்க வேண்டும் என்கிற எண்ணம் கொண்டவன்தான் பரமன். தேவ உடும்பரம் கிடைத்தால் வேண்டாம் என்றா கூறப் போகிறான்? கூடவே அந்தப் பேரழகியும் கிட்டினால் அந்த ஆனந்தத்திற்கு ஈடேது? வயதில் மூத்தவள் என்றாலும், பேரழகுக்கு பிராய கணக்கை பார்க்க முடியுமா? பாரத புழா ஆறு அநாதி காலமாக பெருகி ஓடுகிறது. இவன் குமாரன். வயதில் மூத்தது என்பதற்காக பாரத புழா ஆற்றில் நீராடாமல் இருக்கிறானா என்ன?

'எனக்கு அவள் கிடைப்பாளா?" என்றபடி யோசனையுடன் திரும்பி குடிலின் பக்கமாகப் பார்க்க, குடிலின் பின்புறத்தில் இருந்து அவனையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த ஆம்ரபாலியைக் கண்டான். இருவரின் பார்வையும் கோர்த்துக் கொள்ள, அங்கே மவுரியத்தின் விரிஞ்சி நதியும், நாவாயின் பாரத புழா ஆறும் சங்கமித்துக் கொண்டிருந்தன.

குடிலின் வெளியே நடைபெற்றுக்கொண்டிருந்த சங்கமத்தினைப் பற்றி அறியாமல் குடிலின் உள்ளே இருந்த வல்லபனும், பத்ரஷீலாவும் தத்தம் இதயத்தில் குடி கொண்டிருந்த ஆம்ரா மற்றும் பரமனுடன் சங்கமிக்கப் போகும் நாளை கற்பனையில் எண்ணி பரவசப்பட்டுக் கொண்டிருந்தனர்.

[1] சீரமைக்கி என்பது இன்று பெண்கள் அணியும் ஜிமிக்கி என்கிறோம். கனமான வைரங்களையும், செவிப்பூ என்கிற தோடுகளையும் அணிவதால் பெண்களின் நுண்ணிய காது மடல்கள் கிழிந்துவிடும். அதை தவிர மாட்டல் ஒன்றுடன் கூடிய சீரமைக்கியை அணிவிப்பார்கள். தோட்டின் கனம் காதின் மடலை பாதிக்காதவாறு,

https://telegram.me/aedahamlibrary

மாட்டலும், சீரமைக்கியும் அதனை சமன்படுத்தி காது மடல் கிழியாதவாறு காக்கும். இந்த சீரமைக்கி என்கிற சொல்தான் மருவி ஜிமிக்கி ஆகிவிட்டது.

*****

https://telegram.me/aedahamlibrary

# 15. கரிகாலனின் காலணிகள்

கரிகாலன் தனது கால் பெருவிரலால், பல்லவ இளந்திரையனது ஓவியத்தில் தீட்டடப்பட்டிருந்த அவனது நெற்றிக்கண்ணை மிதித்து நசுக்கியவுடன், சிறுதூறலாக துவங்கிய மழை கடந்த இரு தினங்களாக விடாமல் கொட்டிக்கொண்டிருந்தது. அரண்மனை உப்பரிகை முற்றத்தில் பெய்த மழையினால் நீர் தேங்கி நிற்க, அதனை பொருட்படுத்தாமல் நடந்து சென்று, உப்பரிகையின் கைப்பிடி சுவரினை பற்றியபடி, வெளியே வெறித்து நோக்கிக் கொண்டிருந்தான், கரிகாலன். கொட்டும் மழையில் நனைவதை உணராதவன் போன்று நின்று கொண்டிருந்தான். சூரியன் உதித்திருந்தால், இந்த தருணத்தில் உச்சி வானை அடைந்திருப்பான். இது சூரிய வம்சத்தினர் ஆளும் பூமி என்று தனது கிரணங்களால் சோழ பூமியைக் கொஞ்சிச் சீராட்டிக் கொண்டு இருந்திருப்பான். ஆனால், கடந்த இரண்டு நாட்களாக, கதிரவன் எவ்வளவு முயன்றும், இருண்ட மேகத்திரையை விலக்கி தனது பிரிய சோழ மண்ணைக் காண முடியவில்லை. தனது குலக்கடவுளான கதிரோனைக் காணாமல், சோழ பூமியும், காதலனைக் காணாத கன்னியைப் போன்று முகப்பொலிவிழந்து காணப்பட்டாள்.

குதம்பைச் சித்தர் கூறியபடி காவிரியை தனது நெற்றிக் கண்ணை திறந்து வறண்டு போகச் செய்துகொண்டிருந்த பல்லவன் இளந்திரையன், இவனது கால் பெருவிரலால் நெற்றிக்கண் நசுக்கப்பட்டு, அகந்தை அழிந்து நின்றான். அவனது நெற்றிக்கண் தனது சக்தியை இழந்ததும், காவிரித்தாயின் வறட்சியைத் தீர்க்கும் பொருட்டு, அத்திமலைத் தேவனின் அருள் மழையாக பொழியத் துவங்கியது. அத்திமலையானின் அருளுக்கும் குறைவில்லை. கரிகாலன் பெருமைகளுக்கும் குறைவில்லை என்கிற போது தான் பெய்து கொண்டேதான் இருப்பேன் என்பது போன்று கொட்டித் தீர்த்தது மழை.

காவிரிக்கரையின் கிராமவாசிகள் கரிகாலனது இரதத்தை வழிமறித்து வறட்சியால் தாங்கள் படும் அவதியைக் கூற, தற்போது அவர்களது கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கி, அவர்கள் அனைவரும் வெண்காட்டான் ஆலய மண்டபங்களிலும், அரண்மனை பண்டகசாலையிலும் தங்க வைக்கப்பட்டிருந்தார்கள்.

மழையில் நனைந்தபடி தலைமை அமைச்சர் உய்யுலகர் தனது பின்பாக வந்து நின்றதை கரிகாலன் கவனிக்கவில்லை. தொடர்ந்து இரைச்சலுடன் பெய்து கொண்டிருந்த மழையையே கவனித்துக்

https://telegram.me/aedahamlibrary

கொண்டிருந்தான்.

"மன்னவா!" உய்யுலகர் சற்றே பலமாக அழைக்க, வியப்புடன் திரும்பிப் பார்த்தான் கரிகாலன்.

“நீர் எப்போது வந்தீர்?” திகைப்புடன் கேட்டுவிட்டு, மீண்டும் திரும்பி மழையைக் கவனிக்கத் தொடங்கினான்.

"மன்னரே! வராத மழை வந்ததும், அன்றாடம் வரும் என்னை கவனிக்க மறுக்கின்றீரே?" ஹாஸ்யத்துடன் கூறினார், உய்யர்.

கரிகாலன் புன்னகைத்தான்.

“உய்யரே! இந்த மழை எனக்கு மிகவும் விசேடமானது. அத்திமலைத் தேவன் இளந்திரையன் நாட்டில் இருந்தாலும், என் மீதுதான் அதிக அன்பை வைத்திருக்கிறான் என்பதனை நிரூபிக்க வந்த மழை. இளந்திரையனது நெற்றிக்கண்ணை அழித்த எனது கால்விரலின் ஆற்றலை உரைக்கும் மழை. எனவேதான் இந்த மழையை இமைகொட்டாமல் கவனித்துக் கொண்டு இருக்கிறேன்!" - கரிகாலன் கூற, தலைமை அமைச்சர் உய்யர் தனது இரு கைகளையும் விரித்துப் பரமானந்தத்துடன் வானை நோக்கினார்.

"ஆம் மன்னவா! விஸ்வரூபம் எடுத்த மாலவனின் திருவடிகளை நான்முகன் கழுவியதால் உண்டான நீரே கங்கை நதி என்பர். அதுபோன்று, பெருவளத்தானின் கால் பெருவிரலின் ஆற்றலால் உண்டான இந்த மழைநீர் நமது சோழ நிலத்தை வளமாக்கிக் கொண்டு இருக்கிறது." தான் கூற வந்திருந்த கவலைக்குரிய தகவல்களை கரிகாலனிடம் கூறாமல், அவனைப் பாராட்டினார், உய்யர். அவருக்கு பதிலளிக்க தோன்றாமல், மழையைத் தொடர்ந்து நோக்கிக் கொண்டிருந்தான்.

கண்ணுக்கெட்டிய தொலைவு வரை, எங்கும் நீர்தான் புலப்பட்டது. கடந்த இரு நாட்களுக்கு முன்பாக அரண்மனையைச் சுற்றி பச்சைக் கம்பளங்களை விரித்தது போன்று திகழ, வயல்களில் அமைக்கப்பட்டிருந்த பரண்களின் மீது நின்று ஆலோலம் பாடி, கவண் வீசி பறவைகளை விரட்டி நின்ற நங்கையரின் குரல் அவனது செவிகளுள் தேனாகப் பாயும். காவிரியில் நீர்வரத்து குறைந்த போதும் கூட, உழவுத்தொழில் பாதிக்கப்படவில்லை. ஆனால், உழவர்களின் கடும் உழைப்பை எல்லாம் வீணாக்கியபடி விடாது பெய்து கொண்டிருந்த மழை, வெள்ளத்தை உண்டாக்கிவிட்டிருந்தது.

https://telegram.me/aedahamlibrary

திடீரென்று உய்யரை நோக்கி வினவினான், “உய்யரே! மழைக்குக் காரணம் என் கால் பெருவிரல் என்றால், இப்போது இந்த மழை உண்டாக்கும் பேரழிவுக்கும் எனது கால் பெருவிரல்தானே காரணமாக இருக்கப் போகிறது?”

"கவலை கொள்ளாதீர் மன்னவா? பெருவளத்தானின் ஆட்சியில் காவிரி வறண்டது என்கிற அவச்சொல் உண்டாகக் கூடாது என்பதற்காக உருவான மழை. சோழ நாட்டின் நீர்நிலைகள், ஏரிகள், குளங்கள், குட்டைகள் எல்லாம் நிறைந்த பிறகு தன்னால் மழை நின்றுவிடும்!” - உய்யர் கூறினார்.

“அப்படி... ஒருவேளை மழை நிற்கவில்லை என்றால்?” - கரிகாலன் கேட்க, உய்யர் திகைத்தார்.

உண்மையில் அவர் அதுகுறித்து விவாதிப்பதற்குத் தான், அரண்மனைக்கு வந்திருந்தார். ஏரிகள் உடையும் அபாயத்தில் இருப்பதாக அவருக்குத் தகவல் வந்திருந்தது. இனியும் மழை பெய்தால் நாடு தாங்காது என்பதனை மன்னரிடம் தெரிவித்து நிவாரணப் பணிகளைப் பற்றி ஆலோசிக்கவே வந்திருந்தார். அவர் அதனைப் பற்றி தெரிவிப்பதற்குள்ளாக, மழை உண்டாக்க உள்ள நாசங்களுக்குத் தான் காரணமா என்று கேட்கின்றானே!

"ஆம் மன்னா! ஏரிகளும், குளங்களும் உடைப்பெடுத்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன! பல ஊர்களில் வெள்ளம் சூழ்ந்திருப்பதாக தகவல்கள் வருகின்றன!” - உய்யர் கூறினார்.

'ஒன்று பெய்யாமல் கெடுக்கிறது. அல்லது பெய்து கெடுக்கிறது. பெய்யாத மழையைப் பெய்ய வைத்த அத்திமலைத் தேவன், இப்போது ஏன் மழையை நிறுத்த மாட்டேன் என்கிறான்? பெய் என்றால் பெய்ய வைப்பவன். போதும் என்றால் நிறுத்துபவனாயிற்றே?'

குழப்பத்துடன் அவரை நோக்கினான். வானில் திரண்டிருந்த இருண்ட மேகங்கள் அவன் மனதிலும் மப்பையும், மந்தாரத்தையும் உண்டாக்கி விட்டிருந்ததை உய்யர் உணர்ந்தார்.

மன்னனுக்கு எப்படி ஆறுதல் சொல்வது என்று யோசித்தவரின் பார்வையில் அந்த எறும்புப்புற்று பட்டது. எறும்புகள் சில, உள்ளிருந்து வந்து தங்கள் புற்றின் முகப்பில் வந்து எட்டிப் பார்ப்பதும் மீண்டும் உள்ளே செல்வதுமாக இருந்தன. முற்றத்தில் தேங்கியிருந்த மழைநீர் உயர்ந்து கொண்டே வர, ஒரு தூணின் கீழ் விளிம்பில் தங்களது

https://telegram.me/aedahamlibrary

புற்றினை அமைத்திருந்தன, அந்த எறும்புகள்.

"மன்னா! அங்கே பாருங்கள்!" உய்யர் கரிகாலனுக்கு அந்த எறும்புப் புற்றினைச் சுட்டிக்காட்டினார். திடீரென்று, புற்றிலிருந்து ஏராளமான எறும்புகள் புறப்பட்டன. அவற்றின் வாயில் திரவியங்களும், தானியங்களும் காணப்பட்டன. இன்னும் சில எறும்புகள் புற்று மணலைச் சுமந்து கொண்டு சென்றன. கரிகாலன் விநோதமாக அவற்றையே கவனித்துக் கொண்டிருந்தான். புற்றைவிட்டு புறப்பட்ட எறும்புகள் அரண்மனையின் பாதுகாப்பான ஒரு சுவரின் ஓரமாகப் புதிய புற்றினை உருவாக்க, தாம் சுமந்து வந்த உணவு திரவியங்களைப் புதிய புற்றினில் சேமிக்கத் தொடங்கின.

“என்ன நடக்கிறது, உய்யரே?” வியப்புடன் கேட்டான் மன்னன்.

"உயர்ந்து கொண்டிருக்கும் மழைநீர் தங்கள் புற்றினை அழித்துவிடப் போகிறது என்பதை புரிந்து கொண்டு அவை பாதுகாப்பான பகுதிக்குச் செல்கின்றன. வாயில் அவை சுமந்து கொண்டு செல்லும் உணவு திரவியங்கள், இன்று நேற்று தேடி வைத்தவை அல்ல. பல திங்கள்களாகத் தேடி சேகரித்தவை. வருமுன் காப்பதற்கு உதாரணமாக எறும்புகளைச் சொல்லலாம். உணர்வு ஒன்றையே கொண்டு வாழ்வு நடத்துகின்றன, எறும்புகள். மனிதனால் மழை வருவதை அனுமானிக்க முடியுமா? தெரியாது. ஆனால் எறும்புகளால் நிச்சயம் அனுமானிக்க முடியும். தங்கள் புற்றுக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாது என்று எண்ணி அவை இதுவரை இங்கேயே இருந்தன. இப்போது புறப்பட்டுச் செல்கின்றன என்றால் இன்னும் மழை பெய்து, தங்கள் புற்று மழைநீரில் கரைந்துவிடும் என்பதை அனுமானித்து பாதுகாப்பைத் தேடிச் செல்கின்றன. அனுமானம்தான் அவற்றின் வாழ்க்கை! மனிதன் அனுமானம் செய்யும் திறமை இருந்தும், அதனைச் செய்யாமல், நிகழ்வுகளுக்கு ஏற்றபடி தனது வாழ்க்கையை மாற்றுகிறான். நாம் எறும்புகளைப் போன்று வருமுன் காக்க கற்றுக்கொள்ள வேண்டும். மழையை எப்படி நிறுத்துவது என்று யோசிக்காமல், மழை இன்னும் பெய்தால் அந்த நிலைமையை எப்படிக் கையாள்வது என்று யோசிப்போம்!” - உய்யர் கூற, கரிகாலன் திகைப்புடன் வானத்தையும், அந்தப் புற்றினையும் மாற்றி மாற்றி கவனித்தான்.

கடைசி சில எறும்புகள் வெளியேறி போக, மழைநீர் அந்த எறும்புப் புற்றைக் கரைத்தது. கரிகாலன் யோசனையுடன் அந்த எறும்புகளைக் கவனித்தபடியே நின்றான்.

https://telegram.me/aedahamlibrary

“மன்னரே! இன்று முழுவதும் மழை பெய்தால், நடுநிசியில் ஏரிகளும், குளங்களும் உடைந்துவிடும். உடனடியாக நாம் மீட்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். அது குறித்து கலந்து ஆலோசிக்கத்தான் நான் வந்தேன்!” - தலைமை அமைச்சர் கூறினார்.

“உய்யரே! உடையும் அபாயத்தில் இருக்கும் ஏரிகள் மற்றும் குளங்களின் அருகாமையில் வசிப்பவர்களை இடமாற்றி நமது ஆலயங்களிலும், அரண்மனை மண்டபங்களிலும் தங்க வையுங்கள். கரைகளை பலப்படுத்த மணல் மூட்டைகளை வைக்க உத்தரவு இடுங்கள். அரண்மனை மற்றும் ஆலய மடைப்பள்ளிகளில் உள்ள பரிசாரகர்களிடம் அனைவருக்கும் உணவு தயாரிக்க உத்தரவிடுங்கள். இந்த நாட்டின் மன்னனாக வருமுன் காப்பதற்கு என்ன செய்ய முடியும் என்று யோசிக்கிறேன். நீங்கள் ஏற்பட்ட பிரச்சனைகளுக்கு நிவாரணம் அளியுங்கள்!” என்று கூறியபடி அவரை திரும்பிப் பார்க்காமல், அந்தப்புரத்தினுள் நுழைந்து வேகமாக நடந்தான்.

எதுவுமே அளவை மிஞ்சினால் நஞ்சாகத்தானே மாறும். மழைநீர் மட்டும் விதிவிலக்கா என்ன? மழை இன்னும் பெய்யப் போகிறது என்றால், நாடு தாங்காதே?

மழை நிற்பதற்கு அறிகுறியே இல்லாத நிலையில், சோழ நாடு பிரளயத்தின் பிடியில் இருப்பதை உணர்ந்தான், கரிகாலன். “அத்திமலைத் தேவனே! உனது சந்நிதியில் ஓரிரவு தியானத்தில் அமர்ந்திருந்ததற்கு பலனாக எனது கால் பெருவிரலுக்கு அற்புத ஆற்றலினை தந்தாய். எனது பெருவிரலால் இளந்திரையனின் நெற்றிக் கண்ணை நசுக்கும் என்று சித்தர் கூறியதால் அவனது கர்வத்தை ஒழித்தேன். ஆனால், உனது அருளாகப் பொழிந்த மழை இன்னும் பெய்து கொண்டே இருக்கிறதே. மழை போதும், அத்திமலைத் தேவா! இனியும் பெய்தால் நாடு தாங்காது. தயைகூர்ந்து உனது கருணையாக பொழியும் இந்த மழையை நிறுத்திக் கொள்!”

முணுமுணுத்தபடி பிரார்த்தனை அறைக்குச் சென்றான். அறையின் வாயிலில் தனது பட்டுத் துணியினால் நெய்யப்பட்டிருந்த காலணிகளைக் கழற்றிவிட்டு, அறையினுள் சென்று மையத்தில் நிறுவப்பட்டிருந்த அத்திமலையானின் பஞ்சலோக திருவுரு முன்பாக அமர்ந்தான். ஆழ்நிலைக்குச் சென்று தியானிக்கத் தொடங்கினான்.

'அத்திமலையானே! எனது சோழத்தை பேரிடரிலிருந்து காப்பாய். காவிரி பெருக வேண்டும் என்று உன்னிடம் வேண்டினேன். தற்போது

https://telegram.me/aedahamlibrary

காவிரியன்னை பொங்காமல் இருக்க உன்னை நாடுகிறேன். எனது சுயநலத்தை எண்ணி நகையாதே.' - மனதினுள் தியானித்தபடி இருந்தான், கரிகாலன்.

தியானம் கலைந்து அத்திமலையானின் உருவச் சிலையை உறுத்து நோக்கியவன், “மழையை நிறுத்து தேவராஜா!” என்று கடைசியாக ஒருமுறை முணு முணுத்து விட்டு, பிரார்த்தனை அறையை விட்டு நீங்கினான். தனது காலணியை அணிவதற்காக எத்தனித்தவன் திகைத்து நின்றான். சற்று முன்பாக முற்றத்திலிருந்து புறப்பட்டிருந்த எறும்புகள் சாரை சாரையாக வந்து அவனது காலணிகளில் குடியேறிக் கொண்டிருந்தன. தாங்கள் சுமந்து வந்த மண்ணை காலனியில் பரப்பி வைப்பதும், திரவியங்களை பத்திரப் படுத்துவதுமாக இருந்தன. கரிகாலனின் காலணியில் எறும்புகள் அடைக்கலம் புகுகின்றன போலும். கரிகாலனின் காலுக்குத்தான் என்னே மகிமை!

“யாரங்கே!” கரிகாலன் குரல்கொடுக்க, ஒரு காவலன் ஓடி வந்தான்.

"எனது காலணிகள் இங்கேயே இருக்கட்டும். எறும்புகள் அவற்றில் குடியேறியுள்ளன. யாரும் காலணியை எடுத்துவிடாமல் இங்கேயே காவலில் நில்!” கரிகாலன் உத்தரவிட்டான்.

நெகிழ்ந்து போன கரிகாலன் மீண்டும் பிரார்த்தனை அறையில் நுழைந்து ஒரு கிண்ணத்தில் வைக்கப்பட்டிருந்த கற்கண்டு கட்டிகளைக் கொண்டு வந்து தனது காலணியின் முன்பாக வைத்தான். தனது காலணியில் அடைக்கலம் புகுந்த எறும்புகளுக்கு உணவும் அளித்தாகி விட்டது. நிம்மதியுடன், அந்தப்புரத்தை நோக்கி நடந்தவன், சடாரென்று நின்றான்.

இவனது காலணியே எறும்புகளுக்கு பிரயோஜனப்படும் போது, இவன் மக்களுக்கு எப்படியெல்லாம் பிரயோஜனப்பட வேண்டும். என்னால்தான் மழை பொழிந்தது. பல்லவ இளந்திரையனின் கர்வத்தை நான் ஒடுக்கிவிட்டேன் என்கிற எண்ணமே கர்வத்தின் ஒரு வெளிப்பாடுதானே. என்னால் என்கிற எண்ணம் இவனுள் தோன்றியதால் அத்திமலையான் இவனை சோதிக்கின்றான் போலும். உணர்ச்சியுடன் மீண்டும் பிரார்த்தனை அறையை நோக்கி நடந்தான்.

"அத்திமலைத் தேவனே! எனது தவறை உணர்ந்து கொண்டேன். என்னால் மழை உருவானது என்கிற எனது எண்ணம்தான் சோழ நாட்டுக்கு இடரை உண்டு செய்கிறது. உனது அருளால் ஏற்பட்ட மழை உனது அருளாலேயே நிற்கட்டும். எறும்புகள் அடைக்கலம் புக எனது

https://telegram.me/aedahamlibrary

காலணிகளைக் காட்டியிருக்கிறாய். வருமுன் காக்கும் எறும்புகளுக்கு உள்ள சிந்தனை கூட மன்னனாகிய என்னிடம் இல்லை என்பதை கூறாமல் கூறிவிட்டாய். எனது கால் அணிகலனே எறும்புகளுக்கு உதவுகின்றன என்கிற போது நான் வாளாயிருக்கலாமோ? நான் இன்று முதல் எனது பிரஜைகளுக்கு அனுதினமும் பிரயோஜனப்படுவேன். எனது பிரஜை மட்டுமல்ல! வருங்கால எனது குடிமக்களும் என்னால் பிரயோஜனப்பட வேண்டும். சோழத்தின் ஜீவநாடியான காவிரி ஆற்றின் குறுக்கே, அணை ஒன்றை எழுப்புகிறேன். நீரைச் சேமித்து வறட்சிக் காலங்களில் மக்களுக்கு நீர் கிடைக்கச் செய்வேன். கல்லணை மட்டுமா கட்டுவேன்? எங்களுக்கு எல்லாம் வளத்தை வாரித்தருகின்ற தேவ உடும்பர மூர்த்தியான உனக்கு, அத்தியூரில் பெரிய கோயிலை எழுப்பி, நீ வாசம் செய்யும் அத்தியூரையே பெரிய நகரமாக எழுப்புகிறேன். நகரம் என்றால் அது அத்தி நகரம் என்று உலகமே வியந்து கூறுமளவுக்கு உனது நகரைக் கட்டித்தருகிறேன். எனது தம்பி இளந்திரையன் மனம்மாறி என்னுடன் நட்பு பாராட்ட வேண்டும். இருவரும் சேர்ந்து உனது ஆலயத்தை எழுப்புகிறோம்!" - கரிகாலன் மனமுருக இறைஞ்சினான்,

வேண்டுதலை முடித்துக்கொண்டு மீண்டும் அறையை விட்டு வெளியேறினான். அந்த காவலன் அங்கேயே நின்றிருந்தான். இவனது காலணிகள் இருந்த இடத்தில் இப்போது மணல் புற்றுதான் காணப்பட்டது. மனநிறைவுடன் அங்கிருந்து முற்றத்தை நோக்கிச் சென்றான். உய்யர் இன்னும் அந்தப்புர வாயிலின் வெளியே இருந்த இருக்கையில்தான் அமர்ந்திருந்தார். மீட்புப் பணிகளை உத்தரவிட்டுவிட்டு, மீண்டும், மன்னனிடம் தொடர்ந்து ஆலோசிப்பதற்காகக் காத்திருந்தார்.

"மன்னா! நிவாரணப் பணிகளை மேற்கொள்ள ஆணை பிறப்பித்துவிட்டேன். இன்றிரவுக்குள் மழை நிற்கவில்லை என்றால், ஏரிகள் மற்றும் குளக்கரைகளில் வசிப்பவர்களை வெளியேற்ற கட்டளை இட்டாகி விட்டது." - உய்யர் கூறினார்.

"தேவையில்லை தலைமை அமைச்சரே! இதோ மழை நின்றுவிடும்!" உறுதியுடன் மன்னன் கூற, திகைத்தார் உய்யர்.

"எங்ஙனம் அவ்வளவு உறுதியாகக் கூறுகிறீர்கள் மன்னா?"

"எறும்புகளிடம் பாடத்தைக் கற்றேன், உய்யரே! நீங்கள் மட்டும் எனக்கு அந்த எறும்புப் புற்றினைக் காட்டாமல் இருந்திருந்தால், நான் வருமுன்

https://telegram.me/aedahamlibrary

காக்க வேண்டும் என்கிற பாடத்தை பயிலாமலேயே இருந்திருப்பேன். உங்களுக்குத் தான் முதலில் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்...”

கரிகாலன் கூறிக்கொண்டிருக்கும் போதே, மழையின் இரைச்சல் மட்டுப்பெற, மன்னரின் குரல் தெளிவாகக் கேட்பதை உணர்ந்து வியப்புடன் திரும்பி நோக்கினர். இவர்கள் இருவரும் பார்த்துக்கொண்டு இருக்கும் போதே, இரண்டு நாட்களாக விடாமல் பெய்து கொண்டிருந்த மழை, தனது வீர்யத்தை இழக்கத் துவங்கியது. அடுத்த சில தருணங்களில், தூவானமாக மாறி, கடைசியில் நின்றே போனது.

'எப்படி இது சாத்தியம்? பூசனை அறையில் என்ன செய்தீர்கள்?' என்கிற வினாக்கள் கண்களில் பிரதிபலிக்க கரிகாலனைத் திகைப்புடன் பார்த்தார், உய்யர்.

"பார்த்தீர்களா மன்னா! உமது அன்புக்கு மட்டுமே அத்திமலைத் தேவன் கட்டுப்படுகிறான். நீர் மழை பெய்ய வேண்டும் என்றீர்கள். பெய்ய வைத்தான். போதும் என்றீர்கள். நிறுத்திவிட்டான். அவனது அருளும் அன்பும் உமக்குப் பரிபூரணமாக உள்ளது!” நெகிழ்வுடன் மன்னனைப் பாராட்டினார், உய்யர்.

"அவனது அருள் மழையாகத்தான் பெய்யும். நாம்தான் அந்த அருளைச் சேமித்து வைத்துக் கொள்ள வேண்டும். அடிக்கடி அவனை இறைஞ்சி தொந்தரவு செய்யாமல், அவனது அருள் பொழியும் போதே அதனை சேமித்து வைத்துக் கொள்ள வேண்டும்! என்கிற பாடத்தை புகட்டவே மழையை தொடர்ந்து பெய்ய வைத்திருக்கிறான், அத்திமலைத் தேவன்.”

“என்ன சொல்கிறீர்கள், மன்னவா?” - உய்யர் குழம்பினார்.

“புரியவில்லையா? மழை நீரைச் சேமிக்க ஒரு கல்லணையும், அத்திமலையானின் அருளைச் சேமிக்க அவனுக்கு ஒரு பிரம்மாண்ட ஆலயத்தையும் எழுப்பத் தீர்மானித்திருக்கிறேன். இதனை செய்து முடிப்பேன் என்று அத்திமலையானின் திருவுருவத்தின் முன்பாக சபதம் செய்திருக்கிறேன். அதனால்தான் மழை நின்றது.”

உய்யர் கலவரத்துடன் கரிகாலனைப் பார்த்தார்.

"காவிரி நமது சொத்து! கல்லணை எழுப்புவதில் சிரமம் இல்லை. ஆனால்... அத்தியூரானுக்கு எங்ஙனம் ஆலயம் எழுப்புவது? பல்லவ இளந்திரையன் தங்கள் மீது பகைமை பாராட்டி வருகிறான். அவனது

https://telegram.me/aedahamlibrary

குலதெய்வத்தின் ஆலயத்தை நீர் எங்ஙனம் கட்ட முடியும்?" - உய்யர் அவநம்பிக்கையுடன் மன்னரைப் பார்த்தார்.

"யார் எதிர்த்தாலும் சரி. போர் புரிந்து பல்லவத்தை கைப்பற்றி அத்தியூரானுக்கு ஆலயம் எழுப்புவேன். அதுமட்டுமா? அத்தியூரையே பெரிய நகரமாகக் கட்டத் தீர்மானித்துள்ளேன். எல்லாவற்றிற்கும் மேலாக தொண்டை மண்டலத்தின் கடற்கரையோரம் உறுதியான கருங்கற்கள் கிடைக்கின்றன. அவற்றைக் கொணர்ந்து காவிரியாற்றின் குறுக்காக கல்லணை எழுப்புவேன்."

"மன்னவா! நடக்க இயலாத காரியங்களின் பட்டியலை போடுகின்றீர் என்றே கூறத் தோன்றுகிறது!" - உய்யர் கரிகாலன் உருவாக்கிய கற்பனைக் குமிழை, தனது சொல்லூசிகளால் தகர்த்தார்.

"பெய்யாத மழை பெய்தது. நிற்காத மழையும் நின்றது. நடக்க இயலாத காரியங்களும் நிகழும்!" - கரிகாலன் குரலில் தொனித்த உறுதி, உய்யரை தொடர்ந்து பேச முடியாதபடி கல்லணையை எழுப்பியது.

சரியாக ஒரு காவலன் வந்து பணிந்து நின்றான்.

"மன்னர் வாழி! தங்களை உடனே காண வேண்டும் என்று ஒரு துறவி வந்திருக்கிறார்!"

காவலன் கரிகாலனது தலையசைவைக் கண்டதும் வேகமாக விரைந்து சென்றான்.

குதம்பைச் சித்தர்தான் கையில் மாலை, பரிவட்டம் மற்றும் அருட்பிரசாதத்தோடு வந்திருந்தார். கரிகாலனும், உய்யரும் அவரை பணிந்தனர்.

"கரிகாலா! நட்டாற்றேஸ்வரன் காவிரியின் அடியில் யோக நிலைக்குச் சென்றுவிட்டான். அவன் நீரில் மூழ்குவதற்கு முன்பாக எனது கைகளாலேயே அபிஷேக ஆராதனைகளைச் செய்து கொண்டான். அந்த பிரசாதங்களைத்தான் உனக்கு கொண்டு வந்திருக்கிறேன்!" என்று தான் கொண்டு வந்திருந்த பரிவட்டத்தை அவனுக்குக் கட்டி, மாலை அணிவித்து திருநீற்றினை அளித்தார்.

"சுவாமி! உங்கள் ஆசியுடன், காவிரியில் கல்லணை ஒன்றை எழுப்பவும், நமக்கு வளங்களை அள்ளித்தரும் அத்திமலையானுக்கு ஆலயம் ஒன்றை எழுப்பவும் திட்டமிட்டு இருக்கிறேன்!" - கரிகாலன் கூறினான்.

https://telegram.me/aedahamlibrary

பேருவகை அடைந்தார், குதம்பைச் சித்தர்.

"கரிகாலா! கர்ம பூமி பாரத பூமி என்றால், அதன் கர்மேந்திரியங்களாகத் திகழ்வது நமது சோழ பூமிதான். பாற்கடலை கடைந்த போது விழுந்த அமிர்த கலசம் உடைந்து சோழ நாட்டில்தான் விழுந்தது. எனவேதான் உலகிற்கே உணவளிக்கும் பொறுப்பு சோழ நாட்டிற்குக் கிடைத்தது. வருங்காலத்தில் மக்களின் பேராசையினால் பஞ்சபூத சக்திகளின் வீர்யம் குறைந்து போகும். பஞ்சம் தலைவிரித்தாடும். நீ எழுப்பப் போகிற கல்லணையும், கரிவரதனின் ஆலயமும்தான் காவிரி அன்னையின் தண்ணீரையும், அப்பன் நீர்வண்ணனின் அருளையும் சேமித்து வைக்கப் போகின்றன. எனது ஆசிகள் உனக்கு எப்போதும் உண்டு. உலகிலேயே வளமான பூமியாக சோழத்தை நீ மாற்றுவாய் என்பதில் எனக்கு ஐயம் இல்லை!" என்று வாழ்த்தினார். குதம்பைச் சித்தர்.

'சித்தரிடமே அறிவித்துவிட்டானே கரிகாலன். தனது சபதத்தை எங்ஙனம் நிறைவேற்றப் போகிறான்?' என்று யோசனை செய்தபடி நின்றிருந்தார், உய்யுலகர்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 16. காஞ்சி பிறந்தது

அத்திமலையானுக்கு பிரம்மாண்ட ஆலயம் ஒன்றை எழுப்புவேன்!

காவிரியின் நடுவில் கல்லணை ஒன்றை எழுப்புவேன்!

அத்திமலைத் தேவன் பிரதிமையின் முன்பாக சபதம் செய்துவிட்டானே தவிர, அதை எங்ஙனம் செயல்படுத்துவது என்று சிந்தையைக் கசக்கிப் பிழிந்து கொண்டிருந்தான். தம்பி இளந்திரையன் இவன் மீது பகைமை பாராட்டிக் கொண்டிருப்பதால் நிச்சயம் கல்லணை கட்டுவதற்கு, மல்லைநகரின் கருங்கற்களை கொடுக்க மறுப்பான். 'எனது அத்தியூரை நீ என்ன புதுப்பித்துக் கட்டுவது...' என்று வம்புகள் வளர்ப்பான்.

எனவே, கரிகாலன் முன்பு இரண்டே வழிகள்தான் இருந்தன. ஒன்று சபதத்தை விலக்கிக்கொள்ள வேண்டும் அல்லது தொண்டைமான் இளந்திரையன் மீது போர் தொடுக்க வேண்டும் என்று உய்யுலகர் உட்பட அனைத்து மந்திரி பிரதானிகளும், தளபதிகளும், ஆலோசனை கூறி அலுத்துவிட்டனர். ஆனால் கரிகாலன் தான், போர் புரியாமல், தம்பியையும் புண்படுத்தாமல், இடையே ஏதாவது வழி புலப்படுமா என்று ஆராய்ந்து கொண்டிருந்தான்.

அப்போது -

எல்லை பாதுகாவல் படையின் தலைவன் வீரநாடன் பரபரப்புடன் வந்து நின்றான்.

"மன்னரே! தொண்டை மண்டலத்து மன்னர் பல்லவ இளந்திரையர் நமது புகார் நகரத்தை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்! மிகவும் கலங்கிக் காணப்படுகிறார் என்று தகவல்கள் வருகின்றன.”

“படை எடுத்து வருகிறாரா?” - உய்யர் திகைத்தார்.

“அப்படித் தெரியவில்லை, தலைமை அமைச்சரே. இரதத்தில் தனது தாயுடன் வருகிறார்!” வீரநாடன் கூற, கரிகாலன் பார்வையில் பொருள் பட உய்யரை நோக்கினான்.

"நான் சொல்லவில்லை. எங்களுக்குள் பகைமையை அத்திமலையானே நீக்குவான்.” தனக்குள் முணுமுணுத்த கரிகாலன், தலைமை அமைச்சரை நோக்கி உத்தரவு இட்டான்.

"என்னைக் காண வரும் எனது சகோதரன், பல்லவன்

https://telegram.me/aedahamlibrary

இளந்திரையனுக்கு வரவேற்பு விமரிசையாக இருக்கட்டும். அனைவரும் ஊர் எல்லையில் சென்று அவனை வரவேற்று அரண்மனைக்கு அழைத்து வாருங்கள். உலகரே! நீரே எனது சார்பில் இளந்திரையனை வரவேற்று அழைத்து வாருங்கள்." - கரிகாலன் கூறினான்.

உய்யுலகர் சோழ எல்லைக்குச் சென்று இளந்திரையனுக்காகக் காத்திருந்து அவனை அரண்மனைக்கு அழைத்து வந்தார்.

அரண்மனைக்கு வந்ததுமே, இரதத்தில் இருந்து இறங்கி கரிகாலனைக் காண ஓடோடி வந்தான், இளந்திரையன்.

"அண்ணா...!" வாய் நிறைய கரிகாலனை அழைத்தபடி வந்தவன், கரிகாலனைக் கண்டதும் பாய்ந்து அணைத்துக் கொண்டான்.

"எப்படி இந்தக் கரிய மாணிக்கத்தைவிட்டு இவ்வளவு காலம் பிரிந்து இருக்கத் துணிந்தேன். பகையுணர்ச்சியை வளர்த்தது சிலரது சதி என்றாலும், எனது சிந்தை தெளிவாக இருந்திருக்க வேண்டாமோ? எப்படி அண்ணா... உனக்கு எதிரான கருத்துகளை கொண்டிருந்தேன். உனது மனது புண்படும்படியாக நான் நடந்திருந்தால் என்னை மன்னித்துவிடு, அண்ணா. நேற்று இரவு, எனது நெற்றியில் உள்ள மூன்றாவது கண்ணில் கடும் வலி. வேதனையால் அவதிப்பட்ட எனக்கு, உடனே உனது நினைவுதான் வந்தது. உனக்கு இடர்களை ஏற்படுத்த வேண்டும் என்று நினைத்து பரமேஸ்வரனின் திட்டப்படி காவிரி நீரை வற்றடிக்க முயன்றேன். ஆனால் எனது கொடுஞ்செயலை உனது நல்லெண்ணம் வென்று விட்டது. உனக்கும், உனது நாட்டிற்கும் கேடு நினைத்த இந்த தம்பியை நீ மன்னித்துவிடு, அண்ணா! இனி... நான் வேறல்ல, நீ வேறல்ல. எனது நாடு வேறல்ல, உனது நாடு வேறல்ல. ஒருவருக்கொருவர், பரஸ்பரம் உதவி கொண்டு நம் இரு நாடுகளையும் செழிக்க வைப்போம்."

உணர்வுடன் கூறிய இளந்திரையனை, தானும் இறுக அணைத்தான், கரிகாலன்.

"தம்பி! உனது சொற்கள் எனக்கு யானை பலத்தை கொடுத்துவிட்டது. கவலைப்படாதே. இனி நான் உனக்கும், நீ எனக்கும் துணை. நமது இருவரின் சகோதர பாசத்தையும், நமது நாடுகளின் நட்பையும் பறைசாற்றும் வண்ணம், இரு நினைவுச் சின்னங்களை அமைப்போம். உனது நாட்டில் உள்ள கருங்கல் பாறைகளை எனக்குக் கொடு. காவிரியில் கல்லணை ஒன்றை எழுப்பி, மக்களுக்கு வறட்சியே இல்லாமல் செய்கிறேன். நமது நாடுகளில் வளங்களைக் கொழிக்கச்

https://telegram.me/aedahamlibrary

செய்யும் நமது அத்திமலைத் தேவனுக்கு பிரம்மாண்ட ஆலயம் ஒன்றை எழுப்புவோம். தொண்டை மண்டலத்திற்கு மிகவும் பலம் வாய்ந்த தலைநகர் ஒன்றை எழுப்புவோம். முக்கூடல், பழமுதிர்சோலை, அத்தியூர், தருமநகரம் மற்றும் ஒத்தாடை ஆகிய ஐந்து பகுதிகளையும் இணைத்து அத்தி நகரம் என்கிற காஞ்சி நகரை உருவாக்குவோம். நான் எனது ஆள்பலத்தை உனக்குத் தருகிறேன். இருவரும் இணைந்து தத்தம் நாடுகளை உலக அரங்கில் உயர்த்துவோம். அத்திமலைத் தேவனின் அருளால் சோறுடைத்த நாடும், சான்றோர் உடைத்த நாடும் இணையட்டும்!” நெகிழ்ந்த குரலில் கரிகாலன் கூற, காவிரியும், வேகவதியும் சங்கமம் ஆனதோ என்று கூறும்படியாக இருவரும் ஒருவரின் அணைப்பினில் மற்றொருவர் கட்டுண்டு கிடக்க, அதைக் கண்ட சுலோச்சனா அன்றுதான் இளந்திரையனை பெற்றவளைப் போன்று குதூகலித்து நின்றாள்.

பிறகென்ன...?

மல்லையின் பாறைகள் காவிரியின் குறுக்கே கல்லணை உறுதியுடன் எழும்பி நிற்க, தனது சோழ கட்டுமான அறிஞர்களைக் கொண்டு, கடிகையை உள்ளடக்கிய முக்கூடல், மலைப்பகுதியான ஸ்ரீவரம், அத்தியூர், அரண்மனைப் பகுதியான ஒத்தாடை மற்றும், எழுமால் கோயில்கள் மற்றும் தும்புரு வனத்தை கொண்ட தருமநகரம் ஆகியவற்றை இணைத்து அத்தி நகரத்தை உருவாக்கினான். அத்திமலைத் தேவன் ஆலயத்தை பிரம்மாண்ட மதில்களுடன் கூடிய ஆலயமாக மாற்றினான். முக்கூடல் சங்கமத்தில் இருந்து ஆலயம் புலப்படும்படியாக பலப்படுத்தி, கிழக்கு வாயிலின் கோபுரத்தை உயர்த்தினான்.

நகர் என்றால் காஞ்சி, (நகரேஷு காஞ்சி) என்று பெயர் பெறப்போகும் காஞ்சி நகரம் கரிகாலனின் முயற்சியால் உருவானது. தனது நகரின் புதுப்பொலிவினைக் கண்டு மலைத்துப் போய் நின்றான், இளந்திரையன்.

உண்மையிலேயே தனது நகரம் இவ்வளவு அழகு வாய்ந்ததா? பல்லவ தலைநகரம் என்று கூறும்படியாக மாடமாளிகைகளும், கோபுரங்களும், பண்டகசாலைகளும், கடிகைகளும், நிழற்குடைகளும், வண்டிகள் செல்ல அகலமான வீதிகள், அவற்றில் தீபஸ்தம்பங்கள் என்று தனது நகரைக் கண்டு தானே பிரமித்தான்.

குறிப்பாக, அத்திமலைத் தேவன் ஆலயத்தை அழகுபடுத்தி சுண்ணாம்புச்

https://telegram.me/aedahamlibrary

சுவர்களைக் கல் மதில்களாக எழுப்பி, ஆலயத்தை விஸ்தீரணம் செய்து, கோபுரத்தை உயர்த்தி, அத்திமலையான் முன்பாக தான் செய்திருந்த சபதத்தை நிறைவேற்றி இருந்தான், கரிகாலன். தனது குடந்தை நகரில் இருந்து அந்தணர்களை காஞ்சி நகருக்கு அனுப்பி, அங்கு குணங்குன்றம் [1] என்னும் கிராமத்தில் தங்க வைத்து அத்திமலையானுக்கு கைங்கர்யங்களை செய்வித்தான்.

ஆலயத்தின் கம்பீரத்தைக் கண்டு இளந்திரையன் பிரமித்து போய் நின்ற அதே நேரம், தான் எழுப்பிய கல்லணையின் மீது காவிரியாற்றின் நீர் மோதி, மேலே பாய்வதற்கு வழியில்லாமல் காவேரி நிற்பதை களிப்புடன் கண்டு கொண்டிருந்தான், கரிகாலன். 'கரிகாலா... எனது பாய்ச்சலை நிறுத்திவிட்டாய். இனி நீயே எனக்கு காவலன்!' என்பது போன்று அமைதியாக நின்றாள் காவிரியன்னை. தனது சபதங்களை நிறைவேற்றிவிட்ட திருப்தியில் பூரிப்புடன் நின்றிருந்தான், கரிகாலன்.

தான் செய்த தவறுக்குப் பிராயச்சித்தமாக திருலோச்சன பல்லவனை எச்சரித்து அத்திமலைத் தேவனுக்கு பாதுகாப்பினை பலப்படுத்த வேண்டும் என்கிற கோரிக்கையை வைத்திருந்தான், சாணக்கியன். திருலோச்சன பல்லவனின் மகன் இளந்திரையன், தனது பெரியம்மாவின் மகன் கரிகாலனின் உதவியோடு, அத்திமலையானுக்கு மிகவும் பாதுகாப்பான ஆலயம் ஒன்றை எழுப்பியிருந்தான். அந்த பாதுகாப்பு உண்மையிலேயே பலம் வாய்ந்ததுதானா என்பதற்கு காலம்தான் பதில் கூற முடியும். காரணம், வருங்காலத்தில் சமுத்திர குப்தன் அத்திமலையானைக் கைப்பற்ற காஞ்சி நகருக்கு வரப்போகிறான்.

இப்போது இளந்திரையன்தானே ஆளுகிறான். அவன் வழியில் உதித்து பல்லவத்தை ஆளப்போகும் விஷ்ணு கோபனது ஆட்சியில்தானே சமுத்திர குப்தன் வரப் போகிறான். இப்போதைக்கு சகோதரர்கள் கரிகாலனும், இளந்திரையனும் எழுப்பிய ஆலயத்தில் நாம் நிம்மதியாக இருப்போம் என்பது போன்று அத்திமலைத் தேவன் மோனநிலையில் சரித்திர மாற்றங்களுக்காகக் காத்திருந்தான்.

[1] குணங்குன்றம் இப்போது குன்ன வாக்கம் என்று அழைக்கப்படுகிறது. வரதராஜ பெருமாள் இன்றும் வனபோஜன உத்சவத்திற்கு இங்கே எழுந்தருளுகிறார். இங்கே தாமோதர பெருமாள் ஆலயம் ஒன்று உள்ளது. குன்னபாக்கம் படப்பை காஞ்சி சாலையில்தான் உள்ளது. காஞ்சி வரதராஜர் ஆலயம் கிழக்கு நோக்கியே அந்த காலத்தில் இருந்திருக்கிறது என்பதற்கு ஆதாரம் ஆலயத்தின்

https://telegram.me/aedahamlibrary

கிழக்காக உள்ள ஊர்களிலும், கிராமங்களிலும்தான் அன்றைய மக்கள் வசித்து வந்துள்ளனர். காஞ்சி மாவட்ட தொல்லியல் ஏடு குறிப்பிடும் பல்லவ கிராமங்கள் எல்லாமே, வரதராஜர் ஆலயத்தின் கிழக்காகவே இருந்தன. மேற்கே அரண்மனைப் பகுதி இருந்த ஒத்தாடை மட்டுமே குறிப்பிடும்படியாக இருந்த பகுதி. தருமநகரம், தும்புரு வனத்தின் காட்டுப் பகுதி. இங்கே எழுமால் கோயில்கள் மட்டுமே இருந்தன. முக்கூடல் கடிகை, வரதர் ஆலயத்தின் கிழக்கேதான் இருந்தது. சான்றோர்கள் வசித்த இந்தக் கடிகையைக் கொண்டு கோயில் கிழக்கு நோக்கி இருந்ததற்கான ஆதாரமாகக் கொள்ளலாம்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 17. உனக்கு அவள்! எனக்கு நீ!

வல்லபனுடன் சுள்ளிகளைச் சேகரிக்க வேண்டி காட்டிற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள், பத்ரஷீலா. வல்லபனுக்கு கண்பார்வை மீண்ட பிறகு, பத்ரா காட்டுக்குப் போவதை நிறுத்திவிட்டிருந்தாள். வல்லபன் மட்டுமே சென்று வருவான். ஆனால், மாணாக்கர்கள் அக்னி வளர்த்து ம்ருத்யுன்ஜயம் மற்றும் தன்வந்திரி ஹோமம் செய்ய வேண்டி இருந்ததால், அதிக ஆலம் சமித்துகள் தேவை என்கிற காரணத்தால் வல்லபனுடன் அவளும் புறப்பட்டுக் கொண்டிருந்தாள். ஆம்ரா அடுக்களையில் தயிரைக் கடைந்து கொண்டு இருந்தாள்.

"அக்கா! நான் அண்ணனுடன் காட்டிற்குச் சென்று வருகிறேன்!" உற்சாகத்துடன் கூறியவள் குடிலைவிட்டு வெளியே வர, அவளது கண்கள் தந்தை முகுந்தரின் அருகாமையில் அமர்ந்திருந்த பரமபுருஷனை நாடியது. சுவடிகளை வரிசைப்படுத்திக் கொண்டிருந்த அவன், இவளது பக்கம் திரும்பி நோக்கவில்லை. அவன் தன்னை கவனிப்பான் என்கிற ஆவலில் தனது கால் நூபுரங்களை சற்றே சப்தித்தாள். ஆனால் அவனோ, தனது கருமமே கண்ணாக இருந்தான்.

பெண்கள் காலில் அணியும் ஆபரணங்களை அவர்களது வயதுக்கு தக்கபடி அழைப்பார்கள். குழந்தை பருவத்தில் கொலுசு, குமரிப் பருவத்தில் நூபுரங்கள், மணமான பிறகு சிலம்பு, முதிய பருவத்தில் தண்டை!

கொலுசு அதிக கனமில்லாமல் தத்தி தத்தி நடக்கும் குழந்தைகளின் நடமாட்டத்தை உள்ளே அடுக்களையில் பணியாற்றும் தாய்க்கு உணர்த்தும்.

நூபுரங்கள் அதிக மணிகளுடன் மிகவும் ரம்யமான ஒலியினை எழுப்பும்.

குமரிகளின் அன்ன நடைக்கு ஏற்றவாறு சப்தித்து காளையரின் மனதில் இனம் புரியாத உணர்வுகளைத் தூண்டச் செய்யும்.

மணமான பெண்கள் சிலம்பு அணிவார்கள். நவரத்தின பரல்களில் ஏதாவது ஒன்றை உள்ளே கொண்டிருக்கும் சிலம்பு அதிக சப்தம் செய்யாது. ஆனால் பெண்களுக்கு மணமாகிவிட்டதை உணர்த்தியவாறு காலில் கிடக்கும். சிலம்பு கனமாக இருக்கும். குடும்ப கோட்பாடுகளை பேணும் பெண்கள் பொதுவாக வீட்டின் படிதாண்டி வெளியே செல்ல

https://telegram.me/aedahamlibrary

விரும்பமாட்டார்கள். கனமான சிலம்புகளை அணிவதால், வீட்டின் உள்ளேயே வலம் வருவார்கள்.

முதிய வயதில் அணிவது தண்டைகள். கால்கள் தளர்ந்து நடப்பதே சிரமமாக உணரும் போது தண்டைகள் அணிவிப்பதால் கால்களுக்கு வலு சேர்க்கும். நடை உறுதிப்படும்.

இவற்றையெல்லாம் கடந்து கலைப்பணி செய்யும் நடன மாதர் அணிவது சதங்கைகள். நடனக்கடவுள் சதாசிவத்தின் அங்கமாக இந்த நடனப் பெண்கள் மாறுவதால் அவர்கள் சதாவின் அங்கம் என்பதை குறிக்கவே சதங்கை என்று பெயர் கொண்டன, அந்த காலாபரணங்கள்.

ஆனால் –

இனிமையான ஒலி எழுப்பிக் கொண்டிருந்த பத்ரஷீலாவின் நூபுரங்கள், பரமனின் மனதில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. ஆம்ராவை சந்திக்கும் வரை பரமனின் கண்கள் கள்ளத்தனமாக பத்ராவையே தேடிக்கொண்டிருக்கும். ஆனால் ஆம்ராவின் சதங்கையொலியைக் கேட்கத் துவங்கிய பிறகு பத்ராவின் நூபுரங்களின் ஒலியை அவனது செவிகள் கேட்க மறுத்தன. தன்னை திரும்பி நோக்கச் செய்ய வேண்டும் என்பதற்காக தனது நூபுரங்களை பத்ரா ஒலிக்கச் செய்வதை பரமன் அறியாமல் இல்லை. ஆனால், இப்போது அவளது முகம் அவனுக்கு எரிச்சலைத்தான் ஏற்படுத்தியது. குமரியாக இருந்தும் நீண்ட சேலையை உடல் முழுவதும் பொட்டணமாகச் சுற்றிக்கொண்டு, முகம் முழுவதும் மஞ்சளையும் குங்குமத்தையும் அப்பிக் கொண்டு, செவிகளிலும், நாசியிலும், வெள்ளி ஆபரணங்களை அணிந்து கொண்டு, சரமாக தொடுத்த மலர்களைச் சூடி கூந்தலை மலர்பந்தலாக மாற்றுவது, குனிந்த தலை நிமிராமல் நடப்பது போன்ற தன்மைகள் அவனுள் அவள்பால் அசூயையினைத் தோற்றுவித்திருந்தன. அவளை இந்த தன்மைக்காகத்தான் காதலிக்க தொடங்கியிருந்ததாக அவளிடமே ஒருமுறை கூற, அதனால் அவன் மனதுக்கு இதமளிப்பதாக நினைத்து இன்னும் அதிகமாக மங்கலங்களை நாடியிருந்தாள். ஆனால் ஆம்ராவைச் சந்தித்த பிறகு அவன் மனதில் ஏற்பட்டிருந்த பெரும் மாற்றத்தை அவள் எங்ஙனம் அறிவாள்?

பரமன் பிடிவாதமாக பத்ராவின் புறம் நோக்காமல் இருக்க, ஏமாற்றத்துடன் வல்லபனைப் பின்தொடர்ந்து சென்றாள், பத்ரஷீலா. இதை கவனித்துக் கொண்டிருந்தான், மாணவர்களில் ஒருவனான வைசம்பாயனன். பத்ரஷீலாவின் மீது மிகவும் ப்ரியம் கொண்டவன்.

https://telegram.me/aedahamlibrary

தாய் பிரசவத்தின் போது இறந்துவிட, தீர்த்த யாத்திரை செல்ல விரும்பிய அவனது தந்தை முகுந்தரின் வசம் வைசம்பாயனனை ஒப்புவித்துவிட்டுப் போக, அவனை தனது மாணாக்கனாக ஏற்றுக்கொண்டிருந்தார், முகுந்தர். ஆனால் தீர்த்த யாத்திரை சென்ற அவனது தந்தை திரும்பி வரவேயில்லை. இறந்து போன மனைவியின் நினைவால் கங்கை ஆற்றினில் மூழ்கினாரோ அல்லது வேறு ஒரு பெண்ணுடன் குடும்ப சாகரத்தில் மூழ்கினாரோ, வைசம்பாயனனுக்கு வேறு உறவுகள் இல்லாமல் போனது. முகுந்தரைத் தந்தையாகவும், வல்லபனை அண்ணனாகவும், பத்ரஷீலாவை தமக்கையாகவும் கொண்டிருந்தான். குறிப்பாக பத்ரஷீலா, அவனுக்கு தாயன்பை அளித்துக் கொண்டிருந்ததால், வைசம்பாயனனுக்கு அவள் மீது அலாதி அன்பு உண்டாகி இருந்தது. தனது பிரியமான பத்ராவின் மனதைக் கவர்ந்தவன் என்பதால் பரமனுக்கும் அந்த பிரியத்தில் சிறிது அளித்துக் கொண்டிருந்தான். ஆனால், தற்போது பத்ராவிடம் அவன் காட்டும் அலட்சியத்தைக் கண்ணுற்றதும், வைசம்பாயனனுக்கு மனதினுள் கோபம் பொங்கியது. ஏமாற்றத்துடன் செல்லும் பத்ராவை அனுதாபத்துடன் பார்த்தவன் மீண்டும் பரமனை உக்கிரத்துடன் ஒருமுறை நோக்கிவிட்டு, தனது சுவடிகளில் கவனத்தைத் திருப்பினான்.

முகுந்தர் பாடங்களைப் போதித்துக்கொண்டு இருக்க, திடீரென்று குடிலில் இருந்து ஆம்ரா தோன்றினாள்.

“உணவு தயார்! அனைவரும் வரலாம்!” அவளது கண்கள் பரமனையே அளக்க, மழையில் நனையும் பயிராக மாறினான், பரமன்.

"குருவே! நீங்கள் அனைவரும் உணவு அருந்த செல்லுங்கள். நான் சுவடிகளை வரிசைப்படுத்திவிட்டு வருகிறேன்!” - பரமன் கூற, முகுந்தர் மற்ற மாணவர்களுடன் குடிலினை நோக்கிச் சென்றார். அவர்கள் உணவு உட்கொண்டுவிட்டு வந்த பிறகு, மீண்டும் ஆலமரத்தின் அடியில் இருந்த மேடையில் குழுமியதும், பரமன் எழுந்து கொண்டான்.

“நான் உணவு அருந்திவிட்டு வருகிறேன்! நீங்கள் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்!” என்றபடி குடிலை நோக்கிச் செல்ல, வைசம்பாயனனின் கண்கள் அவனைப் பின்தொடர்ந்தன.

பரமனது நடையில் உற்சாகத்துடன் கூடிய ஒரு துள்ளல் தென்பட்டதாகத் தோன்றியது, அவனுக்கு.

இரகசியமாக அவனைப் பின்தொடர்ந்து சென்று, குடிலில் நடப்பதை கண்காணிக்கலாமா? பாவம் பத்ரா அக்கா! இவர்களைப் போய்

https://telegram.me/aedahamlibrary

நம்புகின்றாளே! அவன் பரமனை தொடர்ந்து செல்வதற்காக எழ முற்பட்ட போது, முகுந்தரின் குரல் அவனை தடுத்து நிறுத்தியது.

"அடேய் வைசம்பாயனா! சற்றே எனது பாதங்களைப் பிடித்துவிடு!" - தூக்கம் கலந்த குரலில் அவர் கட்டளையிட, அவன் தனது மடியின் மீது அவரது பாதங்களை இருத்தி, அவற்றைப் பிடித்துவிட்டான். முகுந்தரை நித்திராதேவி தழுவிக் கொள்ள, அவரிடமிருந்து குறட்டை ஒலி எழுந்தது. அவர் உறங்கிவிட்டார் என்பதை ஊர்ஜிதப்படுத்திக் கொண்ட, வைசம்பாயனன் முகுந்தரின் பாதங்களை தனது மடியின் மீதிருந்து நீக்கி, பிறகு எழுந்து குடிலினை நோக்கிச் சென்றான்.

அடிமேல் அடி வைத்து குடிலின் மாடம் அருகே சென்று நின்றான். தனது கண்களால் மாடத்தின் வழியே உள்ளே நோக்கினான். பரமன் உணவா அருந்திக் கொண்டிருந்தான்? பானத்தையல்லவா பருகிக் கொண்டிருந்தான்? ஆம்ரா என்னும் அழகியின் அதர பானத்தை அருந்திக் கொண்டிருந்தான், பரமன். உறைந்து போனான், வைசம்பாயனன்.

குமாரபருவத்தில் இப்போது தான் காலடி வைத்திருந்தான், பதின் பருவத்தின் மையத்தில் இருக்கும் பரமன் இருபதின் பருவத்தைக் கடந்து கொண்டிருக்கும்

ஆம்ரபாலியின் அதரங்களை சுவைப்பது, அதிர்வினை ஏற்படுத்தியது வைசம்பாயனனுக்கு. குரு போதித்திருந்த கோட்பாடுகள் உடனடியாக நினைவுக்கு வந்தன.

"ஒரு பெண் இல்லாமல் ஆணுக்கு பூரணத்துவம் கிடையாது. அவளது வலது கையில் அக்னி குடி கொண்டுள்ளது. அதே போன்று ஒரு ஆண் இல்லாமல் பெண்ணுக்கு பூரணத்துவம் கிடையாது. அவனது வலது செவியில் கங்கை குடிகொண்டிருக்கிறாள். அக்னிக்கு விவேகம் உண்டு. கங்கைக்கு வேகம் உண்டு. எனவேதான், ஆணுக்கு விவேகத்தைவிட வேகம் உள்ளது. பெண்ணுக்கு விவேகம் உண்டு ஆனால் வேகம் கிடையாது. மனித வாழ்க்கைக்கு வேகமும் அவசியம்; விவேகமும் அவசியம். வேகம் உள்ள ஆண் விவேகம் உள்ள பெண்ணை மணக்கிறான். விவேகம் உள்ள பெண் வேகம் உள்ள ஆணை மணக்கிறாள். விவேகமும், வேகமும் இணைந்து குடும்பத்தை பேணும் போது அங்கே வாழ்க்கை பரிமளிக்கிறது." - ஆச்சாரியாரின் குரல் செவிகளில் ஒலித்தது.

இங்கே விவேகம் இல்லை. வெறும் வேகம் மட்டும்தான் உள்ளது,

https://telegram.me/aedahamlibrary

குருவே! ஆணின் மீது பெண் படர்வது ஒரு மரத்தின் மீது கொடி படர்வது போன்று என்று சிற்றிலக்கியங்களில் கற்றிருக்கிறான். ஆனால், இங்கே ஒரு கொடி இளங்குருத்தின் மீது படருகிறதே. அசூயையுடன் அங்கிருந்து விலகினான்.

மனதினுள் புலம்பியபடி கனத்த இதயத்துடன் மீண்டும் ஆலமரத்தடியை நோக்கி நடந்தான். நல்ல வேளையாக, மாணவர்கள் யாரும் குடில் பக்கமாகச் செல்லவில்லை. ஆத்திரத்துடன் சூரிய அஸ்தமனத்துக்காகக் காத்திருந்தான். முகுந்தரையும், சீடர்களையும் அன்று மாலை நடனமாடி மகிழ்வித்துக் கொண்டிருந்தாள் ஆம்ரா. தேன்குடித்த நரியாக அவளது நடனத்தைக் கண்டு களித்துக் கொண்டிருந்தான், பரமன். அவர்களது நயன பரிமாற்றத்தைக் கண்டு அருவருத்து பாடசாலையைவிட்டு விலகி ஊரின் எல்லையை அடைந்த வைசம்பாயனன் அங்கேயே ஒரு பாறையின் மீது அமர்ந்து வல்லபன் மற்றும் பத்ரஷீலாவின் வருகைக்காகக் காத்திருந்தான்.

தொலைவில் வல்லபனும், பத்ரஷீலாவும் சுள்ளிக் கட்டுகளுடன் வருவது தெரிய, அவர்கள் வரும்வரை காத்திருக்கப் பொறுமையின்றி, அவர்களை நோக்கி ஓடினான்..

"என்னடா தம்பி? உன் அக்காவை காண்பதற்கு அவ்வளவு ஆர்வமா? ஊர் எல்லைக்கே எங்களை தேடி வந்துவிட்டாயே?" - வல்லபன் பரிகசித்தான்.

வேகமாக ஓடி வந்தவன், தலையைக் குனிந்து அமைதியாக நிற்பதை கண்டு வியப்படைந்தாள், பத்ரா. வைசம்பாயனன் உணர்ச்சிகளை வெளிக்காட்டாதவன் தாய் - தந்தை இல்லாதவன் என்பதால் இவர்களின் மீது அதீத அன்பை பொழிந்தான். அவனது முகம் எப்போதும் அமைதியாகக் காணப்படும். முகம் அமைதியுடனும், பொலிவுடனும் காணப்பட்டால், கிரகிக்கும் கல்வி சிந்தையில் தேங்கி இருப்பதாகப் பொருள். ஆனால் இன்று அவனது முகம் ஏன் பதற்றத்துடன் காணப்படுகிறது?

“என்ன நடந்தது தம்பி?” - சுள்ளிக் கட்டைகளை இறக்கி வைத்த பத்ரா, ஆதுரத்துடன் அவனை அணைக்க, வைசம்பாயனனுக்கு குடிலில் தான் கண்ட காட்சி கண்களின் முன்பாக நிழலாட, சட்டென்று அவளது கரத்தை அப்பால் தள்ளினான்.

திகைப்புடன் அவனை ஏறிட்டாள், பத்ரா! “என்னடா நடந்தது தம்பி?”

https://telegram.me/aedahamlibrary

"அக்கா! இனிமேல் நீ சுள்ளிகளைச் சேகரிக்கச் செல்லாதே. அண்ணன் மட்டும் செல்லட்டும். இல்லையேல் நான் அண்ணனுக்கு உதவியாகச் செல்கிறேன். நீ குடிலைவிட்டு நீங்காதே!" - வெறுப்புடன் சொற்களை கடித்துத் துப்பினான், வைசம்பாயனன்.

வல்லபனும் அவனது குரலில் ஒலித்த காட்டத்தைக் கண்டு திகைத்தான்.

"ஏன்? என்ன நடந்தது, தம்பி?" - வல்லபனின் கண்கள் வைசம்பாயனனின் முகத்தைக் கூர்ந்து கவனித்தன.

என்ன சொல்வது என்பது போன்று சற்று நேரம் அமைதி காத்த வைசம்பாயனன், பிறகு தயக்கத்துடன் அவர்களை பார்த்தான்.

“நீங்கள் சுள்ளிகளைச் சேகரித்து குடிலின் முன்பாக கதிரவனின் ஞான ஒளியில் உலர்த்தி சுத்தசத்வம் என்கிற நெய்யில் நனைத்து ஹோமத்தில் சேர்க்கிறீர்கள். அக்னீர் மிளேப்ரோஹிதம் என்று உச்சரித்து ஆஹூதி செய்கிறீர்கள். ஆனால், காட்டுத் தீ ஒன்றை குடிலில் வளர்த்துவிட்டு, ஹோம குண்டத்தில் வேள்வித் தீயை உருவாக்குவதால் என்ன பயன்?" - வைசம்பாயனன் கேட்க, அண்ணன், தங்கை இருவருமே திடுக்கிட்டனர்.

"காட்டுத் தீயா? என்னடா சொல்கிறாய்?" - வல்லபன் திடுக்கிட்டான்.

“சுள்ளி சேகரிக்கச் சென்ற நீங்களும், அக்காவும் காட்டில் சேகரித்து வந்து நமது குடிலில் வைத்து வளர்க்கும் தீ... அண்ணா! நீங்கள் ஏற்க விரும்பும் தீ. நடனமாடும் தீ. பரம புருஷன் என்று நம்பிக் கொண்டிருப்பவர்களையும் தன்னிடம் குளிர் காய வைக்கும் காட்டுத் தீ.”

இருவருக்கும் ஏதோ புரிவது போல இருந்தது. தான் பேசுவதற்கு அதுதான் சமயம் என்பதை புரிந்து கொண்ட வைசம்பயானன், தான் குடிலில் கண்ட காட்சியை வருணிக்க, அன்று காலையில் காட்டிற்குப் புறப்படும் போது பரமனின் பாராமுகம் தனது மனதை உறுத்தியது நினைவில் வர, அதற்கான காரணம் இதுவாக இருக்கக் கூடும் என்பதனை உணர்ந்தாள்

"சீ சீ! நீ தவறாக புரிந்து கொண்டிருப்பாய்! ஆம்ரா அப்படிப்பட்டவள் இல்லை. பரமனும் கட்டுப்பாடு உள்ளவன்!" - வல்லபன் கூறினாலும், மனதில் புயல் வீசத்தொடங்கி இருந்தது.

“இருக்கலாம்! ஆனால் தனிமை மனக்குரங்கை எப்படி வேண்டுமானாலும் தாவ வைக்கும் அல்லவா?" - வைசம்பாயனன் கூறினான்.

https://telegram.me/aedahamlibrary

“எனக்கு கண்பார்வை கொடுத்தவள்... அவளை நான் சந்தேகிப்பது நியாயம் ஆகாது!” - வல்லபன் கூறினான்.

“உங்களுக்கு கண்பார்வை கொடுத்து, நம் அக்காவை குருடாக்க முயலுகிறாள்!” - துவேஷத்துடன் வைசம்பாயனன் கூற, இருவரும் திகைத்துப் போய், ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

“என்ன செய்யலாம்... பத்ரா?” பதற்றத்துடன் அவளைப் பார்த்தான், வல்லபன்.

இமையோரம் திரண்டிருந்த நீரை, சேலை தலைப்பினால் துடைத்தபடி பதில் கூறாமல் நின்றாள், பத்ரா.

"அண்ணா! எப்படியும் கல்வியை முடித்து பரமன் அத்தியூரின் முக்கூடல் கடிகைக்குச் செல்கிறான். இப்போது எதற்கு பிரச்னையை உண்டாக்க வேண்டும்? ஆனால் அவர்கள் செய்த தவறை உணர்த்துவதுதான் முறையாகும். உடனடியாக அக்காவை பரமனுக்கு திருமணம் செய்து கொடுத்துவிட வேண்டும். நாளையே அவனது தாயையும், மாமனையும் வரவழைத்து அவர்களது திருமணத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள். அக்காவின் திருமணம் முடிந்தவுடன் நீங்களும், அந்த ஆம்ராவை திருமணம் செய்து கொண்டுவிடுங்கள். கட்டுப்பாடுகளை உருவாக்கிவிட்டால், மனம் பேதலிக்காது அல்லவா?” - வைசம்பாயனன் கூறினான்.

தாவி வந்து அவனை அணைத்துக்கொண்டாள், பத்ரா.

“நன்கு கூறினாய், தம்பி. இதைத் தவிர வேறு நல்ல வழி எதுவும் கிடையாது. அண்ணா! உடனே வைசம் பாயனனின் திட்டத்தை செயல்படுத்து. நடனமாது என்பதால் ஆம்ராவுக்கு கவர்ச்சி அதிகம். இதனால் ஆண்களின் மனது பேதலிக்கத்தான் செய்யும். என் மீதும் தவறு இருக்கிறது. சற்றே நான் அவரது மனதிற்கு இதமளிக்கும்படியாக நடந்திருக்க வேண்டும். திருமணத்திற்குப் பிறகு அங்ஙனமே இருப்பேன். உடனடியாக காரியத்தில் இறங்கு” என்றபடி சுள்ளிக் கட்டினை எடுத்து இடையில் வைத்தபடி, நடந்தாள்.

மூவரும், குடிலினுள் நுழைந்த போது, ஆம்ரா நடனமாடி முடித்திருக்க, அவளை பாராட்டியபடி தனது கரங்களைத் தட்டிக்கொண்டிருந்தான், பரமன்.

அன்றும் மறுநாளும் தந்தை, மகன், மற்றும் மகள் மூவரும் ரகசியமாக

https://telegram.me/aedahamlibrary

தங்களுக்குள் கிசுகிசுவென பேசிக்கொள்வதை ஆம்ராவும், பரமனும் பார்த்தனர்.

"பரமா! உனது கல்வி நிறைவுறும் தருணம் வந்துவிட்டது. நாளை உனது மாமனையும் தாயையும் அழைத்து வா!" - முகுந்தநாயகர் உத்தரவு இட்டதும், குழப்பத்துடன் அவரை நோக்கியவன், மறுநாள் காலை தாயுடனும், மாமனுடனும் வந்து நின்றான்.

“சுவாமி! உங்கள் மருமகனின் கல்வி நிறைவடைந்து விட்டது. மிகவும் புத்திமானாக விளங்குகிறான் பரமன். அவனை மாணவனாக அடைந்த நான் பாக்கியசாலி. அவன் என்னிடம் தலைசிறந்த மாணவனாக விளங்கிய காரணத்தால், அவனுக்கு நான் ஒரு பரிசினை அளிக்க விரும்புகிறேன். கல்வி தானம் செய்த நான் அவனுக்கு கன்யாதானத்தையும் செய்ய விழைகிறேன். எனது மகளை நாளையே அவனுக்கு மணமுடிக்க எண்ணுகிறேன். நாளை கடக லக்னத்தில் நாவாய் கிராம மக்களின் முன்னிலையில் கன்யாதானத்தை நிகழ்த்த விரும்புகிறேன். என்ன சொல்கிறீர்கள்?” -- முகுந்தர் கேட்க, பரமனின் மாமனும், தாயும் உச்சி குளிர்ந்து போயினர்.

“கரும்பு தின்ன கூலியா, சுவாமி?” என்ற பரமனின் மாமனும், தாயும் வேதபாடசாலையிலேயே தங்க வைக்கப்பட்டனர்.

'எனக்கு பத்ராவை பிடிக்கவில்லை. ஆம்ராவை மணந்து கொள்ள ஆசைப்படுகிறேன்' என்று நாக்கின் நுனி வரை வந்த சொற்களை, மிகவும் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டான், பரமன். தாயும், மாமனும் பத்ராவை அங்கீகரித்துவிட்டனர். இனி அவனால் ஒன்றும் செய்ய இயலாது. மீறிச் சொன்னாலும், குரு துரோகி, நன்றி கொன்றவன் என்கிற பெயர்தான் மிஞ்சும். மேலும் இவனைவிட பிராயங்கள் அதிகம் உள்ள ஆம்ராவை மணந்து கொள்வதற்கு தாய் அனுமதிக்க மாட்டாள்.

என்ன செய்வது என்று புரியாமல், ஆம்ராவின் பார்வையைத் தவிர்த்தான், பரமன்.

***

கிராமமே வாழ்த்த மறுநாள் கடக லக்னத்தில் பத்ரஷீலாவும், பரமபுருஷனும் தம்பதிகளாக மாறினார்கள். தலைவிதியே என்று பத்ராவின் பக்கமாக தனது காதல் பார்வையை வீசிக்கொண்டிருந்தாலும், இடையிடையே, பரமனின் கண்கள் ஆம்ராவை தேடின. அவளது கண்கள் அவனது சங்கடத்தை

https://telegram.me/aedahamlibrary

பொருட்படுத்தியதாகவே தெரியவில்லை. உனக்கு திருமணம் ஆனால் என்ன? நீ எனக்குரியவன் என்பது போன்ற பார்வையை அவன் பக்கமாக வீசிக்கொண்டிருந்தாள். பரமனை போன்ற சுந்தர புருஷனை இழப்பதற்கு அவள் என்ன பித்து பிடித்தவளா? அதற்காக அவன் மணம் செய்து கொண்டுவிட்டானே என்று கவலைதான் கொள்ளப் போகின்றாளா?

இவளிடம் பிரபஞ்சத்தையே கட்டிப்போட்டு வசியப்படுத்தும் வர்மக்கலை இருக்கும் போது, யார் தான் எங்கே நழுவிச் செல்ல முடியும்? முக்கூடல் சென்று புத்த பிக்கு அமரஜோதியை காண வேண்டும். இலங்கையில் உள்ள மகிந்திரா மற்றும் சங்கமித்தாவை பற்றி தகவல்கள் கேட்க வேண்டும். தேவ உடும்பர அத்திமரத்தை கண்டுபிடித்து புத்த கயைக்கு எடுத்துச் செல்ல வேண்டும். பல்லவ மன்னன் திருலோச்சனன் இறந்து அவனது மகன் உதயசாகரன் என்கிற இளந்திரையன் மன்னனாக பதவி ஏற்றுள்ளதால், இனி இவளை யாரும் இனம் கண்டு கொள்ளமாட்டார்கள். பரமபுருஷன் அத்தியூர் போகும் போது அவன் மனையாளாக நாமும் அத்தியூர் செல்ல வேண்டியதுதான். அடைக்கலத்திற்காக மட்டுமே ஏற்படுத்திக் கொண்ட இந்த முகுந்தநாயகரின் குடும்ப உறவுகள் இனி நமக்குத் தேவையில்லை என்கிற தீர்மானத்திற்கு அனேகமாக வந்துவிட்டாள், ஆம்ரா. மணமகன் என்பதால் இன்னும் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்த பரமனின் கம்பீரம் அவளைப் பாடுபடுத்த, தன்னையும் மறந்து, பத்ரஷீலாவை பொறாமையுடன் நோக்கிக் கொண்டிருந்தாள், ஆம்ரா. மவுரிய மன்னன் தசரதன் கெஞ்சியும் அவனை மணக்க மறுத்தவள், வீரம் செறிந்த பல வீரமான ஆண்கள் இவளை அணுகிய போதும் அவர்களை ஏற்காதவள், இந்த வேதிய வாலிபனை அடைந்திட ஏன் துடிக்க வேண்டும்? அவளை வர்மக்கலையை பிரயோகித்து அவன் பந்தனம் செய்ததாலா?|

"பரமனே! பந்தனம் செய்துதான் என்னை மயக்க வேண்டும் என்றில்லை. உன்னைக் கண்ட போதே நான் மயங்கிவிட்டேன். பந்தனத்தால்தான் நான் உன் மீது மையல் கொண்டுள்ளேன் என்கிற எண்ணத்தை கொள்ளாதே. பந்தனத்தை அவிழ்த்துவிடு. பிறகு எனது காதலை பார்!” என்று பரமன் தன்னிடம் மயங்கி இருந்த தருணத்தில் ஆம்ரா கூற, அவன் அவளது இடச்செவியில் தான் ஏற்படுத்தி இருந்த பந்தனத்தை நீக்கினான். அதன் பிறகு அவள் தன் மீது கொண்டிருந்த மோகம் இன்னும் அதிகரித்ததையும் கண்டான்.

நான் பாக்கியசாலிதான். ஆம்ரா போன்ற அற்புத அழகைக்

https://telegram.me/aedahamlibrary

கொண்டவளின் காதலைப் பெற எத்தகைய பேற்றினைப் பெற்றிருக்க வேண்டும்! என்று மலைத்துப் போனான். அப்படி நினைத்தவன்தான் இப்போது பத்ரஷீலாவைத் திருமணம் செய்து கொண்டிருந்தான்.

திருமணம் நடந்த அன்றே மனைவியுடன் ஊர்த் தலைவர் சந்திரசூடனையும் அவரது தம்பியும் தனது வர்மக்கலை ஆசானுமான அதிபீஷணனையும் சென்று நமஸ்கரித்தான், பரமன். தனது தாயைக் கொன்ற குடும்பத்தினரின் ஆசியை தனது தங்கை பெறக்கூடாது என்று வல்லபன் வாதித்தான். ஆனால், பரமன் பிடிவாதமாக தனது மனைவியும் தனது குருவை வணங்க வேண்டும் என்று கூறிவிட்டதால், வல்லபனால் ஒன்றும் செய்ய இயலவில்லை.

"நான் முக்கூடல் கடிகைக்குப் புறப்படலாம் என்று இருக்கிறேன்!" - பரமன் கூறியவுடன் அதிபீஷணனின் முகம் மலர்ந்தது.

“நல்லது! எனக்கு தேவையான தேவ உடும்பரம் கிடைத்ததும் தகவல் அனுப்பு. நான் புறப்பட்டு வருகிறேன். உலகத்தின் சக்கரவர்த்தியாக நான் திகழும் போது எனது மதியூக மந்திரியாக நீதான் இருப்பாய்!" அதிபீஷணன் உற்சாகத்துடன் கூறினான்.

"தங்கை பத்ரா அத்தியூர் செல்வதற்குள் தனக்கும், ஆம்ராவுக்கும் திருமணத்தை முடித்துவிடுங்கள்!" - தந்தையிடம் வல்லபன் கோரிக்கையை வைக்க, முகுந்தரும் ஆம்ராவை அழைத்து அவளது கருத்தினைக் கேட்டார்.

*போயும்... போயும் வல்லபனை மணப்பதா? - அந்த நினைப்பே அவளுள் அசூயையினை ஏற்படுத்தியது.

"எனக்கு ஆட்சேபம் இல்லை, சுவாமி. ஆனால், நான் புத்ததேவனின் தருமத்தை ஏற்றவள். உங்களது வேதாகம கடமைகளுக்கு நான் உபயோகப்பட மாட்டேன்!" - திருமணத்தை தவிர்ப்பதற்கு அந்த காரணமே போதும் என்றுதான் நினைத்தாள்.

"அதனால் பரவாயில்லை, ஆம்ரா! நீ தந்தையையும், என்னையும் கவனித்துக் கொண்டால் போதும். மற்ற கடமைகளை நான் பார்த்துக் கொள்கிறேன்!" - விடாப்பிடியாகக் கூறினான், வல்லபன்.

எவ்வளவு பேராசை இந்த வல்லபனுக்கு. மன்னன் தசரதனையே உதாசீனம் செய்த இவள், இந்த ஓலைக் குடிலில் இவனது அடிமையாக ஏவல் புரிந்து கொண்டிருப்பாளா என்ன?

https://telegram.me/aedahamlibrary

பரமனின் மனதில் என்ன இருக்கிறது என்று தெரியாமல் இவளால் ஒரு முடிவையும் எடுக்க முடியாது. அவனுடன் பேசுவதற்கே சந்தர்ப்பம் கிட்டவில்லையே. ஒருபுறம் வல்லபனும், பத்ரஷீலாவும் இவளை தனித்தே விடமாட்டேன் என்கிறார்கள். மறுபுறம், பரமன் தனது தாய் மற்றும் மாமனுடனேயே திரிகிறான்? பரமனுடன் எப்படிப் பேசுவது?

அதற்குரிய சந்தர்ப்பம் தானாகவே கனிந்தது. நாவாய் முகுந்தன் ஆலயத்தில் ஏதோ ஹோமம் நடக்க, வழக்கம் போல் குடும்பத்தினர் அனைவரும் ஆலயத்திற்குச் சென்றிருந்தனர். முகுந்தரின் மாணவர்களும் ஆலயத்திற்குச் சென்றிருக்க, குடிலினில் தனியாக இருந்தாள் ஆம்ரா.

இயற்கை உபாதையை கழித்துவிட்டு வருவதாகக் கூறி ஆலயத்தைவிட்டு நீங்கிய பரமன், ஆம்ராவைத் தேடி பரபரப்புடன் வந்தான்.

"என்னை மன்னித்துவிடு ஆம்ரா! உன்னை என்னால் மறக்க முடியவில்லை. தாயின் பிடிவாதத்தினாலும், குருவின் கட்டளையாலும்தான் நான் பத்ராவை மணந்து கொண்டேன்." குற்ற உணர்வுடன் கூறினான், பரமன்.

"இப்போது என்ன குடியா மூழ்கிவிட்டது. நீ பத்ராவை திருமணம் செய்து கொண்டால் என்ன? நான் உனக்கு, நீ எனக்கு என்று ஆகிவிட்ட பிறகு, மற்றவர்களைப் பற்றி ஏன் கவலைப்படுகிறாய்? நான் எந்த பந்தமும் இல்லாமல் இருக்கிறேன். எனவே, யாராலும் என்னைக் கட்டுப்படுத்த முடியாது. சூழ்நிலைக்கும் நான் அடிமையாக மாட்டேன். நீ பந்தங்களை ஏற்படுத்திக் கொள்கிறாய். அது உனது வெற்றிகளை பாதிக்கும். எல்லா பந்தங்களையும் அறுத்தெறிந்துவிட்டு, என்னுடன் வருகிறாயா. நான் அத்தியூருக்குப் புறப்படப் போகிறேன். நீ எனது நாதனாக வா. நாம் இருவரும் மகிழ்ச்சியாக வாழ்வோம். அந்த மகிழ்ச்சி உனக்கு நிலைக்க வேண்டும் என்றால், எல்லா பந்தங்களையும் அறுத்தெறிந்தால்தான் அதனை அனுபவிக்க முடியும். என்ன சொல்கிறாய்?"

ஆம்ராவின் பேரழகும், பேச்சும், பரமனை உருக்கின. இவள் அருகே இருந்தால் மட்டும் போதும். வேறு எதுவுமே வேண்டாம். தேவ உடும்பரத்தைக் கண்டு எடுத்து உலகின் சக்கரவர்த்தியாக எல்லா போகங்களையும் அனுபவிக்க வேண்டும். பக்கலில் இந்த ஆம்ரா இவனது சக்கரவர்த்தினியாக இருந்தால் அதுவே போதும். அதைவிட

https://telegram.me/aedahamlibrary

மகிழ்ச்சி இவனுக்கு கிடைக்குமா. குரு, தாய், மனைவி, மாமன், என்கிற பந்தங்களில் இருந்து விடுபட்டால்தான் இந்த தேவானுபவங்கள் கிட்டும் என்றால், அவன் அனைத்தையும் துறக்கத் தயார். –

"ஆம்ரா, எனக்கு நீ கிடைத்தால் போதும். எல்லா பந்தங்களையும் நான் இழக்கத் தயாராக உள்ளேன்!”

பரமன் கூறியதும்தான் தாமதம்.

அவனை நெருங்கி அவனது தோள்களில் தனது கரங்களை மாலையாகக் கோர்த்தாள், ஆம்ரபாலி.

"அப்படியென்றால் நான் கூறியபடி செய். அத்தியூருக்குப் புறப்படுவதற்கு தயாராக இரு! வரும் வெள்ளிக்கிழமை நாம் இருவரும் அத்தியூருக்குப் பயணமாகிறோம்.” - ஆம்ரா கூறினாள்.

"அனைவரையும் எப்படி சமாளிப்பது, குறிப்பாக வல்லபனையும், பத்ராவையும்?”

“வர்மக்கலை அறிந்த நீயா இப்படிக் கேட்பது? என்னை மயக்க எனது காது மடலை பந்தனம் செய்தவன், மனைவியை எப்படி சமாளிப்பது என்று கேட்கிறாயே? எல்லாவற்றையும் நான் கவனித்துக் கொள்கிறேன். நான் போடும் திட்டத்தினை மட்டும் என்ன ஏது என்று கேட்காமல், அப்படியே அடிபணிந்து நட!” - ஆம்ரா கூறினாள்.

தலையசைத்தான், பரமன். வழக்கமாக காதலன் கூறுவதை கேட்டு காதலிதான் அடிபணிந்து நடப்பாள். ஆனால் இங்கே காதலிதானே பிராயங்களில் மூத்தவள். அவள் கட்டளைப்படிதானே ஒரு இளங்குமரன் நடந்து கொள்ள முடியும்? மீண்டும் பரமன் ஆலயத்தை அடைவதற்குள் ஒரு பயங்கரமான திட்டத்தைத் தீட்டிவிட்டாள், ஆம்ரா.

*****

https://telegram.me/aedahamlibrary

# 18. மாப்பிள்ளை... மாயப் பிள்ளை

நறுங்குழல் நாய்ச்சியின் கல்லறை.

இரும்பிடர்த்தலையார் தனது இரு மகள்கள், நறுமலராள் என்கிற சுகந்தவல்லி மற்றும் செந்தாமரை என்கிற செங்கமலத்தோடும் நின்றிருந்தார். மூத்தவளை கரிகாலனுக்கும், இளையவளை இளந்திரையனுக்கும் மணமுடிக்க நிச்சயித்திருந்தார்.

சோழ மக்கள் கரிகாலனின் திருமண வைபவத்தைக் கண்டு களித்த பின்னர் அனைவரும் அத்தி நகரம் என்கிற காஞ்சிக்கு புறப்பட வேண்டும். தனது திருமணம் அத்தியூரானின் சந்நிதியில்தான் நடைபெற வேண்டும் என்று கூறிவிட்டான், இளந்திரையன். இரு திருமணங்களையும் புகார் நகரிலேயே நடத்த வேண்டும் என்றுதான் திட்டமிட்டிருந்தார், இரும்பிடர்த்தலையார். ஆனால் தம்பியின் விருப்பத்தை அறிந்த பிறகு, கரிகாலன் மாமனிடம் உறுதியுடன் கூறிவிட்டான்.

தம்பிக்கும், செங்கமலத்திற்கும் அத்திமலைத் தேவன் சன்னிதியிலேயே திருமணம் நடக்கட்டும். எனக்கும் அத்திமலையானை தரிசிக்க ஒரு வாய்ப்பு! என்று கூறியிருந்தான். நாய்ச்சியின் கல்லறையில் பூசனைகளைச் செய்துவிட்டு, அனைவரும் காவிரியை நோக்கிச் சென்றனர்.

கரிகாலனுக்கு திருமணம் என்கிற காரணத்தினாலோ என்னவோ, வழக்கமாக அமைதியாக எவ்வித ஆர்ப்பாட்டமுமின்றி பெருகியோடும் காவிரி, அன்று சற்று விரைவாகவும், ஆர்ப்பாட்டத்துடனும் ஓடிக் கொண்டிருந்தாள். அனைவரும் காவிரியில் நீராடிவிட்டு, அரண்மனைக்குத் திரும்ப, கரிகாலனின் திருமணச் சடங்குகள் துவங்கியது.

மாமன் இரும்பிடாரின் மகள் நறுமலராளை கரம் பற்றினான் கரிகாலன்.

கல்லணை கட்டிய கரிகாலனின் கல்லைப் போன்ற உறுதிமிக்க கரங்களால் அணைக்கப்படப் போகிறோம் என்கிற பேருவகையும் நாணமும் முகத்தில் கொப்பளிக்க, நறுமலராள் தலைகுனிந்து கரிகாலனின் மாலையை ஏற்றாள்.

"கரிகாலன் கட்டிய கல்லணை சோழ மண்டலத்தை வளமாக்குவது போன்று, அவன் அணைத்த நீயும், கருணை, ஈகை, இரக்கம், தாராள

https://telegram.me/aedahamlibrary

மனப்பான்மையுடன், நாட்டையும், அவனது குடும்பத்தையும், அவனையும் கவனித்துக் கொள்ள வேண்டும்!” - இரும்பிடர்த்தலையார் மகளுக்கு ஆசி கூறினார்.

"கவலை வேண்டாம் தந்தையே! அந்த கல்லணையைக் காட்டிலும் இந்த மலரணை இன்னும் உறுதியாக இருக்கும்!” - நறுமலராள் கூறினாள்.

"அதுதான் என் கவலை. மலரணை தலையணை மந்திரம் ஓதி கல்லணையாக உள்ள எனது தமையனை வெறும் பஞ்சணையாக மாற்றிவிடப் போகிறது?” இளந்திரையன் கேலி செய்தான்.

"யாம் பெற்ற இன்பம் நீயும் பெருக. உனது பிரம்மச்சரிய திமிரும் இன்னும் சிறிது நாழிகைதான். நீயும் செங்கமலத்திடம் சிக்கி படாதபாடு படப் போகிறாய்! சகோதரிகள் இருவரில் சற்றே அடக்கமானவளை நான் தேர்ந்து எடுத்துக் கொண்டேன். தொண்டை கிழிய பேசுபவள் தொண்டை நாட்டிற்கு ஏற்றவள்! வருங்கால பல்லவ அரசி வாயின் மீது பற்களை போட்டு பேசுபவள் என்பதால்தான் மாமன் அவளை பல்லவ நாட்டிற்கு அனுப்புகிறார்!” - கரிகாலன் கூற, அனைவரும் சிரித்தனர்...

"அத்தியூர் வேந்தன் எனது அத்தை மகன் வேண்டுமானால் எனக்கு அடங்கிப் போகலாம். ஆனால் ஊர் அத்தியூர் ஆயிற்றே. எனக்கு மாமனார் ஒருவர் அத்திமலையின் மீது நின்று உலகத்தையே அடக்கியாண்டு கொண்டிருக்கிறாரே. என்னால் அங்கே சென்று என்ன செய்ய இயலும்?” - செங்கமலம் சிணுங்கினாள்.

கரிகாலன் - நறுமலராள் திருமணம் இனிதே முடிந்தது. புதுமண தம்பதிகளும், மற்றவர்களும், காஞ்சிக்குப் புறப்பட்டனர். போகும் வழியில் சோழர்களின் குலக்கடவுளான தலைசங்கத்தில் உள்ள நாண்மதிய பெருமாளையும் [1] சங்கேஸ்வர ஆலயத்தையும் தரிசித்துவிட்டு போகலாம் என்று இரும்பிடர் கூற, அனைவரும் நாண்மதிய பெருமாள் ஆலயத்திற்குச் சென்றனர்.

அனைவரும் மெய்யுருகி நாண்மதிய பெருமாளை தரிசித்துவிட்டு வெளியே வந்து கொண்டிருந்த போது, கூடியிருந்த பொதுமக்கள் திருமண தம்பதிகளின் மீது மலர் சொரிந்தனர்.

அப்போது –

கரிகாலனின் மீது ஒரு சிறு கல் ஒன்று மலர்குவியலின் ஊடே வந்து அவனது மார்பைத் தாக்க, திடுக்கிட்டுச் சுற்றிலும் பார்த்தான்,

https://telegram.me/aedahamlibrary

கரிகாலன். உயரமான கரிகாலனால், தன்னைச் சுற்றி குழுமியிருந்த மக்கள் கூட்டத்தைக் கடந்து அப்பால் கவனிக்க முடிந்தது. ஆலயத்தின் எதிரே ஒரு உயரமான மேடையில் நின்றிருந்தாள் ஒரு பெண்... பொன்னுருகு!

இவனது தந்தை இளங்கிள்ளியை இருங்கோவேளுடன் சேர்ந்து கொலை செய்த இவனது சிற்றப்பன் ஆத்திவளவனுடைய மகள். அவளா என் மீது சிறுகல்லை வீசியது?

கரிகாலன் தன்னைக் கவனிப்பதை உணர்ந்ததும், அவள் தனது இரு கரங்களைக் கூப்பி, அவனைத் தன்னருகே வருமாறு சமிக்ஞை செய்வதைக் கண்டு கரிகாலன் திகைத்தான். குயவன் வேடத்தில் மாவிலக்கை துறைமுகத்திற்கு இவன் சென்ற போது, தனது கணவன் பரமேஸ்வரனுடன் அவள் சென்றது இவன் நினைவுக்கு வந்தது. இவள் எதற்கு இவனை அழைக்கிறாள்? இவனுக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்தே பொன்னுருகுவுடன் பேசியதில்லை. அதோ போகும் பெண்தான் உனது தங்கை என்று இவனது தாய், நறுங்குழல் நாய்ச்சிதான் அடையாளம் காட்டினாள். உறவு இல்லாமல் பகை மட்டுமே அவர்களது குடும்பங்களின் இடையே நிலவும் போது, அவளுடன் என்ன பேச முடியும்? தனது திருமணத்திற்கு தந்தை. வழி உறவென்று பொன்னுருகுவையும் அவளது கணவனையும் அழைக்க மனதினுள் ஆசைதான். ஆனால் இவனது தந்தையை கொன்ற சிற்றப்பன் அத்திவளவனை இவன் மன்னித்தாலும், சோழ மக்கள் மன்னிக்கத் தயாரில்லை. இவனது சிற்றப்பாவின் மருமகன் பரமேஸ்வரன் இப்போது பகையைத் தொடரும் போது, அவர்களை திருமணத்திற்கு அழைத்தால் மக்கள் கோபம் கொள்வார்கள். இளந்திரையனின் திருமணத்திற்கு நிச்சயம் பொன்னுருகு வருவாள் என்று இவன் நினைத்துக்கொண்டிருந்த போது, அவளே திருமணம் முடிந்து இவன் தரிசிக்க வந்த நாண்மதிய ஆலயத்தின் வாயிலில் நின்று இவனை அழைக்கிறாளே!

“சற்றே பொறுங்கள்! நான் இதோ வந்துவிடுகிறேன்!”

தான் மணமகன் என்பதையும் பொருட்படுத்தாமல், அங்கிருந்து பொன்னுருகு நின்ற பகுதியை நோக்கி நடந்தான் கரிகாலன்.

அவன் தன்னை நோக்கி வருவதைக் கண்டதும், பொன்னுருகு அடர்ந்த புரச மரக்காட்டினுள் நுழைந்தாள். அவள் அங்கிருந்து நழுவி புரச மரக்காட்டினுள் நுழைவதைக் கண்டு சற்றே யோசித்தான் கரிகாலன்.

https://telegram.me/aedahamlibrary

இவனது தந்தையைப் போலவே இவனையும் கொல்வதற்கு சதி தீட்டப்படுகிறதோ? மணமகன் என்பதால் இவனது உடைவாளையும், குத்துவாளையும் இரதத்திலேயே வைத்திருந்தான். ஆலய தரிசனத்திற்கு தானே போகிறோம் என்பதனால் அவற்றை அவன் எடுத்துக்கொண்டு வந்திருக்கவில்லை. அவன் அவ்வாறு வாள் ஏந்தாமல் ஆலயத்திற்குள் செல்வான் என்பதால் அவனை ஆலய வாசலிலேயே மடக்கி சதியை அரங்கேற்றுகின்றனரோ? இருந்தாலும், கரிகாலனின் நெஞ்சுரம் எதையும் சந்திப்போம் என்று அவனது கால்களிடம் உரைக்க, சிறிதும் அச்சம் இன்றி புரச மரக்காட்டினுள் நுழைந்தான் கரிகாலன்.

அவன் அங்ஙனம் காட்டிற்குள் நுழைவதைக் கவனித்த திருமண பரிவாரத்தினர், அவன் இயற்கை கடனை கழிக்கச் செல்வதாகவே நினைத்தனர்.

கரிகாலன் திரும்பி வருவதற்காகக் காத்திருந்தனர். ஆனால் அவன் திரும்பி வரவேயில்லை. அனைவரின் முகத்திலும் பரபரப்பும் கவலையும் குடிகொள்ள, இரும்பிடர் தனது வாளை எடுத்துக்கொண்டு வீரர்களுடன் புரச மரக்காட்டினுள் நுழைந்தார். கரிகாலனை சல்லடை போட்டுத் தேடியும், அவன் போன இடம் தெரியவில்லை.

கவலையும், பதற்றமும் முகத்தில் பரவியிருக்க, மணமகளான தனது மகள் நறுமலராளின் முகத்தைக் காணக் கூட திராணி இல்லாமல் வந்தார்.

“நாம் எல்லோரும் காஞ்சி செல்வோம். இளந்திரையனின் திருமணத்திற்குள் கரிகாலன் வந்துவிடுவான்!” என்று சுரத்தில்லாமல் கூற, அனைவருக்கும் ஏதோ விபரீதம் நிகழ்ந்து கொண்டிருப்பதாகப் பட்டது. மணம் முடித்த அன்றே எங்கே மறைந்து போனார், தனது கணவர் என்கிற மனக்கலக்கத்தோடு தனியாக காஞ்சிக்கு பயணித்துக் கொண்டிருந்தாள், நறுமலராள்.

[1] எனது சங்கத்தாரா நாவலில் தலைசங்க நாண்மதியத்தை பற்றி குறிப்பிட்டிருக்கிறேன். இங்குதான் சோழர்கள் மகுடாபிஷேகம் செய்வதற்காக உபயோகித்த வலம்புரி சங்கை பத்திரப்படுத்தி வைத்திருந்தார்கள். முக்கண் புரச இலை, பிரம்ம தண்டம் என்கிற புரச தண்டு ஆகியவற்றை சங்கேஸ்வரர் ஆலயத்தில் வைத்திருந்தனர்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 19. பாரத புழா! பாதக விழா!

"முதியவர் ஒருவர் இங்கே இருக்கிறார். புதுமணத் தம்பதிகள் உறவாட வெட்கப்படுகிறார்கள். உங்கள் தந்தையார் பரமபுருஷரின் குரு வேறு! குருவின் மகளை நிமிர்ந்து நோக்குவதற்கே சங்கோஜப்படுகிறார். அவர்களுக்கு சற்றே தனிமை தேவை. நாம் நால்வரும் ஏன் முதன் முதலாக நாம் சந்தித்த அந்த பாரத புழா அருவியின் அருகே சென்று பொழுதைக் கழிக்கக் கூடாது?"

மிக தந்திரமாக வல்லபனுக்கு வலைவிரித்தாள், ஆம்ரா.

"பரமனும், பத்ராவும் புதுமணத் தம்பதிகள். அவர்களுக்கு ஏகாந்தம் இனிக்கும். நாம் அங்கே சென்று தனிமையில் என்ன செய்வது?" ஆம்ரா கூறியது வல்லபனின் மனதில் ஆர்வத்தைத் தூண்டிவிட்டது. தனிமையில் அவளைத் தனது வசப்படுத்தி தங்கள் திருமணத்திற்கு அவளை சம்மதிக்க வைத்துவிட வேண்டும் என்கிற தீர்மானம் உதித்தது. இருப்பினும், அவளது உள்ளக்கிடக்கையை அறிய வேண்டும் என்பதற்காக இவ்வாறு கேட்டான்.

பொங்கி வந்த எரிச்சலையும், சினத்தையும் அடக்கிக் கொண்டாள், ஆம்ரா, கோபம் காரியத்தைக் கெடுக்கும் அல்லவா?

"அன்பு வல்லபரே! யாகம் செய்து தேவர்களையும், தெய்வங்களையும் வசப்படுத்தி வரம் கொடுக்க வைக்கும் அந்தணராகிய தாங்கள், ஒரு பெண்ணின் மனதை வசப்படுத்தி அவளது மனதை பெறுவது பெரிய காரியமா என்ன? என்னை மணக்க விரும்புகிறீர்கள் என்று தங்கள் மனதை வெளிப்படுத்திவிட்டு, உங்கள் தந்தையையே சுற்றி வருகிறீர்கள். என்னுடன் என்றாவது உங்கள் காதல் மனதை வெளிக்காட்டி, காதலுக்கு உரிய வேள்வியை செய்திருக்கிறீர்களா? ஒரு யாகம் துவக்குவதற்கு முன்பாக சங்கல்பம் செய்கிறீர்கள். ஆனால் இதுவரை என் மீது கொண்டுள்ள காதலுக்கு சங்கல்பம் செய்துள்ளீர்களா? என்னை மணக்க விரும்புகிறேன்... என்று வாய் ஓயாமல் கூறி வரும் நீங்கள், திருமணத்திற்கு முன்பாக ஒரு பெண் எதிர்பார்க்கும் பூர்வாங்க இன்பங்களைப் பற்றி ஏன் சிந்திக்கமாட்டேன் என்கிறீர்கள். திருமணத்திற்கு முன்பாக கூடலும் ஊடலும் கொண்டால்தான் உறவு பலப்படும், புரிந்ததா? இப்போது நாம் காட்டிற்குச் செல்லலாம் என்று நான் கூறியது, புதுமணத் தம்பதிகளின் தனிமைக்காக மட்டும் அல்ல. நமக்காகவும்தான். சற்றே சல்லாபித்து

https://telegram.me/aedahamlibrary

நமது எதிர்கால உறவை பலப்படுத்துவதற்காகவும்தான் நாம் அருவிக்கு போகலாம் என்று கூறுகிறேன்.” வாய் என்னும் மேடையில் சொற்களை நர்த்தனமாடச் செய்தாள், ஆம்ரா.

பஞ்சாமிர்தத்தினால் அபிஷேகம் செய்யப்பட்டவனைப் போன்று, காணப்பட்டான் வல்லபன். தனக்கு ஆம்ரா விரிக்கும் மாயவலை என்பதை சற்றே யோசித்திருந்தால் அவன் புரிந்து கொண்டிருக்கலாம். ஆனால் காதல் வலை என்பது சிந்தையில் சுழலும் சமயோசித சக்கரத்தின் சுழற்சியைத்தான் முதலில் நிறுத்தும். ஆம்ரா தன் மீது இச்சை கொண்டிருக்கிறாள் என்பதாக நினைத்து, அருவியில் தனிமையில் தான் அவளை எப்படி கையாள வேண்டும் என்கிற கற்பனையில் இறங்கினான்.

ஆம்ரா கற்றுக் கொடுத்த பாடத்தை புது மனைவி பத்ராவிடம் ஒப்புவித்தான், பரமபுருஷன்.

"கண்ணே! உனது தந்தையாரின் எதிரே உன்னை நெருங்குவதற்கே தயக்கமாக இருக்கிறது. நான் உன்னை நோக்கும் போதெல்லாம் குருவின் மகள் என்கிற எண்ணம்தான் தோன்றுகிறது. நாம் ரகசியமாக எங்கேயாவது சென்று, சூழ்நிலையை மறந்து இருப்போம்!” என்று சொல்ல, அவனது அன்பில் திக்குமுக்காடிப் போனாள். தனது சுந்தர புருஷன் தன்னை தனிமையில் சல்லாபிக்க அழைக்கிறான் என்று தெரிந்ததும், உடனே புறப்படுவதற்கு தயாரானாள்.

“அப்பா! இன்று சுள்ளி சேகரிக்க, நாங்கள் நால்வருமே செல்கிறோம்!”

வல்லபன் கூறியதும் முகுந்தர் தலையசைத்தார். அவரும் இளமையைக் கடந்து வந்தவர்தானே. இளங்குருத்துகள் தனிமையை நாடுகின்றன என்பதை உணர்ந்ததும், தலையசைத்து அனுமதி கொடுத்தார்.

இணைந்த மனங்கள் உறவாடட்டும். உறவாட நினைக்கும் மனங்கள் இணையட்டும் என்று மனதிற்குள் அவர்களை வாழ்த்தினார், முகுந்தர்.

ஆஸ்ரமத்தின் காலைப் பணிகளை கவனித்துவிட்டு, மாணவர்களுக்கு உணவளித்துவிட்டு, முந்திரிப்பூ மலைக் காட்டின் பாரத புழா அருவியை நோக்கி நடந்தனர், நால்வரும். அவர்கள் போவதை திண்ணையில் அமர்ந்தபடி முகுந்தநாயகர் பூரிப்புடன் பார்த்துக் கொண்டிருக்க, இன்னும் ஒரு இணை கண்கள் அவர்கள் போவதை சந்தேகத்துடன் நோக்கிக் கொண்டிருந்தன. அக்கண்களுக்கு உரியவன் வைசம்பாயனன்.

https://telegram.me/aedahamlibrary

நால்வரும் மௌனமாகவே பயணித்தனர். ஆம்ரா மற்றும் வல்லபனின் எதிரே தனது கணவன் பேசுவதற்கு சங்கோஜப்படுகிறான் என்கிற நினைப்பில் பத்ரா மௌனமாகவே தனது கணவனைப் பின்தொடர்ந்தாள்.

புதுமணத் தம்பதிகள் எதிரே பேசினால் தனது காதல் மனது வெளிப்பட்டுவிடும் என்கிற கவலையில் ஆம்ரா பேசாமல் வருவதாக எண்ணிய வல்லபனும், ஆவலுடன் பேச்சு வளர்க்காமல், மௌனமாகவே வந்தான்.

அண்ணன் தங்கையின் மௌனம், ஆம்ராவுக்கும், பரமனுக்கும் மிகவும் வசதியாக இருந்தது. வல்லபன் முதலிலும், அவனை தொடர்ந்து பரமனும், அவனைத் தொடர்ந்து பத்ரஷீலாவும், இறுதியாக ஆம்ராவும் நடக்க, தனது முன்னால் சென்று கொண்டிருந்த மற்ற மூவரின் தலைவிதியை நிர்ணயித்தபடி அவர்களைத் தொடர்ந்து கொண்டிருந்தாள்.

முந்திரிப்பூ மலைக்காட்டில் பாரத புழா அருவி விழும் ஒலி தொலைவில் வரும் போதே கேட்டது. தனது நாட்டிய நாடகத்தை துவக்குவதற்கு அதுவே தருணம் என்பதை உணர்ந்து கொண்டாள், ஆம்ரா.

"வல்லபரே! உங்களது அன்பான குடும்பத்தில் என்னை நீங்கள் இணைத்துக் கொண்டதற்கு காரணமான பாரத புழா அருவியின் ஒலி கேட்கிறது. ஆம்ரா! உன்னை நல்ல குடும்பத்தில் சேர்த்துவிட்டேன் பார்த்தாயா என்று கேட்பது போல உள்ளது?” - ஆம்ரா போலியாகச் சிரித்தபடி கூறினாள்.

“எனக்கு அருவியோசை வேறுவிதமாக தோன்றுகிறது. இவ்வளவு நல்ல மனிதர்களைவிட்டு, எதற்காக அத்தியூர் செல்கிறாய்? நாவாய் கிராமத்திலேயே இருந்துவிடேன்!” என்று கூறுவது போல உள்ளது! பரமபுருஷன் திரும்பி நின்று ஆம்ராவை அர்த்தத்துடன் நோக்கினான்.

அவன் அவ்வாறு நோக்க, சொக்கிப் போனாள், ஆம்ரா. எவ்வளவு கம்பீரமாக இருக்கிறான்? நிற்பது, அமர்வது, நடப்பது எதையும் கவர்ச்சியோடு செய்கிறான். கணீர் என்கிற அவனது குரல் ஆம்ராவினுள் சிலிர்ப்பினை ஏற்படுத்தியது. இவள் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களையும், மாவீரர்களையும் இதற்கு முன்பாக சந்தித்திருக்கிறாள். உறவாடியும் இருக்கிறாள். ஆனால் தேகத்தைக் கடந்து எவனும் இவளது மனதினுள் நுழைந்தவன் இல்லை. காதல் என்பதே தேகரீதியாக மட்டுமே ஏற்படும் உணர்வு என்றே

https://telegram.me/aedahamlibrary

நினைத்திருந்தவளின் மனதை மீட்டிவிட்டிருந்தான், பரமன். அவனை எப்போதும் தன்னுடனேயே வைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்கிற துடிப்பு அவளுள் அதிகரித்துக் கொண்டே இருந்தது.

பரமனை எட்டிப்பிடிக்க ஆம்ராவுக்கு இரண்டு தடைகள் மட்டுமே இருந்தன. ஒன்று வல்லபன். மற்றொன்று பத்ரஷீலா. அந்த இருதடைகளையும் ஒன்றாகவே நீக்கிவிட்டு, பரமனை அடைவோம் என்கிற தீர்மானத்தில்தான் நால்வரையும் அருவிக் கரைக்கு அழைத்து வந்திருந்தாள். இதோ! பாரத புழா அருவி கண்ணில் தெரிகிறது. தனது திட்டத்தை அரங்கேற்றும் மேடை அதுதானே என்று மனதினுள் நினைத்தபடி அண்ணாந்து நோக்கினாள் ஆம்ரா. எங்கோ உயரத்தில் இருந்து நிலத்தை நோக்கி வேகமாகப் பாய்ந்து கொண்டிருந்தது, அருவிநீர்.

“பத்ரா! நான் உனது அண்ணனை சந்தித்த இடம். அவர் கண் பார்வையற்றவர் என்பதை உணராமல் கோபத்துடன் ஆற்றில் நீந்தி நான் வந்த போது, அதோ அந்த பாறையில்தானே அமர்ந்திருந்தார்!” - மனதில் மலர்ந்த நினைவுகளை சிலாகித்துக் கூறுபவளைப் போன்று இல்லாத பரவசத்தை வெளிக்காட்ட, அவளை காதலுடன் நோக்கினான் வல்லபன்.

"நீ என்னை சந்தித்த இடம் உனக்குப் பெரிதாகத் தெரிகிறது. எனக்கு கண்பார்வையை அளித்த தேவதையை நான் சந்தித்த மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இடமாக இந்த இடம் தெரிகிறது!” - நெகிழ்ச்சியுடன் கூறினான், வல்லபன்.

“ஆம்ரா உனக்கு கண்பார்வையை அளித்து, உனது உயிரை திரும்பிப் பெறப்போகும் இடம் என்று கூட சொல்லலாம்!” கேலியாக கூறினான், பரமன்.

பத்ரஷீலா சற்றே திகைப்புடன் தனது கணவனை நோக்க, உடனே ஆம்ரா பதில் கூறினாள்

"ஆம் பரமபுருஷரே! வல்லபரின் உயிர் எனக்கே சொந்தம். அவரை எனது கலையைக் கொண்டு எனது வாழ்க்கையோடு பிணைத்துக் கொள்ளப் போகிறேன்!” - ஆம்ரா இருபொருள்பட பேசினாள்.

தங்களது வர்மக்கலையைக் கொண்டு இருவரின் கதையை முடிக்கப் போகும் திட்டத்துடன் தான் ஆம்ராவும், பரமனும் அருவிக்கு வந்திருந்தனர். அதைத்தான் ஆம்ரா குறிப்பிடுகிறாள் என்பதனை பரமன்

https://telegram.me/aedahamlibrary

புரிந்து கொண்டாலும், அண்ணனும் தங்கையும் ஆம்ராவின் கூற்றை வேறுவிதமாக புரிந்து கொண்டனர். தனது நாட்டியக் கலையினால் வல்லபனின் மனதைக் கொள்ளை கொண்டுவிட்டதை அவள் குறிப்பிடுவதாக நினைத்து மகிழ்ச்சியுடன் ஒருவரையொருவர் நோக்கியபடி சிரித்துக் கொண்டிருந்தனர். மரணத்தை தழுவுவதற்கு முன்பாக எவ்வளவு சிரிக்க வேண்டுமோ, அவ்வளவு சிரித்துக் கொள்ளட்டும் என்பது போல அமைதியாக இருந்த ஆம்ரா, பிறகு தங்களது திட்டம் நிறைவேறும் காலம் வந்துவிட்டது என்பது போலப் பரமனைப் பார்த்தாள்.

“எனக்கு அந்த அருவி துவங்கும் இடத்தை காண வேண்டும் போல உள்ளது. அங்கே ஒருமுறை நீராட வேண்டும். எனது மேனியை தழுவிய நீர் அருவியாக விழுந்து ஆறாகப் பாய வேண்டும்!” கனவுடன் கூறினாள், ஆம்ரா.

பத்ரஷீலா திடுக்கிட்டாள்.

“தவறு அக்கா! நாவாய் கிராமத்தின் உயிர் நாடி பாரத புழா நதி. பாண்டவர்கள் தங்கிய இடம் இது. இது புனிதமான நீர். இதன் நீரைத்தான் நாவாய் முகுந்தன் ஆலய பூசனைகளுக்கு உபயோகப்படுத்துகின்றனர். மேலும்... செங்குத்தான இந்த மலையின் மீது செல்வது ஆபத்து!” பத்ரா கூறினாள்.

“ஆமாம் ஆம்ரா! பத்ரா சொல்வது சரிதான்!” - வல்லபன் கூறினான்.

"ஆபத்தா? அதை எதிர்நோக்குவதுதான் மனிதர்களுக்கு அழகு. நான் ஆபத்தை ரசிக்கத் தயார். நீ தயாரா, என் பிரியமான பரமனே?” - ஆம்ரா கேட்டாள்.

“உன்னுடன் சேர்ந்து ஆபத்தை ரசிக்க நானும் தயார், காதல் கட்டிக் கரும்பே! அதற்குத்தானே நானும் நீ அழைத்தவுடன் வந்திருக்கிறேன்!” பரமன் பாய்ந்து சென்று ஆம்ராவை அணைத்துக் கொண்டு தனது மார்பில் சாய்த்துக் கொள்ள, பதைபதைத்துப் போனார்கள், வல்லபனும், பத்ரஷீலாவும்.

“இங்கே என்ன நடக்கிறது?” ஆவேசத்துடன் பாய்ந்து பரமனின் தோளினில் கையை வைத்து அவனை தன் பக்கமாக இழுக்க, பரமன் ஆம்ராவின் பிடியில் இருந்து நழுவி வல்லபனின் பரந்து விரிந்த மார்பில் வந்து மோதினான்.

https://telegram.me/aedahamlibrary

“நடக்க வேண்டியவை நடக்கும். மற்றவை எல்லாம் நடக்காமல் விழும்!” கலகலவென்று ஆம்ரா நகைத்தவுடன்தான், ஆம்ராவும், பரமனும் இன்னும் தங்கள் காதல் கள்ளத்தனத்தை கைவிடவில்லை என்பது புரிந்தது. தானும் அண்ணனும் அவர்களது சதித்திட்டத்திற்கு பலியாகிவிட்டோம் என்பதை புரிந்து கொண்டு, அச்சத்துடன் ஓடி வந்து வல்லபனின் கையை பற்றினாள்.

“அண்ணா! எனக்கு பயமாக இருக்கிறது!” என்று பத்ரா கண்களில் நீருடன் கூறினாள்.

“கவலைப்படாதே பத்ரா! நான் இருக்கிறேன்!” என்றவன் ஆம்ராவை நோக்கினான்.

“ஆம்ரா! உனக்கு என்னுடன் வாழ விருப்பம் இல்லை என்று நினைக்கிறேன். என்னுடன் நீ வாழாவிட்டால் பரவாயில்லை. நீ உன் வழியே போ! உன்னை நான் வற்புறுத்தமாட்டேன். ஆனால் எனது தங்கையின் கணவனை நீ அடிமைப்படுத்துவதை என்னால் ஒப்புக் கொள்ள முடியாது. பரமா! குருவின் குடும்பத்திற்கு துரோகம் செய்யாதே. எட்டு நரகங்களில் சிக்கி சீரழிவாய்!”

வல்லபன் எச்சரிக்கும் குரலில் கூற, ஆம்ராவும், பரமனும் நகைத்தபடி மீண்டும் தங்களது கைகளை கோத்துக் கொண்டபடி தட்டாமாலை சுற்றத் துவங்கினர்.

ஆம்ரா வல்லபனைக் கேலியுடன் நோக்கினாள்.

“வல்லபரே! கணவன், குடும்பம் கோட்பாடுகள் எல்லாம் அடுக்களையில் சமைக்கப்படும் உணவை போன்றது. திரவியங்களைச் சேர்த்து உணவு சமைப்பது போன்று, கோட்பாடுகளை பின்பற்றி தாம்பத்தியம் கொள்ள வேண்டும். அதற்கு நான் ஆட்பட்டவள் இல்லை. நாடோடியான நான், காட்டில் கிடைக்கும் அறுசுவை கனிகளை அப்போதைக்கு அப்போதே பறித்து சுவைத்து மகிழ்பவள் நான். நீங்கள் ஆஸ்ரம அடுக்களையில் சமைக்கப்பட்டு, உங்கள் இறைவனுக்கு படைக்கப்பட்டு நியதியுடன் திகழும் உணவு. உங்களுக்காகக் காத்திருந்து கோட்பாடுகளை பேணி உறவுகொள்வதில் எனக்கு விருப்பம் இல்லை. இதோ காட்டில் நான் கண்ட கனியாகத் திகழ்கிறார் பரமன். அவரை நான் அடைந்தே தீருவேன். யாராலும் அதனைத் தடுக்க முடியாது?” - ஆம்ரா கூறினாள்.

பரமனை ஆவேசத்துடன் நோக்கினான், வல்லபன்.

https://telegram.me/aedahamlibrary

“அவளே கூறிவிட்டாள் பரமா! நீ வெறும் காட்டுக் கனிதான். உன்னை அருந்திவிட்டு, விதையினை தூக்கி எறிந்துவிடுவாள். அத்தகைய இழிநிலை உனக்கு ஏற்பட வேண்டுமா? எனது தங்கையின் பூஜா விக்ரகமாக காலமெல்லாம் திகழப்போவதை எண்ணிப் பார். இந்த மோகினியின் பசப்பு வார்த்தைகளை நம்பாதே.” ஆம்ராவை எரித்துவிடுவது போன்று வெறித்தான், வல்லபன்.

"பரவாயில்லையே! நான் கொடுத்த கண்களைக் கொண்டே என்னை எரித்து விடுவாய் போல இருக்கிறதே!” - ஆம்ரா சிரித்தாள்.

“நீ கொடுத்த கண்களால் இந்த உலகை பார்க்க வேண்டியிருக்கிறதே என்பதை நினைத்து அருவருப்பு அடைகிறேன். நீ கொடுத்த கண்களை பிடுங்கி உன்னிடம் கொடுத்துவிட எண்ணுகிறேன்!” வெறுப்பின் உச்சத்தில் கூறினான்.

"அவசரப்படாதே, வல்லபா! உனது கண்கள் இப்போது எங்களுக்கு மிகவும் அவசியம். உனக்கு கண்களை கொடுத்தவள் அதற்கு காணிக்கையாக உனது உயிரை கேட்கிறாள். கொடுத்துவிடேன்!” - நெஞ்சில் ஈரம் இன்றி, பரமன் கூற, அழுது அலறியபடி முன்வந்தாள், பத்ரா.

"இது உங்களுக்கு அடுக்குமா? நீங்கள் எப்படியாவது ஒழியுங்கள். எனது அண்ணனை விட்டுவிடுங்கள். எங்களுக்கு உங்கள் சங்காப்தமே வேண்டாம்” என்று கதறியவள், அண்ணனை நோக்கினாள்.

"அண்ணா! அவர்கள் இருவரும் காம பைசாசத்திடம் சிக்கியுள்ளனர். அவர்களுடன் வாதாடுவதில் பிரயோசனம் இல்லை. காமத்தின் உச்சத்தில் இருப்பவர்கள் குழந்தைகளையும் கொல்வார்கள். பெற்றோர்களையும் கொல்வார்கள். எனவே, இவர்கள் எக்கேடாவது கெடட்டும் என்று நாம் விட்டுச் செல்வோம்!” - பத்ரா கூறினாள்.

வல்லபனுக்கு உக்கிரம் ஏறியது. தன்னை ஆம்ரா காதல் வார்த்தைகளை பேசி ஏமாற்றிவிட்டது ஒருபுறம், தனது தங்கை கணவனை அவள் தனது வலையில் சிக்க வைத்துவிட்டது ஒருபுறம் என்று இருவித கோபங்கள் அவனைத் தாக்க, தன்னையும் மறந்து பரமனைத் தாக்கச் சென்றான். இருவருக்கும் இடையே மல்யுத்தம் நடைபெற, வல்லபனின் வலுவான தேகத்திற்கு முன்பாக, சுந்தர தேகத்தைக் கொண்ட பரமன் திணற, ஆம்ரா தனது கண்களால் வல்லபனின் கண்களை நோக்கினாள்.

வல்லபன் பரமனைத் தாக்கி, கீழே தள்ளி அவனது மார்பில் தனது

https://telegram.me/aedahamlibrary

வலதுகாலை வைப்பதற்காக முற்பட்டவன், பரமனின் வெண்புரிநூல் இடையே குறுக்கிட அதனை மிதித்துவிடப் போகிறோமே என்று குனிந்து அதை ஒதுக்கித் தள்ளிவிட்டு மீண்டும் நிமிர்ந்த போது, சரியாக அவனது கண்கள் ஆம்ராவின் கண்களில் சிக்கின.

அவனது கண்களை தனது கண்களால் வசியப்படுத்தத் துவங்கினாள். உனது கண்களின் வழியாக உனது பௌருஷம், வீர்யம், நாடித்துடிப்பு, சிந்தனை சக்கரம் அனைத்தும் எனது கண்களின் வழியாக எனதுள் புகுந்து எனக்கு அடிமைப்படட்டும். எனது சிந்தை இடும் உத்தரவுகளை ஏற்று நடப்பாயாக! என்னும் பாலிமொழி மந்திரத்தை உச்சரித்தபடி அவனை வசியம் செய்ய, அவளது ஆளுமைக்குக் கட்டுப்படத் துவங்கினான், வல்லபன். அவனை முழுவதுமாக வசியம் செய்த ஆம்ரா, பரமனைப் பார்த்தாள்.

“பரமரே! எனது பணி முடிந்தது!” என்றவள், வல்லபனின் கண்களை ஊடுருவி நோக்கினாள்.

“வல்லபரே! நீங்கள் இந்த செங்குத்தான மலைப்பகுதியின் மீது ஏறிச்சென்று அதோ அந்த அருவி துவங்கும் இடத்தில் இருந்து உங்கள் காதல் சிறகுகளை விரித்து கீழே குதியுங்கள். அதன் பிறகு, விதி ஒப்புக் கொண்டால் நாம் இணைவோம்!” என்று நையாண்டி செய்தபடி கூற, வல்லபன் இயந்திரகதியில் அந்த மலையின் உச்சியை நோக்கி நடக்கத் துவங்கினான்...

“வேண்டாம் போகாதே... அண்ணா! நாம் மீண்டும் நாவாய் திரும்புவோம்!” கதறியபடி பத்ரா வல்லபனை வழிமறித்து தடுக்க முயல, ஆம்ரா பரமனை பார்த்தாள்.

இனி நீதான் உன் பணியைச் செய்ய வேண்டும்! என்பது போன்று ஆம்ரா தன்னைப் பார்ப்பதை உணர்ந்ததும், பரமன் பத்ராவின் பாதங்களைக் குறி வைத்து தனது வர்மக் கலை ஆயுதத்தை பிரயோகித்தான். அழுதபடி வல்லபனைத் தொடரவிடாமல் செய்து கொண்டிருந்த பத்ரஷீலா, திடீரென்று இரு கால்களும் மடிந்து போக, கீழே விழுந்தாள். அவளால் கால்களை அசைக்கவே முடியவில்லை.

"அண்ணா! போகாதே! என்னை பார்!” - பத்ரா கதறிக் கொண்டே இருக்க, வல்லபன் அவளைத் திரும்பிப் பார்க்காமல் மலை ஏறிக்கொண்டே இருக்க, பத்ரா வீறிட்டு கதறினாள்...

"நாம் போவோமா?” - பரமன் கேட்டான்.

https://telegram.me/aedahamlibrary

"சற்று பொறுங்கள்! நமது புதிய வாழ்க்கையை துவங்கப் போகிறோம். தேங்கனி உடைத்துதானே உங்களது சம்பிரதாயத்தில் நல்லவற்றை துவக்குவீர்கள். இப்போது ஒரு கபாலம் இங்கே தேங்கனியாக சிதறப் போகின்றது. அதன் பிறகு நாம் புறப்படுவோம்!" - ஆம்ரா கூறினாள்.

பத்ரஷீலா இறைஞ்சினாள். "அக்கா! நீங்கள் இருவருமே வாழ்ந்து கொள்ளுங்கள். வயதான தந்தை. அவரை பார்த்துக் கொள்ள வேண்டும். எனது அண்ணனை ஒன்றும் செய்யாதீர்கள். நீங்கள் எங்கே வேண்டுமானாலும் போய் கொள்ளுங்கள். எங்கள் இருவரையும் விட்டுவிடுங்கள்!" - பத்ராவின் இறைஞ்சுதல் தங்கள் செவிகளில் விழாதவர்கள் போன்று, பரமனும், ஆம்ராவும் அருவி துவங்கும் மலையுச்சியையே கவனித்துக் கொண்டிருக்க, அவர்களின் கண்களில் ஒரு சிறு அசைவு தென்பட்டது.

"அதோ... வல்லபன் குதிக்கத் தயாராகிவிட்டான்!" - ஆம்ரா குதூகலத்துடன் கூற, பத்ரா அலறினாள்.

"கிராதகி! உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்தவளே. இறைவன் இருப்பது உண்மையானால், உனது அக்கிரமச் செயலுக்கு தண்டனை கிடைக்கும்!"

பத்ரா கூறி முடித்திருக்கமாட்டாள்.

மலையுச்சியிலிருந்து வல்லபன் குதிக்க, அவனது தேகம் மேலிருந்து வந்து விழுந்து பாறைகளில் மோதியது. அவனது கபாலம் சிதறி பரிதாபமாக உயிரைவிட்டான் அவனது வாயில் இருந்து ஒரு ஓலம் கூட எழும்பவில்லை.

காரியம் முடிந்தது என்பது போன்று கைகளை உதறிய ஆம்ரா, பரமனை நோக்கி ஓடிச் செல்ல, அவளை வரவேற்று, தனது நெஞ்சோடு ஆலிங்கனம் செய்தான், பரமன்.

"அன்பே! இதோ அத்திமலையை நோக்கி துவங்குகிறது நம் பயணம். நமது சாம்ராஜ்யம் இங்கிருந்து துவங்குகிறது!" என்று அவளை உச்சி முகர்ந்து கூறிய பரமன், அவளை அணைத்தபடி நடக்கத் துவங்கினான். மரங்களின் இடையே புகுந்து அவர்கள் கண்பார்வையிலிருந்து மறையும் வரை அவர்கள் இருவரையும் சபித்துக் கொண்டிருந்தாள், பத்ரஷீலா. சிதறிக் கிடந்த அண்ணனின் உடலைக் கண்டு கதறியபடி நகரவும் முடியாமல் திண்டாடிக் கொண்டிருந்த பத்ரா, அப்படியே நகர்ந்து சென்று நீரில் விழுந்து உயிரை விடலாம் என்று எண்ணிய போது -

https://telegram.me/aedahamlibrary

அவளது தோளினில் ஒரு கை படர்ந்தது. வைசம்பாயனன்தான் கண்களில் நீருடன் நின்றிருந்தான்.

“வருந்தாதே அக்கா! நான் கற்கும் கல்விக்கு சக்தி இருந்தால், அந்தத் துரோகி பரமனையும், அந்த கிராதகி ஆம்ராவையும் அழிக்கும். உன்னைப் பற்றியும், குருவைப் பற்றியும் கவலைப்படாதே! வல்லபன் அண்ணனுக்கு பதிலாக நான் இருந்து உங்களை காப்பாற்றுவேன். அண்ணனின் இந்த கோர மரணத்தை இப்போதைக்கு குரு அறியாமல் இருப்பதே நல்லது. நான் சென்று வல்லப அண்ணனின் இறுதிச் சடங்குகளை முடித்துவிட்டு வருகிறேன். பிறகு நான் உன்னை நாவாய் இட்டுச் செல்கிறேன்!” என்றான்.

வழக்கமாகக் காட்டிற்கு வந்து சுள்ளிகளைச் சேகரிப்பான் வல்லபன். இன்று அவனுக்காகவே சுள்ளிகள் சேகரிக்கப்பட்டது. வல்லபனின் சிதைந்த பாகங்களைச் சேகரித்து ஆற்றங்கரையில் வைத்து, சுள்ளிகளால் அதனை மூடினான். தன்னிடம் உள்ள சிக்கி முக்கிக் கற்களை உராய்ந்து தீயை மூட்டிய வைசம்பாயனன், வல்லபனின் சிதைக்கு தீவைத்துவிட்டு, ஆற்றை நோக்கி நடந்தான். பாரத புழா ஆற்றில் இறங்கி நீராடிவிட்டு, பத்ரஷீலாவையும் முதுகில் சுமந்து சென்று ஆற்று நீரில் நீராடச் செய்தவன், அவளைச் சுமந்தபடி நாவாய் கிராமத்தை நோக்கி நடைபோடத் துவங்கினான்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 20. கடிகையில் கலவரம்

சோழ மன்னர் எங்கே சென்றார்?" பலமுறை தந்தையைக் கேட்டு அலுத்துவிட்டாள், நறுமலராள்.

"கவலைப்படாதே குழந்தாய். உனது சகோதரியின் திருமணம் முடிவதற்குள் வந்துவிடுவான்!" என்று தொடர்ந்து சொல்லிக்கொண்டிருந்தாரே தவிர, கரிகாலன் எங்கு சென்றான் என்பதை அவராலேயே யூகிக்க முடியவில்லை.

"சோழ மன்னர் நமது திருமணத்திற்கு வந்துவிடுவார் அல்லவா?" செங்கமலம் இளந்திரையனை கேட்க, அவன் மௌனம் சாதித்தான். தனது சகோதரன் திடீரென்று சொல்லாமல் சென்றது அவனுள் பெரும் வியப்பைத் தோற்றுவித்திருந்தது. 'புது மனைவியிடம் கூட சொல்லாமல் கரிகாலன் எங்கே சென்றிருக்கக் கூடும்?' தனக்குள் அவன் கேட்டுக்கொண்டுதான் இருந்தான். மாமன் இரும்பிடர்த்தலையாரைக் கேட்டால், திருமணத்திற்கு வந்துவிடுவான் என்கிறார். கரிகாலன் புரியாத புதிராகவே இருக்கிறான் என்று மனதிற்குள் நினைத்த இளந்திரையன் தொடர்ந்து மக்களை நோக்கி கையை ஆட்டி அசைத்தவாறு இரதத்தில் சென்று கொண்டிருந்தான்.

அத்திமலையான் ஆலயம் வந்தது. உய்யுலகரும், மந்திரிபிரதானிகளும், ரகஸ்யாதிக்ருதன் பரமேஸ்வரனும் அவனது மனைவி பொன்னுருகு ஆகியோர் மன்னர் பல்லவ இளந்திரையனையும் செங்கமலத்தையும் வரவேற்று மணமேடைக்கு அழைத்துச் சென்றனர். கடிகையின் அறிஞர்கள், ஒத்தாடையின் ராஜாங்க அதிகாரிகள், அத்தியூரின் வேத பண்டிதர்கள் தருமநகரத்தைச் சேர்ந்த மக்கள் என்று ஆலயத்தில் கூட்டம் நிரம்பி வழிந்தது. திருமண நேரம் நெருங்க, செங்கமலம் ஆவலுடன் ஆலயத்தின் வாயிலையே கவனித்துக் கொண்டிருந்தாள். கரிகாலன் வரும் அறிகுறியே காணவில்லை. இரும்பிடர்த்தலையாரும் பதற்றத்துடன் ஆலயத்தின் வாயிலைப் பார்ப்பதும் மணமேடையைப் பார்ப்பதுமாக இருந்தார்.

அக்னி வளர்த்து மந்திரத்தை உச்சரித்த வேதியர்கள், திருமண நேரம் நெருங்கிவிட்டதை உணர்ந்து இரும்பிடர்த்தலையாரை அழைத்து அவரது மகளின் கரத்தினைப் பற்றி பல்லவ இளந்திரையனின் கரத்தில் வைக்கும்படி கூற, இரும்பிடர்த்தலையார் தயங்கினார்.

"சற்று பொறுங்கள், பண்டிதர்களே. எனது மூத்த மருமகனும்

https://telegram.me/aedahamlibrary

வந்துவிடட்டுமே!” - அவர் கூறியதும்தான் தாமதம்.

பரமேஸ்வரன் பொங்கி எழுந்தான். “இதென்ன அநியாயம்? தம்பியின் திருமணம் நடக்கப் போவதை அறிந்தும், சோழ மன்னர் பொறுப்பில்லாமல் எங்கோ சென்றுவிட்டார். எங்கு சென்றார் என்பதும் தெரியாது. அவர் வருவார் என்று கூறுகிறீர்கள். இப்போது சுபமுஹூர்த்தத்தைத் தவறவிட்டால், எப்படி? பல்லவ மன்னரின் திருமணத்தைக் காண மக்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர். திருமணம் நடக்கட்டும்!” என்று சொல்ல, நறுமலராள் தனது தந்தையின் கரத்தைப் பற்றி, அவரது செவியில் கிசுகிசுத்தாள்.

கோலவிக்கிரமரும் கரிகாலனைத் தாக்குவதற்கு இதுதான் சமயம் என்பது போன்று, இளந்திரையனை நோக்கினார்.

“சோழ மன்னர் இதற்கு மேல் வருவார் என்று தோன்றவில்லை. நாம் திருமணத்தை நடத்துவோம்!” என்று கூறியதும், இளந்திரையன் தனது மாமனை நோக்கினான்.

"இரும்பிடறாரே! திருமணம் நடக்கட்டும். கரிகாலனின் திருமண வைபவத்தில் நான் முழு மனதுடன் கலந்து கொண்டேன். ஒரு தம்பியாக மட்டுமின்றி, பல்லவ நாட்டு மன்னனாகவும் கலந்து கொண்டேன். ஆனால் எனது திருமணத்தில் சோழ மன்னனாக கலந்து கொள்ளா விட்டாலும் ஒரு அண்ணனாக கலந்து கொள்ள வேண்டும் என்றுகூட அவனுக்குத் தோன்றவில்லை. விருப்பம் இல்லாதவனுக்காகக் காத்திருப்பது வீண். திருமணம் நடக்கட்டும்!” என்று சொல்ல, தனது கண்களில் துளிர்த்த நீரை மற்றவர்கள் காணாதபடி செங்கமலம் துடைத்துக் கொள்ள, மறையவர்கள் மந்திர உச்சாடனம் பலமாகக் கேட்க, இளந்திரையனுக்கு தனது மகள் செங்கமலத்தை கன்யாதானமாகக் கொடுத்தார். இரும்பிடர்த்தலையார்.

வந்திருந்த பெரியோர்களிடம் ஆசி வாங்கும்படி வேதியர்கள் கூற, அப்போது முன்னால் அமர்ந்திருந்த ஒரு கிடுகிடு கிழவர் கையில் வெண்பட்டால் கட்டப்பட்ட ஒரு துணி மூட்டையுடன் மேடை ஏறினார். காவி உடையில் காணப்பட்ட அந்த பெரியவர், தனது கைத்தடியை ஊன்றிக்கொண்டு மிகவும் சிரமத்துடன் இளந்திரையனிடம் வந்தார்.

“பல்லவ மன்னரே! உங்கள் திருமணத்தைக் காண சோழ நாட்டிலிருந்து நான் வந்திருக்கிறேன். எனது பிராயங்கள் நூறு. சோழ நாட்டின் மூத்த குடிமகன். நான் வாழ்த்தினால் சோழ நாடே வாழ்த்தியது போல. எங்கள் மன்னர் வாழ்த்தவில்லையென்றால் என்ன? நான் வாழ்த்துகிறேன்!

https://telegram.me/aedahamlibrary

இந்தாருங்கள்! இதனை பெற்றுக் கொள்ளுங்கள். சோழ நாடு தங்களுக்கு தரும் மிகவும் விலையுயர்ந்த பரிசு. தனிமையில் இருக்கும் போது இதனைப் பிரித்து பாருங்கள்" என்று கூற, புதுமணத் தம்பதிகள் அந்த முதியவரை வணங்க, அவர் ஆதூரத்துடன் இளந்திரையனை அணைத்து உச்சி முகர்ந்தார்.

தம்பதிகளை வாழ்த்தி விட்டு, முதியவர் அங்கிருந்து நகர, சரியாக ஆலயத்தின் வாயிலில் பரபரப்பு. யாரோ கூக்குரல் இட்டார்கள்.

"மன்னா... ஆபத்து! முக்கூடல் கடிகையில் கலவரம் வெடித்துள்ளது. சில விஷமிகள் பர்ணசாலைகளுக்கு தீ வைத்துக்கொண்டிருக்கின்றனர். திருமணத்தில் பங்கு கொள்வதற்காக கடிகை அதிகாரிகள் இங்கே குழுமியிருக்க, ஒரு வன்முறைக் கும்பல் கடிகையில் நாசத்தை விளைவித்துக் கொண்டிருக்கிறது!" என்று அலறினார்கள்.

முக்கூடல் கடிகை தீப்பற்றி எரிகிறது என்றவுடன், திருமணத்திற்கு வந்திருந்த சான்றோர்களும், அறிஞர்களும், பண்டிதர்களும், திடுக்கிட்டனர்.

"இதென்ன விபரீதம்! விலைமதிப்பில்லா சுவடிகள் இருக்கும் கடிகையில் எதற்காக கலவரம் செய்கிறார்கள். தீ வைத்தால் சுவடிகள் எரிந்து போகுமே!" என்று அலறியபடி எழுந்து செய்வதறியாமல் இங்கும் அங்கும் ஓடினார்கள்.

பரமேஸ்வரன் ஜாடையாக கோலவிக்கிரமரை பார்த்து தலையசைக்க, அவர் மன்னரின் செவிகளில் கிசுகிசுத்தார்.

"மன்னவா! கடிகையின் வரங்குளத்தில்தானே அத்திமலையானின் ஸ்ரீதள மணியை பத்திரப்படுத்தி உள்ளோம். உடனே நாம் அங்கே போக வேண்டும்." -- விக்கிரமர் கூற, இளந்திரையன் பரபரப்படைந்தான்.

"உடனே நாம் அங்கே செல்வோம்!" - இளந்திரையன் கூற, மன்னருடன், கோலவிக்கிரமர், பரமேஸ்வரன், போஜகன் உள்ளிட்டோர் முக்கூடல் கடிகைக்கு புறப்பட்டனர்.

பழமுதிர்சோலையின் அடிவாரத்தில் மரத்தினால் அமைக்கப்பட்டிருந்த தோரண வாயில், வெட்டி சாய்க்கப்பட்டிருந்தது. ஆங்காங்கே ஓலை பர்ண சாலைகள் தீக்கு இரையாக்கப்பட்டிருந்தன. வரங்குள ஓடையில் சுவடிகள் வீசி எறியப்பட்டிருந்தன. மன்னனின் திருமணத்தைக்

https://telegram.me/aedahamlibrary

கண்டுகளிக்க கடிகையில் இருந்த அனைவரும் சென்றுவிட்டதால், கலவரத்தில் ஈடுபட்டவர்களை தடுப்பதற்கு யாரும் இல்லாத காரணத்தால் அவர்கள் வெறியாட்டம் ஆடியிருந்தனர். அன்று பார்த்து முக்கூடல் களரியில் வீரவிளையாட்டுகளை பயிற்சி செய்யும் வாலிபர்களும் இல்லை.

யார் இந்தக் கலவரக்காரர்கள்? எதற்காக கடிகையை குறி வைத்தார்கள்? யோசித்தபடி இளந்திரையன் களரியைக் கடந்து குபேரப் பாதையை அடைந்தான். பாதையின் துவக்கத்தில் உயிரற்றுக் கிடக்கும் இரண்டு அரண்மனை காவலர்களின் உடல்களைக் கண்டு உறைந்து போனான்.

"ஐயோ! குபேர பாதையின் காவலாளிகள் கொல்லப்பட்டிருக்கின்றனரே? என்ன விபரீதம் நிகழ்ந்துள்ளதோ?" - பரமேஸ்வரன் அலற, அனைவரும் தத்தம் புரவிகளை குபேர பாதையில் செலுத்தினார்கள். வரங்குளத்தை அடைந்ததுமே குளத்திற்கு குறுக்காக போஷண மண்டபத்தை அடைவதற்காக அமைக்கப்பட்டிருந்த மரப்பாலம் தீப்பற்றி எரிந்து கொண்டிருப்பதைக் கண்டு உறைந்து போனான், இளந்திரையன்.

"போஷண மண்டபம் சூறையாடப்பட்டுள்ளது!" அதிர்ச்சியுடன் கூறினார் கோலவிக்கிரமர்.

புரவியிலிருந்து இறங்கிய மன்னரின் பரிவாரம், குளத்து நீரில் பாய்ந்து போஷண மண்டபத்தை நோக்கி நீந்தினார்கள். கரை ஏறியதுமே இளந்திரையனுக்கு ஊர்ஜிதமாகி விட்டது, அத்திமலைத் தேவனின் ஸ்ரீதள மணி களவாடப்பட்டுவிட்டது என்பது.

போஷண மண்டபத்தின் இரும்புக் கதவுகளின் பூட்டுகள் உடைக்கப்பட்டிருந்தன. கதவுகள் இரண்டும் திறந்து கிடந்தன. வட்ட வடிவில் காணப்பட்ட மண்டபத்தின் மையத்தில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் ஒரு வெள்ளிப் பெட்டகத்தின் உள்ளேதான் ஸ்ரீதள மணி வைக்கப்பட்டிருந்தது. இவர்கள் மண்டபத்தின் உள்ளே நுழைந்ததுமே மலைத்துப் போய் நின்றனர். மைய மேடையின் மீது வைக்கப்பட்டிருந்த வெள்ளிப் பெட்டகம் இரண்டாகப் பிளக்கப்பட்டிருந்தது. அதன் உள்ளே ஸ்ரீதள மணி [1] இல்லை என்பது அனைவருக்குமே புரிந்து போனது.

“இது யாருடைய வேலையாக இருக்கக்கூடும்?” -- இளந்திரையன் கர்ஜித்தான்.

அத்திமலைத் தேவனிடம் தொண்டை நாடே பயபக்தியை

https://telegram.me/aedahamlibrary

செலுத்திக்கொண்டிருக்க, அவனுடைய ஸ்ரீதள மணியை அபகரிக்க யார் துணிவார்கள்? அத்தியூரானின் ஆபரணத்தை மதிப்பீடு செய்யக் கூடாது என்பதற்காகவே அதனை மதிப்பீடு கூட செய்யவில்லை.

வழக்கமாக, ஒவ்வொரு அஸ்த நட்சத்திரத்தின் போதும், ஸ்ரீதள மணியை அணிவித்து, அதில் உள்ள திருமகளின் உருவத்திற்கு பாலாபிஷேகம் செய்வார்கள். அன்றுதான் ஸ்ரீதள மணியின் ஒளி அதிகமாகி சுடர்விட்டு பிரகாசிக்கும். அதனை அஸ்தமணி சாங்கியம் என்பார்கள்.

பாலகனாக இருந்த போது, இளந்திரையன் ஒருமுறை அஸ்தமணி சாங்கியத்தை தரிசிப்பதற்கு தனது தந்தை திருலோச்சன பல்லவனுடன் அத்திமலைக்குச் சென்றிருந்தான். அப்போது ஆலய பட்டர்கள் அத்திமலையானுக்கு ஸ்ரீதள மணியை அணிவித்தனர். அப்போது, தேவராஜனை தரிசிக்க வந்திருந்த காமரூப நாட்டைச் சேர்ந்த பொற்கொல்லர் ஒருவர் தன்னை மறந்து உணர்ச்சிவயப்பட்டு குரல் எழுப்பினார்.

சன்னிதியில் நிலவிய அமைதியை குலைத்துக்கொண்டு திருலோச்சன பல்லவனிடம் சென்று பணிவுடன் பேசினார்.

"மன்னரே! உங்கள் தொண்டை நாடுதான் எத்துணை பாக்கியங்களை செய்துள்ளது. இத்தகைய நாட்டை ஆளுவதற்கு நீங்கள்தான் என்ன பேற்றினை செய்திருக்க வேண்டும்! எத்தனையோ தேசங்களை எத்தனையோ வம்சங்கள் ஆளலாம். ஆனால், அத்திமலைத் தேவன் வாழும் தொண்டை நாட்டை ஆளும் பல்லவர்களே மிகவும் பாக்கியசாலிகள். ஸ்ரீதள மணியினை சாற்றிக் கொண்டிருக்கும் அத்திமலையானை கண் குளிர தரிசித்தேன்.

பூவுலகில் மட்டுமல்ல! ஈரேழு லோகங்களிலும் கிடைக்காத யட்சாக்ஷி கற்களைக் கொண்ட நவமணி இந்த ஸ்ரீதள மணி. இந்த மணியின் கற்கள் மிகவும் அரிதானவை. பொதுவாக நவரத்தினங்களும் நமது மண்ணுலகில் தோன்றுபவையே. ஆனால் ஸ்ரீதள மணியின் கற்கள் குபேரபுரியில் தோன்றிய அபூர்வ கற்கள். குபேரபுரியில் ஸ்வர்ண மண்டலம் என்னும் பகுதி உள்ளது. ஸ்வர்ண மண்டலத்தின் நடுவே உள்ள க்ஷீர (பால்) தடாகத்தின் அடியில் ஒப்பவரில்லா நவரத்ன குவியல்கள் சிதறி கிடக்கும். அவற்றை யட்ச நேத்திரங்கள் என்னும் யட்சாட்சி கற்கள் என்று கூறலாம். கறந்த பாலில் யட்ச நேத்ரங்களை வைத்தால் அவற்றிற்கு சக்தி அதிகரிக்கும். மிகவும் பொலிவுடன் திகழும்.

https://telegram.me/aedahamlibrary

யட்சாட்சி நவரத்தினங்கள் பலவித வண்ணங்களில் இருக்கும். அவ்வகை பசுமை மற்றும் நீல வர்ண யட்சாக்ஷி கற்களைக் கொண்டு அமைக்கப்பட்டது. மிகவும் ஆற்றல் பெற்றவை இந்தக் கற்கள். அவை மனதின் எண்ண ஓட்டங்களைக் கட்டுப்படுத்தும். உங்கள் அத்தியூரானே மிகவும் ஆற்றல் படைத்தவன். அவனது ஆற்றலுடன், ஸ்ரீதளத்தின் யட்சாக்ஷி கற்களின் ஆற்றலும் சேரும் போது உங்கள் நாடு உலகிலேயே வளமான நாடாக விளங்கும். நாட்டை யாராலும் வெல்ல முடியாது" என்று அந்தக் கற்களின் சாத்திரம் அறிந்த அந்த பொற்கொல்லர் கூற, பரவசத்துடன் அனைவரும் மார்பில் ஸ்ரீதள மணியை சூடி இருந்த அத்திமலைத் தேவனை தரிசித்தது இளந்திரையனுக்கு நினைவில் தோன்றியது.

இவ்வளவு அபூர்வமான ஸ்ரீதள மணியைக் களவாடுவதற்கு யார் துணிவார்கள்? - தொண்டை நாட்டில் அத்திமலைத் தேவனின் மீது அதீத பற்றும் பக்தியும் கொண்டிருந்தனர் மக்கள். அவர்கள் யாரும் இதனை செய்யத் துணியமாட்டார்கள்.

பரமேஸ்வரன் சற்றும் தாமதிக்காமல் இளந்திரையனின் செவியருகே கிசுகிசுத்தான்.

குட்டையான அவனால் நெடு உயரத்தில் இருந்த அவனது செவிகளை எட்ட இயலாததால், இளந்திரையன் சற்றே தனது செவிகளை அவன் பக்கமாகச் சரிக்க வேண்டியிருந்தது.

"மன்னா! கலவரம் என்பது வெறும் புகைத்திரையே. கலவரம் செய்வது போல் தங்களது களவாடலை அரங்கேற்றியுள்ளனர், கயவர்கள். உதிரிப்பூக்களைப் போன்று தனித்தனியாக நிகழ்ந்த சம்பவங்களை, பூமாலையாகக் கோர்த்தால் ஒன்றுக்கு மற்றொன்று தொடர்பு கொண்டிருப்பதை உணரலாம். நாம் யோசிக்க வேண்டும். தங்கள் திருமணத்தின் போது இங்கே யாரும் இருக்கமாட்டார்கள் என்பதை உணர்ந்து, ஸ்ரீதள மணியை களவாடி உள்ளனர். அத்திமலையானின் உக்கிரத்தை அறிந்தவர்கள் இந்த துணிகர செயலைச் செய்வார்களா? எனவே, இது தொண்டை நாட்டைச் சாராத சிலரால்தான் செய்யப்பட்டிருக்க வேண்டும். சோழ மன்னர் கரிகாலனது திருமணத்தில் தாங்கள் பங்கேற்றீர்கள். ஆனால் தங்களது திருமணத்தில் அவர் பங்கு கொள்ளவில்லை. காஞ்சி நகருக்கு வரும் வழியில், நாண்மதிய பெருமாள் ஆலயத்தில் தரிசனத்தை முடித்துவிட்டு, காட்டினுள் புகுந்து சென்றுவிட்டார், சோழ மன்னர். அதற்கு பிறகு, அவர் எங்கே சென்றார் என்பது புரியாத புதிர்? தங்கள் திருமணத்திற்கும் வரவில்லை. அவரும்

https://telegram.me/aedahamlibrary

மணமகன் தானே? அவரது மனைவியும் உங்கள் திருமணத்தில் பங்கேற்றாரே... கரிகாலர் மட்டும் எங்கே சென்றார்?" - தெளிவு பெற்றிருந்த இளந்திரையனின் மனதில் பரமேஸ்வரன் மீண்டும் கல்ல விட்டெறிந்தான்.

பரமேஸ்வரன் விட்ட இடத்திலிருந்து கோலவிக்கிரமர் தொடர்ந்தார்.

"மன்னா! நாங்கள் துவக்கத்திலிருந்து உங்களது தமையனிடம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்றுதான் கூறி வருகிறோம். தாங்கள் தான் உங்களது நெற்றிக் கண்ணை தனது தெய்வபலத்தால் அழித்துவிட்டான் என்று கூறி தங்களது சகோதரனிடம் பாசத்தைக் காட்டி வருகிறீர். ஆனால் அவர் அந்த பாசத்தை தங்களுக்குத் திருப்பிச் செலுத்தி வருவதாக தெரியவில்லை. சகோதரன் என்கிற உறவை கருத வேண்டாம். சகலை என்கிற உறவையும் கருத வேண்டாம். சோழ நாட்டு மன்னன் என்கிற முறையில் தாங்கள் அவரது திருமணத்தில் பங்கு கொண்டது போன்று, அவரும்தானே, தங்களது திருமணத்தில் பங்கேற்றிருக்க வேண்டும். அன்பு, பாசம் ஆகியவை ஒரு வழிப் பாதையா என்ன? எனக்கு ஒரு சந்தேகம்! அத்திமலைத் தேவனை தனது நாட்டிற்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்று மனதின் ஆழத்தில் ஒரு கருத்தினை கொண்டிருக்கிறார், உங்கள் அண்ணன். காஞ்சி நகரை பிரம்மாண்டமாகக் கட்டிக் கொடுத்து, உங்களது நம்பிக்கையையும் பெற்று, உங்களது திருமணத்தின் போது, ஸ்ரீதள மணியை அபகரித்திருக்கிறார். சிந்தியுங்கள் அரசே! கரிகாலர் இந்த முக்கூடல் கடிகையில்தான் எதிரிகளுக்குத் தெரியாமல் பதுங்கி இருந்திருக்கிறார். கடிகையின் மூலை முடுக்குகள் எல்லாமே அவருக்கு நன்கு தெரியும். எனவே, இந்த கலவரமும், ஸ்ரீதள மணி களவு போனதும், அவருக்குத் தெரியாமல் நடந்திருக்காது. கரிகாலனைத் தேடிப் பிடித்தால் எல்லாம் விளங்கும்!"

அண்ணனிடம் நேசக்கரம் நீட்டி ஒருவருக்கொருவர் உதவி பெற்றுக்கொண்டு ஆட்சிபுரிய வேண்டும் என்கிற இளந்திரையன் மனதில் எழும்பியிருந்த தீர்மானம், மாற்றி மாற்றி பரமேஸ்வரனும், கோலவிக்கிரமரும் கூறிய சொற்களால், தவிடுபொடியானது. கரிகாலன் மீது படர்ந்திருந்த அன்பு கதிரவனைக் கண்ட பனியை போன்று விலகியது.

"ஸ்ரீதள மணி களவு போன விவரம் ரகசியமாகவே இருக்கட்டும். மக்களுக்கு இது தெரிய வேண்டாம். அடுத்த அஸ்த நட்சத்திரத்தன்றுதானே அத்திமலையான் ஸ்ரீதள மணியை அணிந்து

https://telegram.me/aedahamlibrary

கொள்ள உள்ளான். அதற்குள் அதனைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்... இதன்பின் கரிகாலன் இருப்பது உண்மையென்றால் அவன் மீது பாரபட்சம் காட்டாமல் நடவடிக்கை எடுங்கள். அண்ணன் என்று தயங்க வேண்டாம். சகலை என்றும் சிந்திக்க வேண்டாம். ஏன் அண்டை நாட்டு மன்னன் என்கிற மரியாதையும் காட்ட வேண்டாம். அத்திமலையானின் அணிகலனை களவாடியவனுக்கு என்ன மரியாதைகள் செய்வோமோ, அவற்றைச் செய்து அவனைக் கண்ட இடத்தில் கைது செய்யுங்கள். இரண்டு நாடுகளுக்கும் இடையே போர் மூண்டாலும் கவலை இல்லை."

கனல் போன்று அவனது வாயிலிருந்து வார்த்தைகள் உதிர்ந்தன. இளந்திரையன், தனது உக்கிரத்தைத் தணிக்க விரும்புபவனைப் போன்று வரங்குள நீரில் பாய்ந்தவன், அக்கரைக்குச் சென்று தனது புரவியின் மீது தாவி ஏறி ஒத்தாடை அரண்மனையை நோக்கிப் பறந்தான்.

அவன் உக்கிரத்துடன் புறப்பட்டுப் போவதை, உவகையுடன் பார்த்துக்கொண்டிருந்த பரமேஸ்வரனும், கோலவிக்கிரமரும் ரகசியமாக தங்களது கை பெருவிரல்களை உயர்த்தி தங்களது மகிழ்ச்சியைப் பரிமாறிக் கொண்டனர்.

***

இளந்திரையன் நேராக ஒத்தாடைக்குச் சென்றான். அத்திமலை ஆலயத்திலிருந்து அவன் புதுமனைவி செங்கமலம், அவளது அக்காள் நறுமலராள் மற்றும் அவர்களது தந்தை இரும்பிடர்த்தலையார் அனைவரும் வந்துவிட்டிருந்தனர் என்பது புரிய வர, அவர்களைக் காண விரும்பாமல், தனிமையில் தனது கோபத்தைக் கட்டுப்படுத்த எண்ணி, தனது ஏகாந்த அறையை நோக்கி நடந்தான்.

பல்லவ மன்னர் வந்துவிட்டார் என்பதை அறிந்து, அரண்மனை தலைமைக் காவலன் வீரர்கள் புடை சூழ அங்கே வந்தார். மன்னர் தனது அறையினுள் நுழைய முற்படுவதைக் கண்டு ஓடோடி வந்து தலை வணங்கினார்.

"எனக்கு சற்று ஏகாந்தம் தேவை. யார் வந்தாலும் உள்ளே அனுமதிக்க வேண்டாம்!" கட்டளையிட்ட இளந்திரையன், அறையினுள் நுழைந்து, கதவினைத் தாளிட்டுக் கொண்டான்,

திருமணம் முடிந்த மன்னன், தனது முதலிரவு வைபவத்தை அரசியாரின்

https://telegram.me/aedahamlibrary

அந்தப்புரத்தில் தானே கொண்டாடப் போகிறான், என்று அந்தப்புரத்தை விசேடமாக அலங்கரித்திருந்த காரணத்தால், மன்னன் வழக்கமாக உறங்கும் அவனது அந்தரங்க அறையை பணிப்பெண்கள் உதாசீனம் செய்துவிட்டிருந்தது, அந்த அறையை பார்க்கும் போதே நன்கு புலப்பட்டது.

அறையில் தீபங்கள் கூட ஏற்றப்படவில்லை. சாளரங்களை திரைகள் மூடியிருந்ததால், அந்த அந்திமாலைப் பொழுதின் வெளிச்சம் கூட உள்ளே வரவில்லை. வழக்கமாக நறுமணப் புகையும், மலர்க்கொத்துகளின் வாசமும் அந்த அறைமுழுவதும் பரவி இருக்கும். சுகந்தமும், ஏகாந்தமும் நிறைந்த அவனது அறையினுள் நுழைந்ததுமே மனநிம்மதியும், உற்சாகமும் இளந்திரையன் மனதை சூழ்ந்து கொள்ளும். ஆனால்... இன்று மனதில் நிலவிய புழுக்கமே, அந்த அறையிலும் சூழ்ந்திருப்பதாக அவனுக்குப்பட்டது.

உள்ளே நுழைந்து தனது மஞ்சத்தில் களைப்புடன் சரிந்தான். ஒரு புதிய மணமகனுக்குரிய உற்சாகம் எதுவுமின்றி, சோர்வுடன் விட்டத்தை பார்த்தவன், சற்றே நீர் பருகினால் களைப்பு நீங்கும் என்கிற எண்ணத்துடன் எழுந்தவன் உறைந்து போய் நின்றான். அவனது மஞ்சத்தின் நேர் எதிராக, சாளரத்தின் அருகே நின்ற இருக்கையில் ஓர் உருவம் அமர்ந்திருந்தது. இருளில் முகம் தெரியவில்லை. காற்றில் படபடத்த அந்த வெண்ணிற திரைச்சீலை அந்த உருவத்தின் முகத்தினை மறைக்க, தனது முகத்தில் படர்ந்திருந்த அந்த திரைச்சீலையை விலக்கக் கூட தோன்றாமல் அமர்ந்திருந்தது, அந்த உருவம்.

திடுக்கிட்டு மஞ்சத்தில் அமர்ந்தான்.

“யார்... யார்... அது?”

அந்த நெடிய உருவம் இப்போது தனது முகத்தை மூடியிருந்த திரைச்சீலையை அகற்றியபடி எழுந்து நின்றது. இவனது திருமணத்தின் போது ஆசி கூறிய சோழ நாட்டின் நூறு வயது முதியவர்தான் நின்றிருந்தார்.

“நீர் எப்படி இங்கே வந்தீர். யாரங்கே!” பரபரப்புடன் இளந்திரையன் அகல, தனது தாடி மீசையைக் களைந்து வீசி எறிந்தபடி அவனது பாதையை மறித்து நின்றான், கரிகாலன்.

"நான் தான் தம்பி! உனது ஆருயிர் அண்ணன் கரிகாலன். நீ இங்கே வருவாய் என்று நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. உனது

https://telegram.me/aedahamlibrary

அந்தப்புரத்தில் புது மனைவியுடன் ஆனந்தத்தைக் காண வேண்டிய நீ, இங்கே தனிமையில் என்ன செய்கிறாய்?”

"ஆனந்தமா? எனது மனம் கொதித்துக் கொண்டிருக்கிறது. இந்த சமயத்தில் சல்லாபத்தை நாடத் தோன்றுமா என்ன? நீ எப்போது வந்தாய்? எனது அறையில் என்ன செய்து கொண்டிருக்கிறாய்?” அவனது குரலில் ஒலித்த காட்டத்தைக் கண்டதும், வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிவிட்டதை உணர்ந்தான், கரிகாலன்.

"ஒவ்வொரு புதுமணத் தம்பதியரும் ஆவலுடன் எதிர்பார்க்கும் இரவு இது. இந்த இரவு உனக்கு மட்டும் ஏன் உக்கிரத்தைத் தந்திருக்கிறது?” - கரிகாலன் கேட்டான்.

“நீ எளிதாக ஒரே வினாவில் கேட்டுவிட்டாய்? பல வினாக்களுக்கு விடை கிடைக்காமல் குழப்பத்துடன் நான் இருக்கிறேன். எனது கையாலாகாத்தனத்தைக் கண்டு என்னையே நொந்து கொண்டு இங்கே அமர்ந்திருக்கிறேன்!” – இளந்திரையன் வெகுண்டான்.

“கையாலாகாததனமா? ஒரு ஆண்மகனின் வாயில் ஒலிக்கக்கூடாத சொல்! அதுவும் அவனது முதலிரவன்று? அந்தப்புரத்திற்குச் செல்லாமல், தனியறையில் அமர்ந்து கையாலாகவில்லை என்று கூறுவது நமது வீரர் குலத்திற்கே இழுக்கு!” - ஹாஸ்யமாக பேசித் தான் இளந்திரையனின் கோபத்தை குறைக்க எண்ணினான், கரிகாலன். ஆனால் அவன் தனது ஆண்மையை இழிவுபடுத்துவதாக நினைத்து விட்ட இளந்திரையன், கொதித்துப் போய், பக்கலில் வைத்திருந்த தனது உடைவாளை உருவினான்.

"உனது பசப்பு வார்த்தைகளை நம்பி உன்னிடம் பாசத்தை பொழிந்தேனே. அதனைத்தான் எனது கையாலாகாத்தனம் என்று நான் குறிப்பிட்டேன். இப்போதே வா! வாட்போரில் வேகவதியின் பலத்தை காட்டி உனது வீரத்தை வற்றச் செய்கிறேன்!” - இளந்திரையன் உறுமினான்.

“காவிரியை வற்றச் செய்ய முயற்சித்தாய். இப்போது காவிரியில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. எனது வீரத்தை இப்போது வற்றச் செய்யப் போகிறாய் என்றால், எனது வீரமும் கரை புரண்டு பெருகப் போகிறது போலும்!” - சிரித்தபடி கூறினான், கரிகாலன்.

“உன்னால் எப்படிச் சிரிக்க முடிகிறது, கரிகாலா? எனது தலைமை அமைச்சர் மற்றும் பரமேஸ்வரனின் எச்சரிக்கைகளை உதாசீனம்

https://telegram.me/aedahamlibrary

செய்து, எனது அண்ணனான உன் மீது பாசத்தைப் பொழிந்தேன். ஆனால் தொடர்ந்து நீ எனக்கு எதிராகவே செயலாற்றி வருகிறாய். எனக்கு துரோகம் செய்தாலும் பரவாயில்லை. அத்திமலையானுக்கும், உனக்கு அடைக்கலம் தந்த முக்கூடல் கடிகைக்கும் அல்லவா துரோகம் இழைத்து விட்டாய்... நீ இப்படிச் செய்யலாமா?” தனது வாளினை நீட்டியபடி இளந்திரையன் கேட்க, கரிகாலன் அவனது எண்ண ஓட்டத்தைப் புரிந்துகொண்டவனாக முன்னே வந்து இளந்திரையன் முன்பாக தனது மேலாடையை நீக்கினான். அவனது புஜத்தில் ஆழமான வெட்டுக்காயம் ஒன்று காணப்பட அதில் குருதி உறைந்து போயிருந்தது.

"தம்பி! உனது மனதில் ஆயிரம் வினாக்கள் எழலாம். அனைத்துக்கும் விடையாக இருப்பது எனது புஜத்தில் இருக்கும் இந்த காயமே. நீ எனது சிற்றன்னையின் மகன். எனது மனைவியின் தங்கையின் கணவன். இந்த உறவுகளை எல்லாம் கடந்து, நான் வணங்கும் அத்திமலையான் கோயில் கொண்டிருக்கும் நாட்டையே ஆள்பவன். அத்திமலையானுக்கோ, உனது நாட்டுக்கோ தீவினை செய்வேன் என்று மனதிலும் நினையாதே!” -- கரிகாலன் கூறினான்.

"அப்படியென்றால் எனது ஐயங்களை தெளிவுபடுத்து! தலைச்சங்க நாண்மதியன் ஆலயத்தில் காணாமல் போனவன், இப்போது எனது ஏகாந்த அறையில் வந்து அமர்ந்திருக்கிறாய். இடையே எங்கு போயிருந்தாய்?” -- இளந்திரையன் அவனது முகத்தை உறுத்து நோக்கியபடி கேட்டான்.

"புரிந்தது தம்பி! உனது திருமணத்திற்கு நான் வரவில்லை என்கிற சினத்தினால்தான் இப்படிப் பேசுகிறாய் என்பதைப் புரிந்து கொண்டேன். முதியவர் வேடத்தில் உன்னை வந்து நான் வாழ்த்தியதை நீயும், நறுமலராளும், செங்கமலமும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் நான் அந்த வேடத்தைக் களையாமல் வைத்திருந்தேன்...” - கரிகாலன் கூறினான்.

திகைத்துப் போனான், இளந்திரையன். “எதற்காக மாறுவேடத்தில் வர வேண்டும்?”

“தம்பி! நமது இருவருக்கும் இடையே பகை நிலவ வேண்டும் என்று உன்னைச் சுற்றி இருப்பவர்கள் சதி செய்து வருவது நீ அறியாததா? எனது திருமணத்திற்காக நீ புகார் நகரம் வந்த போது இங்கே காஞ்சியில் ஒரு பெரிய சதித்திட்டம் தீட்டப்பட்டுள்ளது. உனது திருமணம் நடைபெறும் சமயத்தில், காஞ்சியில் கலவரத்தை உண்டாக்கி, பெரும்

https://telegram.me/aedahamlibrary

புரட்சியினை வெடிக்கச் செய்து, என்னை கொலை செய்து, உன்னையும் சிறையில்

தள்ளிவிட திட்டம் தீட்டப்பட்டது. பதவியில் இருந்து விரட்டப்பட்ட புலுமாவி சதகரணியின் மகன் வெங்கய்ய சதகரணியை, உனக்குப் பதிலாக பதவியில் அமர்த்த திட்டம் தீட்டப்பட்டது. உனது பிரதம அமைச்சர் கோலவிக்கிரமர், பரமேஸ்வரன் அவனது தம்பி ம்ருத்யுஞ்சயன் ஆகியோர் தீட்டிய திட்டம் இது.

“உனக்குத் தெரியாத ஒரு தகவலை இப்போது கூறுகிறேன். எனது தந்தை இளஞ்சேட் சென்னியை இருங்கோவேளுடன் இணைந்து கொன்ற எனது சிற்றப்பன் ஆத்திவளவனின் மகள் தான் பரமேஸ்வரனின் மனைவி பொன்னுருகு. எனது தங்கை அவள். நாமெல்லாம் தலைச்சங்க நாண்மதியத்தில் தரிசனம் செய்து கொண்டிருந்த போது, பொன்னுருகு என்னைத் தேடி வந்திருந்தாள். காஞ்சியில் என்னை கொலை செய்வதற்கு நடத்தப்படும் சதியைப் பற்றியும், உனது ஆட்சியை வீழ்த்துவதற்கு நடைபெறும் முயற்சியைப் பற்றியும் கூறினாள்.

"அண்ணா! உனது தந்தைக்கு எனது தந்தை இழைத்த துரோகத்திற்கு பரிகாரமாகத்தான் உன்னை காப்பாற்றுவதற்காக புகார் நகரம் புறப்பட்டு வந்தேன். நீங்கள் திருமணம் முடிந்து தலைச்சங்கம் வரப்போவதாக அறிந்து அங்கே வந்து தங்களுக்காகக் காத்திருந்தேன்!” என்று கண்ணீர்விட்டு அழுதாள், பொன்னுருகு. எனவேதான், அவர்களின் சதியை முறியடிக்க வேண்டும் என்பதற்காகவே நான் தலைச்சங்கத்திலிருந்து காஞ்சிக்கு இரகசியமாக போனேன்.

"இளந்திரையா! முக்கூடல் கடிகையில் வெடித்த கலவரம், அத்தியூர், தருமநகரம் என்று பரவ வேண்டும் என்று எதிர்பார்த்து காத்திருந்தார்கள், கோலவிக்கிரமரும் பரமேஸ்வரனும். ஆனால், களரி வீரர்களைக் கொண்டே அந்த கலவரத்தை நான் ஒடுக்கிவிட்டேன்! கலகக்காரர்களையும் அடக்கி எனது கட்டுப்பாட்டில் சிறை வைத்திருக்கிறேன். வாட்சண்டையின் போது ம்ருத்யுஞ்சயன் ஏற்படுத்திய காயம்தான் இது. சதித்திட்டத்தின் ஊற்றுக்கண்ணாக இருந்த பரமேஸ்வரனின் அன்பு தம்பி ம்ருத்யுஞ்சயன் இப்போது, எனது கைதி!” கரிகாலன் தம்பியை பரிவுடன் நோக்கியபடி கூறினான்.

மலைத்துப் போய் நின்றான், இளந்திரையன். இவனது முகத்தின் முன்பாகவே இவ்வளவு காரியங்கள் நடந்திருக்கின்றனவா என்ன?

https://telegram.me/aedahamlibrary

அவனையும் அறியாமல் தான் நீட்டிக் கொண்டிருந்த வாளினை மீண்டும் உறையில் சொருகினான், இளந்திரையன். ஆனாலும் கரிகாலன் சொல்வதை நம்புவதா வேண்டாமா என்பது போன்று நோக்கினான்.

“நீ கலவரத்தை அடக்கினாய் என்று கூறுகிறாய். ஆனால் என்ன பிரயோஜனம்? அத்திமலையானின் ஸ்ரீதள மணி களவாடப்பட்டுவிட்டதே?”

“நீ இன்னும் உனது திருமணப் பரிசுகளை பிரித்துப் பார்க்கவில்லை போலும். என்னுடன் வா! உனக்கு ஒன்றை காட்டுகிறேன்!” -- கரிகாலன் தனது தம்பியின் கரத்தைப் பற்றி இழுத்துக்கொண்டு அந்தப்புரத்தை நோக்கி நடந்தான். தங்கள் கணவன்மார்கள் ஒன்றாக வருவதை அதிசயத்துடன் பார்த்தபடி நறுமலராளும், செங்கமலமும் நிற்க, கரிகாலன் இளந்திரையனை பரிசுப்பொருட்கள் வைக்கப்பட்டிருந்த மேஜையின் முன்பாக நிறுத்தினான். தான் முதியவரின் வேடத்தில் கொடுத்திருந்த அந்த வெண்பட்டுத் துணி மூட்டையை அவனிடம் எடுத்து நீட்டினான்.

“இந்தத் துணி மூட்டையைப் பிரித்துப் பார்!” -- கரிகாலன் கூற, இளந்திரையன் மூட்டையைப் பிரித்தான். ஒரு மூங்கில் பெட்டியில் காணாமல் போன ஸ்ரீதள மணி தகதகத்துக் கொண்டிருந்தது.

“எனது அத்திமலையானின் ஆபரணத்தை நான் களவாட முயன்றதாக உன்னிடம் தெரிவிக்கப்பட்டிருக்கும். முக்கூடல் கடிகையில் கலவரத்தை துவக்கி ஸ்ரீதள மணியை ம்ருத்யுஞ்சயன் களவாடிக், கொண்டிருந்த போதுதான் அவனை எதிர் கொண்டேன். ஸ்ரீதள மணியைக் கைப்பற்றி அதனை பத்திரப்படுத்தினேன். ம்ருத்யுஞ்சயனுடன் கலகக்காரர்களை ஒடுக்கி, சிறை வைத்துவிட்டு, முதியவரின் வேடத்தில் உனது திருமணத்திற்கு வந்து, ஸ்ரீதள மணியை உனது திருமணப் பரிசாக அளித்தேன். முதியவராக வேடமிட்டு நான் வரவில்லையென்றால், என்னை கொல்வதற்காக பரமேஸ்வரன் ஏற்பாடு செய்திருந்த ஆட்கள் என்னைத் தீர்த்துக் கட்டியிருப்பார்கள். உன்னையும் உனது ஆட்சியையும், அத்திவரதனின் ஆபரணத்தையும் காக்கவே நான் இவ்வளவு சிரமங்களை மேற் கொண்டேன் தம்பி! நடந்தது அனைத்தையும் நான் கூறி விட்டேன். உனது ஐயங்கள் அனைத்தும் நீங்கியிருக்கும் என நம்புகிறேன். உனது காவலர்களை அனுப்பு. ம்ருத்யுஞ்சயனையும், கலகக்காரர்களையும் ஒப்புவிக்கிறேன்!” - கரிகாலன் சொல்ல, கலங்கிய கண்களுடன் பாய்ந்து சென்று தனது அண்ணனைக் கட்டிக் கொண்டான், இளந்திரையன்.

https://telegram.me/aedahamlibrary

“எனக்கு அனுபவம் போதவில்லை, அண்ணா! அசலை போலி என்றும் போலியை அசல் என்று நம்பும் ஒரு எடுப்பார் கைப்பிள்ளையாக இருக்கிறேன். பரமேஸ்வரன் இவ்வளவு சதிகளை செய்வான் என்று நான் இம்மியும் எதிர்பார்க்கவில்லை. தங்களை சந்தேகப்பட்டதற்கு என்னை மன்னியுங்கள் அண்ணா! எனது ஆட்சியை மட்டும் நீங்கள் காப்பாற்றவில்லை. ஸ்ரீதள மணி களவு போயிருந்தால் எனக்கு எவ்வளவு பெரிய அபவாதம் ஏற்பட்டிருக்கும்? என்னையும், எனது நாட்டையும், காப்பாற்றிய தங்களுக்கு, இனி எனது அன்பைத் தவிர வேறு எதனை என்னால் தர முடியும்?” கண்ணீர் விட்டபடி தனது தோளில் சரிந்த இளந்திரையனை பாசத்துடன் தட்டிக் கொடுத்தான்.

“எனது தங்கை பொன்னுருகு மட்டும் இந்த சதித்திட்டத்தைப் பற்றி என்னிடம் கூறவில்லையென்றால், பல அனர்த்தங்கள் நேர்ந்திருக்கும், இளந்திரையா! நாம் இருவரும் அவளுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும். பொன்னுருகுவின் நல்ல உள்ளத்தால் எனது சிற்றப்பன் மீதுள்ள கோபம் கூட எனக்குத் தீர்ந்துவிட்டது!” நெகிழ்ச்சியுடன் கூறினான், கரிகாலன்.

பழமுதிர்சோலையில் துவங்கி முக்கூடல் கடிகை வரை தொடரும் சுரங்கத்தில் ம்ருத்யுஞ்சயனையும், கலகக்காரர்களையும் சிறை வைத்திருந்தான், கரிகாலன். அவர்களை கைது செய்தனர், பல்லவ காவல் படையினர். தனது தம்பி கரிகாலனிடம் சிக்கி, தனது சதிகளும் அம்பலமாகிவிட்டன என்பதை அறிந்ததும், தப்பி ஓட முயன்ற பரமேஸ்வரன் மாவிலக்கை துறைமுகத்திற்கு தப்பி ஓடும் போது சுற்றி வளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டான்.

கோலவிக்கிரமரும் பதவி நீக்கம் செய்யப்பட்டு, போஜகன் புதிய தலைமை அமைச்சராகப் பதவி ஏற்றான். பரத்வாஜ சதகரணி ராஜகுரு பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

புதிய மனைவி, புதிய தலைமை அமைச்சர், புதிய ராஜகுரு, என்று எல்லாம் புதிதாகக் கொண்டு புதிய வாழ்க்கையைத் துவங்கினான், இளந்திரையன்.

கரிகாலன் புகார் நகருக்கு புறப்படும் போது, எல்லை வரை உடன் வந்து வழியனுப்பினான், இளந்திரையன்.

"இளந்திரையா! நானும் நீயும் மட்டும் சகோதரர்கள் இல்லை. நமது நாடுகளும் சகோதர நாடுகள் தான். உன்னைக் காப்பது எனது கடமை. அத்திமலையான் அருளால் நான் வடபுலத்தின் மீது படை எடுத்துச்

https://telegram.me/aedahamlibrary

சென்று நமது பெருமைகளை நிலைநாட்டுவேன். அப்போது எனக்கு நீதான் பக்கபலமாகத் திகழப் போகிறாய். அத்திமலையானை பாதுகாப்புடன் பார்த்துக் கொள். அவன் பாதுகாப்பாக இருப்பதில்தான் நமது நாடுகளின் பாதுகாப்பு இருக்கிறது!" என்றான்.

கரிகாலனின் ஆலோசனைப்படி, ஸ்ரீதள மணி அரண்மனையிலேயே பத்திரப்படுத்தி வைக்கப்பட்டது. கரிகாலனும், இளந்திரையனும் சேர்ந்து அத்தியூரானின் பாதுகாப்பிற்காக சில ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். அந்த பாதுகாப்பு ரகசியங்களை அவர்கள் மட்டுமே அறிவார்கள். அத்தியூரானின் பாதுகாப்பினை பலப்படுத்திவிட்டோம் என்கிற நிம்மதியில் தனது சோழ தலைநகருக்கு நிம்மதியாகச் சென்று கொண்டிருந்தான், கரிகாலன்.

[1] அத்திமலைத் தேவன் முதல் பாகத்தில் விஷ்ணுகுப்தன் என்கிற சாணக்கியன் வேகவதி நதிக்கரையில் அத்திமலையிலிருந்து புறப்பட்ட ஒரு ஒளிவட்டத்தை கண்டான் அல்லவா. அந்த ஒளி ஸ்ரீதள மணியின் யட்சாஷி என்கிற யட்ச நேத்திரங்கள் என்னும் உயர்ரக கற்களில் இருந்து புறப்பட்டதுதான். அவனது தாய் சானேஷ்வரி குறிப்பிட்டிருந்த பதின்மூன்றாவது தாரகை சாங்கியமும் இந்த அஸ்தமணி சாங்கியம்தான். அஸ்த நட்சத்திரத்தன்று, அத்திமலைத் தேவனின் தேவ உடும்பர பிரதிமைக்கு ஸ்ரீதள மணியை அணிவித்து, திருமகளின் வடிவில் உள்ள யட்சாட்சி கற்களுக்கு பால் அபிஷேகம் செய்ய வேண்டும். உடனே அந்த கற்கள் பிரகாசிக்கத் துவங்கும். அத்திமலை முழுவதும், அந்த தேஜஸ் பரவி, ஆலயமே ஆற்றலின் உறைவிடமாகத் திகழும்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 21. ஒரு வசீகரன்... ஒரு வசீகரி

வர்மக்கலையை பிரயோகித்து வல்லபனை வசியம் செய்து, அவனை மலைமீதிருந்து குதிக்க வைத்து, பத்ரஷீலாவின் கால்களையும் முடக்கிவிட்டு, பரமபுருஷனும், ஆம்ராவும் அத்தியூரை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தனர். மிகவும் சுந்தர புருஷனான பரமனை தனது வசப்படுத்தி விட்டோம் என்கிற பெருமையில் ஆம்ரா நடக்க, பேரழகு மிக்க ஆம்ராவே தனக்குக் கிடைத்துவிட்டாள் என்கிற குதூகலத்துடன் பரமனும் நடந்து கொண்டிருந்தான்.

மலையில் இருந்து குதித்து பரிதாபமாக உயிரைவிட்ட வல்லபனையும், காட்டில் கால் முடக்கப்பட்டு கிடக்கும் பத்ரஷீலாவையும் ஒருகணம் நினைத்துப் பார்த்தான் பரமன். என்ன இருந்தாலும் முன்பு காதலித்திருந்த குருவின் பெண் அல்லவா? சற்றே மனதில் பச்சாதாபம் எழ, தன்னுடன் நடக்கும் ஆம்ராவை நோக்கினான்.

"முகுந்தநாயகரை பார்த்துக்கொள்ள யாரும் இல்லையே. ஒருவேளை பத்ரஷீலாவை திருப்பி அனுப்பியிருக்கலாமோ?" என்றவனை உறுத்துப் பார்த்தாள், ஆம்ரா.

"சில அறுவடைகளை மேற்கொள்ள இருக்கும் போது களை எடுத்தே தீர வேண்டும். களை எடுக்க வேண்டுமே என்று கவலைப்பட்டால் எந்த காரியமும் சித்திக்காது. நீ ஏன் நடந்து வந்த பாதையை திரும்பிப் பார்க்கிறாய்? எதிர்காலத்தை நினை. அத்தியூரில் தேவ உடும்பரத்தைக் கைப்பற்றி எடுத்துக்கொண்டு புத்தகயைக்கு நாம் பயணிக்கப் போகிறோம். புத்த கயையில் தேவ உடும்பரத்தை ஒப்படைத்துவிட்டு, புஷ்பபுரத்தில் புதிய வாழ்வைத் தொடங்கப் போகிறோம்" என்றவள் அவனது தோளினில் தனது சிரசை சரித்து, அவனை கிறங்க வைத்தாள்.

"இன்றிரவு நாம் இந்த அடவியில் எங்காவது தங்க வேண்டுமே! நல்ல பாதுகாப்பான இடம் ஒன்றை பார்!" ஆம்ரா கட்டளையிட, தலையசைத்த பரமபுருஷன் சுற்றுமுற்றும் பார்த்தபடி நடந்தான்.

சூரியன் அஸ்தமிக்கும் வேளையில் சரியாக முந்திரிப்பூ மலை தொடர்ச்சியின் ஒரு மலையடிவாரத்திற்கு வந்தனர். இரு மலைகளுக்கிடையே, சிறிய குன்று போல, உயரத்தில் ஒரு கற்பாறை குகை ஒன்று தென்பட்டது.

https://telegram.me/aedahamlibrary

"அதோ பார் ஆம்ரா! ஒரு மலைக்குகை இருக்கிறது. அங்கே இரவைக் கழிப்போம்!" பரமன் கூறினான்.

"எச்சரிக்கை தேவை, பரமனே! பகல் நேரங்களில் உறங்கிவிட்டு, மாலை வேட்டையாட கிளம்பும் மிருகங்கள் உள்ளே இருக்கலாம். எனவே அந்தக் குகையின் வாயிலில் தீ மூட்டு. மிருகங்கள் ஏதாவது உள்ளே இருந்தால் வெளியே போய்விடும்!" அடவியில் இரண்டு வருடங்களை கழித்திருந்த அனுபவத்தில் ஆம்ரா கூற, பரமன் சுள்ளிகளைச் சேகரிக்கத் துவங்கினான்.

ஆம்ரா மகாராணி போன்று ஒரு பாறையில் அமர்ந்து கொள்ள, பரமனே சுள்ளிகளைச் சேகரிப்பதற்கு இங்கும் அங்கும் அலைய வேண்டியிருந்தது. இந்த இடத்தில் பத்ரஷீலா இருந்திருந்தால், அவளே இவனை அமர வைத்துவிட்டு, சுள்ளிகளை தான் சேகரித்திருப்பாள். குணவதிகளை மனையாளாக அடையும் ஆண்களுக்கு ராஜ வாழ்க்கை கிட்டும். அது தெரிந்தும், அவர்கள் பேரழகிகளை மோகித்து அவர்களின் பணியாட்களாக அவர்களது காலடியில் கிடக்கவே பிரியப்படுகின்றனர்.

ஆம்ரபாலியை பரமன் ஓரக்கண்களால் பார்க்க, அமர்ந்த நிலையிலேயே கண்களை மூடி உறங்கிக் கொண்டிருந்தாள். உறங்கிக் கொண்டிருந்தாளோ இல்லை எதிர்காலத்திற்குத் திட்டங்களை வகுத்துக் கொண்டிருந்தாளோ?

சுள்ளிகளைச் சேகரித்து தனது மடியில் பத்திரப்படுத்தியிருந்த சிக்கிமுக்கி கற்களை உரசி தீயை உருவாக்கினான். குகையின் வாயிலில் கொழுந்துவிட்டெரிந்த தீ, உள்ளே வெளிச்சத்தையும், வெப்பத்தையும் பாய்ச்ச ஒரு கரடி வெளியே வந்து தீயை பார்த்ததும் பதற்றத்துடன் காடுகளை நோக்கி ஓடி மறைந்தது.

"நல்லவேளை! கரடி உள்ளே இருப்பது தெரியாமல் நாம் உள்ளே போய் இருந்தால்?" - பரமபுருஷன் நிம்மதி பெருமூச்சு ஒன்றைச் சிந்தினான்.

"நமக்கு இடைஞ்சலாக உள்ள எல்லா கரடிகளும் இப்படித்தான் ஓடி மறையும். வா! பரமபுருஷா! நமது பள்ளியறைக்குப் போவோம்!" என்றபடி பரமனை அணைக்க, அவளது இடையை தனது உறுதியான கரத்தினால் அணைத்தபடி குகையை நோக்கி நடந்தான்.

குகையினுள் கதகதப்பாக இருந்தது. உள்ளே நுழைந்ததும், வழியில் தான் பறித்து வைத்திருந்த கனிகளை ஆம்ராவுக்கும் கொடுத்து தானும் உண்டான், பரமபுருஷன்.

https://telegram.me/aedahamlibrary

வெளியே இன்னும் தீ எரிந்து கொண்டிருக்க, இன்னும் சுள்ளிகளைச் சேகரித்து அதில் போட்டான். தீ இன்னும் கொழுந்துவிட்டெரிய, மீண்டும் குகையினுள் நுழைந்த போது ஆம்ரா குகையில் பிறந்த மேனியாக சயன கோலத்தில் கிடந்தாள். பரமன் அவளைக் கண்டு உறைந்து போய் நின்றான்.

“ஆம்ரா! நீ புத்த தர்மத்தைத்தானே கடைப்பிடிக்கின்றாய். இங்கே திகம்பர சாக்கியத்தை சேர்ந்தவளைப் போன்று கிடக்கின்றாயே?” - பரமனது குரல் நடுங்கியது.

"வைதீகம் அரை நிர்வாணம். பௌத்தம் முக்கால் நிர்வாணம். சாக்கியம் முழு நிர்வாணம். மார்க்கங்கள் அனைத்துமே நாம் அணியும் வஸ்திரங்களைப் போன்றவை. இறுதியில் மிஞ்சுவது நிர்வாணம்தான்... அதைத்தான் நான் செய்திருக்கிறேன். இப்போது நான் மன்மத மார்க்கத்தை மட்டுமே சேர்ந்தவள். உனது அரை வரையில் உள்ள மதத்தை நீக்கிவிட்டு, என்னுடன் சயனிக்க வா! இருவரும் சேர்ந்து மதனோத்சவத்தை நிகழ்த்துவோம்.” - ஆம்ரா கூற, வெலவெலத்துப் போனான், பரமபுருஷன்.

"பரமபுருஷா! ஒரு புருஷனுக்கு உரிய சகல அம்சங்களையும் இந்த இளம்வயதில் கொண்டிருக்கிறாய். இதுவரை எந்த புருஷனும் எனது மனதைத் தொட்டவனில்லை. எனது மனதைத் தீண்டிய முதல் புருஷன் நீயே! எனவேதான் வயதில் இளையவனாக இருந்தாலும், என்னை உனக்கு உரியவளாக மாற்ற நினைக்கிறேன். உன்னைவிட சகல அம்சங்களையும் பூரணமாகக் கொண்ட ஒரு புருஷனை இனிமேல் எங்கே சந்திக்கப் போகிறேன். எனவே, உலகின் தலைசிறந்த புருஷன் என்னை ஆட்கொண்டான் என்கிற மனநிறைவுடன் மிகுதி நாட்களை கழிக்க எண்ணுகிறேன். வா!” ஆம்ரா அழைத்தாள்.

உலகின் தலைசிறந்த புருஷன் என்று ஆம்ராவின் வாயினால் புகழ்ந்துரைக்கப்பட்டதும் தன்னை மறந்தான். அவனும், திகம்பரத்தை ஏற்றவனைப் போன்று தனது வஸ்திரங்களை அகற்றினான். வைதீகமும், பௌத்தமும், திகம்பரத்தில் இணைய, குகையின் வாயிலில் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்த தீ, காமாக்னியாக வெப்பத்தை உள்ளே அனுப்பியது. அந்த வெப்பம் அவர்களை தகிக்க, மதனோத்சவம் அங்கே விமரிசையாக நடந்து கொண்டிருந்தது.

வாழ்க்கையில் உச்ச இன்பத்தை அனுபவித்து விட்டால், அடுத்த முறை அதே இன்பத்தை அனுபவிக்கும் போது அதில் சற்றே அசுவாரசியம்

https://telegram.me/aedahamlibrary

தோன்றும். முழுவதுமாக கிரகணம் பீடித்தால், அடுத்தது விடத்தானே வேண்டும். ஏழரைச் சனியும் பிடித்தவுடன் எப்போது விடும் என்றுதானே யோசனைகள் தோன்றும்.

பரமபுருஷன் வாழ்வின் உச்ச இன்பத்தை அந்தக் குகையில் அன்றிரவை அனுபவித்துவிட்டான். இனி அவனுக்கு உச்ச துன்பம்தான் என்று கூறுவது போன்று ஒரு காட்டுக்கொள்ளி எறும்பு அவனது துடையில் கடிக்க, உறக்கம் கலைந்து துடிதுடித்துப் போனான். எழுந்து அமர்ந்தவனது கண்கள் அருகே நோக்க, ஆம்ரா இல்லை.

எழுந்து தனது வேட்டியை அணிந்தபடி வெளியே செல்ல, அருகே ஓடிக் கொண்டிருந்த காட்டாற்றில் யாரோ 'தொபீர்' என்று குதித்து நீராடும் ஒலி கேட்க, ஆற்றை நோக்கி நடந்தான்.

ஆம்ராதான் நீராடிக் கொண்டிருந்தாள். இவன் கரையில் சென்று நிற்க, நீராடியபடி அவனைக் கிறக்கத்துடன பார்த்தாள்.

"பரமபுருஷா! உனக்கு ஏன் அவ்வளவு வெட்கம்? எனக்கும் நேற்று முதல் இரவு இல்லை. உனக்கும் முதல் இரவு இல்லை." அவனை கீழ்க்கண்களால் பார்த்தபடி நகைத்தாள்.

"இல்லை ஆம்ரா! எனக்கு நேற்றுதான் முதல் இரவு. பத்ரஷீலாவுடன் நான் இன்னும் வாழவே துவங்கியிருக்கவில்லை. எனது பிரம்மச்சர்யத்தை நீதான் பறித்துக் கொண்டாய்!" - பரமனின் குரலில் இன்னும் நடுக்கம் குறையவில்லை.

"போகட்டும் விடு! நீயும் நீராடிவிட்டு வா! உண்பதற்கு ஏதாவது கிடைக்கின்றதா என்று பார்ப்போம். பிறகு நமது அத்தியூர் பயணத்தை தொடருவோம்!" என்று கூறியபடி ஆம்ரா கரையேறினாள்.

நீராடிவிட்டு, கனிகளை உண்டபின் இருவரும் தங்களது பயணத்தைத் தொடர்ந்தனர். சற்று தூரமே சென்றிருப்பார்கள். திடீரென்று குரலில் பதற்றத்துடன் ஆம்ராவின் தோளினைப் பற்றினான், பரமன்.

"ஆம்ரா! அங்கே பார்! ஒற்றை யானை!" நடுக்கத்துடன் பரமன் கூற, திரும்பி நோக்கினாள் ஆம்ரா. அங்கே ஒற்றை யானை ஒன்று அவளை நோக்கி வந்து கொண்டிருந்தது. இவள் வசியம் செய்து சேர நாட்டின் எல்லைக்கு இவளை சுமந்து சென்ற அதே யானைதான்! வந்ததும் அவள் முன்பாக தனது துதிக்கையை உயர்த்தி மண்டியிட்டு அமர்ந்தது.

அதன் துதிக்கையை வருடிக் கொடுத்த ஆம்ரா, யானையின் மீது

https://telegram.me/aedahamlibrary

ஏறிக்கொண்டு பிரமிப்புடன் தன்னை வாய்பிளந்து பார்த்துக் கொண்டிருந்த பரமனைக் கேலியுடன் நோக்கினாள்.

“உனக்கும் வர்மக்கலை தெரியும். ஆனாலும் யானையைப் பார்த்து பதறுகின்றாய். எல்லா கலைகளை நீ அறிந்திருந்தும், நான் உனக்கு சகலத்தையும் போதிக்க வேண்டியுள்ளது. இந்த யானை எனது வசியத்தில் உள்ளது. தைரியமாக மேலே வா. இனி அத்தியூர் வரை நடக்க வேண்டியதில்லை. இந்த யானையே நம்மை அத்தியூர் எல்லைக்கு கொண்டு விட்டுவிடும்” என்றாள் ஆம்ரா. அதன் பிறகே துணிவுடன் யானையின் மீது ஏறினான் பரமன். அவர்களைச் சுமந்தபடி யானை சென்று கொண்டிருந்தது.

இரவு மட்டும் எங்காவது தங்கிவிட்டு, பகலில் பயணித்தனர் இருவரும்! இரவில் மதனோத்சவமும், பகலில் யானை மீது அம்பாரியுமாக அவர்களது பொழுது கழிந்தது. எவ்வளவு நாட்கள் இம்மாதிரிப் பயணித்தார்களோ -

ஒரு நாள் விடியற்காலை,

திஸ்ஸரக்காவுடன் இவள் தங்கியிருந்த குடில் கண்களில் பட, யானையின் மத்தகத்தில் தட்டிக் கொடுக்க, யானை நின்று மண்டியிட்டது.

"வா பரமா! எனக்கு வர்மக்கலையை போதித்த எனது ஆசான் திஸ்ஸரக்காவின் நினைவிடம் இங்கே உள்ளது. சென்று ஆசி கோருவோம்!” என்றபடி திஸ்ஸரக்காவின் சமாதியை நோக்கி நடந்தாள், ஆம்ரா. பரமனும் அவளை பின்தொடர்ந்தான்.

திஸ்ஸரக்காவின் சமாதியை வலம் வந்து அதன் எதிரே நின்று கரங்குவித்து கண்மூடி நின்றாள். பின்பு திரும்பி பரமனை நோக்கினாள்.

“என்ன பார்க்கிறாய்? நீயும் வர்மக்கலை அறிந்தவன் தானே. எனது ஆசானை வணங்கு. திஸ்ஸரக்கா மன்னர் அசோகனின் கடைக்குட்டி மனைவி. அதனை குறிப்பிட்டால் அவருக்கு சினம் பெருகும். எல்லா வகை வர்மங்களையும் அறிந்தவர். அசோகனையே தனது வர்மக்கலையால் கட்டிப்போட்டவர். இவரது ஆசியை கோரி வாழ்க்கையில் உன்னத நிலையை அடைவோம்!” - ஆம்ரா கூற, தலைவிதியே என்று பரமனும் வணங்கினான்.

வைதீக தர்மத்தில் சமாதிகளை வணங்கும் பழக்கம் இல்லைதான்.

https://telegram.me/aedahamlibrary

இருப்பினும் மனதுக்கு உகந்தவளின் கட்டளையைத் தட்ட முடியாமல் அந்த சமாதியை வணங்கினான், பரமன்.

அப்போது –

திடீரென்று ஆம்ராவுக்கு கண்கள் இருட்டிக்கொண்டு வந்தது. மயங்கிய நிலையில் பின்பாகச் சரிய, பரமன் அவளைத் தாங்கிப் பிடித்தான்.

"என்ன ஆனது, ஆம்ரா?" - பரமன் பதைபதைத்தான்.

ஆம்ரா பதில் கூறாமல் அப்படியே மண்டியிட, சட்டென்று வாயில் எடுக்கத்துவங்கினாள்.

பிறகு கண்களை மூடி அப்படியே படுத்துவிட்டாள். வர்மக்கலையை அறிந்தவர்களாயிற்றே. நாடிப் படிக்க தோன்றாமல் இருக்குமா? ஆம்ராவின் மணிக்கட்டை பிடித்து நாடி படித்தான். மலைக்குகைகளிலும், நீர்நிலைகளின் அருகிலும் இவர்கள் மன்மத ஆராதனை செய்ததன் விளைவு, இதோ அருள் கிடைத்து விட்டிருந்தது. மலைக்குகையில் இருவரின் நாடித்துடிப்புகளும் ஸ்ருதியுடனும், லயத்துடனும் ஒன்று இணைந்ததற்கு அடையாளமாக புதிய நாடி ஒலிப்பதை உணர்ந்தான். பரமனின் முகம் ஆனந்தத்தில் மலர்ந்தது.

"ஆம்ரா! எனது பிரம்மச்சரியம் எங்கும் போகவில்லை. உனது வயிற்றில் புதிய உருவெடுத்துக் கொண்டிருக்கிறது! என்னை தந்தையாக்கிவிட்டாய்!" - பரமன் கூற,

அவ்வளவுதான். கண்களை மூடி படுத்துக் கொண்டிருந்த ஆம்ரா உக்கிரத்தினால் முகம் இரத்தச் சிவப்பாக மாற, எழுந்து அமர்ந்தாள்.

"என்ன சொன்னாய்?" குரோதத்துடன் அவள் கேட்டாள்.

"நீ அம்மா ஆகப் போகிறாய்?" திகைப்புடன் கூறினான் பரமன்.

"அடப்பாவி! எனக்கு போய் குழந்தையா? நடனக் கலைக்கு அர்ப்பணம் செய்திருந்த எனது வாழ்க்கையை மாற்றிவிட்டாயே. எனக்கு எதற்கு குழந்தை? அரசியலிலும், நடனத்துறையிலும் சாதித்துக் கொண்டிருக்கும் எனது வயிற்றினை சரிய வைத்துவிட்டாயே. ஒரு வைதீகனின் வாரிசை சுமப்பதற்கா நான் பயன்படப் போகிறேன். இன்னும் ஒரு வருடத்திற்கு என்னால் எதுவும் செய்ய முடியாதே! இப்படிச் செய்துவிட்டாயே!"

"ஏன் இப்படிப் பரிதவிக்கிறாய், ஆம்ரா? மனம் உவந்து இருவரும் இணைந்தோம். மதனோத்சவத்திற்கு நீதானே அங்குரார்ப்பணம்

https://telegram.me/aedahamlibrary

செய்தாய். இப்போது எதற்கு பொங்குகின்றாய்? நீரும், நெல்மணியும், அக்னியில் வெந்தால், அன்னம் தோன்றுவது இயற்கைதானே?” - பரமன் கேட்டான்.

"உனது விளக்கத்தை யார் கேட்டார்கள்? எனது மேனியை கட்டுக்கோப்பாக வைத்திருக்கிறேன். குழந்தை ஒன்றை பெற்றுவிட்டால், எனது மேனி நிலைகுலைந்து போகுமே! எனது நடனக்கலை என்னாவது?” - புலம்பினாள் ஆம்ரா.

“இனி எதற்கு நடனமாட வேண்டும்? இருவரும் இல்லறத்தில் இறங்குவோம்!” - பரமன் கூறினான்.

“இல்லறமா? அதுவும் உன்னுடனா? நீ பிக்ஷைக்கு சென்று வந்தவுடன், உனது பாதங்களை அலம்பி, அந்த நீரை எனது சிரசில் புரோட்சித்துக்கொண்டு நீ உண்ணும் போது உனக்கு பனையோலை விசிறியால் விசிறிக்கொண்டு ஊழியம் செய்யும் அந்தணப் பெண் என்று என்னை நினைத்தாயா? மன்னர் தசரதனே என்னை மணந்து பட்டத்து அரசியாக இருத்திடத் துடித்தான், தெரியுமா? அவனையே நான் மறுத்தவள்!”

கோபத்தில் என்ன பேசுகிறோம் என்பதை அறியாமல் பேசினாள் ஆம்ரா.

பரமனுக்கும் எரிச்சல் ஏற்பட்டது. சட்டென்று தன்னை மறந்து பதிலுக்குக் கத்தத் துவங்கினான்.

“நீ பேரழகு படைத்தவள் என்பதற்காக நான் உனது காலடியில் கிடப்பேன் என்று நினைக்காதே. எனக்கும் வர்மக்கலைகள் தெரியும். நீதான் என்னை அடையத் துடித்தாய். இல்லையேல், நான் பத்ராவுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்திருப்பேன். என்னை குருத் துரோகம் செய்யத் தூண்டியதும் நீதான்... உன்னை விட மிகவும் இளையவனான எனது மதியை மயக்கி உறவு கொண்டது நீதான். இப்போது என்னை இகழ்ந்து பேசுகிறாய். உனது வயிற்றில் குழந்தை தோன்றியதற்கு நான் மட்டுமா காரணம்? உனக்கு விருப்பமில்லை என்றால், நான் மீண்டும் பத்ராவிடமே செல்கிறேன்." சினத்துடன் பரமன் கடைசியாக தனது பிரம்மாஸ்திரத்தை பிரயோகிக்க, சட்டென்று தனது நிலையை உணர்ந்தாள், ஆம்ரா... கர்ப்பிணியாக மாறிவிட்ட நிலையில், இவன் புறப்பட்டுச் சென்றுவிட்டால் பிறகு இவளது நிலை?

சட்டென்று குரலில் கெஞ்சலையும், குழைவையும் சேர்த்து அவனைக்

https://telegram.me/aedahamlibrary

காதலுடன் பார்த்தாள்.

“சுந்தர புருஷா! உனக்குத் தெரியாததா? கர்ப்பிணி பெண்களுக்கு காலையில் மனவழுத்தமும், உடல் வேதனைகளும் அதிகரிக்கும் என்று! வாயில் எடுத்ததாலும், உடல் களைப்பாலும் அவதியுற்று என்னை மறந்து பேசுகிறேன். இதற்காக கோபிக்கலாமா? என்னிடம் சற்று பொறுமை காட்டு!" என்று தனது கரங்களை அவனது கழுத்தில் மாலையாகப் போட்டாள். உடனே நெகிழ்ந்து போன பரமன், அவளை வாரி அணைத்தான்.

சுந்தரனின் கம்பீரத்தில் தன்னை இழந்தது உண்மை தான். ஆனால் இந்த மறையவனின் மனையாளாகத் திகழ்வதற்கா இவள் மவுரியத்திலிருந்து புறப்பட்டு வந்திருந்தாள்? சுகங்கள் தான் தேவையென்றால் மன்னன் தசரதனின் அந்தப்புரத்திலேயே இருந்திருக்கலாமே. புத்த மார்கத்தில் உள்ள ஆர்வத்தினாலும், மறைந்த தலைமை பிக்கு போதி மந்தாவிடம் தேவ உடும்பரத்தை கொண்டு வந்து புத்தர் சிலை ஒன்றை நிறுவுவதாகவும் மகிந்தா மற்றும் சங்கமித்தா தலைமையில் பிரதிக்ஞை எடுத்து கொண்டதால் மட்டுமே இவ்வளவு அல்லல்பட வேண்டியுள்ளது?

அமரஜோதியை சந்தித்து தங்களது பிரதிக்ஞையை நிறைவேற்ற வேண்டும் என்கிற துடிப்பு இவளிடம் அதிகரித்துக் கொண்டிருக்கும் வேளையில் இப்போது நாடியில் புதிய துடிப்பு கேட்கின்றதே. தனது வயிற்றில் உருவாகியிருக்கும் இந்த குழந்தை இவளது எதிர்காலத் திட்டங்களைக் கெடுக்கும். இந்த குழந்தை இவளுக்குத் தேவையில்லை. குழந்தையை கலைத்துவிட்டு, நாம் அத்தியூருக்கு பயணிக்கலாம். அதுவரை திஸ்ஸரக்காவின் குடிலில் தங்கியிருக்கலாம், என்று நினைத்தாள்.

"உனது குழந்தையை சுமக்க நான் பெரும் பாக்கியம் செய்திருக்க வேண்டும். ஆனால் இப்போது என் உடல்நிலை இருக்கும் நிலையில் என்னால் தொடர்ந்து நடக்க முடியாது. யானை மேலேயும் பயணிக்க இயலாது. எனவே, எனது ஆசானின் குடிலில் தங்கி, குழந்தையைப் பெற்றுக்கொண்டு பிறகு அத்தியூர் செல்வோம்!”

மிக அழகாகத் தனது தந்திர வலையை ஆம்ரா விரிக்க -

பரமன், அதில் சுலபமாகச் சிக்கிக்கொண்டான்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 22. ஆற்று மேடையில் ஒரு அந்திம நடனம்

பெண்மை பூரணத்துவத்தை பெறுவது தாய்மையில் தான். புள்ளிமான்களையும், பசுக்களையும் வேட்டை ஆடி உண்ணும் சிங்கங்கள் கூட, அவை சினைப்பட்டவையாக இருந்தால் அவற்றை ஒன்றும் செய்யாமல் போய்விடும் என்றெல்லாம் இலக்கியத்தில் படித்திருக்கிறான், பரமபுருஷன். தாய்மையின் அடையாளங்கள் ஆம்ராவின் உடலில் பூரித்திருக்க, அவற்றைக் கண்டு சிலாகிக்காமல், வெறுப்புடன் அமர்ந்திருந்தாள், ஆம்ரா.

"சை... என்ன வாழ்க்கை!" தனது முன்பாகக் காய் கனிகளை வைத்த பரமனை எரிச்சலுடன் நோக்கினாள் ஆம்ரா...

“உனது கம்பீரத்தில் மயங்கி உன்னுடன் படுத்ததற்கு எனக்கு இந்த தண்டனை தேவைதான். நான் நிச்சயம் உன்னிடம் மயங்கவில்லை. நீதான் வர்மக்கலையை பிரயோகித்து என்னை உன் வசப்படுத்தி விட்டாய். அதனால் ஏற்பட்ட விளைவுதான் இந்த குழந்தை? குழந்தையை கலைப்பதற்கும் நீ அனுமதிக்கமாட்டேன் என்கிறாய். இப்போதே சொல்லிவிட்டேன். எனக்கு வேண்டாத குழந்தை இது. இதனை நான் போஷிக்க முடியாது. இந்த குழந்தையைப் பெற்று உன்னிடம் கொடுத்துவிடுகிறேன். நீ எதையாவது செய்துகொள்!” வெறுப்பும், கசப்பும் குரலில் பொங்க, ஆம்ரா கூறினாள்.

“உடம்பு வேதனையில் இப்படித்தான் கூறுவாய், ஆம்ரா! ஆனால் குழந்தை பிறந்ததும், அதன் முகத்தைப் பார்த்ததும் நீ மனம் மாறிவிடுவாய். பெற்ற பாசம் உனக்கு பொங்கும்.” அவளை ஆறுதலாக பார்த்தபடி பேசினான், பரமன்.

"அந்த எண்ணத்தை வளர்த்துக் கொள்ளாதே. நீ என்னுடன் தொடர்ந்து பயணிக்கப் போகிறாய் என்றால், குழந்தையை மறந்துவிடு. உனக்கு குழந்தை முக்கியம் என்றால், என்னைவிட்டு நீங்கி உனது வழியே போய்விடு. எனக்கு பெரும் பொறுப்புகள் காத்திருக்கின்றன. எனது வாழ்வில் அரிய சாதனைகளைச் செய்து புத்த மார்கத்திற்கு நிரந்தர பொலிவினை ஏற்படுத்த எண்ணியிருக்கிறேன். குழந்தை பெற்று, முலைப்பால் கொடுக்கும் ஒரு இல்லற அடிமையாக என்னை மாற்ற எண்ணாதே!" கடுமையுடன் கூறினாள், ஆம்ரா.

"உயிர்களிடத்தில் அன்பை காட்ட வேண்டும் என்று கூறிய புத்தனின் மார்க்கத்தை விரும்புபவள், ஒரு குழந்தையை வெறுக்கச்

https://telegram.me/aedahamlibrary

செய்கின்றாயே. குழந்தையின் முகத்தில் காண மறுக்கும் பொலிவை புத்தனின் சிலையில் எங்ஙனம் காணுவாய்?" - பரமன் கேட்டான்.

"புத்தன் அன்பு செலுத்தச் சொன்னானே தவிர, பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ளச் சொல்லவில்லை. அதனால்தான் எனது வயிற்றில் உண்டான பந்தத்தை வெறுக்கிறேன்!" பரமனது அஸ்த்திரத்தைத் தடுத்து அவன் மீதே ஏவினாள் ஆம்ரா.

தொடர்ந்து அந்தக் குடிலில் ஆம்ராவுடன் கழித்த நாட்கள் பரமனுக்கு நரகானுபவமாக இருந்தது. அவளது உதிரத்தில் கரு வளர வளர, அவளது கோபங்களும், எரிச்சல்களும் அதிகரித்துக் கொண்டே இருந்தன. தன்னுடன் அவன் உறவாடியதால்தானே தனது உடல் நிலை கெட்டுவிட்டது என்பது போன்று, அவன் நின்றால் தவறு, அமர்ந்தால் குற்றம் என்று சாடிக் கொண்டே இருந்தாள், ஆம்ரா.

அவளது ஏச்சுகளும், பேச்சுகளும் அவனைத் திணறடித்தது. பரமன் அவளைவிட இளையவன்தானே? தாய்மையின் பிரச்னைகளை அவனுக்கு மட்டும் கையாளத் தெரியுமா என்ன? கணவனிடம் பக்தி செலுத்தும் பெண்ணே, பிரசவ காலங்களில் கணவனின் மீது வன்மம் கொள்வாள் என்று அறிந்திருக்கிறான். ஆனால், ஆம்ராவை போன்ற, ஆண்களை மதிக்காத பெண்கள், அதுவும் மனைவியாக கூடாமல், மோகத்திற்காக கூடியவளாக அந்தப் பெண் திகழும் போது, ஒரு இளம் வாலிபனால் எங்ஙனம் அவளை கையாள முடியும்?

ஒரு நாள் உடலுபாதையால் அவள் துடித்துக் கொண்டிருந்த போது, அவளது வேதனையை குறைக்க எண்ணி, அவளிடம் ஆறுதலுடன் பேச நினைத்தான், பரமன்.

"ஆம்ரா? நமக்கு பிள்ளை பிறக்குமா... பெண் பிறக்குமா?"

பரமன் கேட்டதும்தான் தாமதம். சீறிப் பாய்ந்தாள் ஆம்ரா.

"உனக்கு பிசாசுதான் பிறக்கும். என்னை சற்று நேரம் ஏகாந்தத்தில் விடு. உனது முகத்தைப் பார்த்தாலே, எனக்கு அருவருப்பாக இருக்கிறது. என்னை இந்த கதிக்கு ஆட்படுத்திவிட்டு, என்ன பிறக்கும் என்று கேள்வி வேறு கேட்கிறாயா? எல்லாம் அந்த திருலோச்சன பல்லவனால் வந்தது. அவன் மட்டும் எங்களை நாடு கடத்தாமல் இருந்திருந்தால், உனது பிரம்மஹத்தி முகத்தை கண்டிருப்பேனா? நான் தான் மூடமை நிறைந்தவள். இளவரசி சங்கமித்தாவுடன் இலங்கைக்கு போகாமல் எதையோ சாதிக்கப் போவதைப்போல் சேர நாட்டிற்கு வந்து உன்னிடம்

https://telegram.me/aedahamlibrary

சிக்கிக் கொண்டேன். என்ன... பார்க்கிறாய்? எனக்கு குருதி போக்கு உள்ளது. எனக்கு ஏராளமான வஸ்திரங்கள் தேவை. எங்காவது சென்று தேடி எடுத்து வா?" - ஓலமிட்டாள் ஆம்ரா.

பாவம் பரமபுருஷன்! இந்த வனாந்தரத்தில் என்ன செய்வான்? எங்கே போய் தேடுவான். குடிலைவிட்டு நீங்கி ஆற்றங்கரையை நோக்கி நடந்தான். ஆற்றோரமாகவே நடந்து சென்றான். ஆம்ராவுக்கு உதவக்கூடிய வஸ்திரங்கள் எதுவும் காட்டில் கிடைக்காது என்பதை புரிந்து கொள்ள அதிக நேரம் பிடிக்கவில்லை. என்ன செய்வது என்று தெரியாமல், ஆற்றங்கரை ஓரமாக நடந்து கொண்டே இருந்தான்.

அப்போது –

ஒரு இடத்தில் அந்த ஆறு விஸ்தாரமாக விரிய, ஆற்றின் நடுவே பாறைகள் ஆங்காங்கே தென்பட்டன. பாறைகளின் மீது பறவைகள் விளையாடியபடி இருக்க, அந்த இடம் அவனுக்கு ரம்மியமாகக் காட்சி தந்தது.

மனதினில் நிலவும் புழுக்கத்தை மறக்கடிக்கச் செய்யும் காட்சி. தெளிவான நீலவானில் சுடர்விடும் சூரியன் ஆற்றுநீரை தகதகக்கச் செய்து கொண்டிருந்தான். வெண்மை நிறப் பறவைகள் கூவியபடி நீரின் மையத்தில் உள்ள பாறைகளில் அமர்வதும், பறப்பதுமாக இருந்தன. திரும்பி தான் வந்த பாதையை நோக்கினான், பரமன். தங்களது குடில் கண்களில் படாதவாறு அடர்ந்த மரங்களும், செடிகளும் மறைக்க, சற்று நேரம் ஆம்ராவை மறக்க நினைத்தான்.

ஆற்றை நோக்க, ஆற்றின் மையத்தில் விரிக்கப்பட்ட மஞ்சத்தை போன்று ஒரு பெரிய பாறை சதுர வடிவில் காட்சி தந்தது. அந்த பாறையில் சென்று அமர்ந்து சற்று நேரம் கண்மூடி தியானம் செய்தால் என்ன? தியானம் செய்து வெகு நாட்களாகிவிட்டது. ஒருவேளை, தியானம் செய்தால் ஆம்ராவின் பிடிவாதங்களைச் சந்திக்க மனதில் வலு உண்டாகுமோ?

நல்லவேளையாக, அந்த சதுரப் பாறையில் பறவைகள் எதுவும் அமர்ந்திருக்கவில்லை. எனவே, அவன் எவ்விதத் தொந்தரவும் இன்றி ஆற்றின் நடுவே தியானம் செய்யலாம்.

பரமபுருஷன், ஆற்றில் இறங்கி அந்த சதுரப் பாறையை நோக்கி நடந்தான். காட்டாற்றில் சுழல்கள் உண்டாகுமே என்கிற அச்சத்தோடு எச்சரிக்கையுடன் ஒவ்வொரு அடியாக அளந்து வைத்தான். பிறகுதான்

https://telegram.me/aedahamlibrary

அவனுக்கு ஒரு உண்மை புரிந்தது. ஆற்றில் அந்தப் பகுதியில் நீரோட்டமே காணப்படவில்லை. அந்தப் பகுதியில் ஆறு விஸ்தாரமாகக் காணப்பட்டதன் காரணத்தையும் புரிந்து கொண்டான். இவர்களது குடில் வழியாக பாயும் அந்த காட்டாற்றின் ஒரு பகுதி அங்கே பள்ளமான பகுதியில் பாய்ந்து இயற்கை அமைத்து தந்த ஒரு ஏரியாக மாறியிருந்தது... ஆறு பாய்ந்து கொண்டிருக்கும் சலசல ஒலி பாறையின் மறுபக்கத்தில் எங்கோ கேட்டுக் கொண்டிருந்ததால், அந்தப் பகுதியில் சுழல்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை. இது வெறும் தேங்கிய ஆற்றின் நீர் என்பதை உணர்ந்து கொண்டான். துணிவுடன் அந்த பாறையை நோக்கி வேகமாக நடந்தான். அவனது இடுப்புவரைதான் நீர் இருந்தது. அந்த பாறையை அடைந்தவன் அதன் மீது ஏறினான். பாறையின் இந்தப்புறத்தில் அமைதியாக தேங்கி நின்ற நீர், மறுபுறத்தில் சுழித்து பொங்கி பாய்ந்து கொண்டு இருந்தது. ஒரு காலத்தில் இந்த பாறை வரை ஆற்றின் கரை நீண்டிருக்கும். பிறகு ஏற்பட்ட வெள்ளத்தால், பள்ளத்தில் நீர் பாய்ந்து அந்தப் பகுதி மூழ்கியிருக்க வேண்டும். பாறையின் மறுபுறத்தில் இறங்கினால் சுழித்து பாயும் ஆற்றின் சுழலில் சிக்கிக் கொள்வோம் என்பதை உணர்ந்தான். தியானம் செய்துவிட்டு எச்சரிக்கையுடன் மீண்டும் கரையேறிவிட வேண்டும் என்று நினைத்தபடி பாறையின் மையத்தில் அமர்ந்து கொண்டான்.

தனது சிந்தனையை நெற்றியின் நடுவில் வைத்து, தனது பார்வையைப் பாதியாக்கி நாசியின் முனையில் நோக்கியபடி, தியானத்தை துவக்கினான். பின்பாக ஓடிய ஆற்றின் சலசல ஒலியும், பறவைகளின் கூவலும், அந்த அமைதியான சூழ்நிலையும், அவனது மனதில் ரம்யத்தினை தோற்றுவிக்க, பரம்பொருளை நினைக்கத் துவங்கினான். ஆம்ராவின் எரிச்சலான குரலோசை இல்லாத சூழ்நிலை அவனுக்கு இதமாகத் தோன்ற, பாதியாக மூடிய கண்களை இன்னும் அழுத்தமாக மூடுவதற்கு எத்தனித்தான்.

'ஓ... ஓ.... ஓ...!'

அமைதியான அந்த சூழலில் காற்றைக் கிழித்துக் கொண்டு ஒரு குரல் எழும்பியது. திடுக்கிட்டு கண்விழித்த பரமன், சுற்றுமுற்றும் பார்க்க, ஒரு காட்டுவாசி மூங்கில் குழாயை ஆவேசமாக இவனை நோக்கி அசைத்துக் கொண்டிருந்தான்.

யார் அந்தக் காட்டுவாசி? எதற்காக இவனது தியானத்தைக் கலைக்கிறான்?

https://telegram.me/aedahamlibrary

அவனைக் குழப்பத்துடன் பார்த்த பரமன், எதற்காக அழைக்கிறாய் என்பது போன்று கையசைத்து சமிக்ஞை காட்டினான்.

மூங்கில் குழாயை இன்னும் பலமாக ஆட்டியவன், புரியாத மொழியில் எதையோ கூவ, திகைப்புடன் அவனையே வெறித்தான் பரமன். அவன் எதையோ உணர்த்த முயல்கிறான் என்பதைப் புரிந்து கொண்ட பரமன், சுற்றும்முற்றும் நோக்கினான்.

'ஓ... ஓ.... ஓ...!'

மீண்டும் கூவிய அந்த காட்டுவாசி, தனது மூங்கிலை கீழே போட்டுவிட்டு, இருகைகளையும் இவனை நோக்கி வீசத்தொடங்கினான்.

ஒருவேளை இவன், மனித மாமிசத்தை உண்பவனோ என்கிற அச்சம் கூட ஏற்பட்டது. அவனை தனது வர்மக்கலையை பிரயோகித்து வசப்படுத்தித் தப்பிக்க வேண்டியதுதான். ஆனால் இந்தப் பாறையிலிருந்து தொலைவில் இருக்கும் அவனை வசப்படுத்த முடியாது. அருகே சென்று நேராக அவனது கண்களுள் நோக்கி அவனை வசப்படுத்திவிட வேண்டும். தப்பிப்பதற்கு அதுவே சிறந்த வழி!

பரமன், மீண்டும் ஏரியில் இறங்கி அந்த காட்டுவாசியை நோக்கி நடந்தான். அந்த காட்டுவாசி விரைவாக வா என்பது போன்று இரண்டு கைகளையும் இன்னும் வேகமாக அசைத்தான். பரமன் கரையை நோக்கி நடக்க, சரியாக ஒரு கலைமான் ஏரியில் இறங்கி அவனைக் கடந்து சென்று, இவன் அமர்ந்திருந்த பாறையில் சென்று நின்றது.

அவன் திரும்பி அந்த கலைமானையே நோக்கிக் கொண்டிருக்க, அந்த மான் அந்த பாறையிலேயே அமர்ந்துவிட்டது. காட்டில் கூட நிம்மதியாக தியானம் செய்ய முடியவில்லையே. இந்த காட்டுவாசியை விரட்டிவிட்டு தியானம் செய்யலாம் என்றால், கலைமான் வந்து அந்த பாறையில் அமர்ந்துவிட்டதே.

மீண்டும் காட்டுவாசியை நோக்கி நடந்த பரமன், அவனது கண்களை குறிவைத்தபடி கரையேறினான். ஆனால் அந்த காட்டுவாசி இவனது கண்களை நோக்கினால்தானே? மருட்சியுடன் பாறையில் அமர்ந்திருந்த அந்த கலைமானையே நோக்கியபடி, தன்னிடம் வந்த பரமனின் தோளைப் பலமாக பற்றி அவனை அந்த பாறையை நோக்கி திருப்பினான்.

https://telegram.me/aedahamlibrary

பரமன் திகைப்புடன் அந்த பாறையை நோக்க, அதன் மீது அமர்ந்திருந்த கலைமான், தனது நாவால் நாசியை வருடியபடி இவர்களை நோட்டம் விட்டபடி அமர்ந்திருக்க, பரமன் திரும்பி காட்டுவாசியை நோக்கினான். அவனது கண்கள் பீதியால் தெறித்து விழுந்துவிடும் போல அந்த கலைமானையே வெறிக்க, ஏதோ விபரீதம் நடக்கப் போகிறது என்பதை உணர்ந்து பரமனும் அந்தக் கலைமானையே பார்த்தான்.

திடீரென்று –

பாறையின் மறுபுறம் பாய்ந்து கொண்டிருந்த ஆற்றில் இருந்து இராட்சத முதலை ஒன்று நீரில் இருந்து உயரத்தை நோக்கிப் பாய்ந்தது. அதன் முகம் பாறையில் அமர்ந்திருந்த கலைமானின் மீதே இருந்தது. முதலை மேலே பாய்ந்ததால் ஆற்றில் எழுந்த ஒலியும், நீரின் சுழற்சியும் ஏதோ பிரச்னை என்பதை அந்த கலைமானுக்கு உணர்த்த, சட்டென்று குழப்பத்துடன் எழுந்து சுற்றுமுற்றும் பார்த்தது. ஆனால் மேலிருந்து தன்னை நோக்கிப் பாய்ந்து வரும் முதலையை அது காணவில்லை. உயரத்தில் பாய்ந்த அந்த முதலை மீண்டும் ஆற்றை நோக்கி விழுந்த போது, பாறையின் மீது நின்றிருந்த கலைமானையும் கவ்வியபடி நீரில் விழுந்து மறைந்தது. நீலமாக பாய்ந்து கொண்டிருந்த ஆற்றின் நீர் செம்மையாக மாறுவதைப் பார்த்து வெலவெலத்துப் போனான் பரமன்.

அந்தப் பாறையில் அமர்ந்திருந்த இவனைத்தான் முதலை குறிவைத்திருக்க வேண்டும். சமயத்தில் அங்கே வந்த அந்த காட்டுவாசி இவனை எச்சரிக்க, இவன் இறங்கிச் செல்ல, அந்த இடத்தில் வந்து அமர்ந்த கலைமான் முதலைக்கு இரையாகிவிட்டிருந்தது.

மேனி நடுங்க, “ஓ...!” என்று அலறியபடி அந்த காட்டுவாசியின் காலில் விழுந்தான் பரமன். அவனை எப்படித் தேற்றுவது என்று புரியாமல் அந்த காட்டுவாசி தடுமாற, வெகு நேரம் கதறிக் கொண்டிருந்தான் பரமன். தனது மூங்கில் குழாயில் இருந்த நீரை அவனது வாயில் வைக்க, சற்று நீரை அருந்தினான், பரமன்.

எவ்வளவு பெரிய கண்டத்திலிருந்து இவன் தப்பியிருக்கிறான். அந்த காட்டுவாசி மட்டும் நீர் சேந்த ஆற்றுக்கு வரவில்லை என்றால், தியானம் செய்து கொண்டிருந்த இவன் கதி?

மீண்டும் காட்டுவாசியை அணைத்துக் கொண்டான், பரமன். அவனுடன் சமிக்ஞையில் பேச, தனது குடிலை நோக்கி கையசைத்தான் பரமன். தனது குடிலில் ஒரு கர்ப்பிணி இருப்பதையும், அவளுக்கு வஸ்திரங்கள் தேவைப்படுவதையும் குறிப்பால் உணர்த்தினான் பரமன்.

https://telegram.me/aedahamlibrary

அந்த காட்டுவாசியின் முகாம் மிக அருகிலேயேதான் இருந்தது. அவனது முகாமில் பெண்கள் இருப்பதாகவும் அவனுடன் இருக்கும் பெண்ணை தங்கள் குடிலுக்கு அழைத்து வருமாறும் கூறினான், அந்த காட்டுவாசி. தன்னுடன் இருக்கும் பெண்ணால் அதிகம் நடக்க முடியாது என்று கூற, அந்த காட்டுவாசி சற்று நேரம் கண்களை மூடி யோசித்தான்.

அவன் மீண்டும் கண்களை திறந்த போது, அதில் ஒரு யோசனை பளிச்சிட்டது. தனது மார்பில் கைவைத்து "ஷம்பு" என்றவன், பரமனின் மார்பில் கைவைத்து என்ன என்பது போன்று வினவ, அவன் தனது பெயரை கேட்கிறான் என்பதை உணர்ந்தான், பரமன்.

"பரமபுருஷன்!" என்று அவன் கூற, தான் மீண்டும் வருவதாகக் கூறிவிட்டு, புறப்பட்டுச் சென்றான், அந்த காட்டுவாசி.

அன்று மாலை. இரவு தீ மூட்டுவதற்காக, சுள்ளிகளையும், சருகுகளையும் சேகரித்துக் கொண்டிருந்தான், பரமன். உள்ளே ஆம்ரா, ஆயாசத்துடன் சயனித்திருந்தாள்.

அப்போது காட்டுவாசிகளின் பாடல் சத்தம் தொலைவில் ஒலிப்பது கேட்டது. சயனித்திருந்த ஆம்ரா, வியப்புடன் எழுந்து மெதுவாக குடிலைவிட்டு வெளியே வந்தாள். பரமனும் வியப்புடன் பாடல் ஒலித்த திக்கில் கவனிக்க, சில வனவாசிகள் இவர்களது குடிலை நோக்கி வந்தார்கள்.

காலையில் இவனை காப்பாற்றியிருந்த அந்த ஷம்பு வழி காட்ட, நான்கு காட்டுவாசிகள் ஒரு நாற்காலியில் பிணைக்கப்பட்ட கொம்புகளை ஏந்தியபடி வந்தனர். உடன் ஒரு மூதாட்டியும் வந்திருந்தாள். அவள் அந்த காட்டுவாசிகளின் மருத்துவச்சி சூலி. ஆம்ராவை அந்த நாற்காலியில் அமர்த்திய அந்த காட்டுவாசிகள், அவளை சுமந்தபடி செல்ல, ஷம்புவுடன் முன்னால் நடந்தான், பரமன். அந்த மூதாட்டி சூலி ஆம்ராவை சுமந்து செல்பவர்களின் பின்பாக நடந்தாள்.

மருத்துவம் தெரிந்த ஒருத்தி அருகே இருக்கிறாள் என்கிற நினைவு ஆம்ராவுக்கு ஆறுதல் தர, சற்றே நிம்மதியுடன் பயணித்தாள்...

“இவர்தான் என்னை முதலையிடம் இருந்து காத்தவர்! இதோ இந்த ஆற்றங்கரையில்தான் முதலையிடம் சிக்கிக் கொள்ள இருந்தேன்.” பரமன் கூற 'நீ இருந்தால் என்ன, முதலையிடம் சிக்கியிருந்தால்தான் என்ன?' என்பது போல் எவ்வித உணர்ச்சியையும் முகத்தில் பிரதிபலிக்காமல், அந்த இடத்தை ரசித்தபடி கூறினாள்.

https://telegram.me/aedahamlibrary

“இந்த இடம் எவ்வளவு அழகாக இருக்கிறது. நடனமாடுவதற்கு ஏற்ற இடம்!” என்று சிலாகித்துக் கூறினாள் ஆம்ரா.

தான் உயிர் பிழைத்ததைப் பற்றி கூற, நடனமாட உகந்த இடம் என்று ஆம்ரா கூறியது, அவனுள் ஆத்திரத்தைக் கிளப்பியது. காட்டுவாசிகளின் எதிரே பிரச்னை வேண்டாம் என்று அமைதியாக நடையைத் தொடர்ந்தான், பரமன்.

இருவரும் வனவாசிகளின் முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். நிறைய முகங்களைப் பார்ப்பதற்கு சற்றே ஆறுதலாக இருந்தது. வனவாசிகளின் தலைவர் இருவரும் கணவன் மனைவி என நினைத்து இருவருக்கும் ராஜ உபசாரம் செய்து ஒரே ஜாகையில் தங்க வைத்தனர். துணைக்கு வனவாசிகள் இருக்கிறார்கள் என்கிற நினைப்பு பரமனின் பதற்றத்தை பெருமளவு குறைத்தது. ஆம்ராவை கவனிக்க என்று மருத்துவச்சி சூலி இரு பெண்களை அமர்த்தியிருந்ததால், ஆம்ராவும் பரமனைத் தொந்தரவு செய்யவில்லை.

“பரமா! குழந்தையை பெற்றுவிட்டு, இந்த வனவாசிகளிடமே தந்துவிட்டு, நாம் அத்தியூர் செல்லலாம். நீ எங்கள் சங்கத்தில் புத்த பிக்குவாக இணைந்து அத்தியூரில் பௌத்த மார்க்கத்தை பரப்பு. காலம் கனியும் போது தேவ உடும்பரத்துடன் புத்த கயைக்குச் செல்லுவோம்.” தங்களது வருங்காலத் திட்டத்தைக் கூறினாள், ஆம்ரா.

‘முதலையிடம் தப்பிவிட்டேன். ஆனால் இந்த ஆம்ராவின் கோரப்பிடியில் இருந்து தப்ப முடியாது போல இருக்கிறதே. இவளது அழகில் மயங்கியதற்கு இன்னும் என்னவெல்லாம் அனுபவிக்கப் போகின்றேனோ. பிறக்கும் குழந்தையை இங்கேயே வீசி எறிந்து விட்டு போகலாம் என்று இரக்கம் இல்லாமல் சொல்லும் இந்த கிராதகியை என்ன செய்வது? குழந்தை பிறக்கும் வரை பேசாமல் இருப்பதே உத்தமம். இல்லையேல் வயிற்றில் இருக்கும் குழந்தையை கொலை செய்ய ஏதாவது செய்துவிடுவாள். மௌனமாக அவளை நோக்கி தலையசைக்க மட்டுமே பரமனால் முடிந்தது.

பெற்றவள் கூட அவ்வளவு அக்கறையை செலுத்தியிருக்க மாட்டாள். சூலி ஆம்ராவைக் கண்ணுங் கருத்துமாக கவனித்து காலம் பார்த்து உணவும், மூலிகை மருந்துகளும் கொடுக்க, உடம்பில் இருந்த வேதனைகளும், ஆயாசமும் மறைந்து சற்றே சுறுசுறுப்புடன் காணப்பட்டாள் ஆம்ரா.

ஹேமந்தருதுவின் அறிகுறிகள் தென்படும் காலத்தில் ஆம்ராவுக்கு

https://telegram.me/aedahamlibrary

திடீரென்று ஒரு நாள் வலியெடுக்கத் துவங்கியது. வயது சற்று முதிர்ந்த நிலையில் ஆம்ரா குழந்தையை ஈன்றதால், சூலி மிகவும் சிரமப்பட்டுதான் பிரசவத்தை மேற்பார்வையிட்டாள்.

மூன்று பதின் வயதை நெருங்கிவிட்டிருந்தாள், ஆம்ரா. அசோகனின் அரண்மனையில் பதின்மூன்று பிராயத்தில் நாட்டியத் தாரகையாக தனது வாழ்வை துவங்கியவள், அசோகனின் மகன் இளவரசன் தசரதனின் காதலியாகத் திகழ்ந்தாள். அசோகனால் அத்தியூருக்குச் சென்ற குழுவில் ஆம்ரபாலியும் சேர்க்கப்பட, இளவரசன் மகிந்தா மற்றும் சங்கமித்தாவோடு அவள் அத்தியூர் வந்த போது, பதினெட்டு பிராயங்களில் அடியெடுத்து வைத்திருந்தாள். இரு பதின் வயதில் திருலோச்சன பல்லவனால் நாடு கடத்தப்பட்டு, இப்போது மூன்று பதின் பிராயங்களில் மீண்டும் அத்தியூர் சென்று தேவ உடும்பரத்துடன் புத்த கயைக்குத் திரும்பும் உத்வேகத்தினை கொண்டிருக்கும் வேளையில், வேண்டா விருப்பாக ஒரு குழந்தையை ஈன்றிருக்கிறாள்.

ஆம்ரா அழகிய பெண் குழந்தை ஒன்றை பெற்றாள். தன்னிடம் சூலி நீட்டிய குழந்தையை தலையை நிமிர்த்தி அவள் காணக்கூட இல்லை. கைவிரல்களின் நுனியில் இருந்து நகங்கள் நீக்கப்பட்டதும், நீக்கப்பட்ட நகங்களை யாராவது கையில் மீண்டும் வாங்குவார்களா என்பதை போன்று, தனது உடலில் இருந்து திரட்டப்பட்ட அந்த அழகு மலர்குவியலைத் திரும்பிக் கூட காணவில்லை ஆம்ரா.

ஆனால் அதற்கு நேர்மாறாக, சூலி நீட்டிய குழந்தையை நெகிழ்ச்சியுடன் கண்கள் பனிக்க கையில் வாங்கினான், பரமன்.

“குழந்தைக்கு என்ன பெயரிடலாம், ஆம்ரா?” ஒரு தந்தையின் பெருமிதத்துடன் கேட்க, அவனுக்கு ஆம்ரா பதிலே கூறவில்லை. மௌனமாக சாளரத்தின் வழியாக நீல வானத்தையே அவள் வெறித்துக் கொண்டிருந்தாள். வேறுவழியின்றி, குழந்தைக்கு தானே பெயரிட்டான், பரமபுருஷன்.

"நாவாய் முகுந்தனுக்கு கேயூரம் ஒன்றை அணிவித்திருப்பார்கள். கேயூரம் என்பது வைரங்களும், ரத்தினங்களும் பதித்த ஒரு வகை ஹாரம்... அந்த ஆபரணத்தை அணியும் போதெல்லாம் நாவாய் முகுந்தன் ஜொலிப்பான். அந்த கேயூரத்தைப் போன்று தகதகக்கும் எனது மகளை கேயுரா [1] என்றே அழைக்கிறேன்! கேயூரா... கேயூரா... கேயூரா!” மூன்று முறை குழந்தையின் காதில் கூற, சூலி மகிழ்ச்சியுடன் சிறிது தானியத்தை எடுத்து குழந்தையின் தலையில் தூவினாள். கேரா

https://telegram.me/aedahamlibrary

என்று தனது மொழியில் கேயூராவை விளித்தாள்.

"குழந்தைக்கு தாய்ப்பால் கொடுக்க வேண்டும்" என்று கூறியபடி கேயூராவை பரமனிடம் இருந்து வாங்கி, ஆம்ராவிடம் நீட்ட, அவள் அருவருப்புடன் குழந்தையை அப்பால் தள்ளினாள்.

"என்னிடம் அந்த அவலத்தை கொண்டு வராதே! அருவருப்பாக உள்ளது!" ஆம்ரா ஆவேசத்துடன் கூற, பரமனின் கட்டுப்பாடு தளர்ந்தது. -

"உனது தாய் உன்னை இப்படித்தான் தள்ளினாளா?" பரமன் வெகுண்டான்.

"எனது தாய் என்னை கலையுலகில் தள்ளினாள். கலையுலகிற்காகவே என்னை விரும்பிப் பெற்றுக் கொண்டாள். ஆனால் நான் இதனை விரும்பிப் பெறவில்லையே. கலைத்துவிடலாம் என்று கூறினேன். நீ கேட்கவில்லை. வேண்டுமென்றால் நீயே வளர்த்துக் கொள். இல்லையேல் உன்னைத் தின்ன முயன்ற அந்த முதலையிடமே வீசி எறிந்துவிடு. என்னை தொந்தரவு செய்யாதே!"

மனதில் சற்றும் ஈரமின்றி ஆம்ரா கூற, முதன் முறையாக அவளை அடியோடு வெறுத்தான், பரமன். வெளியே அழகிய தேகம் கொண்டிருக்கும் இவள்தான் உள்ளே எத்தனை அழுக்குகளையும், அவலங்களையும் கொண்டிருக்கிறாள். இவளுடன் இனி சேர்ந்து இருப்பது சாத்தியமில்லை. குழந்தையைக் கொன்றாலும் கொன்றுவிடுவாள்.

இவனது ஆசான் கூறியதைப் போன்று அத்தியூர் சென்று தேவ உடும்பரத்தை கண்டுபிடித்து புதிய சாம்ராஜ்யம் ஒன்றை நிறுவி சுகபோகங்களுடன் வாழ வேண்டும். எனது மகள் கேயூராவை ஒரு தேவதையைப் போன்று சீராட்டி வளர்க்க வேண்டும். கேயூரா தாய்ப் பால் குடிக்கும் பருவம் வரை இந்த காட்டுவாசிகளுடனேயே தங்கி, அவள் அன்னத்தை உண்ணத் துவங்கிய பிறகு, அத்தியூர் கிளம்பிப் போகலாம். அதுவரை இங்கே தங்குவதுதான் உத்தமம்! என்று முடிவு செய்தவன், ஆம்ராவை வெறுப்புடன் நோக்கினான்.

"நானும் எனது மகளும், இங்கேயே தங்கப் போகிறோம். குழந்தை வளரும் வரை நான் இங்கே இருப்பதற்கு தீர்மானித்துவிட்டேன். நீ உனது வழியே போகலாம்!" என்றபடி அவளை திரும்பிப் பாராமல் வெளியே சென்றான், பரமன்.

https://telegram.me/aedahamlibrary

உற்சாகத்துடன் அவன் சென்ற வழியை நோக்கினாள்.

"மீண்டும் நீ சுதந்திரமானவள். எந்த பந்தமும் உனக்கு இல்லை!" தனக்குள் கூறிக்கொண்டாள். இனி உன் வழியே நீ போகலாம். குழந்தையின் முகத்தைக் கூட இவள் காணவில்லை. அதன் முகத்தை கண்டால் பந்தம் ஏற்பட்டுவிடும். மனைவி மக்களை பிரிய முற்பட்ட சித்தார்த்தன் செல்வங்களின் முகத்தைத் திரும்பிப் பார்க்காமல் நடு இரவில் எழுந்து சென்றது போன்று, இவளும் வீராப்பாகக் குழந்தையின் முகத்தைக் காணவில்லை. புத்தனுக்கு இருந்த கட்டுப்பாடு தனக்கும் உள்ளது என்று மனதினுள் தன்னையே பாராட்டிக் கொண்டாள்.

அவளுக்கு எங்காவது தனியே சென்று நடனமாட வேண்டும் போல இருந்தது. காற்றின் இசைக்கேற்ப, ஆற்றின் பாய்ச்சலுக்கேற்ப, பறவைகளின் கூவல்களுக்கு ஏற்ப, மரங்கள் அசையும் ஒலிக்கேற்ப தான் நடனம் ஆடி தனது முழு சுதந்திரத்தை அனுபவிக்க வேண்டும் என்பது போன்று ஒரு வெறி அவளுள் தோன்றியது. குழந்தையை ஈன்ற பிறகு, முதன்முறையாக குடிலைவிட்டு வெளியே செல்லப் போகிறாள்.

பிரசவத்தால் துவண்டிருந்த கால்களுக்கு புத்துணர்வு அளிக்க நடனமாடியே தீர வேண்டும் என்கிற உத்வேகத்துடன் குடிலைவிட்டு நீங்கினாள்.

வெளியே சூலி, பத்திலி என்னும் பெண்ணிடம் கேயூராவை தந்து தாய்ப்பால் புகட்டச் சொல்ல, அந்தப் பெண்ணும் தனது குழந்தையை சூலியிடம் கொடுத்துவிட்டு, கேயூராவை வாங்கி, பால் புகட்டத் துவங்கினாள். பத்திலியை நன்றியுடன் நோக்கிய பரமன், தனது பார்வையை நாசுக்காக அவளிடமிருந்து விலக்கி குடிலை நோக்கிய போதுதான் வெளியே வந்து நின்ற ஆம்ராவை பார்த்தான்.

“பச்சை உடம்புக்காரி. வெளியே வராதே. குளிர் காற்று ஆகாது!" என்று எச்சரிக்கை செய்தபடி ஆம்ராவை உள்ளே விரட்டினாள், சூலி. ஆனால் அவளை ஆம்ரா சட்டை செய்தால்தானே? யாரையும் நோக்காமல் தன் வழியே போய்க் கொண்டிருந்தாள். இயற்கை உபாதையைக் கழிக்க அவள் செல்வதாகத்தான் நினைத்தான் பரமன்.

பத்திலி தனது குழந்தைக்குப் பால் புகட்டுவதை பார்த்தாலாவது அவளுக்கு நல்லெண்ணம் தோன்றாதா?

“ஆம்ரா! கேயூரா பால் அருந்தும் அழகை பார்த்தாயா?”

https://telegram.me/aedahamlibrary

பரமன், கேட்க, அவளோ நாட்டியமாட வேண்டும் என்கிற எண்ணத்தைத் தவிர வேறு எதுவுமே தனக்கு ஒரு பொருட்டல்ல என்பது போன்று கால்போன வழியே சென்றாள்.

குழந்தையை உன்னால் முடிந்தால் நீ வளர்த்துக்கொள். இல்லையேல் உன்னை விழுங்க முயன்ற முதலையின் வாயில் வீசு! என்று ஆம்ரா கூறிவிட்ட பிறகு, பத்திலி கேயூராவிற்கு பால் புகட்டுவதைக் கண்டா மனம் மாறப் போகிறாள்?

ஆம்ராவை நினைத்து மனம் நொந்தபடி அவன் அமர்ந்திருக்க, அப்போது திடீரென்று நினைவுக்கு வந்தது. இவன் தியானம் செய்த அந்த ஆற்றங்கரையை நோக்கி அல்லவா செல்கிறாள், ஆம்ரா. அவளை எச்சரிக்க வேண்டும். ஏரியின் மறுபுறத்தில் முதலைகள் இருக்கின்றன என்பதை அவளிடம் கூறி எச்சரிக்க வேண்டும்.

ஆம்ரா சென்ற வழியே பின்தொடர்ந்து சென்றான். ஒரு கட்டத்தில் அவனுக்கு ஆம்ரா கண்ணுக்குத் தெரிந்தாள். இவன் தியானம் செய்த அதே பாறையில் இப்போது நின்ற ஆம்ரா நாட்டியம் ஆடத்தொடங்கியிருந்தாள். வெகு நாட்களுக்குப் பிறகு நாட்டியம் ஆடுவதால், தன்னை மறந்து ஆடிக் கொண்டிருந்தாள்.

பதறிப் போனான் பரமன்.

“ஆம்ரா...! நடனம் ஆடாதே... கரைக்கு வந்துவிடு!” என்று அலறினான்.

அவனது பதற்றத்தை ஆம்ரா ஆவேசமாகக் கருதினாள், குழந்தைக்கு பால் புகட்டாமல் வந்து நாட்டியம் ஆடுவதை கண்டிக்கின்றான் பரமன், என்று நினைத்த ஆம்ரா, அவனை வெறுப்பேற்ற நினைத்து இன்னும் வேகமாக ஆடத் துவங்கினாள்.

இந்த பாறைதான் எவ்வளவு விஸ்தாரமாக நாட்டியம் ஆடுவதற்கென்றே அமைக்கப்பட்ட மேடையைப் போன்று இருக்கிறது. இதில் நாட்டியமாடவே உற்சாகம் தோன்றுகிறது. சுற்றி நீர்! இனிமையான சூழ்நிலை. சுகந்தமான காற்று. பறவைகளின் சங்கீதம்! இதுவல்லவோ வாழ்க்கை. குழந்தையின் அழுகுரலைக் கேட்பதைவிட, இதுவல்லவோ மனதிற்கு இதமளிக்கிறது. தன்னை மறந்து பாடியபடி ஆடிக் கொண்டிருந்தாள், ஆம்ரா.

“ஆபத்து... ஆம்ரா! நான் சொல்வதைக் கேள். கரைக்கு வா. அந்த பாறையின் மீது நடனமாடுவது ஆபத்து...” - பரமன் அலறினான்.

https://telegram.me/aedahamlibrary

“நான் ஒன்றும் நீரில் விழுந்து விடமாட்டேன். இடுப்பளவு நீரில் விழுந்தாலும் என்ன ஆபத்து வந்து விடப் போகிறது!” என்று பதில் கூறியபடி, தொடர்ந்து பாடியாடினாள், ஆம்ரா.

பரமன் அலறிக்கொண்டே இருந்தான்.

ஆம்ரா ஆடிக்கொண்டே இருந்தாள்.

இடி விழுந்தால், அரண்மனையும் நொறுங்கிவிடும். அந்த அரண்மனை போகங்கள் எனக்கு எதற்கு என்று புத்தர் கூறுவது போன்ற தாமரை சூத்திரத்தின் ஒரு சூத்திரத்தை பாடியபடி அபிநயித்துக் கொண்டிருந்தாள் ஆம்ரா.

சரியாக...

பாறையின் மறுபுறத்தில் இருந்து நடனமாடிக் கொண்டிருந்த ஆம்ராவை...

ஆடாமல் அசையாமல் நோட்டம் விட்டுக் கொண்டிருந்தது, அந்த ராட்சத முதலை.

அந்த ராட்சத முதலை வயது முதிர்ந்தது. அதனால் பாறையின் மீது ஏறி தனது இரையைப் பிடிக்க இயலாது. இரையை இழுத்துச் செல்வதற்கும் அதன் உடலில் வலு இல்லை. எனவே அந்த முதலை புது யுக்தியை கடைப்பிடித்து வந்தது. விண்ணில் பாய்ந்து தனது ராட்சத உடலை பாறையின் மீது அமர்ந்திருக்கும் இரையின் மீது விழவைக்கும். உடல் நசுங்கி அந்த இரை இறக்க, அதன் உடலை கவ்விக்கொண்டு அது ஆற்றில் இறங்கிவிடும்.

சரியாக, அந்த முதலை நீரைவிட்டு பாய்ந்து விண்ணில் தாவியது. ஆற்று நீரில் எழுந்த சலசலப்பை கவனிக்காமல் நாட்டியமாடிக் கொண்டிருந்தாள் ஆம்ரா.

விண்ணில் இருந்து அரண்மனையின் மீது இடி விழுவது போன்று அவள் அபிநயித்த அதே நேரம் --

விண்ணில் பாய்ந்த அந்த ராட்சத முதலையும் தனது வாயை பிளந்தபடி அவளை நோக்கி இறங்கியது.

சரியாக விண்ணிலிருந்து இறங்கும் இடியை குறிப்பதற்காக, கைகளை மேலே உயர்த்தி அசைத்தபடி, கண்களை மேலே நோக்க, தன்னை நோக்கி வரும் முதலையைக் கண்டாள். அதிர்ச்சியில் அவளது பவள

https://telegram.me/aedahamlibrary

வாயும் பிளந்தது.

முதலையின் கண்களை வசியப்படுத்தி ஆம்ராவை காக்கலாம் என்று கூட பரமன் நினைத்தான். ஆனால் அந்த முதிய முதலையின் கண்களே புலப்படாதவாறு வெறும் தோலின் மடிப்புகள் மட்டுமே பரமனின் கண்களுக்குத் தெரிந்தன. இனி ஆம்ராவினால் தப்ப முடியாது என்பதை புரிந்து கொண்டான்.

அந்த கோரத்தை காண திராணியின்றி பரமபுருஷன் கண்களை இறுக மூடினான்.

சாம்ராட் அசோகனை தனது நடனத்தால் மகிழ்வித்திருந்த தேகம்...

மவுரிய இளவரசன் தசரதனுக்கு விருந்தளித்திருந்த தேகம்...

தேவ உடும்பர ரகசியத்தை அறிவதற்காக அத்திமலைத் ஆலயத்தின் அதிகாரியின் மகன் சங்கர்ஷணனுக்கு அர்ப்பணம் செய்திருந்த தேகம்...

வல்லபனை மயக்கிய அந்த தேகம்...

பரமபுருஷனுக்கு இன்பமளித்து மோகத்தின் சின்னமாக கேயூராவை இந்த உலகிற்கு அளித்திருந்த அந்த ஆம்ரபாலியின் அழகிய தேகத்தை நோக்கி இறங்கியது அந்த இராட்சத முதலை. மன்னர்களுக்கும், கலையுலகிற்கும் உரித்த இந்த தேகம் இனிமேல் எனக்கு மட்டுமே சொந்தம் என்பது போன்று ஆம்ரபாலியின் தேகத்தை கவ்வி பிடித்து ஆற்றில் சரிந்தது அந்த முதலை.

கண்களை திறக்கவே பயந்தான், பரமபுருஷன். கண்களை திறந்தால் ஆம்ராவின் அழகிய தேகம் தென்படுமா?

'உங்களுக்கு நல்ல மரணமே கிட்டாது!'

பத்ரா கதறிக்கொண்டே இட்ட சாபம் பரமனின் செவிகளில் எதிரொலித்தது. மெதுவாக கண்களை திறந்து அந்த பாறையை நோக்கினான்.

சற்று முன் அங்கு ஒருத்தி நின்றிருந்த சுவடே இல்லாமல் தனது இரையை எடுத்துச் சென்று விட்டிருந்தது, அந்த முதலை.

பரமன் பிரமிப்பில் இருந்தான். ஆம்ராவின் நடவடிக்கைகள் அவனுள் வெறுப்பினை தோற்றுவித்திருந்தாலும், இப்படி ஒரு முடிவு அவளுக்கு நேரும் என்பதை அவன் நினைத்துகூடப் பார்த்திருக்கவில்லை. அந்த

https://telegram.me/aedahamlibrary

அழகிய தேகம், முதலையின் பற்களின் இடையே சிக்கி ----

பரமனின் தேகம் நடுங்கியது. அவளது முடிவை எப்படி எடுத்துக் கொள்வது? உடன் வாழ்ந்தவள் முதலை வாயில் சிக்கிவிட்டாளே என்று வருந்துவதா? இல்லை இனி அவளது தொல்லைகள் இல்லை என்று நிம்மதியாகச் செல்வதா? தேவ உடும்பரத்தை இருவரும் சேர்ந்து கண்டுபிடிப்போம் என்று அவனிடம் கூறியிருந்தாள், ஆம்ரா. இனி இவன் மட்டுமே கேயூராவுடன் அத்தியூர் செல்லப் போகிறான்.

யானையின் துயரம் தீர புள்ளூர்ந்து, கமலத்தை ஏந்திய அதன் காலினைக் கவ்வி இருந்த முதலையைக் கொன்றவன், அத்திமலைத் தேவன்! அவனது தேவ உடும்பர மேனியை கைப்பற்றியே தீருவேன் என்று சூளுரைத்து அலைந்து கொண்டிருந்த ஆம்ரபாலியின் மேனியை அதே முதலையின் வாயினுள் அனுப்பி வைத்துவிட்டான் போலும்.

இந்த உண்மையை மட்டும் பரமபுருஷன் அறிந்திருந்தால், அத்தியூர் போகும் எண்ணத்தை விட்டுவிட்டு, குழந்தை கேயூராவுடன் மீண்டும் நாவாய் கிராமத்திற்குச் சென்று பத்ரஷீலாவிடம் சரணடைந்து விட்டிருப்பானோ என்னவோ! ஆனால் ஆசை யாரை விட்டது? தேவ உடும்பர ரகசியத்தை நாடி அவன் அத்தியூர் செல்லத்தான் போகிறான். கேயூரா தாய்ப்பால் அருந்தும் பருவத்தைக் கடப்பதற்காகக் காத்திருக்கிறான்... பரமன்.

[1] இந்த கேயூராவின் பெயர்த்தி பிரக்ஞுதாரா என்கிற பெண்தான் பிற்காலத்தில் காஞ்சி சரித்திரத்தை ஆட்டிப் படைக்கப் போகிறாள். ஹூனர்களால் கடத்தப்பட்டு கேயூரா சீனாவுக்கு சென்று அங்கே புத்த மார்கத்தை ஏற்று, அவளது பெயர்த்தி பிரக்ஞுதாரா புத்த மார்கத்தின் சித்தினியாக, பிரக்ஞுதாரா என்னும் குருவாக மாறி, காஞ்சி இளவரசனான ஜெயவர்மனை போதிதர்மாவாக வசியம் செய்து அவனை சீனத்துக்கு அழைத்துச் செல்லப் போகும் பெண். தேவ உடும்பரத்தை குறி வைத்து காஞ்சிக்குச் செல்லப் போகிறாள். போதி தர்மாவை ஆட்கொண்ட பிரக்ஞுதாரா குருவை பற்றி நிறைய தகவல்கள் உள்ளன. அவள் கேரளாவில் அந்தண குடியில் பிறந்தவள் என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன.

*****

https://telegram.me/aedahamlibrary

# 23. கேட்டது ஒன்று… பெற்றது மூன்று

கி பி 300 -

மவுரியத்தின் தலைநகரமான புஷ்பபுரத்தை புஷ்யமித்ரா பாடலிபுத்ரம் என்று மாற்றியிருந்தான். தனது அரண்மனையின் அந்தப்புரத்தில் பரிதவித்துக் கொண்டிருந்தான், தற்போதைய குப்த மன்னன் சந்திரகுப்தன்.

“மன்னவரே! தாங்கள் சற்று வெளியேற வேண்டியிருக்கிறது!”

அந்த முதிய மருத்துவ தம்பதிகள் கூற, அவர்கள் பணிவுடன் கூறினாலும், வெளியே போ! என்கிற கட்டளை அதில் பொதிந்து நிற்பதாகவே மனதில்பட, செய்வதறியாது தனது அந்தப்புர அறையைவிட்டு வெளியேறினான், சந்திரகுப்தன்.

மனைவி ரத்னஹாரா [1] மஞ்சத்தில் குப்த வம்சத்தின் வாரிசினை வயிற்றில் சுமந்தபடி தனது கணவன் அறையைவிட்டு வெளியேறுவதைக் கண்டு, "சற்று பொறுங்கள்!” என்று வேதனையுடன் அழைத்தாள்.

“நினைவில் உள்ளதா அரசே! எனது குடும்பத்தில் வழிவழியாக கூறப்படும் தகவல். மவுரியம் குப்த வம்சமாக மாறிய பிறகு முதலில் பிறக்கும் குழந்தைக்கு சமுத்திரத்தின் பெயரை வைக்க வேண்டும் என்று சாணக்கியர் சுசிமாவின் மனைவி சித்ரசேனாவிடம் கூறியிருந்தாரே. அக்னிமித்ரா பிறந்த பிறகே எனது பாட்டனார் புஷ்யமித்ரா குப்தவம்சத்தை நிறுவினார். எனது தந்தை அக்னிமித்ராவுக்கு நான் பெண்ணாகப் பிறந்துவிட்டேன். இப்போது நமக்கு மகன் பிறக்கப் போகிறான். எனவே, உங்கள் மகனுக்கு சமுத்திரம் என்று பெயரை வைக்க வேண்டும்!” குமாரதேவி கூறினாள்.

“தெரியுமே. அந்த நிபந்தனையில்தானே உனது தாய் சுஷாந்தா தேவியார் உன்னை எனக்கு திருமணம் செய்து தர சம்மதித்தார். நமக்கு பிறக்கும் மகனின் பெயர் சமுத்திரம்தான். சமுத்திரம் பொங்குவதற்கு தயாராக உள்ளது. உன்னை வருத்திக் கொள்ளதே! மருத்துவர்களே. எச்சரிக்கை!” என்று கூறியபடி அந்த அறையைவிட்டு வெளியேறுவதற்காக நகர்ந்தான்.

சாணக்கியன் கூறுவது போன்று, அந்த பிரசவ அறையில் இன்னும் சற்று நேரத்தில் சமுத்திரம் பொங்குவதற்கு தயாராகத்தான் இருந்தது. மிகவும்

https://telegram.me/aedahamlibrary

பலம் பொருந்திய சமுத்திரம்! பராக்கிரமும், தேசங்களை தனது குடையின் கீழ் கொண்டு வரப்போகின்றவனுமான சமுத்திர குப்தன் வரப்போகிறான் என்று பறைசாற்றுவது போன்று வெளியே இடியொலி ஒலிக்க, மழையும் தொடர்ந்து பெய்தது. இதோ, பனிக்குடம் உடைந்து, உலகத்தை ஆளப்போகின்றவன் வெளியே வந்து கொண்டிருந்தான். ஆ... இதென்ன...?

மருத்துவ தம்பதிகள் திகைத்தனர். ஒன்று, இரண்டு, மூன்று என்று ஒன்றன்பின் ஒன்றாக மூன்று சிசுக்கள் மருத்துவர்களின் கரங்களில் வந்து விழுந்தன. பிறக்கும் போதே மெய்க்காப்பாளர்களுடன் பிறந்துவிட்டானா சமுத்ரகுப்தன்?

இந்த மூன்று சிசுக்களில் யார் சமுத்ரகுப்தன்? முதலில் பிறந்த சிசுவை பசுமைநிறப் பட்டுத் துணியிலும், இரண்டாவதாக பிறந்த குழந்தையை செம்மைநிறப் பட்டு வஸ்திரத்திலும், மூன்றாவதாக பிறந்த சேயை மஞ்சள் நிறப் பட்டு வஸ்திரத்திலும் சுற்றி மன்னரின் முன்பாகத் தொட்டிலில் வைத்தார்கள், மருத்துவர்கள்.

"மன்னா! சைத்ர மாதம் ஹஸ்த நட்சத்திரம் கூடிய நன்னாளான இன்று தங்களுக்கு ஒரே பிரசவத்தில் மூன்று மகன்கள் பிறந்திருக்கின்றனர்." மருத்துவ தம்பதிகள் பவ்யத்துடன் சொன்னார்கள்.

"மூன்று மகன்களா?" பிரமித்துப் போய் நின்றிருந்தான், சந்திரகுப்தன். அவனது ஜாதகத்தில் மூன்று கிரகங்களின் உச்சம். எனவே கேட்பதற்கு மேல் அதிகமாகவே அவனுக்கு கிடைக்கும் என்று ஜோதிடர்கள் கூறியிருந்தனர். மன்னனின் மகளை காதலித்த ஒரு தனவான் இவன். மன்னனின் மருமகன் மட்டும் ஆகவில்லை. குப்த வம்சத்தின் மன்னனாகவே அரியணையில் அமர்ந்து விட்டிருந்தான். இப்போது தனது வாரிசாக ஒரு இளவரசனை வேண்ட, இவனுக்கு மூன்று இளவரசர்கள் பிறந்துவிட்டனர். இவர்களில் மூத்தவனுக்கு சமுத்ரகுப்தன் என்று பெயரிட வேண்டியதுதான்.

அரசி ரத்னஹாரா இன்னும் மயக்க நிலையிலேயே இருந்தாள். தனக்கு மூன்று குழந்தைகள் பிறந்திருப்பதை அவள் அறியாள்.

“இந்த குழந்தைகளில் பட்டத்து இளவரசன் யார்?” - சந்திரகுப்தன் மருத்துவரைக் கேட்டான்.

"பசுமை வண்ணப் பட்டுத்துணியில் சுற்றப்பட்டிருப்பவன் முதலில் தோன்றினான். செம்மையான வஸ்திரத்தில் சுற்றப்பட்டிருப்பவன்

https://telegram.me/aedahamlibrary

அடுத்தபடியாக வந்தான். மஞ்சள் துணியில் சுற்றப்பட்டிருப்பவன் கடைசியாக வந்தான்.” மருத்துவர் கூறினார்.

“என்றால்... கடைசியாக வந்தவனே முதல் குழந்தை. அவனே முதலில் ஜனித்திருக்க வேண்டும். அவனே பட்டத்து இளவரசன்!” என்றார் ராஜகுரு விருபாக்ஷர்.

தனது மூன்று மகன்களையும் உறுத்துப் பார்த்தான். மஞ்சள் வண்ணத் துணியில் இருப்பவனும், பசுமை துணியில் இருப்பவனும், அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தனர். ஆனால் இடையில் உள்ள தொட்டிலில் கிடத்தப்பட்டிருந்த அந்த சிவப்பு துணியினால் சுற்றப்பட்டிருந்தவன் மட்டும் கண்களை திறந்து இங்கும் அங்கும் நோக்கிக் கொண்டிருந்தான். அவனது கைகள் எதையாவது பற்றிக் கொள்ள வேண்டும் என்பது போன்று காற்றில் இங்கும் அங்கும் அசைந்திட, தனது சுட்டு விரலை அவனது கையில் வைத்தான், சந்திரகுப்தன். அவ்வளவுதான்! தனது பிஞ்சு விரலால் தந்தையின் சுட்டு விரலைச் சிறைப்படுத்தியது அந்தக் குழந்தை. சற்றே பலம் கொடுத்து தனது விரலை விலக்கிக் கொள்ள முயன்றான், சந்திரகுப்தன். ஆனால் நழுவிய இவனது விரலை உறுதியாக பற்றியது அந்த பிஞ்சு கை.

மலைத்துப் போனான், சந்திரகுப்தன். பிறந்தவுடனேயே விழிப்புணர்வுடன் இருக்கிறான். ஆனால் என்ன செய்வது...? இடையில் பிறந்த மகன். மேலிருந்து கீழே எண்ணினாலும், கீழிருந்து மேலே எண்ணினாலும், இவன் நடுவில் பிறந்தவன். இவனுக்கு அரியணை எங்ஙனம் கிட்டும்? இவனுக்கு சமுத்திரம் என்று பெயர் வைக்க இயலாது.

"மூத்தவனுக்கு சமுத்திரம் என்று பெயர் வைக்க வேண்டும். யாருக்கு அந்த பெயரை வைப்பது?” குழப்பத்துடன் பிரசவ அறையிலிருந்து வெளியே நடந்தபடி, சந்திரகுப்தன் தனது ராஜகுருவை கேட்டான். அவனைப் பின்தொடர்ந்தனர், ராஜகுரு விருபாக்ஷரும், மருத்துவரும்.

"மன்னா! முதலில் ஜனித்தவன் மூத்தவன். அவனுக்குப் பிறகு இரண்டு குழந்தைகள் ஜனித்திருக்கின்றன. கடைசியாக ஜனித்த குழந்தை முதலில் வெளிவரும். எனவே கடைசி மகன் முதலில் வந்தான். மூத்த மகன் கடைசியில் வந்தான் என்கிற முறையில், கடைசி மகனாக பிறந்தவனுக்கு, சமுத்திரம் என்று பெயரிட வேண்டும். இதுவே எனது பஞ்சாங்க கணக்கு” என்றார்.

முதியவரான மருத்துவர் குறுக்கிட்டார். “அதெப்படி சுவாமி! ஜனிக்கும்

https://telegram.me/aedahamlibrary

காலத்தை நாம் எப்படி நிர்ணயிக்க முடியும். கர்ப்பப் பையில் மூன்று குழந்தைகள் உள்ளன என்கிற போது, முதலில் ஜனித்த சிசு கீழேதான் ஜனிக்கும் என்று நாம் எப்படி அனுமானிக்கலாம்? ஒன்றன் மீது ஒன்றாகத்தான் குழந்தைகள் ஜனிக்கும் என்று எங்ஙனம் கூற முடியும்? மேலும், தங்களது யூகப்படி வைத்துக் கொண்டால் கூட, கர்ப்பப்பையில் உள்ள திரவங்களில் சிசுக்கள் மிதந்தபடிதானே இருக்கும். எந்த குழந்தை முதலில் ஜனித்தது என்பதை எங்ஙனம் கண்டுபிடிப்பது?" மருத்துவர் கேட்டார்.

"சுவாமி! பஞ்சாங்க கணக்குப்படி முதலில் ஜனித்த குழந்தைதான் கடைசியில் வெளியே வரும்!" --- விருபாக்ஷர் கூறினார்.

"சுவாமி! ஒவ்வொரு மனிதருக்கும் அவரது ஆயுள் பர்யந்தம் இவ்வளவு சுவாசக் காற்று என்று கணக்கிட்டு அனுப்புகிறான் பிரம்மன். வயிற்றில் ஜனிக்கும் குழந்தை தாயின் தொப்புள் கொடியின் மூலமாகத்தான் சுவாசிக்கிறது. உங்கள் ஜோதிடரீதியாக எடுத்துக் கொண்டாலும், தாயின் சுவாசத்தில் வாழும் வரை ஒரு சிசு தானாக சுவாசிப்பதில்லை. உயிர் மூச்சே மண்ணில் பிறந்து தொப்புள் கொடி அறுபட்டதும் முதன்முதலாக அது சுவாசிக்கும் நேரத்தில் இருந்துதான் கணக்கிடப்படுகிறது. அதன் நாடிகணக்கும் அங்கிருந்துதான் துவங்குகிறது. அப்போது துவங்கும் முதல் சுவாசக் காற்றில் இருந்துதான் அதன் ஆயுள் கணக்கிடப்படுகிறது. எனவே முதலில் பிறந்த குழந்தைதான் மூத்தவன் என்றே நாம் கொள்ள வேண்டும்." - மருத்துவர் கூறினார்.

மலைத்துப் போனான், சந்திரகுப்தன். இதென்ன சோதனை? பட்டத்துக்கு ஒரு இளவரசனை கேட்டால் இறைவன் மூன்றாக கொடுத்துவிட்டானே! சமுத்திரகுப்தன் என்கிற பெயரை வைத்து அவனை மன்னனாக வளர்க்க வேண்டும் என்று சாணக்கியர் கூறியபடி குப்த வம்சத்தின் முதல் குழந்தைக்கு சமுத்திரகுப்தன் என்று பெயரிட நினைத்தால், மூன்று மகன்கள் வந்து நிற்கின்றனரே. பரத கண்டத்தைச் சுற்றி மூன்று கடல்கள் இருப்பது போன்று இவனுக்கு மூன்று கடல்கள் பிறந்திருக்கின்றனவே. எந்தக் கடல் உலகத்தை ஆளப்போகிறது...?

ராஜகுருவும், மருத்துவரும் தொடர்ந்து வாதித்துக் கொண்டிருக்க, குழம்பிப் போனான், சந்திரகுப்தன். நல்லவேளையாக, மயக்கம் தெளிந்து கண்விழித்தாள், அரசி ரத்னஹாரா என்கிற குமாரதேவி.

அவளுக்கும் மூன்று குழந்தைகள் காட்டப்பட்டதும், மனதில் குழப்பம்

https://telegram.me/aedahamlibrary

மேலிட்டிருக்க வேண்டும் என்று சந்திரகுப்தன் நினைத்தான்.

“மன்னவரே!” பணிப்பெண் ஓடி வந்தாள். "அரசியாருக்கு மூர்ச்சை தெளிந்துவிட்டது. தங்களை தேடுகிறார்!” என்றதும், வாதித்துக் கொண்டிருந்த ராஜகுருவையும், மருத்துவரையும் புறக்கணித்துவிட்டு, மீண்டும் அறைக்குள் பிரவேசித்தான் மன்னன்.

கார்த்திகைப் பெண்கள் கையில் குழந்தைகளுடன் நிற்பதைப் போன்று ஆளுக்கு ஒரு குழந்தையை சுமந்தபடி அரசியின் மஞ்சத்தைச் சுற்றி நின்றிருந்தனர், பணிப் பெண்கள். அவர்கள் கையில் உள்ள குழந்தைகளைப் பேருவகையுடன் பார்த்தபடி அமர்ந்திருந்தாள், குமாரதேவி.

உள்ளே வந்த சந்திரகுப்தனின் பார்வை தற்செயலாக அந்த சிவப்புத் துணியில் சிசுவை ஏந்தியபடி நின்ற பணிப்பெண்ணின் மீது விழுந்தது. அவளது மார்பு சீலையின் விளிம்பினை பிடித்தபடி கண்விழித்து இங்கும் அங்கும் தொடர்ந்து நோக்கிக் கொண்டிருந்தது அந்த குழந்தை. சந்திரகுப்தன் மற்ற இரண்டு குழந்தைகளையும் பார்த்தான். அவை கண்மூடி ஆனந்தமாக உறங்கிக் கொண்டிருந்தன.

'சாணக்கியர் குறிப்பிட்ட சமுத்ரகுப்தன் இவன் தானோ?' மன்னனின் மனதில் ஒரு குரல் ஒலித்தது. இருப்பினும் இப்போது எதையும் சொல்ல முடியாது. அமைதியாக உறங்கிக் கிடக்கும் இரு குழந்தைகளில் ஒன்று கூட சமுத்திரகுப்தனாக இருக்கலாம்.

"சந்திரகுப்தரே! உமது இளவரசர்களைக் கண்டீரா?” பூரிப்புடன் கேட்டாள், குமாரதேவி.

“கண்டேன்! ஆனந்தித்தேன். குழம்பியும் நிற்கிறேன். உனது கோரிக்கையை எப்படி நிறைவேற்றுவது என்றே தெரியவில்லை. எந்த பிள்ளையை சமுத்திரகுப்தனாகத் திகழ வைக்கப் போகிறோம்?” ஆதங்கத்துடன் கேட்டான் சந்திரகுப்தன்.

“நிச்சயம் இதற்கு விடை கிடைக்கும். அமரராகிவிட்ட சாணக்கியரே இதற்கு வழிகாட்டுவார்!” பலவீனத்துடன் கூறினாள், குமாரதேவி.

“இந்த விஷயத்தில் சாணக்கியரே குழம்பிப் போவார் என்பதில் ஐயமில்லை!” சந்திரகுப்தன் கூறினான்.

“யார் சமுத்ரகுப்தன் என்பதை சாணக்கியரே புரிய வைப்பார். இப்போதைக்கு குழந்தைகளுக்கு வேறு பெயர்களை வைப்போம்!”

https://telegram.me/aedahamlibrary

அப்போதைக்கு அந்த பிரச்னைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்தாள் குமாரதேவி. குழந்தைகளுக்கு விவேகன், ஆர்யன் மற்றும் சுவேதன் என்று பெயர்களை வைத்தனர் அரச தம்பதிகள்.

முலைப்பால் பருகும் வயதைக் கடந்து, பிள்ளைகள் தாயின் மடியில் இருந்து இறங்கி, வாழ்க்கை ஏணியின் முதல் படியில் ஏறுவதற்கு தயாரானார்கள். ஏணியில் ஏற்றிவிட குரு வேண்டும் அல்லவா? நல்ல குருவை தாய்தானே காட்ட வேண்டும். விருபாக்ஷர் ராஜகுரு என்பதால் அவரிடம் குழந்தைகளை அனுப்ப வேண்டும் என்று நினைத்தான், சந்திரகுப்தன்.

ஆனால் குமாரதேவி அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. ராஜகுரு அவர்களை இளவரசன் என்கிற எண்ணத்தோடுதான் கல்வியை போதிப்பார். அரண்மனை சுவர்களுக்குள் கற்கும் கல்வி பிரயோஜனப்படாது. உலகை அறிய வேண்டும் என்றால் அரண்மனையை விட்டு அவர்கள் வெகு தூரம் செல்ல வேண்டும் என்று எண்ணினாள்.

நல்ல குருவை ஒரு தாயால்தான் இனம் காண முடியும் [2].

குமாரதேவி பிருகதான்யர் என்கிற குருவைப் பற்றி தகவலைச் சேகரித்திருந்தாள். வேதாகமங்களை புகட்டி, சாத்திரத்தை அனுபவத்தால் உணரச் செய்து, முக்காலங்களையும் கருத்தில் கொண்டு கல்வி போதிப்பவர். அவரது ஆஸ்ரமம் ஜகன்னாதம் கடற்கரையில் இருந்தது. அவரைப் பற்றி கணவன் சந்திரகுப்தனிடம் கூற, அரசன் திகைத்தான்.

"குழந்தைகளை அவ்வளவு தொலைவிற்கா அனுப்பப் போகிறாய்? எனது மனம் இதற்கு ஒப்பவில்லை.” - சந்திரகுப்தன் கூறினான்.

"நமது மகன்கள் சாதாரண குழந்தைகளாக இருந்தால் நமது ராஜகுருவிடமே அனுப்பியிருப்பேன். நமது மூன்று செல்வங்களில் ஒருவன் உலகையே ஆளப்போகும் சமுத்திரகுப்தன். அவனை அடையாளம் காண வேண்டுமென்றால், ஜகன்னாத பிருகதான்யர்தான் சரியான ஆசான். அவரிடமே பிள்ளைகள் கல்வி கற்கட்டும். மூவரில் யார் சமுத்திரகுப்தன் என்பதை அவரால் மட்டுமே அடையாளம் காட்ட முடியும்!” - குமாரதேவி சொல்ல, சந்திரகுப்தன் தன்னையும் அறியாமல் தனது தலையை அசைத்தான்.

குடும்பத்துடன் கலிங்கம் சென்று ஜகன்னாதரை தரிசித்துவிட்டு மூன்று

https://telegram.me/aedahamlibrary

பிள்ளைகளையும் பிருகரின் ஆஸ்ரமத்தில் ஒப்படைத்துவிட்டு பாடலிபுத்ரம் திரும்ப எண்ணினார்கள், குமாரதேவியும், சந்திரகுப்தனும்.

கிருஷ்ணபட்ச ஏகாதசி அன்று விடியலில் ஜகன்னாதத்திற்குப் புறப்பட முஹூர்த்தத்தை நிச்சயித்தார், ராஜகுரு விருபாக்ஷர். அன்று விடியலில் எழுந்து நீராடி ஆண்டவனை தொழுது, மன்னரையும் எழுப்பி, அவருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்தபின், புறப்படுவதற்கு செல்வங்களை தயார் செய்யும் எண்ணத்துடன் பிள்ளைகள் உறங்கிக் கொண்டிருந்த அறைக்குச் சென்றாள். கதவை திறந்தவளின் பார்வை, மஞ்சத்தின் அருகே இருக்கையில் அமர்ந்தபடி உறங்கிக் கொண்டிருந்த தாதி வீணாதராவின் மீது விழுந்தது. இளவரசர்கள் மூவரும் பொட்டணங்களாக மஞ்சத்தில் கிடக்க, அவர்களை மறைத்தபடி திண்டுகளும், தலையணைகளும், கம்பளங்களும் சிதறிக் கிடக்க, மிகவும் சிரமத்துடன்தான் பிள்ளைகளை அவற்றுக்கு இடையே அடையாளம் கண்டு கொண்டாள், குமாரதேவி.

“எழுந்திருங்கள் கண்மணிகளா! குருகுலம் போக வேண்டும். விவேகா எழுந்திரு. ஆர்யா எழுந்திரு. ஸ்வேதா எழுந்திரு!” என்ற அரசியின் குரலைக் கேட்டு, தூக்கத்திலிருந்து பதைபதைப்புடன் விழித்து துள்ளி எழுந்து நின்றாள், வீணாதரா.

“வீணா! குருகுலம் செல்ல வேண்டும். குழந்தைகளை தயார் செய்!” என்றாள். போர்வைகளை விலக்கியபடி விவேகனும், ஸ்வேதனும் எழுந்து நின்றனர்.

அவர்களை வீணாதரா வாரி அணைக்க, அரசி போர்வை குவியல்களிடையே ஆர்யாவை தேடினாள். “ஆர்யா எழுந்திரு...” என்றபடி திண்டுகளையும், தலையணைகளையும் அப்புறப்படுத்தி நோக்க, அடியில் ஆர்யன் காணப்படவில்லை.

“மஞ்சத்தில் ஆர்யனை காணோமே? எங்கே சென்றான்...?” பதைபதைப்புடன் அரசி கேட்க, வீணாதரா அரண்டு போய், மற்ற இரண்டு குழந்தைகளையும் மஞ்சத்திலே இறக்கிவிட்டு, ஆர்யனை தேடத்துவங்கினாள். சற்று நேரத்தில் அரண்மனையே ஆர்யனை காணாமல் அல்லோலகல்லோலப்பட்டது.

அழுகையால் கண் சிவந்து வீணாதரா இங்கும் அங்கும் ஓடிக்கொண்டிருந்தாள். அரச தம்பதிகள் ஒப்புவித்திருந்த கடமையில் தவறிவிட்டோம். கண்ணும் கருத்துமாக பிள்ளையை கவனிக்காமல் உறங்கிவிட்டதால் தீரா அபவாதத்திற்கு உள்ளாகிவிட்டோம். ஆர்யன்

https://telegram.me/aedahamlibrary

கிடைக்கவில்லை என்றால், இவள் சிறையில் அடைக்கப்படுவாள் என்கிற நிலைமை உருவாக, கதறியபடி ஆர்யனைத் தேடிக்கொண்டிருந்தாள்.

வீணா, முந்தைய இரவு கடைசியாக தான் என்ன செய்து கொண்டிருந்தோம் என்பதை யோசித்தால் ஆர்யன் இருக்கும் இடம் அவளுக்கு உடனே புலப்பட்டிருக்கும். அவள் தான் எதைப் பற்றியும் சிந்தியாமல், அழுது அரற்றிக் கொண்டிருந்தாளே.

குருகுலத்திற்குப் புறப்படும் முஹூர்த்தம் நெருங்க, குமாரதேவிக்கும், சந்திரகுப்தனுக்கும் பதற்றம் அதிகரித்துக் கொண்டே இருந்தது.

[1] மவுரியத்தை வேரறுத்து, வைதிக தர்மத்தை மீண்டும் நிலைநாட்டிய புஷ்யமித்ராவிற்கு பிறகு அவனது மகன் அக்னிமித்ரா அரியணை ஏறினான். அக்னிமித்ராவுக்கு ஸ்ரீகுப்தா என்கிற செல்வந்தன் ஒரு மாளிகையைக் கட்டி பரிசளிக்க, அக்னிமித்ராவின் மகள் ரத்னஹாரா ஸ்ரீகுப்தாவின் மகன் சந்திரகுப்தனை காதலித்து மணந்தாள். சாணக்கியனின் நண்பன் சந்திரகுப்த மவுரியனுக்கும், இவனுக்கும் தொடர்பில்லை. குப்த வம்சத்தின் முதலாம் சந்திரகுப்தனாக மவுரியத்தை ஆண்டு கொண்டிருந்தான். அவன் மனைவி ரத்னஹாரா குமாரதேவி என்னும் பெயரில் பட்டத்து அரசியாகத் திகழ்ந்தாள்.

[2] தாய் எட்டடி பாய்ந்தால் சேய் பதினாறு அடியை வெல்வான் என்று ஒரு பழமொழி உண்டு. தாய் எட்டடியை போதித்து மகனை குருகுலம் அனுப்புகிறாள். அந்த எட்டு அடிகள் - குரு பிரம்மா, குரு விஷ்ணு, குரு தேவோ, மகேஸ்வரஹா, குரு சாக்ஷாத், பரப்பிரம்மா, தஸ்மைஸ்ரீ குருவே நமஹா என்கிற இந்த எட்டடியை பயந்து (பயத்தல் என்றால் கொடுத்தல்) அவனை குருகுலம் அனுப்ப அவன் பதினாறு வகை செல்வங்களை வென்று வருகிறான். இதை விளக்குவதே தாய் எட்டடி பயந்தால் சேய் பதினாறு அடியை வெல்வான் என்கிற பழமொழி. பயந்தால் என்கிற சொல் பாய்ந்தால் என்று மாறிவிட்டது.

*****

https://telegram.me/aedahamlibrary

# 24. குருவுக்கு ஒரு பரீட்சை

பாடலிபுத்ர அரண்மனை முழுவதும் இளவரசன் ஆர்யனைக் காவலர்களும், பணிப்பெண்களும் தேடிக் கொண்டிருக்க, அரசி குமாரதேவி தனது கணவனிடம் விவரத்தை சொல்லிவிட வேண்டியதுதான் என்று முடிவு செய்தாள். வீணாதரா குற்ற உணர்வுடன் தலையைக் குனிந்தபடி நின்றாள். அரசியாருக்கு மிகவும் பிரியமானவள்தான் வீணாதரா. எனவேதான் தனது குழந்தைகளின் பொறுப்பை அவளிடம் நம்பி ஒப்படைத்திருந்தாள். அவளும் குழந்தைகளுடனேயே பொழுதைக் கழித்து அவர்களை கண்காணித்து வந்தாள்.

வீணாதரா மிகவும் இனிமையாக வீணை இசைப்பவள். அரண்மனையில் மவுரிய மன்னர்கள் காலத்தில் இருந்தே ஒரு விலைமதிப்பில்லாத மகத வீணை ஒன்று இருந்தது. அதில்தான், வருடத்திற்கு ஒருமுறை சாமகானம் இசைக்கப்படும். முந்தைய தினம் அரசியார் குமாரதேவி என்கிற ரத்னஹாராவின் தந்தையும் பழைய மன்னருமான அக்னிமித்ராவின் நினைவுதினம் என்பதால் அரண்மனையில் பாதுகாக்கப்பட்டு வந்த மகத வீணையை இசைக்கும்படி நேர்ந்தது. பிரார்த்தனை மண்டபத்தில் ஈசனின் சிலையின் முன்பாக இவள் அந்த மகத வீணையை மீட்டி சாமகானம் செய்து கொண்டிருந்தாள். அந்த மகத வீணையின் குடம் உருக்கிய அபரஞ்சி பொன்னால் அமைந்திருக்க, அதன் ஸ்வரஸ்தானங்களில் இரத்தினங்களும், வைரக்கற்களும் பதிக்கப்பட்டிருந்தன.

வீணாதரா அற்புதமாக அந்த மகத வீணையை மீட்டிக் கொண்டிருக்க, அரசன் சந்திரகுப்தனும், அரசி குமார தேவியும் அந்த இசையை மெய்ம்மறந்து கேட்டுக் கொண்டிருந்த போது, அப்போதுதான் நடைபழகத் துவங்கியிருந்த ஆர்யன் வீணாதராவை நோக்கி தத்தி தத்தி நடந்து சென்று அவளுடன் சேர்ந்து வீணையை மீட்ட முயன்ற போது, குமாரதேவி எழுந்து வந்து அவனை அப்புறப்படுத்த முயல, அவன் வீறிட்டு அழத்தொடங்கினான். பிரார்த்தனை மண்டபத்தைவிட்டு நீங்கும் வரை, அவனது அழுகை தொடர்ந்தது.

வீணாதராவுக்குத் திடீரென்று அந்த எண்ணம் தோன்றியது. ஒருவேளை பிரார்த்தனை மண்டபத்தில் ஆர்யன் இருக்கின்றானா? ஆம்... அங்குதான் இருக்க வேண்டும்.

https://telegram.me/aedahamlibrary

"மகாராணி! ஆர்யன் இருக்கும் இடம் எனக்கு தெரியும். இதோ வந்துவிடுகிறேன்...” வீணா ஓடிச்செல்ல, அரசியும் அவளை பதற்றத்துடன் பின்தொடர்ந்தாள்.

பிரார்த்தனை மண்டபம். உள்ளே ஓடிய வீணா, சிவனாரின் சிலைக்குப் பின்பாக பீடத்தில் வைக்கப்பட்டிருந்த அந்த மகத வீணை அருகே நின்று அதனை வருடிக் கொண்டிருந்த ஆர்யனைக் கண்டாள். நல்லவேளையாக, வீணையின் தந்திகள் அவனுக்கு எட்டவில்லை. இரவெல்லாம் வீணையின் நினைவாகவே இருந்திருக்க வேண்டும், ஆர்யன். விடியற்காலையில் எழுந்து பிரார்த்தனை மண்டபத்திற்குச் சென்று வீணையைப் பார்த்திருக்கிறான்.

"அரசியாரே! மகத வீணையை காண்பதற்காகவே நம் இளவரசன் இங்கே வந்திருக்கிறார். நாம்தான் அதனை அறியாமல், அரண்மனை முழுவதும் அவரை தேடிக் கொண்டிருக்கிறோம்!” வயிற்றில் நிம்மதி பாலாகப் பொழிய, கண்களில் கண்ணீருடன் சிரித்தாள், வீணாதரா.

“ஆர்யனுக்கு வீணை மீட்ட கற்றுத் தர வேண்டும். அவனுக்கு வீணை இசைப்பதில் ஆர்வம் உள்ளது என்று நினைக்கிறேன். எனவேதான் யாருக்கும் தெரியாமல், பிரார்த்தனை மண்டபத்திற்கு வந்து நிற்கிறான்!” - குமாரதேவி கூறினாள்.

“இராவணன் போன்று ஆர்யன் திகழக்கூடும்” - தன்னையும் மறந்து கூறினாள், வீணாதரா.

துணுக்குற்று அவளை நோக்கினாள், குமாரதேவி. "என்ன சொல்ல நினைக்கிறாய், வீணா? இராவணனைப் போன்று கொடியவனாகவா எனது மகன் இருக்கப் போகிறான்...?”

வீணாதரா பதறினாள். “அரசியாரே! நான் தவறாக சொல்லவில்லை. இலங்கேஸ்வரன் மாபெரும் சக்கரவர்த்தி. பத்து நாடுகளை கைப்பற்றி அவற்றை ஆண்டான். பத்து மகுடங்களை மாற்றி மாற்றி அணிந்ததால் அவன் பத்து தலையன் என்று கூறப்பட்டான். அவனது கொடியில் வீணை சின்னம் இருந்ததாம். வீணை என்பதே வெற்றியைக் குறிக்கும். வீணையின் குடம் ஞானத்தையும், சப்தஸ்வரங்களின் ஸ்தானங்கள் உள்ள மேளம் ஏழு உலகங்களையும், அதன் முடிவில் உள்ள யாளி வெற்றியையும் குறிக்கும். வீணையில் சாமகானம் செய்யும் அரசன் சக்கரவர்த்தியாகத் திகழ்வான் என்பார்கள். எனவேதான், வீணை ஏந்திய மன்னர்கள் அனைவருமே வெற்றிச் சக்கரவர்த்திகளாக இருந்தார்கள். மற்ற இரு இளவரசர்களும் கூடத்தான் நேற்று பிரார்த்தனை

https://telegram.me/aedahamlibrary

மண்டபத்தில் நான் வீணை இசைப்பதைப் பார்த்தார்கள். ஆனால் அவர்களுக்கு இல்லாத அந்த ஆவல், நமது ஆர்யனுக்கு மட்டும் உள்ளதே. உறக்கம் கலைந்து நேரே பிரார்த்தனை மண்டபம் வந்து வீணையை நாடுகிறான் என்றால், அவன் தான் நீங்கள் நினைக்கும் சமுத்ரகுப்தனாகத் திகழப்போகிறான் போலும்!" - சாதுர்யமாகப் பேசினாள் வீணா.

ஆர்யன் தான் சமுத்ரகுப்தனாகத் திகழக்கூடும் என்று வீணா கூற, பரவசத்துடன் அவனை நோக்கினாள்,

குமாரதேவி. சாணக்கியர் கூறிய சமுத்ரகுப்தன் இவன் தானோ? வீணாதரா கூறியது உண்மையாக இருக்குமோ?

இருப்பினும், அவசரப்படக் கூடாது. விவேகன், சுவேதன் ஆகியோர் உள்ளேயும் சமுத்ரகுப்தன் ஒளிந்து கொண்டிருக்கலாம் அல்லவா? அவர்களுக்கும் ஒரு வாய்ப்பு நல்கிட வேண்டும்! அவளது தாய் உள்ளம் உரைக்க, வீணாவை எச்சரிக்கையுடன் பார்த்தாள்.

"அப்படி முடிவு கட்டிவிட முடியாது, வீணா! பார்ப்போம். பிருகதான்யர் மூவரில் யார் சமுத்ரகுப்தன் என்பதை இனம் கண்டு கொள்வார். அவர் வசம் நமது இளவரசர்களை ஒப்படைப்போம்!" - குமாரதேவி கூற, வீணாதரா தலையசைத்தாள்.

அரச தம்பதிகள் குழந்தைகளுடன் ஜகன்நாதம் புறப்பட்டார்கள். பூர்வம் என்கிற கிழக்கு திசையில், கடலும், நிலமும் சங்கமிக்கும் இடத்தில் இருந்த காரணத்தால் பூர்வ ஜகன்நாதம் [1] என்று இந்தப் பகுதி அழைக்கப்பட்டது.

ஜகன்னாத ஆலயம் சென்று வழிபட்டனர், குமாரதேவியும், சந்திரகுப்தனும்.

'ஜகன்னாதா! எனது செல்வங்களை நீதான் ரட்சிக்க வேண்டும். சாணக்கியன் குறிப்பிட்ட சமுத்ரகுப்தனை எங்களுக்கு அடையாளம் காட்டி, உலகையே அவனது பராக்கிரமத்திற்கு தலை வணங்கச் செய்து எங்களது குப்த சாம்ராஜ்யத்தை புகழுடனும், பொலிவுடனும் நிலை நாட்டுவாயாக!' - மனதினுள் வேண்டிக் கொண்டாள், குமாரதேவி.

பிரார்த்தனையை முடித்துக்கொண்டு கடற்கரையில் இருந்த பிருகதான்யரின் ஆஸ்ரமத்திற்குச் சென்றனர் அரச தம்பதிகள்.

கடற்கரையோரம் இருந்த சோலையில் அமைந்திருந்தது அவரது

https://telegram.me/aedahamlibrary

ஆஸ்ரமம். நீலக்கடலின் ஆர்ப்பரிப்பினைத் தவிர, வேறு ஒலிகள் இன்றி அமைதியில் தவழ்ந்தது ஆஸ்ரமம். மையத்தில் பிருகதான்யரின் குடில் இருந்தது. அதன் வாயிலில் கோலம் [2] வரைந்திருக்கப்பட, மற்ற குடில்களின் வாயிலில் கோலம் காணப்படவில்லை. பிருகதான்யர் மனைவியுடன் வசிப்பதால் அவரது வாயிலில் மட்டும் கோலம் போடப்பட்டிருந்தது. மற்ற குடில்களில் பிரம்மச்சாரிகள் வசித்து வந்ததால் அவற்றின் வாயிலில் கோலம் வரையப்படவில்லை என்பதை யூகித்தனர் அரச தம்பதிகள்.

ஆசானுக்கு மனைவியும் இருப்பதால், அரசகுமாரர்களை தாய் அன்புடன் கவனித்துக் கொள்ள ஒரு பெண் இருக்கிறாள் என்கிற நிம்மதி உணர்வை பெற்றனர் அரச தம்பதிகள்.

பிருகரும் அவரது மனைவி மேதாவும் அரச தம்பதிகளை வரவேற்று உபசரித்தனர். அவர்களுக்கு கனிகளும், குழந்தைகளுக்குப் பாலும் அளித்தாள், மேதா.

"குருவே! குப்த சாம்ராஜ்யத்தை கட்டிக்காக்க சமுத்ரகுப்தன் வருவான். உலகின் மிக பலம் வாய்ந்த சக்கரவர்த்தியாகத் திகழ்வான் என்று சாணக்கியர் கூறி இருந்தார். குப்த அரசை நிறுவிய புஷ்யமித்ரா அவரது மகன் அக்னிமித்ரா பிறந்த பிறகே குப்த சாம்ராஜ்யத்தை நிறுவினார். அக்னிமித்ராவுக்கோ எனது மனைவி ரத்னஹாரா ஒரே மகளாகப் பிறந்ததால், அவரது மருமகனான நான் மன்னன் ஆனேன். என் மகன் சமுத்ரகுப்தனாக விளங்குவான் என்று நினைத்தேன். ஆனால் ஒரே பிரசவத்தில் மூன்று மகன்களை ஈன்றாள், எனது மனைவி. இவர்கள் மூவரில் யார் சமுத்ரகுப்தன்? அவனை நீங்கள் தான் எங்களுக்கு அடையாளம் காட்ட வேண்டும், சுவாமி?" -- சந்திரகுப்தன் கூற, கண்களை மூடியபடி அவன் கூறுவதை செவியுற்ற பிருகர், தலையசைத்தார்.

“கல்வி போதிக்கும் போது, அவர்கள் அதனை சிந்தையில் ஏற்கும் விதத்தினைக் கொண்டே என்னால் அதை அனுமானிக்க முடியும்...” பிருகர் கூறிக் கொண்டிருக்க, மேதா வியப்புடன் அந்த மூன்று இளவரசர்களையும் நோக்கினாள்.

குழந்தைகள் மூன்று பேருமே ... தொலைவில் அலைகளை உயர்த்தி ஆர்ப்பரித்துக் கொண்டிருந்த நீலக்கடலையே வெறித்துப் பார்த்தனர். விவேகன் மற்றும் சுவேதன் இருவருமே, உயரும் ராட்சத அலைகளைக் கண்டு அச்சமுற்று, தாயின் சேலையின் பின்பாக ஒடுங்கினர். ஆனால்

https://telegram.me/aedahamlibrary

ஆர்யன்...?

பெற்றோரைவிட்டு விலகி, மெதுவாக கடலை நோக்கி நகர ஆரம்பித்தான். பரந்து விரிந்த கடலை குதூகலத்துடன் நோக்கியவன் தனது வேகத்தை அதிகரித்து கடலை நோக்கித் துள்ளலுடன் நடந்து சென்றான்.

“கல்வி போதிக்கும் வரை காத்திருப்பானேன்? மூவரில் அதோ சமுத்ரத்தை நோக்கிப் பாய்ந்து செல்கின்றானே, அவன்தான் சமுத்ரகுப்தன்!” மேதா சிரிப்புடன் கூற, திடுக்கிட்டு திரும்பி நோக்கினார்கள் அரச தம்பதிகள்.

ஆர்யன் சமுத்ரத்தை நோக்கி ஓடிக்கொண்டிருப்பதை கலவரத்துடன் பார்த்தார்கள்.

'அரசியாரே! வீணை மீட்டத் துடிக்கும் ஆர்யன்தான் சமுத்ரகுப்தன்!' வீணாதராவின் குரல் குமாரதேவியின் செவிகளில் எதிரொலித்தது.

[1] பூர்வ ஜகன்நாதம் என்கிற பகுதியே இப்போது பூரி ஜகன்நாதம் என்று அழைக்கப்படுகிறது. பூர்வம் என்பதே பூரி-யாக சுருங்கிவிட்டது. பூர்வத்தை பூரி என்று சுருக்கிவிட்டு, டிபன் பூரி உப்பாமல் சுருங்கினால் கோபப்படுகிறோம்.

[2] ஆஸ்ரமங்களில் அந்த காலங்களில் மணமான ஆசான்களும், மணமாகாத பிரும்மச்சாரிகளும் கூடி வாழ்ந்தனர். கணவன் மனைவியாக இல்லறம் நடைபெறும் ஆசானின் குடில்களில் பிரம்மச்சாரிகளும், புதியவர்களும் நுழையமாட்டார்கள். சம்சாரிகளின் குடில்களை வித்தியாசமாகக் காட்ட வேண்டியே, அவற்றின் வாயிலில் நிமிர்ந்த முக்கோணம், தலைகீழ் முக்கோணம் ஆகியவற்றை ஒன்றன் மீது ஒன்றாக வரைவார்கள். நிமிர்ந்த முக்கோணம் புருஷ சக்தியையும், தலைகீழ் முக்கோணம் பெண்ணையும் குறிக்கும். இரு சக்திகளின் இணைப்பை இந்த முக்கோண கோலம் குறிக்கும். இன்று நமது வீட்டின் வாயிலில் ஸ்டார் கோலம் போடுவதே இங்கே இல்லறம் நடக்கும் இடம் என்பதைக் குறிக்கவே.

*****

https://telegram.me/aedahamlibrary

# 25. கடலைக் கடைந்த காரிகை

பிருகதான்யர் அரசமர மேடையின் கீழே அமர்ந்திருக்க, அவருடைய சீடர்கள் கீழே அமர்ந்து அவர் கூறுவதை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

அரசகுமாரர்கள் மூவருக்கும் கல்வியை பூரணமாக கற்றுக் கொடுத்துவிட்டார், பிருகர். குருகுலவாசம் முடிந்து அவர்களுக்கு இறுதி பாடத்தைப் போதித்துக் கொண்டிருந்தார். விவேகன், ஆர்யன் மற்றும் சுவேதன் ஆகிய மூவரில் சமுத்ரகுப்தனாகத் திகழப் போகிறவன் யார்?

'எனது மூன்று மகன்களில் சமுத்ரகுப்தனாகத் திகழப் போகிறவன் யார்?' சந்திரகுப்தன் இவரைக் கண்டதும் முதலில் இதைத்தான் கேட்பான் என்பதை யூகித்திருந்தார், பிருகர். எனவேதான் அவனது கண்களுக்கு முன்பாகவே ஒரு பரீட்சை ஒன்றை நிகழ்த்தி சமுத்ரகுப்தனாகத் திகழப் போகின்றவனை சந்திரகுப்தனுக்கு அடையாளம் காட்ட நினைத்தார்.

"குமாரர்களே! உங்கள் குருகுலவாசத்தை வெற்றிகரமாக முடித்துவிட்டீர்கள். தாயின் மடியில் இருந்து குழந்தைகளாக புறப்பட்ட நீங்கள், தற்போது குமார பருவத்தின் வாயிலில் நிற்கிறீர்கள். இங்கிருந்து பூமியன்னையின் மடியை சேர்ந்து உங்களுக்கு விதிக்கப்பட்ட கர்மாக்களை செய்யப் போகிறீர்கள். தாயின் மடியிலிருந்து புறப்பட்டு, பூமியன்னையின் மடியை சேருவதற்குள்ளான இடைப்பட்ட காலத்தில்தான் ஒரு மனிதன் பூரண ஞானத்தை பெறுகிறான். பதினாறு வகை செல்வங்களையும் பூரணமாக பெற்றிருக்கும் நீங்கள், இனி வானில் சிறகடிக்கும் பறவைகளாக பறக்கலாம். இந்த ஆஸ்ரம கூட்டில் உங்களுக்கு உலக நியாயங்களை, ஒரு தாய் பறவை தனது குஞ்சுகளுக்குப் புகட்டுவது போன்று நானும் உங்களுக்குப் புகட்டியுள்ளேன். உலகத்தை இறைவன் படைத்த போது அதில் வளங்களை நிறைத்து வைத்தான். இயற்கையை உண்டாக்கி அவற்றின் மூலம் வளங்களைப் பெருக வைத்தான். பஞ்சபூதங்களையும் நமக்கு ஏவல் புரிய அனுப்பினான். செந்தீ, புவி, கால், நீர், விண் என்று இவை அனைத்துமே உயிரினங்களை செயலாற்றுகின்றன.

ஆனால் –

சுயநலம் என்கிற ஒரு எண்ணம் முதன்முதலாக தோன்றியது மனிதனிடம்தான். வேறு எந்த ஜீவராசிக்கும் இந்த எண்ணம் தோன்றியது இல்லை. எதையும் தான் மட்டுமே அனுபவிக்க வேண்டும்

https://telegram.me/aedahamlibrary

என்கிற எண்ணம் முதன்முதலாக தோன்றியது நாடாளும் மன்னர்களிடம் தான்! நாட்டின் எல்லையை மட்டும் காப்பது ஒரு மன்னனின் கடமை இல்லை. நாட்டின் வளங்களையும் அவன்தான் காக்க வேண்டும். ஒரு நாட்டின் வளங்களை சூறையாடுவதற்காகத்தான் எதிரிகள் படையெடுத்து வருகிறார்கள். அவர்களிடம் இருந்து எல்லையைக் காத்துவிட்டு, எதிரிகள் செய்ய வேண்டிய பணியை ஒரு மன்னனே எப்படிச் செய்யலாம்? அவனே நாட்டின் வளங்களைச் சுரண்டி தனது குடும்பத்தை மட்டும் வாழ வைத்தால் அவனது நாட்டிற்கு அவனே எதிரி. துரோகியும் கூட! எனவே, விவேகா, ஆர்யா, ஸ்வேதா! உங்கள் மூவரில் யார் மன்னராகப் போகின்றீர்கள் என்பதை எதிர்காலம்தான் நிர்ணயிக்கும். யார் மன்னனாகத் திகழ்ந்தாலும் மனதில் இதை இருத்திக் கொள்ளுங்கள். இறைவன் அளிக்கும் வளங்களை களவாடி சுயநலமாக உபயோகித்துக் கொள்ளும் உரிமை யாருக்கும் இல்லை. நீங்கள் எல்லைகளை மட்டும் காத்தால் போதாது. இயற்கையை, அதன் வளங்களையும் காக்க வேண்டும்.

பஞ்ச பூத சக்திகளை ஆலயங்களில் சேகரித்து வைக்கிறான் இறைவன். எனவே ஆலயங்களை காப்பாற்றுங்கள். ஆலயங்கள் வாழ்ந்தால், இயற்கை வாழும். இயற்கை வாழ்ந்தால், மனிதர்கள் செழிப்படைவார்கள். மனிதர்கள் செழிப்படைந்தால், அன்பு பிறக்கும்... அன்பு பிறந்தால், உலகம் தழைக்கும். இதனை மனதில் எப்போதும் இருத்திக் கொள்ளுங்கள்!"

பிருகர் கூற, மாணவர்கள் கவனத்துடன் கேட்டுக் கொண்டிருந்த அதே நேரம் -

தொலைவில் ராஜ வாத்தியங்கள் இசைக்க, மன்னன் சந்திரகுப்தனும், அவன் மனைவி குமாரதேவியும் வரும் ஆரவாரம் கேட்டது.

"மேதா! அரச தம்பதிகள் வருகின்றனர்!" பிருகர் குரல் கொடுக்க, மேதா ஆஸ்ரமத்திலிருந்து வெளியே வந்தவள், அரச தம்பதியரை வரவேற்க ஏற்பாடுகளை செய்தாள்.

சந்திரகுப்தனும் குமாரதேவியும், பிருகரின் வரவேற்பினை ஏற்று அவருக்கு அருகே அரசமர மேடையில் விரிக்கப்பட்டிருந்த கம்பளத்தில் அமர்ந்தனர்.

“மன்னா! நீர் என்னிடம் ஒப்படைத்த மூன்று குழந்தைகளும், குமார பருவத்தில் நுழைவதற்கு தயாராக உள்ளனர். உலகில் உள்ள அத்தனை சாத்திரங்களையும் அவர்களுக்குப் போதித்திருக்கிறேன். சிந்தை, செயல்,

https://telegram.me/aedahamlibrary

பேச்சு என்கிற மூன்று புரவிகளையும் அவர்களது தேகம் என்னும் தேரில் பிணைத்திருக்கிறேன். அவை ஒரே சீராக ஓடும் என்பதில் ஐயமில்லை. எல்லாத் திறமைகளையும் பெற்று அவர்கள் உலகை வாழ வைப்பார்கள்!" பிருகர் சொல்ல, குமாரதேவி பொறுமையின்றி தனது கணவனை முந்திக்கொண்டு ஆசானிடம் பேசத் தொடங்கினாள்.

"ஆசானே! நான் அசோகனின் அண்ணன் சுசிமாவின் வழித் தோன்றல். சுசிமாவின் மனைவி சித்ரசேனாவிடம் சாணக்கியர், ஒரு தகவலை கூறினார். சமுத்திரத்தை பெயரில் கொண்ட ஒருவன் கடல் பொங்குவது போல் பொங்கி குப்த சாம்ராஜ்யத்தை பரவச்செய்வான் என்றும் கூறினார். சுசிமா [1] மற்றும் சித்ரசேனாவின் மகள் சவ்சீலா, அவளது மகன் தானமித்ரா, அவரது மகன் புஷ்யமித்ரா மவுரியத்தை அழித்து குப்த சாம்ராஜ்யத்தை நிறுவினர். அவரது மகன் அக்னிமித்ராதான் எனது தந்தை. எனது மகன்களில் ஒருவன் தான் சமுத்ரகுப்தன் என்று தெரிகிறது. ஆனால் அந்த மூவரில் அவன் யார்?" சற்றே பதற்றம் நிறைந்த குரலில் பேசினாள், குமாரதேவி.

"கவலைப்படாதீர்கள். நீங்கள் உங்கள் குமாரர்களை குருகுலத்தில் ஒப்புவித்த நாளிலேயே எனது மனைவி மேதா சமுத்ரகுப்தனை இனம் கண்டு கொண்டாள். மேதா! நீயே சமுத்ரகுப்தனை அடையாளம் காட்டு!” பிருகர் கூறினார்.

"விவேகா! ஆர்யா! சுவேதா! நீங்கள் மூவரும் சென்று நமது உலகில் சத்தியத்திற்கு மிகவும் கட்டுப்பட்ட ஒருவரைத் தேடி கண்டுபிடித்து இங்கே அழைத்து வாருங்கள்! ஆனால் சில நிபந்தனைகள். நீங்கள் அழைத்து வரும் அந்த சத்தியத்திற்கு கட்டுப்பட்டவர் உலகையே ஆளும் அரசனாக இருக்க வேண்டும். மக்களுக்கு வாரி வழங்கும் வள்ளல் தன்மை கொண்டிருக்க வேண்டும்.

"நீங்கள் அழைத்து வரும் அந்த சத்தியத்திற்கு கட்டுப்பட்ட மனிதரை நான் எனது கால்களால் மிதித்து அவரை நான் ஆராதிக்க வேண்டும்." மேதா கூற, அரசகுமாரர்கள் மூவரும் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றனர். –

“மூவரில் சமுத்ரகுப்தன் யார் என்பது இப்போது உங்களுக்கு புலப்படும்!” - மேதா புன்முறுவல் ஒன்றை குமாரதேவியின் பக்கமாக சிந்தினாள்.

இளவரசர்கள் திரும்பி வருவதற்காக அனைவரும் காத்திருக்க, நீண்ட

https://telegram.me/aedahamlibrary

இடைவெளிக்குப் பிறகு விவேகன், ஆர்யன் மற்றும் சுவேதன் மூவரும் வந்து நின்றனர்.

விவேகனின் கரத்தில் ஒரு நிலைக்கண்ணாடி இருந்தது. சுவேதனின் கரத்தில் ஒரு பாக்கு மரப் பெட்டகம் இருந்தது. ஆர்யனின் கரத்தில் ஒன்றுமே இல்லை. மௌனமாக கைகளை கட்டிக்கொண்டு ஒரு பக்கமாக நின்றிருந்தான்.

மேதா விவேகனை பார்த்தாள். "விவேகா! மூவரில் உலகத்தினுள் முதலில் பிரவேசித்தவன் நீ. சத்தியத்திற்கு கட்டுப்பட்ட பொருளை கொண்டு வந்திருக்கிறாயா? நீ கொண்டு வந்ததை நீயே முதலில் காட்டு!”

விவேகன் உடனே தன் கையில் இருந்த கண்ணாடியை விண்ணை நோக்கிக் காட்டி, உச்சி வானில் ஜொலித்துக் கொண்டிருந்த சூரியனின் பிம்பத்தைக் கண்ணாடியில் பிரதிபலித்தான்.

“உலகத்திலேயே சத்தியத்திற்கு மிகவும் கட்டுப்பட்டது சூரியனே. தனது கிரணங்களால் பூமியை பஸ்பமாக பொசுக்க முடியும். இருப்பினும், தூரத்தே நெருப்பை வைத்து வள்ளல் தன்மையுடன் ஒளியை மட்டும் நமக்கு வழங்கி, உயிரினங்களை வாழ வைக்கிறானே. மண்ணுலகிற்கு மட்டுமல்ல, விண்ணுலகம் மற்றும் கிரகங்களுக்கு அவனே அரசன். சத்தியத்திற்கு கட்டுப்படுவதில் சிறந்தவனான சூரியனைக் காட்டிலும் வேறு எவன் இருக்க முடியும்? நீங்கள் கதிரொளியில் கால்களை பதித்து நின்றபடி அவனை ஆராதிக்கலாம்” என்று குருமாதாவின் அத்தனை நிபந்தனைகளையும் நிறைவேற்றிவிட்ட பெருமையுடன் கூறி முடிக்க, சந்திரகுப்தனும், குமாரதேவியும் தமது மகனின் கூற்றை செவி மடுத்து உற்சாகத்துடன் விவேகன்தான் சமுத்ரகுப்தனா என்று கேட்பது போன்று பிருகரை நோக்கினர்.

மேதா அவனுக்குப் பதில் கூறாமல், சுவேதனை நோக்கினாள். "மண்ணுலகிற்கு கடைசியாக வந்தாலும், நீயே முதலில் உனது தாயின் கர்ப்பத்தில் ஜனித்திருக்கக் கூடியவன் என்கிற காரணத்தால் நீயே அடுத்து நீ கொண்டு வந்திருக்கும், சத்தியத்திற்கு கட்டுப்பட்ட பொருளைக் காட்டு!” - மேதா கூறினாள்.

சுவேதன் தனது கையில் இருந்த பெட்டகத்தைத் திறந்தான். உள்ளே வேத சாகைகளின் பொருளுரைக்கும் அர்த்தங்கள் இருந்தன. அவற்றை வெளியே எடுத்தான்.

https://telegram.me/aedahamlibrary

“இவை எனக்கு ஆசான் போதித்த பாடங்கள். வேதங்கள் சத்தியமானது. இறைவன் அளித்தது. ஓராண்வழியாக செவி மூலம் ஓதப்பட்டு வருகிறது. சத்தியமான வேதத்திற்கு கட்டுப்பட்டவர் எனது ஆசான் மட்டும்தான். வள்ளல்தன்மையுடன் உலகின் கல்வியை மக்களுக்கு வழங்குகிறார். கல்வியுலகில் அரசனாகத் திகழ்கிறார். அவரது கால் பதித்த தடயங்களில்தான் பதிவிரதையான தாங்கள் கால் பதித்து நடக்கிறீர்கள். எனவே, அவரது கால்தடயங்களை மிதித்தபடி நீங்கள் அவரை போற்றலாம்!” தானும் குருமாதாவின் நிபந்தனைகளை நிறைவேற்றிவிட்ட உற்சாகத்துடன் சுவேதன் கூறினான்.

சுவேதனது கூற்றிலும் நியாயம் இருப்பதாகவேபட்டது, அரச தம்பதிகளுக்கு. இருப்பினும், ஆர்யன் என்ன கூறுகிறான் என்பதைக் கவனிப்போம், என்று அவனை நோக்கினர்.

மேதா ஆர்யனைப் பார்த்தாள். “உனது நிலை என்ன ஆர்யா?”

“தாயே! சத்தியத்திற்கு மிகவும் கட்டுப்பட்ட ஒருவன் நமது ஆஸ்ரமத்தின் அருகிலேயே இருக்கிறார். தாங்கள் அழைப்பதாக அவரிடம் கூறினேன். சத்தியத்திற்கு கட்டுப்பட்டு எல்லை தாண்டாமல் தான் இருப்பதாகவும், தன்னால் வர முடியாது என்றும் கூறினார். எனவே, அவரைக் காண வேண்டுமென்றால் நீங்கள் எல்லோரும் அங்கே வர வேண்டும்!” என்று பணிவுடன் கூறினான், ஆர்யன்.

மேதா புன்னகையுடன் பிருகரைப் பார்த்து புன்னகைத்துவிட்டு, மீண்டும் ஆர்யனை நோக்கினாள்.

"சத்தியத்திற்கு மிகவும் கட்டுப்பட்டவன் சூரியன் என்று கதிரவனையே காட்டியிருக்கிறான், விவேகன். வேதங்கள் சத்தியமானவை. அவற்றிற்கு கட்டுப்பட்ட தனது ஆசானையே சத்தியத்திற்கு கட்டுப்பட்டவராக காட்டியிருக்கிறான், சுவேதன். சூரியனையும், ஆசானையுமே காட்டிவிட்ட அவர்களைவிட உன்னால் சிறந்த ஒரு சத்தியத்திற்கு கட்டுப்பட்டவரை காட்ட முடியுமா என்ன?” மேதா ஓரக்கண்ணால் அரச தம்பதிகளைப் பார்த்தாள்.

ஆர்யன் கலங்கவில்லை. "தாயே! உங்கள் கட்டளையை விவேகனும், சுவேதனும் சரியாக கவனிக்கவில்லை. கதிரவன் சத்தியத்திற்கு கட்டுப்பட்டவனாக இருக்கலாம். வள்ளல் தன்மை கொண்டிருப்பவனாகவும் இருக்கலாம். ஆனால் அவன் நமது உலகிலா இருக்கிறான்? நமது பூமிதானே அவனைச் சுற்றி வருகிறது. நீங்கள் கேட்டது என்ன? நமது உலகில் சத்தியத்திற்கு மிகவும் கட்டுப்பட்ட

https://telegram.me/aedahamlibrary

ஒருவரைத் தேடிப் பிடித்து வா. அவரை நமது காலால் மிதித்து போற்றுவோம் என்றீர்கள். கதிரொளியை நாம் மிதித்து போற்றினாலும், கதிரவன் இந்த உலகத்தில் இல்லை. அவன் தனியொரு உலகம். எனவே விவேகன் உங்கள் கட்டளையை நிறைவேற்றவில்லை!” ஆர்யன் குரலில் தன்னம்பிக்கை பூரணமாக நிலவியது.

"பலே...!” குரல் கொடுத்தார் பிருகதான்யர். "சரி! கதிரவன்தான் இந்த உலகில் இல்லை. நான் இந்த உலகத்தில் தான் வாழ்கிறேன். சத்தியப்பிரமாணங்களான வேதங்களுக்கு நான் கட்டுப்பட்டவன். எனவே சத்தியத்திற்கு கட்டுப்பட்டவன் நான் என்று சுவேதன் கூறியது சரிதானே?" பிருகர் கேட்டதும், அவரை பக்தியுடன் நோக்கினான், ஆர்யன்.

“ஆசானே! நீர் சத்தியத்திற்கு கட்டுப்பட்டவர் என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால் குருமாதா விதித்த கட்டளையின்படி உங்களை அவரால் போற்ற முடியாது. மாதாவின் கட்டளை என்ன? நமது உலகிலேயே சத்தியத்திற்கு மிகவும் கட்டுப்பட்டவரை தேடிப்பிடித்து அழைத்து வா. அவர் மீது கால் பதித்து நான் அவரை போற்ற வேண்டும் என்றுதானே குருமாதா கூறினார். உங்கள் மீது குருமாதாவால் எப்படி கால் பதிக்க முடியும்? பதிவ்ரதத்தை மேற்கொண்டிருக்கும் அவரால் உங்களை எப்படி மிதிக்க முடியும்? அது அபவாதம் அல்லவா? ஒரு பதிவ்ரதை தன் காலின் கீழ் மிதிபடக்கூடிய ஒரு பொருளைத் தேடிப் பிடித்துக் கொண்டு வா என்று கூறுகிறார் என்றால், நிச்சயம் அவர் தனது கணவனை குறித்து கூறியிருக்கமாட்டார். எனவே, அந்த சத்தியத்திற்கு கட்டுப்பட்டவர் எனது ஆசானாக இருக்க முடியாது. எனவே சூரியனைப் போல் நீங்களும் சத்தியத்திற்கு கட்டுப்பட்டவராக இருந்தாலும், குருமாதா குறிப்பிட்டவர் நீங்கள் இல்லை... இந்த உலகிலேயே, அவரை நன்றாக நமது கால்களால் மிதித்தபடி போற்றுவதற்குரிய சத்தியத்திற்கு கட்டுப்பட்ட ஒருவர் இருக்கிறார். இதோ அருகாமையிலேயே இருக்கிறார். நீங்கள் அங்கே வந்தால், நம் உலகத்திலேயே சத்தியத்திற்கு மிகவும் கட்டுப்பட்டவர் அவர்தான் என்பதை புரிந்து கொள்வீர்கள்!” ஆர்யன் கூறியதும் அரச தம்பதிகள் மலைத்துப் போனார்கள்.

அனைவரும் ஆர்யனைப் பின்தொடர, அவன் அவர்களை கடற்கரைக்கு இட்டுச்சென்றான்.

பிருகர் வியப்புடன் அவனை பார்த்தார். "ஆர்யா? எதற்கு எங்களை கடற்கரைக்கு அழைத்து வந்தாய்?”

https://telegram.me/aedahamlibrary

அவன் கண்களில் பிரகாசத்துடன் கடலையே வெறித்து நோக்கிக் கொண்டிருந்தான்.

“ஆசானே!... குருமாதா!... இதோ சத்தியத்திற்கு மிகவும் கட்டுப்பட்ட நபர், இந்த சமுத்திரராஜன்தான். நமது மண்ணுலகின் பெரும்பகுதியை அவர்தான் ஆட்சி செய்கிறார். உலகின் கால்பங்கு கூட இல்லாத நிலப்பரப்பை ஒரு க்ஷண நேரத்தில் அவரால் மூழ்கடிக்கச் செய்துவிட முடியும். ஆனால் உயிர்கள் வாழ வேண்டும் என்பதற்காக, சத்தியத்திற்கு கட்டுப்பட்டு, கரை கடக்காமல் இருக்கிறார். சூரியனைப் போல் தனியுலகில் இல்லை அவர். இதோ நம்முடன், நமது உலகிலேயே நம்முடன் உறவாடிக் கொண்டுதான் இருக்கிறார். சமுத்திர நீரில் கால் வைத்து மிதித்தபடிதான் அவரை போற்றுகிறோம்!” என்று கூற, மேதா நடந்து சென்று, சமுத்திர நீரில் கால் வைத்து, நீரைத் தனது சிரசில் ப்ரோட்சணம் செய்து கொண்டாள்.

“பார்த்தீர்களா! நமது குருமாதா கால்வைத்து மிதிக்கக் கூடிய, நமது உலகில் இருக்கும் சத்தியத்திற்கு கட்டுப்பட்ட சமுத்திரராஜனை உங்களுக்குக் காட்டிவிட்டேன். சமுத்திரராஜன் என்று பெயரிலேயே அரசனாகக் கருதப்படுகிறான். தன்னுள் பல செல்வங்களைக் கொண்டிருக்கும் சமுத்திர ராஜன், மக்களுக்கு அவற்றை வாரி வழங்குகிறான். முத்தும் மணியும், உண்பதற்கு கடல் தாவரங்களையும், மீன்களையும் தருகிறான். வள்ளல் தன்மை கொண்டவன். திருமகளையும், குபேரனையும், தன்வந்த்ரியையும் சகோதரர்களாகக் கொண்டவன். காமதேனு, கல்பதரு என்று கடலில் தோன்றியவைகளும் வள்ளல்தன்மையுடன் இருக்கின்றன. இராமபிரான் இட்ட பிரதிக்ஞையை முன்னிட்டு அவன் சீதையை மீட்டு வந்த பிறகும் கூட, சேதுபந்தனத்தை உடைக்காமல் இருக்கிறான். சமுத்திரராஜனைவிட சத்தியத்திற்கு கட்டுப்பட்ட ஒரு அரசன் வேறு எவரும் இருக்க முடியாது.” - ஆர்யன் கூறினான்.

பிருகர் பரவசத்துடன் பாய்ந்து சென்று ஆர்யனை அணைத்துக் கொண்டார்.

“சந்திரகுப்தா! குமாரதேவி! இதோ உங்கள் சமுத்ரகுப்தன். அழைத்துச் செல்லுங்கள். உலகையே ஜெயிக்கப் போகிறான், நமது சமுத்ரகுப்தன். சமுத்ர ராஜனைப் போன்றே, வள்ளல் தன்மையுடன், சத்தியம் தவறாமல் உலகை ஆள்வான்.” - பிருகதான்யர் கூற, குமாரதேவி ஓடிச்சென்று ஆர்யனை உச்சி முகர்ந்து ஆனந்தக் கண்ணீரை வடித்தாள்.

https://telegram.me/aedahamlibrary

மகன்களுடன் அரசரும் அரசியும் பாடலிபுத்ரம் புறப்பட்டு போக, கண்களில் நீர்மல்க மேதா அவர்களை நோக்கினாள். பல கலைகளை அவனுக்கு போதித்திருந்த பிருகர் அவனது பிரிவினை எப்படி தாங்குவாரோ தெரியாது. ஆனால் சமுத்ரகுப்தனுக்கு வீணா கானத்தின் மீதுள்ள ஆர்வத்தை உணர்ந்து குருகுலம் முடிந்ததும், அவனுக்கு வீணை இசையை பயில்வித்திருந்தாள் மேதா. ஒரு நாள் வந்து, வீணையில் தான் குருவிடம் கற்ற சாம வேதகானத்தை ஆர்யன் வீணையில் மீட்ட, அதைக் கேட்ட மேதா உருகிப் போனாள்.

"அரசனாக நீ உலகத்தை வெல்வாய் என்கிறார், குரு. ஆனால், எனக்குத் தோன்றுகிறது ஒன்றுதான். நீ வீணையினால்தான் உலகை வெல்லப் போகிறாய்!" என்று ஆர்யனிடம் கூறியிருந்தாள்.

இரதத்தில் இருந்து ஆர்யன், எட்டி மீண்டும் ஆஸ்ரமம் பக்கமாக நோக்கினான். குருவையும் குருமாதாவையும் பிரிய மனமில்லாமல் அவன் அப்படிப் பார்ப்பதாக நினைத்தனர், சந்திரகுப்தனும், குமாரதேவியும்.

ஆனால் –

ஆர்யனது கண்கள் சமுத்திரத்தை வெறித்துக் கொண்டிருந்தன.

உன்னைப் போல் அரசனாகத் திகழ்வேன்.

நீ ராமனுக்கு உதவியது போல் பிறருக்கு உதவுவேன். செல்வங்களை அள்ளித் தருவது போன்று நானும் வள்ளலாகத் திகழ்வேன்.

உன்னைப் போலவே சத்தியத்திற்கு கட்டுப்படுவேன். ஆனால் உன்னைப் போல் பொங்க வேண்டிய சூழ்நிலைகளில் பொங்குவேன்... - என்கிற தீர்மானத்துடன் குப்த ராஜ்யத்திற்குச் சென்று கொண்டிருந்தான், வருங்கால சமுத்ரகுப்தன், தற்போதைய ஆர்யன்.

[1] குப்த அரசி குமாரதேவியின் பெயர் ரத்னஹாரா. அவளது பாட்டனார்தான் மவுரியத்தை அழித்து குப்த சாம்ராஜ்யத்தை நிறுவிய புஷ்யமித்ரா. புஷ்யமித்ராவின் தந்தை தானமித்ரா. தானமித்ராவின் தாய் சவ்ஷீலா அசோகனின் அண்ணன் சுசிமாவின் மகள். அவ்வகையில் சுசிமா மற்றும் அசோகனுக்கு, குமாரதேவி எள்ளுப்பெயர்த்தி ஆகிறாள்.

அசோகனின் எள்ளுப்பெயர்த்தி குமாரதேவியின் மகன்தான் சமுத்ரகுப்தன். புஷ்யமித்ரவுக்கு ரத்னஹாரா ஒரே மகளாகத் திகழ்ந்ததால் தனக்கு பிறக்கும் மகனே சமுத்ரகுப்தனாகத் திகழ்வான்

https://telegram.me/aedahamlibrary

என்று அவள் நினைத்திருக்க, ஒரே பிரசவத்தில் மூன்று பிள்ளைகள் பிறந்ததால், அவர்களில் யார் சாணக்கியன் குறிப்பிட்ட சமுத்திர குப்தன் என்பது தெரியாமல் குழம்பினாள், அவள்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 26. மகத வீணையில் மகத்தான ரகசியம்

எங்கிருந்து துவங்குவது என்கிற கேள்வி மனதினுள் எதிரொலிக்க, ஆர்யன் அரண்மனையின் உப்பரிகையில் உலாவிக் கொண்டிருந்தான். ஜகன்நாதம் ஆஸ்ரமத்தில் அன்றாடம் சமுத்திரக் கரைக்குச் சென்று நீராடிவிட்டு, பிறகு ஆஸ்ரம கிணற்றில் நீர் சேந்தி மீண்டும் நீராடிவிட்டு, பிறகே தனது அன்றாடப் பணிகளைச் செய்வான். குருகுலம் கல்வி முடிந்ததும், குருமாதா மேதாவிடம் வீணை இசையைப் பயின்றுவிட்டு, பிறகு மீண்டும் கடற்கரைக்குச் சென்று விடுவான். வெகுநேரம் கடலையே வெறித்து நோக்கிக் கொண்டிருப்பான். 'பிரபஞ்சத்தில் ஏழு சமுத்திரங்கள் இருப்பதாக அவன் அறிந்திருக்கிறான். பால்கடல், தேன்கடல் என்றெல்லாம் உள்ளதாமே. இதோ... கண்ணெதிரே ஜம்புத்வீபம் என்கிற உப்புகடலின் நடுவே பரத கண்டம் இருக்கின்ற போது, ஏன் பாற்கடலும், தேன் கடலும் இருக்கக்கூடாது?' மனதினுள் யோசித்துக் கொண்டிருந்த போது சிலம்புகளின் ஒலி கேட்டது. தனது பின்பாக யாரோ வந்து நிற்கும் உணர்வு.

வியப்புடன் திரும்பி நோக்கினான். இவனுடைய செவிலித்தாய் வீணாதரா தான் புன்சிரிப்புடன் நின்று கொண்டிருந்தாள்.

“இளவரசே!” - அவளது குரலில் பணிவைக் காட்டிலும், தான் வளர்த்த மகன் என்கிற பாசமே அதிகமாக தொனித்தது.

வீணாதரா! அடடே! இவளை மறந்தே போனேனே. குருகுல வாசத்திற்கு புறப்பட்ட அன்று இவளை கடைசியாகப் பார்த்தது. இவனுக்கு கதைகளைக் கூறி... இசையையும் முதலில் பயில்வித்தவள் இவள்தானே.

“வீணாதரா! எப்படி இருக்கிறாய்? நான் குருகுல வாசம் முடிந்து திரும்பி வந்து ஒரு திங்கள் முடிந்துவிட்டது. உன்னை அரண்மனையில் நான் காணவேயில்லையே?” வியப்புடன் கேட்டான், ஆர்யன்.

"இளவரசே! நான் இப்போது அரண்மனை பணியில் இல்லை! எனக்கு மணமாகி எனது கணவரின் கிராமத்திற்கு இடம்பெயர்ந்துவிட்டேன். நாளை மன்னர் அக்னிமித்ராவின் நினைவு தினம் என்பதால் சாம கானம் மீட்ட வந்திருக்கிறேன்!” வீணாதரா கூற, அவளை அதிசயத்துடன் பார்த்தான்.

அட ஆமாம்! பாட்டனார் அக்னிமித்ராவின் நினைவு நாளன்று

https://telegram.me/aedahamlibrary

வீணாதராதானே மகத வீணையை மீட்டி சாம கானம் இசைப்பாள்.

உடனேயே அவனுள் ஓர் எண்ணம். இம்முறை வீணாதராவுடன் தானும் சேர்ந்து வீணை மீட்டி சாம கானம் செய்தால் என்ன? வீணை மீட்டி அனைவரையும் வியப்பில் ஆழ்த்த வேண்டும்.

“வீணாதரா! நீ என்னை ஆர்யா என்றே அழைக்கலாம். எங்களை வளர்த்தவள் நீ. எனது தாய்க்கு ஒப்பானவள். நீ என்னை பாசத்துடன் கவனித்துக் கொண்டது போன்று, குருகுலத்தில், குருமாதா மேதா என்னை கவனித்துக் கொண்டார். அவரைப் பார்க்கும் போதெல்லாம் உனது நினைவுதான் எனக்கு வரும்!” -- ஆர்யன் கூற, நெகிழ்ந்து போனாள், வீணா.

"நாடே சமுத்ரகுப்தன் வந்துவிட்டான் என்று குதூகலத்தில் மூழ்கி உள்ளது. வருங்கால மன்னன் என்று மன்னரும், அரசியாரும், உன்னை அடையாளம் காட்டிவிட்ட பிறகு, இன்னும் உன்னை ஆர்யா என்று அழைக்க முடியுமா? நான் இளவரசே என்று அழைப்பது உனக்குப் பிடிக்கவில்லை என்றால், உனது பெயரை சமுத்ரகுப்தன் என்றே அழைக்கிறேன். அங்ஙனம் அழைப்பது எனக்கும் புளகாங்கிதத்தைத் தருகிறது. சமுத்ரம் போன்று பரந்து, விரிந்து, ஆழமும் கொண்டு, சீறும் போது சீறி, அமைதி காக்க வேண்டிய நேரத்தில் அமைதி காத்து உலகத்தை உனது குடையின் கீழ் கொண்டு வந்து எல்லோரும் இன்புற்றிருக்கும்படி நீ ஆட்சி செய்ய வேண்டும். நான் வளர்த்த மகன் உலகையே ஆளுகிறான் என்கிற திருப்தியுடன் எனது கிராமத்தில் நான் வாழ்ந்து கொண்டிருப்பேன்!”

"நிச்சயம் செய்வேன், வீணா! நீ வருவதற்கு முன்பாக அதனை குறித்துதான் யோசித்துக்கொண்டிருந்தேன்!” -- சமுத்ரகுப்தன் கூறினான்.

“எங்கு துவங்குவது என்று யோசிக்கிறாயா? யோசிப்பதை நிறுத்து. நாளை நினைவு தின நிகழ்ச்சி முடிந்ததும், உனக்கு நான் ஒரு பரிசு தரப் போகிறேன். அந்த பரிசினை பெற்றுக்கொண்டால், உனக்கு தெளிவு ஏற்படும். எங்கிருந்து துவக்குவது என்று நீ புரிந்து கொள்வாய்.” வீணாதரா குரலைத் தாழ்த்தினாள்.

சமுத்ரகுப்தன் புருவங்களை உயர்த்தினான். “என்ன விஷயம், வீணா! இன்று பேச்செல்லாம் பலமாக இருக்கிறது. அதிகம் பேசமாட்டாயே! திருமணத்திற்குப் பிறகு நிறைய பேசத் துவங்கிவிட்டாய் போலும். எனக்கு ஆலோசனை கூறுமளவுக்கு நீ வளர்ந்துவிட்டாய். பேசாமல்

https://telegram.me/aedahamlibrary

நீயே எனது ராஜகுருவாக வந்துவிடேன்!” -- பரிகாசம் செய்தான், சமுத்ரகுப்தன்.

"உனக்கு எதற்கு ராஜகுரு, சமுத்ரகுப்தா? நான் உனக்கு ஆலோசனை கூறவில்லை. வாழ்த்து கூறுகிறேன். உலகையே நீ நிச்சயம் ஆளத்தான் போகிறாய். நான் உனக்கு தரும் பரிசு உனக்கும், எனக்கும் மட்டுமே தெரிந்த ஒரு ரகசியமாக இருக்க வேண்டும். உனது பெற்றோருக்கும், சகோதரர்களுக்கும் கூட தெரியக் கூடாது!” வீணா எச்சரிக்க, தனக்குள் எழுந்த ஆர்வத்தை கட்டுப்படுத்தியபடி பதிலுக்கு அவளை வியப்பில் ஆழ்த்தினான், சமுத்ரகுப்தன்.

“நாளை நீ வீணா கானம் செய்யும் போது, உனக்கும் ஒரு ஆச்சரியம் காத்திருக்கிறது!” ஆர்யன் கூற, அவனை வியப்புடன் நோக்கியவள், பிறகு புன்சிரிப்புடன் தலையசைத்துவிட்டு உப்பரிகையில் இருந்து நீங்கினாள்.

குப்த சாம்ராஜ்யம் அமைவதற்கு காரணமான, அசோகனின் அண்ணன் சுசிமாவின் மகள் சவ்ஷீலா மற்றும் அக்னிமித்ராவின் ஓவியங்கள் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு, உச்சி மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்தன. உச்சி மண்டபம், உப்பரிகையின் மையத்தில் அமைந்திருந்தது. மண்டபம் மிகவும் அழகாக அலங்கரிக்கப்பட்டு, அதனைச் சுற்றி பட்டு மெத்தைகள் விரிக்கப்பட்டு, அவற்றில் திண்டுகள் வைக்கப்பட்டிருந்தன. அரச குடும்பத்தினர் மட்டும் பங்கேற்கும் அந்த நிகழ்வுக்கு தலைமை அமைச்சர், பிரணதார்த்தியும், ராஜகுரு சதமான திரிநேத்ரியும் மட்டும் அழைக்கப் பட்டிருந்தனர். பிரணதார்த்தியின் மகனும், இளவரசர்களுடன் வீர விளையாட்டுகளை பயின்ற தோழனுமான விஜயநந்தன் மட்டும் விசேடமாக ஆர்யனால் நிகழ்வுக்கு அழைக்கப்பட்டிருந்தான். தான் வீணை மீட்டப் போவதை தனது உயிர் நண்பன் காண வேண்டும் என்பதால் அவனுக்கு மட்டும் விசேட அழைப்பு. உச்சி மண்டபத்திற்கு எதிரே ஒரு சிறு மேடை அமைக்கப்பட்டிருந்தது. அதில் அமர்ந்தபடிதான் வீணாதரா வீணையை மீட்டி சாம கானம் இசைக்க இருந்தாள்.

வேதியர்கள் நினைவு நாள் சடங்கினை முடித்த பிறகு, பிரார்த்தனை மண்டபத்தில் இருந்து மகத வீணையை சுமந்தபடி வந்தாள், வீணாதரா. வீணையை மேடையின் மீது வைத்துவிட்டு, சவ்ஷீலா மற்றும் அக்னிமித்ராவின் ஓவியங்களை வணங்கிவிட்டு, மேடையேறினாள். இவள் மகத வீணையின் குடத்தை மடியில் இருத்தி, அதன் ஸ்ருதிஸ்தானங்களை சரி செய்து கொண்டிருந்த போது, திடீரென்று -

https://telegram.me/aedahamlibrary

எங்கிருந்தோ இனிமையான வீணை இசைக்கும் ஒலி கேட்டது. யாரோ மிக அழகாக சாமகானத்தை மீட்டிக் கொண்டிருந்தனர். வீணாதரா திடுக்கிட்டு சுற்றிலும் பார்க்க, குழுமியிருந்த அரச குடும்பத்தினரும் திகைப்புடன் இங்கும் அங்கும் நோக்க, வீணாதரா அமர்ந்திருந்த மேடையின் எதிரே இருந்த திரை விலகியது. திரைக்குப் பின்னால் இருந்த மேடையில் அமர்ந்தபடி சமுத்ரகுப்தன் வீணை மீட்டிக் கொண்டிருந்தான்.

வீணாதராவின் கண்கள் வியப்பினால் விரிந்தன. சமுத்ரகுப்தனா வீணை இசைத்துக்கொண்டிருக்கிறான்!?

எவ்வளவு நேர்த்தியாக மீட்டுகிறான். நாளை உனக்கு ஒரு ஆச்சரியம் காத்திருக்கிறது என்று முந்தைய தினம் அவன் கூறியது இதுதான் போலும். அதிசயத்துடன் அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள் வீணாதரா. பிறகு அவன் தலையசைத்ததும்தான் தனது நிலை உணர்ந்து அவனுடன் சேர்ந்து தானும் சாம கானத்தைத் துவங்கினாள்.

வீணை இசைத்தபடி வீணாதரா அரசியார் குமாரதேவியை நோக்கினாள். சிறுவயதில் இவள் வீணை இசைப்பதைப் பார்த்து தானும் அதை மீட்ட முயன்றானே... குருகுலம் புறப்படும் அன்று, ஆர்யன் காணாமல் போக, கடைசியில் அவன் பிரார்த்தனை மண்டபத்தில் மகத வீணையின் அருகே நின்று அதனை வருடியபடி நின்ற காட்சிகள் நினைவுக்கு வந்தது.

அன்றே நான் சொன்னேனே! ஆர்யன் தான் சமுத்ரகுப்தன் என்று. சரியாகிவிட்டது பார்த்தீர்களா... என்னும் சேதி தொனிக்க, அரசியை அவள் நோக்கினாள். அதை புரிந்து கொண்ட குமாரதேவியும் பரவசத்துடன் தலையசைத்துவிட்டு, மகன் வீணை மீட்டுவதைக் கவனிக்கத் தொடங்கினாள்.

சமுத்ரகுப்தன் தெய்வத்தின் அருள் பெற்றவன் என்பது அவன் வீணை இசைக்கும் விதத்திலேயே தெரிந்தது. அவனது ஆண்மை மிளிர்ந்து கொண்டிருந்த போதிலும், வாட்பயிற்சி மற்றும் கதை சுழற்றுவது, வேல் எறிவது என்று வீர விளையாட்டுகளை தொடர்ந்து பயின்றதால் காய்த்துப் போய் இருந்த அவனது விரல்களால் அவன் தந்திகளை மிருதுவாகக் கையாள, வீணையிலிருந்து பேரின்ப நாதம் பொங்கிக் கொண்டிருந்தது. வீணாதராவே மலைத்துப் போனாள். இவ்வளவு நளினமாக வாசிக்க ஒரு ஆணினால் முடியுமா?

வீணையை மீட்ட பெண்களால் மட்டுமே முடியும். வீணை பெண்களின்

https://telegram.me/aedahamlibrary

இசை வாத்தியம் என்றுதான் இதுகாறும் இவள் நினைத்திருந்தாள். ஆனால் வீணை இசைப்பதில் தன்னை வெல்வதற்கு யாரும் இல்லை என்று இறுமாந்திருந்த தனது மனைவி சரஸ்வதியின் கர்வத்தை அடக்குவதற்காகவே சமுத்திரகுப்தனை படைத்து அவனை வீணை மீட்டச் செய்கின்றானோ பிரம்மன், என்று நினைக்கும்படியாக, தனது கற்பனையையும் சேர்த்து வீணையை மீட்டிக் கொண்டிருந்தான், சமுத்ரகுப்தன்.

இசை நிகழ்வு முடிந்தது. புரோகிதர் நினைவு நாள் நிகழ்வினை முடித்து வைக்கும் விதமாக ஓவியங்களுக்கு தீபாராதனையை காட்ட, அனைவரும் உப்பரிகையின் உச்சி மண்டபத்திலிருந்து கிளம்பினர். வீணை இசைத்த சமுத்ரகுப்தனும், வீணாதராவும் மட்டுமே அங்கே இருந்தனர்.

“எப்படி எனது வீணை வாசிப்பு?” - சமுத்ரகுப்தன் கேட்டான்.

"மகத வீணை நாதத்தில் மவுரிய மயிலின் நர்த்தனத்தைக் கண்டேன். நீ வீணையை மீட்டுவது ஒன்றே போதும், உலக சக்கரவர்த்தியாக நீ திகழப் போகிறாய் என்பதற்கு. பத்து நாடுகளை தனது வசப்படுத்தி ஆண்ட இலங்கேஸ்வரன் திறமையான வீணை கலைஞன். அவனது கொடியில் வீணை சின்னம் தான் இருந்தது தெரியுமா. நீயும் அவனைப் போன்று சக்கரவர்த்தியாகத் திகழப் போகிறாய்!” - பெருமிதத்துடன் கூறினாள் வீணாதரா.

“இலங்கேஸ்வரனா? அப்படியென்றால் இன்னொருவனின் மனைவியை நான் கவர்ந்து வரப் போகின்றேனா?” - சமுத்ரகுப்தன் சிரித்தான்.

“இலங்கேஸ்வரன் சீதையை கவர்ந்து வந்தான். நீ ராமனையே கவர்ந்து வரப்போகிறாய்?” வீணா கூறியதும், திகைத்தான், சமுத்ரகுப்தன்.

"நீ சொல்வது எனக்கு விளங்கவில்லை, வீணா!” -- சமுத்ரகுப்தன் தான் அமர்ந்திருந்த மேடையில் இருந்து நீங்கி, வீணா அமர்ந்திருந்த மேடையில் வந்து அமர்ந்தான்.

“நேற்று உனக்கு ஒரு பரிசு தருகிறேன் என்று கூறினேன் அல்லவா...?” வீணா கேட்க, தலையசைத்தான், சமுத்ரகுப்தன்.

உண்மையில் அவள் அங்ஙனம் கூறியிருந்ததை முற்றிலும் மறந்திருந்தான். அவள் கூறியதும்தான் அவனுக்கு அது குறித்து நினைவு

https://telegram.me/aedahamlibrary

வந்தது.

“ஆம்! ஏதோ தருகிறேன் என்றாய்!” சமுத்ரகுப்தன் கூற, வீணா தனது மடியில் வைத்திருந்த மகத வீணையை இறக்கி வைத்தாள்.

சமுத்ரகுப்தனின் கண்கள் மகத வீணையை வியப்புடன் நோக்கின. சுத்த அபரஞ்சிப் பொன்னால் புடம் போடப்பட்ட பலா மரத்தினால் அமைக்கப்பட்ட குடம், தந்தத்தினால் அமைக்கப்பட்ட மேளத்தினில் பதிக்கப்பட்ட வெள்ளி விளிம்புகளுடன், நவரத்ன கற்கள் பதிக்கப்பட்ட ஸ்வரஸ்தானங்கள் மற்றும் அழகிய மான் கொம்பும், பலச மரத்தாலும் இழைத்து செதுக்கப்பட்ட கம்பீர யாளியின் உருவம் என்று வீணை தெய்வீகமாக காட்சி தந்தது.

வீணாதரா யாளி உருவத்தின் பிடரியில் அமைக்கப்பட்டிருந்த தந்தக் குமிழை திருக அதன் பிடரிப்பகுதி உயர்ந்தது. உள்ளே மேள பகுதியில் இரண்டு வழிகள் புலப்பட்டன. ஒன்று மேலே உள்ள ஸ்வரஸ்தானங்கள் உள்ள பகுதி. கீழ்பகுதியுள் இரகசிய அறை ஒன்று இருக்க அதனைத் திறந்தாள், வீணாதரா. உள்ளே தனது விரல்களைவிட்டு, உள்ளே இருந்து ஒரு சுவடியை எடுத்தாள்.

“சமுத்ரகுப்தா! நீ குருகுலத்தில் இருந்த போது, நினைவு தினத்திற்காக வீணையை சுத்தப்படுத்திய போது, தற்செயலாக இந்தச் சுவடியைக் கண்டெடுத்தேன். ஏதோ முக்கிய தகவல் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை அறிந்தேன். ஓலையை அனுப்பியது அசோகனின் மகன் மகிந்தாவும், மகள் சங்கமித்தாவும்.”

வீணா அந்தச் சுவடியை சமுத்ரகுப்தனுக்கு படித்துக் காட்டினாள்.

“தட்சிணத்தில் சாணக்கியன் பிறந்த ஊரான அத்தியூர் என்கிற காஞ்சிவனத்தில்தான் தேவ உடும்பரம் உள்ளது. அதனை மிகவும் ரகசியமாக வைத்திருக்கிறார்கள், வைதீகர்கள். அந்த மரம் இருக்கும் இடம் தெரிந்தவுடன் தகவல் அனுப்புகிறோம். படையுடன் வந்து கைப்பற்றவும்..."

ஓலையை வீணா படிக்க, திகைத்தான், சமுத்ரகுப்தன்.

"இந்த வீணைக்குள் எப்படி அந்த ஓலை வந்தது? அந்த ஓலையை யார் வைத்தார்கள்? எதற்காக ரகசியமாக வைக்கப்பட்டது?” அடுக்கடுக்காக சமுத்ரகுப்தன் கேள்விகளை எழுப்ப, வீணா சுற்றிலும் பார்த்துவிட்டு அவனை எச்சரித்தாள்.

https://telegram.me/aedahamlibrary

"விவரம் எதுவும் தெரியவில்லை, சமுத்ரகுப்தா! ஆனால் ஒன்று மட்டும் தெரிகிறது. தேவ உடும்பரம் என்பது மிகவும் அரிதான ஒரு விருட்சம். சாணக்கியர் தேவ உடும்பரத்தின் ஆற்றலைக் கொண்டுதான் மவுரிய சாம்ராஜ்யத்தையே அமைத்தார் என்று அறிந்திருக்கிறேன். சாணக்கியரைப் பற்றி தெரிந்து கொண்டால், பல மர்மங்கள் புலப்படும். இந்தச் சுவடியைப் பற்றி யாரிடமும் கூறாதே. ஆனால் சரித்திரத்தைப் பற்றி விவரங்களைச் சேகரித்து வைத்துக்கொள். உனக்கு பயன்படும். தேவ உடும்பரம் காஞ்சியில் உள்ளது என்கிற தகவல் மட்டுமே இந்தச் சுவடியில் உள்ளது. அது உனக்கு நிச்சயம் பிரயோஜனப்படும். இந்தச் சுவடியை மீண்டும் மகத வீணையிலே பத்திரப்படுத்தி விட்டு, தேவ உடும்பரத்தைப் பற்றிய விவரங்களை தெரிந்து கொள்!" வீணாதரா கூற, யோசனையுடன் தலையசைத்தான், சமுத்ரகுப்தன்.

அன்று இரவு –

பாடலிபுத்ரத்தில் பேய் மழை பெய்து கொண்டிருந்ததால், ஊரே அடங்கிவிட்டது. அரண்மனையிலும் ஆங்காங்கே ஒளிர்ந்த தீபங்கள், காற்றின் வேகம் தாங்காமல் அணைந்து போயின. அனைவரும் உறங்கச் சென்றுவிட, சமுத்ரகுப்தன் மட்டும் யோசனையுடன் தனது அறையில் உலவிக் கொண்டிருந்தான். அவன் எண்ணம் முழுவதும், அன்று காலையில் வீணாதரா காட்டிய சுவடியின் மீதுதான் இருந்தது. தேவ உடும்பரம் என்றால் என்ன? அது எதற்கு தேவை? சாணக்கியன் பிறந்த அத்தியூர் எங்கே உள்ளது? அந்த ரகசியத்தை மகத வீணையில் வைத்தவர் யார்? யாருக்காக அந்த ரகசியம் வீணையில் பதுக்கப்பட்டது?

வீணாதரா கூறியது போன்று அந்தச் சுவடியை அவன் மீண்டும் மகத வீணையினுள் வைக்கவில்லை. அதனை தனது அறைக்கு எடுத்து வந்து தனது திவ்ய சூக்தங்களின் சுவடிகளிடையே அதனை மறைத்து வைத்திருந்தான். மீண்டும் தனது போஷண பெட்டகத்தைத் திறந்து, சுவடிகளை எடுத்து, வீணையில் கண்டெடுத்த அந்த சுவடியைப் படித்தான். அதன் முழு விவரங்களையும் தெரிந்து கொள்ளாவிட்டால், கபாலம் வெடித்துப் போகும் என்பது போன்று பரபரத்தவன், மீண்டும் சுவடியைப் பெட்டகத்தில் பத்திரப்படுத்திவிட்டு, அதனை மூடினான். யோசித்தபடி நின்றவன், மெதுவாக தனது சயன அறையைவிட்டு வெளியேறினான்.

இதெற்கெல்லாம் விளக்கம் கூறிட அவனது தாய் குமாரதேவியால்தான் முடியும். இவனது பிறப்பிலும் ஏதோ ரகசியம் உள்ளது. மூன்று மகன்களில் சமுத்ரகுப்தன் எவன் என்பதை அறிய அவனது பெற்றோர்

https://telegram.me/aedahamlibrary

துடித்த துடிப்பு இருக்கிறதே? எதற்காக மற்ற இருவரையும் விட்டுவிட்டு, இவனிடம் அரியாசனத்தைக் கொடுக்க நினைத்தார்கள்?

ஏற்கனவே இந்தக் கேள்வியை பெற்றோரிடம் கேட்டிருந்தான். அண்ணன் விவேகன் இருக்கிறான். முதலில் ஜனித்தவன் என்று கருதப்படும் சுவேதன் இருக்கிறான். அவர்களைவிட்டு, நடுவில் பிறந்த எனக்கு எதற்கு மகுடம்? என்று கேட்ட போது அவர்கள் கூறிய பதில் இவனுக்கு விசித்திரமாகப் பட்டது.

மகுடம் சமுத்ரகுப்தனுக்கு என்று சாணக்கியர் கூறியுள்ளார். முதலில் பிறந்த விவேகனுக்கோ, முதலில் ஜனித்த சுவேதனுக்கோ அல்லது இடையில் வந்த ஆர்யனுக்கோ இல்லை. சாணக்கியர் கட்டளைப்படி சமுத்ரகுப்தன் எவனோ அவனுக்கே மகுடம் சென்றிருக்கிறது... என்றார்களே.

'சாணக்கியர் அவ்வளவு சக்தி வாய்ந்தவரா? இறந்த பின்னும் ஒரு நாட்டின் மன்னனை நிர்ணயிக்கக் கூடிய ஆற்றல் படைத்தவரா?' - யோசித்தபடி நடந்த சமுத்ரகுப்தன், தனது தாயின் அந்தப்புரத்தினுள் நுழைந்து அவளது சயன அறையின் வாயிலில் நின்றான்.

வருங்கால மன்னன் சமுத்ரகுப்தன் தனது தாயைச் சந்திக்க வந்திருப்பதை அறிந்த காவலர்கள் விலகி நிற்க, பணிப்பெண் ஒருத்தி உள்ளே சென்று மகன் வந்திருப்பதை குமாரதேவியிடம் அறிவிக்க, திகைப்புடன் மஞ்சத்தில் இருந்து இறங்கி நின்றாள், குமாரதேவி. அருகில் உறங்கிக்கொண்டிருந்த கணவனைப் பார்த்தாள். சந்திரகுப்தன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான். இருக்கட்டும். அழைப்பு தனக்கு மட்டும் என்பதை உணர்ந்து கணவனை எழுப்பாமல், சயன அறையை விட்டு வெளியே வந்தாள்.

“அம்மா! நான் உங்களோடு சற்று தனியாகப் பேச வேண்டும்!” சயன அறையிலிருந்து வெளிவந்த குமார தேவியைப் பார்த்து சமுத்ரகுப்தன் கூறினான். அவனது முகபாவங்களைக் கொண்டே, தனது மகன் தீவிர யோசனையில் இருப்பதைப் புரிந்து கொண்டாள், குமாரதேவி. இருவரும் அருகில் இருந்த அறையினுள் நுழைய, மறக்காமல், அறையின் கதவுகளை மூடினான்... சமுத்ரகுப்தன்.

குமாரதேவி ஒரு தீபத்தின் அருகே சென்று அமர்ந்து கொண்டாள். வெளியே பெய்த மழையின் ஒலி பலமாகக் கேட்க, இரவு வேளையில் அந்த அறைக்கு யார் வரப்போகிறார்கள் என்று அதிக தீபங்களை ஏற்றாமல், ஒன்றிரண்டு தீபங்களை மட்டுமே ஏற்றியிருந்தனர். ஒன்றின்

https://telegram.me/aedahamlibrary

அருகே குமாரதேவி அமர, மற்றொன்றின் அருகே சமுத்ரகுப்தன் அமர்ந்தான்.

“அம்மா! எனக்கு எதற்கு சமுத்ரகுப்தன் என்று பெயர் வைத்தீர்கள். சாணக்கியர் அந்த பெயரில் அப்படி என்ன விசேஷத்தைக் கண்டார். சாணக்கியர் எங்கிருந்து வந்தார்? தட்சிணத்தில் இருந்து வந்த ஒருவர் எப்படி நமது மன்னர்களை நிர்ணயிக்கும் அளவுக்கு உயர்ந்தார்?” - சமுத்ரகுப்தன் கேட்க, அவனை வியப்புடன் நோக்கினாள், குமாரதேவி.

"சரித்திரத்தை கேட்க புயல் வீசும் இந்த நடுநிசியை தேர்ந்தெடுத்தாயே! அதுவும் ஒரு விதத்தில் நன்மையே. மழை பெய்யும் நேரத்தில்தான் மீண்டும் நிகழ்வதற்காக இறந்த சரித்திரங்கள் உயிர்பெறும் என்பார்கள். நாளைக் காலை உனக்கு சாணக்கியர் எழுதிய அர்த்தசாஸ்திர சுவடிகளைத் தருகிறேன்... படி. மிகவும் உன்னதமான மனிதர். அவர் கபாலம் முழுவதும் அறிவு நிரம்பியிருந்தது. ராஜதந்திரி. சதிகளை முறியடிப்பதில் வல்லவர். அவரால்தான் மவுரிய சாம்ராஜ்யம் பிறந்தது. அவரது கதையைக் கேட்டாலே ஆற்றல் பிறக்கும். நீ மன்னராவதற்குள் அவரது சரித்திரத்தைக் கூறி, உன்னை அர்த்தசாஸ்திரத்தை படிக்கச் செய்ய நினைத்தேன். நீயாகவே வாய்ப்பை நல்கிவிட்டாய். கேள்! நமது மூதாதையர்களின் கதையை!

மிகவும் பலம் பொருந்திய சாம்ராஜ்யம் நந்த சாம்ராஜ்யம். உலகெங்கும் திக்விஜயம் செய்த அலெக்சாண்டர், நந்த சாம்ராஜ்யத்தினுள் கால் பதிக்க பயந்தான். காரணம் நந்த சாம்ராஜ்யத்தின் படை பலம். கலைமகள், திருமகள் மற்றும் வீரமகள் மூன்று பேருமே தானநந்தாவுக்குப் பக்க பலமாக இருந்தனர்.

தானநந்தா அஸ்வமேத யாகம் செய்வதற்காக தேவ உடும்பரம் என்கிற அறிய மரத்தைத் தேடிக் கொண்டிருந்தார். அந்த மரம் புத்த கயையில் இருப்பதை அறிந்து அதைக் கைப்பற்றச் செல்ல, பௌத்தர்களின் போராட்டத்தால் அவர் அதனை கைவிட நேர்ந்தது. காரணம், புத்தர்களின் போதி மரமாகத் திகழ்ந்தது அந்த தேவ உடும்பர மரம். தேவ உடும்பரம் இல்லாமல் யாகத்தை செய்ய முடியாது என்கிற காரணத்தால், தானநந்தா காத்திருந்தான். அப்போதுதான் விஷ்ணுகுப்தன் என்கிற அந்தண குமாரன் தன்னிடம் தேவ உடும்பரம் இருப்பதாகக் கூறி அரண்மனைக்கு வந்தான். தானநந்தாவின் மகள் துர்தரா, மகன் மற்றும் தானநந்தா மூவருமே விஷ்ணுகுப்தனை அவமதிக்க, அவன் அவர்களை பதவியை விட்டு விரட்டுகிறேன் என்று சபதம் செய்து, தேவ உடும்பரத்தின் உதவியோடு, தானநந்தாவை பதவி

https://telegram.me/aedahamlibrary

இறக்கி, ஒரு காட்டுவாசி சந்தா என்பவனை மன்னனாக அமர்த்தி தனது பெயரையும் இணைத்து அவனை சந்திரகுப்தன் என்று அழைத்தான். தேவ உடும்பரத்தின் ஆற்றலால் மவுரிய சாம்ராஜ்யம் உருவானது.”

சற்றே குமாரதேவி தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ள, சமுத்ரகுப்தன் ஆவலுடன் அவள் முகத்தையே நோக்கிக் கொண்டிருந்தான்.

கதையை தொடர்ந்தாள், குமாரதேவி.

“பிபத்தன் இறந்து போக கர்வம் பிடித்த துர்தராவை பணிப்பெண் ஆக்கினார் சாணக்கியர். ஆனால் சந்திரகுப்தன் அவளை காதலிக்கத் தொடங்க, இது தெரியாமல் அவளை தண்டிக்கும்படி கூறினார், சாணக்கியர். ஆனால் அவர் எதிரே அவளை வெறுப்பவனாகவும், மறைவில் அவளுடன் உறவாடியும் வந்தான் சந்திரகுப்தன். ஒரு சூழ்நிலையில் அவளுடன் வாழ்வதற்காக சாணக்கியனுக்கே விஷம் வைத்தான், சந்திரகுப்தன். ஆனால் அதை துர்தரா தவறுதலாக குடித்துவிட, தனது ஜாதகத்தில் ஒரே குழந்தை மட்டுமே இருக்கும் என்கிற காரணத்தால், துர்தராவைக் கொன்று குழந்தை பிந்துவை காப்பாற்றினான், சந்திரகுப்தன். அவன் மகன் பிந்துசாரன் மற்றவர்கள் பேச்சைக் கேட்டு சாணக்கியனை வெறுத்து நாடு கடத்தினான். சதியாளர்கள் சாணக்கியனை விரட்டிச் சென்று அவரை தீயிட்டுக் கொளுத்தினர். ஆனால் அவர் இறக்கவில்லை. பிந்துசாரனின் மூத்த மகன் சுசிமாவைக் கொன்று ஆட்சிக்கு வந்தான் அசோகன். சுசிமாவின் மனைவி சித்ரசேனா தனது பெண் குழந்தையுடன் காட்டிற்கு தப்பி ஓடினாள். அந்த குழந்தைதான், இன்று காலை ஓவியத்தில் பார்த்தாயே, சவ்ஷீலா என்கிற பாட்டியார்.

இந்நிலையில் அசோகன் திஸ்ஸரக்கா என்ற கலிங்க இளவரசியின் மீது ஆசை வைக்க அவளை கைப்பற்ற வேண்டி ஒன்றரை இலட்ச மக்களை கலிங்கத்தில் போரிட்டுக் கொன்றான். திஸ்ஸரக்காவை பலவந்தமாக கடத்தி வந்து மணந்து கொண்டான். தான் செய்த தவறுக்கு போதியின் அடியில் அமர்ந்து அசோகன் வருந்த, அதனால் வெறுப்பு கொண்ட திஸ்ஸரக்கா தேவ உடும்பர மரமாகிய அந்த போதி மரத்தை சிதைத்து நாசமாக்கினாள். மூவாயிரம் வருடங்களுக்கு ஒருமுறை புத்தர் ஒருவர் தோன்றுவார். அவரது அவதாரத்திற்கு தேவ உடும்பரம் மிகவும் அவசியம். புத்த கயையில் இருந்த தேவ உடும்பரம் அழிக்கப்பட்டதால், தட்சிண பிரதேசத்தில் உள்ள தேவ உடும்பரத்தைத் தேடி வர, அசோகன் தனது குழுவை தெற்கே அனுப்பினான்.

https://telegram.me/aedahamlibrary

அவனது மகன், மகிந்தா, மகள் சங்கமித்தா, போன்றோர் தெற்கே சென்றனர். ஆம்ரபாலி என்கிற நடன மாதும் உடன் சென்றாள், அதன் பிறகு அவர்களிடம் இருந்து வேறு தகவல் எதுவும் கிடைக்கவில்லை. அசோகன் துறவறம் ஏற்றுச் சென்றுவிட, அவன் மகன் தசரதன் ஆட்சிக்கு வந்தான். அவன் தேவ உடும்பரத்தைத் தேடி கைப்பற்றுவதில் ஆர்வம் காட்டவில்லை. காட்டில் குற்றுயிரும் குலையுயிருமாகக் கிடந்த சாணக்கியரை தன்னிடம் இருந்த தேவ உடும்பரத்தால் மீட்டெடுத்தாள் சித்ரசேனா. உனது வம்சத்தில் ஒருவன் சமுத்ரமாகப் பொங்கி எழுந்து சமுத்ரகுப்தனாக பரத கண்டத்தை காப்பாற்றுவான் என்று கூறி மீண்டும் தனது நாட்டுக்குச் சென்றுவிட்டார்.

சவ்ஷீலா அக்னிமித்ராவை மணந்து தானமித்ராவை ஈன்றாள். அசோகனின் அண்ணன் சுசிமாவின் வம்சம் நாட்டை ஆள வேண்டும் என்பதில் மிகவும் முனைப்பு காட்டினாள் சித்ரசேனா. ஆனால் அக்னிமித்ராவுக்கு தானமித்ரா என்ற மகன் பிறந்தான். அவரது மகன்தான் எனது தந்தை புஷ்யமித்ரா. மவுரிய மன்னனை கொன்று முதல் குப்த மன்னனாக பதவியில் அமர்ந்தார். அவர்தான் முழுவதுமாக போதி மரத்தை எரித்துச் சிதைத்தார். அவருக்கு பிறந்த எனக்கு ரத்னஹாரா என்று பெயர் வைத்தார். திருமணத்திற்குப் பிறகு குமார தேவியாக அரியணையில் அரசியாக பதவி ஏற்றேன். என்னை மணந்ததனால் உனது தந்தை மன்னரானார். இருப்பினும், இது எனக்குச் சேர வேண்டியது என்பதால் எனக்கு மகன் பிறந்தவுடன் அரியணையை அவனுக்குத் தந்துவிடுகிறேன் என்றார். எனது மகன்தான் சமுத்ரகுப்தனாக இருக்கப் போகிறான் என்பதை அறிந்தேன். ஆனால் நீங்கள் மூவர் பிறக்க, நானும் உனது தந்தையும் குழம்பிப் போனோம். ஜகன்னாத பிருகதான்யரின் தயவால், உன்னை இனம் கண்டு கொண்டோம்! இதுதான் நமது சரித்திரம்!”

குமாரதேவி கூற, மலைப்பின் உச்சத்தில் இருந்தான், சமுத்ரகுப்தன்.

தேவ உடும்பரத்தைத் தேடிச் சென்ற அசோகனின் மக்கள் சங்கமித்தாவும், மகிந்தாவும் சுவடியில் தகவலை அனுப்பியுள்ளனர். ஆனால் யாரோ அதனை ரகசியமாக மகத வீணையில் பதுக்கியிருக்கிறார்கள். யார் அப்படிச் செய்திருக்கக்கூடும்?

"நீங்கள் உறங்கச் செல்லுங்கள், தாயே. இன்று இது போதும். எனக்கும் உறக்கம் வருகிறது!” என்று கூறியபடி சமுத்ரகுப்தன் எழ, குமாரதேவியும், அவனை அணைத்து உச்சிமுகர்ந்துவிட்டு, தனது சயன அறையினுள் நுழைந்து கொண்டாள்.

https://telegram.me/aedahamlibrary

தான் பதுக்கிய சுவடி மகத வீணையிலிருந்து கண்டெடுக்கப்பட்டு சேர வேண்டியவனைச் சேர்ந்து விட்ட நிம்மதி முகத்தில் பரவியிருக்க, பிரார்த்தனை மண்டபத்தில் தொங்கிக்கொண்டிருந்த சவ்ஷீலா ஓவியம் காற்றில் ஊசலாடிக்கொண்டிருந்தது.

தனது சயன அறையை நோக்கிச் சென்று கொண்டிருந்த சமுத்ரகுப்தனின் உள்ளத்தில் அந்த உத்வேகம் சுடர்விடத் தொடங்கியது.

'குப்த மன்னனாகப் பதவியேற்றதும், தட்சிணம் சென்று, சாணக்கியன் பிறந்த அத்தியூரின் மீது படையெடுத்துச் சென்று தேவ உடும்பரத்தைக் கைப்பற்றி வந்து எனது அரண்மனையில் நடுவேன். இது உறுதி!

மனதினுள் நினைத்தபடி அவன் நடக்க, சரியாக அதே நடுநிசியில் காஞ்சி அத்திமலையான் சந்நிதியில் புறப்பட்ட அந்த ஒளிவட்டத்தை முக்கூடல் சங்கமத்தில் நின்றிருந்த சிலர் பார்த்தார்கள். அன்று அஸ்த நட்சத்திரம் என்பது பலருக்குத் தெரியாத விஷயம்.

மறுநாள் இரவு –

தக்ஷஷீலத்தில் இருந்து வந்து சேர்ந்தான், வீணாதராவின் கணவன் ஸ்மிதமுகன். அவனையும், வீணா தராவையும் கஜானா அறைக்கே அழைத்துச் சென்று அரண்மனை அதிகாரி பீயுஷரிடம் இருந்து கஜானாவின் திறவுகோல்களைப் பெற்று, ஸ்மித்தனிடம் அளித்தான். எங்கோ தக்ஷஷீலத்தில் ஊர் கணக்கை சரிபார்த்தபடி திண்ணையில் அமர்ந்து கொண்டிருந்தவனை, காவலர்கள் வந்து அழைக்க, வீணா தராதான் ஏதோ பிரச்சனையில் சிக்கிக்கொண்டாள் போலும் என்று பதறியபடி அவன் பாடலிபுத்ரம் ஓடிவர, வருங்கால மன்னன் சமுத்ரகுப்தன் தன்னை கஜானா அதிகாரியாக நியமித்துள்ளதை வீணாவின் மூலம் அறிந்து அயர்ந்து போய் நின்றான்.

வருங்கால மன்னன் சமுத்ரகுப்தனே தனது கைகளால் அவன் வசம் கஜானாவின் திறவுகோல்களை ஒப்படைத்த போது மலைப்பினால் வாய்பிளந்து நின்றான், ஸ்மிதமுகன்.

"என்னைக் காக்கும் தாயான வீணாதராவுக்கு நான் செய்யும் சிறு நன்றிக்கடன்!" என்று சமுத்ரகுப்தன் அவளைப் பணிய, தனது மனைவி இவ்வளவு செல்வாக்கு படைத்தவளா என்பது போன்று அதிர்ந்து போய் நின்றான்.

https://telegram.me/aedahamlibrary

“இதற்கு பிரதியுபகாரமாக, நீங்களும், உங்கள் மனைவியும் அரண்மனையிலேயே தங்க வேண்டும்!” என்று ஆர்யன் கோரிக்கைவிட, கரும்பு தின்னுவதற்கு கூலியா? என்று எண்ணியபடி தலையசைத்தான் ஸ்மிதமுகன்.

வீணாதராவின் கணவன் ஸ்மிதமுகன் வசம் கஜானாவின் திறவுகோல்களை ஒப்படைத்துவிட்டு, தனது சயன அறையை நோக்கி நடந்தான், சமுத்ரகுப்தன். மவுரியர்கள் வசம் புஷ்பபுர அரண்மனையாகத் திகழ்ந்த அந்த அரண்மனை பாடலிபுத்ர அரண்மனையாக குப்தர்களின் வசம் வந்ததும் நிறைய மாற்றங்களைச் சந்தித்திருந்தது. அரண்மனைக் கட்டிடமே மூன்று பகுதிகளாக நின்றன. சந்திரகுப்தன், சாணக்கியன், துர்தரா, பிபத்தன் ஆகியோர் நடமாடிய பழைய அரண்மனை புதுப்பிக்கப்பட்டு மூல அரண்மனையுடன் இணைக்கப்பட்டது. மேற்கு நோக்கி நின்றது இந்தப் பகுதி. இதன் பெயர் வருணம்.

அசோகன் மற்றும் அவனது அந்தப்புரங்கள் இருந்த அரண்மனைகள் இடிக்கப்பட்டு புதிய அரண்மனை கட்டப்பட்டது. வடக்கு நோக்கி நின்ற இந்தப் பகுதிக்கு குபேரம் என்று பெயரிடப்பட்டது.

குப்தர்களின் ஆட்சியை அமைத்த புஷ்யமித்ரா, தனக்கு புதிதாக ஒரு வசதிமிக்க அரண்மனையைக் கட்டிக் கொண்டான். கிழக்கு நோக்கி நின்ற இந்தப் பகுதிக்கு இந்திரம் என்று பெயரிடப்பட்டது.

அரண்மனையின் கொலுமண்டபம், கஜானா அறைகள், சுவடி அறைகள், ராஜாங்க உத்தரவுகளை பதிவு செய்யும் அறைகள், அலுவலகங்கள், ராஜகுருவின் அறை, ஆலோசனை மண்டபங்கள், அரசு விருந்தாளிகள் தங்கும் ஜாகைகள், மன்னர்கள், இளவரசர்கள் மற்றும் அதிகாரிகள் தங்கும் விடுதிகள் ஆகியவை இந்திரம் பகுதி அரண்மனையில் இருந்தன.

மன்னரின் ஜாகை, அந்தப்புரங்கள், பிரார்த்தனை மண்டபங்கள், இளவரச, இளவரசிகளின் ஜாகைகள், நந்தவனம், உப்பரிகை உச்சி மண்டபம், நிலா மண்டபம், ஆடை அலங்கார அறைகள், வஸ்திரக் கொட்டடிகள், அந்தரங்க கஜானா அறைகள், வைத்தியசாலைகள் ஆகியவை குபேரம் கட்டடத்தில் இருந்தன.

தளவாட அறைகள், அரண்மனை அலுவலகங்கள், காவலர்கள் ஜாகை, பணிப்பெண்களின் ஜாகை, போஷண அறைகள், உணவுப் பண்டகசாலை, நூலகப் பண்டார சாலை என்று இதர பகுதிகள் மேற்கு

https://telegram.me/aedahamlibrary

நோக்கி நின்ற வருணம் அரண்மனை பகுதியில் இருந்தன.

தெற்கு நோக்கி நின்ற, காலதேவம் என்கிற பகுதியில், சிறைச்சாலைகள், பாதாள சிறை, தண்டனை நிறைவேற்றும் இடங்கள், நீதிமன்றங்கள், யானை குதிரை பராமாரிப்புக் கொட்டகைகள், மிருக வைத்தியசாலை, அன்னதானக் கூடங்கள் போன்றவை இருந்தன...

யந்திரம், குபேரம், வருணம் மற்றும் காலதேவம் ஆகிய நான்கு கட்டடங்களையும் இணைத்தபடி ஒரு விஸ்தாரமான மைதானம் இருந்தது. சந்திரகுப்தன் பதவி ஏற்றதும், தனது மாமன் புஷ்யமித்ராவின் நினைவாக அந்த மைதானத்தில் ஆயிரங்கால் மண்டபம் ஒன்றை எழுப்பி, மண்டபத்தின் மையத்தில் அவருக்கு ஒரு சிலையை வைத்தான். இந்திரம், குபேரம், வருணம் மற்றும் காலதேவம் ஆகிய நான்கு கட்டடங்களையும் அந்த மண்டபத்தைக் கொண்டு இணைத்தான்... இந்த நான்கு கட்டடங்களையும் சுற்றி பெரிய மதில் சுவர் ஒன்றை எழுப்பி பாடலிபுத்திர அரண்மனையைக் கோட்டையைப் போன்று அமைத்து, அதைச் சுற்றி அகழி ஒன்றையும் வெட்டினான். பலமான இரும்புக் கோட்டையாகத் திகழ்ந்தது அரண்மனை.

பலமான கோட்டை, பலம் வாய்ந்த வீரர்களைக் கொண்ட இந்த நாட்டின் பலத்தைக் கொண்டு, உலக நாடுகளை அடிபணிய வைப்பேன். தெற்கே சென்று தேவ உடும்பரத்தைக் கைப்பற்றி அஸ்வமேத யாகத்தை புரிந்து எதிரிகளே இல்லாத ஒரு மன்னனாகத் திகழ்வேன் என்று மனதினுள் சூளுரைத்தபடி, இந்திரம் பகுதி அரண்மனையைவிட்டு வெளிவந்து ஆயிரங்கால் மண்டபத்தினுள் நுழைந்தான் ஆர்யன்... தனது சயன அறை இருந்த குபேரம் பகுதியை நோக்கி நடந்தான்.

ஆயிரங்கால் மண்டபத்தில் ஆயிரம் தீபங்களை ஏற்றினால்தான் மண்டபம் முழுவதும் பிரகாசமாக இருக்கும். ஆனால் அந்த மண்டபத்தில் வரிசைக்கு ஒரு தீபம் மட்டுமே ஏற்றியிருந்தனர் போலும். ஆயிரங்கால் மண்டபமே இருளில் மூழ்கியிருக்க, குபேரம் பகுதியை நோக்கி நடந்தான்.

ஆயிரங்கால் மண்டபத்தின் மையத்தில், குபேரம், இந்திரம், வருணம் மற்றும் காலதேவம் ஆகிய பகுதிகளுக்குச் செல்லும் பாதைகள் சந்திக்கும் இடத்தில் புஷ்யமித்ராவின் சிலை இருக்கும். அந்த சிலையருகே நின்றால், நான்கு பாதைகளையும் மறுகோடி வரை காணலாம்.

ஆர்யன் புஷ்யமித்ராவின் சிலையருகே சற்று நின்றான். தற்செயலாக தான் தொடர்ந்து நடக்கவிருந்த குபேர பகுதிக்குச் செல்லும் பாதையைக்

https://telegram.me/aedahamlibrary

கவனித்தான்.

தொலைவில் சிறு புள்ளியாக ஒரு தீப ஒளி இவனை நோக்கி வந்து கொண்டிருந்தது. யாரோ தீப்பந்தம் ஏந்தி வருகிறார்கள் என்கிற உள்ளுணர்வு எச்சரிக்க, தான் இந்திரம் பகுதியில் இருந்து நடந்து வந்த பாதையைக் கவனித்தான். அந்தப் பகுதியிலும் சிறு புள்ளியாக ஒரு விளக்கின் ஒளி இவன் இருந்த மண்டபத்தின் மையப் பகுதியை நோக்கி வந்து கொண்டிருந்தது. உடனே தன்னிச்சையாக மிகுதி இரண்டு பாதைகளையும் நோக்க அந்தப் பாதைகளிலும் இரு ஒளிவட்டங்கள் அவனை நோக்கி ஊர்ந்து வந்து கொண்டிருந்தன. நாலு பாதைகளிலும் ஒரே சீராக ஒளி வட்டங்கள் இவனை நோக்கி வந்து கொண்டிருக்கின்றன. சதி வலை ஒன்று இவனுக்கு எதிராக பின்னப்பட்டு வருவதாக உள்மனது எச்சரிக்க, என்ன செய்வது என்று யோசித்து நின்றான். ஸ்மிதமுகனுக்கு திறவுகோல்களை அளிப்பதற்குத்தானே செல்கிறோம் என்கிற அலட்சியத்தில் தனது உடைவாளை எடுத்துக் கொள்ளாமல் சயன அறையிலிருந்து வந்திருந்தான். இவன் அரியணை ஏறுவதை விரும்பாத சிலர் மைய மண்டபத்திலேயே அவனது கதையை முடிக்க எண்ணுகின்றனர் போலும்.

'சாணக்கியரே! சமுத்ரகுப்தன் வருவான் என்று ஆருடம் கூறினீர்கள். ஆனால் நான் வரும் வேளையில் என்னை ஒழிக்க சதிவலை பின்னப்படுகிறது. உண்மையான சமுத்ரகுப்தன் நான்தான் என்றால், என்னை இந்த இக்கட்டான சூழ்நிலையிலிருந்து காப்பாற்றுங்கள்!' - மனதிற்குள் வேண்டினான். தன்னைச் சுற்றிலும் பார்க்க, நான்கு பாதைகளிலும் தீப்பந்தங்களின் ஒளி பெரிதாக வளர்ந்து கொண்டே இருந்தது. சதியாளர்கள் வேகமாக முன்னேறி வருகிறார்கள்.

விரைவில் தான் இங்கு நிற்பது அவர்களது கண்களில் புலப்பட்டுவிடும் என்பதை புரிந்து கொண்ட ஆர்யன், சற்றும் தாமதிக்காமல் புஷ்யமித்ராவின் சிலையின் மீது ஏறத்துவங்கினான். உயரமான அந்த சிலையின் மீது கீழே சுமப்பவர்களின் தீப்பந்தங்களின் ஒளி பாயாது என்பதை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டு புஷ்யமித்ரா சிலையில் வைக்கப்பட்டிருந்த வாளை உருவினான்.

அந்த வாளினால்தான் புஷ்யமித்ரா போதிமரத்தை முதலில் வெட்டியிருந்தான். அதன் பிறகே அவனது வீரர்கள் போதி மரத்தை வெட்டி சிதைத்திருந்தனர். ஐந்து தலைமுறைக்கு முன்பாக தனது கைவிரல்களால் புஷ்யமித்ரா பற்றியிருந்த வாளினை தான்

https://telegram.me/aedahamlibrary

பற்றியுள்ளோம் என்கிற உணர்வு அவனுள் புதிய உத்வேகத்தினைக் கொடுக்க, மையப்பகுதிக்கு வரும் எதிரிகளுக்காக ஆர்வத்துடன் காத்திருந்தான் ஆர்யன். நான்கு பாதைகளிலும் சுளுந்துகளை சுமந்தபடி வந்த அந்த நால்வரும் முகமூடிகளை அணிந்து, கரிய நிற ஆடையில் நின்றனர். இருளில் கரிய நிற ஆடைகளை அணிந்தால்தானே யார் கண்களிலும் சிக்காமல் செயலாற்ற முடியும்.

நால்வரும் திகைப்புடன் சுற்றும்முற்றும் பார்க்க, தனது வாளைச் சுழற்றியபடி அவர்களின் மீது பாய்ந்தான் ஆர்யன். மேலிருந்து குதிக்கும் போதே, காலதேவம் பகுதியில் இருந்து வந்தவனின் தலையைச் சீவி காலதேவனுக்கு அர்ப்பணித்தான். தொடர்ந்து இந்திரலோகத்திற்கு அந்தப் பகுதியிலிருந்து தன்னைத் பின் தொடர்ந்து வந்தவனை அனுப்பினான். விரைவிலேயே மற்ற இருவரையும் எளிதாக வெட்டி வீழ்த்திவிட நாலுபேரின் சடலங்களும் மைய மண்டபத்தில் கிடக்க, ஒன்றுமே நிகழாதது போன்று தனது சயன அறையை நோக்கி நடந்தான், ஆர்யன்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 27. மாயமான மகுடம்

“எங்களது இரண்டாவது மகன் ஆர்யன், சமுத்ரகுப்தனாக குப்த சாம்ராஜ்யத்தை ஆள்வான்!”

சந்திரகுப்தனும், குமாரதேவியும் கூட்டாக பிரகடன அறிக்கை ஒன்றை வெளியிட்டனர். பிரகடனம் வெளியிடப்பட்ட பொழுதினில் ஜகன்னாதத்திற்கு யாத்திரையினை மேற்கொண்டிருந்த சமுத்ரகுப்தன் ஜகன்னாதரை தரிசித்துவிட்டு தனது குரு பிருகதான்யரையும் குருமாதா மேதாவையும் வணங்கி அவர்களது ஆசியைப் பெற்றுக் கொண்டு மீண்டும் பாடலிபுத்திரம் திரும்பியிருந்தான்.

மகுடாபிஷேகம் அன்று விடியலில் ஆலயத்திலிருந்து ஊர்வலமாக வந்த சமுத்ரகுப்தனை எதிர் கொண்டனர், குமாரதேவியும், சந்திரகுப்தனும்.

அரண்மனை வாயிலில் மாபெரும் கூட்டம். வருங்கால சக்கரவர்த்தி சமுத்ரகுப்தன் பதவி ஏற்பு வைபவத்தைக் காண மக்களுக்கு ஆர்வம் மிகுதியாகத் தோன்ற, தங்களது ஆர்யன் சமுத்திர மன்னனாகப் பொங்குவதைக் காண ஆர்ப்பரிப்புடன் நின்றனர்.

குமாரதேவி தனது மகனை நோக்கினாள். “நந்த ராஜ்யமாக நிலவி, மவுரியமாக பரவி, குப்த ராஜ்யமாக வடிவெடுத்திருக்கும் இந்த நாட்டை உன்வசம் ஒப்படைக்கிறோம். நமது இந்த நாட்டை மட்டும் நீ காப்பாற்றப் போவதில்லை, சமுத்ரகுப்தா! இந்த உலகத்தையே நீ காப்பாற்ற வேண்டும்… சித்ரசேனா - சுசிமா, சவ்ஷீலா - அக்னிமித்ரா - விதபாலா - தானமித்ரா, தாராதேவி - புஷ்யமித்ரா, நான் மற்றும் உனது தந்தை என்று ஐந்து தலைமுறைகளின் ஆசியை உனக்கு அளிக்கிறோம். உலகத்தையே உனது குடையின் கீழ் கொண்டு வந்து, சமுத்ரம், நிலப்பகுதியை விழுங்காமல் ரட்சிப்பது போன்று, நீயும் மக்களை காக்க வேண்டும். கடலைப் போலவே வள்ளல் தன்மையும் கொண்டிருக்க வேண்டும். கடலைப் போன்று ஒரு மகன் பொங்கி உலகத்தை ரட்சிப்பான் என்று சாணக்கியர் கூறிய வாக்கினை உனக்கு நினைவுபடுத்துகிறேன்!” என்று கூறியபடி அவனை அணைத்து உச்சி முகர்ந்து கொலு மண்டபத்திற்கு அழைத்துச் சென்றாள், குமாரதேவி.

மந்திரி பிரதானிகள் அரச தம்பதிகளைப் பின் தொடர்ந்து செல்ல, அனைவரும் கொலு மண்டபத்தில் குழுமினர். அரண்மனை தலைமை அதிகாரி, பீயுஷவர்ஷர் மகுடாபிஷேகப் பணிகளை மேற்பார்வையிடும் அரண்மனை காரியவாகர் அனன்யாசாரியாரை எதிர்பார்த்து

https://telegram.me/aedahamlibrary

காத்திருக்க, அவரும் வந்தார். அவர் முகம் பதற்றத்தில் சிவந்திருக்க, அவரது கண்கள் இப்படியும் அப்படியும் பம்பரமாகச் சுழல்வதை பார்த்தார், பீயுஷர். அனன்யரின் கண்கள் தன்னைத்தான் தேடுகின்றன என்பதை யூகித்து, தனது இருக்கையிலிருந்து எழுந்து சென்று அவரை எதிர் கொண்டார்.

“ஏன் இந்த பதற்றம், அனன்யரே?” பீயுஷர் கேட்டார்.

“என்னவென்று சொல்வேன்? மகுடாபிஷேகத்திற்கு தயாராக வைத்திருந்த மகுடத்தைக் காணவில்லை. நேற்று பொற்கொல்லர் வியாமர் மகுடத்திற்கு மெருகேற்றினார். பணி முடிந்ததும், கஜானா அறையில் பத்திரப்படுத்தினோம். இன்று காலை அதனை கொலு மண்டபத்திற்கு எடுத்துவருவதற்காக கஜானா அறைக்குச் சென்றால், மகுடம் அங்கே இல்லை. நான் என்ன செய்வது...? இன்னும் சற்று நேரத்தில் மகுடாபிஷேகம் நடைபெற வேண்டுமே!"

திடுக்கிட்டுப் போனார், பீயுஷர். சமுத்ரகுப்தன் அரியணையில் அமருவதற்கு தயாராகிவிட்டானே. இப்போது போய் மகுடம் காணவில்லை என்று எப்படிச் சொல்வது?

அரசவையில் அமர்ந்திருந்த விவேகனும், சுவேதனும், ஒருவரையொருவர் அர்த்தத்துடன் பார்த்துக் கொண்டனர். மூத்தவனை அரியணையில் அமர்த்தியிருக்க வேண்டும் அல்லது கர்ப்பத்தில் முதலில் ஜனித்தவனை அரியணையில் அமர்த்தியிருக்க வேண்டும். நடுவில் வந்தவனுக்கு நாடு உரித்தாகும் என்று எந்த அரச நீதியில் சொல்லப்பட்டிருக்கிறது, என்று சமுத்ரகுப்தன் மன்னனாக பிரகடனப்படுத்தப்பட்ட தினத்தில் இருந்து மனம் வெதும்பிய இருவரும், தங்களது ஆதரவாளர்களோடு செய்த சதித் திட்டத்தின் அங்கமாகத்தான் கஜானாவில் வைக்கப்பட்ட மகுடத்தை இரவோடு இரவாக களவாடி அப்புறப்படுத்தி இருந்தனர், சகோதரர்கள்.[1]

பீயுஷர் சந்திரகுப்தனின் செவியில் குனிந்து “மகுடம் காணவில்லை” என்று கூற, சரியாக விவேகனும், சுவேதனும், அரண்மனை புரோஹிதர் நிஷ்கல அக்னிஹோத்ரியை நோக்கி தலையசைக்க அவர் தனது நாவால் உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டார்.

"என்ன... அதிர்ச்சியை தருகிறீர்கள். மகுடத்தை காணவில்லையா?” சந்திரகுப்தன் அலற, அதனை செவியுற்ற குமாரதேவி வெலவெலத்துப் போனாள்.

https://telegram.me/aedahamlibrary

“என்ன இது அபசகுனம்? மகுடத்தை காணவில்லையா?” என்கிற குரல் ஒன்று தனித்து ஒலிக்க, அந்த குரலுக்கு உரியவரான நிஷ்கலரை அனைவரும் கலக்கத்துடன் பார்த்தனர்.

“மூத்தவன் இருக்க இடையவனை மன்னன் ஆக்குவது நமது முன்னோர்களுக்கு விருப்பம் இல்லை போலும். எனவேதான், மகுடம் காணாமல் போய் இருக்கிறது. அதுவும் மகுடாபிஷேகம் துவங்குவதற்கு முன்பாக இப்படி ஒரு சம்பவம் நிகழ்வானேன்... மன்னரே! சமுத்ரகுப்தன் திறமையானவன்தான். இருப்பினும், நியாயம் எதுவோ அதைச் செய்ய வேண்டும் என்று இந்த சம்பவம் உணர்த்துகிறது!” கணீரென்று பேசினார், நிஷ்கல அக்னிஹோத்ரி.

மன்னரும், அரசியும் கலக்கத்துடன் அக்னிஹோத்ரியை நோக்கினார்கள்.

“ஏற்கனவே, ஆயிரங்கால் மண்டபத்தில் புஷ்யமித்திரரின் சிலையருகே நான்கு காவலர்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டது. ஆயிரங்கால் மண்டபத்தில் இரவு வேளைகளில் புஷ்யமித்திரர் கோபத்துடன் நடமாடுகிறார். இளவரசர் ஆர்யருக்கு அரியணை அளிப்பதை புஷ்யமித்திரர் விரும்பவில்லை போலும்!” என்று ஜாடையாக விவேகன் மற்றும் சுவேதனை பார்த்தபடி நிஷ்கல அக்னிஹோத்ரி கூற, அவர்கள் திருப்தியுடன் தலையசைத்தனர். சென்ற முறை ஆர்யனை அழிக்க இவர்கள் அனுப்பிய சதிகாரர்கள் அவனிடம் ஏமாந்துவிட்டனர். இம்முறை மதியூகியான அக்னிஹோத்ரியின் மூலம் இவர்கள் செய்யும் சதி நிச்சயம் பலனளிக்கும் என்கிற நம்பிக்கையோடு மன்னரின் முகத்தை நோக்கினர்.

சந்திரகுப்தனும், குமாரதேவியும் ஒருவரையொருவர் குழப்பத்துடன் வெறிக்க, சபை முழுவதும், முணு முணுப்பு நிலவ, மகுடாபிஷேக வைபவத்தை நிறுத்திவிட வேண்டியதுதான் என்கிற தீர்மானத்துடன் சந்திரகுப்தன் எழுந்தான்.

“சபையோர்களே...” என்று அவன் துவங்கும் போதே, பொற்கொல்லர் வியாமரும் கஜானாவின் புதிய அதிகாரி ஸ்மிதமுகனும் ஸ்வர்ண தாம்பாளம் ஒன்றில் குப்த மகுடத்தை ஏந்தியபடி வந்து கொண்டிருந்தனர்.

"அரசே! இதோ இருக்கிறது குப்த மகுடம். சிலர் மகுடத்தை அபகரிக்க சதி செய்கின்றனர் என்பதை அறிந்த நமது சமுத்ரகுப்தர், பொற்கொல்லரிடம் கூறி ஒரு போலியான மகுடத்தை கஜானாவில்

https://telegram.me/aedahamlibrary

வைக்க ஏற்பாடு செய்தார். போலியான மகுடம்தான் அபகரிக்கப்பட்டது. உண்மையான மகுடம் இதோ!” என்று அரண்மனை அதிகாரி வசம் மகுடத்தை நீட்டினர்.

“முதலில் மகுடாபிஷேகம் நடக்கட்டும். பிறகு விசாரணையை வைத்துக் கொள்வோம்!” சந்திரகுப்தர் கூற, குப்த அரசனாக ஆர்யன் என்கிற சமுத்ரகுப்தனுக்கு மகுடாபிஷேகம் நடைபெற்றது.

மன்னராக பதவியேற்றதும், அவையை நோக்கிப் பேசத் துவங்கினான். பேசுவதற்கு முன்பாக மனதினுள் சாணக்கியரை, குரு பிருகரை, அவர் மனைவி மேதாவை நினைத்தான். பிறகு பரந்து விரிந்த ஜகன்னாத சமுத்திரத்தை மனதினுள் பிரார்த்தித்தான்.

“அவையோரே! மூத்தவன், இளையவன் என்று பாராமல், என்னை மன்னனாகத் தேர்ந்தெடுத்து இருக்கிறீர்கள். இதனால் விவேகனும், சுவேதனும் மனம் வருந்துவது இயற்கையே. எனக்கு மகுடம் கிடைத்து விட்டதே என்கிற கோபம் அவர்களுக்கு இருக்கத்தான் செய்யும். அந்த சினத்தினால் எனக்கெதிராக செய்யும் செயல்கள் தனிப்பட்ட ஆர்யனுக்கு எதிரானவை. அதனை சதி என்றோ தேசத்திற்கு எதிரான நடவடிக்கை என்றோ கூறுவது தவறு. எனது சகோதரர்கள் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். நான் சமுத்ரம். சமுத்ரம் கங்கை, கோதாவரி, நர்மதை, சிந்து காவிரி என்று எல்லா நதிகளையும் தன்னுள் ஐக்கியப்படுத்திக் கொள்வது போன்று நான் எனது சகோதரர்களையும் என்னுள் ஐக்கியப்படுத்திக் கொண்டு ஆட்சி புரிய விரும்புகிறேன். குப்த ராஜ்யத்தின் இரு யுவராஜாக்களாக எனது சகோதரர்களை நியமிக்கிறேன். பாடலிபுத்ரம் தொடங்கி விரிஞ்சைக் காடு வரையில் உள்ள குப்தத்திற்கு விவேகன் யுவராஜனாக இருப்பான். விரிஞ்சிக்கு அப்பால் தொடங்கி தக்ஷஷீலம் வரையில் உள்ள பகுதிக்கு சுவேதன் யுவராஜனாகத் திகழ்வான். இருவருக்கும் இப்போதே அதிகாரத்தை வழங்குகிறேன்" என்றபடி விவேகனுக்கும், சுவேதனுக்கும் வெள்ளிச் செங்கோல்களை அளித்து, வீர வாள்களையும் அளித்தான்.

சந்திரகுப்தனும், குமாரதேவியும் பேரானந்தத்துடன் தங்களது கைகளைத் தட்டி, சமுத்ரகுப்தனின் செயலை அங்கீகரிக்க, தங்கள் இருவருக்கும் தண்டனை கிடைத்து விடுமோ என்கிற கவலையில் இருந்த விவேகனுக்கும், சுவேதனுக்கும் இன்ப அதிர்ச்சிதான்.

வீர வாளை அளித்ததும், சகோதரர்களை நோக்கினான், சமுத்ரகுப்தன்.

“அண்ணா! விவேகன் என்கிற நீங்கள் இனி விவேக குப்தனாக

https://telegram.me/aedahamlibrary

என்னுடன் சேர்ந்து நாட்டை பரிபாலனம் செய்யுங்கள். உங்களுக்கு காலதேவ பகுதி அரண்மனையை ஒதுக்குகிறேன். தாங்கள் அங்கேயே உங்களது சபையை நிறுவிக் கொள்ளலாம். தம்பி சுவேதா! உனது ஆலோசகராக நிஷ்கல அக்னிஹோத்ரியை நியமிக்கிறேன். நீங்கள் இருவரும் தக்ஷ ஷீலா அரண்மனையில் தங்கியிருந்து ராஜாங்கப் பணிகளைச் செய்யுங்கள்!” என்று உத்தரவிட்டான்.

தலைமை அமைச்சரின் மகனும், தனது ஆருயிர் நண்பனுமான விஜயானந்தனை அழைத்தான், சமுத்ரகுப்தன்.

“விஜயானந்தா! நீ சுவேதனுடன் சென்று, தக்ஷஷீலத்தில் யுவராஜா சுவேதகுப்தரின் சபையை நிறுவிட உதவி செய்துவிட்டு வா. நான் இங்கே கால தேவத்தில் அண்ணன் யுவராஜா விவேக்குப்தரின் சபையை நிறுவ ஏற்பாடு செய்கிறேன். சமுத்ரகுப்தனாகிய நானும், யுவராஜாக்களாகிய விவேக்குப்தரும், சுவேதகுப்தரும் ஒற்றுமையாக குப்த ராஜ்யத்தை ஆண்டு, மக்களுக்கு வளங்களையும் சுகங்களையும் கிடைக்கச் செய்வோம். இப்போது சபை கலையலாம்!” என்று உத்தரவிட்டான்.

மனதிற்குள் சிரித்துக் கொண்டான், விஜயானந்தன். தக்ஷஹீலம் சென்றதும், அங்கிருந்த அரண்மனையிலேயே சுவேதனையும், நிஷ்கலரையும் சிறை வைத்தான்... காலதேவம் பகுதி அலுவலக அறை மூத்தவன் விவேகனை தன்னுள் ஐக்கியப்படுத்திக் கொண்டது. இனி அவன் எப்போதும் வெளியே வரப்போவதில்லை. யுவராஜனாக காலதேவம் பகுதியில் இருக்கப் போகிறான். அவ்வளவே.

விஜயானந்தன் மூலமாக தனது சகோதரர்களே தன்னை அரியணை ஏறவிடாமல் தடுக்க தன்னை கொலை செய்யவும் துணிந்துவிட்டனர் என்பதை அறிந்ததும் அமைதியாக சாணக்கிய நீதி சுவடிகளை படித்துக் கொண்டிருந்தான், சமுத்ரகுப்தன்.

"என்ன நண்பா! உனது சகோதரர்கள் உன்னை கொல்லத் துணிந்துவிட்டனர். அவர்களின் மீது நடவடிக்கை எடுக்காமல், ஏதோ சுவடிகளை படித்துக் கொண்டு இருக்கிறாயே!” விஜயாநந்தன் பதறினான்.

“சாணக்கிய நீதியை படிக்கிறேன். எனவேதான் அமைதியாக இருக்கிறேன். உணர்ச்சிகளை வெளிக் காட்டாமல் இருப்பவனால்தான் இறுதியில் வெல்ல முடியும். ஒருவன் உணர்ச்சிகளுக்கு அடிமையாகக் கூடாது. இருவர் சேர்ந்து ஒருவனுக்கு எதிராக சதி செய்கிறார்கள் என்று

https://telegram.me/aedahamlibrary

தெரிந்தால், இருவரையும் பிரிக்க வேண்டும். வெளிமனிதர்களாக இருந்தால் அவர்களுக்குள் மித்திர பேதம் செய்ய வேண்டும். அவர்களே நம் சகோதரர்களாக இருந்துவிட்டால் பாசத்தைக் கொண்டு அவர்களை பிரிக்க வேண்டும். இருவரும் எனக்கு எதிராக சதி செய்தார்கள் என்பதை சபையில் நிரூபித்து தண்டனை அளித்தால், பெற்றோரின் ஆசி எனக்கு பரிபூரணமாகக் கிட்டாது. அவர்களது சோகமானது என்னை வாழ்த்தாது. சபையிலும், மக்களிடையேயும் எனது சகோதரர்களுக்கு அனுதாபம் கிட்டலாம். ஆனால் அவர்களை யுவராஜாக்களாக நியமித்து இரகசியமாக சிறை வைத்துவிட்டேன். இனி வரிகள் விதிப்பது, மக்களை பாதிக்கும் கடுமையான சட்டங்களை அவர்கள் இருவரின் பெயரில் செயலாற்றி, அவர்களின் நன்மதிப்பினை கெடுத்து, அவர்களை சிறையில் தள்ள வேண்டும் என்று மக்களையே போராட வைத்து பிறகு சிறையினில் ஒரேடியாக தள்ளிவிடுவோம். இதுவே நமது திட்டம்!" சமுத்ரகுப்தன் சிரித்தான்.

"இனி துவங்குகிறது, சமுத்திரத்தின் ஆர்ப்பரிப்பு. சமுத்திரம் பொங்கி கடற்கோள் உண்டாக்கி நிலங்களை கபளீகரம் செய்வது போன்று, இந்த சமுத்திரகுப்தனும் கடற்கோளாக உருவாகி உலக நாடுகளை கபளீகரம் செய்யப் போகிறேன். என்னுடன் நீயும் உடன் வரப் போகிறாய், விஜயானந்தா! உன்னையும் என்னுடன் சேர்த்து திக்விஜயன் சமுத்ரகுப்தன் என்று வருங்கால சரித்திரம் நம்மை அழைக்கும்" என்று கடலோசையைப் போன்று முழங்க, விஜயானந்தன் அவனை பிரமிப்புடன் நோக்கினான்.

[1] அலகாபாத் ஸ்தம்ப கல்வெட்டுகளில், சந்திர குப்தனின் மற்ற மகன்கள் சமுத்ரகுப்தனின் மகுடாபிஷேகத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்தி, சமுத்ர குப்தனின் மகுடாபிஷேகத்திற்குத் தடங்கல் உண்டாக்கினார்கள் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

*****

https://telegram.me/aedahamlibrary

# 28. பிருத்வி பந்தனம்

முன்னிரவிலேயே கடுங்குளிர் பாடலிபுத்ர நகரை அரவணைத்துக் கொள்ள, மக்கள் பொழுதுடன் கம்பளிகளின் பின்பாக முடங்கினர். அரண்மனையின் இந்திரம் பகுதியில் உள்ள ஆலோசனை மண்டபத்தில் மட்டும் அந்த குளிரைப் பொருட்படுத்தாமல், மந்திராலோசனையில் பங்கேற்பதற்காக குழுமியிருந்தனர், சிலர். மந்திராலோசனையில் கலந்து கொள்வதற்காக தலைமை அமைச்சர் பிரணதார்த்தியும் அவரது மகன் துணைத்தளபதி விஜயானந்தனும் ஆயிரங்கால் மண்டபத்தின் வழியாக இயந்திரம் பகுதியை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். மையப்பகுதியில் சிலையாக நின்ற புஷ்யமித்ராவை ஒருகணம் ஏறிட்டுப் பார்த்துவிட்டு, இந்திரம் பகுதிக்குச் செல்லும் பாதையில் நடந்தனர்.

விஜயானந்தன் தனது தந்தையின் செவிகளில் கிசுகிசுத்தான். "தந்தையே! மன்னர் தங்களை பொறுப்பாளராக நியமித்துவிட்டு, தனது திக்விஜயத்தை ஆர்யவிருதத்தில் தொடங்க உள்ளார். தக்ஷிணத்தில் உள்ள காஞ்சிக்குச் சென்று அஸ்வமேத யாகத்திற்கு தேவ உடும்பரத்தைக் கொண்டு வர வேண்டும் என்கிற உத்வேகத்தில் இருக்கிறார். அவரது கனவெல்லாம் நனவாகி, திக்விஜயத்தை முடித்துக்கொண்டு அவர் எப்போது மீண்டும் வருவார் என்பது யாருக்குத் தெரியும். நாட்டின் பொறுப்பாளராக நீங்கள்தான் வெகுகாலம் ஆட்சி செய்யப் போகிறீர். எனவே உங்களை நன்கு பலப்படுத்திக் கொள்ளுங்கள். காட்டுவாசி வம்சத்தை வீழ்த்தி தளபதி புஷ்யமித்ரா உருவாக்கிய வம்சம் குப்தம். தளபதிக்கு வாய்ப்பு கிட்டிய போது தலைமை அமைச்சருக்கு வாய்ப்பு கிட்டக்கூடாதா என்ன?!” - விஜயானந்தன் கிசுகிசுக்க, அவர் சற்று நின்று மகனை நோக்கினார்.

"புரிகிறது விஜயானந்தா! ஆனால் மனதில் இருக்கும் எண்ணங்களை இனியும் வெளியே கொணர்ந்து யாரிடமும் கூறாதே. தந்தையாகவே இருந்தாலும் அது தவறான செயல்... இந்த ஆயிரங்கால் மண்டபத்தின் ஒவ்வொரு தூணிற்கும் செவிகள் உண்டு. உனது முகத்தை நிச்சலனமாக வைத்துக்கொள். முழுநிலவை போன்று விகசித்தபடி இருக்காதே. முழு நிலவில்தான் களங்கம் தெரியும். முகம் மலர்ந்து இருந்தால் மனதில் ஒளிந்திருக்கும் திட்டங்களும் வெளியே தெரியும். பிறைநிலவில் ஒன்றும் தெரியாது. எனவே முகபாவங்களை காட்டாமல் நிச்சலனமாக முகத்தை வைத்துக் கொள். காரணம், மன்னர் மிகவும் சாமர்த்தியசாலி. நமது கண்ணசைவை வைத்தே மனவோட்டத்தை யூகிக்கக் கூடியவர்!” பிரணதார்த்தி எச்சரிக்க, விஜயானந்தன் தலையசைத்தான்.

https://telegram.me/aedahamlibrary

"தந்தையே, ஆயிரங்கால் மண்டபங்களில் ஆயிரம் செவிகள் இருந்தாலும் மன்னரின் செவிகள் மட்டும் எனது வசம்தான் உள்ளன!" விஜயானந்தன் கொக்கரித்தான்...

இருவரும் இந்திரம் பகுதியில் நுழைந்து, ஆலோசனை மண்டபத்தை நோக்கி நடந்தார்கள். மண்டபத்திற்குச் செல்லும் பாதையில் ஆங்காங்கே சுளுந்துகள் ஒளிர்ந்து கொண்டிருந்தன. இவர்கள் உள்ளே நுழைந்த போது, ஏற்கனவே, யுத்தம் மற்றும் அயல் தேச விவகார அமைச்சர் சந்தீவ்ரர், தளபதி குமாரமத்தியர் அரண்மனை அதிகாரி பீயுஷர் ஆகியோர் வந்து தத்தம் இருக்கையில் அமர்ந்திருந்தனர்.

மன்னரின் சிங்காசனத்திற்கு வலப்புறமும், இடப்புறமும், இரு இருக்கைகள் காணப்பட்டன. மன்னரின் இருக்கைக்கு பின்பாக ஒரு சிறு நாற்காலி வைக்கப்பட்டிருந்தது. பிரணதார்த்தி சற்றே வியப்புடன் நின்றார்.

மன்னரின் வலப்புறம் தலைமை அமைச்சராகிய தானும், இடப்புறம், தளபதியாகிய குமாரமத்யரும் அமர வேண்டும். ஆனால் குமாரமத்யர் ஏற்கனவே வேறு நாற்காலியில் அமர்ந்திருக்கிறாரே. குழப்பத்துடன் நிற்க, அரண்மனை அதிகாரி பீயுஷர் அவசரமாக வந்தார்.

"தலைமையமைச்சரே! தாங்கள் சந்தீவ்ரர் பக்கலில் இருக்கும் இருக்கையில் அமர வேண்டும். துணைத் தளபதியாரே! தாங்கள் குமாரமத்தியர் அருகே கடைசியாக உள்ள இருக்கையில் அமர வேண்டும்." பீயுஷர் கூற, விஜயானந்தன் தன்னை மறந்து கேட்டுவிட்டான்.

"நான் வழக்கமாக மன்னரின் அருகாமையில்தானே அமர்த்தப்படுவேன். இது என்ன புது வழக்கம்?" விஜயானந்தன் கேட்க, பீயுஷர் அமைதியாகப் பதில் தந்தார்.

"உண்மைதான். மன்னரின் அந்தரங்க தோழர் என்கிற வகையில் தங்களுக்கு சில கௌரவங்களை மன்னர் வழங்கியிருந்தார். ஆனால் இந்த மந்திராலோசனையில் மிக முக்கிய முடிவுகளை மன்னர் எடுக்க உள்ள நிலையில், மிகவும் முக்கியமானவர்கள் சிலர் மன்னருடன் இந்த ஆலோசனையில் கலந்து கொள்கிறார்கள். எனவே, தங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள இருக்கைகளில் தயை கூர்ந்து அமர்ந்து கொள்ளுங்கள்!" பீயுஷர் கூற, வேறு வழியின்றி, பிரணதார்த்தியும், விஜயானந்தனும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இருக்கைகளில் அமர்ந்தார்கள்.

https://telegram.me/aedahamlibrary

வாட்களின் சுழற்சியாக மணித்துளிகள் நகர, ஆலோசனை மண்டபத்தின் வாயிலையே அனைவரும் வெறித்துக்கொண்டிருந்தனர். அப்போது காலணிகளின் ஒலி முன்னே கேட்டு மன்னர் வருவதற்குக் கட்டியம் கூறின.

மான் தோலினால் நெய்யப்பட்டிருந்த சமுத்திரகுப்தனின் காலணிகள் அவனது தேக்குமரம் போன்ற கால்களின் கம்பீர நடையினால் கருங்கற்களில் அழுத்தப்பட்டு, 'சரக், சரக்' என்று அந்த முன்னிரவின் அமைதியை குலைத்தபடி கேட்டது. ஆனால் மன்னரை காண வேண்டும் என்கிற ஆவலைவிட, தங்களது மரத்தினால் செய்யப்பட்ட பாதரக்ஷைகள் கருங்கல்லில் மோதி, டக்டக்' என்கிற ஒலியினை எழுப்பிய கால்களுக்கு சொந்தமான, சமுத்ரகுப்தனுடன் வரும் முக்கியஸ்தர்கள் யார் என்பதை தெரிந்து கொள்வதிலேயே மண்டபத்தில் இருந்தவர்கள் ஆர்வம் காட்டினார்கள். ஆவலுடன் மண்டபத்தின் முகப்பையே அவர்கள் பார்க்க, முதலில் மண்டபத்தின் எதிரே இருந்த சுவற்றில் நான்கு நிழல்கள் தென்பட்டன. பிறகு, சமுத்ரகுப்தனின் கம்பீரமான உருவம் கண்ணில்பட அவனைத் தொடர்ந்து மூவர் மண்டபத்தினுள் நுழைந்தனர்.

அனைவரும் எழுந்து நிற்க, சமுத்ரகுப்தன் நேராக தனது அரியாசனத்தில் அமர்ந்தான். பிறகு தன்னுடன் வந்தவர்களை கண் ஜாடை செய்து தனது இருபுறங்களையும் காட்டினான்.

தலைமையமைச்சர் பிரணதார்த்தி, தளபதி குமாரமத்தியர், யுத்த அமைச்சர் சந்தீவ்ரர், அரண்மனை அதிகாரி பீயுஷர் மற்றும் உபதளபதி விஜயானந்தன் ஆகிய ஐவருக்குமே அந்த மூவரும் புதியவர்களாகத் தெரிந்தனர். ஒருவனை மட்டுமே அவர்களுக்கு அடையாளம் தெரிந்தது... அவன்தான் புதிய கஜானா அதிகாரியாக பதவி ஏற்றிருக்கும் ஸ்மிதமுகன். மன்னரின் செவிலித்தாய் வீணாதராவின் கணவன். மன்னரைக் காட்டிலும் வயது கூடியவனாகத் திகழ்ந்தான், ஸ்மிதமுகன். ஆனால் மற்ற இருவரும், யௌவனத்தில் திளைத்த குமாரர்களாக இருந்தனர். இருவருமே மன்னரின் சம பிராயங்களைக் கொண்டவர்களாக இருந்தார்கள். அதில் ஒருவன் மிக உயரமாகவும், கம்பீரமாகவும் அழகிய முகத்துடன் காணப்பட்டான். அவனது முடிகள் சுருண்ட அலைகளாக அவனது தலையில் புரண்டு கொண்டிருந்தன. நெடிய அவனது தேகத்தை மறைப்பதற்கு மிகவும் சிரமப்பட்டுப் போயிருந்தது அவனது வேட்டி. கச்சமாக அவன் வேட்டியை உடுத்தியிருந்தாலும், போர் வீரர்கள் அணியும் கச்சையைப் போன்று

https://telegram.me/aedahamlibrary

முழங்கால்களுக்கு மேலாக அவனது வெண்பட்டு வேட்டி ஏறியிருக்க, அவனது கால்களின் உறுதி காண்பவர்களுக்குப் புலப்பட்டது. நாவற்பழ நீலத்தில் வேட்டியின் மீது சராய் அணிந்திருந்தான். தோளினில் செம்மை நிறத்தில் தகடி ஒன்றைப் போர்த்தியிருந்தான்.

மற்றொருவன் மிக எளிமையாக இருந்தான். பார்க்கும் போதே அனலோம்பும் வேதியன் என்பது புலப்பட்டது. நெற்றியில் துலங்கிய கஸ்தூரி திலகமும், மார்பின் குறுக்காகப் புரண்டு கொண்டிருந்த வெண்புரி நூலும், கழுத்தில் அணிந்திருந்த பவழ மாலையையும் தவிர அவனது மேனியில் வேறு ஒன்றும் காணப்படவில்லை. வேட்டியை அணிந்து, மார்பை ஒரு உத்திரீயத்தினால் மறைத்திருந்தான்.

அவர்கள் இருவரும் மன்னரின் இருபக்கமும் சென்று நிற்க, ஸ்மிதமுகன் மன்னரின் பின்பாகச் சென்று அந்த சிறிய நாற்காலியில் அமர்ந்தான்.

சமுத்ரகுப்தன் ஒருமுறை ஆலோசனை மண்டபம் முழுவதும் தனது கண்களை மேயவிட்டான்.

“தலைமை அமைச்சரே! தளபதியாரே! யுத்த அமைச்சரே! உபதளபதியே! அரண்மனை அதிகாரியே! இதோ! இவர்களை உங்களுக்கு அறிமுகம் செய்ய விரும்புகிறேன். எனது வலது பக்கலில் உயரமாக நிற்கிறாரே! இவர் பெயர் ஹரிசேனா![1]

ஹரிசேனா சிறந்த கவிஞர். தேவநாகரி, சமஸ்க்ருதம், பாலி, கலிங்க மற்றும் காமரூப மொழிகளை அறிந்தவர். திக்விஜயங்களுக்கு மிகவும் பிரயோசனமானவர். உலக நாடுகளின் வரைபடங்களை அறிந்தவர். காடு, மேடுகள், மலை, பாலைவனங்கள் ஆகிய பகுதிகளின் தன்மைகளை அறிந்தவர். இயற்கையின் ரகசியங்களை கரைத்துக் குடித்தவர். மிருகங்களின் எண்ண ஓட்டங்களை குறிப்பால் உணர்பவர். மனோதத்துவத்தின் மூலம் எதிரிகளின் திட்டங்களை அறிந்து கொள்வதில் சூரர். எனது திக்விஜயங்களுக்கு மிகவும் பயன்படப் போகும் ஹரிசேனாவை எனது அந்தரங்க ஆலோசகராக நியமித்து உள்ளேன். அவரை உங்களுக்கு அறிமுகம் செய்வதில் பெருமிதம் கொள்கிறேன்.” என்றவுடன் அவர்களை நோக்கி கரங்குவித்தான் ஹரிசேனா.

“எனது இடப்புறத்தில் இருக்கும் வேதிய குமரனின் பெயர் ஜைனேபன்... ஜைனேபன் வேதாகமங்கள், உபநிஷதுகள், சாத்திர சாங்கியங்கள், ஆலய வழிபாடுகள், போன்றவற்றை அறிந்தவன். இவனது

https://telegram.me/aedahamlibrary

தனித்திறமை என்னவென்றால் மறைந்து கிடக்கும் செல்வங்களை, புதையல்களை அறியக்கூடிய ரசவாத சூத்திரத்தை அறிந்தவன். ரசவாதத்தை தயாரித்து விழுங்கியவன். எல்லாவற்றையும்விட, சாணக்கியரின் வாழ்க்கையால் ஈர்க்கப்பட்டு அவரது சித்தாந்தத்தை மனதாலும், வாயாலும் செயலாலும் கடைப்பிடிக்கக் கூடியவன். மகத சந்திரகுப்தனுக்கு சாணக்கியர் கிடைத்தது போன்று, இந்த சமுத்ரகுப்தனுக்கு ஜைனேபன் கிடைத்திருக்கிறான். ஹரிசேனாவும், ஜைனேபனும் என்னுடன் திக்விஜயத்தில் பங்கேற்பார்கள்.

எனது பின்பாக நிற்கும் ஸ்மிதமுகனுக்கு அறிமுகம் தேவையில்லை. நமது கஜானா அதிகாரி! எனது செவிலித்தாய் வீணாதராவின் கணவர். எனது திக்விஜயங்களுக்கு கஜானாவிலிருந்து நிதியுதவி செய்வதற்கு பொறுப்பாக ஒருவர் தேவையென்பதால் எனது நம்பிக்கைக்கு உரிய வீணாவின் கணவரை கஜானா அதிகாரியாக நியமித்துள்ளேன்!" என்றான்.

பிரணதார்த்தி எழுந்தார். "திக்விஜயம் செய்து குப்த சாம்ராஜ்யத்தை விரிவாக்கம் செய்ய உள்ள தங்களது பராக்கிரமத்தை பாராட்டி, பராக்கிரமாங்கன் என்கிற பட்டத்தை தங்களுக்கு அளிக்க எனது அமைச்சரவை முடிவு செய்துள்ளது என்பதை பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்!" என்று சொன்னதும், சமுத்ரகுப்தன் பணிவுடன் தலையை குனிந்து தனது சம்மதத்தைத் தெரிவிக்க, குழுமியிருந்தோர், தங்களது கரங்களைத் தட்டி மன்னருக்கு பாராட்டு தெரிவித்தனர்.

"புகழுக்கோ, பட்டங்களுக்கோ, பாராட்டுகளுக்கோ நான் திக்விஜயம் செய்யவில்லை. சமுத்ரத்தைப் போன்று சத்தியத்திற்கு கட்டுப்பட்டவன் நான். பரத கண்டம் அகன்று விரிந்தது. அதன் சாம்ராஜ்யங்கள் அனைத்துமே சனாதனத்தை போற்றி வருகிறது. ஆனால் அவை சிதறுண்டு கிடக்கின்றன என்பதால்தான் அலெக்சாண்டர் போன்ற அந்நிய தேசத்தவர்கள் நம் மீது படை எடுத்து வருகின்றனர். நவரத்தினங்களாக சிதறிக் கிடக்கும் சாம்ராஜ்யங்களை நவரத்தின ஹாரமாக கோர்க்கும் முயற்சியில் மட்டுமே நான் ஈடுபட்டிருக்கிறேன். பரத கண்டத்தையே உலகத்திற்கு வழிகாட்டும் ஒரு பிரதேசமாக மாற்றிட விழைகிறேன்.

எனது இந்த திக்விஜயங்களுக்கு பிருத்வி பந்தனம் (பூமியை பிணைத்தல்) என்று பெயரிட்டிருக்கிறேன். உலக நாடுகளை நமது குப்தம் என்னும் கயிற்றினால் கட்டி வைக்கப் போகிறேன். இதற்கு

https://telegram.me/aedahamlibrary

உங்களது ஆதரவு தேவை. எனவேதான், எனது திக்விஜயத்தில் முதற்கண் ஆரியவ்ரதம்,[2] கோசலம், குந்தி, பாஞ்சாலம், விதேகம், காமரூபம், கலிங்கம், ஜகன்நாதம், மற்றும் அதவிக வனப்பிரதேசங்களை குறி வைத்துள்ளேன். இறுதியாக தக்ஷிண பாதம் செல்கிறேன்.

அஹிச்சம் தேசத்தை குப்தத்தில் இணைத்த பிறகு, தட்சிணம் செல்லத் திட்டமிட்டுள்ளேன். எனது குறி காஞ்சி என்கிற சாணக்கியனின் பிறப்பிடம். உலகத்தையே வளமாக்கும் தேவ உடும்பரத்தை கைப்பற்றி நமது பாடலிபுத்திரம் கொண்டு வந்து, அஸ்வமேத யாகம் செய்து, உலகின் சக்கரவர்த்தியாக முடிசூடிக் கொள்ள உத்தேசித்திருக்கிறேன்! இதுவே எனது திட்டம்." சமுத்திரகுப்தன் கூறியதும் சபையில் அமைதி நிலவியது.

யுத்த அமைச்சர் சந்தீவ்ரர் தயக்கத்துடன் எழுந்தார்.

"மன்னா! நீங்கள் குறிப்பிட்ட கோசலம், குந்தி, ஆரியவ்ரதம், பாஞ்சாலம் போன்றவை நமது குப்த சாம்ராஜ்யத்தைச் சுற்றி இருப்பவையே. அங்கே திக்விஜயங்கள் செய்வதில் அர்த்தம் உண்டு. எங்கோ வெகு தொலைவில் தட்சிணத்தில் இருக்கும் காஞ்சிக்கு படை எடுத்துப் போவது எவ்வகையில் சாத்தியம்? தெரியாத பகுதி. புரியாத மொழி. நமது கஜானாவின் செழுமை காஞ்சி வரையில் பாயுமா என்கிற சந்தேகம் எனக்குள் எழுந்திருக்கிறது..." என்றதும்தான் தாமதம். சமுத்ரகுப்தன் காட்டத்துடன் அவரை பார்த்தான்.

ஆனால் அதற்குள் எழுந்து நின்று, சந்தீவ்ரரின் முகத்தை உறுத்து நோக்கியபடி பேசத் துவங்கினான், ஹரிசேனா.

"அமைச்சர் அந்த கவலையை கொள்ளத் தேவையில்லை. காஞ்சி வெகுதொலைவில் உள்ளது. ஆனால் மன்னரும் நாங்களும், அதனை கருத்தில் கொண்டு புதிய திட்டங்களை தீட்டியுள்ளோம். ஆரியவ்ரதத்தை கைப்பற்ற மட்டுமே இங்கிருந்து படைகளை திரட்டுவோம். தட்சிண பாதத்தை கைப்பற்ற ஆரியவ்ரத படைகளையும், கோசலத்தை கைப்பற்ற தட்சிண பாத படைகளையும், குந்தியை கைப்பற்ற கோசல படைகளையும் அனுப்புவோம். கலிங்கத்தை கொண்டு ஆந்திர படைகளையும், பல்லவத்தையும் கைப்பற்றுவோம். கடல் தன்னுள் நதிகளை இணைப்பது போன்று ஒவ்வொரு தேசமாக கைப்பற்றுவோம். கடலில் கலந்த பிறகு, கங்கை, யமுனை, நர்மதை மற்றும் கோதாவரி என்று தனித்தனியாக அடையாளம் காட்ட முடியுமா என்ன? குப்த தேசத்துடன் இணைந்ததும் எல்லாமே குப்த தேசங்கள்

https://telegram.me/aedahamlibrary

தான்!” ஹரிசேனாவின் குரலில் கடுமை நிலவியது. அவன் மிகவும் ஆபத்தானவன் என்பதை கடுவன் பூனையை ஒத்திருந்த அவனது கண்கள் உரைக்க, தொடர்ந்து பேசத் தோன்றாமல் அமர்ந்தார் சந்தீவ்ரார்.

தலைமை அமைச்சர் திடுக்கிட்டுப் போய் மன்னனை பார்த்தார். மந்திராலோசனையில் ஆலோசிக்க வேண்டியதை குருகுல நண்பர்களுடன் விவாதித்து தீர்மானித்துவிட்டு பிறகு எதற்காக மந்திராலோசனை என்கிற இந்த போலி சந்திப்பு.

"மந்திராலோசனை கூட்டத்தை மன்னர் முன்பே நடத்திவிட்டார் போல இருக்கிறதே!” சற்றே கடுமையுடன் கூறினார், தலைமை அமைச்சர் பிரணதார்த்தி.

"ஆம்! தலைமை அமைச்சரே! தாங்கள் ஆயிரங்கால் மண்டபத்தில் தந்தையும் மகனுமாக உரையாடிக் கொண்டு வந்த போதே எங்கள் மந்திராலோசனை முடிந்துவிட்டது. காட்டுவாசிக்குக் கிடைத்த வாய்ப்பு, தளபதிக்குக் கிடைத்த வாய்ப்பு, ஒரு தலைமை அமைச்சருக்குக் கிடைத்தால் தவறா? என்று விஜயாநந்தன் கூறும் போதே இங்கே மந்திராலோசனை கூட்டம் முடிந்துவிட்டது” என்று சமுத்ரகுப்தன் கூற, பிரணதார்த்தியின் வாய் உலர்ந்து போனது. அடுத்த கணமே, தலைமை அமைச்சரை மறந்தவனாக, சமுத்ரகுப்தன் சந்தீவ்ரரை நோக்கினான்.

"சந்தீவ்ரரே! இந்த திக்விஜயத்தின் நோக்கமே காஞ்சிதான். அசோகனின் செல்வங்கள் மகிந்தா மற்றும் சங்கமித்தா புத்த கயை தலைமை பிக்குவுக்கு அனுப்பிய ஓலைச்சுவடி ஒன்றை எனது செவிலித்தாய் என்னிடம் தந்தார். காஞ்சியை கைப்பற்ற வேண்டும் என்பது அசோகன் காலத்திலிருந்து செய்யப்பட்ட ஒரு முயற்சி. அந்த கனவை நான் நனவாக்குவேன். உலகில் இரண்டு தேவ உடும்பரங்கள் மட்டுமே படைக்கப்பட்டன. வடபுலத்தின் தேவ உடும்பரம் அழிந்துவிட்டது. ஆனால் தட்சிணத்தில் இன்னமும் இருக்கிறது. பரத கண்டத்தை ஒரே தேசமாக்கி, அதன் தலைநகராக பாடலிபுத்திரத்தை அமைத்து, தலைநகரின் மையத்தில் தேவ உடும்பரத்தை மீண்டும் வளர்த்து அஸ்வமேத யாகம் செய்யப் போகிறேன். சாணக்கியனின் பிறந்த ஊரான காஞ்சிக்கு நாம் நிச்சயம் சென்று தேவ உடும்பரத்தை எடுத்து வருவோம். அதற்காகவேதான் என்னுடன் ஜகன்னாத க்ஷேத்திரத்தில் குருகுலவாசம் செய்த ஹரிசேனாவையும் ஜைனேபனையும் தேடிப்பிடித்து என்னுடன் திக்விஜயத்திற்கு அழைத்துச் செல்கிறேன்!” என்ற சமுத்ரகுப்தன் ஜைனேபனை திரும்பிப் பார்த்தான்.

https://telegram.me/aedahamlibrary

“ஜைனேபா! தேவ உடும்பரத்தின் பெருமைகளை நீயே சபைக்கு எடுத்துக் கூறு...” என்றவுடன் பணிவுடன் எழுந்து நின்றான், ஜைனேபன்.

‘எனது பணிவு மன்னனை நோக்கி மட்டுமே செலுத்தப்பட்டது. உங்களுக்கு அல்ல!' என்பது போன்று சபையினரை பார்த்த அவன், எரியும் தீப்பந்தத்தை வெறித்தபடி பேசத் துவங்கினான்.

"சாணக்கியருக்கு முதலில் வந்தனங்கள்! தெற்கில் ஊர் பெயர் தெரியாத ஒரு வனாந்தரத்தில் இருந்து வந்து நந்த சாம்ராஜ்யத்தை வீழ்த்தி, ஒரு காட்டுவாசியை மன்னனாக அமர வைத்து, மவுரியத்தை நிறுவி, துர்தரா என்கிற அகந்தை பிடித்தவளை அடக்கி, அவளது குழந்தையை மீட்டு, அர்த்தசாஸ்திரத்தை இயற்றி, செலுகஸ் நிகேதரை வீழ்த்தி அவனது மகளை சந்திரகுப்தனுக்கு மணமுடித்து, எண்ணற்ற சாதனைகளை புரிந்து, ஐந்து தலைமுறைகளுக்கு முன்பே எதிர்காலத்தில் சமுத்ரகுப்தன் என்கிற நமது மன்னரின் வருகைக்கும் கட்டியம் கூறிவிட்டுச் சென்றிருக்கும் மாமேதை சாணக்கியர் பிறந்த பூமியை தரிசிக்க வேண்டும் என்பதற்காக காஞ்சி செல்கிறோம். ஒரு எளிய அந்தண சிறுவன் விஷ்ணுகுப்தனாக தோன்றி உலகம் போற்றும் ராஜதந்திரியாக உயர்ந்ததற்கு காரணமே அவர் வணங்கிய அத்திமலைத் தேவன் என்கிற திருமாலும், அவர் வாசம் செய்யும் தேவ உடும்பரமும்தான், அஸ்வமேத யாகம் செய்வதற்கு முன்பாக, நமது மன்னர் அத்திமலைத் தேவனை தரிசிக்க வேண்டும் என்கிற காரணமும் உள்ளது.

அத்திமலையான் மன்னர்களின் மன்னன். அவனை தேவராஜன் என்று அழைப்பார்கள். உலகத்தையே ஆள, நமது மன்னருக்கு அத்திமலைத் தேவனின் அருளும் தேவை. தேவ உடும்பரமும் தேவை. எனவேதான், நமது மன்னர் காஞ்சிக்கு படை எடுத்துச் செல்ல இருக்கிறார்!”

ஜைனேபன் கூறி முடிக்க, அங்கே அமைதி நிலவியது.

“தலைமை அமைச்சரே! நான் காஞ்சிக்குச் சென்று வந்து அஸ்வமேத யாகம் புரிய வருடங்கள் பல ஆகலாம். எனக்கு குப்த தேசத்துடன் தொடர்பே விட்டுப் போகலாம். நான் வரும்வரை நீர்தான் இந்த நாட்டை கட்டிக்காத்திட வேண்டும். உமக்கு ஆலோசனைகளைக் கூற, எனது தந்தை சந்திரகுப்தர், தாய் குமாரதேவி மற்றும் எனது செவிலித் தாய் வீணாதரா ஆகியோர் குழு ஒன்றை அமைத்திருக்கிறேன். தாங்கள் அவர்களின் ஆலோசனையை ஏற்று இந்த நாட்டை பரிபாலனம் செய்ய வேண்டும்!” என்று கூறிய சமுத்ரகுப்தன் விஜயானந்தனை

https://telegram.me/aedahamlibrary

நோக்கினான்.

“விஜயானந்தா! நீ என்னுடன் திக்விஜயம் வரப் போகிறாய்...”

தங்களது நிலையில் மாற்றம் எதுவும் இல்லை என்பதை புரிந்து கொண்டு நிம்மதி பெருமூச்சு ஒன்றை சிந்தினர் தந்தையும், மகனும்.

“எங்கள் மீது தாங்கள் வைத்திருக்கும் நம்பிக்கைக்கு நன்றி!” தலைமை அமைச்சர் கூறினார்.

“நீர் எனக்கு எதிராக எதையும் திட்டமிடமாட்டீர்கள் என்கிற உறுதியில்தான் உங்களிடம் நாட்டை காக்கும் பொறுப்பினை தருகிறேன். மேலும் உமது ஒரே மகன் விஜயன் எங்களுடன் இருப்பதால், அங்ஙனம் விஷப் பரிட்சைகளில் ஈடுபடமாட்டீர்கள் என்று நம்புகிறேன். காரணம், உங்கள் மகன்.. எங்கள் வசம் இருக்கிறான் அல்லவா?” சமுத்ரகுப்தன் சிரித்துக்கொண்டே கூறினாலும், அவனது குளிர்ச்சியான கண்கள் தந்தைக்கும், மகனுக்கும் நடுக்கத்தைத் தந்தன. முதுகுத் தண்டு சில்லிட, மௌனமாக நின்றனர்.

"ஆக! நாளை துவக்குகிறோம் நமது திக்விஜயத்தை!”

சமுத்ரகுப்தன் கர்ஜனை செய்ய, அவனது குரலில் இருந்த தீவிரம் ஜகன்நாதம் கடலில் மையம் கொண்டு காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக மாறி, தெற்கே நகர்ந்து மல்லை கடற்கரையில் கரையைக் கடந்து காஞ்சிக்கு பயணித்து அத்திமலையானின் ஆலயத்தில் பிரவேசித்து அவனது சந்நிதிக் கதவுகளில் மோதி நின்றது. காற்றில் சந்நிதியின் மணிகள் சிணுங்க, அவற்றின் ஒலி, அத்திமலையானின் யோகத்தைக் குலைக்க, அவன் புன்னகையுடன் வருங்காலத்தை நோக்கினான். சாணக்கியனால் மவுரியத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டதன் விளைவு, இதோ குப்தர்களின் இலக்கிற்கு இவன் ஆளாகியிருக்கிறான். கரிகாலன், இளந்திரையன் என்று இவனிடம் பக்தி பூண்ட அரசர்களைக் காத்து வந்திருக்கிறான், அத்திமலையான். சமுத்திரத்தைப் போன்று தன்னை நோக்கி பொங்கி வரும் சமுத்ரகுப்தன் எப்படிப்பட்டவன். வரட்டும் பார்க்கலாம், என்பது போன்று அவனுக்காகக் காத்திருந்தான், அத்திமலைத் தேவன்.

[1] அலகாபாத் ஸ்தம்பக் கல்வெட்டுகள் மற்றும் ஏரான் கல்வெட்டுகளில் இந்த ஹரிசேனாவை பற்றி குறிப்புகள் காணப்படுகின்றன. மாபெரும் கவிஞனான ஹரிசேனா சமுத்ரகுப்தனின் நண்பனாகத் திகழ்ந்து பிறகு படிப்படியாக முக்கிய பதவிகளில் உயர்ந்தான். நீதிமன்றத்தின் தலைமை

https://telegram.me/aedahamlibrary

நீதிபதி என்கிற தண்டனாயகனாகவும், சந்தீவ்ரர் வகித்த யுத்த அமைச்சர் பதவியையும், சமுத்ரகுப்தனின் அந்தரங்க ஆலோசகராகவும் திகழ்ந்திருக்கிறான். சமுத்ரகுப்தனின் வாழ்க்கை சரிதத்தையும் எழுதி உள்ளான்.

[2] ஆரியவ்ரதம்: இமாலயத்திற்கும், விந்தியத்திற்கும் இடைப்பட்ட பகுதியே ஆரியவ்ரதம் என்று மனுஸ்மிருதி அழைக்கிறது. தற்போதைய Indo-Gangetic Plain பகுதி என்கிற வட மாநிலங்கள். மறைந்து போன சரஸ்வதி நதியின் கிழக்கு கரையில் உள்ள பகுதியும், மேற்கில் கலகாவனம், வடக்கில் பரியாத்திரை மலைத்தொடர் மற்றும் தெற்கே விந்தியத்திற்கும் இடைப்பட்ட பகுதியே ஆரியவ்ரதம் என்று வசிஷ்ட தர்ம சூத்ரம் தெரிவிக்கிறது.

அதவிக வனப்பிரதேசங்கள்: தற்போதைய மத்தியப் பிரதேச காடுகள். அஹிச்ச நாடு: தற்போதைய உத்தரப் பிரதேசத்தின் பரேலி மாவட்டத்தில் உள்ள ராம்நகர் பகுதி.

*****

https://telegram.me/aedahamlibrary

# 29. அரசியின் விபரீத ஆசை

பல்லவ மன்னனாக சிவஸ்கந்தவர்மன் பதவி ஏற்று முப்பது ஆண்டுகள் நிறைவு பெற்ற அதே தினம்தான் அத்திமலைத் தேவனின் வருடாந்திர சித்ர அஸ்த வைபவமும் நிகழ இருந்தது. இளந்திரையனுக்குப் பிறகு மன்னனாகப் பதவியேற்ற சிம்மவர்மன் இருபத்து ஐந்து ஆண்டுகள் ஆட்சி செய்து விட்டு, தனது மகன் சிவஸ்கந்தவர்மனிடம் ஆட்சியை ஒப்படைத்துவிட்டு, மரணமும் அடைந்திருந்தான். சரியாக கி.பி. 300ஆம் ஆண்டில் பதவி ஏற்றிருந்த சிவஸ்கந்தவர்மன், முப்பது ஆண்டு கால ஆட்சியை முடித்திருந்தான்.

பல்லவர்களின் முப்பாட்டன் பல்லவ இளந்திரையனும், அவனுடைய சகோதரனும், சோழ மன்னனுமாகிய கரிகாலனும் காஞ்சியை பலம் வாய்ந்த நகரமாக உருவாக்கி, அத்திமலையான் ஆலயத்தை பிரம்மாண்டமாக எழுப்பி, அவனது கோயிலை பலமான கோட்டையாக உருவாக்கியிருந்தனர். அரசர்களின் அரசனான அத்திமலையானின் திருவுள்ளத்திற்கு உகப்பு தரும் வகையில்தான் பல்லவ மன்னர்கள் வழிவழியாக நாட்டை பரிபாலனம் செய்து வருகிறார்கள். சிவஸ்கந்தவர்மனின் தந்தை சிம்மவர்மன் அத்தியூரானிடம் பக்தி செலுத்தினாலும், ஒத்தாடை ஈஸ்வரனிடமும் அதே அளவு பக்தியைப் புரிந்து தொண்டாற்றினான்.

ஆனால் சிவஸ்கந்தவர்மன் துவக்கத்தில் இருந்தே தீவிர சிவபக்தனாக இருந்தான். அதனால் அத்திமலையானிடம் சற்றே விலகியே நின்றான். அத்திமலையானுக்குப் பச்சை சாற்றுதல் போன்ற வைபவங்களில் கூட அவன் கலந்து கொள்ளவில்லை. இது அத்தியூர் மக்களுக்கு வருத்தத்தைத் தர, தங்களது அத்தியூர் காஞ்சி மாநகரின் ஒரு அங்கமாக மாறிய பிறகு, அத்தியூரானுக்கும், தங்களுக்கும் முக்கியத்துவம் குறைந்து போனதாகவே கருதத் தொடங்கியிருந்தனர். ஆனால் சிவஸ்கந்தன் அவர்களது எண்ணங்களுக்கு மதிப்பு கொடுக்காமலேயே இருந்தான். இந்த சமயத்தில்தான் அத்தியூரானுக்கு உகந்த சித்திரை அஸ்தம் திருநாள் வந்தது. அன்றுதான் தனது பட்டாபிஷேகம் முடிந்து முப்பது ஆண்டுகளின் நிறைவு பெறும் விழாவாகவும் கொண்டாட இருந்தான்.

இளந்திரையன் திருமணத்தன்று முக்கூடல் கடிகையில் ஸ்ரீதள மணியை களவாட முயற்சிகள் நடைபெற்ற பிறகு அதனை ஒத்தாடை அரண்மனை கஜானாவில்தான் பத்திரப்படுத்தி வைத்திருந்தனர். ஒவ்வொரு அஸ்தம் நட்சத்திரத்திற்கும், ஸ்ரீதள மணியை அதிகாரிகள்

https://telegram.me/aedahamlibrary

ஒத்தாடை அரண்மனையில் இருந்து அத்தியூர் எடுத்துச் சென்று பட்டர்களிடம் ஒப்புவிப்பார்கள். ஆனால் சித்திர அஸ்தம் விசேடமான நாள் என்பதால், பட்டத்து யானையின் மீது அமர்ந்து ஸ்ரீதள ஹாரம் வைக்கப்பட்ட பெட்டகத்தை மன்னனே எடுத்துச் சென்று ஆலயத்தில் ஒப்படைப்பான். அவனுக்கு ஆலய மரியாதைகள் செய்யப்பட்டு பரிவட்டம் கட்டப்படும். இளந்திரையன் மற்றும் அவனது மகன் சிம்மவர்மன் இருவரும், இந்த வழக்கத்தை ஏற்று அவர்களே ஸ்ரீதள மணியை எடுத்துச் செல்வார்கள். இன்னும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், சிம்மவர்மன், சித்திர அஸ்த திருவிழாவின் போது, ஸ்ரீதள மணி வைக்கப்பட்டுள்ள பெட்டகத்தை யானையில் இருந்து இறங்கியதும், தனது தலையின் மீது வைத்து ஊர்வலமாக எடுத்துச் செல்வான். சிம்மவர்மன் இறந்து, சிவஸ்கந்தன் பதவி ஏற்ற பிறகு முதன்முறையாக சித்திரை அஸ்த திருவிழா முடிந்த போது. ஸ்ரீதள மணியை எடுத்துச் செல்ல மறுத்துவிட்டான்.

இதனால் அத்தியூர் மக்கள் அவன் மீது அதிருப்தி கொண்டிருந்தனர். கடந்த முப்பது ஆண்டுகளாக அத்தியூர் ஆலயத்திற்கு தான் வராமல் தனது சிற்றப்பன் மகன் விஷ்ணுகோபன் மூலமாக ஸ்ரீதள மணியை அத்தியூருக்கு அனுப்பிக்கொண்டிருந்தான்.

இந்த முறை அவன் பட்டமேற்று முப்பது ஆண்டுகள் பூர்த்தி அடைந்த நிலையில், ஸ்ரீதள மணியை கொண்டு வந்து கொடுத்து அத்தியூரானை தரிசிப்பான் என்று அத்தியூர் மக்கள் மிகவும் எதிர்பார்த்திருந்தனர்.

ஆனால் -

அத்தியூரில் சித்திரை ஹஸ்தம் வைபவத்திற்கான ஏற்பாடுகளை ஆலயத்தார் செய்து கொண்டிருக்க, ஒத்தாடை அரண்மனையில் மன்னன் சிவஸ்கந்தனுக்கு மகுடாபிஷேகம் நடைபெற்று முப்பது ஆண்டுகள் பூர்த்தி பெற்றதைக் குறிக்கும் வகையில் பெரிய விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. பட்டத்து யானையில் அமர்ந்து ராஜ வீதியில் வீதியுலா வந்துவிட்டு, ஒத்தாடை ஆலயத்தில் பூசனைகள் செய்வான் என்று அறிவிக்கப்பட்டது. அவன் அத்தியூருக்கு வரப்போவதில்லை என்பதை அறிந்ததும், அத்தியூர்வாசிகள் மனம் குமுறினார்கள்.

மன்னனே அத்தியூர் விழாவில் ஆர்வம் காட்டவில்லை என்பதை அறிந்ததும் அரண்மனை அதிகாரிகளும் அதை புறக்கணிக்கத் தொடங்கினார்கள். அத்தியூரிலிருந்து ஊர் தலைவர்கள் சிலர் மன்னனைச் சந்தித்து அத்தியூருக்கு வரும்படி அவனை வற்புறுத்த

https://telegram.me/aedahamlibrary

நினைத்தனர். மன்னருக்கு வாரிசு யாரும் இல்லை என்கிற நிலையில் அவனுடைய சிற்றப்பன் மகன் விஷ்ணுகோபன்தான் நியாயப்படி அடுத்த மன்னனாகத் திகழ இருந்தான். அவன்தான் கடந்த முப்பது வருடங்களாக அத்தியூருக்கு ஸ்ரீதள மணியை எடுத்து வந்தான். ஒத்தாடையான் பக்தனாக மன்னன் இருக்கலாம். ஆனால் அத்திமலைத் தேவன்தானே அந்த நகரம் உண்டாவதற்கு காரண கர்த்தா. அவனது வைபவத்திற்கு மன்னன் வராதது, தங்கள் ஊரையே அவமதிப்பது போன்று உணர்ந்தார்கள், அத்தியூர்வாசிகள்.

மன்னனிடம் தூதுரைக்க அத்தியூரின் பெரியவர்கள் சிலர் அனுப்பப்பட்டனர். அரண்மனை அதிகாரிகளைச் சந்தித்து தாங்கள் மன்னரைச் சந்திக்க வேண்டும் என்று கேட்க, அவர்கள் தயக்கத்துடன்தான் மன்னனிடம் சென்றனர். இறுதியில் மன்னன் அத்தியூர்வாசிகளைச் சந்திக்க ஒப்புக்கொண்டான்.

மகுடம் சூட்டி முப்பது ஆண்டுகளைக் கடந்துவிட்ட மன்னனுக்கு வாழ்த்து கூறிய அத்தியூர்வாசிகள், அவனை பணிவுடன் நோக்கினர்.

"மன்னரே! மன்னருக்கெல்லாம் மன்னன் என்று கூறும்படியாக அஸ்வமேத யாகத்தில் தோன்றியவன், அத்திமலைத் தேவன். அவன் குடிகொண்டிருக்கும் ஆலயம் உள்ள நாட்டை நீங்கள் ஆள்வது அவனது அருள் தங்களுக்கு பரிபூரணமாக உள்ளது என்பதையே காட்டுகிறது. தயை கூர்ந்து, எங்களது அழைப்பை ஏற்று, தாங்களே, இம்முறை ஸ்ரீதள மணியை எடுத்து வந்து அத்திமலையானுக்கு சமர்ப்பித்து அவரது அருளைப் பெறுமாறு வேண்டுகிறோம்.” - அத்தியூர்வாசிகள் வேண்டினார்கள். அவர்களை எரிச்சலுடன் நோக்கினான், மன்னன்.

“நான் மகுடம் சூட்டிக்கொண்டு முப்பது ஆண்டுகளை நிறைவு செய்கிறேன். வீதியுலா முடிந்த பிறகு சிவ பக்தனான நான் ஒத்தாடையான் ஆலயத்தில் பூசனைகளைச் செய்கிறேன். என்னால் எப்படி அத்தியூருக்கு ஸ்ரீதளத்தை சுமந்து வர முடியும்? இந்த வருடம் எனக்கு சாத்தியப்படாது. அடுத்த வருடம் பார்க்கலாம்!” - சிவஸ்கந்தன் அலட்சியத்துடன் கூறினான்,

மன்னனின் பிடிவாதத்தைக் கண்டு அத்தியூரே அதிர்ந்து போனது. நியதியை கடைப்பிடிக்க அத்தியூர் வரப்போவதில்லை என்கிற போது, இனியும் ஸ்ரீதள ஹாரம் எதற்கு அரண்மனையின் பாதுகாப்பில் இருக்க வேண்டும். ஆலயத்திலேயே பத்திரப்படுத்தி வைப்போம் என்று அத்தியூரில் கோரிக்கைகள் கிளம்பின.

https://telegram.me/aedahamlibrary

“நமது அத்திமலையானையும், நம்மையும் மன்னன் அவமதிக்கும் போது நாம் ஏன் காஞ்சி மாநகரின் பகுதியாக விளங்க வேண்டும். அத்தியூர் என்கிற நமது பழைய பெருமையுடன் தனித்தன்மையோடு வாழ்வோம்!” என்று ஆங்காங்கே மக்கள் பேசத்துவங்கினர்.

பிறகு ஒத்தாடை மற்றும் அத்தியூர் பெரியவர்கள் இருதரப்பும் குழுமி சமரசப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டனர். வழக்கம் போல தனது சிற்றப்பன் மகன் விஷ்ணுகோபன் மூலம் ஸ்ரீதள மணி வைக்கப்பட்டிருந்த பெட்டகத்தை அத்தியூருக்கு அனுப்ப இசைந்தான், மன்னன் சிவஸ்கந்தன்.

விழா அன்று காலை அப்போதுதான் கண்விழித்த மன்னன் சிவஸ்கந்தனை முதலில் வாழ்த்தினாள், அரசி நீலாக்ஷீ...

“முப்பது ஆண்டுகாலம் மன்னனாகத் திகழ்ந்துவிட்டீர்கள். உமது ஆட்சியில் மக்கள் எவ்விதக் குறையும் இன்றி வாழ்கின்றனர்!” - நீலாக்ஷீ கூற, அவளை யோசனையுடன் நோக்கினான், மன்னன்.

“மக்களுக்கு குறை இல்லையென்றால் என்ன? எனக்கு குறை உள்ளதே. வாரிசு இல்லாத மன்னனாகத் திகழ்கிறேன். போர்க்களம் ஏகாத மன்னனாகவும் இருக்கிறேன். எனது ஒத்தாடையானுக்குச் செய்யும் தொண்டுகளைத் தவிர, நான் மன்னனாக எதையும் சாதிக்கவில்லை, என்று மக்கள் பேசுவதாக அறிகிறேன்!” -- மனம் வெதும்பினான், சிவஸ்கந்தன்.

“மக்கள் கிடக்கிறார்கள் மன்னரே! ஆட்டு மந்தை கூட்டம். தங்களுக்கு உதவும் போது வாழ்த்துவார்கள். உதவவில்லையென்றால் வசை பாடுவார்கள். நீங்கள் ஒன்றும் நாட்டு மக்களை அனாதையாக விட்டு விடவில்லையே. தங்களது தம்பி விஷ்ணுகோபன் உங்களது வாரிசாகத் திகழ்கிறார் அல்லவா. உங்களுக்குப் பிறகு அவர்தான் மன்னர் என்று எழுதி வைக்கப்படாத சாசனம் இருக்கிறது அல்லவா?” - நீலாக்ஷீ கேட்டாள்.

“ஆம் நீலாக்ஷீ! விஷ்ணுகோபனுக்குக் கூட பல்லவ சிம்மாசனத்தை கொடுக்கப் போகிறேன். எனது ஆருயிர் மனைவியான உனக்குத்தான் நான் ஒன்றுமே கொடுக்கவில்லை. இன்று எனது வாழ்க்கையில் மிக முக்கியமான நாள். மன்னனாக முப்பது ஆண்டுகளை முடித்து விட்டேன். இன்று உன்னை மகிழ்விப்பது என்கிற தீர்மானத்தில் உள்ளேன். உனக்கு என்ன ஆசை உள்ளதோ அதை என்னிடம் கூறு. நான் அதனை நிறைவேற்றி வைக்கிறேன்!” உற்சாகத்தில் கூறினான், சிவஸ்கந்தன்.

https://telegram.me/aedahamlibrary

தான் கூறுவது தனது தலையிலேயே இடியாக இறங்கப் போவது என்பதை அவன் அப்போது அறிந்திருக்கவில்லை.

“மன்னா! எனக்கு ஒரு ஆசை உண்டு. ஆனால் அதை எப்படிக் கேட்பது என்று தயக்கமாக உள்ளது!” – நீலாக்ஷீ மன்னனை சற்றே பயத்துடன் நோக்கினாள்.

“ஒரு மனைவி தனது ஆசையை கணவனிடம் வெளிப்படுத்தத் தயங்குகிறாள் என்றால், அவனுக்கு அதை நிறைவேற்றும் ஆற்றல் இல்லை என்கிற அர்த்தம் உண்டாகிறது, நீலா. தயங்காமல் நீ ஆசைப்படுவதை கேள்.” மன்னன் கூறினான்.

நீலாக்ஷீ மிடறு விழுங்கினாள். "மன்னரே! நீங்கள் தீவிர சைவர். அத்திமலையானுக்கு ஸ்ரீதள ஹாரத்தை அணிவிக்கும் வைபவத்திற்கு நாம் போனதே இல்லை. குபேரன் அத்திமலையானுக்கு அளித்த அந்த ஹாரம் விலைமதிப்பு இல்லாதது என்று அறிந்திருக்கிறேன். அந்த ஹாரம் நமது அரண்மனை கஜானாவில் தான் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது. நமது அரண்மனையிலேயே இருந்தும் ஒருமுறை கூட நான் அதனைக் கண்டது கிடையாது. நாளை நடக்கும் வைபவத்திற்கு கஜானாவில் இருந்து ஹாரத்தை எடுத்து விஷ்ணுகோபன் மூலமாக அத்தியூருக்கு அனுப்பப் போகிறார்கள் அல்லவா? அதற்கு முன்பாக ஒருமுறை ஸ்ரீதள மணி ஹாரத்தை எனக்குக் காட்ட முடியுமா? கஜானாவில் இருந்து இங்கே அந்தப்புரத்திற்கு எடுத்து வந்து ஒருமுறை நான் பார்த்ததும், பிறகு அத்தியூர் அனுப்புங்களேன். அந்த ஹாரத்தை காண வேண்டும் என்கிற ஆவல் எனக்கு வெகு நாட்களாக உள்ளது!" நீலா கூற, சற்றே திகைப்புடன் அவளை நோக்கினான்.

"ஸ்ரீதளத்தை அந்தப்புரம் கொண்டு வருவதா?" அவளது கோரிக்கை அவனுள் மிரட்சியை ஏற்படுத்தியது. ஆனால் சற்றே யோசித்துப் பார்த்தான். அவள் என்ன கேட்கிறாள்? ஸ்ரீதள மணியை காண வேண்டும் என்றுதானே விரும்புகிறாள். அரண்மனை கஜானாவில் உள்ள மணிஹாரத்தை அந்தப்புரத்திற்கு எடுத்து வந்து காட்டிவிட்டு, பிறகு அத்தியூர் அனுப்பினால் என்ன? பாவம்... பார்ப்பதற்குத்தானே விருப்பப்படுகிறாள்!

கஜானா அதிகாரியை இரகசியமாக அழைத்தான், சிவஸ்கந்தன். அத்தியூருக்கு ஸ்ரீதள மணியை அனுப்ப வேண்டும் என்பதற்காக விடியலிலேயே அரண்மனைக்கு வந்திருந்தான், கஜானா அதிகாரி.

https://telegram.me/aedahamlibrary

விஷ்ணுகோபன் நீராடி தயாரானதும் ஸ்ரீதள மணி அத்தியூருக்கு பயணமாகும். விஷ்ணுகோபனுக்காக அதிகாரி காத்திருந்த போதுதான் மன்னரிடம் இருந்து அழைப்பு வர, பரபரப்புடன் மன்னரின் அந்தப்புரத்திற்குச் சென்றான்.

"அரசியார் ஸ்ரீதள மணியை பார்த்தது இல்லையாம். அதை இங்கே கொண்டு வந்து காட்டிவிட்டு, பிறகு விஷ்ணுகோபனிடம் கொடுத்து அனுப்பு!" - மன்னர் கூற, அந்த அதிகாரி குழப்பத்துடன் பார்த்தான். முப்பது வருடங்களில் இம்மாதிரி அரசர் எப்போதும் கேட்டதில்லை. அரசியார் ஸ்ரீதள மணியை பார்க்கத்தானே விரும்புகிறார். காட்டுவதில் தவறில்லைதான். ஆனால் ஹாரம் கஜானாவில் இருக்கின்றதே தவிர, ஒருமுறை கூட யாரும் அந்தப் பெட்டகத்தைத் திறந்ததில்லை. ஆனால் இப்போது அரச தம்பதியரே கேட்கும் போது இவனால் மறுத்துப் பேசவா முடியும்?

தலைகுனிந்து பணிவுடன் அசைத்தபடி மீண்டும் கஜானாவிற்குச் சென்று, ஸ்ரீதளமணி வைத்திருக்கும் பெட்டகத்தை எடுத்துக்கொண்டு அந்தப்புரத்துக்கு வந்தான் கஜானா அதிகாரி.

"நீ சற்று வெளியே இரு!" - என்று அவனை வாயிலில் நிற்க வைத்துவிட்டு, ஹாரம் வைக்கப்பட்டிருந்த பெட்டகத்துடன் மன்னன் அந்தப்புரத்தினுள் நுழைந்தான். அவனுக்காக ஆவலுடன் காத்திருந்தாள், நீலாக்ஷீ.

மஞ்சத்தில் பெட்டகத்தை வைத்த சிவஸ்கந்தன் அதனைத் திறந்து, வெண்பட்டுத் துணியால் சுற்றி வைக்கப்பட்டிருந்த ஸ்ரீதள மணி ஹாரத்தைக் கையிலெடுத்தான்.

நீலாக்ஷீயின் கண்கள் தகதகக்கும் அந்த ஹாரத்தினை கண்டு தெறித்து நிலத்தில் விழுந்துவிடும் போன்று தோன்றின. பிரமிப்புடன் கணவன் கையில் இருந்த ஸ்ரீதள மணியை நோக்கினாள்.

விலைமதிப்பில்லாத இந்த ஆபரணத்தை நான் அணிந்து கொண்டால் எப்படி இருக்கும்? யக்ஷ நேத்திரங்கள் என்னும் இந்த மாணிக்கக் கற்கள் மிகவும் விலை உயர்ந்தவையாக இருக்க வேண்டும். மனிதர்கள் யாருமே இதை அணியக்கூடாது என்பதால்தான் அத்திமலையானுக்கு இதனை சமர்ப்பித்து இருக்கிறானோ, குபேரன். ஒருமுறை, நான் இதனை அணிந்து அழகு பார்த்தால் என்ன?

ஆவல் உந்தித் தள்ள சிவஸ்கந்தனின் கரத்தில் இருந்து அதனை

https://telegram.me/aedahamlibrary

வாங்கியவள், அதை ஆராய்வது போன்று கவனித்தபடி நடந்தவள், சட்டென்று நிலைக்கண்ணாடி வந்ததும் நின்று தனது பிம்பத்தை பார்த்தாள். மின்னல் வேகத்தில் தனது கழுத்தில் ஸ்ரீதளத்தைச் சூடி அழகு பார்க்கத் தொடங்கினாள்.

அதைக் கண்ட சிவஸ்கந்தன் பதைபதைத்துப் போனான். அத்திமலையானின் ஸ்ரீதளத்தைத் தனது மனைவி அணிவதா?

“என்ன காரியம் செய்கிறாய், நீலா? ஹாரத்தினை பார்க்க வேண்டும் என்றுதானே கூறினாய். அணிந்து அழகு பார்க்கவா அதனை அந்தப்புரத்திற்கு வரவழைத்தாய்?” அவளை கடிந்தபடி அவள் கழுத்தில் ஊசலாடிய ஸ்ரீதள மணியைப் பறிக்க முயன்றான்.

“சற்று பொறுங்கள். அறையில் நாம் இருவர் மட்டும்தானே இருக்கிறோம். இந்த வாய்ப்பு பிறகு எங்கே கிடைக்கப் போகிறது?” என்று மீண்டும் மீண்டும் நிலைக்கண்ணாடியில் தனது அழகைப் பார்த்தாள்.

“நமது அரண்மனையில் இருக்கும் போதே, இதே மாதிரி ஒரு ஹாரத்தினை செய்து...” - நீலாக்ஷீ கூற, சிவஸ்கந்தனின் பிடரியில் மயிர்க்கூச்சம் எடுத்தது.

இதே மாதிரி ஒரு ஹாரத்தினை செய்து - என்று துவங்கிய மனைவியின் வாயைச் சட்டென்று தனது கையால் பொத்தினான். நீலாக்ஷி என்ன சொல்ல நினைத்தாளோ? இதே மாதிரி ஒரு ஹாரத்தை செய்து தான் அணிந்து கொள்வேன் என்று கூற முற்பட்டாளோ அல்லது இதே மாதிரியில் ஒரு ஹாரத்தைச் செய்து அசலுக்கு பதிலாக பெட்டகத்தில் ஸ்ரீதள மணியாக வைக்கப் போகிறேன் என்று கூற நினைத்தாளோ, அந்த அத்திமலையானுக்குத் தான் வெளிச்சம். அவள் தெய்வகுற்றத்திற்கு ஆளாகாதபடி அவளது வாயை மூடிவிட்டான், சிவஸ்கந்தன். அவளிடமிருந்து ஹாரத்தினை பறித்து மீண்டும் வஸ்திரத்தில் சுற்றி, பெட்டகத்தில் வைத்தான்.

“அத்திமலையானின் ஹாரம், நீலா. அவன் உக்கிரம் நிறைந்தவன். அதனை நாம் போட்டுப் பார்ப்பது தவறு!”

சிவஸ்கந்தன் கஜானா அதிகாரியை அழைத்து அவன் வசம் பெட்டகத்தை ஒப்புவித்தான்.

“அதிகாரியே! நாங்கள் அத்திமலைத் தேவன் ஆலயத்திற்குப் போகும்

https://telegram.me/aedahamlibrary

வழக்கம் இல்லை என்பதால் இங்கே ஸ்ரீதள மணியை தருவித்து அதைக் கண்டோம். மற்றபடி வேறு காரணங்கள் இல்லை. இந்த விஷயம் வெளியே தெரிய வேண்டாம். நீ சென்று இதனை விஷ்ணுகோபனிடம் பத்திரமாக சேர்த்துவிடு!" என்று சிவஸ்கந்தன் கூற, அதிகாரி தலையசைத்துவிட்டு அங்கிருந்து அகன்றான்...

விஷ்ணுகோபன் நீராடி தயார் செய்து கொண்டு, பூசனைகளைச் செய்தபின் பயபக்தியுடன் ஸ்ரீதள மணி வைக்கப்பட்டிருந்த பெட்டகத்தை தலையில் வைத்துக் கொண்டு ஊர்வலமாகப் புறப்பட்டான். அதற்குள் சிவஸ்கந்தனும், நீலாக்ஷீயும் பட்டத்து யானையில் ஏறி ராஜவீதியை வலம் வந்து ஒத்தாடையான் ஆலயத்தை நோக்கிச் செல்லத்துவங்கினர்.

விஷ்ணுகோபன் ஊர்வலமாக அத்தியூரை அடைந்து ஆலயத்தினுள் நுழைந்து பட்டர்கள் வசம் ஸ்ரீதளத்தை ஒப்புவித்தான். அதனைப் பெற்றுக்கொண்ட பட்டர்கள் அவனுக்கு மரியாதைகள் செய்து அவனுக்கு பரிவட்டம் கட்டி மாலைகளைச் சூடினர். சரியாக அங்கு நின்ற வீரகொசுவன் திடீரென்று ஆவேசத்துடன் தன்னை மறந்து ஓலமிடத்துவங்கினான்.

“இனி புதிய மன்னனாக விஷ்ணுகோபன்தான் திகழ்வான். சிவஸ்கந்தவர்மன் நாசத்தைத் தேடிக் கொண்டான்...” என்று வீரகொசுவன் வெறியாட்டம் ஆடி முழக்கமிட, அனைவரும் திடுக்கிட்டு, செய்வதறியாது ஒருவரையொருவர் பார்க்க, தனது அண்ணனுக்கு தவறான தகவல் போய்விடப் போகிறதே என்று விஷ்ணுகோபன் அச்சமுற்றான். அந்த சூழ்நிலையிலிருந்து விரைவில் விலகிவிட நினைத்தவன், பட்டர்களைப் பார்த்தான்.

"சுவாமி! ஸ்ரீதள மணியை சாற்றுங்கள். நான் தரிசித்து விட்டு, அண்ணனின் வைபவத்தில் பங்கேற்க வேண்டும்!" விஷ்ணுகோபன் சொல்ல, பட்டர், ஸ்ரீதள மணியை அத்திமலைத் தேவனின் மார்பில் பூட்டினார்.

அதே நேரம் –

சிவஸ்கந்தனும், நீலாக்ஷீயும் பயணித்துக்கொண்டிருந்த பட்டத்து யானையின் செவிகளில் மத நீர் பெருகத் துவங்கியது. யானை நிலை தடுமாறி, பிளிறிக் கொண்டே ஓட, தனது கையில் இருந்த அங்குசத்தால் அதன் மத்தகத்தை திருகியபடி அதனை அடக்க முயன்றான், அதன் பாகன். ஆனால் அந்த யானையோ, கோபத்துடன் தனது துதிக்கையால்

https://telegram.me/aedahamlibrary

பாகனைச் சுற்றி வளைத்துத் தூக்கி எங்கோ வீசியது. அலறலுடன் அவன் சென்று விழுந்தான். யானை வேகமாக ஓடத்துவங்க, நீலாக்ஷீ அலறியபடி நிற்க முயல, அம்பாரியிலிருந்து நிலை தடுமாறி சரிந்து யானையின் மீதிருந்து விழுந்து மண்டை உடைந்து ஸ்தலத்திலேயே உயிர் நீத்தாள். யானையின் மத்தகத்தின் மீது அமர்ந்து அதனைக் கட்டுப்படுத்த முயன்றான், சிவஸ்கந்தன். ஆனால் அவனையும் சுற்றி வளைத்த அந்த யானை அவனை கீழே தூக்கிப் போட்டு, அவனது தலையின் மீது தனது காலை பதித்து மிதித்துக் கொன்றது.

அத்திமலைத் தேவனின் ஶ்ரீதள மணியை தொட்டது தவறு என்பதை அவன் புரிந்து கொண்ட அதே நேரம், அவனது சிந்தனையோட்டத்தை ஒரேடியாக நிறுத்தியது, அந்த யானை...

அத்திமலையான் சந்நிதியில் பரிவட்டம் கட்டிக் கொண்ட வேளை, வீரகொசுவன் கூறியது போன்று மன்னராக மகுடம் சூட்டப்பட்டான், விஷ்ணுகோபன். அத்திமலையானை அவமதித்ததற்கு சிவஸ்கந்தன்[1] அத்தியாலேயே உயிர் இழந்திருந்தான், என்று ஊர்மக்கள் பேசிக்கொண்டிருந்தனர். அத்திகிரி என்றால் யானை மலைதானே?

[1] சிவஸ்கந்தவர்மன் தொடர்புள்ள தலபுராணக் கதை ஒன்று அலசி யதோக்தகாரி என்கிற சொன்ன வண்ணம் செய்த பெருமாள் கோயிலில் உள்ளது. கணிக்கண்ணன் என்பவர் பெரும்புலவர். வைணவ ஆழ்வார்களில் ஒருவரான திருமழிசை ஆழ்வாரின் சீடர். சிவஸ்கந்தவர்மன் கணிக்கண்ணனை தன்னை புகழ்ந்து பாடச்சொல்ல, அவர் மனித புகழ்ச்சி செய்ய மாட்டேன் என்று மறுக்க, சிவஸ்கந்தன் அவரை நாடு கடத்துகிறான். கணிக்கண்ணன் ஆழ்வாரிடம் விடைபெற்று கிளம்ப, ஆழ்வார் நானும் உன்னுடன் வருகிறேன் என்று கூறிவிட்டு, அபனித்த பெருமானிடம், 'கணிக்கண்ணை' போகின்றான், நானும் போகின்றேன் நீயும் உன் பைந்நாகப் பாயை சுருட்டிக் கொண்டு கிளம்பு' என்று கூற சொன்ன வண்ணன் செய்கிறார் பெருமாள். தனது தவறை உணர்ந்து, மன்னன் கணிக்கண்ணனுக்கு விதித்த தண்டனையை விலக்கிக் கொள்கிறான். ஒரு இரவு, கணிக்கண்ணன், திருமழிசை ஆழ்வார், அபனித்திருந்த பெருமாள் மூவருமே பாலாற்றங்கரையில் ஊருக்கு வெளியே நின்றதால், அந்த இடத்திற்கு ஓரிரவு இருக்கை என்று பெயர் வந்தது. இன்று அந்தப் பகுதி ஓரிக்கை என்று அழைக்கப்படுகிறது.

*****

https://telegram.me/aedahamlibrary

# 30. காஞ்சியை நோக்கிப் பாயும் கடற்கோள்

திரையன் ஏரி [1]
பாலாறுதான் பாயாமல் சிறிது ஓய்வெடுக்கிறதோ என்று எண்ணும்படியாக கண்ணுக்கெட்டிய தூரம் வரை அந்த ஏரியில் நீர் நிறைந்து காணப்பட்டது நான் எத்தனை காலம்தான் கரை தாண்டாமல் குமரிப் பெண்ணாகவே இருப்பது. ஏரியின் கரைகளை உடைத்துக்கொண்டு எட்டும் தூரத்தில் பாயும் வேகவதி தாயிடம் சென்று சேர்ந்தால், அவள் என்னை எனது காதலன் சமுத்திர ராஜனிடம் கொண்டு சேர்ப்பாள். நான் கரையைக் கடந்து வரட்டுமா என்று கேட்பது போல ஏரியின் நீரலைகள் கரையில் மோத, வேண்டாம். ஏரிக்கரையில் நின்றிருக்கும் மரங்களில் நாங்கள் கூடு கட்டி எங்கள் சந்ததியரை வளர்த்துக் கொண்டு இருக்கிறோம். கரையை உடைத்துக் கொண்டு வெளிவராதே என்பது போன்று கூவும் பட்சிகள் என்று அந்தப் பகுதியே ரம்மியமாகக் காணப்பட்டது.

அந்த ஏரியின் கரையில் அழகிய மண்டபம் ஒன்று இருந்தது. வாழை, கமுகு, மற்றும் நுங்கு போன்றவை தோரணங்களாகக் கட்டப்பட்டு, பட்டுத் துணிகளால் மண்டபம் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மண்டபத்தின் முன்பாக அழகிய வண்ண மாவுகளை குழைத்து கோலம் வரையப்பட்டிருந்தது. மண்டபத்தின் ஒரு பக்கலில் அமர்ந்து வைணவர்கள் சிலர் வேத அத்தியயனம் செய்து கொண்டிருந்தனர்.

மண்டபத்தில் இருந்த அத்திமலையான் விக்கிரகத்திற்கு திருமஞ்சனம் நடந்து கொண்டிருந்தது. திரையன் ஏரியின் நீரை குடங்களில் சேந்தி வந்து அவனுக்கு அபிஷேகம் செய்து கொண்டிருந்தனர். சூக்தங்களின் அத்தியயனம் ஒருபுறம், பறவைகளின் இனிய கூவல்கள் மறுபுறம், திரையன் ஏரியைச் சுற்றி இருந்த மரங்கள் சாமரமாக இனிய காற்றை வீசி, தேவராஜன் அமுது செய்வதற்காக அருகிலிருந்த பந்தலில் தயாரிக்கப்பட்ட அட்கார அடிசிலின் மணத்தை பரப்பிக்கொண்டிருந்தது. மண்டபத்தின் முதல் படியில் நின்று அபிஷேகத்தைக் கண்டு களித்துக்கொண்டிருந்த பல்லவ மன்னன் விஷ்ணுகோபன் [2] தன்னை மறந்த நிலையில் இருந்தான்.

மன்னன் அபிஷேகத்தில் லயித்திருக்க, அவனது ராஜகுரு

https://telegram.me/aedahamlibrary

வித்யவினிதர்[3] வேத பாராயணம் செய்து கொண்டிருந்த வைணவர்களுக்கு அருகே அமர்ந்து, அவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

வித்யவினிதரை அறியாதவர்கள் இருக்க முடியாது. பல்லவ தேசத்தின் மிகச்சிறந்த கல்வியாளர். முக்கூடல் கடிகையின் தற்போதையத் தலைவரும் கூட. தனது மேதாவிலாசத்தால் காஞ்சியை தாண்டி, சோழம், சேரம் மற்றும் பாண்டியம் வரை புகழ் பெற்றிருந்தார், வித்யவினிதர்தான் விஷ்ணுகோபனை அழைத்துக் கொண்டு திரையன் ஏரிக்கு வந்திருந்தார். சில காலமாகவே, முக்கூடல் கடிகைக்கு வடபுலத்தில் இருந்து வரும் அறிஞர்கள் தெரிவிக்கும் விஷயமே, மன்னன் சமுத்திரகுப்தனை பற்றிதான். பிரித்வி பந்தனம் என்கிற பெயரில் அவன் பரதகண்டத்தின் தேசங்களை கைப்பற்றி வருகிறான் என்கிற தகவல் வித்யவினிதருக்கு கவலையை தந்து கொண்டிருந்தது. சமுத்திரகுப்தனின் கடைசி இலக்காக காஞ்சி நகரம் இருக்கும் என்பதை யூகித்திருந்தார். விஷ்ணுகோபன் நல்லவன்தான். ஆனால் போர் கலைகளில் வல்லவன் என்று கூற முடியாது. ஒருகால் சமுத்திரகுப்தன் படையெடுத்து வந்தால், அதனை எதிர் கொள்ள முதலில் அவனுக்கு மனதிடம் வேண்டும் என்பதால்தான் அவனுக்கு அத்தியூரான் அருள் உள்ளதாகக் கூறி, அவனை ஆலய வைபவங்களுக்கு அழைத்து வந்து கொண்டிருந்தார்.

அவனுள் தான் ஒரு விசேடப் பிறவி என்னும் எண்ணத்தை ஏற்படுத்தி, போரில் அவனை சாதிக்கச் செய்ய வேண்டும் என்று நினைத்து அதன்படி செயலாற்றிக் கொண்டிருந்தார், வித்யவினிதர்.

அர்ச்சகர்கள் குங்குமப்பூ குழைவை தேவராஜனுக்கு பூசி, அவருக்கு முன்பாக கண்ணாடியை வைத்துக் காட்டி, பிறகு சகஸ்ர கலச அபிசேகத்தைச் செய்யத் துவங்கினார்கள். மன்னன் அபிஷேகத்தில் லயித்திருந்த நேரம் -

வடக்கிலிருந்து வந்து ஒத்தாடை அரண்மனையினுள் நுழைந்தது ஒரு புரவி. அதன் மீது இளங்குமரன் ஒருவன் அமர்ந்திருந்தான். அவனைக் கண்டதுமே அரண்மனை அதிகாரிகள் அவனை இனம்கண்டு கொண்டனர்.

"மன்னரை உடனே காண வேண்டும்!”

புரவியில் இருந்து இறங்குவதற்கு முற்பட்ட அந்தக் குமரனிடம்

https://telegram.me/aedahamlibrary

தென்பட்ட பதற்றத்தைக் கண்டு திகைத்தனர் அரண்மனை அதிகாரிகள்.

“மன்னர் அரண்மனையில் இல்லை! அத்திமலையானின் அபிஷேகத்தைக் காண்பதற்கு திரையன் ஏரி சென்றிருக்கிறார்!” என்று அதிகாரிகள் கூறியதும்தான் தாமதம்.

அந்த குதிரை வீரன் புயலென திரையன் ஏரிக்குப் புறப்பட்டான். வந்த வேகத்திலேயே அந்த இளங்குமரன் திரும்பிச் சென்றதைக் கண்ணுற்ற அரண்மனை அதிகாரிகள் அவன் ஏதோ முக்கிய தகவலுடன் வந்திருப்பதை அறிந்து, மன்னர் அவசர முடிவு ஏதேனும் எடுக்க வேண்டி வந்தால் தாங்கள் தேவைப்படலாம் என்பதை புரிந்து கொண்ட அரண்மனை அதிகாரிகள் சிலர், தங்கள் குதிரைகளில் ஏறி அந்த இளங்குமரனைப் பின்தொடர்ந்தனர்.

அந்த இளங்குமரனின் பெயர் கனகதாரன். அவமுக்தம் [4] நாட்டில் பல்லவத் தூதராகச் செயல்பட்ட சர்குண ஸாரஸ்வதரின் மகன். அவரது காலத்திற்கு பிறகு தந்தையின் பதவியை அவனுக்கு வழங்கியிருந்தான் விஷ்ணுகோபன்.

அமைதியாக அந்த சூழலில் வேத பாராயணத்தை கவனித்துக் கொண்டிருந்த ராஜகுரு வித்யரின் கூர்மையான செவிகள் தொலைவில் ஒலிக்கும் குதிரையின் குளம்படியை கிரகித்துவிட, அவரது புருவங்கள் வியப்பால் உயர்ந்தன.

தனது கைகளை நிலத்தில் ஊன்றியபடி எழுந்தவர், தொலைவில் புழுதியை கிளப்பியபடி ஒரு வெண்புரவி திரையன் ஏரியை நோக்கிப் பாய்ந்து வந்து கொண்டிருப்பதைக் கண்டார். வருவது யாராக இருக்கும் என்று யோசித்தபடி மண்டபத்தைவிட்டு நீங்கி மண் சாலையில் இறங்கி நடந்து சென்றார். தனது புரவியில் பாய்ந்து வந்து கொண்டிருந்த கனகதாரன், ராஜகுருவை கண்டதும், குதிரையின் வேகத்தை மட்டுப்படுத்தி அதனை ஒரு மரத்தின் அடியே நிறுத்திவிட்டு, அப்படியே நிலத்தில் பாய்ந்து குதித்து ஓடி வந்தான். -

"மன்னர் பெருமானை அவசரமாகக் காண வேண்டும். காஞ்சிக்கு ஆபத்து. சமுத்திரகுப்தன் காஞ்சியின் மீது படையெடுக்கத் திட்டமிட்டு இருக்கிறான்.” என்று பெருங்குரலிட்டபடி கூற, வேத பாராயணம் செய்து கொண்டிருந்த வைணவர்கள் திகைப்புடன் எட்டிப் பார்த்தனர். கனகதாரனின் குரலால் ஈர்க்கப்பட்டு விஷ்ணுகோபனும் திரும்பி நோக்க, கனகதாரனைக் கண்டு வியப்புடன் இறங்கி வந்தான்.

https://telegram.me/aedahamlibrary

அபிஷேகம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்ததால், அவர்களின் கவனத்தைத் திருப்ப வேண்டாம் என்கிற பாவனையில் தனது வாயின் மீது விரலை வைத்து கனகதாரனை எச்சரித்தபடி நடந்த விஷ்ணுகோபன், மண்டபத்தைக் கடந்து ஏரியின் கரையில் இயற்கையாகவே அமைந்திருந்த ஒரு திட்டின் மீது ஏறி நின்றான். விஷ்ணுகோபன் ஒரு பாறையின் மீது அமர, அவனருகே அமர்ந்தார், ராஜகுரு.

“இப்போது கூறு, கனகதாரா! ஏன் இவ்வளவு பதற்றம்?”

கனகதாராவின் கண்களில் பயம் தாண்டவமாடியது.

"மன்னா! மகதத்தை ஆளும் குப்த மன்னன், சமுத்ரகுப்தன் பிருத்வி பந்தனம் என்கிற பெயரில் திக்விஜயம் செய்து தேசங்களை குப்தத்துடன் இணைத்து வருகிறான்.” கனகதாரன் கூற, வித்யவினிதர் மன்னனை ஒருமுறை நோக்கிவிட்டு பிறகு மீண்டும் கனகனை தனது இடுங்கிய கண்களால் நோக்கினார்.

“காஞ்சிக்கு ஆபத்து என்று எதை வைத்து அனுமானிக்கிறாய்?”

"ராஜகுருவே! பல வருடங்களுக்கு முன்பாக, நமது பழைய மன்னர் சிவஸ்கந்தரின் காலத்திலேயே சமுத்ரகுப்தன் தனது பிருத்வி பந்தனம் என்கிற [5] திக்விஜயங்களை தொடங்கிவிட்டான். ஆர்யவிருத்தம் பிரதேசத்தை கைப்பற்றி பிறகு தக்ஷிண பதத்தை குறி வைத்துள்ளான்.”

“தற்போது சமுத்ரகுப்தன் எங்கிருக்கிறான்?” யோசனையுடன் வினவினான், விஷ்ணுகோபன்.

"அவமுக்த தேசத்தை கைப்பற்றிவிட்டான். நீலராஜாவுக்கும் அனுக்ரக பட்டயத்தையும் வழங்கிவிட்டான். அதன் பிறகு வேங்கி செல்ல இருக்கிறான். வேங்கியை வீழ்த்திவிட்டு காஞ்சிக்கு வர உள்ளான். ஆனால், முக்கிய தகவல் ஒன்றைச் சேகரித்திருக்கிறேன், மன்னா!” - கனகன் கூறினான்.

“என்ன அது?” - விஷ்ணுகோபன் ஆவலுடன் கேட்டான்.

சாணக்கியனின் தீவிர சீடனாக இருக்கிறான், சமுத்ரகுப்தன். சாணக்கிய நீதியை கரைத்துக் குடித்த ஜைனேபன் என்கிற அந்தணனும், ஹரிசேனன் என்கிற கவிஞனும்தான் அவனது இரு கரங்கள். இருவரையும் மாலவனின் கை சங்கு சக்கரங்களைப் போன்று தனக்கு என்று கூறி வருகிறான். படையெடுத்து வெல்பவனில் மூன்று வகையை

https://telegram.me/aedahamlibrary

[6] அர்த்தசாஸ்திரத்தில் குறிப்பிட்டு இருக்கிறானாம், சாணக்கியன்! லோப விஜயன், அசுர விஜயன் மற்றும் தர்மவிஜயன். கோசல மகாராஜா [7] மகேந்திரன் சமுத்ரகுப்தனிடம் தன்னை கொன்றுவிடும் படி கெஞ்ச, அவனோ 'எனக்கு உனது புகழ்தான் தேவை, உனது நாடு அல்ல!' என்று சமுத்ரகுப்தன் கூறிவிட்டான்.

மனதினுள் ஒருவித நிம்மதி பரவுவதை ராஜகுரு வித்யவினிதரால் தவிர்க்க இயலவில்லை. மன்னன் விஷ்ணுகோபன் போரை தவிர்க்கும் கோழை அல்ல என்றாலும், இப்படி திக்விஜயம் செய்து பிருத்வி பந்தனம் செய்யும் ஒரு சக்கரவர்த்தியின் பலத்திற்கு முன்பாக ஈடாக மாட்டான். பெரும் போர்களை இதுவரையில் சந்தித்திராதவன், விஷ்ணுகோபன். எனவே, தர்மவிஜயன் சமுத்ரகுப்தன் பல்லவத்தை அபகரிக்கவோ, சூறையாடவோ செய்யமாட்டான் என்பது நல்ல விஷயம்தான். அவன் அப்படிச் செய்யப் போவதில்லை என்பது தெரிந்தால், இன்னும் வீரத்துடன் போரிடுவான், விஷ்ணுகோபன் என்று நினைத்தார், வித்யர்.

“வரட்டும்! அவனை ஓட ஓட விரட்டுகிறேன்! பிருத்வி பந்தனத்தை தடுத்து நிறுத்திய தேசமாக காஞ்சி புகழ் பெறட்டும்!” விஷ்ணுகோபன் கூற, சற்றே அசந்து போய் அவனை நோக்கினார், வித்யர்.

"பலே விஷ்ணுகோபா! சமுத்ரகுப்தன் காஞ்சியை தாண்டிச் செல்லக் கூடாது. அவனுக்கு நாம் தடுப்புச் சுவர் அமைப்போம்!" வித்யவினிதர் தனது பங்குக்கு வீரவசனம் பேசினார்.

"நாம் தடுப்புச் சுவர் அமைக்க வேண்டியதில்லை, அரசே. காரணம் காஞ்சியைக் கடந்து அவன் தெற்கே செல்வதாக இல்லை. இன்னும் சொல்லப் போனால் காஞ்சியை அடைவதற்காகத்தான் அவன் குறுக்காக இருந்த அத்தனை தக்ஷிணபத தேசங்களையும் வென்றான்.” கனகன் கூற, மன்னரும், ராஜகுருவும் அதிர்ந்தார்கள்.

“என்ன கூறுகிறாய்?” ராஜகுருவின் குரலில் லேசான நடுக்கம் தோன்றியது.

"அவமுக்த அரசன் நீலராஜாவும், சமுத்ரகுப்தனும் பேசுவதை நான் இந்தச் செவிகளால் கேட்டேன் நீலராஜாவுக்கு அனுக்ரக பட்டயம் வழங்கிய போது சமுத்ரராஜன் கூறிய வார்த்தைகள் இவை.

“அவமுக்த அரசரே! உங்கள் நாட்டை பொறுத்தவரை நான் லோப விஜயனோ, அசுர விஜயனோ அல்ல! வெறும் தர்ம விஜயன்தான். ஒரே

https://telegram.me/aedahamlibrary

ஒரு நாட்டைத் தவிர மற்ற நாடுகளுக்கு நான் தர்ம விஜயன். அந்த ஒரு நாட்டிற்கு மட்டும் நான் லோப விஜயன். அது சாணக்கியன் பிறந்த நாடான பல்லவ காஞ்சி. மற்ற நாடுகளுக்கு நான் வெறும் தர்ம விஜயன்” என்று கூறியதை எனது செவிகளால் கேட்டேன்." கனகன் கூறியதும் மற்ற இருவரின் முகங்களும் விகாரமாக மாறியது.

“லோப விஜயனா? காஞ்சியில் அவனுக்கு என்ன தேவையாம்?” ராஜகுருவின் குரலில் சுரத்தே இல்லை.

"சாணக்கியனின் தாசன் சமுத்ரகுப்தன். அவனது பெயரில்தான் சாம்ராஜ்யத்தையே வைத்திருக்கிறான். அவனுக்கு வேறு என்ன தேவை? காஞ்சியின் ஜீவ நாடியான தேவ உடும்பர ரகசியத்தை பெறுவதற்குத்தான் அவன் அவ்வளவு தொலைவில் இருந்து வருகிறான். அவன் ப்ருத்வி பந்தன திக்விஜயத்தை காஞ்சியில் முடித்துக்கொண்டு உலக சக்கரவர்த்தியாக அஸ்வமேத யாகம் செய்யப் போகிறானாம்!” - கனகன் கூறியதும், விஷ்ணுகோபனின் சப்த நாடியும் ஒடுங்கியது.

தனது ஆட்சி காலத்தில் தேவ உடும்பரம் பறிபோய் விடுமோ? கூடாது! விடவும் மாட்டேன். அந்த தீரா பழிக்கு நான் ஆளாகக் கூடாது. பதற்றத்துடன் தொலைவில் தெரிந்த அத்திமலையைப் பார்த்தான். அருகே தெரிந்த பழமுதிர்சோலை மலையை பார்த்தான். முக்கூடல் கடிகையை பார்த்தான். கடைசியாக, திருமஞ்சனத்தை போக்யமாகக் கண்டருளிக் கொண்டிருந்த தேவராஜப் பெருமாளைப் பார்த்தான்.

"அத்திமலையானே. உன்னை நீயே காப்பாற்றி கொள்!” விஷ்ணுகோபன் வேண்ட, புன்சிரிப்புடன் நின்றிருந்தான், அத்திமலைத் தேவன்.

“உடனே மந்திராலோசனையை நடத்த அரண்மனைக்குப் போவோம்! சமுத்ரகுப்தனின் படைகளை எதிர்கொள்ள நமது படைகள் தயாராகட்டும்!” விஷ்ணுகோபன் கட்டளையிட்டுவிட்டு, தனது புரவியை நோக்கி நடக்க, மற்ற இருவரும் அவனைப் பின்தொடர்ந்தனர்.

பக்தியுடன் சற்று முன்பு வரை அமைதியாக நின்ற மன்னன், வீராவேசத்துடன் புறப்பட்டுச் செல்வதை கண்ணுற்ற பட்டர்களும், வேத பாராயண வைணவர்களும், குழுமியிருந்த பொதுமக்களும் திகைப்புடன் அவர்கள் போவதைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

'என்ன நடக்கிறது? போர் வருகிறதா? அத்தி இருக்க கத்திக்கு ஏன் பயப்பட வேண்டும்?' மனதிற்குள் நினைத்த பட்டர்கள் தொடர்ந்து

https://telegram.me/aedahamlibrary

சகஸ்ர கலச திருமஞ்சனத்தை நடத்திக் கொண்டிருந்தனர்.

[1] காஞ்சிபுரம் வாலாஜாபாத் சாலையில் சென்னையை நோக்கி வரும் போது, ஸ்ரீபெரும்புதூர் செல்வதற்கு ஒரு சாலை பிரியும். அந்தச் சாலையில் திரும்பியதும் நான்கு கிலோ மீட்டர் தொலைவில் ஒரு ஏரி காணப்படும். அதுதான் திரையன் ஏரி. அத்திமலைத் தேவனிடம் பக்தி பூண்ட திரையன் என்கிற சங்ககால அரசன், அத்திமலையான் ஆலயங்களுக்கு நிவந்தனங்களை தந்து இந்த ஏரியை வெட்டினான். திரையன் வெட்டிய ஏரி திரையன் ஏரி. இன்றும் வரதராஜ பெருமாள் இங்கே எழுந்து அருள்கிறார். தற்போது திரையன் ஏரி தென்னேரி என்று மருவிவிட்டது.

[2] சந்திரகுப்தன், சாணக்கியன், அசோகன் மற்றும் தசரதனின் ஆட்சி காலங்கள் கி.மு. என்பதால், சங்ககால மன்னர்களான கரிகாலன் மற்றும் பல்லவ இளந்திரையன் ஆகியோர் கிறிஸ்துவின் சமகாலம் என்றே கொள்ள வேண்டியுள்ளது. இளந்திரையனின் மகன் சிம்மவர்மன் ஆட்சி காலம் கி.பி.275 300 என்று கணக்கிடப்பட்டுள்ளது. அதன்படி கரிகாலனின் மகன்கள் நலங்கிள்ளி மற்றும் நெடுங்கிள்ளி ஆகியோரும் அதே காலத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். பல்லவ சிம்மவர்மனின் மகன் சிவஸ்கந்தவர்மன். அவனது ஆட்சிகாலம் கி.பி. 300 - 330. அவனது சிற்றப்பன் மகன்தான் இந்த விஷ்ணுகோபன். இவன் கி.பி. 330 - 360 வரையில் ஆட்சி செய்திருக்கிறான். சமுத்ரகுப்தன் கி.பி. 330 - 355 வரையில் ஆட்சி செய்திருப்பதால், விஷ்ணுகோபன் ஆட்சி செய்கையில் கி.பி.350யில் சமுத்ரகுப்தன் காஞ்சியின் மீது படையெடுத்து வந்திருக்க வேண்டும்.

சிம்மவர்ம பல்லவன் ஆட்சி காலம் (275-300 கி.பி.)

சிவஸ்கந்தவர்ம பல்லவன் ஆட்சி (300-330 கி.பி.)

விஷ்ணுகோபன் பல்லவ ஆட்சி (330-360 கி.பி.)

சமுத்ரகுப்தன் படையெடுப்பு (350 கி.பி.)

[3] காஞ்சியின் மேற்கே கூரம் என்கிற ஒரு புகழ்பெற்ற ஸ்தலம் உள்ளது. இங்கே கூரத்தாழ்வார் என்கிற வைணவ ஆச்சாரியார் பிற்காலத்தில் அவதரித்தார். இந்த கூரத்திற்கு போகும் வழியில் கஜப்ரிஷ்டம் என்கிற சிற்றூர் இருந்தது. கஜப்ருஷ்டம் என்றால் யானையின் பின்பாகம். அத்திமலைக்கு பின்புறமாக இந்தப் பகுதி திகழ்ந்ததால் இந்தப் பகுதிக்கு

https://telegram.me/aedahamlibrary

கஜப்ருஷ்டம் என்கிற பெயர் அளிக்கப்பட்டது. யானையின் பின்பாகம் என்கிற பொருள் (அத்திமலையின் பின்பாகம் என்பதால், அத்திமலையான் கிழக்கு நோக்கி நின்றவன் என்பதற்கு மற்றொரு ஆதாரம் இந்த ஊர்) இந்த ஊரைச் சேர்ந்தவர்தான் விஷ்ணு கோபனின் ராஜகுரு வித்யவினிதர். இங்கே வித்யவினித பல்லவ பரமேச்வரம் என்கிற கோவிலை எழுப்பிய வித்யவினிதர் இந்த ஆலயத்தில் அயன் (பிரம்மா), அரி(மாலவன்) அரன் (சிவன்) மூவருக்கும் சந்நிதிகளை அமைத்தார். வித்யவினித பல்லவ பரமேச்வரத்தின் மூலமாக அத்தியூர் வைணவர்களையும், ஒத்தாடை சைவர்களையும் இணைக்கும் முயற்சியை செய்தார். அவர் ராஜகுருவாக பதவியேற்றதும், விஷ்ணுகோபனை 'மன்னன் என்பான் அனைவருக்கும் பொதுவானவன்' என்கிற எண்ணத்தை அவனிடம் வலியுறுத்தி, அத்திமலையான் மற்றும் ஒத்தாடையான் இருவரையும் சமமாக பாவிக்கச் செய்தார்.

[4] அவமுக்தி என்கிற தேசத்தை பற்றி பிரமாண்ட புராணத்தில் குறிப்பிடப்படுகிறது. கௌதமி நதியின் கரையில் இந்த தேசம் இருப்பதாகக் கூறப்படுகிறது. கௌதமி நதிதான் பிற்காலத்தில் கோதாவரி என்று அழைக்கப்பட்டது. அவமுக்தி தேசத்தை நீலராஜா என்கிற மன்னன் ஆண்டு வந்தான். அவனது சபையில் பல்லவத் தூதனாகச் செயல்பட்டான், கனகதாரன். சமுத்திரகுப்தன் குறித்த கல்வெட்டுகளில் (எண் 46) தட்சிணத்தில் உள்ள கௌதமி நதியின் கரையில் உள்ள அவமுக்தி தேசம் என்று குறிப்பிடுகிறது. நீலராஜா ஆண்ட ராஜமுக்தம் என்றும் இந்த அவமுக்தி தேசம் அழைக்கப்பட்டது. எனவே, இது கோதாவரி கரையில் உள்ள ராஜ முந்திரியை குறிப்பதாகத் தெரிகிறது.

[5] ஆரியவ்ருத்தத்தில், கோசலம், மகாகாந்தாரம், குரளம், பிஸ்த்த புறம், கொட்டுரம், குபேரம், பலகம், தேவாராஷ்ட்ரம் மற்றும் குஸ்தலபுரம் ஆகியற்றை வீழ்த்தினான்.

அலகாபாத் ஸ்தம்ப குறிப்புகளில், சமுத்ரகுப்தன் தெற்கு பிரதேசங்களை கைப்பற்றி, சரணடையச் செய்த மன்னர்களை விடுவித்து அவர்களுக்கு அனுக்ரக பட்டயத்தை அளித்தான் என்று கூறப்படுகிறது. அவை:

1. Vyaghra-raja of Mahakantara

2. Mantaraja of Kurala

https://telegram.me/aedahamlibrary

3. Mahendragiri of Pishtapura

4. Svamidatta of Kottura

5. Damana of Erandapalla

6. Vishnugopa of Kanchi

7. Nilaraja of Avamukta

8. Hastivarman of Vengi

9. Ugrasena of Palakka

10. Kubera of Devarashtra

11. Dhananjaya of Kusthalapura

எனவே, முதலில் ஆரியவ்ருத்தம் என்கின்ற Indo-Gangetic பகுதிகளை கைப்பற்றிவிட்டு, மத்திய பிரதேச, ஓடிசா காடுகளின் வழியாக தஷிண பதம் என்கிற தெற்கே வந்து, கடற்கரை ஓர சாம்ராஜ்யங்களைக் குறி வைத்தான். மேலே குறிப்பிடப்பட்ட சாம்ராஜ்யங்கள் அனைத்துமே கடற்கரையோர சாம்ராஜ்யங்கள்தான். ஒவ்வொரு மன்னனையும் சரணடையச் செய்து அனுக்ரக பட்டயம் ஒன்றை வழங்கி அவர்களின் ஆதரவை பெறுகிறான். அர்த்தசாஸ்திரத்தில் சாணக்கியர் அனுக்ரகம் என்கிற தலைப்பில் கைப்பற்றிய நாட்டை சூறையாடாமல் அவர்களது நன்மதிப்பை பெற்றால் ஒரு மன்னன் எளிதாக சக்கரவர்த்தி ஆகலாம் என்று கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த அனுக்ரக பட்டயத்தைத்தான் சமுத்ரகுப்தன் தன்னைச் சரணடைந்த மன்னர்களுக்கு வழங்கினான்.

[6] சாணக்கியர் தனது அர்தசாஸ்திரத்தில் படை எடுத்து வருபவர்களை மூன்று வகையாகப் பிரித்துள்ளார்.

லோப விஜயன்: கைப்பற்றப்பட்ட நாட்டின் செல்வங்களைச் சூறையாடுபவன். அசுரவிஜயன்: கைப்பற்றப்பட்ட நாட்டை தனது நாட்டுடன் இணைப்பவன். தர்ம விஜயன்: வெற்றியின் புகழை மட்டும் எடுத்துக்கொண்டு, கைப்பற்றப்பட்ட நாட்டை மீண்டும் எதிரிக்கே திருப்பி தருபவன்.

https://telegram.me/aedahamlibrary

[7] கோசல அரசன் மகேந்திரனிடம் சமுத்ரகுப்தன் கூறியதை, காளிதாசன் தனது ரகுவம்சத்தில் தர்மத்தின் வடிவமான ரகு (அரசன்) கோசல மகேந்திரனின் புகழை மட்டுமே பறித்தான், நாட்டை அல்ல என்று பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது. இப்போதைய சத்தீஸ்கார் மாநிலம்தான் அன்றைய கோசல தேசம். மகாகாந்தாரம் கூட இன்றைய சத்தீஸ்கார் மாநிலத்தின் பஸ்தார் பகுதிதான். கோசலம் என்கிற சத்தீஸ்கார், மகாகாந்தாரம் என்கிற பஸ்தார், குராலா ஆகியவற்றை ஒன்றன் பின் ஒன்றாக சமுத்ரகுப்தன் கைப்பற்றி வந்தான் என்று அலகாபாத் தூண் கல்வெட்டுகள் தெரிவிப்பது பூகோள ரீதியாக ஒத்து வருகிறது. குரல்லா பகுதியை மந்தராஜா என்பவன் ஆண்டு வந்தான். தற்போதைய குராலா, ஆந்திராவில் சிராலா என்று அழைக்கப்படுகிறது. வேங்கியை சமுத்ரகுப்தன் கைப்பற்றிய போது அதனை ஆட்சி செய்தது அத்திவர்மன் (ஹஸ்திவர்மன்). இவன் பல்லவத்தின் ஒரு கிளை மன்னன் என்பது வியப்பை தரும் விஷயம். தேவ உடும்பர அத்திவரதனின் பெயரைக் கொண்ட அவனது நாட்டின் உள்ளே நுழைந்த சமுத்ரகுப்தன் அரசனின் பெயரைக் கேட்டதும் வந்த வழியே சென்றுவிட்டதாக குறிப்புகள் உள்ளன.

பிஸ்த்தபுறம் இப்போது ஆந்திராவில் உள்ள பீத்தாபுரம். கோட்டூரா தராது ஸ்ரீகாகுளத்தில் உள்ள கொத்தூர். ஏரண்டபல்லா இப்போது எரண்டபள்ளி என்று அழைக்கப்படுகிறது. இது விசாகப்பட்டினம் அருகில் உள்ளது. அங்கிருந்து அவமுக்தம் என்கிற ராஜமுந்திரிக்கு வந்த சமுத்ரகுப்தன், பிறகு வேங்கியை நோக்கி வந்தான்.

வேங்கி சரித்திரத்தில் மிகவும் பழமை வாய்ந்த இடத்தை பெற்றது. அத்திமலைத் தேவன் முதல் பாகத்தில் அஸ்வத்தாமா தனக்கு பிறந்த இரட்டை குழந்தைகளில் தொண்டைச் செடி சுற்றியிருப்பவனை தீர்த்தயாத்திரைக்கு அழைத்துச் செல்ல குழந்தையை வேமுலத்தில் (கடப்பாவில்)விட்டுச் செல்ல, அவன் அங்கேயே ஒரு சாம்ராஜ்யத்தை உருவாக்குகிறான். வேங்கியை தனது தலைநகராக அறிவிக்கிறான். புலி சோமன் என்கிற அவனது வாரிசுகள் வேங்கியை ஆளுகின்றனர். சமுத்ரகுப்தன் வேங்கியை கைப்பற்றிய போது அதனை ஆண்டவன் அத்திவர்மன். அவன் பெயரைக் கேட்டதும், அவனை ஒன்றும் செய்யாமல் வந்த வழியே சமுத்ரகுப்தன் சென்றுவிடுகிறான். வேங்கி இப்போது ஆந்திராவில் பெடவேகி என்று அழைக்கப்படுகிறது.

வேங்கியிலிருந்து காஞ்சிக்கு வரும் வழியில் பாலக்கா என்கிற பகுதியை கைப்பற்றுகிறான் சமுத்ரகுப்தன். அந்த தேசத்தை உக்ரசேனன் என்கிற

https://telegram.me/aedahamlibrary

மன்னன் ஆட்சி செய்கிறான். பல்லவ கல்வெட்டுகள் மற்றும் செப்பேடுகளில் பாலகாடம் என்று இந்தப் பகுதி குறிப்பிடப்பட்டுள்ளது. J. Dubreuil என்கிற சரித்திர பேராசிரியர், சமுத்ரகுப்தன் கைப்பற்றிய பாலக்காவும் பல்லவர்களின் பாலகாடம் ஆகிய பகுதிகளும் ஒன்றே என்று கூறியுள்ளார். குழந்தை இல்லாத பல்லவ மன்னன் சிவஸ்கந்தன் தனது சிற்றப்பன் மகன் விஷ்ணுகோபனை பட்டத்து இளவரசனாக அறிவித்தது பாலகாடத்தில்தான். இதனை உருவபள்ளி நிவந்தன கல்வெட்டு ஒன்று ஊர்ஜிதம் செய்கிறது. இப்போதைய பாலக்காடு என்று சிலர் இதனை தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நெல்லூர் பகுதியில் உள்ள உதயகிரி மற்றும் வெங்கடகிரி (புடவைக்கு புகழ் பெற்ற இடம்) நடுவே பாலகாடம் இருந்திருக்கிறது. தற்போது இதனை பாக்கை என்று அழைக்கிறார்கள்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 31. ஊனமாகிய ஹூனம்

பிருத்வி பந்தனம் என்கிற தனது திக்விஜயத்தை சமுத்ரகுப்தன் தொடங்கி ஆண்டுகள் பல ஓடிவிட்டன. தனது பராக்கிரமத்தால் நூற்றுகணக்கான நாடுகளை தன்னிடம் சரணாகதி அடையச் செய்து கொண்டிருந்தான். சாணக்கியர் கூறியது போல் அவனது படைகள் கடற்கோளினால் சமுத்திரம் பொங்குவது போல தேசங்களை விழுங்கிக் கொண்டிருந்தது. கத்தியின்றி, இரத்தமின்றி யுத்தத்தைத் தொடுத்து அனுக்ரக பட்டயம் வழங்கி தேசங்களை குப்தத்துடன் இணைத்துக் கொண்டிருந்த வேளை…

எப்போது ஒரு மன்னன் தனது கையை கண்களுக்கு மேலாக வைத்து, கண்ணுக்கு எட்டிய தூரம் வரை தனக்கு எதிரிகளே தென்படவில்லை என்று சொல்கிறானோ, அவனது நாசியின் கீழேயே ஒரு எதிரி தோன்றுவான் என்பதுதானே சரித்திரம். திக்விஜயம் செய்து கொண்டிருந்த சமுத்ரகுப்தன் தன்னையும் அறியாமல், ஒரு கொடிய எதிரியை வருங்காலத்திற்கு உருவாக்கிக் கொண்டிருந்தான்.

ஆரியாவிருத்தம் என்கிற மத்திய தேசங்களை கைப்பற்றிய பிறகு, தெற்கே செல்லும் எண்ணத்துடன் மகாகாந்தாரம் [1] பகுதிக்குள் நுழைந்தான்.

மகாகாந்தாரம் அதிக வனப்பகுதிகளைக் கொண்டது. இங்கேதான் ஸ்வேத ஹூனர்கள் [2] என்கிற நாடோடி கும்பல் அதிகாரம் செய்து வந்தனர்.

சமுத்ரகுப்தனின் படைகள் மகாகாந்தாரத்தில் அன்றைய இரவை கழிக்க முடிவு செய்தன. கடைசியாக சமுத்ரகுப்தன் கைப்பற்றியிருந்த கோசல தேசத்தின் படை வீரர்களும், இப்போது அவனது படையில் இணைக்கப்பட்டிருந்தனர்.

கோசலப் படைத்தலைவன் ராஜசுந்தரன் சமுத்ரகுப்தனிடம் ஓடி வந்தான்.

"சக்கரவர்த்தி! இந்த வனாந்திரத்தில் தங்குவது ஆபத்து. நாம் தொடர்ந்து செல்வதே உசிதம். இது ஸ்வேத ஹூனர்கள் வசிக்கும் பகுதி. எப்போது அவர்கள் தாக்குவார்கள் என்பதை யூகிக்க முடியாது. திடீரென்று முற்றுகை இட்டு, கொள்ளையடிப்பது அந்த நாடோடி கும்பலின் வழக்கம்!” - ராஜசுந்தரன் கூற, சமுத்ரகுப்தன் அவனை அலட்சியமாக

https://telegram.me/aedahamlibrary

நோக்கினான்.

“நாடோடிகள்தானே. அவர்களை ஓட வைப்போம்!” சமுத்ரகுப்தன் கூற, படை வீரர்கள் ஆரவாரம் செய்தனர். சமுத்ரகுப்தன் கட்டளையைத் தொடர்ந்து, அந்தக் காட்டிலேயே கூடாரங்களை எழுப்பினர், பணியாளர்கள்.

சமுத்ரகுப்தன் மிகவும் உற்சாகத்துடன் காணப்பட்டான். ஆரியவிருத்தம் என்கிற வடதேசங்கள் அனைத்தையும் அடிபணிய வைத்து, வடபுலத்தின் பொருந்திய சக்கரவர்த்தியாகத் திகழ்ந்தான். இனி தட்சிண தேசங்களுக்கு திக்விஜயம் செய்யப் போகிறான். குறிப்பாக, சாணக்கியர் பிறந்த காஞ்சியைத் தனது வசப்படுத்தி தேவ உடும்பர இரகசியத்தைக் கைப்பற்ற வேண்டும் என்கிற உத்வேகம் அவனுக்கு அதிகரித்துக் கொண்டே இருந்தது. ஜைனேபன் மற்றும் ஹரிசேனாவுடன் தனது தட்சிண திக்விஜயத்தைப் பற்றி ஆலோசித்துக் கொண்டிருந்தான்.

நடுநிசி... குப்தனின் படைகள் உறங்கத் துவங்கிய வேளை. திடீரென்று 'ஊ... ஊ...' என்கிற ஊளையிடும் ஒலிகள் கேட்க, நரிக்கூட்டம்தான் தங்கள் முகாமில் நுழைந்துவிட்டதோ என்கிற நினைப்பில், படை வீரர்கள், பரபரப்புடன் கூடாரத்தில் இருந்து வெளியே வர, ஸ்வேத ஹூனர்கள் தீப்பந்தங்களுடன் மரங்களின் விழுதுகளில் ஊசலாடியபடி முகாமில் பாய்ந்து குதித்தனர். கூடாரங்களுக்கு தீ வைப்பதும், எதிர்பட்ட வீரர்களின் மீது அம்பு எய்வதுமாக இருக்க, சற்றும் தாமதிக்கவில்லை, சமுத்ரகுப்தன். தனியொருவனாக, களத்தில் குதிக்க, முதலில் தடுமாறிய படை வீரர்களும் சுதாரித்துக் கொள்ள, தங்களது வாள் வீச்சினால் ஸ்வேத ஹூனர்களைத் திணற அடித்தனர்.

சக்கரவர்த்தியின் படைகளை இனியும் தங்களால் எதிர்கொள்ள முடியாது என்பதைப் புரிந்து கொண்ட ஸ்வேத ஹூனர்களின் தலைவன் மகிபாலன் மகா காந்தாரக் காட்டிலிருந்து தங்கள் ஜாகையைத் தூக்க வேண்டியதுதான் என்று தனது நாடோடி மக்களிடம் அறிவித்தான்.

சமுத்ரகுப்தன் தட்சிணத்தினுள் கால் வைப்பதற்கு முன்பாக ஸ்வேத ஹூனர்களை முதலில் தட்சிணத்திற்கு விரட்டிவிட்டான். இயற்கை அழகும், தெய்வ சிந்தனையும் மட்டுமே கொண்டிருந்த தட்சிணப் பகுதியைக் கொலை, கொள்ளை, கடத்தல்களை புரியும் மகாகாந்தாரக் காடுகளில் இருந்து குடிபெயர்ந்த ஸ்வேத ஹூனர்களின் கையில் சிக்க வைத்தான், சமுத்ரகுப்தன். மகாகாந்தாரக் காடுகளில் இருந்து குடிபெயர்ந்த ஸ்வேத ஹூனர்கள் உதயகிரி மற்றும் சந்திரகிரி [3]

https://telegram.me/aedahamlibrary

காடுகளில் குடிபுகுந்தார்கள்.

மகிபாலன் சந்திரகிரியில் இருந்து கொலை கொள்ளைகளில் ஈடுபட, வேங்கடத்திற்குச் செல்பவர்கள் அவனுக்கு அஞ்சி வேங்கடம் செல்வதையே தவிர்த்தனர்.

சந்திரகிரி பகுதியில் முகாமிட்டிருந்த போதுதான், ஹூனர்களின் பூர்வ குடியான சீனாவின் ஜின்ஜியாங் மாகாணத்திலிருந்து மோஷோ என்னும் அவர்களது குலகுரு தனது சீடன் லேவூவுடன் வந்தார். மோஷோ என்றால் துன்பங்களே அனுபவிக்காதவர் என்று சீன மொழியில் பொருள். லேவூ என்றால் இடியொலிக்கும் படை என்பது பொருள். மோஷோ மந்திரதந்திரங்களையும், வர்மப் போர் கலையையும் கரைத்துக் குடித்தவர். மனிதர்களின் நாடிச்சக்கரங்களைக் கட்டுப்படுத்தி அவர்களை அடிமைப்படுத்துபவர். லேவூ - வைக் காண மகிபாலனுக்கு சற்று அச்சமாகவே இருந்தது... இம்மியும் மனித உணர்வுகளே அற்று, கொடூரத்தை எப்போதும் வெளிப்படுத்திக் கொண்டிருந்தான். ஊர்ந்து கொண்டிருந்த சர்ப்பம் ஒன்றை அப்படியே கையிலெடுத்து அவன் கடித்துத் தின்பதை கண்ட மகிபாலனின் குடியில் இருந்த பெண்கள் அலறியடித்தபடி ஓடினர். -

மோஷோ மற்றும் உதவியாளர் லேவூவின் வருகை தனக்கு யானை பலத்தைக் கொடுத்துவிடும் என்று மகிபாலன் எண்ணினான்.

அன்றிரவு –

ஜின்ஜியாங் மாகாணத்தில் இருந்து வெகு நாட்கள் பயணித்ததால் களைப்பாகக் காணப்பட்ட தனது குலகுரு மோஷோவுக்கு விருந்து ஒன்றை அளித்தான், மகிபாலன்.

மோஷோ மகிபாலனை யோசனையுடன் நோக்கினார். “உனது பெயர் விசித்திரமாக இருக்கிறதே மகீ. நமது குடியைச் சேர்ந்தவர்களின் பெயர் போல அல்லாமல், பரத கண்ட மக்களின் பெயரைப் போன்று இருக்கிறதே? ஏன் அப்படி?” - மோஷோ வினவினார்...

"எனது மூதாதையர்கள் கிழக்கு காஷ்மீரத்தில் இருந்த போதே, இப்பகுதி மக்களின் பெயர்களை ஏற்றுக் கொண்டனர். செஞ்சீனர்களாக இருந்த அவர்கள், இப்பகுதி பெண்களை மணந்து வெண்ணிறத்தில் குழந்தைகளை பெற்றுக்கொண்டனர். எனவே இப்போது நாங்கள் ஸ்வேத ஹூனர்கள் என்று எங்களை அழைத்துக் கொள்கிறோம்! நாங்கள் நாடோடிகளாக எந்தப் பகுதிக்குச் செல்கிறோமோ, அந்தந்தப்

https://telegram.me/aedahamlibrary

பகுதியின் பெயர்களை வைத்துக் கொள்கிறோம். இங்கே வருவதற்கு முன்பாக, மகாகாந்தார பகுதியில் வசித்தோம். அந்த ஊர் மன்னனின் பெயர் மகாசேனன். எனவே, எனது தந்தை எனக்கு மகிபாலன் என்று பெயரிட்டார்!" -- மகிபாலன் கூறினான்.

"அடையாளங்களை மாற்றிக் கொள்ளுங்கள். ஆனால் உங்கள் ஆணிவேரை துண்டித்துக் கொள்ளாதீர்கள். உங்கள் மார்க்கத்தின் தலைமை பீடம் ஜின்ஜியாங்கில் உள்ளது என்பதை மறக்காதீர்கள்." மோஷோ புத்திமதி கூறினார்.

அவர் இவ்வாறு கூறிக் கொண்டிருந்த போதே, ஸ்வேத ஹூனர்களின் ஒற்றன் சுப்ரன் பரபரப்புடன் ஓடி வந்தான். காடு மேடுகளிலும், நகரங்களிலும் திரிந்து யார் யார் எங்கே பயணிக்கின்றனர்? யாரை கொள்ளையடித்தால் அதிக திரவியங்கள் கிடைக்கும் போன்ற விவரங்களைச் சேகரித்து வருபவன் சுப்ரன்.

மகிபாலனைப் பணிந்துவிட்டு, மோஷோவையும், லேவூவையும் ஓரக்கண்களால் அளந்தபடி பேசத் துவங்கினான்.

"தலைவா! நம்மை மகாகாந்தாரத்தில் இருந்து விரட்டி அடித்த மகத மன்னன் சமுத்ரகுப்தன், இப்போது தெற்கே வந்து கொண்டிருக்கிறான். அவனது இலக்கு பாலகாடம். அதன் பின்னர் காஞ்சிக்குச் செல்ல இருக்கிறான். காஞ்சியில் ஏதோ விலை மதிப்பில்லாத, உலகில் எங்கேயும் இல்லாத பொக்கிஷம் ஒன்று இருக்கிறதாம். அதனை கைப்பற்றப் போகிறானாம். படை வீரர்கள் பேசிக் கொண்டார்கள்!" சுப்ரன் கூற, மோஷோவுக்கு அவன் கூறியதை விளக்கினான், மகிபாலன்.

"அது என்ன பொக்கிஷம்? விவரங்களைச் சேகரிக்கச் சொல்!" - மோஷோ கூற, லேவூ சுவாரசியம் இன்றி கண்களை மூடி மரம் ஒன்றின் மீது சாய்ந்து அமர்ந்தான்.

"அந்த பொக்கிஷத்தை பற்றிய விவரங்களுடன் வா!" மகிபாலன் கூற, தலையசைத்துவிட்டு அங்கிருந்து அகன்றான், சுப்ரன்.

தனது படையெடுப்பினால் இரத்தப்பெருக்கும் இல்லை. தேசங்களும் சூறையாடப்படவில்லை என்று ஹரிசேனாவைக் கொண்டு கவிதைகளை இயற்றிக் கொண்டிருந்தான், சமுத்ரகுப்தன். ஆனால், அவனால் சந்திரகிரிக்கு விரட்டப்பட்ட மகிபாலன் அவனுக்கு பதிலாக கொடூரச் செயல்களில் ஈடுபட்டு, தட்சிண மக்களைத் துன்புறுத்தத்

https://telegram.me/aedahamlibrary

தொடங்கி இருந்தான்.

வேங்கி மற்றும் பாலகாடத்தைக் கைப்பற்றிவிட்ட உற்சாகத்தில், அடுத்தது காஞ்சி என்று சமுத்ரகுப்தன் அறைகூவல்விட, படை வீரர்கள் "ஹோ...” என்று குரல் எழுப்பி வெற்றி ஆரவாரம் செய்தனர்.

சந்திரகிரி மலையடிவாரத்தில் இருந்து புறப்பட்ட அந்த ஆரவாரம் ஹஸ்திகிரி என்கிற அத்திமலையில் எதிரொலித்தது.

[1] காந்தாரம் என்பது காந்தாரி பிறந்த தற்போதைய ஆப்கானிஸ்தானில் உள்ள காந்தார்! கானம் பாடுவது என்கிற சொற்களில் உச்சரிக்கும் கா இந்த காந்தாரத்திற்கு பிரயோகப்படுத்த வேண்டும். மகாகாந்தாரம் என்பது வேறு. இது தற்போதைய சத்தீஸ்கர் மாநிலத்தின் ஒரு பகுதி. காய்கறி என்கிற சொல்லில் வரும் 'கா'வை மகா-காந்தாரத்தில் பிரயோகிக்க வேண்டும். இன்றைய சத்தீஸ்கர் வழியாகத்தான் சமுத்ரகுப்தன் ஒரிசா காடுகளை அடைந்து பிறகு தெற்கே வந்தான். அனேகமாக இன்றைய பஸ்தார் பகுதிதான் அன்றைய மகா காந்தாரமாக இருந்திருக்கக் கூடும்.

[2] ஹூனர்கள் ஹிமாலய மலையின் அடிவாரத்தில் வசித்த நாடோடி மனிதர்கள். வேட்டையாடி பிழைக்கும் மிகக் கொடிய மனது படைத்தவர்கள். சீனாவின் ஜின்ஜியாங் மாகாணத்தில் இருந்து காஷ்மீரத்தின் கிழக்கே குடிபுகுந்தவர்கள். இவர்களுக்கென்று நாடு கிடையாது. குருக்ஷேத்திர போரில் ஹூனர்கள் பங்கு கொண்டதாக மகாபாரத குறிப்புகள் உண்டு. வால்மீகி இராமாயணத்தின் பாலகாண்டத்தில் வசிஷ்டரிடம் இருந்த நந்தினி பசுவை கைப்பற்ற விஷ்வாமித்திரர் முயன்ற போது அவருக்கு காட்டில் வசிக்கும் ஹூனர்கள் உதவுவதாக காட்டப்பட்டுள்ளது. ஹூனர்கள், சகர்கள், யவனர்கள், பவுண்டரர்கள், சீனர்கள், கிருதர்கள், கசர், சிவுகர், புளிந்தர் ஆகிய மிலேச்சர்கள் பாரத போரில் பங்கேற்றதாகவும் கூறப்படுகிறது. மகாபாரதத்தை காட்டிலும் இராமாயணம் பழமையானது என்பதால் ஹூனர்கள் மிகவும் தொன்மையான நாடோடி இனம் என்பது தெரிய வருகிறது.

ஸ்வேத ஹூனர்கள் என்பவர்கள் ஹூனர்கள் என்கிற நாடோடி கும்பலின் ஒரு பிரிவு இனம்தான். ஹூனர்கள் சிவப்பு நிறத்தைக் கொண்டிருந்தவர்கள். செஞ்சீனர்கள் வசித்த ஜின்ஜியாங் மாகாணத்தைவிட்டு வந்து காஷ்மீரத்தில் குடிபுகுந்த போது தங்களை சீன ஹூனர்களிடம் இருந்து பாகுபடுத்திக் காட்டுவதற்காக தங்களை

https://telegram.me/aedahamlibrary

ஸ்வேத ஹூனர்கள் என்று இவர்கள் கூறிக் கொண்டார்கள். பின்னாளில் நாடோடி கும்பலான இவர்கள் ஆர்யாவிருத்தம் என்கிற வடதேசங்களின் காடுகளில் குடிபுகுந்தார்கள். அங்ஙனம்தான், மகாகாந்தாரம் என்கிற பஸ்தார் காடுகளிலும் குடியேறியிருக்க வேண்டும்.

[3] உதயகிரி ஆந்திராவின் வேங்கடகிரி அருகிலும், சந்திரகிரி திருப்பதி போகும் வழியிலும் இருக்கிறது. மகிபாலன் சந்திரகிரி காட்டிலும், அவனது சகோதரன் பிருத்விபாலன் உதயகிரி காட்டிலும் ஜாகை அமைத்தார்கள். இந்த இரு மலைக்காடுகளின் நடுவே உள்ளது சமுத்ரகுப்தன் கைப்பற்றிய பாலகாடம் என்னும் தேசம்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 32. முக்கூடலில் இரு குப்தர்கள்

சமுத்ரகுப்தன் பாலகாடம் [1] தேசத்தை வீழ்த்தி அதன் மன்னன் உக்ரசேனனிடம் அனுக்ரக பட்டயத்தை அளித்துவிட்டு, சுக்ல ஏகாதசி தினம் வரை பாலகாடம் நகரிலேயே தங்கியிருந்தான். வடக்கிலும், வடகிழக்கிலும், மத்தியிலும் நூற்றுக்கணக்கான தேசங்களை அடிபணிய வைத்த போது இல்லாத பரபரப்பு இப்போது பாலகாடம் பகுதியைவிட்டுப் புறப்படும் போது சமுத்ரகுப்தனை பற்றிக் கொண்டது.

இங்கிருந்து சாணக்கியன் அவதரித்திருந்த காஞ்சிபுரிக்கு அல்லவா போகிறோம்! தேவ உடும்பர ஆற்றலைக் கொண்டு மவுரியத்தை நிறுவிய அந்த ஒப்பற்ற ராஜதந்திரியின் பிறப்பிடத்திற்குப் போகிறோம் என்பதை நினைத்தவுடன் அவனுக்கு புல்லரித்தது. அவனைப் போலவே ஹரிசேனாவும், ஜைனேபனும் மிகவும் ஆர்வத்துடனும் பரபரப்புடனும் காணப்பட்டதாக அவனுக்குப் பட்டது.

"காஞ்சியை ஆளும் விஷ்ணுகோப பல்லவன் எப்படிப்பட்டவன்? நம்முடன் போர் புரிவானா? சமாதானத்தை விரும்புவானா?" ஹரிசேனாவை கேட்டான்.

“எப்படி இருந்தாலும் ராஜ்யத்தை நீங்கள் திரும்பி தந்துவிடப் போகிறீர்கள் என்கிற போது அவன் எதற்கு போர் புரியப் போகிறான்? வழக்கம் போல், காஞ்சியை கைப்பற்றி மீண்டும் விஷ்ணுகோபனிடம் திருப்பி அளித்த தர்ம விஜயன் என்று உங்களைப் போற்றி புகழ் பாடி கவிதை புனைந்து கல்வெட்டில் பதிவு செய்ய வேண்டியதுதான்!” ஹரிசேனா சிரித்தான்.

“தவறு ஹரி! இந்த முறை நீ கவிதையை மாற்றி எழுத வேண்டியிருக்கும்! காஞ்சிக்கு நான் தர்ம விஜயனாக போகவில்லை. லோப விஜயனாகத்தான் போகிறேன்!” சமுத்ரகுப்தன் கூறினான்.

ஹரிசேனா சமுத்ரகுப்தனை வியப்புடன் பார்க்க, ஜைனேபனும் சமுத்ரகுப்தனை விநோதமாகப் பார்த்தான்.

“என்ன சொல்லுகிறாய், ஆர்யா? லோப விஜயனாக காஞ்சிக்குப் போகிறேன் என்கிறாயே! அதன் பொருள்?”

அவனை ஆர்யன் என்று அழைக்கும் உரிமையை பெற்றிருந்தனர், ஹரிசேனாவும், ஜைனேபனும். என்ன இருந்தாலும், குருகுல நண்பர்கள்

https://telegram.me/aedahamlibrary

அல்லவா!

“ஆம்! விஷ்ணுகோபனிடம் மட்டும் நான் எனது தயாள குணத்தைக் காட்டப் போவதில்லை. காரணம், அவனிடம் உள்ள ஒரு பொருள் எனக்கு வேண்டும். என்னுடைய நட்பும், ஆதரவும் அவனுக்கு வேண்டுமென்றால், அவன் அந்தப் பொருளை எனக்கு பரிசாக அளிக்க வேண்டும்! இல்லையேல், அவனுக்கு எனது அனுக்ரக பட்டயம் கிடைக்காது. காஞ்சியில் இரத்தம் பெருகியோடச் செய்தாவது, அந்தப் பொருளை அபகரிப்பேன்!” திட்டவட்டமாகக் கூறினான் சமுத்ரகுப்தன்.

"அந்தப் பொருள் என்ன என்பதை நான் அறியலாமா, ஆர்யா?” மிருதுவான குரலில் கேட்டான் ஜைனேபன்.

“வேறு என்ன கேட்பேன், ஜைனேபா? பிருத்வி பந்தனத்தை வெற்றிகரமாக முடித்து அஸ்வமேத யாகம் செய்ய விரும்பும் மன்னன் வேறு எதைக் கேட்பான்? சகல வளங்களையும் பெருகச் செய்யும், அஸ்வமேதம் செய்பவரை மன்னர்களுக்கு மன்னராகத் திகழ வைக்கும் ஆற்றல்மிக்க தேவ உடும்பர மரத்தைத்தான் நான் கேட்கப் போகிறேன். எனது நட்புக்கு விலையாக அதனைத் தரப்போகிறான், விஷ்ணுகோபன்.”

விதிர்விதிர்த்துப் போனான், ஜைனேபன். “வேண்டாம் ஆர்யா இந்த விஷப்பரீட்சை! அத்திமலைத் தேவன் அக்னியில் உண்டானவன். நெருங்குபவரை தகிப்பவன். அவனை ஆராதிக்க வேண்டுமே தவிர, அடைய எண்ணக் கூடாது என்று அதர்வண சாகை சொல்வதை மறந்துவிட்டாயா?” - ஜைனேபன் கூறினான்.

“அந்த அதர்வண சாகையை நானும் கற்றிருக்கிறேன். அஸ்வமேத யாகம் போன்ற நல்ல காரியங்களைச் செய்ய தேவ உடும்பரத்தை பயன்படுத்தலாம். அவனை அடிமைபடுத்தி அதன்மூலம் தீய காரியங்களைச் செய்தால்தான் அவன் தண்டிப்பான் என்று அறிந்திருக்கிறேன்! ஆகவே அந்த அச்சுறுத்தல் என்னிடம் செல்லாது!” - சமுத்ரகுப்தன் கூறினான்.

அதுவரை அவன் ஏதோ விளையாட்டாக உரையாடிக் கொண்டிருப்பதாகத்தான் நினைத்துக் கொண்டிருந்தனர் ஹரியும், ஜைனேபனும். ஆனால், இம்முறை தேவ உடும்பரத்தைக் கைப்பற்றும் மனநிலையில் அவன் உறுதியாக உள்ளான் என்பதை அறிந்ததும் சற்றே அச்சம் கொண்டனர். முடிந்தால் அவனது மனநிலையை மாற்ற முடியுமா என்று கூட யோசித்தனர். அத்திமலை மகாத்மியத்தை அவர்கள்

https://telegram.me/aedahamlibrary

ஜகந்நாத குருகுலத்தில் கற்றிருந்ததால், சமுத்ரகுப்தனின் முடிவை விஷப்பரீட்சையாக நினைத்தார்கள்.

'அத்திமலைத் தேவனே! உன்னை அபகரிக்க நினைக்கும் எங்கள் ஆர்யனை தண்டித்துவிடாதே. அவனுக்கு நல்ல அறிவை கொடுத்து அவனை திருத்திப் பணிகொள்!' என்றெல்லாம் வேண்டிக் கொண்டிருந்தார்கள்...

ஏறக்குறைய அதே பிரார்த்தனையை, அத்திமலைத் தேவனின் சந்நிதியில் செய்து கொண்டிருந்தான், விஷ்ணுகோபன்.

‘சமுத்ரகுப்தன் படை எடுத்து வருகிறான். தெற்கில் உள்ள தேவ உடும்பர விருட்சத்தில் தான் உனது தேகம் சமைக்கப்பட்டிருக்கிறது. அது தெரிந்தால், சமுத்ரகுப்தன் உன்னை அபகரித்துச் செல்லக்கூடும். உன்னை நீயே காப்பாற்றிக் கொள், அத்திமலையூரா! நீ எங்களை காப்பாற்றவில்லையென்றாலும் பரவாயில்லை!' மனம் நெகிழ பிரார்த்தித்தான், விஷ்ணுகோபன்.

சமுத்ரகுப்தனின் படைகள் காஞ்சியினுள் புகுந்து முக்கூடலை அடைந்தன. அன்றிரவு முக்கூடலிலேயே முகாமிடுவது என்று தீர்மானிக்கப்பட்டது. முக்கூடலின் அழகைக் கண்டு பிரமித்து நின்றான், சமுத்ரகுப்தன். பாலாறு, செய்யாறு, வேகவதி என்கிற மூன்று ஆறுகள் முக்கூடலாக சங்கமிக்க, ஒருபுறம் நரசிங்கபிரான் பழமுதிர்சோலை மலையில் கோயில் கொண்டிருக்க, மறுபுறம் திருவேங்கடவன் கோவிலின் தங்கக் கலசங்கள் அஸ்தமன சூரியனின் ஒளியில் தகதகக்க, முக்கூடலின் தெய்வீகமான தோற்றம் சமுத்ரகுப்தனைக் கவர்ந்து விட்டது: முக்கூடல் கரையில் சந்தியா ஆராதனை செய்து கொண்டிருந்த அந்தணர்களை அழைத்து காஞ்சியின் பெருமைகளைக் கேட்க, அவர்கள் காஞ்சி தோன்றிய புராணம், வேகவதியாக ஓடும் சரஸ்வதியின் பெருமை, அவளது உக்கிரத்தை அடக்க பிரம்மன் செய்த அஸ்வமேத யாகம், சாணக்கியன் பிறந்த அத்தியூரின் பெருமை, கரிகாலன் மற்றும் இளந்திரையனின் பெருமைகள் என்று அனைத்தையும் கூற, பிரமிப்பினில் ஆழ்ந்திருந்தான் சமுத்ரகுப்தன். இத்தகைய தெய்வீகமான நாட்டில் தோன்றிய சாணக்கியன் மவுரியத்தை தோற்றுவித்ததில் என்ன ஆச்சரியம்? அர்த்தசாஸ்திரம் இயற்றியதில்தான் என்ன வியப்பு உள்ளது? காஞ்சியில் வாழும் அனைவருமே சாணக்கியனைப் போன்று மேதாவிகளாகவும், ராஜதந்திரிகளாகவும், தெய்வாம்சம் பொருந்தியவர்களாகவும்தானே இருக்கிறார்கள். காஞ்சியுடன் நிரந்தர தொடர்பினை நாம் ஏற்படுத்திக் கொண்டால் என்ன என்று அவனது

https://telegram.me/aedahamlibrary

மனம் நினைக்கத் தொடங்கிவிட்டது.

முக்கூடல் பழமுதிர்சோலை மலையின் பின்பாக கதிரவன் மறைந்து கொண்டிருக்க, முக்கூடல் சங்கமத்தின் கரையில் இருந்த அகன்ற மணற்பரப்பில் கூடாரங்கள் அமைக்கப்பட்டன.

சமுத்ரகுப்தனுக்கு ஒரு கூடாரம். ஹரிசேனா மற்றும் ஜைனேபன் ஆகியோருக்கு சிறிய கூடாரம் ஒன்றும் எழுப்பப்பட, அவற்றைச் சுற்றி இதர போர் பிரதானிகளுக்கும், அரச வைத்தியருக்கும், போர் வீரர்களுக்கும் கூடாரங்கள் அமைக்கப்பட்டன.

நடுநிசி –

தனது கூடாரத்தில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான், சமுத்ரகுப்தன். உறங்கிக்கொண்டிருந்த சமுத்ரகுப்தனின் செவிகளில் திடீரென்று கடல் ஆர்ப்பரிக்கும் ஓசை கேட்க, திடுக்கிட்டு கண்களை திறந்தான். கடலோசை இன்னும் கேட்டுக் கொண்டுதான் இருந்தது. உடன் பலத்த மழை பொழிவதும் கேட்டது. சாதாரண கடலலை வீசும் ஓசை அல்ல. பிரளயகாலத்தில் அமானுஷ்ய ஓலமாகக் காற்றுடன் கலந்து விகாரமாக கேட்குமே, அத்தகைய ஊழிக்காலத்து அஸ்தமிக்கும் ஒலிதான் கேட்டுக்கொண்டிருந்தது.

“ஜைனேபா! ஹரிசேனா!” - குரல் கொடுத்தான், சமுத்ரகுப்தன்.

பதில் இல்லை.

அப்போது –

கடலோசையைத் தாண்டி ஒருவித டமாரம் ஒலிக்கும் சத்தம் கேட்க, வியப்புடன் தனது மஞ்சத்தில் எழுந்து அமர்ந்த சமுத்ரகுப்தன் தனது சால்வையை எடுத்துப் போர்த்திக்கொண்டு உடைவாளையும் எடுத்துக் கொண்டு கூடாரத்தைவிட்டு வெளியேறினான். வெளியே வந்தவன் திகைத்தான். மாலையில் தெய்விகமாக தோன்றிய முக்கூடல் சங்கமமா இது? கலியுகத்தின் முடிவில் எழும் பிரளயம் போல முக்கூடலின் அலைகள் பழமுதிர் சோலை மலையை மறைக்கும் அளவுக்கு பாய்ந்து கொண்டிருந்தது.

மழை பலமாக பெய்து கொண்டிருக்க அந்த இருளில் அவனால் பார்க்கவே முடியவில்லை. கடலோசை பலமாகக் கேட்டுக்கொண்டிருக்க, முக்கூடலில் கடல் எங்கே வந்தது என்று இவன் யோசித்தபடி நிற்க, மின்னல் வெட்டியது. தொடர்ந்து இடி இடிக்க,

https://telegram.me/aedahamlibrary

சமுத்ரகுப்தனது கண்கள் கூசின. கண்களை இறுக மூடித் திறந்தவன் ஒரு காட்சியைக் கண்டான். வெள்ளைப் புரவியில் கையில் வாளுடன் ஒரு சுந்தர புருஷன் அங்கிருந்து புறப்பட்டு மேற்கே நோக்கிச் செல்லத் துவங்கினான். மிக அழகாக இருந்தான் அந்த மனிதன். வெண்ணிற ஆடை அணிந்து ஸ்வர்ணத்தில் ஆபரணங்களை அணிந்திருந்தான் வெண்ணிற புஷ்பமாலை சூடியிருந்தான். நெற்றியில் கஸ்தூரி திலகம் ஒளிர்விட்டது. அவனது புரவி நான்குகால் பாய்ச்சலாக தாவி ஓட, அந்த குதிரை வீரன் தனது வாளினைச் சுழற்றியபடி அதனை செலுத்திக் கொண்டு வந்தான். முன்னேறி வரும் அவனை தடுக்கும் விதமாக தனது வாளினை நீட்டினான், சமுத்ரகுப்தன்.

“நீ இங்கிருந்து செல்ல முடியாது! நீ எனது கைதி... பாடலிபுத்ரத்திற்கு உன்னை பிணைக்கைதியாக என்னுடன் அழைத்துப் போக உள்ளேன். இங்கிருந்து ஒரு அடி கூட நீ எடுத்து வைக்க முடியாது!” - சமுத்ரகுப்தன் கர்ஜிக்க, குதிரை மீது இருந்த அந்த சுந்தர புருஷன் கலகலவென்று நகைக்கிறான்...

“எனது இருப்பிடம் இந்த காஞ்சி நகரம். இங்கிருந்து நான் யார் அழைத்தாலும் வரப்போவதில்லை. உன்னால் என்னை இங்கிருந்து அழைத்துச் செல்ல முடியாது.” என்று கலகலவென்று அந்த குதிரை வீரன் சிரிக்க, இவன் தனது வாளினை அந்த குதிரை வீரனின் இதயப்பகுதியில் வைக்க, திடீரென்று அவன் வானுயர வளர, அவனது - சிரிப்பு நாலாபுறமும் எதிரொலிக்க, "யார் நீ...?” என்று கலவரத்துடன் சமுத்ரகுப்தன் அலற, சட்டென்று அவனுக்கு உறக்கத்திலிருந்து விழிப்பு ஏற்பட்டது.

தான் கண்டது தொடர்ச்சியான கனவு என்பதை அறிந்ததும், எழுந்து தனது மஞ்சத்தில் குழப்பத்துடன் அமர்ந்தான். முகமெல்லாம் வியர்வை வழிய, சற்று காற்றாட கூடாரத்தின் வெளியே சென்று நிற்கலாம் போல இருந்தது. சால்வை ஒன்றை உருவி போர்த்திக் கொண்டவன், உடைவாளுடன் கூடாரத்தைவிட்டு வெளியே நடந்தான். கனவில் கண்டது போன்று மழையும் பெய்துகொண்டிருக்கவில்லை. பிரளயகாலம் போன்று முக்கூடலும் பொங்கிக்கொண்டிருக்கவில்லை.

தான் கண்ட கனவுக்கு பொருள் என்ன? கனவில் குதிரை மீது வந்த அந்த சுந்தர புருஷன் யார்? என்னை இங்கிருந்து யாரும் அழைத்துச் செல்ல முடியாது என்று கூறினானே? ஜைனேபன் தனது கூடாரத்தில் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கக்கூடும். அவனை எழுப்பி தான் கண்ட கனவுக்குப் பொருளை கேட்கலாமா?

https://telegram.me/aedahamlibrary

யோசித்தபடி முக்கூடல் சங்கமத்தை நோக்கி நடந்தான். மூன்று நதிகள் இணையும் அந்த சங்கமத்தில் நீரோட்டம் அதிகமின்றி நிச்சலனமாக இருந்தது.

அப்போதுதான் –

முக்கூடல் சங்கமத்தின் கரையில் ஒரு சிறிய தோணி நிற்பதைக் கண்டான். தோணியின் இரு பக்கங்களிலும் தீப்பந்தங்கள் ஒளிர்ந்துகொண்டிருந்தன. அந்தத் தோணியில் சிறிய பந்தல் போடப்பட்டிருந்தது. அதன் நடுவே ஒரு வயோதிகர் அமர்ந்திருந்தார். செம்மை வண்ணத்தில் சால்வை ஒன்றையும் போர்த்தியிருந்தார்.

அந்த முதியவர் தலையை குனிந்தபடி யாருக்காகவோ காத்திருப்பதாகத் தோன்றியது, சமுத்ரகுப்தனுக்கு! இவன் கரையில் சென்று நிற்க, குனிந்திருந்த அந்த முதியவரின் தலை மெதுவாக நிமிர்ந்தது.

“வந்துவிட்டாயா அருளாளா? இந்த கடுங்குளிரில் இந்த முதியவனை காக்க வைப்பது நியாயமா? குளிர் என்னை வாட்டுகிறது. என்னை சீக்கிரம் எனது குடிலுக்கு கொண்டு விடு?” சமுத்ரகுப்தனை நோக்கி குரல் கொடுத்தார் அந்த முதியவர்.

தன்னை தோணி செலுத்துபவன் என்று அந்த முதியவர் தவறாக நினைத்துவிட்டார், போலும். சமுத்ரகுப்தன் மௌனமாக அவரை நோட்டம் விட்டபடி நின்றான்.

"அருளாளா! பார்த்துக்கொண்டு வாளா நிற்கிறாயே? மகதன் சமுத்ரகுப்தன் படை எடுத்து வருகிறானாம். இந்த சமயத்தில் ஒரு முதியவனை இப்படி தனியாக தவிக்க விட்டுவிட்டு, எங்கு சென்றாய்? எனக்கு முடியவில்லை. உடனே எனது குடிலுக்குச் செல்ல வேண்டும்! இறங்கி தோணியை செலுத்து!” - முதியவர் கட்டளையிட, அவரை பச்சாதாபத்துடன் நோக்கினான், சமுத்ரகுப்தன்.

“சுவாமி! நான் தோணியை செலுத்துபவன் இல்லை. நீங்கள் குறிப்பிட்ட மகத மன்னன் சமுத்ரகுப்தன் நான்தான்...” - சமுத்ரகுப்தன் கூறினான்.

அவனைக் கூர்ந்து கவனித்தார், அந்த முதியவர்.

“பிருத்வி பந்தனம் செய்யும் சமுத்ரகுப்தனா இங்கே நிற்பது? அப்பா! பெரிய ராஜ தரிசனம்தான் எனக்குக் கிடைத்திருக்கிறது. இந்த முதிய வயதில், யாரைக் காண வேண்டும் என்று மனதினில் ஆவல் கொண்டிருந்தேனோ, அவனையும் கண்டுவிட்டேன். அப்பா! எனக்காக

https://telegram.me/aedahamlibrary

ஒரு உதவி செய்யேன். எனது குடில் வேகவதி நதிக்கரையில் உள்ளது. இந்தத் தோணியினை செலுத்தி, என்னை எனது குடிலினில் விட்டுவிடேன்.” - முதியவர் கூறினார்.

சமுத்ரகுப்தன் அமைதியாக யோசித்தபடி முக்கூடலை பார்த்தபடி நின்றான்.

“ஏன் யோசிக்கிறாய் சமுத்ரகுப்தா? தோணியில் ஏறு! ஜெயலட்சுமி தோணியை செலுத்த, சரித்திரக் கடலினில் பயணிப்பவன் நீ. இந்த முதியவனுடன் முக்கூடலில் பயணித்து காலத்தை வீணாக்குவானேன் என்று நினைக்கின்றாயோ? ஒருவேளை, சமுத்திரத்தின் மைந்தன் இந்த முக்கூடலைக் கண்டு அச்சம் கொண்டுவிட்டானோ?” - முதியவரின் குரலில் கேலி தொனித்தது.

“சுவாமி! அச்சம் என்பதே எனது அகராதியில் கிடையாது. சாணக்கியரின் அர்த்தசாஸ்திரத்தை படித்தவனுக்கு அச்சம் எங்கே தோன்றும்? எங்கோ மகதத்தை ஆண்டு கொண்டிருப்பவன், காஞ்சியை காண இவ்வளவு தொலைவு வந்திருக்கிறேன். அதுவும் வழியில் எதிர்பட்ட நூற்றுகணக்கான மன்னர்களை எல்லாம் வென்று அவர்களுக்கு அனுக்ரக பட்டயம் அளித்து வென்று வந்திருக்கிறேன்... எனவே, எனது தயக்கத்தை அச்சம் என்று கொள்ள வேண்டாம். தோணியை செலுத்துவதற்கு முன்பாக ஆற்றின் ஆழத்தை அனுமானித்துக் கொண்டிருந்தேன், அவ்வளவே!" - சமுத்ரகுப்தன் கூறினான்.

“முக்கூடலில் வந்து முகாமிட்டுவிட்டாய். இப்போது ஆழம் பார்த்து என்ன பயன்? மகதத்தில் இருந்து புறப்படுவதற்கு முன்பல்லவா நீ ஆழம் பார்த்திருக்க வேண்டும். சரி! ஆழம் அறியாத மன்னர்கள் அனைவருமே என் உதவியோடுதான் சரித்திரக் கடலைக் கடந்திருக்கிறார்கள். நீயும், என்னுடன் வா! சரித்திர முக்கூடலை நமது தோணியில் கடப்போம்!” - கணீரென்று ஒலித்தது அவரது குரல். சமுத்ரகுப்தன் தோணியில் ஏறி அதனைச் செலுத்தத் தொடங்கினான். முக்கூடல் நீரோட்டத்தின் பாய்ச்சல் உக்கிரமாக இருப்பதைக் கண்டு திகைத்தான்.

"சுவாமி! நதியின் ஓட்டம் ஆவேசமாக உள்ளதே?” - சமுத்ரகுப்தன் கேட்டான்.

குரலை வெளிக்காட்டாமல் இருந்தாலும், அந்த முதியவரின் தேகம் குலுங்கியதில் இருந்து அவர் சிரித்துக் கொண்டிருக்கிறார் என்பது அவனுக்குப் புலப்பட்டது.

https://telegram.me/aedahamlibrary

"பிருத்வி பந்தனம் என்ற பெயரில் தேசங்களை கட்டி வரும் தர்ம விஜயன், தண்ணீரைக் கண்டு அச்சம் கொள்வது தகுமா, சமுத்ரகுப்தா? நூற்றுக்கணக்கான தேசங்களை திக்விஜயம் செய்து பந்தனம் செய்தவன் மூன்று ஆறுகளை பந்தனம் செய்து தோணியை செலுத்துவதா பெரிய விஷயம்? கவலைப்படாதே. நீ பிருத்வியை பந்தனம் செய்வது போன்று நான் தண்ணீரை பந்தனம் செய்பவன். சமுத்திரம் சத்தியத்திற்கு கட்டுப்பட்டது என்று நீதானே கூறினாய். சமுத்திரம் மட்டுமல்ல, இந்த முக்கூடல் சங்கமமும் சத்தியத்திற்கு கட்டப்பட்டதுதான். துணிவுடன் நீ இந்தத் தோணியை செலுத்தலாம்." அந்த முதியவர் கூற, தன்னையும் அறியாமல், சமுத்ரகுப்தன் அவரை உறுத்து நோக்கினான்...

முக்கூடலில் இருந்து பிரிந்த பாலாற்றினைக் கடந்து வேகவதியின் பாதையில் அந்தத் தோணி திரும்பியது. தீப்பந்தங்கள் அந்த முதியவரை இப்போது நன்கு வெளிச்சமிட்டுக் காட்டின.

தள்ளாத வயது இருக்கும் அவருக்கு... பால்யத்தில் அழகுடனும், வாலிபத்தில் மிடுக்குடனும், முதுமையில் கம்பீரத்துடனும் திகழ்ந்திருக்கக் கூடும் அவர். உடல் இருந்த இடத்தில் இப்போது வெறும் கூடுதான் மிஞ்சியிருக்கிறது!

திடீரென்று பேசத்துவங்கினார், அந்த முதியவர்.

"சமுத்திரகுப்தா! இன்று உனக்கு பிறந்த நாள் அல்லவா? நீ சைத்ர அஸ்த நட்சத்திரத்தில் பிறந்தவன் தானே. பொருத்தமான நாளில்தான் என்னுடன் வருகிறாய்!" - அந்த முதியவர் கூற, திடுக்கிட்டான், சமுத்ரகுப்தன்.

இன்று சைத்ர அஸ்தமா? அப்படியென்றால் இன்று அவனது ஜென்ம நட்சத்திரம்தான். அதனை இந்தப் பெரியவர் எப்படி அறிந்து கொண்டார்?

அவன் வியப்புடன் அவரைக் காண, அவனை இன்னும் பிரமிப்பில் ஆழ்த்தினார், பெரியவர்.

"புஷ்பபுரம் எப்படி இருக்கிறது? சித்ரசேனா, சவ்ஷீலா ஆகியோர் எப்படி இருக்கிறார்கள்?" - அந்த முதியவர் கேட்டார்.

அரண்டு போனான், சமுத்ரன். புஷ்பபுரத்திற்கு இவனது பாட்டன் புஷ்யமித்ரா இருக்கும் போதே பாடலிபுத்திரம் என்று பெயர் மாற்றியாகிவிட்டதே. பழைய பெயரில் எனது தலைநகரை

https://telegram.me/aedahamlibrary

அழைக்கிறார்? அசோகனின் அண்ணன் சுசிமாவின் மனைவி சித்ரசேனா மற்றும் அவள் மகள் சவ்ஷீலாவைப் பற்றி விசாரிக்கிறாரே. ஐந்து தலைமுறை முன்பாக நடந்த கதையெல்லாம் இவருக்கு எப்படித் தெரியும்? திகைப்புடன் அவரைப் பார்த்தான்.

“சுவாமி! தாங்கள் எந்த காலத்தில் இருக்கிறீர்கள். அவர்கள் போன இடங்களில் புற்கள் முளைத்து விட்டனவே!” சற்றே கேலியுடன் சொன்னான்.

அந்த முதியவர் சற்று நேரம் மௌனத்தை கடைப்பிடித்தவர் திடீரென்று ஸ்லோகம் ஒன்றை பாடத்துவங்கினார்.

“நவமே தசமே மாஸே பிரவாலய சுத்தி மருதைய

நிஹஸ்ரயதே வான இவ ஜந்துஸ் சித்ரேந சஜ்வர

பதித்தோஹபி ந ஜானத்தி மூர்ச்சிதோஹபி ததஸ் சுயுத்தீம்

சுத்திவத்சய வேகந யோனியந்தரஸ்ய ப்ராணாத்

விஸ்மிருதம் ஞானம் கர்ப்பே யத் சிந்திதம் ஹ்ருதி…''

முதியவர் ஸ்லோகம் சொல்வதை நிறுத்திவிட்டு தனது இடுங்கிய கண்களால், சமுத்ரகுப்தனை நோக்கினார்.

“சமுத்ரகுப்தா! நான் கூறிய பாட்டின் கருத்து புரியவில்லையா? சொல்கிறேன் கேள்! இறந்தவர்களுக்கு எல்லா உணர்வுகளும் அற்றுப் போகும் என்று யார் கூறினார்கள்? ஒரு ஆத்மா மரணம் மூலமாக ஒரு உடலைவிட்டு வெளிவந்தாலும் அதற்கு உணர்வுகள் உண்டு. வெளிப்படுத்த உடல்தான் இருக்காது. ஒருவேளை, அந்த ஆத்மாவுக்கு மறுபிறவி இருந்து வேறு ஒரு உடலின் கர்ப்பத்தில் புகுந்தாலும், அதற்கு முற்பிறவி நினைவுகள் இருக்கும். நான் பாடிய பாட்டின் சாராம்சமே அதுதான். தாயின் கர்ப்பத்தில் இருந்து அம்பு போன்று வெளிவந்து, வரும் வேகத்தில் சுத்தி வாயுவின் தாக்கத்தால் பழைய நினைவுகள் நீங்கி, புதிய பிறப்பின் நினைவுகள் மட்டுமே மனிதனுக்கு மிஞ்சும். ஆனால் பிறவி அறுக்கும் ஆத்மாக்களுக்கு பழைய உணர்வுகள் என்றும் நீடித்திருக்கும்!” என்று விளக்கியபடி வந்தார். அவரது முகச் சுருக்கங்கள் அவரது பார்வையை தடை செய்ய, சற்றே சிரமத்துடன் அவனைக் கூர்ந்து கவனித்தார்.

https://telegram.me/aedahamlibrary

“எனது நினைவுகள் அப்படியே உள்ளன. ராஜநீதி உள்ளவரை எனது நினைவுகளும் அப்படியே இருக்கும்!” என்றவர், மௌனத்தில் ஆழ்ந்தார்.

சமுத்ரகுப்தன் மௌனமாகத் தோணியைச் செலுத்த, அவனை ஏறிட்டுப் பார்த்தார், அந்த முதியவர்.

“சமுத்ரகுப்தா! மகத வீணையை மீட்டினாயா? நிச்சயம் மீட்டியிருப்பாய்? மீட்டியதால்தானே இங்கு வந்திருக்கிறாய்?" அந்த முதியவர் சிரிக்க, தனது இதயமே வாய் வழியாக வெளிவந்து முக்கூடலில் நழுவி விழுந்துவிட்டது போன்று அவரைப் பார்த்தான், சமுத்ரகுப்தன்.

“சுவாமி! தாங்கள் யார்?” - பயத்துடன் வினவினான்.

“இதே அத்தியூரில் பிறந்தவன் தான்... நீ உத்திர மகதத்தில் இருந்த தட்சிண காஞ்சிக்கு வந்தாய். நான் தட்சிண காஞ்சியில் இருந்து உத்திர மகதத்திற்கு வந்தேன். நான் உருவாக்குவதற்கு வந்தேன். நீ அழிப்பதற்கு வந்திருக்கிறாய். நான் தர்ம விஜயன். நீ லோப விஜயன்!”

வெலவெலத்துப் போனான், சமுத்ரகுப்தன்.

“சுவாமி, தங்களது திருநாமத்தை நான் அறியலாமா?” - சந்தேகத்துடன் கேட்டான்.

சரியாக - அத்திமலையில் இருந்து ஓர் ஒளிவட்டம் தோன்றி தோணியில் சென்று கொண்டிருந்த இருவரின் கவனத்தையும் ஈர்த்தது. சமுத்ரகுப்தன் திகைப்புடன் அந்த ஒளியை கவனிக்க, முதியவர் அந்த ஒளியை வெறித்து நோக்கிவிட்டு சற்று நேரம் அமைதி காத்தார்.

தனது மௌனத்தை தொடர்ந்த அந்த முதியவர், பிறகு அவனது கேள்விக்குப் பதில் கூறத்தொடங்கினார்.

“நீ சமுத்ரகுப்தன்! எனது பெயர் சித்ரகுப்தன்! நீ இப்போது ஒரு ஒளிவட்டத்தைக் கண்டாயே! அது புறப்பட்ட இடம்தான் அத்திமலை. காஞ்சியின் பொக்கிஷம் உள்ள இடம். மாலவனான, அத்திமலையானைப் போன்று, நானும் பல அவதாரங்களை எடுத்திருக்கிறேன். ஒவ்வொரு அவதாரத்திற்கும் ஒரு பெயர் உண்டு எனக்கு! இப்போது எனது பெயர் சித்ரகுப்தன்... இதோ... இந்த வேகவதி நதிக்கரையில்தான் நான் ஓடி விளையாடி இருக்கிறேன். நான் சித்திரைப் பௌர்ணமி அன்று பிறந்தவன். எனவே திருமாலையும், சந்திரனையும் குறிக்கும் பெயர்களை இணைத்து எனது பெற்றோர் எனக்கு விஷ்ணுகுப்தன் என்றுதான் பெயரிட்டார்கள். எனது தாயின் அன்புதான்

https://telegram.me/aedahamlibrary

என்னை உலகின் உயரத்திற்கு இட்டுச் சென்றது. தாய் இறந்த பிறகு இதயத்தில் ஈரம் வற்றிவிட்டது. அதன் பிறகு, ஈரத்தை உண்டாக்கியது ஒரு பெண். அவள் பெயர் சித்ரசேனா. அவள்தான் மரணத்தின் பிடியில் இருந்த எனக்குப் பணிவிடைகளைச் செய்து எனக்கு மீண்டும் உயிர் பிச்சை அளித்தாள். அதன் பிறகு, விஷ்ணுகுப்தனான நான் சித்ரசேனாவின் மகன் சித்ரகுப்தனாக மாறினேன். என்னைக் காப்பாற்றிய அவளுக்கு பிரதியுபகாரமாக ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைத்தேன். எனவேதான் மவுரியத்தை உருவாக்கிய நான் சித்ரசேனாவின் வழித்தோன்றல் ஆகிய உனக்கு உதவுவதற்காக இங்கே வந்திருக்கிறேன். சமுத்ரத்தை போன்ற ஒருவன் பொங்கி வருவான் என்று அவளிடம் கூறினேன். இதோ... சமுத்ரம் பொங்கி முக்கூடலில் இப்போது பயணித்துக் கொண்டிருக்கிறது!" - அந்த முதியவர் சொல்ல, கண்களில் கண்ணீர் வழிய, சமுத்ரகுப்தன் தோணியின் துடுப்பினை தனது கட்கத்தில் இடுக்கிக்கொண்டு கரங்களைக் கூப்பினான்.

"சுவாமி! நான் காண்பது கனவா நினைவா? நீர்தான் சாணக்கியன் என்று நினைக்கிறேன். சாணக்கியன் பிறந்த மண்ணை தரிசிக்க வேண்டும் என்றுதான் இவ்வளவு தொலைவு வந்தேன். சமுத்திரம் பொங்கும் என்று ஆசி கூறி எனது பிறப்பிற்கு கட்டியம் கூறிய தங்களை நான் தரிசிப்பேன் என்று நினைத்துக்கூட பார்க்கவில்லை. நான் தங்களை தரிசித்தேன் என்று கூறினால் எனது ஆருயிர் நண்பன் ஜைனேபன் கூட என்னை நம்பமாட்டான்!" - நெகிழ்ச்சியுடன் கூறினான், சமுத்ரகுப்தன்...

"யார் உன்னை நம்ப வேண்டும்? நம்ப வேண்டிய அவசியம் என்ன? என்னைச் சந்தித்தேன் என்று நீ ஏன் மற்றவர்களுக்குக் கூற வேண்டும்? நீ என்னையே நினைத்துக் கொண்டிருக்கிறாய். நான் உன்னை நினைத்தேன். எனவே நமது நினைவலைகள் சேருகின்றன. நீ ஸ்தூல தேகத்தில் இருக்கிறாய். நான் மாயையில் இருக்கிறேன்! அவ்வளவே! நாம் ஒன்றை நினைத்துக் கொண்டே இருந்தால் அதனை சாதித்துவிடலாம் என்பதற்கு நானும் நீயும் உதாரணங்கள். இங்கே வேகவதி கரையில் எளிய வேதிய சிறுவனாக இருந்த நான் ஒரு ராஜதந்திரியாக மாறியதற்கு எனது எண்ணங்கள்தான் காரணம். எண்ணங்களை நிறைவேற்ற ஆற்றலை தேவ உடும்பரம் கொடுத்தது. அதனை அபகரிக்கத்தான் நீ வந்திருக்கிறாய் என்பதும் எனக்குத் தெரியும்.

"பலவந்தமாக அவனை அபகரித்துச் சென்றாய் என்றால், அவனது

https://telegram.me/aedahamlibrary

கோபத்திற்கு இலக்காகி, இருக்கும் இடம் தெரியாமல் போய்விடுவாய்! சினத்தினால் தனது அம்பை எய்து கடலையே வற்றச் செய்வேன் என்று கூறிய இராமனை மறந்தாயோ? கடல் நீரை குடித்து ஜீரணம் செய்த அகத்தியனை மறந்தாயோ? சமுத்திரமாகத் திகழும் நீ ஏன் தீரா அபவாதத்தைத் தேடிக் கொள்கிறாய்? நீ அஸ்வமேத யாகம் செய்வதற்கு உனக்கு தேவ உடும்பரம் தேவை. அவ்வளவுதானே! அதற்கு உதவத்தான் உன்னை அழைத்துச் செல்கிறேன்!" என்ற சித்ரகுப்தர், ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சுட்டிக் காட்டினார்.

"அதோ... அந்த இடத்தில் தோணியை நிறுத்து! அங்கேதான் எனது குடில் இருக்கிறது!" - சித்ரகுப்தர் சொல்ல,

சமுத்ரகுப்தன் அந்த திக்கில் தோணியினை செலுத்தினான். தான் முதலில் இறங்கி சித்ரகுப்தரின் கையைப் பற்றி அவர் இறங்குவதற்கு உதவினான்,

அவரது கை குளிர்ச்சியாக இருந்ததை உணர்ந்தான்.

"சமுத்ரகுப்தா! கர்ப்பத்தில் இருந்து சுத்தி வாயு தாக்கி மண்ணில் விழும் குழந்தை தனது நினைவுகளை மறக்கின்றது. அதன் நினைவில் கடந்த கால சரித்திரங்கள் பதிவாகவில்லை என்பதால் சரித்திரமும், அதை உருவாக்கிய மனிதர்களும் இந்த வையத்தில் வாழவில்லை என்பதாகிவிடுமா? மறதியுடன் வாழும் புதிய மனிதர்கள் பழைய மனிதர்கள் வாழ்ந்ததற்கு ஆதாரம் எங்கே என்று கேட்பார்கள். புராணங்கள், சரித்திரங்கள் எல்லாமே கற்பனை என்றும் வாதிடுவார்கள். அவர்களுக்கு ஏன் பதில் கூற வேண்டும்? உண்மைகள் நமக்கு உறுதியாக புலப்படும் போது அதை ஏன் மற்றவர்களின் மீது திணிக்க வேண்டும். நீயும் நானும் சந்திக்க வேண்டும் என்பது காலக்கட்டாயம் என்பதால் நாம் சந்தித்திருக்கிறோம். இதனை நீ யாருக்கும் நிரூபிக்க வேண்டிய அவசியம் இல்லை. வந்த காரியத்தை முடித்துக்கொண்டு மீண்டும் மகதம் சென்று, அஸ்வமேத யாகத்தை பூர்த்தி செய்து நல்லாட்சி நடத்தி, புகழோடு கரையேறும் வழியைப் பார்!" என்றவர் தொடர்ந்து நடந்தார். சமுத்ரகுப்தன் அவரை பின்தொடர்ந்தான்.

அங்கே ஒரு குடில் காணப்பட்டது. விஷ்ணுகுப்தனும் அவனது பெற்றோர், காஞ்சனகுப்தரும், சானேஷ்வரியும் வசித்த அதே குடில்தான். குடிலினில் இருபுறமும் திண்ணைகள். அதன் மீது ஒரு அம்மிக் கல்லும் குழவியும் நின்றன.

https://telegram.me/aedahamlibrary

"அதோ! அந்த அம்மிக்குழவியை கவனி, சமுத்ரகுப்தா! என்னை பல்லாங்குழி பலகை வாயனாக மாற்றிய அம்மிக்குழவி இதுதான். நமது சரித்திரத்தை பேச கல்வெட்டுகள் பல இருந்தாலும், மகத சரித்திரத்தை மாற்றி அமைத்தது இந்த அம்மிக் கல்தான்!" - சித்ரகுப்தர் கூறினார்.

பல்லாங்குழி பலகை வாயன் என்கிற ஒரு சொல் தானே பரத கண்ட சரித்திரத்தையே தலைகீழாக மாற்றியது. அந்த சொல் உருவாகக் காரணமே திண்ணையில் நிற்கும் அந்த அம்மிக்கல்லும் குழவியும்தானே. உண்மைதான்! ஆயிரம் கல்வெட்டுகள் கூற முடியாத சரித்திரத்தை அந்த அம்மிக் கல்லும், குழவியும் விவரிக்குமே.

மயக்கத்தில் நடப்பவனைப் போன்று சித்ரகுப்தரின் பின்பாக நடந்தான், சமுத்ரகுப்தன்

குடிலினில் நுழைந்த சித்ரகுப்தர் ஒரு பெரிய பானையின் உள்ளே கைவிட்டார். மீண்டும் கையை வெளியே எடுத்த போது அவரது கையில் ஒரு செம்மை வண்ணத்தில் துணி மூட்டை ஒன்று இருந்தது.

“சமுத்ரகுப்தா! இது உனக்குத்தான்! பிரித்து பார்!” என்று அவனிடம் நீட்ட, சமுத்ரகுப்தன் அந்தத் துணி மூட்டையைப் பிரித்தான். உள்ளே அழகிய ஐம் பொன்னால் அமைக்கப்பட்ட அத்திமலைத் தேவனின் விக்கிரகம். உடன் ஒரு ஸ்வர்ண கங்கணம். அவற்றோடு பொன்னிறத்தில் ஒரு பெரிய மரத்துண்டு.

திகைத்துப் போனான், சமுத்ரகுப்தன்.

“சுவாமி...! என்ன இது?”

“நீ தேடும் தேவ உடும்பர அத்தி. அதனுடன் நான் ஆராதித்த அத்திமலைத் தேவனின் பிரதிமை. நான் அணிந்திருந்த ஸ்வர்ண கங்கணம். இவை மூன்றையும் இங்கே குடிலில்தான் மறைத்து வைத்திருந்தேன். தேவ உடும்பரத்தைத் தேடித்தானே நீ வந்திருக்கிறாய். இவற்றை எடுத்துக் கொள்! எனது இரண்டாவது தாய் சித்ரசேனாவின் வம்ச கொழுந்துக்கு, நான் தரும் அன்புப் பரிசு...” சித்ரகுப்தர் கூற, சமுத்ரகுப்தன் கண்ணீருடன் அவரது கால்களில் பணிந்தான்.

"சுவாமி! என்ன பாக்கியம் செய்தேன். மவுரியத்தை உருவாக்கிய சாணக்கியரின் அருள் எனக்குக் கிடைத்து விட்டது. எத்தனை தேசங்களைக் கைப்பற்றினாலும், கிடைக்காத மனத்திருப்தி உங்களது தரிசனத்தால் எனக்குக் கிடைத்துவிட்டது. இனி மனநிறைவுடன்

https://telegram.me/aedahamlibrary

திரும்பிச் செல்வேன்!”

“காஞ்சி என்கிற இந்த அத்தியூர் இருக்கும் வரை உலகம் தழைக்கும். கலியுகம் முடிந்து அத்திமலைத் தேவனே தேவ உடும்பர நாவாய் என்னும் தோணியாக படைப்புக்கு தேவையான உலக வித்துக்களை சுமந்து செல்வான். காஞ்சிக்கு சிரமங்களை ஏற்படுத்தாமல் திரும்பிச் செல்வாய் சமுத்ரகுப்தா! நாம் வந்த தோணியை எடுத்துக்கொண்டு உனது பாசறைக்குத் திரும்பு!”

சித்ரகுப்தர் கூற, அவரை மீண்டும் பணிந்துவிட்டு, தோணியை நோக்கி நடந்தான்.

மறுநாள் காலை –

சங்கொலியின் முழக்கத்தைக் கேட்டு கண்விழித்தான், சமுத்ரகுப்தன்.

ஜைனேபன் அவனது கூடாரத்திற்குள் வந்து திரைச் சீலைகளை விலக்கினான்.

“பொழுது புலர்ந்துவிட்டதா?” நிதானமாக கைகால்களை நீட்டி மடக்கி, இரத்த ஓட்டத்தை சீர்செய்தபடி கேட்டான், சமுத்ரகுப்தன்.

“ஆர்யா! பொழுதோடு எழுந்து போருக்கு தயாராகி, தாமதமாக எழுந்ததற்கு எங்களைக் கடிந்து கொள்வாய் என்று நினைத்தபடி பயத்தோடுதான் வந்தேன். ஆனால் பொழுது விடிந்தும் கூட, ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாய். முதன் முறையாக, எனக்குப் பிறகு நீ கண்விழிக்கிறாய்!” -- ஜைனேபன் கூறினான்.

“அதற்கு காரணம் இருக்கிறது. நான் சாணக்கியரை சந்தித்தேன்!” புளகாங்கிதத்துடன் கூறினான், சமுத்ரகுப்தன்.

"கனவிலா?” என்று ஜைனேபன் கேட்டதும்தான், சடாரென்று எழுந்து மஞ்சத்தில் அமர்ந்தான்.

தான் கண்டது கனவா... நினைவா? இல்லையே! சாணக்கியர் இவனது கையில் செந்நிற வஸ்திர மூட்டை ஒன்றை அளித்தாரே! சமுத்ரகுப்தன் சுற்றிலும் பார்த்தான்.

“என்ன தேடுகிறாய், ஆர்யா?” - ஜைனேபன் கேட்டான்.

"சாணக்கியர் செந்நிறத்தில் எனக்கு ஒரு வஸ்திர மூட்டையை தந்தார். அதைத்தான் தேடுகிறேன்!” சமுத்ரகுப்தன் தனது மஞ்சத்தின் கீழே

https://telegram.me/aedahamlibrary

குனிந்து நோக்கினான்.

“சதா சர்வகாலமும் உனக்கு சாணக்கியன் நினைவு தானா? முரசுகள் ஒலிக்கின்றன. விஷ்ணுகோபன் போர்க்களத்திற்கு கிளம்பிவிட்டதை அவை தெரிவிக்கின்றன இப்போது சாணக்கியனை பற்றி ஏன் சிந்தனை? புறப்படு! பொற்காலம் அழைக்கிறது, ஆர்யா!” - ஜைனேபன் கூற, சமுத்திரகுப்தன் குழப்பத்துடன் எழுந்தான்.

தன்னிடம் மனம்விட்டு அளவளாவி, தேவ உடும்பரம் மற்றும் தனது தந்தை ஆராதித்த விக்கிரகத்தையும், தனது ஸ்வர்ண கங்கணத்தையும் அளித்து தன்னை மகதம் திரும்பிச் செல் என்று அன்புடன் பணித்தார். கனவில் நிகழ்ந்த உரையாடல் கூட இவனுக்கு நினைவில் உள்ளதே. அம்மிக் கல்லையும், குழவியையும் கூட கண்டிருந்தானே. இவ்வளவு தெளிவாகவும், நீண்டும் விளங்கிய தங்களது சந்திப்பு வெறும் கனவுதான் என்பதை சமுத்ரகுப்தனால் ஜீரணிக்க முடியவில்லை.

[1] பாலகாடம் - வெங்கடகிரி மற்றும் உதயகிரி இடையே உள்ள பாக்கை என்கிற பகுதி.

*****

https://telegram.me/aedahamlibrary

# 33. கனவில் கண்டது கையில் கிடைத்தது

அத்திமலையானின் சந்நிதி –

பல்லவ மன்னன் விஷ்ணுகோபன் அத்திமலையானுக்கு விசேட பிரார்த்தனைகளைச் செய்து கொண்டிருந்தான். உடன் ராஜகுரு வித்யவினிதர் கவலையுடன் நின்றிருந்தார்.

'அத்திமலைத் தேவனே! சமுத்திரத்தைப் போன்ற படையுடன் வருகிறான், சமுத்ரகுப்தன். வேகவதியின் ஆவேசம் எனது பல்லவ படைக்கு இருந்தாலும், அவனது படையின் முன்பாக எனது படை சிறுத்துக் காணப்படுகிறது. நான் என்ன செய்வது? உன்னை உயிரைக் கொடுத்தாவது காக்க வேண்டும் என்று எனது ராஜகுரு கூறுகிறார். நீதான் உன்னைக் காப்பாற்றும் சக்தியை எனக்குக் கொடுக்க வேண்டும். தேவ உடும்பர அத்தியான் காஞ்சியைவிட்டு எனது ஆட்சியில் வெளியேறினான் என்கிற அவப்பெயரை எனக்குக் கொடுக்காதே!' - கலக்கத்துடன் மனதினுள் வேண்டிக் கொண்டான்.

விஷ்ணுகோபனின் மனைவி அரசி திவ்யரேகா கவலையுடன் தனது கணவனைப் பார்த்தாள் படையெடுத்து வரும் சமுத்ரகுப்தன் கோட்பாடுகளுக்கு கட்டுப்பட்டவன். இரத்த வெறி பிடித்தவன் அல்லன். சன்மார்க்கத்தைப் போற்றுபவன். அந்தப்புரங்களை சூறையாடமாட்டான். உயிர்களை பலி கேட்கமாட்டான். தேசங்களை அபகரிக்கமாட்டான், என்பதைத் தெரிந்தும், தனது கணவன் எதற்காக இவ்வளவு விசனப்படுகிறான்?

சமுத்ரகுப்தனுடன் போரிட்டு, வென்றால் புகழ், தோற்றால் அமைதி என்று கிடைப்பதைப் பெற்றுக் கொண்டு இருக்க வேண்டியதுதானே. எதற்காக அத்திமலையில் அனைவரின் எதிரே கலக்கத்துடன் நிற்க வேண்டும்?

கணவனை சமாதானம் செய்யும் எண்ணத்துடன் அவனது தோளினில் கைவைத்தாள்.

அனைவரின் பார்வையும் விஷ்ணுகோபனின் மீதே இருந்தது. என்ன முடிவு எடுக்கப் போகிறான்? சமுத்ரகுப்தனுடன் சமரசம் பேசப் போகிறானா இல்லை போர் முரசத்தைக் கொட்டப் போகிறானா?

அபிஷேக பிரார்த்தனையை முடித்ததும் அறிவிப்பினைச் செய்யப் போகிறான், விஷ்ணுகோபன் பல்லவன் என்பதால் அத்திமலையானின்

https://telegram.me/aedahamlibrary

ஆலயத்தில் பெருந்திரளான மக்கள் கூடியிருந்தனர். பாலகாடத்தில் முகாமிட்டிருந்த சமுத்ரகுப்தன் காஞ்சிக்குப் புறப்பட்டு விட்டதாக ஒற்றர்கள் சேதி கொண்டு வந்திருந்தனர். எனவேதான் அத்திமலையில் விசேட பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தான், மன்னன்.

வழக்கமாக அத்திமலையில் காணப்படும் ஆரவாரங்கள் எதுவும் இன்றி ஆலயமே அமைதியாகக் காணப்பட்டது. கூடியிருந்த மக்களும் கவலையுடன் அமைதி காத்தார்கள்.

போர் சூழ்நிலை நிலவுவதால், கிழக்கு கோபுர பிரதான வாயிற்கதவுகள் அடைக்கப்பட்டு திட்டி வாசல் மட்டும் திறந்து வைக்கப்பட்டிருந்தது. பெருந்தேவி தாயார் அவதரித்திருந்த பொற்றாமரை குளத்தருகே இருந்த மண்டபத்தில் மக்களுக்கு, அன்னத்தை விநியோகம் செய்து கொண்டிருந்தார்கள். கிடைத்ததை உண்டுவிட்டு, மன்னனின் முடிவுக்காக ஆங்காங்கே மண்டபத்தில் அமர்ந்திருந்தனர், பொதுமக்கள்.

பிரார்த்தனையை முடித்த விஷ்ணுகோபன், அத்திவரதனின் முகத்தைக் கூர்ந்து கவனித்தான். 'மன்னர்களுக்கு எல்லாம் மன்னனாகத் திகழும் தேவராஜனே? என்ன முடிவு எடுப்பது?' கேள்வியுடன் அவனைப் பார்த்தான்.

வேகவதி என்னதான் ஆக்ரோஷமாக ஓடினாலும் இறுதியில் சமுத்ரத்தில் கலந்து காணாமல் போவது போன்று, வேகவதியாக ஆக்ரோஷத்துடன் இவன் போரிட்டாலும் பலம் பொருந்திய சமுத்ரகுப்தனின் ஆளுமைக்கு பணிந்து அவனுடன் கலந்து காணாமல் போய்விடுவானோ?

குழப்பத்துடன் விஷ்ணுகோபன் நின்றிருக்க, சரியாக ஆலய பரிசாரகர் ஒருவர் வெள்ளிக்குடத்தில் நீரைச் சுமந்தபடி வந்தார். அபிஷேகத்திற்கு வேகவதி நீர் வருகிறது போலும்.

திரை சாற்றப்பட்டு மீண்டும் திறந்த போது, அத்திமலையான் வெண்ணிற வேட்டியில் காட்சி தந்தான். அபிஷேக ஆராதனைகள் துவங்கின. தேவ உடும்பர அத்திமரத்துடன் நீர் சேர்ந்தால் மரத்திற்கு ஆற்றல் அதிகரிக்கும். ஒரு குடம் நீர் அத்திமலையானின் திருமேனியில் அபிஷேகம் செய்யப்பட்டதும், புதுப்பொலிவுடன் காட்சி தரத் துவங்கினான்.

அத்தியின் மீது நான் நிற்க, கத்தியின் மீது நடக்க ஏன் பயப்படுகிறாய்? பாரதப் போரையே நடத்திக் காட்டியவன், முக்கூடல் போரை என்னால் நடத்த முடியாதா என்ன? பாரதப் போரில் கண்ணன் ஆயுதம்

https://telegram.me/aedahamlibrary

எடுக்காததால் பெரும் அழிவுகளைத் தடுக்க முடியவில்லை. ஆனால் வெற்றியை வழங்கும் தேவ உடும்பர ஆயுதமாக நானே இருக்கும் போது யாருக்கு பயப்பட வேண்டும்? பாற்கடலில் சயனிக்கும் நான் பொங்கி வரும் சமுத்திரத்தை அடக்கி அதன் மீது சயனம் கொள்கிறேன் பார்! என்று கூறுவது போன்று, மன்னனைப் பார்த்து சிரித்தபடி காட்சி தந்தான், அத்தியூரான்.

ஆனந்தக் கண்ணீருடன் அவனது அபிஷேகத்தை விஷ்ணுகோபன் கண்டு கொண்டிருக்க, ஒற்றன் ஒருவன் ஓடிவந்தான்.

தலைமையமைச்சரின் செவிகளில் விவரத்தை பாய்ச்சினான் ஒற்றன். அதை செவிமடுத்த தலைமை அமைச்சர் ராஜகுருவின் காதில் தகவலை ஓத, அவர் மன்னரின் செவிகளில் பறைசாற்றினார்.

சமுத்ரகுப்தனின் படைகள் முக்கூடலில் முகாமிட்டு விட்டன. சரணடைகிறாயா, போர் புரிகிறாயா என்கிற ஓலையை எந்நேரமும் விஷ்ணுகோபன் எதிர்பார்க்கலாம்.

அபிஷேகம் முடிந்தவுடன் அனைவரும் ஒத்தாடை அரண்மனைக்கு விரைந்தனர். சமுத்ரகுப்தனிடம் இருந்து ஓலை வந்தால், அதற்கு என்ன பதில் தருவது என்று யோசித்துக் கொண்டிருந்தனர்.

"சமாதானம் பேசினாலும், தேவ உடும்பர அத்தி எம் பெருமானை அவன் அபகரிக்கக் கூடும். போரிட்டாலும், தேவராஜனை இழக்க நேரிடும். போரிட்டு அத்தி வரதனைக் காக்க முயன்றோம் என்கிற புகழாவது மிஞ்சட்டும்!” விரக்தியுடன் தனது போர் பிரதானிகளிடம் கூறினான் விஷ்ணுகுப்தன்.

மறுநாள் பொழுது விடிந்தது.

சூரியன் காஞ்சி மாநகரில் தனது கிரணங்களைச் செலுத்திய போது காஞ்சியின் பெரும்பாலான ஆண்களின் தேகங்களில் இரும்புக் கவசங்களைக் காண முடிந்தது. அவர்கள் கைகளில் ஈட்டிகளையும், வாள் கேடயங்களையும் ஏந்தியிருந்தனர்.

அனைவரும் ஒத்தாடை அரண்மனையில் திரண்டு, ராஜவீதி வழியாக முக்கூடலை நோக்கிப் புறப்பட்டனர்.

தருமநகரம், தும்பை வனம், அத்தியூர், ஐயம்படுகை, பழமுதிர்சோலை வழியாகச் சென்று முக்கூடல் சேர வேண்டும். முக்கூடல் சங்கமிக்கும் இடத்தில் துவங்கி திரையன் ஏரி வரை பரந்து விரிந்த

https://telegram.me/aedahamlibrary

மைதானத்தில்தான் போர் நடக்க இருந்தது.

விஷ்ணுகோபன் தனது படைகளை தும்ப வனத்தின் வழியாகத் தலைமை வகித்துச் சென்று அத்தியூரை அடைந்தான். விஷ்ணுகோபன் அத்திமலை ஆலயத்தின் கிழக்கு வாயிலில் சற்று நேரம் நின்று அத்திமலையானை கண்மூடி பிரார்த்தித்தான்.

'உன்னையும், காஞ்சியையும், தொண்டைநாட்டு மக்களையும், காப்பாற்று அத்திவரதா! வீழ்வது நான் மட்டுமாக இருக்கட்டும்!' என்று பிரார்த்தனை செய்து கண்களைத் திறந்தான். அவனைத் தொடர்ந்து செல்வதற்காகப் படைகள் காத்திருந்தன.

அப்போது –

மின்னலென விரைந்து வந்தது ஒரு இரதம். நேராக ஆலயத்தின் முகப்பு வாயிலருகே வந்து நின்றது. இரதத்தில் இருந்து மூவர் இறங்கினர்.

ஜைனேபனும், ஹரிசேனாவும் இருபக்கமும் வர, சமுத்ரகுப்தன் அத்திமலையான் ஆலயத்தை நோக்கி கரம் குவித்தான். பிறகு விஷ்ணுகுப்தனை நோக்கி வந்தான்.

“காஞ்சி என்கிற சுவர்க்கபுரியை ஆண்டு கொண்டிருக்கும், விஷ்ணுகோப பல்லவருக்கு எனது வந்தனங்கள். நீங்கள் தான் எவ்வளவு பாக்கியத்தை செய்திருக்கிறீர்கள்.! அத்திமலைத் தேவனின் சாம்ராஜ்யத்தையே நீங்கள் ஆண்டு வருகின்றீர்கள் என்றால் உலகிலேயே சிறந்த மன்னராக தாங்கள் தான் இருப்பீர்கள். நான் திக்விஜயம் முடித்து அஸ்வமேத யாகம் செய்து புகழ் பெற நினைக்கிறேன். தாங்களோ அஸ்வமேத யாக பூமியையே ஆளுகிறீர்கள். சாணக்கியன் என்கிற மாமேதையை உலகிற்கு அளித்த இந்த நாட்டுடன் போர் புரிந்தால், எனக்கு மன்னிப்பே கிடைக்காது. விஷ்ணுகோபரே! உங்கள் சாணக்கியன் உருவாக்கிய மவுரியத்தை ஆளும் நான் உமது நட்பை கேட்டு இங்கே வந்திருக்கிறேன்!”

சமுத்திரகுப்தன் உணர்ச்சியுடன் பேச, வியப்பினால் திக்குமுக்காடி நின்றான், விஷ்ணுகோபன்.

'அத்திவரதா! இது என்ன புதிய திருப்பம். போரிலிருந்து மக்களைக் காப்பாற்று என்று வேண்டினேன். போரே நிகழாமல் செய்துவிட்டாயே!' பிரமிப்புடன் நின்றான், விஷ்ணுகோபன்.

அவனை ஆரத்தழுவினான் சமுத்ரகுப்தன்.

https://telegram.me/aedahamlibrary

"எனது நட்பை ஏற்றுக்கொள்வீரா? அனுக்ரக பட்டயத்தை கொடுத்து மன்னர்களை விலைக்கு வாங்கினேன், பல்லவரே! ஆனால் காஞ்சியில், அத்திவரதனின் அனுக்ரகத்தை எதிர்பார்த்து தங்களிடம் நட்பை யாசகமாகக் கேட்கிறேன். விஷ்ணுகோபரே! எனது நட்பை ஏற்று, நமது இருவருக்கும் ஆசானான சாணக்கியரை களிப்பில் ஆழ்த்துவோம்!"

சமுத்ரகுப்தன் விஷ்ணுகோபனைத் தழுவி அவனது தோளினில் தனது சிரசை பதிக்க, விஷ்ணுகோபனும் தனது மகுடத்தை கழற்றி ராஜகுருவிடம் அளித்துவிட்டு சமுத்ரகுப்தனை இறுகத் தழுவி அவனது தோளினில் தனது தலையை சரித்தான்.

அங்கே சமுத்திரமும், முக்கூடலும் சங்கமித்தன.

புஷ்பபுரமும், காஞ்சிபுரமும் இணைந்தன.

சமுத்திரத்தில் சயனித்த விஷ்ணுவாகத் திகழ்ந்தான் விஷ்ணுகோப பல்லவன்.

பல்லவனின் தோளினில் சரிந்தபடி ஓங்கி உயர்ந்து நின்ற அத்திமலையான் ஆலயத்தின் ராஜகோபுரத்தை வியப்புடன் பார்த்தான்.

"எனது விருந்தாளியாக அரண்மனைக்கு வாருங்கள்!" சமுத்ரகுப்தனை ஒத்தாடை அரண்மனைக்கு அழைத்தான் விஷ்ணுகோபன்.

போர் அபாயம் நீங்கிய நிம்மதியில் மக்கள் மீண்டும் சுறுசுறுப்பாக இயங்கத் துவங்கினர். கரிகோல ஊர்வலமாகச் செல்லும் இரு மன்னர்களையும் வாழ்த்தி கோஷங்கள் எழுப்பினர். காஞ்சியின் முக்கூடல் கடிகை, அதன் ஆலயங்கள், கரிகாலனும், இளந்திரையனும் சேர்ந்து திட்டமிட்ட புதிய நகரம் ஆகியவற்றை பிரமிப்புடன் பார்த்தபடி ஒத்தாடை அரண்மனைக்குச் சென்றான், சமுத்ரகுப்தன்.

விருந்து முடிந்து ஆட்டம், பாட்டம் முடிந்ததும், சமுத்ரகுப்தன் அன்று அரண்மனையிலேயே தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

சமுத்ரகுப்தன் உறங்குவதற்கு ஒதுக்கப்பட்டிருந்த அறைக்கு அவனை இட்டுச் சென்றான் விஷ்ணுகோபன். அறையில் நுழைய முற்பட்ட சமுத்ரகுப்தன், என்ன நினைத்தானோ? திடீரென்று திரும்பி விஷ்ணுகோபனின் கையைப் பற்றிக் கொண்டான்.

"நண்பனே! உனது நண்பனுக்கு நீ மூன்று வரங்களைத் தர வேண்டும். தருவாயா?" ஒரே நாளில் நெருங்கிப் பழகிவிட்ட உரிமையில்

https://telegram.me/aedahamlibrary

சமுத்ரகுப்தன் கேட்க, சற்றே எச்சரிக்கையுடன் அவனை நோக்கினான், விஷ்ணுகோபன்.

தேவ உடும்பர அத்திமலைத் தேவனை கேட்டுவிடப் போகிறானோ? அச்சத்துடன அவனை பார்த்தான், விஷ்ணுகோபன்.

“சொல் நண்பா! இயன்றதை செய்கிறேன்!” விஷ்ணுகோபன் கூற, சமுத்ரகுப்தன். அவனைக் கனவு நிறைந்த கண்களுடன் பார்த்தான்.

"நான் கேட்கும் மூன்று வரம் நிறைவேற்றுவதற்கு எளிதானது. நான் அத்திமலைத் தேவனை தரிசிக்க வேண்டும். சாணக்கியர் வசித்த குடிலை தரிசிக்க வேண்டும். எனது காஞ்சி விஜயத்தை குறிக்கும் வகையில் நான் இங்கே ஒரு ஆலயத்தை எழுப்ப வேண்டும். இவைதான் நான் கேட்கும் வரம்!”

சமுத்ரகுப்தன் கூற, நிம்மதிப் பெருமூச்சு ஒன்றைச் சிந்தியபடி அவனை மீண்டும் தழுவிக் கொண்டான் விஷ்ணுகோபன்.

“அவ்வளவுதானே நண்பா! எனது ராஜகுருவை உன்னுடன் அனுப்புகிறேன். அத்திமலைத் தேவனை தரிசித்துவிட்டு, சாணக்கியரின் ஆஸ்ரமம் இருந்த பகுதியைக் கண்டுவிட்டு, வா. அதற்குள் நீ ஆலயம் எழுப்ப நிலத்தை ஆர்ஜிதம் செய்கிறேன். யாருக்கு ஆலயத்தை எழுப்பப் போகிறாய்?”

“இப்போது கூறமாட்டேன். கட்டிய பிறகு நீயே பார்!” சிரித்தபடி கூறிவிட்டு தனது சயன அறைக்குள் நுழைந்தான், சமுத்ரகுப்தன்.

மறுநாள் காலை –

ராஜகுரு வித்யவினிதர் சமுத்ரகுப்தனை அத்திமலைக்கு அழைத்துச் சென்று அத்திவரதனை தரிசிக்க வைத்தார்.

அத்திமலைத் தேவனை தரிசிக்கும் போது இன்ன உணர்வுகள் என்று சொல்ல முடியாத நிலைக்கு ஆட்பட்டிருந்தான், சமுத்ரகுப்தன். சாணக்கியரின் அபிமான தெய்வத்தின் முன்பாக தான் நின்று கொண்டிருக்கிறோம் என்கிற பரவசம் அவன் முகத்தில் காணப்பட்டது…

கலியுகம் தொடங்கி கலியுகம் முடியும் வரை கரிவரதனாக, கலியை தீர்த்து தேவ உடும்பர நாவாயாக படைப்பு வித்துகளை காக்க உள்ள தேவராஜனை சமுத்ரகுப்தன் மெய்ம்மறந்து தரிசித்துக்

https://telegram.me/aedahamlibrary

கொண்டிருந்தான். அஸ்வமேத யாகத்தை செய்து இவன் சக்கரவர்த்தியாகத் திகழ்வதில் என்ன பெருமை? அத்திமலையானின் சாம்ராஜ்யத்தை ஆளும் பல்லவர்களுக்கு உள்ள பெருமை தனக்குக் கிடைக்குமா என்ன?

பிருத்வி பந்தனத்தை செய்து இவன் பெரிதாக எதை சாதித்துவிட்டான்? காஞ்சியை போன்ற பெருமை வாய்ந்த பூமிக்கு முன்பாக எந்த தேசம்தான் நிற்க முடியும்?

அத்திமலை ஆலயம் அவனை நெகிழ்த்தி விட்டதென்றால், முக்கூடல் கடிகை சமுத்ரகுப்தனை மலைக்க வைத்தது. சான்றோர்களும், அறிஞர்களும் நடமாடும் கடிகை. மகதத்தில் அறிஞர்கள் அரண்மனையில் மட்டுமே காணப்படுவார்கள்... இங்கே தேசமே அறிஞர்களைக் கொண்டிருக்கிறது. காஞ்சியில் பிறப்பவர்கள் அனைவருமே அறிஞர்கள் தானோ? இன்னும் இந்த நாட்டில் எத்தனை சாணக்கியர்கள் இருக்கின்றனரோ?

முக்கூடல் கடிகையின் பல்வேறு துறைகளைப் பார்த்துவிட்டு, சாணக்கியனின் ஆஸ்ரமம் இருந்த வேகவதி நதிக்கரைக்குப் புறப்பட்டார்கள்.

வேகவதி நதிக்கரை --

பல்லவ ராஜகுரு வித்யவினிதருடன் காஞ்சன குப்தரின் ஆஸ்ரமத்திற்குச் சென்றான் சமுத்ரகுப்தன். காஞ்சன குப்தர் மற்றும் சானேஷ்வரி வசித்த அந்த ஆஸ்ரமம் காணப்படவில்லை. ஆனால் அந்த ஆஸ்ரமம் இருந்த இடத்தில் ஒரு அத்திமரம் வளர்ந்திருந்தது. அந்த அத்திமரத்தின் கீழே அம்மிக்கல் ஒன்றும், குழவி ஒன்றும் அனாதையாகக் கிடந்தது.

அந்த இடத்தை அடைந்ததும், சமுத்ரகுப்தன் மலைத்துப் போய் நின்றான். முந்தைய இரவு, முதியவர் சித்ரகுப்தருடன் பயணித்து தான் வந்திருந்த அதே இடம். இரவில் தான் கண்ட ஆஸ்ரமம் இல்லையென்றாலும், இது நிச்சயம் அதே இடம்தான். –

“இங்குதான் சாணக்கியர் தனது பெற்றோருடன் வசித்தார். அவர்களது மறைவுக்குப் பிறகு வடக்கே சென்றுவிட்டார்!”

வித்யவினிதர் கூற, அதை சமுத்ரகுப்தன் கவனிக்கவேயில்லை.

சாணக்கியர்! கவுடில்யர்! விஷ்ணுகுப்தர்! சித்ரகுப்தர்! பெயர் எதுவாகத்தான் இருந்தால் என்ன! முந்தைய இரவு இவன் கனவில்

https://telegram.me/aedahamlibrary

சந்தித்த அந்த முதியவரின் கணீரென்ற குரல்தான் அவன் செவிகளில் ஒலித்தது. எதற்காக சாணக்கியர் இவனை சந்தித்தார்? அவர் கூற விரும்பியது என்ன?

'எனது இரண்டாவது தாய் சித்ரசேனாவின் நினைவாகத்தான் நான் என்னை சித்ரகுப்தர் என்று அழைத்துக் கொண்டேன். அவளது வழித்தோன்றலான உனக்கு நான் தரும் அன்பு பரிசு!'

சாணக்கியன் தந்த சிவப்பு வஸ்திர மூட்டை சமுத்ரகுப்தனின் கண்களில் நிழலாடியது. தான் கண்ட காட்சி கனவுதான் என்றாலும் சாணக்கியர் தனக்கு அந்த கனவின் மூலம் ஏதோ தகவலை தந்திருப்பதாக அவன் மனதில் பட்டது.

மரத்தின் கீழ் இருந்த அம்மிக் கல்லை நகர்த்தச் சொன்னான், சமுத்ரகுப்தன். காவலர்கள் அதனை நகர்த்த, அதன் கீழ் இருந்த நிலத்தை தோண்டும்படி கட்டளை இட்டான். காவலர்கள் தோண்டத் துவங்க, அவர்களை சிரமப்படுத்தாமல் விரைவிலேயே ஒரு பெரிய மண்பானை தென்பட்டது. அதனை குழியில் இருந்து எடுத்து அவர்களைக் கொண்டு மண்பானையை திறந்தான். உள்ளே சிவப்பு வர்ண வஸ்திர மூட்டை இருந்தது.

"ராஜகுருவே! இது என்னைச் சேர வேண்டியது. சாணக்கியன் எனக்காக வைத்துவிட்டுப் போன பொக்கிஷம். இதனைப் பெற்றுக்கொள்ளத் தான் நான் காஞ்சி வந்தேன்!" என்றான் கண்கள் பனிக்க சமுத்ரகுப்தன்.

சமுத்ரகுப்தன் தனது பிருத்வி பந்தன திக்விஜயத்தை காஞ்சியுடன் நிறுத்திக்கொண்டு மீண்டும் பாடலிபுத்ரம் புறப்பட்டான். நூற்றுகணக்கான மன்னர்களிடம் வலுக்கட்டாயமாக பெற்ற அனுக்ரக பட்டயங்கள் இருந்தாலும், அவன் பொக்கிஷமாகக் கருதியது, சாணக்கியன் ஆஸ்ரமத்தில் கிடைத்த அந்த ராஜதந்திரி ஆராதித்த அத்திமலைத் தேவனின் விக்ரகம் மற்றும் அவனது ஸ்வர்ண கடா மற்றும், தேவ உடும்பர சிதிள்கள். அவற்றைக் கொண்டுதான் அவன் அஸ்வமேத யாகத்தைச் செய்ய உள்ளான். மறக்காமல், பல்லாங்குழி பலகைவாயன் என்கிற சொல்லுக்குக் காரணமாகி மகத சரித்திரத்தையே மாற்றி அமைத்த அம்மிக் கல் மற்றும் குழவியையும் அவன் மகதத்திற்கு எடுத்துச் சென்று கொண்டிருந்தான். சாணக்கியரின் பற்களையே உடைத்த குழவி ஆயிற்றே.

குழவி கிடக்கட்டும்!

https://telegram.me/aedahamlibrary

சமுத்திரகுப்தன் ஏதோ ஆலயத்தைக் கட்ட வேண்டும் என்று விஷ்ணுகோபனிடம் கூறினானே. அவனுக்கு பல்லவ மன்னனும் நிலத்தை ஆர்ஜிதம் செய்து தந்தானே. அவன் எழுப்பிய ஆலயத்தில், மூலகடவுள் யார். பிரம்மனா, விஷ்ணுவா, சிவனா இல்லை துர்கையா...?

இவர்கள் யாருக்குமே சமுத்ரகுப்தன் எழுப்பிய ஆலயத்தில் இடம் கொடுக்கப்படவில்லை. அவன் எழுப்பிய ஆலயம், கிழக்கைப் பார்த்தோ, மேற்கைப் பார்த்தோ நிற்கவில்லை. தான் வடக்கிலிருந்து திக்விஜயம் செய்து தெற்கு வந்ததற்கு அடையாளமாக அவன் கட்டிய ஆலயம் வடக்கு தெற்காக, தெற்கை நோக்கி நின்றது.

சாணக்கியர் தான் சித்ராபௌர்ணமி அன்று பிறந்ததாகக் கூறியிருந்தார். சித்ரகுப்தன் அவதரித்த அந்த நாளில் காலதேவனுக்கு கணக்கு எழுதி, நல்லவர்களுக்கு நல்ல தீர்ப்பையும், தீயவர்களுக்கு தீய பலன்களையும் கணக்கு பார்த்து அவரவர்கள் கர்மாவை நிர்ணயித்தவர் சித்ரகுப்தர். அதே நாளில் பிறந்த சாணக்கியரும் நல்லவர்களுக்கு நல்லதையும், தீயவர்களுக்குக் கெடுதலையும் செய்து, அர்த்தசாஸ்திர கணக்குப்படி கால ஓட்டத்தின் சரித்திர நிகழ்வுகளை நிர்ணயித்தவர்தானே, சாணக்கியர்,

பெற்ற தாய் சானேஷ்வரியின் மகன் விஷ்ணுகுப்தனாகவும், தனது உயிரைக் காப்பாற்றிய இரண்டாவது தாய் சித்ர சேனாவின் மகன் சித்ரகுப்தராகவும் இரு வேறு தாய்களைக் கொண்டவர் ஆயிற்றே. அவர் தனது வாழ்நாளில் மதித்த இரு பெண்கள் அவர்கள்தானே.

எனவே தெற்கு நோக்கி தான் எழுப்பிய கோவிலின் மூல தெய்வமாக சித்ரகுப்தரைதான் [1] பிரதிஷ்டை செய்தான், சமுத்ரகுப்தன். தனது மானசீக ஆசானின் பிறந்த நாளான சித்திரை பௌர்ணமியில் சிறப்பு பூசனைகள் நடத்திட கட்டளையிட்டுவிட்டு மனநிறைவுடன் மகதம் திரும்பிக் கொண்டிருந்தான், சமுத்ரகுப்தன்.

சமுத்ரமாக பொங்கி வந்தவன், அமைதியான விரிஞ்சி நதியாக தனது தேசத்திற்குத் திரும்பிக்கொண்டிருந்தான்.

[1] காஞ்சியில் சரவண பவன் பக்கத்தில் சித்ரகுப்தருக்கு ஆலயம் இருக்கிறது. இது தெற்கு பார்த்து நிற்கும் கோயில்தான். சித்ரா பௌர்ணமியில் இங்கே சிறப்பு பூஜைகள் செய்யப்படும். ஒன்பதாவது நூற்றாண்டில் சோழர்கள் இந்த ஆலயத்தில் திருப்பணிகள் செய்த ஆதாரம் உள்ளது. ஆனால் சமுத்ரகுப்தன் குறித்த ஆதாரங்கள் எதுவுமே

https://telegram.me/aedahamlibrary

இல்லை. எனவே, சாணக்கியன் நினைவாக சமுத்ரகுப்தன் எழுப்பிய சித்ரகுப்தர் கோயில் இதுவாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். இது அவன் கட்டியதுதான் என்று ஊர்ஜிதம் செய்ய முடியாத நிலை.

*****

https://telegram.me/aedahamlibrary

# 34. கூடல் நகரில் ரகசிய பாதை

அத்திமலையில் ஆலயத்தில் வெள்ளிக்கிழமை வைபவத்தின் ஒரு பகுதியாக அத்திமலைத் தேவராஜனின் பட்டமஹிஷி பெருந்தேவி நாச்சியார் தான் அவதரித்த பொற்றாமரைக் குளத்திற்கு எழுந்தருளி, அதன் கரையில் இருந்த மண்டபத்தில் ஊஞ்சலாடிக் கொண்டிருந்தாள். வெய்யிலில் பொன்னாபரணங்கள் தகதகக்க, குங்கும சிவப்பு கரையிட்ட வெண்ணிறப் புடவையில் திவ்யலங்கார பூஷிதையாக பெருந்தேவி தாயார் ஊஞ்சலாடுவதைப் பலரும் கண்டுகளித்துக் கொண்டிருந்த வேளை.

கோயிலின் கிழக்கு வாசல் வழியாக இருவர் ஆலயத்தின் உள்ளே பிரவேசித்தார்கள். அவர்களில் ஒருவன் உயரமாக சற்றே கம்பீரத்துடன் காணப்பட்டான். யார் இந்த கம்பீரன் என்று நின்று வியந்து பார்க்கும் அளவுக்கு நல்ல கோதுமை நிறத்தில், கட்டழகனாக நின்றான், அந்த ஆண்மகன். அவனுடன் வந்தவளுக்கு மட்டும் அழகில் குறைவா என்ன? அந்த பெண்ணுக்கு பதினாறு பிராயங்களே நிறைந்திருக்கும். பெண்மையின் நளினங்கள் அனைத்தையும் கொண்டிருந்த அவளது பேரழகு ஆலயத்திற்கு வந்தவர்களின் பார்வையைச் சுண்டி இழுத்தது. அவள் நடையே ஒரு நாட்டியமாகத் திகழ்ந்தது. அவர்கள் இருவரையும் பார்க்கும் போதே அவர்கள் காஞ்சியைச் சேர்ந்தவர்கள் அல்ல என்பதும் புரிந்தது. கிழக்கு வாசல் வழியாக நுழைந்த அவர்கள், பொற்றாமரைக் குளத்தில் நடைபெறும் ஊஞ்சல் வைபவத்தைக் கண்டதும், அதைக் காண விருப்பம் கொண்டு, குளத்தை நோக்கி நடந்தார்கள்.

ஆம்ரபாலியை பார்த்திருந்தவர்கள் குளத்தை நோக்கி நடக்கும் அந்தப் பெண்ணை திகைப்புடன் பார்ப்பார்கள். மவுரியத்திலிருந்து புறப்பட்டு, சங்கமித்தாவுடன் காஞ்சிக்கு வந்து, அங்கிருந்து சேர நாட்டின் நாவாய்க்கு தப்பிச் சென்று, வல்லபனை காதலித்து ஏமாற்றி, பத்ர ஷீலாவின் கணவன் பரமபுருஷனை கவர்ந்து அவனுடன் கூடி, வேண்டாவிருப்பாக ஒரு பெண் மகவைப் பெற்றெடுத்தாளே, ஆம்ரபாலி. அந்த ஆம்ரா பெற்றெடுத்த கேயூராதான் அவள். உடன் செல்லும் கம்பீரன் அவளது தந்தை பரமபுருஷன்தான்.

தேவ உடும்பர ரகசியத்தை அறிவதற்காகவே பரம புருஷனின் ஆசான் அதிபீஷணன் அவனை அத்தியூருக்கு அனுப்பத் திட்டமிட்டிருந்தான். ஆம்ரபாலியுடன் இணைந்த பிறகு, அவனது வாழ்க்கை திசை மாறியது. அவர்களுக்கு கேயூரா மகளாகப் பிறந்ததும், பரமனுக்கு உலகமே

https://telegram.me/aedahamlibrary

கேயூராவாக போனது. முதலை வாயில் சிக்கி, ஆம்ரா உயிர் நீத்ததும், காட்டுவாசிகளுடனேயே தங்கி விட்டான். அத்தியூர் செல்லும் எண்ணத்தையே மறந்து, கேயூராவுடன் விளையாடுவதிலேயே பொழுதைக் கழித்தான்.

அத்திமலையானை அடைந்து ராஜ்யம் ஒன்றை அமைக்கப் போகிறேன் என்று கூறிக்கொண்டிருந்த பரமபுருஷன் தனது பெண் குழந்தை பால் அருந்தும் பருவத்தைக் கடக்கும் வரையில் அந்த காட்டு மனிதர்களுடனேயே வசித்து வந்தான்.

குழந்தை சற்றே வளர்ந்ததும், தனக்கு அடைக்கலம் கொடுத்த காட்டுவாசிகளிடம் விடைபெற்றுக்கொண்டு பரமபுருஷன் மகளுடன் அத்தியூருக்குப் புறப்பட்டான். திடீரென்று மழை, வெள்ளம், நிலச்சரிவு என்று இயற்கை சீற்றங்களால் பாதை தவறி மூஷிகக் காட்டின் [1] எல்லைக்குள் சென்றுவிட்டான். மகளுடன் கால் போன திக்கில் செல்ல, இரவு ஒரு மரத்தடியில் கழித்தான்.

மறுநாள் பொழுது விடிந்தது. காட்டாற்றில் நீராடிவிட்டு குழந்தை கேயூரா உறக்கத்திலிருந்து விழித்ததும் தொடர்ந்து பயணிக்கலாம் என்று காத்திருந்த போதுதான் அந்த அலறல் சத்தத்தைக் கேட்டான்.

அலறல் வந்த திக்கை நோக்கி ஓடிச்சென்று பார்க்க ஒரு புரவியின் மீது அமர்ந்திருந்த இளங்குமரனை மலைப் பாம்பு ஒன்று சுற்றிக்கொண்டு அவனை நெருக்கிக் கொண்டிருக்க, அதன் இரும்புப்பிடியில் அந்த இளங்குமரன் திணறிக்கொண்டிருந்தான். மரத்தின் மீதிருந்து அவன் மீது விழுந்து அந்த பாம்பு அவனை சுற்றிக்கொண்டிருக்கும் போலும். அந்த இளங்குமரன் குரல்விட்டு அலற, அவனது புரவி செய்வதறியாது இங்கும் அங்கும் தடுமாறிக்கொண்டிருந்தது

இனியும் தாமதித்தால் மலைப்பாம்பு அந்த இளைஞனைக் கொன்றுவிடும் என்பதை உணர்ந்த பரம புருஷன் பாய்ந்து சென்று இளங்குமரனை புரவியில் இருந்து தள்ளினான். அந்த குமரனும் பாம்பும் சேர்ந்து கீழே விழ, அந்த பாம்பு அந்த குமாரனை இன்னும் இறுக்கியது. பரமபுருஷன் அந்த பாம்பின் முகப்பகுதி பக்கமாகச் சென்று, அதன் முகத்தைப் பற்றி அதன் கண்களினுள் உறுத்து நோக்கினான். நோக்கு பார்வையால் தனது வசம் அந்த மலைப்பாம்பை கொண்டு வந்தவன், கண்களாலேயே அந்த குமாரனைவிட்டு நீங்கு என்கிற கட்டளையைப் பிறப்பிக்க, அடுத்த கணம், அந்த மலைப்பாம்பு தான் பற்றியிருந்த இளங்குமரனை விட்டு நீங்கியது.

https://telegram.me/aedahamlibrary

மூர்ச்சித்துக் கிடந்த அந்த இளங்குமரனை தனது தோளினில் சுமந்து சென்று காட்டாற்றின் அருகே கிடத்தினான். அவனது மூர்ச்சையை தெளிய வைத்து, அவனுக்கு அருந்துவதற்கு தண்ணீரைக் கொடுத்தான். நல்லவேளையாக கேயூரா இன்னும் எழுந்திருக்கவில்லை.

"சுவாமி! என்னைக் காப்பாற்றியதற்கு நன்றி! நான் மூஷிக நாட்டின் இளவரசன். எனது பெயர் வீரோசனன். வேட்டையாட வந்த இடத்தில் மலைப்பாம்பிடம் சிக்கிக் கொண்டேன். தாங்கள் யார்?" வீரோசனன் கேட்டான்.

"நான் வேதங்களை போதிப்பவன். வர்மக்கலை அறிந்தவன். நாவாய் என்கிற சேர நாட்டு பகுதியைவிட்டு அத்தியூருக்கு பயணித்துக் கொண்டிருந்தேன். நிலச்சரிவு ஏற்பட்டதால், பாதை தவறி உங்கள் மூஷிகக் காட்டிற்குள் வந்துவிட்டேன். அங்கே உறங்குவது எனது மகள், கேயூரா. தாயற்றவள்! எனவேதான் அத்தியூர் சென்று பிழைக்கலாம் என்கிற முடிவுடன் செல்கிறேன்!" - பரமபுருஷன் கூறினான்.

"நல்லவேளையாக நிலச்சரிவு ஏற்பட்டது. இல்லையேல் தாங்கள் எங்கே மூஷிக வனத்திற்கு வந்திருக்கப் போகின்றீர்கள். நான் அந்த மலைப்பாம்பிற்கு இரையாகி இருப்பேன். பிழைப்பைத் தேடி எதற்கு அத்தியூர் செல்லுகின்றீர். எங்கள் மூஷிக நாட்டின் அரண்மனை கல்விச்சாலையை நடத்துங்கள். எங்கள் நாட்டில் கல்வியறிவை புகட்டுங்கள். வர்மக்கலையை கற்க நானும் மிகவும் ஆவலுடன் இருக்கிறேன்! உங்கள் மகளுடன் நீங்கள் எனது அரண்மனைக்கு வர வேண்டும்!" - மூஷிக இளவரசன் பரமபுருஷனையும், கேயூராவையும் அழைத்துக்கொண்டு தங்களது பழையங்காடி அரண்மனைக்குச் சென்றான்.

வீரோசனனை மலைப்பாம்பின் பிடியிலிருந்து பரமபுருஷன் காப்பாற்றினான், என்பதை அறிந்ததும், மன்னன் பாடவன் பரமபுருஷனை அரண்மனை ராஜகுருவாக நியமித்தான். பெண் மகவு இல்லாத அரசி திருமாமகள், கேயூரா அரண்மனையிலேயே வளரட்டும் என்று கூறிவிட்டாள்.

வீரோசனன் பட்டத்து இளவரசனாக அறிவிக்கப்பட்டு, பல்லவ இளவரசியும் விஷ்ணுகோபனின் மகள் ஹரிணியை மணமுடிக்க, ஹரிணியும் மூஷிக நாட்டின் பட்டத்து இளவரசியாக பதவி வகிக்க பழையங்காடிக்கு வந்தாள். அரண்மனையில் வளர்ந்த கேயூரா, ஹரிணியுடன் மிகவும் அந்நியோன்னியமாகிவிட, அவளுக்கு காஞ்சியை

https://telegram.me/aedahamlibrary

பற்றியும், அத்திமலைத் தேவனை பற்றியும் கதை கதையாக கூறுவாள் ஹரிணி. கேயூரா சிறுமி பருவத்தைத் தாண்டி நங்கையாக மிளிரத் துவங்கினாள். ஆம்ரபாலியின் பேரழகையும், தனது அறிவையும் கொண்டிருக்கும் கேயூராவை உத்தம புருஷன் ஒருவனிடம் ஒப்படைக்க வேண்டும் என்று முதன்முறையாக எண்ணினான், பரமபுருஷன்.

ஒரு நாள் –

கேயூராவிடம் பேசிக்கொண்டிருந்த ஹரிணி, முக்கூடல் கடிகையில் வர்மக்கலையை போதிக்கும் ஆசான் தேவைப்படுவதாகக் கூற, உடனே கேயூரா ஆர்வத்துடன் பரமபுருஷனிடம் ஓடி வந்தாள்.

"அப்பா! காஞ்சியின் முக்கூடல் கடிகையில் வர்மக் கலையினை போதிக்க ஆசான் தேவைப்படுகிறாராம். யுவராணி ஹரிணி தனது தந்தை மன்னர் விஷ்ணுகோபனிடம் கூறி, உமக்கு அந்த பணியை பெற்றுத் தருகிறேன் என்கிறார். நாம் ஏன் அத்தியூர் சென்று அங்கே வசிக்கக் கூடாது? கடிகையில் பணிபுரிந்து கொண்டே உங்களுக்கு தேவையான தேவ உடும்பரத்தையும் தேடிப் பெறலாம். எனக்கும் அத்திமலையைக் காண வேண்டும் என்கிற ஆசை. நாம் அத்தியூர் போகலாம், தந்தையே!” - கேயூரா கேட்க, உடனே ஒப்புக்கொண்டு விட்டான்.

அவனுடைய எண்ணமே வேறு. காஞ்சியில் கேயூராவுக்கு நல்ல கணவனை தேர்ந்தெடுத்து அவன் வசம் அவளை ஒப்படைத்துவிட்டால், இவனது கடமை முடிந்துவிடும். அதன் பிறகு சுதந்திர பறவையாக இவன் தனது திட்டங்களைச் செயல்படுத்தலாம்.

ஆம்ரபாலியின் முழு பேரழகையும் நிரம்பவே கொண்டிருந்தாள், கேயூரா. எனவேதான் அவளது பாதுகாப்பு குறித்து சிறுவயதில் இருந்தே கவலைப்பட்டுக் கொண்டிருந்தான். தான் கற்றிருந்த நாடிச்சக்கர ரகசியங்கள், வர்ம மற்றும் நோக்கு வர்மக் கலைகள் ஆகியவற்றை கேயூராவுக்கு அவ்வப்போது கற்றுத் தந்திருந்தான் பரமபுருஷன். இந்தக் கலைகளைத் தவிர பெண்ணுக்கு சீதனமாக தர அவனிடம் வேறு ஒன்றும் இல்லை. மூஷிக அரசி திருமாமகள் கேயூராவுக்கு ஆடல் பாடல் ஆகியவற்றை கற்றுத் தந்திருந்தாள். தனது தாய் ஆம்ரபாலியைப் போன்றே ஆடல் பாடல்களில் மிகவும் ஈடுபாடு காட்டினாள், கேயூரா. ஆம்ராவை போலவே, ஆடை ஆபரணங்கள் அணிவதிலும் மிகவும் ஆர்வம் கொண்டிருந்தாள். திருமாமகள் அவளை ஒரு இளவரசியைப் போன்றே வளர்த்திருந்தாள். இளவரசன் வீரோசனன் கேயூராவைத்

https://telegram.me/aedahamlibrary

தனது தங்கையாகவே பாவித்தான்...

பரமபுருஷனும், கேயூராவும் காஞ்சிக்குப் புறப்பட்டனர். மன்னரின் குடும்பத்திடம் பிரியாவிடை பெற்றுக்கொண்டு, பட்டத்து இளவரசி ஹரிணி தனது தந்தை விஷ்ணுகோபனுக்கு பரமபுருஷனைப் பற்றி அளித்திருந்த நற்சாட்சி பத்திர சுவடியையும் எடுத்துக் கொண்டு காஞ்சிக்குப் பயணித்தார்கள்.

ஹரிணியின் தயவில் பல்லவ நாட்டின் முக்கூடல் கடிகையில் வர்மக் கலை போதிக்கும் ஆசானாக பணி கிடைக்க, கடிகையிலேயே அவனும், கேயூராவும் தங்குவதற்கு ஒரு ஜாகை ஒதுக்கப்பட, அத்தியூர் வந்து விட்ட மகிழ்ச்சியில் இருவரும் வெள்ளிக்கிழமை வைபவத்தைக் காண அத்திமலையான் ஆலயத்திற்கு வந்திருந்தார்கள்.

குளக்கரையில் பெருந்தேவி தாயாரை தரிசித்துவிட்டு, இருவரும் அத்திமலை ஏறி, அத்திமலையானை தரிசித்தார்கள். அத்தியூரானின் அழகைக் கண்டு பிரமித்துப் போனாள், கேயூரா.

வளத்தையெல்லாம் அள்ளித் தரும் தேவ உடும்பர அத்தியால் அமைக்கப்பட்ட வரதன் இவன் தானா? அஷ்டமா சித்திகளை வழங்கும் தேவராஜன் இவன் தானா? சாம்ராஜ்யத்தை நிறுவி, மன்னர்களுக்கெல்லாம் மன்னனாகத் திகழ வைக்கும், அஸ்வமேத யாக நாயகன் கலிவரதன் இவன் தானா? தேவ உடும்பரத் தோணியாக திருநாவாய்க்குச் செல்லப் போகிறவன் இவன்தானா?

அத்திவரதனையே உறுத்து நோக்கினாள். 'என்னை என்ன செய்யப் போகிறாய், அத்திமலைத் தேவா?' மனதிற்குள் அவனைக் கேட்டாள்.

'இப்போதுதான் அத்தியூர் வந்திருக்கிறாய்? அதற்குள் என்ன வேண்டும் உனக்கு?' - என்பது போன்று பதிலுக்கு அவளை நோக்கிப் புன்னகைத்தான்.

இருவரும் அத்திமலை ஆலயத்தில் தரிசனத்தை முடித்துவிட்டு, முக்கூடல் கடிகைக்குச் சென்றனர்.

கேயூரா வழி நெடுகிலும் தனக்குள் யோசித்தபடி அமைதியாக வந்தாள்.

தந்தையும், மகளும் கடிகையில் பணிகள் இல்லாத போது, காஞ்சி நகரைச் சுற்றி வந்தனர். ஒத்தாடை அரண்மனை, ஒத்தாடையான் ஆலயம், தருமநகரின் எழுமால் ஆலயங்கள், உக்கிர சரஸ்வதி ஆலயம், தும்பை வனம், மாலிருஞ்சோலை மலை, வேங்கடவன் கோயில் ஆகிய

https://telegram.me/aedahamlibrary

பகுதிகளைச் சுற்றிப் பார்த்தனர்.

பழமுதிர்சோலை மலையின் உச்சியில் நரசிங்க ஆலயத்தின் மேலே உயரத்தில் இருந்த வரதநாராயண ஆலயத்தின் உச்சியில் பரமபுருஷனும், கேயூராவும் அமர்ந்திருந்தனர். கேயூராவுக்கு தாகம் ஏற்பட, மலையில் இருக்கும் சுனையில் இருந்து நீர் எடுத்து வர பரமபுருஷன் சென்றிருந்தான்.

பாறையின் மீது அமர்ந்தபடி வரதநாராயண கோவிலின் வாயிலில் (தற்போது பழைய சீவரம்) அமர்ந்திருந்தாள். அப்போது ஒரு புதரின் நடுவிலிருந்து திடீரென்று ஒரு புத்த பிக்கு தோன்றினார். ஆலயத்தின் வாயிலில் பாறையின் மீது அமர்ந்திருந்த கேயூராவை அவர் காணவில்லை. ஆனால் கேயூரா அவரை கண்டுவிட்டாள். அந்த புத்த பிக்கு மலையிறங்கிப் போக, திகைப்புடன் எழுந்த கேயூரா, அந்த புதரை நோக்கி நடந்தாள்.

அங்கிருந்த பாறையை நகர்த்த, உள்ளே ஒரு பாதை இறங்கிச் சென்றது. மலையிலிருந்து சுரங்கம் ஒன்று புறப்படுவதைக் கண்டு பரபரத்த கேயூரா, உள்ளே இறங்கி சுரங்கத்தின் பாதை வழியே தொடர ஆரம்பித்தாள். வெகுதூரம் இருள் மட்டுமே நிலவியது. ஆங்காங்கே தண்ணீர் ஓடும் ஒலியினைக் கேட்டாள். சிறு துளைகளின் வழியே சூரிய கிரணங்கள் சுரங்கத்தினுள் எட்டிப் பார்க்க, பரபரப்புடன் வேகத்தை அதிகரித்தாள்.

சுரங்கப் பாதை ஒரு இடத்தில் அகலமாக விரிய, அங்கே ஒரு சிறிய அறை கற்பாறையில் குடைந்து அமைக்கப்பட்டிருந்தது. அதில் ஒரு புத்தர் சிலை அமைக்கப்பட்டிருந்தது. அதன் கீழே கல்வெட்டில் பிராக்ருத கிரந்தங்களில் வடிக்கப்பட்டிருந்தது.

'கௌதமருக்கு அடுத்ததாக அவதரிக்க உள்ள தாருக புத்தர்... தாமரை சூத்திரத்தின் கூற்றுப்படி. அவரது அவதாரத்திற்கு தேவ உடும்பரத்தை நாடுவோம்...' என்று கல்லில் அந்த புத்தரின் சிலையின் கீழ் வடிக்கப்பட்டிருந்தது. யோசனையுடன் அதை பார்த்துக் கொண்டிருந்தவள், மீண்டும் புத்த பிக்கு வருவதற்குள் அங்கிருந்து கிளம்பிவிடும் எண்ணத்துடன் தொடர்ந்து சுரங்கப்பாதையில் நடந்து சென்றாள், கேயூரா.

சிறிது தொலைவு சென்ற கேயூரா, வியப்புடன் நின்றாள். எதிரே சுரங்கப்பாதை இரண்டாகப் பிரிந்தது. ஒரு பாதை அத்தியூரான் ஆலயத்திற்கும், மற்றொரு பாதை முக்கூடல் கடிகைக்கும் செல்வதை

https://telegram.me/aedahamlibrary

கேயூராவால் எப்படி அறிய முடியும்?

ஒரு காலத்தில் இந்தச் சுரங்கத்தில்தான் கரிகால் பெருவளத்தான் பதுங்கி இருந்தான் என்பது அவளுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. மீண்டும் யோசித்தவள், முக்கூடல் கடிகைக்குச் செல்லும் பாதையில் நடக்கத் தொடங்கினாள். பாதை ஒரு இடத்தில் வளைந்து நெளிந்து சென்று திரும்ப, தான் இப்போது பழமுதிர்சோலை மலையைவிட்டு இறங்கி, சமவெளிப் பகுதிக்கு வந்துவிட்டதை உணர்ந்தாள். தண்ணீர் ஓடும் ஒலி அதிகமாகக் கேட்க, தான் முக்கூடல் பகுதியைக் கடந்து கொண்டிருக்கிறோம் என்பதை புரிந்து கொண்டாள். சுரங்கம் இன்னும் நீண்டு கொண்டே ஒரு மேடான பகுதியில் முடிந்தது. கற்பாறையைக் குடைந்து படிகளை அமைத்திருந்தார்கள்.

அந்தப் பாறையின் மீது ஏறி அங்கிருந்த கதவைத் தள்ளினாள். உள்ளே நுழைந்தவள் மலைத்துப் போனாள்.

அது முக்கூடல் கடிகையின் புத்த தத்துவத்தை போதிக்கும் துறையைச் சேர்ந்த அறைகளில் ஒன்று. அந்த அறையின் சாளரம் வழியாக வெளியே பார்த்தாள், கேயூரா. முக்கூடல் கடிகையின் மையத்தில் அமைக்கப்பட்டிருந்த பல்லவ சின்னமான நந்தியின் சிலை கண்களுக்குப் புலப்பட்டது.

ஆக, முக்கூடல் கடிகைக்கும், பழமுதிர்சோலை மலைக்கும் இடையே சுரங்கப் பாதை அமைந்துள்ளது. எதற்காக இந்தப் பாதையை அமைத்தார்கள்?

சிந்தித்தபடி கடிகையில் இருந்த தனது ஜாகைக்குச் சென்றாள். அவள் தனது ஜாகையை அடைந்ததும், உடனேயே பரமபுருஷன் வந்துவிட்டான்.

“என்னம்மா! தாகம் என்று சொன்னாயே! சுனை நீரைக் கொண்டு வருவதற்குள் சொல்லாமல் இங்கே வந்து உட்கார்ந்திருக்கிறாயே... உன்னைக் காணாமல் பதறிவிட்டேன்!” பரமபுருஷன் அவளைக் கடிந்து கொண்டான்.

“இல்லையப்பா! சற்று உடல்நிலை சரியில்லை. அது தான் விரைந்து வந்துவிட்டேன்!” என்று கூறி சமாளித்தாள், கேயூரா. தான் வந்த சுரங்கப்பாதையைப் பற்றி தந்தையிடம் கூறாமல் மறைத்தாள்.

கடிகையில் தனது பணிகளை ஆர்வத்துடன் செய்து வந்தான்,

https://telegram.me/aedahamlibrary

பரமபுருஷன். அதே கடிகையில் ஜோதிடம் மற்றும் வானசாஸ்திரத்தை போதிக்கும் கல்யாணத்புதர் பரமபுருஷனின் நெருங்கிய நண்பராகிவிட்டார் இருவரும் வானசாஸ்திரத்தைப் பற்றி பேசி வருவார்கள்.

காலம் ஓடியது. கடிகையின் ஆசானாக பிரபல்யம் அடைந்து கொண்டிருந்தான், பரமபுருஷன்.

வர்மக்கலையைப் பற்றி அறிந்து, அதனைக் கற்க, காஞ்சியில் ஆர்வம் அதிகரித்தது. இதனால், பரம புருஷனுக்கு மாணாக்கர்கள் நிறையவே கிடைத்தார்கள். மன்னர் குடும்பங்கள், வேதிய குடும்பங்கள், படை வீரர்கள், குடியானவர்கள் ஏன் வெளிநாட்டினரும் கூட, வர்மக்கலையைக் கற்பதில் ஆர்வம் காட்டினார்கள். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பாடங்கள் நடைபெறாது என்பதால் கல்வி போதிக்கும் ஆசான்களுக்கு ஓய்வு கிடைக்கும். அன்று காஞ்சியின் மர்மங்களை ஆராயத் தந்தையும் மகளும் புறப்பட்டு விடுவார்கள்...

ஒரு நாள் –

பொழுது புலர்ந்தது. கேயூரா தங்களது குடிலின் வாயிலில் கோலம் வரைந்து கொண்டிருந்தாள் அன்றைய பாடங்கள் குறித்து சுவடிகளைச் சேகரித்தபடி பரமபுருஷன், குடிலின் திண்ணையில் அமர்ந்திருந்தான்... அப்போது கல்யாணத்புதர் எதிரே இருந்த தனது குடிலினில் இருந்து ஓடி வந்தார்.

"பரமபுருஷரே! நேற்று நடுநிசியில் தூமகேது [2] ஒன்று கண்ணுக்குப் புலப்பட்டது. மிகவும் பெரியதாக உள்ளது. என்ன நாசங்களை உண்டு செய்யப் போகிறதோ தெரியவில்லை!” என்று பரபரப்புடன் கூறினார்.

"தூமகேது தெரிந்ததா?” வியப்புடன் கேட்டான் பரமன்.

"ஆம்! குருவின் வீட்டில் கேது இருக்கும் போது, தூமகேது தோன்றினால் பல அனர்த்தங்கள் நடக்கும் என்று சாத்திரங்கள் சொல்கிறது. தூமகேதுவைப் பற்றி ஆராய்வதற்காக, நான் இன்று திருவேங்கடம் புறப்படுகிறேன்!” கல்யாணர் கூற, கோலம் வரைந்து கொண்டிருந்த கேயூரா, ஆர்வத்துடன் அவர்களது உரையாடலை கவனித்தாள்.

“எனக்கும் வேங்கடத்தை தரிசிக்க ஆசைதான்.” பரமன் கூறி முடித்திருக்கமாட்டான். ஆர்வத்துடன் துள்ளிக் குதித்து ஓடிவந்தாள், கேயூரா.

https://telegram.me/aedahamlibrary

"அப்பா! நாமும் கல்யாணருடன் வேங்கடம் போகலாம்.” - கேயூரா கூறினாள்.

"ஐயோ! பெண்கள் வேங்கடம் வருவதா? கொடிய விலங்குகளும், ஸ்வேத ஹூனர்களும், கொலை பாதகங்களுக்கு அஞ்சாதவர்களும் திரியும் பகுதி. பெண்கள் வருவது மிக ஆபத்து!” - கல்யாணர் கூறினார்.

"எனக்கு வேங்கடவன் ஆலயத்தைக் காண வேண்டும். இப்போது காணவில்லை என்றால் எப்போது காணப்போகிறேன்? திருமணம் ஆகிவிட்டால் இல்லறத்தில் திளைத்துவிடுவேன். இப்போது இல்லறப் பொறுப்புகள் இல்லாத நிலையில் வேங்கடவனை தரிசிக்க சமயம் இதுதான்!” திருமணத்தைப் பற்றி பேசி, தந்தையின் மனதை நெகிழ்த்தி, சம்மதத்தை பெற்றாள், கேயூரா.

தூமகேதுவை ஆராய்வதற்கு வேங்கட மலை மிகவும் பொருத்தமான இடம் என்கிற எண்ணத்தில் கல்யாணர் புறப்பட, அவருடன் பரமனும், கேயூராவும் கிளம்பினார்கள். தூமகேது என்பதே எதிர்மறை நிகழ்வுகளைத்தான் உண்டு செய்யும் என்று உலக மக்களே நம்பும் போது, வான சாத்திரத்தை போதிக்கும் கல்யாணர் மட்டும் விதிவிலக்கா என்ன? தூமகேதுவால் ஏற்படும் அரசியல் மாற்றங்கள் குறித்து விவரித்தபடி சென்றார்.

*சந்திரகிரி –*

கல்யாணர் பரமனுடனும், கேயூராவுடனும் சந்திரகிரி மலைக்காட்டை அடைந்த போது இருட்டிவிட்டது. சந்திரகிரி மலையடிவாரத்தில் வனதேவதை ஆலயம் ஒன்றைக் கண்டார்கள்.

“இன்றிரவு, இந்த வனதேவதையின் ஆலயத்தில் தங்குவோம்! விடிந்ததும் வேங்கடம் சென்று மலை ஏறுவோம்!” - கல்யாணர் கூற, பரமன் ஒப்புக் கொண்டான்.

வனதேவதையின் ஆலயத்தினுள் கேயூரா உறங்க, வெளியே பரமனும், கல்யாணரும் உறங்கினார்கள். நடுநிசி! ஆழ்ந்த உறக்கத்தில் கல்யாணர் இருந்ததற்கு அடையாளமாக, அவரது குறட்டையொலி ஆலயத்தின் உள்ளே சயனித்திருந்த கேயூராவின் உறக்கத்தைக் கெடுத்தது. உறக்கம் வராமல் வனதேவதையின் சிலையை உறுத்து நோக்கிக் கொண்டிருந்தாள்.

பிதுங்கிய கண்ணும், கோரைப் பற்களுமாக காண்பதற்கு உக்கிரமாகக்

https://telegram.me/aedahamlibrary

காட்சி தந்தது வனதேவதையின் சிலை. கல்யாணர் விட்ட குறட்டையொலியின் பின்னணியில் அந்த வனதேவதையின் சிலை இன்னும் கோபாவேசமாகக் காட்சி தந்தது.

தேவ உடும்பர அத்திவரதரை அண்மையில்தான் தரிசித்திருந்தாள். பெருந்தேவி தாயாரும் கண்ணுக்கு குளிர்ச்சியாகக் காட்சி தந்திருந்தாள். இங்கே வன தேவதையோ உக்கிரமாகக் காட்சி தருகிறாள். தண்ணீர் அது வைக்கப்படும் கலயத்தின் உருவத்தை எடுப்பது போல, வழிபாடு மூர்த்தங்களும் பூசிப்பவர்களின் மனோபாவத்தை வெளிப்படுத்துகிறது போலும், என்று எண்ணியபடி படுத்திருந்தாள், கேயூரா.

அப்போது –

சங்கு முழங்கும் ஒலி ஒன்று கேட்க, பிறகு டமாரம் ஒன்று இசைக்கப்பட, தொடர்ந்து குதிரைகளின் குளம்பொலி கேட்டது. கேயூரா திகைப்புடன் எழுந்து அமர்ந்து அந்த ஆலயத்தின் வெளியே கவனித்தாள். பரமனும் பரபரப்புடன் எழுந்து கல்யாணரை எழுப்ப, அவர் உடனே அலறத் துவங்கினார்.

“ஓடுங்கள்! ஸ்வேத ஹூனர்கள் வருகிறார்கள். எங்கேயாவது ஒளிந்து கொள்ளுங்கள்!”

கல்யாணரும், பரமனும் அருகில் இருந்த அடர்ந்த மரங்களிடையே ஓடி ஒளிய, கேயூரா என்ன நடக்கிறது என்பதை யூகித்து ஓடி ஒளிவதற்காக ஆலயத்தைவிட்டு வெளியே வர, சரியாக ஸ்வேத ஹூனர்கள் ஆலயத்தின் முன்பாகப் புரவிகளில் வந்து நின்றார்கள்.

வன தேவதைதான் அழகிய வடிவம் எடுத்து ஆலயத்தைவிட்டு வெளியே வந்து நிற்கிறாளோ என்று மலைத்தபடி ஸ்வேத ஹூனர் தலைவன் மகிபாலன் கேயூராவையே பிரமிப்புடன் நோக்கினான். தங்களது இடுங்கிய கண்களால் மோஷோவும் லேவூ இருவரும், கேயூராவை வியப்புடன் நோக்கினர்.

கேயூரா ஸ்தம்பித்து போய் நிற்க, மரத்தின் பின்பாக ஒளிந்திருந்த பரமபுருஷன், தனது மகள் அவர்களிடம் சிக்கிவிட்டதை உணர்ந்து வேறு வழியின்றி அவர்களை நோக்கி நடந்தான்.

தங்கள் முன்பாக பரமன் வந்து நிற்க, இன்னும் எத்தனை பேர் இருக்கிறீர்கள் என்னும் பாவனையில் மகிபாலன் அந்த மரங்களின் பக்கமாக நோக்க, ஒளிந்திருந்த கல்யாணர் நடுங்கினார்.

https://telegram.me/aedahamlibrary

தூமகேதுவை ஆராய்வதற்கு வந்த தனது கதை அங்கேயே முடிந்துவிடுமோ என்கிற அச்சம் அவருள் எழுந்தது.

மகிபாலன் அந்த கணமே கேயூராதான் தனது வருங்கால மனைவி என்பதை தீர்மானித்துவிட்டான். இப்படிப்பட்ட அழகை அடையும் ஆண்மகன் உலகிலேயே பாக்கியசாலி! தனக்குள் தீர்மானித்தான். கேயூராவை அந்த கணமே கடத்திச் செல்லும் நோக்கத்துடன் குதிரையை அவளது அருகே ஓட்டிச்சென்று அவளது கூந்தலைப் பற்றினான்.

தனது மகளுக்கு ஆபத்து என்பதை புரிந்து கொண்டு நோக்கு வர்மத்தை பிரயோகித்து, மகிபாலன் வசியப்படுத்தும் எண்ணத்துடன் அவன் முன்பாக நிற்க அவன் தனது வாளை ஓங்கி பரமனை நோக்கி வந்தான்.

கேயூரா வீறிட்டு அலறினாள். மகிபாலன் தனது வாளை உயர்த்தி பரமனை வெட்டுவதற்காக அவனது கழுத்தை குறி வைத்த போது, லேவூ குறுக்காக வந்து அவனை தடுத்தான். லேவூவின் கண்கள் இப்போது பரமபுருஷனின் கண்களை குறிவைத்து அவற்றினுள் உறுத்து நோக்க, பரமனின் கண்கள் லேவூவின் கண்களுள் சிறைப்பட்டது.

தனது சுய நினைவை இழந்தான், பரமபுருஷன். ஸ்வேத ஹூனர்கள் கதறிக்கொண்டிருந்த கேயூராவை பலவந்தமாக கடத்திச் செல்ல, பரமபுருஷனோ சந்திரகிரி மலையின் மீது ஏறிக்கொண்டிருந்தான். கல்யாணர் அலறியபடி அவனைத் தொடர்ந்து வந்து தன்னால் இயன்ற அளவு அவனைத் தடுக்க முயன்றார்.

நோக்கு வர்மத்தின் பிடியில் இருந்த பரமபுருஷன், சந்திரகிரியின் உச்சியில் இருந்து கீழே குதித்து தனது முடிவைத் தேடிக்கொண்ட போது, விடியத்துவங்கிவிட்டது.

வல்லபனையும், பத்ரஷீலாவையும் நினைவு இருக்கிறதா? அவர்களுக்கு, ஆம்ரபாலியும், பரமபுருஷனும் இழைத்த துரோகங்களுக்கு, காலம் தக்க பதில் அளித்துவிட்டது... கர்மாவின் கோர விளையாட்டை அறியாதவர்கள் தான் மற்றவர்களின் வாழ்வில் விளையாடத் துணிவார்கள் என்கிற பாடத்தை மட்டும் மனித வர்க்கம் ஏன் இன்னும் கற்காமல் இருக்கிறதோ தெரியவில்லை?

கடத்தப்பட்ட கேயூரா மகிபாலனால் சிறைவைக்கப்பட்டாள். அவளை தான் மணந்து கொள்ளப் போவதாக மோஷோவிடம் கூறினான், மகிபாலன். அவர்களது திருமணத்தை நடத்திக் கொடுத்துவிட்டு, தானும்

https://telegram.me/aedahamlibrary

லேவூவும் தங்களது பரத கண்ட சுற்றுப்பயணத்தை நிறைவு செய்து கொண்டு மீண்டும் சீனத்திற்குப் புறப்படுவதாக அறிவித்தார், மோஷோ.

கேயூராவிடம் அவள் மகிபாலனை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்கிற தகவலை அறிவித்ததே லேவூதான். அதற்கு தான் உடன்பட முடியாது, அதற்கு பதிலாக தன்னைக் கொன்றுவிடு என்று கதறி அழுத, கேயூராவையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்த லேவூ அங்கிருந்து அகன்றான்.

திருமணத்திற்கு ஏற்பாடு செய்யப்பட, லேவூ கேயூராவுக்கு காவலாக நியமிக்கப்பட்டான். திருமணத்தன்று மணமேடையில் நின்றிருந்த மகிபாலன், கேயூராவுக்காக ஆசையுடன் காத்திருந்தான். திருமணம் முடிந்து உலகிலேயே பேரழகியாகத் திகழும் ஒருவளுடன் அன்றைய இரவைக் கழிக்கப் போகிறான், என்கிற எண்ணம் உற்சாகத்தை வாரி வழங்க ஆவலுடன் அவள் வரும் திக்கையே கவனித்துக் கொண்டிருந்தான்.

லேவூ வெறித்த உணர்ச்சியில்லாத கண்களுடன் மகிபாலனை நோக்கியபடி கேயூராவுடன் வர, அவள் அமைதியாக நடந்து வந்தாள்.

எப்படி இருக்கிறாள் அந்தப் பெண்? அமைதியாக வருகிறாளே! என்னை மணக்க சம்மதித்துவிட்டாளா? என்னும் கேள்வி தொனிக்க, மகிபாலன் லேவூவின் கண்களை நோக்கினான்.

மோஷோ அவர்களுக்காக காத்திருந்தார். கேயூராவின் கரத்தைப் பிடித்து மகிபாலனின் கரத்தில் வைத்து இருவரின் கரங்களிலும், நூலால் பிணைத்து பத்ம முத்திரையை கையில் வைத்தால் திருமணம் முடிந்ததாக பொருள். கையில் பிணைக்கும் நூலுடனும், பத்ம சின்னத்தைப் பதிக்க முத்திரைக் கோலுடன் நின்றார் மோஷோ.

கேயூராவின் பக்கத்தில் நடந்து வந்தான், லேவூ. அருகில் வந்ததும் திருமணச் சடங்கை துவங்கினார் மோஷோ.

திடீரென்று –

எதிர்பாராத அந்த சம்பவம் நடந்தது. மோஷோவின் முன்பாக மண்டியிட்டு அமர்ந்தான் மகிபாலன்.

"குருவே! நாம் கைப்பற்றியுள்ள இந்தப் பெண்ணை லேவூ திருமணம் செய்து கொள்ள ஆசைப்படுகிறான். அவர்கள் இருவரையும் வாழ்க்கையில் இணைத்து விடுங்கள்...” என்று வேண்ட, திகைத்துப்

https://telegram.me/aedahamlibrary

போன மோஷோ, லேவூ--வைப் பார்க்க, அவன் தலையசைத்து தனது சம்மதத்தைத் தெரிவிக்க, மோஷோ கேயூராவை நோக்கினார். நடப்பது நடக்கட்டும் என்று தனது விதியிடம் சரணாகதி அடைந்து விட்டவளாக நின்றிருந்தாள் கேயூரா.

லேவூ கேயூராவை மணந்து கொண்டான். மோஷோவும், லேவூ-வும் சீனத்திற்குப் புறப்பட்டனர். உடன் கேயூராவும் புறப்பட்டாள். மகதத்து ஆம்ரபாலியின் மகளாகப் பிறந்து இப்போது சீனத்தின் மருமகளாகப் புறப்பட்டுக்கொண்டிருந்தாள் கேயூரா.

அவர்கள் சீனத்துக்குப் புறப்பட்டுச் சென்றதும், மகிபாலன் சுய நினைவைப் பெற்றான். “நான் கடத்தி வந்த அந்த பேரழகுப் பெட்டகம் எங்கே?” என்று தனது தளபதிகளிடம் கேட்டான்.

“நீங்கள் தானே லேவூ-வுக்கும், அந்தப் பெண்ணிற்கும் திருமணத்தை நடத்தி அவர்களை சீனத்திற்கு அனுப்பி வைத்தீர்கள்!” -- அவர்கள் கூற, அதிர்ச்சியில் சிலையாக நின்றான், மகிபாலன்.

கேயூராவைக் கண்டதுமே அவள் மீது நாட்டம் கொண்டுவிட்டான், லேவூ. அவன் மீது அன்பு செலுத்தி அவனிடம் நிலவிய கொடூர எண்ணங்களை நீக்கி, அவனை சிறிது சிறிதாக பண்படுத்தி நல்ல காதல் கணவனாக மாற்றினாள் கேயூரா.

லேவூ - கேயூராவின் காதல் வாழ்க்கைக்கு அடையாளமாக ஒரு பெண் குழந்தை பிறந்தது. இவர்களின் வழித்தோன்றலாக ஒரு பெண் வருவாள். அவள் பெயர் பிரக்ஞுதாரா என்று வைக்கப்படும். புத்த மார்க்கத்தின் பெரிய சித்தினியாக உருவாகி மீண்டும் காஞ்சிக்கு வருவாள்.

சிம்மவர்மன் என்கிற பல்லவ மன்னனின் மூன்றாவது மகன் ஜெயவர்மனை போதிதர்மாவாக மாற்றி சீனத்திற்கு அழைத்துச் செல்லப் போகிறாள், இந்த பிரக்ஞுதாரா. இவளை போதிதர்மா தனது குருவாக ஏற்றுக்கொள்வான்.

பிரக்ஞுதாரா மீண்டும் எதற்கு காஞ்சிக்கு வர இருக்கிறாள்? தேவ உடும்பர ரகசியம் தெரிந்த கேயூராவின் குடும்பத்தைச் சேர்ந்தவள் காஞ்சிக்கு வருகிறாள் என்றால் எதற்காக இருக்கும்? எல்லாம் அந்த அத்திமலை ரகசியத்தைக் கைப்பற்றத்தான் அவள் வர இருக்கிறாள்.

[1] மூஷிக தேசம் மிகவும் பழைமை வாய்ந்தது. மகாபாரதத்தில் மூஷிக தேசம் பற்றி குறிப்பு உள்ளது. ஆய் வம்சம் என்றும் இதனை

https://telegram.me/aedahamlibrary

கூறுகிறார்கள். சங்க காலத்தில் மூஷிக வம்சம் பற்றிய குறிப்புகள் உள்ளன. நன்னன் என்கிற மன்னன் இந்த தேசத்தை கி.மு.வுக்கு முன்னரே ஆண்டான். மூஷிக தேசத்தின் தலைநகரம் பழையங்காடி என்கிற பழி... சேர நாட்டின் பகுதிகள், நீலகிரி, கோவை, பொள்ளாச்சி, குடகு போன்றவை மூஷிக நாட்டின் பகுதிகளாக இருந்தன.

[2] தூமகேது - வால் நட்சத்திரம்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 35. மூன்றாம் பிறை உதித்தது

காஞ்சி –

மாலையில் நிர்மலமாக இருந்த கிழக்கு வானில், இரவு படர்ந்ததும் எங்கிருந்தோ கருமை மேகங்கள் படையெடுத்து வந்தன. கிழக்கு வானில் அணிதிரண்ட அவை, மெதுவாக முக்கூடலின் மீது பரவி, பிறகு அத்தியூர், தருமநகரம் மற்றும் ஒத்தாடை ஆகிய பகுதிகளின் மீது தோரணமாக ஊசலாட, அவ்வப்போது மின்னல் வெட்டி, இடி இடித்து வரப்போகும் மழை பலமானதாக இருக்கப் போவதை மக்களுக்கு உணர்த்தியது. அத்திமலைத் தேவனின் ஆலய மணியோசை இரவு ஆராதனை நடைபெறுவதை தெரிவித்தது. மழையில் சிக்கிவிடப் போகிறோமே என்கிற கவலையில் தொலைதூரத்தில் இருந்து வந்தவர்கள் ஆலயத்தைவிட்டுப் புறப்பட்டுச் சென்றார்கள்.

ஆலயத்தின் திருக்காப்பு சாற்றப்பட்டு, வழக்கம் போல வீரகொசுவனிடம் திறவுகோல்கள் ஒப்படைக்கப்பட்டன. மழை பலமாகப் பெய்யத் துவங்கியது.

அத்திமலைத் தேவனின் ஆலயம் அமைதியில் மூழ்கியிருந்தது. ஆலய பிரகாரங்களில் தண்ணீர் ஆறாகப் பெருகி, ஏற்கனவே நிரம்பியிருந்த பொற்றாமரைக் குளத்தில் சேர்ந்தது.

பிரம்மன் அஸ்வமேத யாகம் நடத்திய காலத்திலிருந்து பல பிரச்னைகளைக் கடந்து வந்திருக்கிறான், அத்திமலைத் தேவன்…

அத்தியூரானின் ரகசியத்தை அறிய புலிவேமு மற்றும் பரப்பஸ்வாமி செய்த முயற்சிகள், திவ்ய பாதா, சங்கமித்தா, மஹிந்தா, ஆகியோர் அத்திமலை ரகசியத்தை அறிய முற்பட்டு திருலோச்சன பல்லவனால் நாடு கடத்தப்பட்டது, அத்தியூரான் தொடர்பாக கரிகாலனுக்கும் இளந்திரையனுக்கும் ஏற்பட்ட மோதல், சமுத்ரகுப்தனின் படையெடுப்பு என்று தொடர்ந்து அத்திமலைத் தேவனுக்கு ஏற்படும் அரசியல் பிரச்சனைகள் இனியாவது தீருமா?

சாம்ராஜ்ய கனவுகளுடன் சாணக்கியன் மட்டும் வடக்கே செல்லாமல் இருந்திருந்தால், அத்திமலைத் தேவனுக்கு இவ்வளவு பிரச்சனைகள் உண்டாகி இருக்காதோ என்னவோ.

சகோதரர்கள் கரிகாலனும், இளந்திரையனும், அத்திமலையானின் ஆலயத்தை பிரம்மாண்டமாக எழுப்பிப் பாதுகாப்புகளை

https://telegram.me/aedahamlibrary

பலப்படுத்திவிட்டார்கள். காஞ்சி மாநகரையும் நகரேஷு காஞ்சி என்று வட புலத்தவர் பிரமிக்கும்படியாக விரிவுபடுத்திவிட்டனர்.

தொண்டை நாடு சான்றோர் உடைத்து என்று போற்றும்படியாக, அறிஞர்களால் நாடு பெருமை அடைந்துகொண்டு இருக்கிறது. இனி காஞ்சிக்கு என்ன குறை இருக்க முடியும்!

பல்லவ மன்னர்கள் தங்கள் சாம்ராஜ்யத்தை நிலைபெறச் செய்து விட்டனர். கி.பி.350 இல் சமுத்ரகுப்தன் படையெடுத்து வந்து விஷ்ணுகோபனின் நட்பை பெற்றுக் கொண்டு மீண்டும் மகதம் சென்ற பிறகு ஐந்து வருடம் அரசாண்ட விஷ்ணுகோபன், கி.பி.355 இல் இறந்தான். அதன் பிறகு பல்லவத் தேரின் சக்கரம் விரைவாக உருண்டோடியது. மன்னர்கள் வந்தார்கள், வென்றார்கள், சென்றார்கள்!

விஷ்ணுகோபனின் மகன் குமாரவிஷ்ணு கி.பி. 355 இல் பதவி ஏற்றான். அதன் பிறகு அத்திமலையான் ஆலயத்தில் ஆராதனைகள் நியமப்படி நடந்தேறியதால், அத்திமலைத் தேவன் மனமகிழ்ந்து வளங்களை வாரி அளித்தான். தொடர்ந்து பல பல்லவ மன்னர்கள் அத்திமலையானுக்குத் தொண்டுகளைச் செய்தார்கள்.

குமாரவிஷ்ணு **(355 - 370)**

இரண்டாம் ஸ்கந்தவர்மன் **(370 - 385)**

வீரவர்மன் **(385 - 400)**

மூன்றாம் ஸ்கந்தவர்மன் **(400 - 43**

இரண்டாம் சிம்மவர்மன் **(436 - 460)**

ஸ்கந்தவர்மன் **(460 - 480)**

முதலாம் நந்திவர்மன் **(480 - 510)**

இரண்டாம் குமாரவிஷ்ணு **(510 - 530)**

புத்தவர்மன் **(530 - 540)**

மூன்றாம் குமாரவிஷ்ணு **(540 - 550)**

என்று பல்லவ மன்னர்களின் ஆட்சி தொடர்ந்தது.

https://telegram.me/aedahamlibrary

கி.பி. 550 வரை எல்லாம் அமைதியாகத்தான் போய்க் கொண்டிருந்தது. இனி அத்திமலையானுக்கு பிரச்சனைகள் ஏற்படாது என்று அனேகமாக அனைவருமே நம்பிக்கொண்டிருந்தனர், பலத்த மழை பெய்து கொண்டிருந்த அந்த நாள் வரை...

ஒத்தாடை அரண்மனை –

பல்லவ மன்னன் மூன்றாம் சிம்மவர்மன் மடியில் மூத்த மகன் அவனிசிம்மனையும், இரண்டாவது மகன் தானவர்மனையும் இருத்திக்கொண்டு அந்தப்புர வாயிலையே கவனித்துக்கொண்டிருந்தான். அரசி ஆரணவல்லிக்கு பிரசவ வலி எடுத்துவிட்டது. பிறக்கப் போவது மகனா... மகளா...? என்கிற ஆவலுடன் சிம்மவர்மன் காத்திருக்க, மருத்துவச்சி கதவைத் திறந்து கொண்டு அந்தப்புரத்தைவிட்டு வெளியே வந்தாள். அவளது கையில் பொட்டணமாக ஒரு வஸ்த்திரத்தில் குழந்தையை ஏந்தியிருந்தாள்.

“அரசே! நமது பல்லவத்திற்கு மற்றொரு இளவரசன் கிடைத்திருக்கிறான்!”

மருத்துவச்சி பணிவுடன் சொல்ல, சிம்மவர்மன் தனது முதல் இரண்டு மகன்களைத் தட்டிக் கொடுத்தான்.

"செல்வங்களா! உங்களுக்கு தம்பி பிறந்திருக்கிறான். அவனுக்கு ஜெயவர்மன் என்று பெயர் வைப்போமா?”

மன்னன் கேட்க, இரண்டு மகன்களும் கையை தட்டி ஆர்ப்பரித்தனர்.

“ஜெயவர்மன்… ஜெயவர்மன்!” என்று இளவரசர்கள் உச்சரிக்க

சரியாக அப்போதுதான், மாவிலக்கை துறைமுகத்தில் கலம் ஒன்றில் இருந்து இறங்கிய அந்த முதிய சித்தினி தனது தண்டை அணிந்த பாதத்தை பல்லவ மண்ணில் வைத்தாள். அவள்தான் பிரக்ஞுதாரா.[1] அவளுடன் ஒரு சீன தேசத்து வாலிபனும் கலத்தில் இருந்து இறங்கி வந்தான். அவனது பெயர் ஜினிங்டியாண்டை.

அன்றுதான் பிறந்த பல்லவ இளவரசன் ஜெயவர்மனை போதிதர்மாவாக மாற்றி சீனத்திற்கு அழைத்துச் செல்லப் போகிறாள். பிரக்ஞுதாரா நடைபோடத் தொடங்க, அவளது கால் தண்டைகள் குலுங்கின. அந்தத் தண்டைகளின் ஒலியினைக் கேட்டு அதிர்ச்சி அடைந்தவனைப் போல, மருத்துவச்சியின் கையில் இருந்த ஜெயவர்மன் வீறிட்டு அழத்தொடங்கினான்.

https://telegram.me/aedahamlibrary

[1] போதிதர்மா என்கிற ஜெயவர்ம பல்லவனை புத்த மார்க்கத்தில் திருப்பி தனது சீடனாக ஏற்ற பிரக்ஞுதாரா மிகவும் சக்தி வாய்ந்த சித்தினியாக சித்தரிக்கப்படுகிறாள். அவள் இருநூறு ஆண்டுகள் வாழ்ந்ததாக சீனர்கள் நம்புகிறார்கள்.

*****

https://telegram.me/aedahamlibrary

# இனி பல்லவ காஞ்சி

## (கி.பி. 500 முதல் கி.பி. 600 வரை)

*****

https://telegram.me/aedahamlibrary

# 36. விண்ணில் பாய்ந்த வினோத ஒளி

காம்போஜ தேசம் – [1]

அதன் தலைநகரம் தருமநகரம்! தருமநகரின் வெளியே ஐராவத மலைத்தொடர் துவங்கும். ஐராவத மலை யானையின் வடிவில் இருக்கும். யானையின் சிரசில் இரண்டு மத்தகங்கள் இருப்பதைப் போன்று அந்த மலையின் உச்சியில் இரண்டு செங்குத்தான பாறைகள் நிற்கும். ஒரு பாறையின் மேல் தேவராஜனின் ஆலயம் காணப்படும். அந்தப் பகுதியை கஜமலை என்று அழைப்பார்கள். மற்றொரு பாறையின் மேல்தான் வசந்த குடீரம் என்கிற வசந்த மாளிகையை எழுப்பி இருந்தான், மன்னன் பூர்ணவர்மன். அதனை வசந்தகிரி என்று அழைத்தனர். கோடைக் காலத்தில் அரசகுடும்பத்தினர் வசந்த குடீரத்தில்தான் தங்குவார்கள்.

ஐராவத மலையைச் சுற்றிப் பெரும் பள்ளத்தாக்கு காணப்பட்டது. வசந்த குடீரம் மலையிலிருந்து அருவியாக பாயும் தண்ணீர், தர்மாவதி ஆறாக ஓடும்.

தருமநகரம் [2] ஐராவத மலையைச் சுற்றி ஓடும் பள்ளத்தாக்கின் மறுபுறம் இருந்தது. ஐராவத மலையையும், தருமநகரத்தையும் பிரித்தது அந்த விஸ்தாரமான பள்ளத்தாக்கு. பள்ளத்தாக்கில் ஓடும் தர்மாவதி நதியின் குறுக்காக நிற்கும் பாலம்தான் நகரத்தையும், ஐராவத மலையையும் இணைத்தது.

வசந்த குடீரத்தின் உப்பரிகையில் அமைந்திருந்த தடாகத்தில் நீராடிக்கொண்டிருந்தாள் ககனமயி… தடாகத்தின் நடுவில் அமைக்கப்பட்டிருந்த தாமரை மலர் வடிவிலான மேடையில் அவள் அமர்ந்திருக்க, இருபுறமும் நின்றிருந்த கஜ சிலைகள் தமது துதிக்கைகளால் ககனமயியின் மீது நீரை வர்ஷித்துக்கொண்டிருக்க, கஜலக்ஷ்மிதான் அங்கே நீராடிக் கொண்டிருக்கிறாளோ என்கிற ஐயம் எழுந்தது.

காம்போஜத்தின் இளவரசி ககனமயி! மன்னன் சூர்யவர்மனும் அவனது மனைவி கிரணகாந்திகாவும் தவமிருந்து பெற்ற மகள். கோடை துவங்கியதும் ஐராவத மலையினுச்சியில் இருந்த தங்களது வசந்த குடீரத்திற்கு குடும்பத்துடன் வந்துவிட்டான், சூரியவர்மன்.

முந்தைய தினம்தான் வசந்த குடீரத்தில் இருந்து கஜமலைக்குச் சென்று

https://telegram.me/aedahamlibrary

தேவராஜனுக்கு சிறப்பு பூசனைகளை செய்திருந்தனர், அரச குடும்பத்தினர்.

வாசனாதி பொடிகளை ககனமயியின் தேகத்தில் தூவினாள், தோழி மனமஞ்சரி. இன்னும் இரண்டு தோழிகள், சந்தனாவும், நந்தனாவும் ககனமயியின் மீது பன்னீரும் குங்குமப்பூவும் கலந்த செந்நிற சந்தனக் குழம்பை அப்பினர். தன்னை மறந்து இளவரசி நீராடிக் கொண்டிருக்க, இன்னும் சில தோழிகள், உப்பரிகையில் அமைக்கப்பட்டிருந்த மஞ்சத்தில் சயனிக்கப் போகும் ககனமயிக்கு மிருதுவாக இருப்பதற்காக உதிரிப்பூக்களை பட்டுக் கம்பளத்தின் மீது வாரி இறைத்துக் கொண்டிருந்தனர். கண்களை மூடி, மேனியை தாலாட்டிக் கொண்டிருந்த நீரின் பாய்ச்சலை சிலாகித்து ரசித்துக் கொண்டிருந்த ககனமயி, மெதுவாக கண்களை திறந்தாள். அவள் அவ்வாறு கண்திறந்தாள் என்றால், ‘நீராட்டியது போதும். என்னை கரையேற்றுங்கள்' என்பதாக குறிப்பறிந்து கொள்ள வேண்டும் தோழிகள். மனமஞ்சரி ககனாவை மேடையில் இருந்து இறக்கி, ஓரிருமுறை அவளை நீரில் மூழ்கச் செய்து, தேகத்தில் அப்பியிருந்த வாசனாதிப் பொடிகளை அகற்றி பிறகு அவளை கரையேற்றினாள். மஞ்சத்தின் அருகே நின்றிருந்த தோழிகள் விரைவாக ஓடிவந்து இளவரசியை தங்களது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

அவசரமாக இளவரசியின் ஆடைகளை அகற்றி, துடைத்து புதிய ஆடைகளை அணிவித்து அவளை மஞ்சத்தில் சரித்தனர். உயரமான திண்டினில் தலைவைத்து படுத்தாள், ககனா. ஈரமாக இருந்த அவளது நீண்ட கூந்தலை உலர்த்த வேண்டி அதனை மஞ்சத்தின் பின்பாக வழிய வைத்து, அதனைத் துடைத்து, அகில் மற்றும் இதர தூபங்களைப் போடத்துவங்கினர்.

அதற்குள் சென்று தனது ஆடைகளை மாற்றி வந்த ககனாவின் பிரியதோழி மனமஞ்சரி இளவரசியின் அருகே வந்து நின்றாள்.

“இப்போது எப்படி உணர்கிறாய் ககனா? இரவெல்லாம் தேகம் வலிக்கிறது என்று கூறினாயே?” அக்கறையுடன் கேட்டாள் மஞ்சரி.

“இப்போது வலி இல்லை. ஆனால் ஐராவத மலையின் உச்சியில் மேகங்கள் தேகத்தை வருடிக்கொடுக்க, நடை பயில்வது எல்லா வேதனைகளையும் மறக்கடிக்கச் செய்துவிடுகிறது!”

முந்தைய நாள் அனுபவத்தை எண்ணிப் பார்த்து, கிறக்கத்துடன் கூறிய ககனா மஞ்சத்தில் அமர்ந்து கொண்டாள்.

https://telegram.me/aedahamlibrary

“எளிதாகச் சொல்லிவிட்டாய், ககனா! ஆனால் ஒருமுறை மிகவும் அடர்ந்த மேகம் ஒன்று நம்மைச் சூழ, நீ எனது பார்வையிலிருந்து மறைந்த போது நான் பதறிப் போனேன். பாதை தெரியாமல் நீ பள்ளத்தாக்கில் விழுந்தால், உனது தந்தைக்கு யார் பதில் கூறுவது? உன் தந்தை ஒன்றும் கூறாவிட்டாலும், உனது வருங்கால கணவனும் மாமன் மகனுமான துஷாந்தன் உனக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால், எங்களது தலையை வாங்கிவிடுவாரே!” மஞ்சரி ஏளனமாகக் கேட்டாள்.

ககனா எரிந்து விழுந்தாள். “இந்த இனிமையான வேளையில் எதற்காக அவனது பெயரை உச்சரிக்கிறாய்? ஒரு நாள், துஷாந்தனனை வரவழைத்து அவனை பள்ளத்தாக்கில் உருட்டிவிடப் போகிறேன்! மேகம் மறைத்ததில் பாதை தெரியாமல், பள்ளத்தாக்கில் விழுந்து இறந்தான் என்று தந்தையிடம் கூறிவிடுவேன்!” - ககனா கூற, மஞ்சரி சிரித்தாள்.

“இளவரசி! சற்றே மல்லாந்து படுங்கள். கூந்தலுக்கு அகில் சூரணத்தை தூபமாக போடுகிறேன்!” - நந்தனா கூற, ககனா மீண்டும் தலையைத் திண்டில் சரித்தபடி மல்லாந்து படுத்தாள்.

அவளையும் அறியாமல் அவளது கண்கள் இரவு நேர வானை நோட்டமிட்டன. தெளிவான வானில் இறைக்கப்பட்ட வைரங்களாக ஜொலித்தன, தாரகைகள்.

“பரவாயில்லையே! வானம் மேகம் எதுவுமின்றி நிர்மலமாகக் காணப்படுகிறதே!” ககனமயி வியந்தாள்.

“மேகம் இல்லாமல் இருப்பது நல்லதுதான். மேகங்கள் இருந்தால், மன்மதன் மற்றும் தேவர்கள் மேகங்களின் பின்பாக மறைந்து கொண்டு தாங்கள் நீராடுவதை பார்ப்பார்கள்!” மஞ்சரி கூற, ககனா கலகலவென்று சிரித்தாள். அவளது பார்வை வானத்தையே நோக்கிக் கொண்டிருந்தது.

இந்த உலகம்தான் எவ்வளவு அழகானது? உண்மையிலேயே அழகானதா இல்லை இவள் இளவரசியாக இருப்பதால் அழகானவை மட்டுமே இவளது கண்களில் படுகிறதா? ககனா அதிகம் பயணம் செய்பவளல்ல. தருமநகரத்தையும், ஐராவத மலையை மட்டுமே கண்டிருப்பவள். காம்போஜ தேசத்தின் மற்ற பகுதிகளைக் கூட கண்டவள் அல்ல. ஐராவத மலை மற்றும் அதனை சுற்றியுள்ள பள்ளத்தாக்கு, தருமாவதி நதி என்று இந்த சூழ்நிலையைக் காட்டிலும் அழகான பகுதிகள் இந்த நிலவுலகில் உள்ளதா என்ன?

https://telegram.me/aedahamlibrary

மனதிடம் இந்தக் கேள்வியை கேட்பதற்காக கண்களை மூடியவள், மீண்டும் அவற்றை திறந்து விண்ணையே வெறித்துக்கொண்டிருந்தாள். தோழியர் அவளது கூந்தலுக்கு போட்ட தூபங்களின் மணம் நாசியை தாக்கி சுகமான அனுபவத்தைத் தர, தனது பார்வையை மேற்கு வானின் பக்கமாகத் திருப்பினாள்.

சட்டென்று அவளது பார்வை நிலைகுத்தி நின்றது. மேற்கு வானின் கீழ் பகுதியில் தொலைவில் ஒரு சிறு புள்ளியாக ஒளிக்கற்றை ஒன்று தோன்றி நகர்ந்து பிறகு பெரியதாகி, மீண்டும் நகர்ந்து சிறுபுள்ளியாகி, மீண்டும் சுழன்று பெரியதாகவும், சிறியதாகவும் மாற்றி மாற்றி பிரகாசித்துக்கொண்டிருந்தது.

அதைக் கண்டு வியப்புடன் எழுந்து அமர்ந்தாள், ககனமயி.

"மஞ்சரி! அங்கே பார்...” மேற்கு வானை சுட்டிக் காட்டினாள், ககனா.

மஞ்சரி அவள் சுட்டிக்காட்டிய திக்கில் நோக்க, அவள் பார்வையிலும் அந்த ஒளிக்கீற்று பட்டது. ககனாவின் கூந்தலை வருடிக்கொண்டிருந்த நந்தனாவின் கரங்களும் செயலற்று நின்று போக, அவளும் அந்த ஒளிவட்டத்தை வியப்புடன் கவனித்துக்கொண்டிருந்தாள். மற்ற தோழியரும் அந்த ஒளிவட்டத்தைக் கவனித்தனர்.

“அது என்னவாக இருக்கும்? விசித்திரமாக சுழல்கிறதே?” - ககனா கேட்டாள்.

“விண்கல் ஏதாவது விழுகிறதோ என்னவோ! இல்லையென்றால் அது வால் நட்சத்திரமாக இருக்கும்.”

மஞ்சரி கூற, மற்றொரு தோழியான சந்தனா மறுத்தாள்.

“இருக்காது! இது வானில் ஏற்பட்ட ஒளி அல்ல. கடலுக்கப்பால் உள்ள ஏதாவது நாட்டின் கலங்கரை விளக்கத்தின் ஒளியாக இருக்கக்கூடும். அந்த ஒளிவட்டம் சுழல்வதைப் பார்க்கும் போது, அது கலங்கரை விளக்கத்தில் இருந்து வீசும் ஒளியாகத்தான் படுகிறது.” - சந்தனா கூறினாள்.

சந்தனாவின் பாட்டனார்தான் சூரியவர்மனின் ராஜகுரு சோமஸ பண்டிதர். அவரது பெயர்த்தி என்பதால் வான சாஸ்திரத்தில் மிகவும் ஈடுபாடு காட்டி வந்தாள், சந்தனா.

“அவள் கூறுவது சரிதான், ககனா! அந்த ஒளிவட்டம் குடதிசையின்

https://telegram.me/aedahamlibrary

அடிவானில்தான் தோன்றியது!” மஞ்சரி ஆமோதித்தாள்.

ககனாவின் புருவங்கள் உயர்ந்தன. "கடந்த ஒரு வாரமாக இரவு வேளைகளில் உப்பரிகையில்தானே கழிக்கிறேன். தினமும் தாரகைகளை பார்த்தபடிதானே ஓய்வெடுக்கிறேன். அன்றெல்லாம் கண்ணில் படாத, அந்த ஒளிவட்டம் இன்றுதானே முதன்முதலாக எனது கண்களில் தெரிந்தது!” - ககனா கேட்டாள்.

“நாம் கவனித்து இருக்கமாட்டோம்!” - நந்தனா கூற, தலையசைத்து மறுத்தாள் இளவரசி.

“இல்லை அன்றாடம் நான் தாரகைகளுடன் உறவாடுகிறேன். இந்த ஒளியை நான் இதற்கு முன்பாக பார்த்ததே இல்லை!” ககனா கூறினாள்.

“இப்போதுதானே உங்கள் பாட்டனார் பூர்ணவர்மனால் இந்த வசந்த குடீரம் எழுப்பப்பட்டு நாம் இங்கே வரத் துவங்கியுள்ளோம். இந்த ஒளிவட்டம், எத்தனை காலமாக வீசிக்கொண்டிருக்கிறதோ!” - சந்தனா கூறினாள்.

ககனா மீண்டும் அந்த ஒளிவட்டத்தை உற்று நோக்கினாள். பிரச்னைகளே இல்லாத அரச போக வாழ்க்கையில் அந்த புள்ளியான ஒளிவட்டம் அவளது சிந்தையில் உறுத்தியது. அந்த மர்மத்தை உடனே விடுவிக்க வேண்டும் என்கிற எண்ணம் அவளது மனதில் தோன்றியது.

“நந்தனா! ஓடிச்சென்று எனது தாய் தந்தையரை அழைத்து வாயேன்!”

ககனா உத்தரவிட, நந்தனா விரைந்தாள்.

ஐராவத மலையின் குளிர்காற்றை தவிர்க்க வேண்டி, சற்று முன்னதாகவே பள்ளியறைக்குச் சென்றுவிட்டிருந்த அரச தம்பதிகள் மஞ்சத்தில் அமர்ந்தபடி சதுரங்கம் விளையாடிக்கொண்டிருக்க, தயக்கத்துடன் வந்து நின்ற நந்தனாவை வியப்புடன் நோக்கினாள் கிரண காந்திகா.

“என்ன வேண்டும், நந்தனா?” - காந்திகா கேட்டாள்.

"இளவரசியார் உடனடியாக அரசரையும், தங்களையும் உப்பரிகைக்கு அழைத்து வரச் சொன்னார்.” - நந்தனா கூற, மன்னன் சூரியவர்மன் புருவங்களை உயர்த்தினான்.

“என்ன விஷயம்?”

https://telegram.me/aedahamlibrary

“இளவரசியார் மேற்கு வானில் ஒரு வினோத ஒளிவட்டத்தை கண்டிருக்கிறார். அதை தாங்கள் காண வேண்டும் என்பதற்காகவே அழைக்கிறார்!”

நந்தனா கூறிவிட்டு விலகி நிற்க, சூரியவர்மனும், காந்திகாவும் அவசரமாக உப்பரிகையை நோக்கி நடந்தனர். நந்தனா சற்று இடைவெளிவிட்டு அவர்களைத் தொடர்ந்தாள்.

அரச தம்பதிகள் உப்பரிகையை அடைந்த போது ககனாவும் அவளது தோழிகளும் இன்னும் அந்த ஒளிவட்டத்தையே கவனித்துக்கொண்டிருந்தனர்.

தந்தையைக் கண்டதும் மஞ்சத்தில் இருந்து எழுந்து அந்த ஒளிவட்டத்தினை அவனுக்குச் சுட்டிக்காட்டினாள்.

"எங்கிருந்து வருகிறது அந்த ஒளி?” சூரியவர்மன் அதனை நோக்கியபடி கேட்டான்.

“தெரியவில்லை தந்தையே! திடீரென்று எனது கண்களில் தென்பட்டது! கடலுக்கப்பால் மேற்கே என்ன இருக்கிறது?” - ககனா கேட்டாள்...

“பாண்டியம் இருக்கிறது. சோழம் இருக்கிறது. பல்லவம் இருக்கிறது. சாளுக்கியம் இருக்கிறது!” சூரியவர்மன் கூறினான்.

திடீரென்று -

அவர்கள் பார்த்துக்கொண்டு இருக்கும் போதே அந்த ஒளிவட்டம் ஒரு சிறு புள்ளியாகி, பிரகாசம் குன்றி, அப்படியே மறைந்து போனது.

“அரசே! அந்த ஒளி எங்கிருந்து வருகிறது?” காந்திகா கேட்டாள்.

அவளுக்குப் பதில் கூறுவதற்காக வாய் திறந்தான், சூரியவர்மன். அப்போது பலமான காற்று வீச, காற்றின் ஊடே வெகு தொலைவில் மிகவும் மெல்லிய ஒலியாக அந்த மணியின் முழக்கம் கேட்டது.

‘டங்... டடாங்... டங்... டடாங்'

வெகுதொலைவில் தருமநகர அரண்மனை மதில் சுவரின் மீது பிணைக்கப்பட்டிருந்த அந்த காண்டாமணிதான் ஒலித்துக்கொண்டிருந்தது. தன்னையும் அறியாமல் அரண்மனையின் திக்கில் பதற்றத்துடன் கவனித்தாள், சந்தனா.

"என்ன ஆயிற்று சந்தனா?” - ககனா திகைத்தாள்.

https://telegram.me/aedahamlibrary

“நமது தருமநகரத்து மணி ஒலித்தது போன்ற பிரமை எனக்கு ஏற்பட்டது!” சந்தனா கூறினாள்.

'டங்... டடாங்... டங்... டடாங்'

மீண்டும் மணியோசை கேட்டது. இந்த முறை துல்லியமாக அனைவரின் செவிகளிலும் மணியோசை கேட்டது. தொடர்ந்து மணியோசை நெருங்கிக்கொண்டே வர, இறுதியாக, ஐராவத மலையின் அடிவாரத்தில் இருந்த மணி ஒலிக்க, கடைசியாக வசந்த குடீரத்தின் முன்பாக இருந்த மணியும் ஒலித்தது.

சூரியவர்மனின் தந்தை பூர்ணவர்மனின் ஏற்பாடு இது. கோடையில் வசந்த குடீரத்தில் இளைப்பாறும் போது அவசர பிரச்சனை ஏதாவது என்றால், வசந்த குடீரத்தில் தங்கியிருக்கும் மன்னனை எச்சரிக்கை செய்யும் விதமாக தருமநகர அரண்மனை வளாகத்தில் இருந்து மணியடிக்க, தொடர்ந்து ஐராவத மலை உச்சியில் இருக்கும் வசந்த குடீரம் வரை வழியில் மணிமண்டபங்களை அமைத்தான். அவசர நிலைமை என்றால், முதலில் அரண்மனை மணி ஒலிக்கும். தொடர்ந்து மணிமண்டபங்களில் உள்ள மணிகள் முழங்க, இறுதியாக ஐராவத மலையின் அடிவார மணியும், வசந்த குடீரத்தின் முன்பாக உள்ள மணியும் அடிக்கப்படும். அதைக் கேட்டதும் மன்னர்கள் புறப்பட்டு தருமநகரத்திற்கு விரைவார்கள். அப்போது ஒலித்த மணியோசைகள் அனைவரையுமே குழப்பியது.

"எதற்காக இந்த மணியோசை?” ககனா வியப்புடன் கேட்க, திடீரென்று அரச தம்பதிகள் அமர்ந்திருந்த மஞ்சம் நடுங்கத் துவங்கியது.

உப்பரிகையில் சற்றுமுன் ககனமயி நீராடியிருந்த தடாகத்தில் நீர் சுழலத் தொடங்கியது. வசந்த குடீரம் மாளிகை குலுங்கத் துவங்க, வாயிலில் இருந்த மணி நடுக்கத்தினால் தொடர்ந்து 'டங்... டங்' என்று ஒலித்து சூழ்நிலையை இன்னும் கலவரப்படுத்தியது.

'நிலநடுக்கம்! மலைப்பகுதியைக் காட்டிலும் தருமநகரத்தை இன்னும் பலமாகவே தாக்கக்கூடும்...' மன்னன் சூரியவர்மன் திகிலுடன் தனது தருமபுர அரண்மனை இருந்த திக்கில் நோக்கினான். சிறு புள்ளிகளாக ஒளிர்ந்துகொண்டிருந்த தீபங்கள் இப்போது மினுமினுக்கவில்லை.

வருடத்திற்கு ஒருமுறை நிலநடுக்கம் ஏற்படுவது வாடிக்கையாகிவிட்டது. தரும நகரத்தை வளர்ச்சியடையச் செய்ய இவன் எடுக்கும் ஒரு வருடத்திய நடவடிக்கைகளை ஒரே நாளில் குலைத்துவிட்டுப்

https://telegram.me/aedahamlibrary

போகின்றது நிலநடுக்கம். எதனால் இப்படி வருடா வருடம் நிலநடுக்கம் வருகிறது? குலகுரு சோமஸ பண்டிதரிடம் கேட்டுவிட்டான். அவரால் அதற்கு தக்க பதிலை கூற இயலவில்லை.

"நில நடுக்கத்திற்கு முன்பாக மேற்கு வானில் ஒளிவட்டம் தோன்றியதே, தந்தையே! அதற்கும், நிலநடுக்கத்திற்கும் தொடர்பு இருக்கக்கூடுமோ?" -- ககனா கேட்டாள்.

“ஆராய வேண்டும், ககனா! நானே முதன்முறையாக அந்த ஒளிவட்டத்தினைப் பார்க்கிறேன். சோழ நாட்டின் புகார் துறைமுகத்தில் கலங்கரை விளக்கம் ஒன்று உண்டு. அதன் ஒளி சுழற்சியாகத்தான் இருக்கக்கூடும் என்பது எனது யூகம்!” - சூரியவர்மன் கூறினான்.

நிலநடுக்கம் நின்று, ஓரிருமுறை பூமி குலுங்கிவிட்டு, பிறகு அமைதி அடைந்தது. சூரியவர்மன் பரபரப்புடன் காந்திகாவையும், ககனாவையும் நோக்கியவன், அவர்களைத் துரிதப்படுத்தினான்.

“வசந்த குடீரத்தில் நாம் ஓய்வு எடுத்தது போதும். உடனே தருமநகரத்திற்குப் புறப்படுவோம். மக்கள் அங்கே என்ன அவதிப்படுகின்றனரோ?” - சூரியவர்மன் கூற, இரவென்று கூட பாராமல், உடனே அனைவரும் தருமநகரத்திற்குப் புறப்பட்டனர்.

ஐராவத மலையைவிட்டு இறங்கி, தர்மாவதி ஆற்றின் குறுக்காக நின்ற பாலத்தை மன்னரின் குழாம் நெருங்கும் போதே துணைத் தளபதி தீபன் சமந்தரையன் எதிரே ஒரு புரவியில் வந்து கொண்டிருந்தான்.

ஒரு கையில் தீப்பந்தம் ஏந்தியபடி, மறுகையினால் குதிரையின் கடிவாளத்தை பற்றியிருந்த தீபன் மன்னரின் இரதம் எதிரே வருவதைக் கண்டதும், தனது புரவியை நிறுத்தினான்.

“தீப சமந்தரையா! நிலைமை எப்படி உள்ளது?” --- மன்னன் கேட்டான்.

“சேதம் அதிகமில்லை மன்னா! மரம் ஒன்று அரண்மனை பண்டகசாலையில் விழுந்து கூரை பெயர்ந்துவிட்டது. ஒன்றிரண்டு வீடுகளில் விரிசல்கள் ஏற்பட்டுள்ளது. மற்றபடி சேதங்கள் இல்லை.” - தீபன் கூறினான்.

“நல்லவேளையாக கோவேறு கழுதைகள் அலறி சோமஸ பண்டிதரை எழுப்பிவிட, நிலநடுக்கம் வருவதற்கு முன்பாகவே ஆலய மணியை அடித்து மக்களை எச்சரிக்கை செய்து வீடுகளைவிட்டு வெளியே வரச் செய்துவிட்டோம்!” என தீபன் தொடர்ந்து கூறினான்.

https://telegram.me/aedahamlibrary

கோவேறு கழுதைகளுக்கு நிலநடுக்கங்களை முன்கூட்டியே உணரும் ஆற்றல் உண்டாம். அவற்றின் காதுகள் வான் நோக்கி நீண்டு, அவை அலறத் தொடங்கினால், நிலநடுக்கம் ஏற்படப் போவதற்கு அறிகுறிகளாகக் கொள்ளலாம்.

"தங்களுக்கும், அரச குடும்பத்திற்கும் ஆபத்து ஒன்றுமில்லையே என்பதை அறிந்து வரச் சொல்லி, பண்டிதர் என்னை அனுப்பியதால், நான் வந்தேன்!”

தீபன் சொல்ல, மன்னர் நிம்மதி பெருமூச்சு ஒன்றை சிந்தியபடி மீண்டும் இரதத்தில் அமர்ந்தார்.

“தேவராஜன் புண்ணியத்தில் எங்களுக்கு ஒன்றும் இல்லை!” என்றபடி மன்னர் இரத சாரதியிடம் சமிக்ஞை செய்ய, இரதம் பாலத்தைக் கடந்து தருமநகரினுள் பிரவேசித்தது. மன்னர் குழாத்தை பின்தொடர்ந்தான், தீபன் சமந்தரையன்,

அரண்மனை வாயிலில் இருந்த காவலாளி மன்னரின் இரதம் வருவதைக் கண்டதும், கொம்பு வாத்தியத்தை முழங்க, அரண்மனை வளாகத்தில் இருந்த தனது ஜாகையில் இருந்து ராஜகுரு சோமஸ பண்டிதரும் தளபதி சுகீர்த்தசந்திரனும் வெளியே ஓடிவந்து மன்னனை வரவேற்பதற்கு தயாராக நின்றனர்.

மன்னன் சூரியவர்மன் நேராக ஆலோசனை அறைக்குச் செல்ல, அங்கு அமைச்சர்களும், அதிகாரிகளும் ஏற்கனவே இருந்தனர். தனது தாயுடன் அந்தப்புரத்தை நோக்கி நகர முயன்ற ககனாவை தடுத்தான், மன்னன்.

"ககனமயி! ஆலோசனைக்கு நீயும் தேவைப்படுவாய். நீ மேற்கு வானில் பார்த்த ஒளிவட்டத்தைப் பற்றி சபைக்குத் தெரிவிக்க வேண்டும். அதை நீயே விவரணை செய்வது நல்லது!” என்று கூறிய சூரியவர்மன் மனைவியையும், மகளையும் உடன் அழைத்துக்கொண்டு ஆலோசனை மண்டபத்தினுள் நுழைந்தான்.

அமைச்சர்களும் அதிகாரிகளும் மன்னரை வணங்கினர். சூரியவர்மன் தனது ஆசனத்தில் அமர, காந்திகாவும், ககனாவும் அவனுக்கு இருபுறமும் அமர்ந்தனர்.

தலைமை அமைச்சர் விருபாக்ஷர் எழுந்து நின்று நிலைமையை விளக்கினார்.

"தலைக்கு வந்தது பாகையோடு சென்றது, மன்னரே! சோமஸ பண்டிதர்

https://telegram.me/aedahamlibrary

நிலநடுக்கம் வருவதற்கான அறிகுறிகள் தென்படுவதாகக் கூறியதும், நகர மக்களை எச்சரித்து அவர்களை ஆலய மைதானத்தில் திரளச் செய்தோம். நல்லவேளையாக சேதம் அதிகமில்லை!"

"நல்ல காரியம் செய்தீர்கள்! சென்ற ஆண்டும் நான் வசந்த குடீரத்தில் தங்கிய போதுதான் நிலநடுக்கம் வந்தது. எனக்கு புரியவில்லை. ஏன் இப்படி நடக்கிறது?"

மன்னனின் குரலில் குழப்பம் மிகுந்திருந்தது.

"நானும் சுவடிகளை ஆராய்ந்து கொண்டுதானே இருக்கிறேன், மன்னா! கோள்களின் சுழற்சியில் குறையொன்றுமில்லை. அப்படியிருக்க இந்த நிலநடுக்கம் எதனால் ஏற்படுகிறது என்பது புரியவில்லை?" சோமஸ பண்டிதர் கூறினார்.

மன்னன் ககனாவை நோக்கிவிட்டு பிறகு பண்டிதரை பார்த்தான்.

"ராஜகுருவே! வசந்த குடீரத்தில் தங்கியிருந்த போது எங்களுக்கு ஒரு விசித்திர அனுபவம் ஏற்பட்டது. ககனா! ராஜகுருவிடம் நீ கண்ட காட்சியைக் கூறு!" - சூரியவர்மன் சொன்னான்.

ஒருமுறை அனைவரையும் பார்த்த ககனமயி, தான் கண்ட காட்சியை விவரிக்கத் தொடங்கினாள்.

"உப்பரிகை மஞ்சத்தில் கிடந்து, விண்மீன்களை ரசித்துக்கொண்டிருந்தேன். அப்போது மேற்கு திக்கில் அடிவானில் சிறு புள்ளியாக ஒரு ஒளி வட்டம் தோன்றியது. சற்று பெரியதாக வளர்ந்து சுழலத் துவங்கியது. அரசரை உடனடியாக அழைத்து அவருக்கு அந்த ஒளிவட்டத்தைக் காட்டினேன்!" - ககனா கூறினாள்.

"அவள் காட்டிய அந்த ஒளிவட்டத்தைப் பார்த்த அடுத்த கணம், அரண்மனை மணி அடிக்கத் தொடங்கியது. உடனே நிலநடுக்கம் ஏற்பட்டது! அந்த ஒளிவட்டத்திற்கும், நிலநடுக்கத்திற்கும் ஏதேனும் தொடர்பு இருக்கக் கூடுமோ என்று என் மகள் ஐயப்படுகிறாள்!"

சூரியவர்மன் ககனா விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தான்.

அமைச்சர்களும், அதிகாரிகளும் ஒருவரையொருவர் பார்க்க, ராஜகுருவின் நெற்றி சுருங்கியது.

"மேற்கு அடிவானில் என்றால் சோழம், பல்லவம், பாண்டிய நாடுகள்தான் நமக்கு மேற்கே உள்ளன. சற்று தொலைவில் வட

https://telegram.me/aedahamlibrary

மேற்காக சாளுக்கியம், மற்றும் கலிங்கமும், உள்ளன... பொதுவாக கடற்கரை துறைமுகங்களில் கலங்கரை விளக்கங்கள் இருக்கக்கூடும். அவற்றின் ஒளியாகக் கூட இருக்க வாய்ப்பு உண்டு!" - தலைமை அமைச்சர் கூறினார். –

“நானும் அப்படித்தான் நினைத்தேன்! ஆனால் நிலநடுக்கம் துவங்கியதும் அந்த ஒளிவட்டம் மறைந்து போனது. கலங்கரை விளக்கம் என்றால் ஒளி தொடர்ந்துதானே நிலைக்கும். அணைந்து போகாது அல்லவா?"

ககனா கூறியதும் பண்டிதரின் முகத்தில் குழப்பம் அதிகரித்தது.

சற்று தள்ளி அமர்ந்திருந்த தீபன் சமந்தரையனை நோக்கினார்.

"தீபன்! உடனடியாக எனது குடிலுக்குச் சென்று ஊஞ்சலில் சில சுவடிகளை வைத்திருக்கிறேன்! எடுத்து வா!" - பண்டிதர் கூற, தீபன் விரைந்தான்.

பண்டிதர் சூரியவர்மனை கவலையுடன் நோக்கினார்.

"மன்னா! நேற்று நாம் தேவராஜனுக்கு [3] சிறப்பு ஆராதனைகளை செய்தோம் அல்லவா?”

"ஆம்! நான்தான் வசந்த குடீரத்திலிருந்து கஜமலைக்கு குடும்பத்துடன் வந்து ஆராதனையில் பங்கு கொண்டேனே! ஆராதனை முடிந்தவுடன்தானே நான் வசந்த குடீரத்துக்கு புறப்பட்டுச் சென்றேன்!” - மன்னன் கூறினான்.

"நேற்று தேவராஜனின் நட்சத்திரமான சைத்ர ஹஸ்தம். நமது தேவராஜா மார்க்கத்தின் முக்கிய தினம் அல்லவா?”

சோமஸ பண்டிதர் தனது வெண்பஞ்சு போன்ற தாடியை நீவிவிட்டுக் கொண்டார். அவர் அங்ஙனம் செய்தால், ஆழ்ந்த சிந்தனையில் இருப்பதாக பொருள்.

தீபன் பண்டிதர் குறிப்பிட்ட சுவடிகளைக் கொண்டு வந்து அவரிடம் நீட்ட, அவர் அவற்றை ஆராயத் தொடங்கினார்.

"ராஜகுருவே! சென்ற வருடமும், தேவராஜனுக்கு ஆராதனை செய்த அன்றுதான் நிலநடுக்கம் தோன்றியது அல்லவா?” - தலைமை அமைச்சர் விருபாக்ஷர் கேட்டார்.

https://telegram.me/aedahamlibrary

அதை செவியுற்ற மன்னனும், ககனாவும் வியப்புடன் ராஜகுருவை பார்த்தனர். சுவடிகளில் இருந்து கண்களை விலக்காமல் பேசினார், பண்டிதர்:

“நானும் அதைக் குறித்து தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன், தலைமை அமைச்சரே! நமது மன்னர் குலம் அஸ்வத்தாமாவுக்கும் நாக சோமாவுக்கும் பிறந்த அஸ்வத்தனின் வழித்தோன்றல்கள். சதுர்முக பிரம்மா ஆராதித்த தேவராஜனுக்கு கோயில் எழுப்பி ஆராதித்து வருகிறோம். நமது மார்க்கத்தையே தேவராஜ மார்க்கம் என்று அழைத்து வருகிறோம். அஸ்வத்தாமாவிடம் வளர்ந்த பிள்ளையின் வாரிசுகள்தான் பல்லவர்களாக தொண்டை நாட்டை ஆளுகிறார்கள். நாக சோமாவும், அஸ்வத்தாமாவும் சந்தித்த காஞ்சியில் கூட ஒரு யானை மலை இருப்பதாகக் கூறுகிறார்கள். அதன் மேல் இருப்பவனையும் தேவராஜனாக வழிபடுகிறார்கள். நமது ஐராவத மலையின் உச்சியில் எழுந்தருளி இருக்கும் தேவராஜனுக்கு சைத்ர மாதம் அஸ்த நட்சத்திரத்தில் நாம் ஆராதனை செய்யும் போதெல்லாம் இம்மாதிரி நிலநடுக்கம் தோன்றுகிறது என்றால் என்ன காரணம்? அதற்கான காரணத்தை கண்டுபிடிக்க வேண்டும். இளவரசியார் மேற்கு வானில் கண்ட ஒளிவட்டத்திற்கும் நிலநடுக்கத்திற்கும் தொடர்பு இருக்கிறதா என்பதையும் ஆராய வேண்டும்!” - பண்டிதர் கூறினார்.

“என்ன செய்யலாம், ராஜகுருவே?” - சூரியவர்மன் கவலையுடன் கேட்டான்.

“எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது, அரசே! நமக்கு மேற்கில் காஞ்சி இருக்கிறது. நான் காஞ்சிக்குச் சென்று தேவராஜனை தரிசித்துவிட்டு, அப்படியே மேற்கு வானில் தோன்றிய ஒளிவட்டத்தை குறித்து விசாரித்து வருகிறேன். தங்கள் அனுமதியுடன் நான் காஞ்சிக்கு பயணிக்கிறேன்!” - ராஜகுரு கூறினார்.

“நல்ல யோசனை! உடனடியாக புறப்படுங்கள். தாங்கள் தனியே செல்ல வேண்டாம். உடன் உபதளபதி தீபன் சமந்தரையனை அழைத்துச் செல்லுங்கள். பாதுகாப்பாக இருப்பான்!” என்றதும் ககனா ஆவலுடன் தந்தையின் முகத்தை நோக்கினாள்.

“தந்தையே!”

சூரியவர்மன் மகளை திரும்பிப் பார்த்தான்.

“தந்தையே! நான் இதுவரை கடல் கடந்து போனதில்லை. மீண்டும்

https://telegram.me/aedahamlibrary

மீண்டும் தருமநகரத்தையும், ஐராவத மலையையும் காம்போஜ தீவுகளையும் மட்டுமே கண்டு சலித்துவிட்டது. நானும் நமது ராஜகுருவுடன் காஞ்சிக்குச் செல்கிறேன். காஞ்சியைப் போன்ற பெரிய நகரங்களை நான் கண்டதில்லை!” ககனா சொல்ல, அதுவரை மௌனமாக இருந்த காந்திகா, பதறினாள்.

“ஐயோ! நீ புறப்பட்டுச் சென்றால் தந்தையை யார் சமாளிப்பது? உப்பரிகையில் நீ இருக்கும் போதே, ககனா எங்கே...? என்று ஆயிரம் முறை கேட்கிறார். நீ காஞ்சிக்குச் சென்றால்... அவ்வளவுதான்!” காந்திகா கூறினாள்.

“இப்படிக் கூறியே என்னை எங்கேயும் அனுப்பாமல் இருக்கிறீர்கள். எனக்கும் உலக அனுபவங்கள் ஏற்பட வேண்டும் அல்லவா. ராஜகுருவோடு சென்று ராஜகுருவோடு வந்துவிடப் போகிறேன். துணைக்கு உபதளபதியும் இருக்கிறார். உங்களது அனுமதிதான் எனக்குத் தேவை!” ககனா கூறினாள். –

“இருந்தாலும் நீ சிறிய பெண். அவ்வளவு தொலைவு உன்னை அனுப்புவதற்கு மனம் இடம் தரவில்லை!” - சூரியவர்மன் கூறினான்.

"கவலை கொள்ளத் தேவையில்லை, அரசே! நான் இளவரசியாரை கண்ணுங்கருத்துமாக பார்த்துக் கொள்கிறேன். நம் இளவரசி பார்க்க வேண்டிய நகரம் தான் காஞ்சி!” - பண்டிதர் கூறினார்.

ராஜகுருவே கூறிவிட்ட பிறகு, மன்னன் சூரியவர்மன் தலையசைக்க, ககனா சோமஸ பண்டிதரை நன்றியுடன் பார்த்தாள்.

ராஜகுரு மன்னரை நோக்கினார்.

“பல்லவம் சான்றோர் உடைத்து! அவர்களது வழிபாட்டு முறைகள் ஆகமங்களைச் சார்ந்த கைங்கர்யங்கள். ஆனால் நமது வழிபாட்டு முறைகள் வெறும் ஆராதனைகள்தான். ஆனால் அவர்களும் தேவராஜனை ஆராதிப்பவர்கள்தான். காஞ்சி சென்று தேவராஜனை தரிசித்துவிட்டு வருகிறோம். நிலநடுக்கத்திற்கு அந்த ஒளி வட்டம்தான் காரணமா என்பதை கண்டுபிடிப்போம்!" -- ராஜகுரு கூறினார்.

தீபனை பார்த்தான் மன்னன். “உபதளபதியே! காவலர் ஐந்து பேரை அழைத்துக் கொள். காஞ்சிக்குப் புறப்பட ஏற்பாடுகளைச் செய்!” - சூரியவர்மன் கூற, தீபன் பணிவுடன் தலைகுனிந்தான்.

"மன்னா! இன்னும் ஒரு சிறிய விண்ணப்பம்! நாங்கள் காஞ்சிக்குச்

https://telegram.me/aedahamlibrary

செல்வதே, வருடா வருடம் நம்மை பாதிக்கும் நிலநடுக்கத்திற்கான காரணத்தை ஆராயத்தான். நாங்கள் காஞ்சிக்குச் செல்வதோ அங்கு தேவராஜனை தரிசிக்க இருப்பதோ யாருக்கும் தெரிய வேண்டாம். எங்களது விஜயம் மிகவும் ரகசியமாக இருக்க வேண்டும்!" – ராஜகுரு கூறினார்.

"அப்படியே ஆகட்டும்! சமந்தரையா! எச்சரிக்கை!" சூரியவர்மன் கூறினான்.

[1] காம்போஜம் தற்போதைய கம்போடியா.

அத்திமலைத் தேவன் நாவலை எழுதும் போது பலவித பரவச உணர்வுகளுக்கு நான் ஆட்பட்டேன் என்று முதல்பாக முன்னுரையிலேயே கூறியிருக்கிறேன். அதில் ஒன்றுதான் தருமநகரம் பற்றிய தகவல்கள். காஞ்சியில் ஒரு தருமநகரம் இருந்ததை போன்று காம்போஜத்திலும் ஒரு தருமநகரம் இருந்திருக்கிறது. காம்போஜம் கம்போடியாவில் துவங்கி இப்போதைய இந்தோனேசியா வரை பரவி, பாரதத்துடன் மிக நெருங்கிய தொடர்பில் இருந்திருக்கிறது. தருமநகரம் இப்போதைய ஜாவா என்கிற இந்தோனேசியாவின் முக்கிய பகுதி. வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

அத்திமலைக்கு தீர்த்த யாத்திரையாக வந்த அஸ்வத்தாமா நாக சோமா என்கிற சாவக தீவை சேர்ந்த பெண்ணை மணந்து இரட்டை பிள்ளைகளை பெறுகிறான். அந்த நாக சோமா சாவக தீவு என்கிற ஜாவாவை சேர்ந்தவள். அஸ்வத்தாமாவின் நினைவாக அஸ்வதன் என்று தனது மகனுக்கு பெயரிட, அவன் தருமநகரம் என்கிற ராஜ்யத்தை உருவாகியதாக முதல் பாகத்தில் கூறியிருந்தேன். அந்த தருமநகரம்தான் இது. மிகவும் ஆச்சரியகரமான தகவல் ஒன்று! தருமநகரத்தில் தேவராஜன் ஆலயம் ஒன்று இருந்தது. காம்போஜத்தின் குலதெய்வமும் தேவராஜன். காஞ்சிபுரத்திற்கும், காம்போஜத்திற்கும் பல அரிய ஒற்றுமைகள் உள்ளன. காம்போஜம், காஞ்சியின் நேர்கோட்டில் உள்ளதாக காம்போஜ தேவராஜ மார்க்கத்தின் நூல்கள் குறிப்பிடுகின்றன.

[2] தருமநகரம் இப்போதைய ஜாவா தீவுதான். இதனைச் சுற்றி அமைந்திருந்த இயற்கை எழில்மிக்க மலைகளும், அருவிகளும் காண்பதற்கு ரம்யமாக இருக்கும். அஸ்வதன் வழியில் உதித்த பூரணவர்மன் இதன் மன்னன். கோடையில் தனது குடும்பத்துடன் இளைப்பாறுவதற்காக வசந்த குடீரம் என்கிற மாளிகையை

https://telegram.me/aedahamlibrary

எழுப்பியிருந்தான். அரச குடும்பத்தின் வாசஸ்தலமான அந்த மாளிகை ஐராவத மலை என்கிற வெண்ணிற மலையின் உச்சியில் இருந்தது. இப்போதைய காம்போஜ மன்னனின் பெயர் சூர்யவர்மன்.

[3] மிக ஆச்சரியமான விஷயம்! தெற்காசிய ராஜ்யங்களில் அப்போது தேவராஜ மார்க்க (Devaraja Cult) என்கிற வழிபாடு இருந்தது.

ஆதாரம்: பா ஜியாங் (Fa Xian) புத்தகம் போக்யோ சீ (Fokyo Chi) (414).

அரசனையே விஷ்ணுவாக கருதும் இந்த தேவராஜ மார்கத்தை சேர்ந்தவர்கள் தேவராஜனுக்காக தங்கள் நாட்டின் மலையில் கோயில் ஒன்றை எழுப்பினர். இரண்டாம் ஜெயவர்மன் என்கிற மன்னன் இந்த தேவராஜ மார்க்கத்தைப் பரப்பினான். தருமநகரம் என்கிற சாவகத்தீவு (ஜாவா)விலிருந்து தேவராஜா மார்க்கம் காம்போஜத்திற்கு பரவியது. ஜாவாவில் கேப்பான் கோபி 1 கல்வெட்டு (Keban Kopi | Inscription) அந்த மலையின் பெயர் தெலாபாக் கஜா (Telapak Gajah) என்று அழைக்கிறது. அதன் பொருள் யானை மலை. இங்கே அகைவல்யர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் அர்ச்சகர்களாக பணியாற்றினர்.

தருமநகரத்தைப் பற்றி பிரசஸ்தி என்கிற இந்தோனேஷியா கல்வெட்டுகள், மேற்கு ஜாவாவில் கிடைத்தது. பலம் பொருந்திய தேவராஜனாகிய விஷ்ணுவின் அருளைப் பெற்ற பூர்ணவர்மன் என்கிற மன்னன் தெலாபாக் கஜம் (யானை) மலையைச் சுற்றி தருமநகரத்தை உருவாக்கினான். அவன் பெற்ற மகன் ஜெயவர்மன் தருமநகரத்தை விரிவாக்கினான்.

பா ஜியாங் (FaXian) தனது நூலான போக்யோ சீ (Fo Kyo Chi) (414) ய்யே போடி (Ye Po Ti) என்று சீன மொழியில் ஜாவா தீவைப் பற்றி எழுதியுள்ளார். அதில் தேவராஜ மார்க்கத்தை சேர்ந்த பிராமணர்கள் தெலாபாக் கஜம் ஆலயத்தில் வழிபாடுகளை செய்து வந்துள்ளனர். அதில் டு - லோ - மா (To - lo - ma) என்று தருமநகரத்தை பற்றியும், அதில் உள்ள சித்தரம் (Citarum) நதியின் கரையில் உள்ள நீல நிற அத்தி மலர்கள் அபூர்வமாக பூக்கும் என்று எழுதியுள்ளார்.

சதுர் முக் என்கிற நகரமே 48 சிறிய நகரங்களை தன்னுள் கொண்டிருக்கிற தருமநகரத்தின் தலைநகரம். தருமநகரம் என்கிற ஜாவா, ஸ்ரீவிஜயம், சுமத்ரா, காம்போஜம் எல்லாமே வர்மன் மன்னர்களால் ஆளப்பட்டு வந்தன.

1863 இல் (Dutch) கிழக்கு இந்திய கம்பெனி இந்தோ னேஷியாவின்

https://telegram.me/aedahamlibrary

போகர் (Butienzorg) பகுதியில் சியார்ட்டிதான் ஆறு (Ciarutian river) சிஸ்ட்டன் நதியும் (Cicaden river) கலக்கும் இடத்தில் ஒரு கல்வெட்டை கண்டெடுத்தது. இதை சியாருடியன் கல்வெட்டு (Ciarutian inscription) என்கிறார்கள். ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்தக் கல்வெட்டு, பல்லவர்களின் மொழியான வேங்கி எழுத்துக்கள் மற்றும் சமஸ்க்ருத எழுத்துகளைக் கொண்டிருக்கின்றன. தருமநகரைப் பற்றி குறிப்பிடும் இந்தக் கல்வெட்டு, தருமநகரை ஆளும் பூர்ணவர்மனின் திருவடிகள் திருமால் தேவராஜனின் திருவடிகளுக்கு ஈடானது என்கிறது Ciarutian inscription (3) 15.

இந்த விளக்கங்கள் எல்லாம் எதற்கு? ஒரு ஆச்சரியமான ஒற்றுமையை காஞ்சிக்கும், தருமநகரத்திற்கும் இடையே காண்கிறோம்.

தருமநகரத்தை ஆண்ட மன்னர்கள் காம்போஜத்தை ஆண்ட மன்னர்கள் மற்றும் காஞ்சியை ஆண்ட பல்லவ மன்னர்கள் அனைவருமே வர்மன் என்று தங்களை அழைத்துக் கொண்டனர். நாகா சோமா என்கிற நாக கன்னிக்கும் அஸ்வத்தாமாவுக்கும் பிறந்த இரட்டை மகன்களில் தொண்டை செடியைச் சுற்றி பிறந்தவனின் வாரிசுகள் பல்லவ மன்னர்களாகவும், நாக சோமா வளர்த்த அஸ்வத்தனின் வாரிசுகள் தருமநகரத்தையும் ஆண்டார்கள்.

காஞ்சிபுரத்தில் காமாட்சி அம்மன் ஆலயத்தைச் சுற்றி இருந்த பகுதி தருமநகரம் என்று அழைக்கப்பட்டது. ஜாவாவிலும் தருமநகரம் இருந்தது.

காஞ்சியில் அத்திமலையான் என்கிற தேவராஜனின் ஆலயம் யானை மலை (ஹஸ்திகிரி) என்கிறோம். ஜாவாவின் தருமநகர பிரசஸ்தி கேபான் கோபி என்கிற கல்வெட்டின்படி தெலாபாக் கஜா (Telepak Gadjah) யானை மலை என்று அழைக்கப்படுகிறது. இந்த மலை இந்திரனின் ஐராவதத்தைப் போன்றது என்று கூறும், அந்தக் கல்வெட்டு, அதை சதுர் முக் என்பவர் உருவாக்கியதாக கூறுகிறது, நாமும் நமது அத்திமலையை இந்திரனின் ஐராவதமாகவே கருதுகிறோம். சதுர்முக பிரம்மன் அஸ்வமேத யாகம் செய்து காஞ்சியில் தேவராஜனை பிரதிஷ்டை செய்தான் என்று கூறுகிறோம்.

இன்னுமொரு ஒற்றுமை! பாலாறு, செய்யாறு, வேகவதி என்கிற முக்கூடல் சங்கமத்தில் காஞ்சி உள்ளது. சியாடியன் (Ciarutean), சிசேடன் (Cicaden), சீடரியம் (Citarium) என்கிற மூன்று நதிகளின் சங்கமத்தில்தான் ஜாவாவின் தருமநகரம் இருந்தது. காஞ்சி தருமநகரம்

https://telegram.me/aedahamlibrary

மற்றும் ஜாவா தருமநகரம் இரண்டிற்கும் உள்ள ஒற்றுமைகள் இந்த நாவலின் மையக் கரு. இந்த இரண்டு தருமநகரங்களும் தேவராஜன் என்கிற விஷ்ணுவையே ஆராதனை தெய்வங்களாகக் கொண்டிருந்தன.

ஆதாரங்கள்:

**O Bogor City Inscription.**

**O History of Indonesia (Indonesia portal).**

**O Zahorka Herwig (2007) Sunda Kingdom of West Java from Tarumanagara to Pakuan Pajajaran.**

**O Paul Michel - Early Kingdoms of Indonesan Archipelago.**

*****

https://telegram.me/aedahamlibrary

# 37. பாலக்காட்டு பக்கத்திலே ஒரு அடப்பாவி ராஜா

சமுத்ரகுப்தன் படை எடுத்து வந்த போது அவன் விரட்டியடித்திருந்த ஸ்வேத ஹூனர்கள், தெற்கு நோக்கி நகர்ந்தனர். மகாகாந்தாரக் காடுகளில் (சத்தீஸ்கரின் பஸ்தார்) வாழ்ந்தவர்களை தெற்கே கொண்டு வந்து சேர்த்த பெருமை சமுத்ரகுப்தனையே சாரும்.

சமுத்ரகுப்தனுக்கு பயந்து தெற்கே வந்த ஸ்வேத ஹூனர்கள் மூன்று கிளையாகப் பிரிந்தார்கள். சந்திரகிரி மலைக்காட்டை மகிபாலனும், உதயகிரி மலைக்காட்டை அவன் சகோதரன் பிருத்விபாலனும், வேங்கடகிரியை அவர்களது மாமன் மகன் ஸ்கந்தவீர்யனும் ஆட்சி செய்தனர்.

சமுத்ரகுப்தன் மீண்டும் வடபுலம் சென்றவுடன், ஸ்வேத ஹூன தலைவர்கள் மூவரும் ஒருங்கிணைந்து கொலை கொள்ளைகளை நடத்தினர். கால ஓட்டத்தில், மகிபாலனின் மகன் ஜெயபாலன் பதவிக்கு வந்தான்.

கொலை, கொள்ளை, வழிப்பறிகளில் ஈடுபடுவதைக் காட்டிலும், தன்னை ஒரு மன்னனாகக் காட்டிக் கொண்டு ராஜ்யத்தை பரிபாலனம் செய்ய வேண்டும் என்கிற ஆசை ஜெயபாலனுக்கு வந்தது.

சரியாக வேங்கடகிரியை காடுகளில் ராஜாங்கம் செய்து கொண்டிருந்த ஸ்கந்தவீர்யன், வடபுலத்திற்கு மீண்டும் செல்ல விரும்ப, அவன் தனது பகுதிகளையும் ஜெயபாலன் வசம் ஒப்படைத்தான். சந்திரகிரி, உதயகிரி மற்றும் வேங்கடகிரி அனைத்துமே விரைவில் ஜெயபாலனின் வசம் வர, அனைத்துப் பகுதிகளையும் இணைத்து ஒரு ராஜ்யத்தை நிறுவி தன்னை அரசனாக அறிவிக்க நினைத்தான்.

உதயகிரிக்கும், சந்திரகிரிக்கும் இடையே அமைந்துள்ள பாலகாடத்தை தலைநகரமாக அமைத்து அங்கே அரண்மனை கட்டி வாழ வேண்டும். அரசகுமாரி ஒருவளை திருமணம் செய்துகொண்டு அரசாட்சி செய்ய வேண்டும் என்கிற ஆசை பிறக்க, ஸ்வேத ஹூனர் என்கிற நாடோடிகள் என்கிற முத்திரையை நீக்க நினைத்தான்.

ஒரு நாள் –

ஜெயபாலன் கடம்ப நாட்டிற்கு [1] தனது ஆட்களுடன்

https://telegram.me/aedahamlibrary

சென்றுகொண்டிருந்தான். ஜெயபாலன் மிடுக்கான வாலிபன்தான். கடைத்தெருவில் சென்றுகொண்டிருந்த இளநங்கையரின் கவனத்தை அவன் கவர்ந்து கொண்டிருக்க, அவர்கள் தன்னை நோக்குவதை பெருமிதத்துடன் ரசித்துக்கொண்டிருந்தான். அப்போது கடைத்தெரு வழியாக கடம்ப இளவரசி ராஜஸ்ரீ தனது பரிவாரங்களுடன் தேரில் சென்றுகொண்டிருந்தாள். ராஜஸ்ரீயைக் கண்டதும் பிரமித்து நின்றுவிட்டான், ஜெயபாலன். அவளது பேரழகில் மயங்கிவிட்ட ஜெயபாலன், அவளையே தான் அமைக்கும் சந்திரகிரி ராஜ்யத்திற்கு அரசியாக அமர வைக்க வேண்டும் என்கிற ஆவல் உண்டானது. ஆனால் கடம்ப மன்னன் ஸ்கந்தவர்மன் மிகவும் பலவான். அவனுடன் போர் புரிவது என்பது மரணத்தை விலைகொடுத்து வாங்குவது போல என்பதை உணர்ந்தான். ஸ்கந்தவர்மனிடம் சென்று பெண் கேட்கவும் அவனுக்குத் துணிவில்லை. ஸ்வேத ஹூனர் என்கிற நாடோடிகளாகத் திரிந்து, கொலை, கொள்ளை வழிப்பறிகளைப் புரியும் வனவாசிகளில் ஒருவன்தானே அவன்.

மேலும், ஸ்கந்தவர்மன் ஸ்வேத ஹூனர்களிடம் நட்பு பாராட்டினான். ஜெயபாலனின் பாட்டன், கடம்பருக்கும் பல்லவர்களுக்கும் நடைபெற்ற யுத்தத்தில், கடம்ப மன்னன் மயூரசர்மனுக்கு ஆதரவாக போரிட்டான். அப்போது தோன்றிய நல்லெண்ணம் இன்றுவரை நீடித்துக்கொண்டிருக்க, ஸ்கந்தவர்மனிடம் பெண் கேட்டு, அந்த நல்லெண்ணத்தை சிதைத்துக் கொள்ள விரும்பவில்லை ஜெயபாலன்.

எப்படி இருந்தாலும், கடம்ப இளவரசி தனக்குத்தான் என்கிற தீர்மானத்தில் இருந்தான் ஜெயபாலன்.

ராஜஸ்ரீ தேரில் செல்லும் அழகைப் பார்த்த மாத்திரத்தில் இருந்து உறக்கம் பிடிக்காமல் தவித்தான் ஜெயபாலன். தனது நண்பனும் தளபதியுமான புத்தவிகாரனிடம் தனது தாபத்தைத் தெரிவிக்க, அவன் ஒரு யோசனையைக் கூறினான்.

"ஸ்கந்தவர்மன் உன்னிடம் மிகுந்த அன்பு கொண்டிருக்கிறான். உதயகிரி மற்றும் சந்திரகிரி இடையே பல்லவர் வசம் உள்ள பாலகாடத்தில் புரட்சியை தோற்றுவிக்க உனக்கு தளவாடங்களும் நிதியுதவியும் தருகிறான். உனது நட்பை அவன் பெரிதும் மதிக்கிறான். துவக்கத்திலேயே உனது மாப்பிள்ளை ஆக வேண்டும் என்று கேட்காதே. பாலகாடத்தை கைப்பற்றி அதன் அரசனாக என்னை அறிவித்துக்கொள்ளப் போகிறேன். அதற்கு உதவி செய்ய வேண்டும் என்று கேள். உன்னை ஸ்கந்தவர்மன் மதிப்பான். அவன் உதவியோடு

https://telegram.me/aedahamlibrary

சந்திரகிரி ராஜ்யத்தை அமைத்து, அதன் தலைநகராக பாலகாடத்தை அறிவித்துவிடு, பிறகு சந்திரகிரி அரசனாகச் சென்று பெண் கேள்!" என்றான்.

புத்தவிகாரனின் யோசனை ஜெயபாலனுக்கு பிடித்திருந்தது. "ஸ்கந்தன் ஏற்றுக் கொண்டாலும் ராஜஸ்ரீ என்னை ஏற்றுக் கொள்வாளா?" ஜெயபாலன் சந்தேகத்துடன் கேட்டான்.

"ஸ்வேத ஹூனன் என்கிற அடையாளத்தையும் நீ என்றோ களைந்துவிட்டாய். தென்னிந்திய மன்னர்களின் அழகையும், கம்பீரத்தையும் கொண்டிருக்கிறாய். இந்த வட்டார மொழிகளை நன்கு பேசுகிறாய். நாட்டுவாசிகளின் நாகரிகத்தையும் கடைப்பிடிக்கிறாய். உனது கோதுமை நிறம் உனது கம்பீரத்திற்கு இன்னும் அழகு தருகிறது. கவலைப்படாதே! கண்டதும் உன்னிடம் காதல் கொள்வாள். எதற்கும் அவள் முன்பாக உனது வீர பிரதாபங்களை காட்டு!" புத்தவிகாரன் கூறினான்.

புத்தவிகாரன் கூறிய யோசனை சற்றே துணிவு கொடுக்க, தன்னை நன்கு அலங்கரித்துக்கொண்டு பனவாசி நகருக்குச் சென்றான். அரண்மனையில் இவன் நுழைந்து தான் வந்திருப்பதை மன்னன் ஸ்கந்தவர்மனுக்குச் சொல்லி அனுப்பினான்.

ஜெயபாலன் வந்திருப்பதை அறிந்ததும், ஸ்கந்தவர்மனே அவனைத் தேடி வாயிலுக்கு வந்தான்.

"வா நண்பனே! என்ன திடீர் விஜயம்? நந்தவனத்தில் காலார நடந்தபடி பேசலாம் வா!" என்று அழைத்ததும் உருகிப் போனான், ஜெயபாலன். மன்னனே தன்னை வாயிலில் வந்து வரவேற்று, நந்தவனத்தில் உலாவலாம் என்று அழைக்கின்றானே. உண்மையிலேயே அவன் தன் மீது நல்ல மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறான். புத்தவிகாரன் கூறியது சரிதான் என்று நினைத்தான், ஜெயபாலன்.

உண்மையில் காட்டில் கொள்ளையும் கொலையும் புரியும் ஒரு வன்முறையாளன், அவனது பார்வையில் தனது குடும்பப் பெண்கள், குறிப்பாக இளவரசி ராஜஸ்ரீ பட வேண்டாம் என்றுதான் தான் மன்னனாக இருந்தும், அவனை உள்ளே அழைக்காமல், தானே வலிய வெளியே வந்து, தன்னுடன் நந்தவனத்தில் உலாவுகின்றான் ஸ்கந்தவர்மன் என்கிற விவரத்தை ஜெயபாலன் எங்ஙனம் அறிவான்? பரஸ்பர விசாரிப்புகளுக்குப் பிறகு, நாசூக்காக தனது மனக்கிடக்கைகளை ஸ்கந்தவர்மனிடம் கூற ஆரம்பித்தான்.

https://telegram.me/aedahamlibrary

“நண்பா! எனக்கும் நாடோடி வாழ்க்கை அலுத்து விட்டது. எனக்கென்று ஒரு ராஜ்யத்தை நிறுவிக் கொண்டு, நல்ல குடும்பத்தைச் சேர்ந்த ஒருவளை மணந்து கொண்டு நிம்மதியாக வாழ நினைக்கிறேன். எனது அதிகாரத்திற்கு உட்பட்ட சந்திரகிரி, உதயகிரி மற்றும் வேங்கடகிரி காடுகளை இணைத்து சந்திரகிரி ராஜ்யத்தை உருவாக்க நினைக்கிறேன். உதயகிரிக்கும், சந்திரகிரிக்கும் இடையே உள்ள பாலகாடத்தை பல்லவர்களிடம் இருந்து கைப்பற்றி எனது சந்திரகிரி ராஜ்யத்தின் தலைநகராக மாற்ற விரும்புகிறேன். இதற்கு உனது உதவி தேவை!” ஜெயபாலன் கூறினான்.

'வடக்கிலிருந்து வந்த நாடோடி வழிப்பறி கொள்ளையர் தலைவன்... இவனுக்கு சரிசமமாக மன்னன் ஆகத் திகழ வேண்டுமாமே. என்ன பேராசை?' மனதிற்குள் நினைத்தான், ஸ்கந்தன். ஆனால் பல்லவர்களின் வசம் உள்ள பாலகாடத்தை கைப்பற்றுவேன் என்று கூறுகிறானே. உதவி செய்வது போன்று ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்தினால் என்ன? பல்லவர்களுக்கு எதிராக ஜெயபாலனைக் கொம்பு சீவிவிடுவோம். நான்கு மகன்களை பெற்றுவிட்ட மமதையில் பல்லவ மன்னன் மூன்றாம் சிம்மவர்மன் இவனை அவ்வப்போது சீண்டிக் கொண்டே இருக்கிறான். அவனுக்கு எதிராக இவனை தூண்டிவிட்டு, பாலகாடத்தை வீழ்த்தி, அவனது இறுமாப்பினை அடக்குவோம். அதுவரை இவனுக்கு உதவுவது போன்று நடித்து பிறகு இவனை விரட்டி, பாலகாடத்தைக் கைப்பற்றி கடம்பத்துடன் இணைப்போம்.

நந்தவனத்தில் நடந்தபடி கணத்தில் தனது எதிர்காலத் திட்டத்தைத் தீட்டிவிட்டான், ஸ்கந்தவர்மன். அவன் மௌனமாக நடந்து வருவதைக் கண்டு பதைபதைப்புடன் அவனது முகத்தையே கவனித்துக்கொண்டிருந்தான், ஜெயபாலன். தனது வேண்டுகோளை அவன் எடுத்துக்கொள்ளும் விதத்தை அறிந்து கொண்ட பிறகே தனது அடுத்த கோரிக்கையை அவனிடம் தெரிவிக்கப் போகிறான்.

தனது சொற்களில் இன்பத்தேனைத் தடவி தனது சிந்தையில் ஜெயபாலனின் மீது நிலவிய அசூயையை மறைத்தான், ஸ்கந்தன்.

“நண்பா! நீ அரசனாகத் திகழ்ந்தால் முதலில் மகிழ்வது நானாகத்தான் இருக்கும். கடம்பத்தின் தென்புறத்து நுழைவாயில் பாலகாடம். அதன் காவலனாக நீ இருப்பது குறித்து சந்தோஷமே. உனக்கு வேண்டிய உதவிகளை அளிக்கிறேன். பல்லவ ரிஷபத்தை அடக்கி உனது வெற்றிக்கொடியை நாட்டிக்கொள். சந்திரகிரி மன்னனாக நீ பட்டாபிஷேகம் செய்து கொள்ளும் அன்று நான் எனது குடும்பத்துடன்

https://telegram.me/aedahamlibrary

அதனைக் கண்டு களிப்பேன்!” ஸ்கந்தன் நடக்கப் போகாத நிகழ்வுக்கு நல்லாசி வழங்கி அவனைத் தூண்டிவிட்டான்.

குடும்பத்துடன் வருவேன் என்று ஸ்கந்தன் கூறியதால், தன்னிலையை இழந்தான், ஜெயபாலன்.

“குடும்பத்துடன் வருவாயா, நண்பா? நாம் இருவருமே ஒரே குடும்பம் ஆகிவிட்டால் நீ வந்துதானே தீர வேண்டும்?"

கம்பீரமாக நகைப்பதாக நினைத்துக்கொண்டு கழுதையைப் போன்று கேவிக்கொண்டிருந்தான், ஜெயபாலன்.

ஜெயபாலனை சந்தேகத்துடன் நோக்கினான், ஸ்கந்தன்.

“என்ன சொல்கிறாய், ஜெயபாலா?”

"நண்பா? நிம்மதியான வாழ்க்கையை நாடுகிறேன். எனது மூதாதையர்களைப் போன்று கொள்ளை, வழிப்பறி, கொலையில் ஈடுபடுவதை ஈனமாகக் கருதுகிறேன். எனது மக்களை உழைத்து வாழும்படி செய்யப்போகிறேன். அதற்கு, நான் அரசனாக இருந்தால் மட்டும் போதாது. ஒரு நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணை எனது மனையாளாகக் கொண்டு அவளை சந்திரகிரி அரசியாக அமர வைக்கப் போகிறேன். சந்திரகிரியின் அரசியாக கடம்ப இளவரசி ராஜஸ்ரீயை அமர்த்த நினைக்கிறேன்!” -

ஜெயபாலன் கூறியதும்தான் தாமதம். ஸ்கந்தனின் உடலில் ஓடிக்கொண்டிருந்த இரத்தம் எல்லாம் அவனது சிரசை நோக்கிப் பாயத்தொடங்கியது.

பல்லவத்திற்கு எதிராக கிடைத்த கைக்கூலி என்று இவன் ஜெயபாலனை நினைத்துக்கொண்டிருக்க, இவனுக்கு மருமகனாகத் தன்னை நினைத்துக் கொள்கிறானே? பயணிகளாகச் செல்லும் வழிப்போக்கர்களின் பெண்களை பலவந்தமாகக் கடத்திச் சென்று அவர்களுடன் குடும்பம் நடத்தி தங்கள் இனத்தை விருத்தி செய்யும் நாடோடிக்கு அரச குடும்பத்து இளவரசி கேட்கிறதா... அதுவும் அவனது அருமை மகள் ராஜஸ்ரீயை பெண் கேட்க எவ்வளவு துணிவு இருந்திருக்க வேண்டும்?

ஜெயபாலனின் நல்ல காலம்! ஸ்கந்தன் நந்தவனத்திற்கு வரும் போது உடைவாளுடன் வரவில்லை. இல்லையேல் ஜெயபாலனின் தலை மண்ணில் உருண்டிருக்கும்.

https://telegram.me/aedahamlibrary

“கடம்ப மாளிகையில் உனது இரத்தத்தை பெருகச்செய்து இந்த இடத்தை அசுத்தம் ஆக்க விரும்பவில்லை. நாடோடி கொள்ளையன் நீ! அரசனாக நினைப்பதும், அரசகுமாரியை மணக்க நினைப்பதும், உனது பேராசையைக் காட்டுகிறது. ஆசைப்படுவதில் தவறில்லை. ஆனால் அதற்காக மூதாதையர்களையே ஈனப்பிறவிகள் என்று கூறிய போதே நீ அரசனுக்குரிய லட்சணங்களைக் கொண்டவன் இல்லை என்பது உனக்குப் புரிந்திருக்க வேண்டும். எந்த அரசன் தனது இனத்தையே பழிக்கிறானோ அவன் தனது நாட்டையே காட்டிக்கொடுப்பான். ஓடிப் போ... என் கண்முன் நிற்காதே!” கர்ஜனை செய்தான் ஸ்கந்தன்.

ஜெயபாலனும் தனது கட்டுப்பாட்டினை இழந்தான்.

“நீ மட்டும் என்ன? வேதிய குலம் என்று காட்டிக் கொண்டு கோட்பாடுகளை மாற்றியவன்தானே. இல்லாத கோத்திரத்தை இருப்பதாகக் காட்டிக்கொண்டு வேதியன் வேடம் போடுகிறாய். சேர நாட்டின் கடம்ப மலைவாசிதானே நீ. மலைவாசிகளுக்கு நாடோடிகள் குறைந்தவர்கள் இல்லை!”

ஜெயபாலன் நெருப்பாகச் சொற்களை உமிழ அந்த நெருப்பில், இருவரின் இடையே நிலவிய நட்பு கருகிப் போனது.

கொந்தளித்துப் போனான், ஸ்கந்தன். “இப்போது இதற்கு பதில் கூறப் போவதில்லை, ஜெயபாலா. இன்றே உனது அதிகாரத்தில் உள்ள சந்திரகிரி மற்றும் உதயகிரியின் மீது படையெடுத்து வந்து உனக்கு தக்க பதிலை கூறுகிறேன்!” என்று தனது அரண்மனைக்குள் வீராவேசத்துடன் நடந்தான்.

புத்தவிகாரனின் பேச்சைக் கேட்டு அவசரப்பட்டு விட்டோமோ? குழப்பத்துடன் நடந்தான், ஜெயபாலன்.

விரைவிலேயே ---

தனது படைகளுடன் வேங்கடகிரியை கைப்பற்றிய கடம்ப மன்னன் ஸ்கந்தவர்மன், தொடர்ந்து உதயகிரியையும் கைப்பற்றி, ஸ்வேத ஹூனர்களை விரட்டி அடித்தான். அவர்கள் கதறியபடி சந்திரகிரிக்குச் சென்று ஜெயபாலனிடம் அடைக்கலம் புகுந்தனர்.

உக்கிரம் தணியாத ஸ்கந்தவர்மன் சந்திரகிரியையும் கைப்பற்ற எண்ணினான். ஆனால் குறுக்காக பாலகாடம் இருந்தது. இவன் சந்திரகிரிக்குச் செல்ல வேண்டும் என்றால் பாலகாடத்தைக் கடந்துதான்

https://telegram.me/aedahamlibrary

செல்ல வேண்டும். என்ன செய்வது? தங்கள் மீது அவன் போர் புரிவதாக எண்ணி சிம்மவர்மன் பாலகாடம் வந்து விட்டால்?

இங்குதான் காலம் ஜெயபாலனுக்கு எதிராக செயல்பட்டு ஸ்கந்தவர்மனுக்கு பெரும் உதவியைப் புரிந்தது. பாலகாடத்தின் பல்லவ பிரதிநிதியாக ஆட்சி புரிந்து கொண்டிருந்தார், பாசுபத பாணிக்ராகி. அவரது மனைவி வேங்கடரத்னம்மா திருவேங்கடமுடையானின் தீவிர பக்தை.

சிவிகையில் அவள் வேங்கடத்திற்குச் சென்று கொண்டிருக்க, அவள் யார் என்பதை அறியாமல் அவள் வேங்கடவனுக்கு சாற்றுவதற்காக எடுத்துச் சென்று கொண்டிருந்த திருவாபரணங்களை கொள்ளை அடிக்க முற்பட்டான், புத்தவிகாரன். பாசுபத பாணிக்ராகியின் மெய்காப்பாளர்கள் அவர்களுடன் வாட்சண்டையிட, புத்தவிகாரன் அவர்களால் கொல்லப்பட்டான். அவனது ஆட்கள் தப்பி ஓட, ஆபரணங்களை மீண்டும் பாலகாட அரண்மனைக்கு எடுத்து வந்துவிட்டாள், வேங்கடரத்னம்மா.

புத்தவிகாரனின் மரணத்தைப் பற்றி ஜெயபாலனுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. ஸ்கந்தவர்மனுடன் நிலவிய நல்லுறவைத் தனது யோசனையால் குலைத்துவிட்ட அவனுக்கு இந்த மரண தண்டனை தேவைதான். இருந்தாலும், ஸ்கந்தனால் நாடோடி, கொள்ளைக்காரன், பெண்களைக் கடத்துபவன் என்றெல்லாம் கேவலப்படுத்தப்பட்ட பிறகு, அரச வம்சத்தினரை த்வம்சம் செய்யும் வெறியைக் கொண்டிருந்தான். மறைந்திருந்த ஸ்வேத ஹூனர்களின் கொடூரங்கள் மீண்டும் அவனுள் தலைதூக்கின. தனது மூதாதையர்களின் செயல்பாடுகளை இகழ்ந்தவன், கடைசியில் அவர்களது பாணியையே பின்பற்றினான். ஸ்கந்தனைக் கொன்று அவனது மகள் ராஜஸ்ரீயைக் கடத்தி வந்து அவளை மணந்து கொள்ள வேண்டும். அதற்கு முன்பாக பாலகாடத்தைக் கைப்பற்றி அரசனாக, ஸ்கந்தன் முன்பாக பதவி ஏற்றுக்கொள்ள வேண்டும்!

அரசனாக வேண்டும் என்றால், முதலில் பாலகாடத்தைக் கைப்பற்ற வேண்டும்! முதலில் வேங்கடரத்னம்மா திருவேங்கடமுடையானுக்கு சாற்ற இருந்த ஆபரணங்களை கைப்பற்ற வேண்டும்! என்கிற தீர்மானத்தோடு தனது ஆட்களுடன் பாலகாட அரண்மனையை நோக்கிப் படையெடுத்தான்.

இதற்குத்தானே காத்திருந்தான் கடம்ப மன்னன், ஸ்கந்தவர்மன். இரவோடு இரவாக தனது படைகளுடன் பாலகாடத்தினுள் புகுந்தான்.

https://telegram.me/aedahamlibrary

ஸ்கந்தன் அரண்மனைக்குச் சென்று பாசுபதரை சந்தித்தான். ஜெயபாலன் பாலகாடத்தின் மீது படையெடுத்து வருவதை எடுத்துக் கூறினான். வேங்கடத்திற்குச் செல்லும் பக்தர்களின் உயிர், உடமைகள் மற்றும் பெண்களின் கற்புக்கு ஸ்வேத ஹூனர்கள் கேடு விளைவிப்பதை உணர்த்தி, இனி பாசுபதர் பல்லவ மன்னருக்குத் தகவல் தந்து, சிம்மவர்மனின் படைகள் பாலகாடம் வருவதற்குள் ஜெயபாலன் பாலகாடத்தைக் கைப்பற்றிவிடுவான். எனவே பல்லவர்களுக்கு பதிலாக தாங்கள் பாலகாடத்தை காப்பாற்றுவதாகக் கூறினான்.

அப்போதைக்கு ஜெயபாலனை சமாளித்தால் போதும் என்கிற நிலையில் பாசுபத பாணிக்ராகியும் ஸ்கந்தனின் உதவியை ஏற்க சம்மதித்தார். பல்லவப் பகுதியான பாலகாடத்தைக் காப்பாற்ற, பல்லவ மன்னனின் எதிரியான ஸ்கந்தவர்மனே ஸ்வேத ஹூனர்களுடன் போரிட முடிவு செய்தான். அப்போதைக்கு ஸ்கந்தனுக்கு பல்லவர்களின் மீது இருந்த கோபத்தைவிட ஜெயபாலனின் மீது ஆத்திரம் அதிகம் இருந்தது.

பாலகாட அரண்மனையின் மீது படையெடுத்து வந்த ஜெயபாலன் திகைத்தான். அரண்மனையினுள் இருந்து ஸ்கந்தன் திடீர் என்று வெளிப்பட, ஸ்வேத ஹூனரின் படையை கடம்பப் படைகள் சூழ்ந்து கோரமாகத் தாக்கின. ஸ்வேத ஹூனர்களை அடியோடு களையெடுக்க வேண்டும் என்று ஸ்கந்தன் உக்கிரமாக அவர்களைத் தாக்க, ஜெயபாலன் தலைமையில் மிகவும் குறைந்த அளவில் ஸ்வேத ஹூனர்கள் தப்பிச் சென்று பல்லவத்தை நோக்கி ஓடினார்கள். சந்திரகிரியைக் கைப்பற்றி அதில் மறைந்திருந்த மிகுதி ஸ்வேத ஹூனர்களையும் கொன்று அந்தப் பகுதியையும் கைப்பற்றினான்.

ஸ்வேத ஹூனர்களைத் திரட்டிக்கொண்டு பல்லவத்தினுள் நுழைய முயன்ற ஜெயபாலனை பல்லவப் படைகள் விரட்டி அடிக்க, மேலேயும் செல்ல முடியாமல், கீழேயும் செல்ல முடியாமல், இடையில் சிக்கிக்கொண்ட ஜெயபாலன் அருகில் இருந்த நல்லூர [2] காடுகளில் பதுங்கினான்.

பாலகாடத்தைக் காப்பாற்றுகிறேன் பேர்வழி என்று ஜெயபாலனை விரட்டி அடித்துவிட்டு, இதோ கிளம்புகிறோம், அதோ கிளம்புகிறோம் என்று கூறியபடி பாலகாடத்தைவிட்டு தனது கடம்பப் படைகளை விலக்கிக் கொள்ளாமல் காலத்தைக் கடத்திக்கொண்டிருந்தான் ஸ்கந்தன். இதனால் பல்லவ மன்னன் சிம்மவர்மனின் கோபத்திற்கு ஆளாகி இருந்தான்.

https://telegram.me/aedahamlibrary

பாலகாடத்தைக் கைப்பற்றிய கடம்பத்திற்கு தக்க பாடத்தை புகட்டி மீண்டும் பாசுபத பாணிக்ராகி வசம் அதன் அதிகாரத்தை கொடுக்க வேண்டும் என்று பல்லவ மன்னன் சிம்மவர்மன் சூளுரைத்த போது, அவனைச் சுற்றி அவனது நான்கு குமாரர்கள் அவனிசிம்மன், தானவர்மன், ஜெயவர்மன் மற்றும் பீமவர்மனும் அவர்களது ஆருயிர் சகோதரியும் பல்லவ இளவரசியுமான பேரழகுப் பெட்டகம் நவரத்ன பல்லவி என்கிற மோகனவல்லியும் இருந்தனர்.

[1] கடம்பர்கள் (கி.பி. 345-525) இப்போதைய கர்நாடகத்தை ஆண்டவர்கள். அவர்களது தலைநகரம் பனவாசி. இது தற்போதைய உத்திர கர்நாடகத்தில் உள்ளது. மயூரசர்மன் என்பவன் கடம்ப ராஜ்யத்தை கிபி 345இல் தோற்றுவித்தான். குப்த அரசகுமாரி திலோத்தமாவை மணந்து கொண்டான். சமுத்ரகுப்தன் படையெடுத்து சென்ற பிறகு, கடம்பம் பாலகாடம் மற்றும் வேங்கடம் பகுதிகளைக் கைப்பற்ற நினைக்க, அதனால் பல்லவர்களுக்கும், கடம்பர்களுக்கும் இடையே நல்லுறவு இருக்கவில்லை. மயூரசர்மன் ஸ்வேத ஹூனர்களை தூண்டிவிட்டு விஷ்ணுகோபனுக்கு பிரச்னைகளை கொடுத்துக் கொண்டிருந்தான். பல்லவர்களை போரில் வீழ்த்தியும் விட்டான். மயூரசர்மனுக்கு பிறகு காகுத்சவர்மன் பதவிக்கு வந்து கடம்ப ராஜ்யத்தை விரிவாக்கம் செய்தான்.

தலகுண்டா மற்றும் குட்னபூர் கல்வெட்டுகளின்படி இவர்கள் மாநவ்ய கோத்திரத்தை சேர்ந்தவர்கள். ஹரிதபுத்ரர்கள். சதவாகன மன்னர்களின் கிளை என்று இந்தக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தக் கல்வெட்டுகள் பல்லவர்களுக்கும், கடம்பர்களுக்கும் இடையே பகைமை ஏற்பட்டதற்கான காரணத்தை விளக்குகிறது. கடம்பர்கள் குறித்து பல கதைகள் உண்டு. மயூரசர்மனின் தந்தை திருலோச்சன கடம்பன் கடம்ப மரத்தின் கீழே பரமசிவனின் வேர்வையினால் உண்டானவன் என்று ஒரு கதை உண்டு.

நந்த வம்சத்தைச் சேர்ந்த மன்னன் ஒருவன் வேட்டையாடிய போது அவனுக்கும் நாக கன்னி ஒருவளுக்கும் பிறந்தவன் திருலோச்சன கடம்பன். ஆனால் இந்தக் கதைகள் எல்லாம் நம்பமுடியவில்லை என்றாலும், தலகுண்டா கல்வெட்டு (Talagunda inscription) கூறுவது சற்று நம்பும்படியாக உள்ளது. மயூரசர்மாவை மன்னனாக அறிவித்தது ஆறுமுக முருகபெருமான் என்கிறது. மயூரவர்மன் என்கிற பெயர் மயிலை குறிக்கிறது. முருகனுக்கு கடம்பன் என்னும் பெயர் உள்ளதால், கடம்பர்கள் முருகனை வழிபட்டவர்கள் என்று தெரிகிறது.

https://telegram.me/aedahamlibrary

கர்நாடகாவின் சுப்ரமண்யா திருத்தலத்தை எழுப்பியவர்கள் கடம்பர்கள்தான்.

கடம்பர்கள் பிராமணர்கள் என்று தலகுண்டா கல்வெட்டு கூறுகிறது. ஆனால் சோப்ரா போன்ற சரித்திர பேராசிரியர்கள் கடம்பர்கள் சேர நாட்டைச் சேர்ந்த கடம்ப மலைவாசிகள். இவர்களைப் பற்றி சங்க இலக்கியங்களில் கடம்ப மரத்தையும், முருகனையும் தொழுபவர்கள் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால்

நீலகண்ட சாஸ்த்ரி மற்றும் காமத் ஆகியோர் இவர்கள் வேத வழிபாடுகளைக் கடைப்பிடித்தவர்கள் என்கிறார்கள்.

முக்கூடல் கடிகையில் கி.பி. 325இல் வேதம் பயின்ற போது அவனையும் அவனது பாட்டனும் குருவுமான வீரஷர்மரையும் பல்லவ வீரன் ஒருவன் அவமதித்துவிட்டான். அதனால் கல்வி பயிலுவதை நிறுத்திவிட்டு, பல்லவர்களை வீழ்த்துகிறேன் என்று சபதம் செய்து கடம்ப ராஜ்யத்தை மயூரசர்மன் தோற்றுவித்தான் என்கிறது. பிரகத் பானஸ் என்கிற தற்போதைய கோலார் பகுதியை கைப்பற்றி பல்லவர்களை வீழ்த்தினான் என்கிறது.

[2] நல்லூர் காடுகள் இப்போதைய நெல்லூர் மற்றும் அதனைச் சுற்றிய பகுதிகள்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 38. பிரக்ஞுதாராவின் பொக்கிஷம்

நல்லூர காடுகளில் திரிந்து கொண்டிருந்தனர், ஜெயபாலனும், அவனது குழாமும். கிடைத்ததை உண்டும், இரவானால் மரங்களடியில் உறங்கியும் திரிந்து கொண்டிருந்தனர். நாடோடிகளுக்கு இது பெரிய பிரச்சனை இல்லைதான் என்றாலும், ஜெயபாலன் இதை மிகவும் அவமானமாக நினைத்தான். தன்னை ஒரு மன்னனாக நினைத்துக்கொண்டிருந்தவன், ஸ்கந்தன் இழைத்த அவமானத்தைத் தாங்க இயலாமல் அவதிப்பட்டான். ராஜஸ்ரீயின் பேரழகு வேறு அவ்வப்போது அவனைத் துன்புறுத்த அவளை எப்படிக் கடத்திச் செல்வது என்கிற யோசனையில் இருந்தான்.

இப்படி அவர்கள் வனத்தில் அலைந்துகொண்டிருக்க, ஒரு நாள் ஸ்வேத ஹூனர் குழாமைச் சேர்ந்த வத்சலன் என்பவன் ஒரு ஏரிக்கரையின் அருகே எழும்பும் புகை மண்டலத்தைச் சுட்டிக்காட்ட, அவர்கள் அந்த புகைமண்டலத்தை நோக்கிச் சென்றார்கள்.

ஒரு முதிய பெண்மணி ஒரு குடிலின் எதிரே உணவு சமைத்துக்கொண்டிருக்க, சீன தேசத்தைச் சேர்ந்த மனிதன் ஒருவன் அருகே தியானத்தில் இருந்தான்.

அவர்களைத் தாக்கி, அந்தக் குடிலினைக் கைப்பற்றி உணவை உண்டு, கிடைத்ததை சுருட்டுவோம் என்கிற எண்ணத்துடன்தான் ஜெயபாலனும் அவனது ஆட்களும் முன்னேறிச் சென்றனர். ஆனால் அவர்கள் வருவதை உணர்ந்தவர்களாக அந்த மூதாட்டியும், அந்த சீன தேசத்து வாலிபனும் கண்களை விரித்து அவர்களை நோக்க, அப்படியே கட்டுண்டு நின்றுவிட்டனர், ஸ்வேத ஹூனர்கள்.

அவர்களால் அசையவே முடியவில்லை.

"உணவு வேண்டும் என்று கேட்டு உணவை வாங்கித் தின்னுங்கள். களவாட நினைக்காதீர்கள்!"

கண்டிப்பு மிகுந்த குரலுடன் கூறிய அந்த மூதாட்டி ஜெயபாலனை நோக்கி வந்தாள். அவள் தான் பிரக்ஞுதாரா. உடன் இருந்த சீன வாலிபன் தான் ஜினிங்டியாண்டை.

தங்கள் நோக்குப் பார்வையால் ஜெயபாலனையும் அவன் இனமக்களையும் கட்டிவிட்ட அவர்கள், உணவு தயார் செய்யும் வரை அவர்களை பந்தன நிலையிலேயே வைத்திருந்தார்கள். பிறகு

https://telegram.me/aedahamlibrary

பந்தனத்தை விடுவித்து, அவர்களுக்கு உணவை அளித்தனர்.

“சீனாவின் ஜின்ஜியாங் மாகாணத்தைச் சேர்ந்த சிவப்பு ஹுனர்கள் நாங்கள். கிழக்கு காஷ்மீரத்தில் குடிபுகுந்தோம். அங்கிருந்து சிவப்பு ஹுனர்கள் ஸ்வேத ஹூனர்கள் என்று எங்களுக்குள் பிரிவு உண்டானது. ஸ்வேத ஹூனர்களாகிய நாங்கள் மகாகாந்தார காடுகளில் குடிபுகுந்தோம். சமுத்ரகுப்தனால் விரட்டப்பட்டு சந்திரகிரியில் வசித்து வந்தோம். இப்போது கடம்ப மன்னன் ஸ்கந்தவர்மனால் விரட்டப்பட்டு, பல்லவ மன்னன் சிம்மவர்மனால் தெற்கிலும் விரட்டப்பட்டு, போவதற்கு இடமில்லாமல், இந்தக் காட்டில் திரிகிறோம்!” தங்களது கதையை அவர்களிடம் கூறினான், ஜெயபாலன்.

தங்களது சீன தேச மாகாணமான ஜின்ஜியாங்கின் வம்சாவளியினர் என்பதை அறிந்ததும், பிரக்ஞுதாராவுக்கும், ஜினிங்கிற்கும் ஜெயபாலனின் மீதும் அவன் மக்களின் மீதும் பரிவும் பாசமும் பெருகின.

“நீங்கள் இங்கேயே தங்குங்கள்! நாங்கள் இருவரும் உங்களை பார்த்துக் கொள்கிறோம்” என்று அவர்களுக்கு மனம் உவந்து இடம் அளித்தனர். ஜெயபாலனும் ஸ்வேத ஹூனர்களும் அந்தக் காட்டில் அவர்களுடனேயே தங்கிவிட்டனர்.

"எனக்கு ஸ்கந்தனைக் கொன்று அவன் மகள் ராஜஸ்ரீயை மணமுடிக்க வேண்டும்! அதற்கு நான் அரசனாக வேண்டும்!” ஜெயபாலன் அவர்களிடம் ஒருநாள் தனது ஆதங்கத்தைக் கூறினான்.

"எங்களுக்கும் காஞ்சியில் ஒரு காரியம் ஆக வேண்டியிருக்கிறது. அதற்கு நீங்கள் உதவினால், நாங்கள் உன்னை மன்னனாக ஆக்குகிறோம்!” பிரக்ஞுதாரா கூறினாள். -

“என்ன காரியம் அது?” ஜெயபாலன் கேட்டான். "காஞ்சி அத்திமலைத் தேவன் ஆலயத்தில் ஒரு பொக்கிஷம் உள்ளது. அதை சீனத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டும். அவ்வளவே!” என்றாள் பிரக்ஞுதாரா.

“அது என்ன பொக்கிஷம்?” ஆவலுடன் கேட்டான், ஜெயபாலன்.

அது உனக்குத் தேவை இல்லாதது. நீ அரசனாகி ராஜஸ்ரீயை மணக்க வேண்டும் என்றாய்... அவளைப் பற்றி நாங்கள் விவரங்களை கேட்டோமா? நீ நினைத்ததை நடத்திக் காட்டுகிறோம். நாங்கள் விரும்புவதை நீ நடத்திக் காட்டு!” ஜினிங் காட்டத்துடன் கூறினான்.

https://telegram.me/aedahamlibrary

“நீங்கள் சொல்வதை நடத்திக் காட்டுகிறேன்!” ஜெயபாலன் உத்தரவாதம் அளித்தான்.

“நீ மன்னனாக வேண்டுமென்றால் முதலில் உனது அடையாளங்களை மாற்றிக்கொள். இனி உங்களை ஸ்வேத ஹூனர்கள் என்று கூறிக் கொள்ளாதே. உனக்கு புதிய அடையாளத்தைத் தருகிறேன். நீங்கள் இனி பௌத்தபரர்கள் என்று அழைக்கப்படும் வீரர்கள். போர்க்களத்தில் வாழப் போகின்றவர்கள். களம் பல காணப்போகின்றீர்கள். பௌத்தபரர்கள் களத்தில் இறங்கினால் வெற்றிதான் என்னும் நிலை உண்டாகும். பௌத்தபரர்களை களபரர்கள் என்று வருங்காலம் அழைக்கும்!” ஜெயபாலனை வாழ்த்தினாள், பிரக்ஞுதாரா.

களபரர்கள் என்கிற அந்த பெயர் ஜெயபாலனுக்கு மிகவும் பிடித்திருந்தது. களவு என்கிற அவர்கள் தொழிலைக் களம் என்கிற சொல்லினால் அவர்கள் போர்க்கள வீரர்களாக சித்தரித்துக் காட்டிய பிரக்ஞுதாராவின் செயல் அவனுக்கு உற்சாகத்தைத் தந்தது.

“களப்பர மன்னன் ஜெயபாலன் வாழ்க!”

அவனது இன மக்கள் வாழ்த்தொலி வழங்க, பெருமிதத்துடன் தன்னைச் சுற்றி பார்த்தான்.

'அடியே ராஜஸ்ரீ! வருகிறேன்! எனது அரசியாக பக்கத்தில் அமர தயாராக இரு!'

தனக்குள் கூறிக்கொண்டான் ஜெயபாலன்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 39. தமையனுக்கு வெற்றிக்கன்னி

சிம்மவிஷ்ணுவாக தனது தந்தைக்கு பிறகு பல்லவ அரியணையில் அமர இருந்த, அவனிசிம்மன் ஆவலுடன் தனது தந்தை, மன்னன் சிம்மவர்ம பல்லவனின் முகத்தையே கவனித்துக் கொண்டிருந்தான்.

பாலகாடத்தை கைப்பற்றியிருந்த கடம்ப மன்னன் ஸ்கந்தவர்மனின் மீது படையெடுத்துச் செல்ல முடிவு செய்துவிட்டார். பல்லவ சேனைநாயகனாக பட்டத்து இளவரசனான தனது பெயரை அறிவிக்கப் போகிறார். பெருமிதத்துடன் ஒருமுறை தன்னைச் சுற்றிப்பார்த்துக் கொண்டான். முதன்முறையாக சேனைநாயகனாக ஒரு போரில் பங்கேற்க இருக்கிறான், இவன்.

“சேரம், பாண்டியம் மற்றும் சோழத்துடன் பிரச்னைகள் உருவாகியுள்ள இந்த வேளையில், கடம்ப மன்னன் ஸ்கந்தன் நம் மீது ஒரு போரை திணித்திருக்கிறான். ஸ்வேத ஹூனர்களை விரட்டுகிறேன் பேர்வழி என்று சந்திரகிரியை கைப்பற்றுவது போன்று, பல்லவப் பகுதியான பாலகாடத்தை கைப்பற்றி உள்ளான். அதன் மூலம் நமக்கு ஒரு சவாலை விட்டிருக்கிறான். நமது முன்னோர்களில் ஒருவரான விஷ்ணுகோப பல்லவர் யுவராஜாவாக அங்கேதான் அறிவிக்கப்பட்டார். சமுத்ரகுப்தனே நட்பு பாராட்டிய நமது உன்னத விஷ்ணுகோபரின் நினைவை போற்றும் பாலகாடம் நமது தன்மானத்தை காக்கும் ஒரு பகுதி. அதை கைப்பற்றியதன் மூலம் கடம்பன் தூங்கும் சிங்கமான என்னை இடறிவிட்டான். வரும்பொழுது பாலகாடத்துடன் வருகிறேன்” என்றான் சிம்மவர்மன்.

"இங்கு காஞ்சி ஒத்தாடையில் பட்டத்து இளவரசன் எனது சார்பாக ஆட்சியை பார்த்துக் கொள்வான். நான் எனது சேனை நாயகனாக, இளவரசனும் எனது மூன்றாவது மகனுமாகிய ஜெயவர்மனை அழைத்துச் செல்கிறேன்!”

சிம்மவர்மன் கூற, அவனிசிம்மனின் முகம் இருண்டது. தனது மற்ற தம்பிகளான தானவர்மனையும், பீமவர்மனையும் சோகமாக நோக்கினான்.

'பட்டம் எனக்கு வந்தாலும் பதின் பிராயங்களை கடந்து கொண்டிருக்கும் ஜெயவர்மனுக்குத்தான் புகழ் கூடுகிறது!' மனதினுள் நினைத்தான், அவனிசிம்மன்,

https://telegram.me/aedahamlibrary

ஜெயவர்மன் படைகளின் நாயகனாகத் திகழ சிம்மவர்மன் பாலகாடத்தை ஆக்ரமித்துக் கொண்டிருந்த கடம்பத்தை விரட்டுவதற்குப் புறப்பட்டான்.

சந்திரகிரி, உதயகிரி மற்றும் வேங்கடகிரிகளை கைப்பற்றி, பாலகாடத்தையும் ஆக்கிரமித்து தனது கடம்ப ராஜ்யத்தை விரிவுபடுத்தி விட்டோம் என்கிற மகிழ்ச்சியில், குடும்பத்துடன் திருவேங்கடத்தில் ஆராதனைகளைச் செய்துவிட்டு, பாலகாட அரண்மனையில் இளைப்பாறிக் கொண்டிருந்தான் ஸ்கந்தன்.

சந்திரகிரியின் வழியாக பல்லவப் படைகள் வருவதை அறிந்து ஸ்கந்தன் தனது படைகளுடன் சிம்மவர்மனுக்காகக் காத்திருக்க, அவன் எதிர்பார்த்திராத வண்ணம், திடீரென்று உதயகிரி மலையிலிருந்து இறங்கிய ஜெயவர்மன் ஸ்கந்தனை தாக்கத் துவங்கினான். சந்திரகிரி வழியாக வந்த சிம்மவர்மனும் தாக்குதல்களில் இறங்க, இருபுறத் தாக்குதல்களினால் நிலைகுலைந்தான், ஸ்கந்தன்.

தனது தலைநகரமான பனவாசியில் இருந்து இன்னும் படைகளை தருவிக்கலாம் என்றால் அதற்கு உதயகிரி அவன் வசம் இருந்திருக்க வேண்டும். வலையில் வந்து சிக்கிக்கொள்ளும் முயலாக பாலகாடத்தை ஆக்கிரமித்து சிம்மவர்மனிடம் சிக்கிக்கொண்டான். வேறு வழியின்றி, சிம்மவர்மனிடம் சரணடைய விரும்புவதாகத் தெரிவித்தான், ஸ்கந்தன்.

தனது மகன் ஜெயவர்மனின் ராஜதந்திரம் பலித்து விட்டதை எண்ணி சிம்மவர்மன் களிப்படைந்தான். அவன்தானே யோசனையை சொல்லியிருந்தான். அனைவரும் சந்திரகிரி வழியாக பாலகாடம் செல்லாமல், தான் ஒரு பகுதிப் படையை அழைத்துக்கொண்டு உதயகிரி வழியாக கடம்ப மன்னனை தாக்குவதாகக் கூறினான்.

“நீ இன்னும் குமரன்தான். இன்னும் போர் கலையில் நிறைய தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது!” என்று சிம்மவர்மன் கூற, ஜெயவர்மன் மீண்டும் இறைஞ்சி கேட்க, வேறு வழியில்லாமல் அவனது யோசனைக்கு சம்மதம் தெரிவித்திருந்தான். அந்த யோசனை சிறப்பான பலனை தந்திருப்பதை அறிந்து, மகனை பிரமிப்புடன் நோக்கினான். இவன் பட்டத்து இளவரசனாக இருந்திருக்கக் கூடாதா என்று கூட ஒருகணம் நினைத்து விட்டான்.

“ஜெயவர்மா! இந்த வெற்றிக்கு உனது சாதுர்யமும், சமயோசிதமுமே காரணம். எனவே, நீயே ஸ்கந்தனின் சரணாகதியை ஏற்றுக்கொள்!”

https://telegram.me/aedahamlibrary

சிம்மவர்மன் இரதத்தில் வீற்றிருந்தபடியே, ஜெயவர்மனை பாலகாட அரண்மனைக்குள் அனுப்பினான்.

தகதகத்த தனது வெற்றி வாளைச் சுழற்றியபடி அரண்மனைக்குள் நுழைந்தான், ஜெயவர்மன். மன்னரின் குடும்பம் மைய மண்டபத்தில் அவனுக்காகக் காத்திருந்தது. ஜெயவர்மனிடம் அந்தத் தகவல் தெரிவிக்கப்பட, ஒரு பணியாள் அவனை மைய மண்டபத்திற்கு இட்டுச் சென்றான்.

"நீங்கள் தோற்கடிக்கப்பட்டு விட்டீர்கள். பல்லவ இளவரசன் ஜெயவர்மன் நான். தங்களது சரணாகதியை ஏற்கும்படி எனது தந்தை சிம்மவர்ம பல்லவர் என்னை அனுப்பினார்! அவர் கூறியபடி..." என்று பேசத் தொடங்கிய ஜெயவர்மன், அப்படியே வார்த்தைகளை முடிக்காமல் பிரமிப்புடன் நின்றுவிட்டான்.

ஸ்கந்தவர்மன் தனது மகுடத்தை கையில் எடுத்து ஜெயவர்மனின் பாதங்களில் வைப்பதற்காகக் குனிய முற்பட, அதனைப் பேரழகு மிக்க குமரி ஒருத்தி வருத்தத்துடன் பார்த்துக்கொண்டிருந்தாள். அவளது அழகிய நேத்திரங்கள் தனது தந்தையார் ஒரு இளங்குமரனின் முன்பாக பணிந்து குனிவதைக் காண சகியாமல், துடிதுடித்துக் கொண்டிருப்பதைக் கண்டான், ஜெயவர்மன்.

கண்களில் ஈரம் எட்டிப் பார்க்க, அந்த இளங்குமரன் முன்பாக தான் கண்ணீர் விடக்கூடாது என்கிற உறுதியுடன் அதைக் கட்டுப்படுத்த முயல்வதையும் ஜெயவர்மன் கண்டான்.

என்ன ஒரு அழகு? எனது அண்ணன் பல்லவ அரசனாக பதவி ஏற்கும் போது அவனருகில் அரசியாக அமருவதற்கு எல்லா தகுதிகளையும் பெற்றவள். இவள் பல்லவ அரசியாகத் திகழ்ந்தால் தொண்டை நாட்டிற்கே பெருமை அல்லவா?

ஜெயவர்மன், கடம்ப இளவரசி ராஜஸ்ரீயின் அழகில் பிரமித்துப் போய் நின்றான். பொதுவாக ஒரு அரசனோ, இளவரசனோ கைப்பற்றிய இளவரசியை தானே அடையத் துடிப்பான். ஆனால் நற்குணங்களுக்கு இருப்பிடமாகிய ஜெயவர்மன், கண்ட மாத்திரத்திலேயே அவளைத் தனது அண்ணியாக பாவிக்கத் தொடங்கினான்.

“உமது சரணாகதியை ஏற்கிறேன்! மீண்டும் பாலகாடம் பல்லவப் பகுதியாக இனி திகழும். நீங்கள் மீண்டும் உங்கள் நாட்டிற்கு புறப்படலாம். நீங்கள் வெளியேறுவதற்கு மூன்று நாட்கள் அவகாசம்

https://telegram.me/aedahamlibrary

தருகிறோம்!” ஜெயவர்மன் கூற, தலையசைத்தான், ஸ்கந்தன்.

தன்னையும் அறியாமல் ராஜஸ்ரீயை மீண்டும் ஏறிட்டுப் பார்த்த ஜெயவர்மன் அவளது முகத்தில் நிம்மதி பரவுவதைக் கண்டான். அவள் அவனை வெறித்து நோக்கிக் கொண்டிருந்தாள்.

பல்லவ இளவரசன் ஜெயவர்மன் இந்த குமார பருவத்திலேயே எவ்வளவு கம்பீரமாக இருக்கிறான். அவனது கண்களில் அகம்பாவம் சிறிதும் இல்லை. காருண்யம்தான் புலப்படுகிறது. வெற்றி பெற்று விட்டோம் என்கிற மமதை சிறிது கூட இல்லையே! தந்தையிடம் எவ்வளவு பணிவுடன் பேசுகிறான். அவரை அலட்சியம் செய்யாமல், கருணையுடன் பேசுகிறான். நற்பண்பு உள்ள ஆண்களைக் காண்பதே அரிதாகி விட்டதே. இவன் அழகாகவும், கம்பீரமாகவும், நற்பண்புகள் நிறைந்தும் இருக்கிறான். இவனைக் கணவனாகக் கொள்ளுபவள் மிகவும் பாக்கியசாலி.

ஏறக்குறைய அதே எண்ணத்துடன்தான் ஸ்கந்தவர்மனும், அவன் மனைவி அஸ்வதியும் ஜெயவர்மனை கண்களால் அளந்து கொண்டிருந்தனர்.

ஜெயவர்மன் யோசித்தபடி நின்றிருந்தான்.

தந்தையின் அனுமதி இல்லாமல் கடம்ப மன்னனிடம் தனது அண்ணன் அவனிசிம்மனுக்கு ராஜஸ்ரீயை பெண் கேட்க முடியாது. அதே சமயம், அவன் மீண்டும் தனது நாட்டுக்குச் சென்றுவிட்டால் இவர்களை உதாசீனம் செய்து விடுவான். இந்த பேரழகுப் பெட்டகம் பல்லவத்திற்கு உரித்தாக வேண்டும். என்ன செய்வது? அவனுக்கு ஒரே ஒரு பாதைதான் புலப்பட்டது.

ராஜஸ்ரீயை அண்ணியாக பெற வேண்டும். அதற்கு கடம்ப மன்னன் இசைவு தர வேண்டும்!

ராஜஸ்ரீயை பெண் கேட்டால், 'எனக்கு பெண் கேட்க நீ யார்? நீ இழுத்து வந்த பெண்ணை நான் மணக்க வேண்டுமா?' என்று அவனிசிம்மன் இவனுடன் வாதம் செய்யக்கூடும். ராஜஸ்ரீயை சிறைபிடித்துச் சென்றால், படையெடுப்பின் போது சிறைபிடிக்கப்பட்டு வந்தவள் என்பதால் அவளை அண்ணன் ஏற்றுக்கொள்ளலாம்.

ஜெயவர்மனுக்கு ஒரே வழிதான் புலப்பட்டது. ராஜஸ்ரீயை சிறைபிடித்து காஞ்சிக்கு அழைத்துச் செல்ல வேண்டும். வேறு வழியின்றி, ஸ்கந்தனும்

https://telegram.me/aedahamlibrary

அவளை அவனிசிம்மனுக்கு மணமுடித்து தருவான்.

கண்களில் சற்று பணிவை குறைத்து, கண்டிப்பினை அதிகரித்தான், ஜெயவர்மன்.

“கடம்ப மன்னரே! எங்களுக்குத் தெரியாமல் பாலகாடத்தை அபகரித்து பிறகு எங்களை அலைக்கழித்து போராடி அதனை மீண்டும் பெற வைத்தீர். எங்கள் தந்தையை வயதான காலத்தில் அலைய வைத்ததற்குத் தண்டனையாக, தாங்களும் அந்த சிரமங்களை அனுபவிக்க வேண்டும். சரணாகதி அடைந்துவிட்டதால், எல்லா தண்டனைகளில் இருந்தும் தப்பிவிடலாம் என்று எண்ணாதீர். உங்களுக்கு உங்கள் மகள் அருமை என்பது எனக்குத் தெரியும். அதே போன்றுதான் பாலகாடம் எங்களுக்கு அருமை. பாலகாடத்தை இழந்து எனது தந்தை அனுபவித்த வேதனைகளை நீரும் அனுபவிக்க வேண்டும். உமது அருமை மகள் இளவரசி ராஜஸ்ரீயை நான் சிறைபிடிக்கிறேன். மன்னரின் உத்தரவோடு அவர் எங்களது பட்டத்து இளவரசியாகத் திகழ்ந்து பிறகு பல்லவத்தின் அரசியாக அமர்வார், என்கிற உறுதி மொழியை தருகிறோம்! இப்போது உங்கள் மகள் எனது பணயக்கைதியாக காஞ்சி வருவார்!”

தனது வாளைச் சுழற்றி ராஜஸ்ரீயின் எதிரே நீட்டி, அவளை தனது பின்பாக வந்து நிற்கும்படி சமிக்ஞை செய்தான், ஜெயவர்மன்.

ஸ்கந்தன் துடிதுடிக்கவில்லை. பரிதவிக்கவில்லை. மகளுக்குக் கிடைத்த பாக்கியத்தை எண்ணி மெய்மறந்து நின்றான். அவன் மனைவி அஸ்வதியோ ஆனந்தக் கண்ணீர்விட ஆரம்பித்தாள்.

“எனது மகள் பல்லவ அரசியா? என்ன பாக்கியம் செய்திருக்கிறாள்...!” தன்னை மறந்து கூறியவள், மகளை அணைத்து உச்சி முகர்ந்தாள்.

ராஜஸ்ரீ திகைத்துப் போய் நின்றிருந்தாள். அழகான, நற்பண்புகளை உடைய ஜெயவர்மன், இவளைக் கண்டு மெய்மறந்து நின்ற போதே அவள் யூகித்துவிட்டாள். அவன் அவளை தனது காதலியாக வரித்துவிட்டான் என்பதை. அதனால்தான் தனது தந்தையை அவன் பணிவுடன் நடத்துவதாக நினைத்தாள். கண்டவுடன் காதலிக்கத் துவங்கிவிட்ட நிலையில் அவள் கைநழுவிப் போய்விடக் கூடாது என்பதற்காக, அவளை சிறை பிடிக்கும் பாவனையில் தனது மணவாழ்க்கைக்கு அஸ்திவாரத்தை எழுப்புகிறான் போலும். தனது கற்பனைகளுக்கு இடம் கொடுத்தபடி கண்களில் போலி அச்சத்தைக் காட்டியபடி, கட்டழகன் ஜெயவர்மனின் பணயக்கைதி தான் என்கிற

https://telegram.me/aedahamlibrary

பரமானந்தத்துடன் அவன் பின்பாகச் சென்று நின்றாள்...

ஜெயவர்மன் ஸ்கந்தனை மீண்டும் நோக்கினான்.

"கவலைப்பட வேண்டாம், கடம்ப மன்னரே! எனக்கு ஒரு சகோதரி இருக்கிறாள். பெயர் நவரத்ன பல்லவி. பல்லவ இளவரசியுடன் கடம்ப இளவரசியாரும் ஒரே அந்தப்புரத்தில் தங்க வைக்கப்படுவார். அவரது உயிருக்கோ, மானத்திற்கோ எந்தக் கேடும் விளையாது. திருமணம் நிச்சயமானதும், உங்களுக்கு அழைப்பு அனுப்பப்படும். சகல மரியாதைகளுடன் நீங்கள் காஞ்சிக்கு வந்து திருமணத்தை நடத்திக் கொடுக்க வேண்டும்!"

ஜெயவர்மன் கூறிவிட்டு, மிடுக்குடன் திரும்பி நடக்க, பெற்றோரிடம் கண்களால் விடைபெற்றுக்கொண்டு அவன் பின்னால் நடந்தாள், ராஜஸ்ரீ.

ஜெயவர்மன் பேரழகி ஒருவளை சிறைபிடித்து வருவதை தனது தேரில் அமர்ந்திருந்த சிம்மவர்மன் கண்டான். அவளது பேரழகில் மயங்கி அவளை மணக்க ஆவல் கொண்டு அவளை சிறைபிடித்து வருவதாகவே நினைத்த சிம்மவர்மனும், அந்த பெண்ணின் பேரழகில் மெய்மறந்தான். அவள் தான் கடம்ப இளவரசி ராஜஸ்ரீயாக இருக்க வேண்டும் என்பதை யூகித்த பல்லவ மன்னன், அந்தக் கணமே அவளை தனது மருமகளாக அங்கீகரித்துவிட்டான்.

"தந்தையே! வெற்றிக்கன்னியை அபகரித்து பல்லவத்திற்கு உரித்தாக்கப் போகிறேன்!" - ஜெயவர்மன் கூறினான்.

நல்லவேளையாக குந்தியைப் போன்று ஜெயவர்மனின் செவிகளில் கோளாறுகள் இல்லை! இல்லையென்றால், சகோதரர்களுடன் பங்கிட்டுக்கொள் என்று கூறி இருப்பானோ என்னவோ!


ஆனால், ஜெயவர்மன் கூறியவுடன், கண்களில் பாசத்துடன், ராஜஸ்ரீயின் சிரசில் கைவைத்து ஆசீர்வதித்தான், சிம்மவர்மன். கடம்ப இளவரசியை அழைத்துக் கொண்டு காஞ்சிக்குத் திரும்பிக்கொண்டிருந்தன பல்லவப் படைகள்.

*****

https://telegram.me/aedahamlibrary

# மூன்றாம் குமாரவிஷ்ணு

# (540 - 550)




*****

https://telegram.me/aedahamlibrary

# 40. களப்பர காடவன்

ஜெயபாலன் உக்கிரத்துடன் தனது கைகளைப் பின்பாகக் கட்டிக்கொண்டு இப்படியும் அப்படியுமாக உலாவிக்கொண்டிருந்தான். புத்தவிகாரன் இறந்த பிறகு ஜெயபாலன் நியமித்திருந்த அவனது புதிய தளபதி காந்தாரன் அவனை தொலைவில் இருந்து அச்சத்துடன் நோட்டம் விட்டுக் கொண்டிருந்தான். அந்தப் பெரிய ஏரியில் இருந்து குடத்தில் நீர் சேந்திக்கொண்டு வந்த பிரக்ஞுதாரா, கண்களை மூடி அமைதியாக புல்தரையில் படுத்துக் கிடந்த ஜினிங்கைப் பார்த்தாள்.

“ஜினிங்! ஜெயபாலனுக்கு என்ன நேர்ந்தது? நீ எதையாவது சொல்லி அவனது கோபத்தை கிளறிவிட்டாயா?” சிரித்தபடி தனது குடிலை நோக்கி நடந்தாள்.

மூடியிருந்த கண்களைத் திறந்து தனது இடுங்கிய கண்களால் தொலைவில் நடைபோட்டுக் கொண்டிருந்த ஜெயபாலனைப் பார்த்தான், ஜினிங். -

“முழுமூடன்! பேராசைகள் இருக்கிறது. ஆனால் செயலாற்ற திறனில்லை. தாயே! இவனை நம்புவது வீண். இவனது இனத்திலேயே ஒரு நல்ல வாலிபன் இருக்கிறான். எதற்கும் துணிந்தவன்! அவனை நமது காரியங்களுக்கு உபயோகப்படுத்தலாம். இளம் வயதினன்! நன்றாகப் போரிடுகிறான். தந்திரங்களையும் செய்கிறான். ஒரு திட்டத்தை கூறுவதற்கு முன்பே அதனை எப்படி நிறைவேற்ற முடியும் என்று யோசிக்கத் துவங்கி விடுகிறான்!” ஜினிங் கூற, பிரக்ஞுதாரா வியப்புடன் நின்றாள்.

“எனக்குத் தெரியாமல் அப்படி ஒரு திறமை கொண்டவன் களப்பரர் படையில் இருக்கிறானா? யார் அவன்?” - பிரக்ஞா கேட்டாள்.

ஜினிங் எழுந்து உட்கார்ந்தான். தொலைவில் இருந்த களபர வாலிபர்களிடையே அவன் கண்கள் யாரையோ தேடின. ஏரிக்கரையில் நீந்திக்கொண்டிருந்த அந்த வாலிபர்களிடையே குறிப்பிட்ட ஒருவனைத் தேடின.

அவன் தேடிய அந்த வாலிபன் தண்ணீரின் அடியில் மூழ்கி ஆழத்தில் நீந்திக்கொண்டிருந்தான் போலும். சுவாசத்தை வாங்குவதற்காக நீரின் மேல்மட்டத்திற்கு வந்தவன், தனது முகத்தில் பரவிய நீரை வழித்தபடி

https://telegram.me/aedahamlibrary

கரையை நோக்கிப் பார்த்தான். சரியாக, ஜினிங்கும் அவனை நோக்க, அந்த வாலிபனின் கண்கள் ஜினிங்கின் கண்களில் சிக்கின. நீந்திக்கொண்டிருந்தவனை குரல்விட்டு அழைக்காமல், தனது நோக்கு பார்வையைப் பிரயோகப்படுத்தி அங்கு வரும்படி உத்தரவிட்டான்.

அந்த வாலிபனின் பெயர் காடவன். மிகவும் துணிச்சல் நிறைந்தவன். காடவன் ஏரியில் நிர்வாணமாக குளித்துக்கொண்டிருந்தான் போலும், இவன் வசியம் செய்து அழைத்தவுடன் அப்படியே ஏரியைவிட்டு விலகி, நடந்து வந்து நின்றான். அவனது வசியத்தை ஜினிங் விலக்கியதும்தான் தான் நிர்வாணமாக நிற்பது புரிய, சற்றே குழம்பிப் போய் ஏரிக்கரையை நோக்கி மீண்டும் ஓடி, தனது ஆடைகளை அணிந்து கொண்டு பிறகு வந்து நின்றான்.

“இவனைத்தான் கூறினேன். மிகவும் துணிச்சல் மிக்கவன். அவனது துணிச்சலை சோதிக்க எண்ணிய நான், ஒரு சிறுத்தைப் புலியை வசியப்படுத்தி அவன் மீது ஏவிவிட்டேன். அதனை நொடியில் அடித்து வீழ்த்தி, அதன் வாயைப் பிளந்துவிட்டான். ஜெயபாலன் போன்று ஆர்ப்பாட்டங்களை செய்வதில்லை இவன். அமைதியாகச் செயலாற்றுகிறான்." - ஜினிங் கூற, அவனை மேலும் கீழும் நோக்கி, பார்வையால் அளந்தாள், பிரக்ஞுதாரா.

உண்மைதான்! வர்மக்கலை சாத்திரப்படி அவனது மேனியில் நாடிச்சக்கரங்கள் துடிப்புடன் செயலாற்றுகின்றன. அவன் நிர்வாணமாக வந்து நின்ற போது அவனது மூலாதாரத்தை ஆராய்ந்தாள். இவன் வருங்காலத்தில் பெரிய மன்னனாகத் திகழப் போகிறான். காடவன் என்கிற பெயரில் ஒரு சாம்ராஜ்யத்தை நிறுவப் போகிறான். களபரர்களுக்கு இவனே தலைவனாக இருக்க வேண்டிய தகுதிகளைப் பெற்றிருக்கிறான்.

"நல்லது காடவா! இன்று முதல் நீயே தலைவனாக இருப்பாய்!” பிரக்ஞுதாரா கூற, ஜினிங் ஏரிக்கரையில் குழுமியிருந்த களபரர்களை அருகே அழைத்தான்.

"இனி உங்கள் தலைவன் காடவன்!" என்று ஜினிங் அறிவித்ததும், முதலில் திகைத்துப் போன அவர்கள், பிறகு காடவனை வாழ்த்தி கோஷம் எழுப்பினர்.

இதையெல்லாம் தொலைவில் நின்றபடி கண்ணுற்ற ஜெயபாலன் கோபாவேசமாய் பிரக்ஞுதாராவை நோக்கி ஓடி வந்தான்.

https://telegram.me/aedahamlibrary

“இங்கே என்ன நடக்கிறது?” ஜெயபாலன் கர்ஜித்தான்.

“உனது வாரிசாக காடவன் பதவி ஏற்றுக் கொண்டான்!” ஜினிங் கூறினான்.

“நான் உயிருடன் இருக்கும் போது இன்னொரு தலைவன் எதற்கு?” ஜெயபாலன் கேட்டான்.

“நல்ல கேள்வி! நீ வேண்டுமானால் உயிரை விட்டுவிடேன்!” ஜினிங் கூற, கொந்தளித்தான், ஜெயபாலன்.

“எனது ஆசைகளை நிராசை ஆக்க வேண்டும் என்றே அனைவரும் திட்டமிட்டு சதி செய்கிறீர்களா? நண்பனான ஸ்கந்தன், என்னை மீண்டும் நாடோடியாக்கினான். நான் காதலித்த அவன் மகள் ராஜஸ்ரீயை, பல்லவ இளவரசன் ஜெயவர்மன் கடத்திப் போனான். இப்போது, நான் பார்த்து பிறந்த இந்த குமரன் காடவனை தலைவராக நியமித்து உள்ளீர்கள். அவனுக்கு என்ன தெரியும்? நான் நினைத்தது எதுவுமே நடக்கவில்லை!” என்று பொருமியவன், காடவனுக்கு முன்பாகத் தனது வாளை நீட்டினான்.

“ஒன்று நீ உயிர் வாழ வேண்டும், இல்லை நான் உயிர் வாழ வேண்டும்!” வாளுடன் காடவன் மீது பாய்ந்தான், ஜெயபாலன்.

என்ன இருந்தாலும் இதுவரை தனது தலைவனாக இருந்தவன் ஜெயபாலன். அவனை எப்படி எதிர்கொள்வது என்பது போன்று சற்றே தயக்கத்துடன் ஜினிங்கைப் பார்த்தான், காடவன்.

அவனை அமைதி காக்கும்படி சமிக்ஞை காட்டிய பிரக்ஞுதாரா, ஜெயபாலனை நோக்கினாள்.

“ஜெயபாலா! ராஜஸ்ரீயை இழந்துவிட்டதால் மனம் உடைந்து போய்விட்டாயா?”

"ஆம் தாயே!” ஜெயபாலன் வருத்தத்துடன் அவளை நோக்க, பிரக்ஞுதாராவின் கண்கள் அவனை நோக்கிச் சிரித்தன.

“காதலியை இழப்பது மிகவும் துன்பமானது, ஜெயபாலா!” பிரக்ஞா ஜெயபாலனின் கண்களினுள் உறுத்துப் பார்த்தாள்.

“ஆம் தாயே!” இயந்திர கதியில் கூறினான், ஜெயபாலன்.

“மனது உடைந்த காதலன் வாழலாமோ, ஜெயபாலா?”

https://telegram.me/aedahamlibrary

“கூடாது, தாயே!”

“அப்படியென்றால் நீ ஏன் இன்னும் உயிருடன் இருக்க வேண்டும்? ராஜஸ்ரீயை இழந்து காலமெல்லாம் துக்க சாகரத்தில் மூழ்குவானேன்? இந்த ஏரியில் மூழ்கி நிரந்தர அமைதியைத் தேடிக்கொள்ளேன்!”

பிரக்ஞுதாரா கூற, ஜெயபாலன் தலையை அசைத்துவிட்டு, ஏரியை நோக்கி ஓடினான்.

அவன் உயிரை மாய்த்துக் கொள்ள ஓடுவதை யாருமே ஒரு பொருட்டாகவே நினைக்கவில்லை. பிரக்ஞுதாரா காடவனைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

“காடவா! நீயும் உனது படையினரும் பல்லவத்திற்குள் நுழைய வேண்டும்!” பிரக்ஞா கூறினாள்.

“தாயே! அது சற்றும் இயலாத காரியம். ஜெயபாலன் ஏற்கனவே பல்லவ நாட்டினுள் நுழைய முயன்று சிம்மவர்மனால் அனுமதி மறுக்கப்பட்டு, விரட்டியடிக்கப்பட்டான்!” - காடவன் கூறினான்.

ஜினிங் அலட்சியத்துடன் ஏரியை நோக்கினான்.

“அவன் மூடன்! அவனது காலம் தீர்ந்து போனது. இனி புதிய தலைவன் புதிய முயற்சிகள்! சிம்மவர்மனிடம் அனுமதி கோர வேண்டிய தேவையில்லை. நீ பல்லவத்தினுள் செல்ல நாங்கள் ஓர் உபாயம் வைத்திருக்கிறோம். உனது பெயர் இனி ரணதிலக ஆதித்யபதி. பெரும் செல்வந்தன். பௌத்த பரர்களான நீங்கள் சோழ நாட்டிற்குச் செல்கிறீர்கள். அதற்கு பல்லவ நாட்டின் வழியாக கடந்து செல்வதற்கு அனுமதி கேட்கிறீர்கள்!” பிரக்ஞா கூற, காடவன் தலையசைத்தான்.

“தலைவர் ரணதிலகர் ஆதித்யபதி வாழ்க...!”

"களப்பிரர் தலைவர் ரணதிலக ஆதித்யர் வாழ்க!”

களப்பிரர்கள் கோஷமிட காடவன், புதிய உத்வேகத்துடன் பிரக்ஞுதாராவை வணங்கினான்.

“நான் பல்லவத்தினுள் நுழைந்து என்ன செய்ய வேண்டும்?” காடவன் கேட்டான்.

“உதாசீனம் செய்ய வேண்டும்...” - பிரக்ஞுதாரா கூறினாள்.

“புரியவில்லை தாயே!” – ரணதிலகன் விழித்தான்.

https://telegram.me/aedahamlibrary

“ரணதிலகா! உனக்கு ஒரு இரகசியம் சொல்கிறேன் கேள். உலகில் எந்தப் பொருளை நாம் விரும்பினாலும், அது நமக்கு கிட்டாமல் கைநழுவிப் போகும், துறவறம் உள்பட. தெய்வ பக்தியும் அப்படித்தான். மோட்சத்தை கேட்பவர்களுக்கு அருள் தராமல் கதறச் செய்வான் ஆண்டவன். எனவே, எதையும் விரும்பக் கூடாது என்பதுதான் ஒரு மனிதன் அறிந்து கொள்ள வேண்டிய மூல மந்திரம்.

மனிதன் தான் விரும்ப வேண்டியதை அடைய விரும்பினால், அதற்கு ஒரே வழிதான். விரும்புவதை உதாசீனம் செய்வதுதான். தெய்வத்தைத் தொழாமல் உதாசீனம் செய்தால் தெய்வம் தேடி வந்து மோக்ஷத்தை கொடுக்கும். அரியணையை உதாசீனம் செய்தால் தேடி வந்து உன்னை அதில் அமர வைக்கும். பேரழகு மிக்க பெண்ணை உதாசீனம் செய்தால், அவள் உன்னை அடையத் துடிப்பாள். செல்வத்தை உதாசீனம் செய்தால் அது உன்னிடம் கொட்டிக்கொண்டே இருக்கும். எனவே உதாசீனம் செய். பல்லவத்தினுள் நுழைந்து சோழத்தை அடைவதுதான் உனது குறி! என்று கூறு. பல்லவம் தானாக நழுவி உனது மடியில் விழும். நீ பல்லவத்தை எடுத்துக்கொள். ஆனால் அதில் உள்ள பொக்கிஷம் எனக்குதான்!” பிரக்ஞுதாரா ரணதிலகனிடம் கூறினாள்.

"அடுத்ததாக நான் என்ன செய்ய வேண்டும்?” ரணதிலகன் கேட்டான். தலைவனாக அறிவிக்கப்பட்டதும் எங்கிருந்தோ அவனிடம் மிடுக்கும் கம்பீரமும் சேர்ந்துவிட்டதை பிரக்ஞுதாரா கண்டாள். பதினாறு பிராயங்கள் நிரம்பிய குமரனாக ரணதிலகன் அவளுக்குத் தென்படவில்லை. இவள் கனவை நினைவாக்கப் போகும் கர்மவீரனாக அவன் தோற்றமளித்தான். ஜினிங் சொன்னது உண்மைதான்! ரணதிலகனிடம் உள்ள நெஞ்சுரமும், உறுதியும் ஜெயபாலனுக்குக் கிடையாது. நிச்சயம் ஜெயபாலனால் இவள் எதிர்பார்க்கும் பொக்கிஷத்தைக் களவாட முடியாது.

ஜினிங்கை அர்த்தத்துடன் நோக்கினாள், பிரக்ஞுதாரா.

தாங்கள் சீனத்திற்குக் கவர்ந்து செல்லத் திட்டமிட்டிருக்கும் தேவ உடும்பர சிலையை நிச்சயம் இவன் வெற்றிகரமாக களவாடி நம்முடன் சீனத்திற்கு அனுப்பும் வல்லமையைக் கொண்டவன்தான்.

தனது நேத்திரங்களை மூடித் திறந்து, ஜினிங்கின் யூகம் சரிதான் என்பதை அவனுக்கு உணர்த்த, அவன் புன்னகையுடன் ரணதிலகனைப் பார்த்தான்.

ஜினிங் மற்றும் பிரக்ஞுதாராவைவிட்டு நீங்கிய பிறகே, ரணதிலகன்

https://telegram.me/aedahamlibrary

தனது சிந்தனைக் குதிரையை செலுத்தத் துவங்கினான். வர்மக்கலையை அறிந்த அவர்கள் அவனது சிந்தனை ஓட்டத்தை எளிதாக யூகித்து விடுவார்கள் என்கிற அச்சத்தில் எவ்வித சிந்தனையும் இன்றி அவர்களின் முன்பாக நின்றவன், தனிமையில் தனது சிந்தனைக்கு பூரண சுதந்திரத்தை அளித்தான்.

பிரக்ஞுதாரா மாய மந்திரங்களை அறிந்தவள். புத்த சித்தினி. அவளை வெல்வது மிகவும் கடினம். இருப்பினும் அவள் சீனத்திற்கு எடுத்துச் செல்ல துடிக்கும் அந்தப் பொக்கிஷத்தை நாமே அடைந்தால் என்ன என்று யோசிக்க ஆரம்பித்தான், ரணதிலக ஆதித்யபதி. தமிழகத்தையே இரண்டு நூற்றாண்டுகளாக அடக்கி ஆளப்போகும் களப்பிரர்களின் தலைவன்.[1]

[1] களப்பிரர்களின் காலம் குறித்து பல்வேறு யூகங்கள் கூறப்பட்டு வருகிறது. இருநூறு ஆண்டுகள் தமிழகத்தை இருண்ட பகுதியாக மாற்றியவர்கள் என்று கூறப்படுகிறது. சமுத்ரகுப்தனின் படையெடுப்பின் போது வடக்கில் இருந்து தெற்கே விரட்டப்பட்டவர்கள், பல்லவ மன்னர் சிம்மவிஷ்ணுவால் மீண்டும் வடக்கே விரட்டப்பட்டவர்கள். சிம்மவிஷ்ணுவிற்கு பிறகு பல்லவம் மிகவும் பலம் பொருந்தி இருந்தது. சோழர்களும் ஆதித்த சோழனுக்குப் பிறகு மிகவும் பலப்பட்டு இருந்தார்கள். எனவே களப்பிரர்கள் அதிகாரம் செலுத்திய காலம் சமுத்ரகுப்தனின் படையெடுப்பு துவங்கி சிம்மவிஷ்ணு காலம் வரையிலான காலகட்டத்தில்தான் இருக்கக் கூடும்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 41. ஜெயன் - விஜயன்

சிம்மவர்மனின் கொலுமண்டபம்.

நான்கு இளவரசர்களும் புடைசூழ அரண்மனையை விட்டுக் கிளம்பினான் சிம்மவர்மன். சாளுக்கியத்தில் இருந்து காஞ்சிக்கு வந்து முக்கூடல் கடிகையில் தங்கியிருக்கும், புதிய நடனமாது ஒருவள் அன்று மாலை நடனம் புரிய இருந்தாள். சிம்மவர்மனும் அவன் மனைவியும் ஒரு தேரில் ஏறிக்கொள்ள, இரண்டாவது தேரில் நான்கு இளவரசர்களும், மூன்றாவது தேரில், நவரத்ன பல்லவியும், ராஜஸ்ரீயும் ஏறிக்கொண்டனர். தேரில் ஏறுவதற்கு முன்பாக ராஜஸ்ரீ ஜெயவர்மனின் பக்கமாக ஆர்வத்துடன் நோக்க, அவளது பார்வையை தவிர்த்தான், ஜெயவர்மன். ஆனால் அந்தப் பேரழகி தங்களை நோட்டம் விடுவதைக் கண்ட அவனிசிம்மன் அவளை நோக்கிப் புன்னகைக்க, ராஜஸ்ரீ முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

இவர்கள் அத்தியூரை கடக்கும் போது, தற்செயலாக ஜெயவர்மனின் பார்வை அத்திமலையானின் கோயிலின் வாயிலில் நின்றுகொண்டிருந்த சிவிகையை கண்டு விட்டது. அத்தை ராஜமாதங்கியின் மகள்கள் ஆலயத்திற்கு வந்திருக்கின்றனர் போலும். அத்தை மகள் சாயாதேவி தேவராஜன் ஆலயத்திற்கு வந்திருக்கக்கூடும் என்பதனை யூகித்ததும் அவனது இதயத்தினுள் ஒரு படபடப்பு. உடனடியாக சாயாவை பார்க்க வேண்டும் என்கிற ஒரு ஆதங்கம் தோன்றியது.

அவனிசிம்மனை நோக்கினான், ஜெயவர்மன்.

"அண்ணா! நான் அத்திமலைத் தேவனின் கோயிலுக்குச் செல்கிறேன். எனக்கு நடனம் பார்ப்பதில் ஆர்வம் இல்லை. கோயில் அதிகாரி வரதநாராயண நம்பியை நான் சந்திக்க வருவதாகக் கூறியிருக்கிறேன். நீங்கள் முக்கூடல் நடன நிகழ்ச்சி முடிந்து திருப்பி செல்கையில் என்னை அழைத்துச் செல்லுங்கள்!" என்றபடி ஓடும் தேரில் எழுந்து நிற்க, இரதசாரதி குறிப்பை உணர்ந்தவனாக இரதத்தின் வேகத்தை குறைத்து அதனை நிறுத்துவதற்கு முயல, அதற்குள் தேரிலிருந்து கீழே குதித்துவிட்ட ஜெயவர்மன், தனது சகோதரர்களை நோக்கி கையசைத்தபடி அத்திமலைக் கோவிலை நோக்கி நடந்தான்.

“நினைத்தேன். அத்திமலையானின் கோவிலை கடந்து முக்கூடலுக்குப் போகிறோமே! வழியில் ஆலயம் கண்களில் பட்டால் நமது ஜெயன் இறங்கிவிடுவானே என்று நினைத்தேன். இறங்கிவிட்டான்!”

https://telegram.me/aedahamlibrary

தானவர்மன் கேலியாகப் பேசிச் சிரிக்க, அவனிசிம்மன் புன்முறுவல் ஒன்றை சிந்தியபடி ஆலயத்திற்குச் செல்லும் ஜெயவர்மனைத் திரும்பிப் பார்த்தான். நான்கு சகோதரர்களில் ஜெயவர்மனே பேரழகன். கம்பீரமான உடற்கட்டு. உயரமான தேகம்.

அவன் மட்டும்தான் சிம்மவர்மனின் உயரத்தைக் கொண்டிருந்தான். இவர்கள் எல்லோருமே தாய் குந்தளாதேவியின் உயரத்தையும், நிறத்தையும் கொண்டிருந்தார்கள். ஜெயவர்மன் சற்றே கருமையாகத் தோன்றினாலும், அவனது நடை உடை பாவனைகளில், பராக்கிரமமும், பௌருஷமும், வாத்சல்யமும், கம்பீரமும் வெளிப்பட்டுக்கொண்டிருந்தன. அவனது பார்வை தங்கள் மீது விழாதா என்று இளநங்கையர் தவமாக தவமிருந்தனர். கடம்ப மன்னனை பணிய வைத்து, கடம்ப இளவரசி ராஜஸ்ரீயுடன் காஞ்சியின் ராஜ வீதி வழியே அவன் வந்த போது, கட்டுக்கடங்காத கூட்டம்.

“ஜெயவர்மன்... ஜெயவர்மன்!” என்று மக்களின் கோஷம் விண்ணைப் பிளக்க, சகோதரனைப் பெருமையுடன் அணைப்பது போன்று பாவனை செய்தாலும், அவனிசிம்மனின் இதயத்தினுள் பொறாமைத் தீ கொழுந்துவிட்டு எரிந்தது.

“மன்னர் உன்னை அழைத்துப் போனதால், உனக்கு பெருமை கிட்டியது. தந்தை போர்க்களத்திற்கு வந்திருக்கவே வேண்டாம். என்னை மட்டும் அனுப்பியிருந்தாலே போதும். நான் ஸ்கந்தவர்மனின் தலையோடு வந்திருப்பேன்!” - அவனிசிம்மன் கூற மற்ற சகோதரர்கள் தலையாட்டினர். என்ன இருந்தாலும் அவனிசிம்மன் பட்டத்து இளவரசன். வருங்கால மன்னனும் கூட! அவனை அண்டி பிழைத்தால்தானே அவர்களுக்கு நல்லது.

தனக்குக் கிடைத்துள்ள புகழைக் கண்டு மூத்தவன் பொறாமைப்படுகிறான் என்பதை புரிந்து கொண்டான், ஜெயவர்மன். பிரச்னை ஏற்படுத்த வேண்டாம் என்கிற நினைப்பில் பேச்சை மாற்றினான்.

"அண்ணா! எனது அண்ணியார் ராஜஸ்ரீ எப்படி இருக்கிறாள்? அவளை உனக்குத்தான் மணமுடிக்கப் போவதாக தந்தை கூறினார்!”

"அவள் பேரழகா... என்ன? நமது அத்தை மகள் புவனமாதேவியின் கால்தூசுக்கு வருவாளா? அவளை என் பக்கத்தில் அரசியாக உட்கார வைக்க எனக்கு என்ன பைத்தியமா? நீ வேண்டுமானால் அவளை மணந்து கொள்ளேன்!” - கடுகடுவென்று சொற்களை கொட்டித்

https://telegram.me/aedahamlibrary

தீர்த்தான், அவனிசிம்மன்.

தன் மீதுள்ள கோபத்தில் ராஜஸ்ரீயை தாக்குகிறான், அண்ணன் என்பதை புரிந்து கொண்டு அதற்கு பின்னர் மௌனத்தை கடைப்பிடித்தான். அன்று காலைதான் ராஜஸ்ரீயை அண்ணனுக்கு மணமுடிக்க வேண்டும் என்று தந்தையிடம் கோரியிருந்தான். அவனது நல்ல உள்ளத்தைக் கண்டு மனம் நெகிழ்ந்து போன சிம்மவர்மன் மகனை வாரி அணைத்தான்.

“நான்கு மகன்களையும் ஒரு மகளையும் பெற்றேன் என்று நினைத்தேன். இல்லை மூன்று மகன்களையும், ஒரு மகளையும், ஒரு தெய்வத்தையும் பெற்றேன். அந்த அத்திமலையானே உனது வடிவில் பிறந்திருக்கிறான். நீ பட்டத்து இளவரசனாகப் பிறந்திருக்கலாமோ என்று அண்மைக் காலங்களில் ஒரு எண்ணம் தோன்றுவதை என்னால் தவிர்க்க முடியவில்லை. நான் எங்கு சென்றாலும், மக்கள் உன்னைப் பற்றிதான் பேசுகிறார்கள் என்பதை கவனித்தும் வருகிறேன். உனது சகோதரர்கள் உன்னிடம் உண்மையுடன் நடந்து கொள்ளவில்லை என்பதையும் கவனித்துதான் வருகிறேன். நீ மனதில் எந்த வருத்தங்களையும் கொள்ளாதே. எனது முழுபலமும் நீதான், ஜெயவர்மா! அண்ணன் ஆட்சிக்கு வந்தாலும், அவனை பத்திரமாக நீதான் பார்த்துக் கொள்ள வேண்டும். காஞ்சியையும் நீதான் பார்த்துக் கொள்ள வேண்டும்!” கண்கள் பனிக்க சிம்மவர்மன் பேசினான்.

அத்திமலைத் தேவன் சன்னிதியின் யானை பக்திசாரன் பிளிற, அந்த ஒலியினால் ஜெயவர்மனின் சிந்தனையோட்டம் தடைபட்டது. ஆலயத்தினுள் நுழைந்து அத்தியூரானின் சந்நிதியை நோக்கி நடக்க, சரியாக பெருந்தேவி தாயாரின் சந்நிதியில் இருந்து வெளிப்பட்ட சாயா, அத்திவரதனின் சன்னிதியை நோக்கி நடந்தாள்.

அத்திமலையின் அடிவாரத்தில் இருவரும் சந்தித்தனர். அவனைக் கண்டதும் சாயாவின் முகம் குங்குமமாகச் சிவந்தது. ஜெயவர்மனின் கண்கள் எப்போதும் கடமையுணர்வு என்கிற திரைகளால் மூடப்பட்டிருக்கும். ஆனால், சாயாவைக் கண்டுவிட்டால் மட்டும் அந்தத் திரைகள் விலகி, காதல் எட்டிப்பார்க்கும்.

“மலை ஏறப் போகிறீர்களா, இளவரசே?” சாயா கிண்டலாகக் கேட்டாள்.

"அத்திமலை ஆலயத்திற்கு எதற்கு வருவார்கள்? மலை ஏறத்தானே?” அவளைக் குறும்புடன் பார்த்தபடி கூறினான், ஜெயவர்மன்.

https://telegram.me/aedahamlibrary

“ஓஹோ... அப்படியா! என்னைப் பார்த்தால்தான் நீங்கள் உடனே மலையேறிவிடுவீர்கள். உச்சாணிக் கொம்பில் இருந்து கொண்டு ஏதோ பல்லவத்தையே தாங்கள்தான் காப்பது போன்றும், காதல், திருமணம் போன்ற விவகாரங்களில் கவனம் செலுத்த தங்களுக்கு அவகாசமில்லை என்பது போலும் அல்லவா நடந்து கொள்வீர்கள். என்னைக் கண்டதும்தானே பல்லவ நாட்டிற்கு ஆபத்து இருப்பதாக உங்களுக்குத் தெரிய வரும்?” இடக்காகப் பேசி அவனை மடக்க நினைத்தாள், சாயா.

"உண்மைதான் சாயா! உன்னைக் காணும் போதெல்லாம் எனக்கு அந்த எண்ணம் வருவது உண்மைதான்! அதற்கு காரணம் உனது பெயர்தான், சாயா!” ஜெயவர்மனின் குரலில் ஒருவிதக் கலக்கம் தென்பட்டது.

திடுக்கிட்டு அவன் முகத்தை கவனித்தாள், சாயா.

அவனுடன் ஊடல் செய்து விளையாட வேண்டும் என்பதற்காகவே அங்ஙனம் இடக்காகப் பேசி அவனை மடக்க நினைக்க, அவனோ உண்மையிலேயே அவளது பேச்சால் புண்பட்டுவிட்டான் என்று நினைத்ததும், அவள் இதயம் துடிதுடித்தது.

“என்ன சொல்ல நினைக்கிறீர்கள், இளவரசே!” கண்கலங்க தழுதழுத்த குரலில் கேட்டாள், சாயா!

அவள் கண்களில் கண்ணீர் துளிர்ப்பதைக் கண்டதும், ஜெயவர்மன் பதைபதைத்தான். “அனைத்தையும் தவறாகவே புரிந்து கொள்கிறாயே.. உனது பெயர் சாயா. சாயா என்றால் நிழல்தானே. நமது காஞ்சியில் நிறைய நிழல் மனிதர்கள் நடமாடுகிறார்கள். அவர்கள் சதி செய்து சில காரியங்களை அரங்கேற்ற நினைக்கிறார்கள். அவர்கள் இலக்கு காஞ்சியின் ஜீவ நாடியான ஒரு பொக்கிஷம். என்ன துணிவு இருந்தால் நமக்கு சொந்தமானதை களவாட நினைப்பார்கள்? உன்னைப் பார்க்கும் போதெல்லாம்... உனது பெயரை உச்சரிக்கும் போதெல்லாம், அந்த நிழல் மனிதர்களிடம் இருந்து காஞ்சியைக் காப்பாற்ற வேண்டும் என்கிற சிந்தனை உண்டாகின்றது. எனது கடமை உணர்வை தூண்டச் செய்யும் உன்னைப் பாராட்டவே செய்கின்றேன். நீ அதைத் தவறாகவே புரிந்து கொள்கிறாய். உன்னைப் பற்றி தவறாக சொல்லவில்லை!” அவளை சமாதானப்படுத்தினான்.

“நானும் நீங்கள் கூறியதற்காக கண்கலங்கவில்லை. இன்று எங்கள் மாளிகையில் நடைபெற்ற சம்பவத்தை குறித்து நினைத்துப் பார்த்தேன். அதனால் கண்கள் தாமாகவே கலங்கிவிட்டன!” சாயா பெருமூச்சு ஒன்றை சிந்தினாள்.

https://telegram.me/aedahamlibrary

“என்ன நடந்தது? அத்தை ராஜமாதங்கி தேவியாருக்கு உடல்நிலை சரியில்லையா என்ன?” திகைத்தான் ஜெயவர்மன்.

“மனநிலைதான் சரியில்லை. இன்று காலை சிறிய மாமன் எங்கள் மாளிகைக்கு வந்திருந்தார்?” சாயா கூறியதும் அவளை சந்தேகத்துடன் பார்த்தான் ஜெயன்.

“என்னவாம். எனது சிற்றப்பன் விஷ்ணுவர்மருக்கு?” - ஜெயன் கேட்டான்.

“வேறு என்ன? தனது இளைய மகன் விஜயவர்மனுக்கு என்னை பெண் கேட்டார். அக்கா புவனமாதேவியை பெரிய அண்ணன் சிம்மவர்மனின் மகனும் பட்டத்து இளவரசனுமான அவனிசிம்மனுக்கு தருவதால், இளைய மகளான என்னை தனது இளைய மகனுக்கு தாரை வார்க்க வேண்டுமாம். எனது தாயிடம் வாதித்துக் கொண்டிருந்தார்.”

“ஏன்? மூத்த மகன் ராஜவர்மன் என்ன பாவம் செய்தானாம்? அவனுக்கு உன்னை கேட்டிருக்கலாமே?”

ஜெயவர்மன் கூற, அவனை நோக்கிய சாயாவின் கண்களில் கனல் பறந்தது.

“எனது தாயும் அந்தக் கேள்வியைக் கேட்டாள். ராஜவர்மனுக்கு என்னைப் பார்க்கும் போது திருமணம் செய்து கொள்ளும் எண்ணமே வருவதில்லையாம். சகோதரி முறையாகத்தான் நான் அவரது கண்களுக்குத் தெரிகின்றேனாம்!” இடக்காகக் கூறினாள், சாயா.

"விஜயவர்மனுக்கும், எனக்கும் மட்டும்தான் நீ சகோதரியாகத் தோன்றவில்லை. மற்றவர்களுக்கெல்லாம் நீ சகோதரியாகத் தெரிந்திருக்கிறாய் என்றால், எங்கள் இருவரது எண்ணங்களில்தான் கோளாறு போலும்!” -- ஜெயவர்மன் கூற, அவனைக் கோபத்துடன் பார்த்தாள்.

"உங்கள் வீர பிரதாபங்களுக்கு இழுக்கு நேரிடப் போகிறதே என்று யோசிக்கிறேன். இல்லையென்றால், ஒரே அறையில்... உங்கள் கன்னங்களை வீங்கச் செய்திருப்பேன்!” காட்டத்துடன் சாயா கூறினாள். –

“பெருந்தேவியை தரிசித்துவிட்டு வருகிறாய். பெரும் காயத்தைதான் ஏற்படுத்துவாய் என்பதில் என்ன சந்தேகம்!” ஜெயவர்மன் கூறியதும், கோபத்தை மறந்து கலகலவென்று நகைக்கத் தொடங்கினாள்.

https://telegram.me/aedahamlibrary

"சரி! உன் சிறிய மாமனிடம், உனது தாய் என்ன கூறினார்?" ஆவலுடன் ஒலித்தது ஜெயவர்மனின் குரல்.

"எனது மகள் சாயாதேவியின் விருப்பம்தான் எனது விருப்பம்... என்று எனது தாய் அவரிடம் கூறினார்." - சாயா கூறினாள்.

"உனது விருப்பம்தான் என்ன? நான் அதைத் தெரிந்து கொள்ளலாமா?" ஜெயவர்மன் கேட்டான்.

"என்னுடன் அத்திமலை ஏறி வாருங்கள். எனது வருங்கால கணவரைக் காட்டுகிறேன்!" சாயா மலையின் படிகளில் ஏற, குழப்பத்துடன் நோக்கியவன், அவளுடன் சேர்ந்து நடந்தான், ஜெயவர்மன்.

"மேலே யார் இருக்கிறார்கள்? விஜயவர்மன் சன்னிதிக்கு வந்திருக்கிறானா என்ன?" ஜெயவர்மன் சந்தேகத்துடன் கேட்டான்.

சாயா பதில் கூறாமல், அத்திமலைத் தேவனின் சன்னிதிக்கு முன்பாக நின்றாள். கிழக்கு நோக்கி நின்ற அத்திமலையானின் சந்நிதியின் வாயிலில் துவாரபாலகர்களின் முன்பாக நின்றனர்.

"எங்கே உனது வருங்கால கணவன்?" இதயத்தில் கசப்புணர்வு தோன்ற, பொங்கி வரும் கோபத்தை அடக்கியபடி கேட்டான் ஜெயவர்மன்.

சாயா துவாரபாலகர்களை நோக்கினாள். கிழக்கு நோக்கி நின்ற அத்திமலைத் தேவனுக்கு வலப்புறத்தில் சந்நிதியின் வாயிலில் நின்ற துவாரபாலகனைச் சுட்டிக்காட்டினாள். "இவர் பெயரைக் கொண்டவர்தான் எனது கணவர்!" சாயா சொல்ல, ஜெயவர்மன் திகைத்தான்.

தன்னை உதறிவிட்டு வேறு ஒருவனை சாயா கணவனாக நினைத்துப் பார்த்துவிட்டாள் என்கிற எண்ணம் அவனுள் கொந்தளிப்பை ஏற்படுத்த, சிந்திக்க பொறுமை இல்லாமல் அவள் சுட்டிக்காட்டிய துவாரபாலகனை வெறித்துப் பார்த்தான்.

"எனக்குப் புரியவில்லை, சாயா!" எரிச்சலுடன் கூறினான் ஜெயவர்மன்.

"இந்த துவாரபாலகர்களின் பெயர் என்ன...?" - சாயா கேட்டாள்.

"ஜெயன், விஜயன்!" ஜெயவர்மன் கூறினான்.

"என்னை சகோதரியாகக் கருதாத இரு மாமன் மகன்கள் யார்? என்னை மணக்கத் துடிக்கும் அவர்களின் பெயர் என்ன?" மீண்டும் கேட்டாள்,

https://telegram.me/aedahamlibrary

சாயா.

“இதென்ன கேள்வி? பெரிய மாமனின் மகனாகிய ஜெயவர்மன் என்கிற நான், சிறிய மாமனின் மகனாகிய விஜயவர்மன் என்கிற எனது சிற்றப்பாவின் மகன். நாங்கள் இருவரும்தான் உன்னை அடைய போட்டி போடுகிறோம்.” ஜெயவர்மன் கூறினான்.

“இப்போது நான் சுட்டிக்காட்டிய துவாரபாலகனின் பெயர் என்ன?” சாயா கேட்டதும், மீண்டும் அந்த சிலையை நோக்கினான். ஜெயன் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

ஜெயன் நெகிழ்ச்சியுடன் அவளது பக்கம் திரும்பினான்.

“ஒரு வழியாக புரிந்து கொண்டீர்களா? ஜெயன் விஜயன் இருவரும் என்னை அடைய போட்டியிட்டாலும், எனது இதயத்தில் உள்ளது ஜெயன். ஜெயனுக்கே ஜெயம்!”

சாயா கூறியதும் பேரானந்தத்துடன் அவளது கையைப் பற்றிக்கொண்டான். அவளைக் காண்பதற்காகத் தானே முக்கூடல் நடன நிகழ்ச்சியைக் கூட தியாகம் செய்துவிட்டு அத்திமலையானின் ஆலயத்திற்கு வந்திருந்தான்.

அரசகுடும்பத்தைச் சேர்ந்த இளவரசரும், சாயாவும் நிற்பதைக் கண்டதும் வெளியே ஓடி வந்த அர்ச்சகர், அனந்த பட்டர் சாயா நீட்டிய அத்தி இலை மற்றும் மல்லிகை புஷ்பத்தை வாங்கிக்கொண்டு அவர்கள் பெயரில் அர்ச்சனை செய்துவிட்டு, ஆரத்தி எடுத்தார். அர்ச்சகர் மீண்டும் பிரசாதத்தைத் திருப்பிக் கொடுக்க இருவரும் வெளியே வந்தனர். தான் கொடுத்த அத்திஇலைக்கு பதிலாக வெற்றிலை இருப்பதைக் கண்டு திகைத்தாள், சாயா.

குழப்பத்துடன் அவள் நிற்க, உடன் வந்த ஜெயவர்மனும் நின்றான்.

“ஏன் நின்றுவிட்டாய், சாயா?” ஜெயன் கேட்டதும் அவனிடம் தன் கையில் இருந்த வெற்றிலையைக் காட்டினாள்.

“நான் அர்ச்சகரிடம் அத்தி இலையைக் கொடுத்தேன். அவர் மீண்டும் எனக்கு அத்தியிலையைக் கொடுக்காமல் வெற்றிலையைக் கொடுத்திருக்கிறார்!” - சாயா கூறினாள்.

“அவ்வளவுதானே. இலை எதுவாக இருந்தால் என்ன? எல்லாமே அத்திமலையானின் அருட் பிரசாதம்தானே?” ஜெயவர்மன் கூறினான்.

https://telegram.me/aedahamlibrary

இருண்ட மலைப் படிக்கட்டுகளில் அவர்கள் இறங்கிய போது, யாரோ ஒருவர் அவர்களைக் கடந்து சென்றார். ஜெயவர்மனின் செவிகளில் மட்டும் கேட்கும்படியாக யாரோ கிசுகிசுத்தனர்.

“அத்தி இருந்த இடத்தில் வெற்றிடம் இருக்கும் என்பதை உணர வைக்கத்தான், அத்தி இலைக்கு பதிலாக வெற்றிலை அளிக்கப்பட்டுள்ளது!”

யாரோ கிசுகிசுத்துவிட்டு, வாயு வேகத்தில் படிகளில் இறங்கிப் போவது போன்று ஓர் உணர்வு ஏற்பட்டது. ஜெயவர்மன் திடுக்கிட்டான். இருளில் தன்னைக் கடந்து சென்ற உருவத்தைக் காண முயன்றான்.

“இங்கேயே நில் சாயா! இதோ வருகிறேன்!”

ஜெயவர்மன் அத்திமலையில் இருந்து விரைவாக இறங்கி சுற்றுமுற்றும் பார்த்தான். தனது காதில் கிசுகிசுத்த அந்த நபர் யாராக இருக்கக்கூடும் என்று யோசித்தபடி பிராகாரங்களில் விரைவாகச் சென்று சந்தேகத்திற்கு உரியவர்கள் யாராவது தென்படுகிறார்களா என்று தேடிப் பார்த்தான்.

அப்போது அவனது பார்வை ஆலயத்தைவிட்டு வெளியேறிக்கொண்டிருந்த அந்த முதிய பெண்ணின் மீது பதிந்தது. வெண்ணிற ஆடை, சிரசின் உச்சியில் கொண்டை என்று காண்பதற்கு சற்றே வித்தியாசமாகத் தெரிந்தாள். கிழக்கு வாசலில் சடாரென்று நின்ற'21வள், தனது முகத்தைத் திருப்பி, ஜெயவர்மனை நோக்கினாள்

'அந்த கண்களை பார்க்காதே! வேறு பக்கமாக பார்!'

உள்ளுணர்வு எச்சரிக்க, சட்டென்று தனது கண்களை திருப்பி பொற்றாமரைக் குளத்தின் பக்கமாகப் பார்த்தான்.

அவனது வாய் உலர்ந்து போனது.

அங்கே ---

ஒரு குழாமாக அமர்ந்து தருமநகரத்து இளவரசி ககனமயி, சோமஸ பண்டிதர், தீபன் சமந்தரையன் ஆகியோர் அத்திமலையைச் சுட்டிக்காட்டி ஏதோ ரகசியமாகப் பேசிக்கொண்டிருந்தனர்.

சற்று முன்னர்தான் சாயாவிடம் நிறைய நிழல் மனிதர்கள் காஞ்சியில் நடமாடுவதாகக் கூறியிருந்தான், ஜெயவர்மன். அதை மெய்ப்பிப்பது போன்று அத்திமலைத் தேவன் ஆலயத்திலேயே நிறைய நிழல்

https://telegram.me/aedahamlibrary

மனிதர்கள் தென்படுகின்றனரே! பல்லவ நாட்டில் ஏதோ அசம்பாவிதம் நடக்கப் போகிறதோ?

கவலையுடன் மீண்டும் சாயாவை நாடிச்சென்றான், ஜெயவர்மன்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 42. இலங்கைப் படையினர்

அசோகரின் செல்வங்களான சங்கமித்தாவும் மகிந்தாவும் முக்கூடல் கடிகை வந்த போது அமரஜோதி புத்த தத்துவத்தை கடிகையில் போதித்துக் கொண்டிருந்தது நினைவிருக்கலாம். இப்போது அந்த பணியைச் செய்து வந்தது புண்ய மித்ரா.

புண்ய மித்ரா அன்று காலை தனது சீடர்களிடம் தெரவாட புத்த தத்துவத்தை விளக்கிக் கொண்டிருந்தார்.

"சங்கமித்தாவும், மகிந்தாவும் காஞ்சியில் இருந்து இலங்கை சென்றது இலங்கைக்கு ஒரு பொற்காலமாக முடிந்தது. தீபவம்சம் அசோகரின் குழந்தைகள் பௌத்த மார்க்கத்திற்கு ஆற்றிய பெரும் பங்கினை விவரிக்கின்றன. அவர்கள் இலங்கையில் எழுப்பிய இசுருமுனியம் மற்றும் வேஸகிரியம் புத்த விகாரங்கள் மிகவும் அழகானவை. பத்மகம், ஜம்புகோலம், ஹத்தலாக்கம் ஆகிய விகாரங்கள் மிகவும் சக்தி வாய்ந்தவை. புத்தகோசத்தை தொகுத்த தர்மபாலரினால் செவிவழியாக வளர்ந்த தெரவாட தத்துவங்கள் பின்னர் சுவடிகளின் வழியாக போதிக்கப்பட்டது. அதற்கு முயற்சிகளை மேற்கொண்டது சங்கமித்தாவும், மகிந்தாவும். அவர்கள் நமது முக்கூடல் கடிகையில் கால் பதித்தது நமது மார்க்கம் செய்த புண்ணியம்... ஆனால் தெரவாட தத்துவம் மூன்று பிக்குகள் என்கிற மகாவீரர்களின் தலைமையில் மூன்றாகப் பிரிந்தது!" என்று விளக்கிக் கொண்டிருந்தார் புண்ய மித்ரா. அப்போது கடிகையின், பணியாளன் விரைந்து வந்தான்.

"சுவாமி! தங்களைக் காண சிலர் வந்திருக்கின்றனர். புத்த கயையில் இருந்து வந்திருப்பதாகக் கூறுகின்றனர்." பணியாளன் கூற, புண்ய மித்ரா தனது பாடத்தை நிறுத்தினார்.

"இதோ வந்துவிடுகிறேன் மாணவர்களே!" அவர்களிடம் அறிவித்துவிட்டு, கடிகையின் பரந்து விரிந்த மைதானத்தில் நடந்து சென்றார். ஒரு மாமரத்தின் அடியில் சில புத்த பிக்குகள் அமர்ந்திருந்தனர். புண்ய மித்ரா வருவதைக் கண்டதும் அவர்கள் அனைவரும் எழுந்து நிற்க, புன்யமித்ராவை அவர்கள் வணங்கினர்.

"நான் தேஜோமித்ரா. புத்த கயையில் இருந்து வருகிறேன். தற்போதைய தலைமை புத்த பிக்கு சம்பூர்ண நந்தாவின் தலைமை சீடன் நான். இவர்கள் எல்லாருமே இலங்கை அரசர் திஸ்ஸாவின் வீரர்கள்! அபயகிரி, அமுல தேசா, வஜ்ர சிங்கே, பத்ம நேத்ரா, உபேந்திர சேனா!

https://telegram.me/aedahamlibrary

இவர்கள் ஒரு முக்கிய பணிக்காக பிக்குகளின் உடையில் இங்கே வந்திருக்கின்றனர். சம்பூர்ணர் ஒரு முக்கியமான தகவலைக் கூறி எங்களை அனுப்பியுள்ளார்... அடுத்த புத்தரான தாருக புத்தரின் அவதாரத்திற்கு தேவ உடும்பரத்தை பெற்று புத்த கயையில் ஸ்தாபிதம் செய்ய நினைக்கிறோம். இந்நிலையில் மாந்த்ரீகத்தையும், தாந்த்ரீகத்தையும், வன்முறையை தோற்றுவிக்கும் வர்மக் கலையையும் பிரயோகித்து நமது பௌத்த தத்துவங்களை கேலிக்கு உரியதாக மாற்றி வரும் மகாயான தத்துவவாதிகள் அதிகம் காஞ்சியில் நடமாடுவதாக தகவல் வந்துள்ளது. சூனியமும் சித்து விளையாட்டையும் கொண்டு புத்தரின் புகழுக்கு களங்கம் கற்பிக்கும், சித்தினி பிரக்ஞதாராவும் அவளது சீடன் ஜினிங் - டி - யாண்டையும் காஞ்சிக்கு வந்திருக்கின்றனராம். அவர்கள் கையில் தேவ உடும்பரம் கிடைப்பது பல அனர்த்தங்களை உண்டாக்கும். மகாயான சீனர்களிடம் தேவ உடும்பரம் சிக்கிவிட்டால், நமது தெரவாட தத்துவங்களை தாருக புத்தர் அவதரிக்கும் வரை காப்பாற்ற இயலாது. மகாயானம் சொல்வதையே மக்கள் கேட்பார்கள். எனவே, பிரக்ஞதாரா கைப்பற்றுவதற்குள் நாம் தேவ உடும்பரத்தை கைப்பற்ற வேண்டும். புத்த கயையின் வேண்டுகோளின்படி இலங்கை மன்னன் நமக்கு உதவ வீரர்களை அனுப்பியுள்ளான்! நீங்கள் தான் எங்களுக்கு அனைத்து வசதிகளையும் செய்து தர வேண்டும்" - தேஜோமித்ரா கூறினார்.

"எனது ஜாகை தருமநகரத்தில் உள்ளது. நீங்கள் என்னுடனேயே தங்கலாம்!" புண்ய மித்ரா கூற, புத்த பிக்குகளின் வேடத்தில் இருந்த வீரர்கள் புண்ய மித்ராவை மீண்டும் வணங்கினார்கள்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 43. அம்பர வம்பர்கள்

ஒத்தாடை அரண்மனை கொலுமண்டபம்.

மிகவும் முக்கியமான விவாதத்தில் ஈடுபட்டிருந்தது சபை. வெகுகாலமாகவே அத்தியூருக்கும், ஒத்தாடைக்கும் இடையே பிரச்சனைகள் மூண்டிருந்தது. சைவ வைணவ பிரச்னையாக துவங்கிய மோதல், பிறகு வேறு விதமாக மாறிவிட்டது. அத்தியூர், ஒத்தாடை, பழமுதிர்சோலை, முக்கூடல் மற்றும் தருமநகரத்தை இணைத்து காஞ்சியை உருவாக்கியிருந்தான், பல்லவ இளந்திரையன். சைவனான சிவஸ்கந்தவர்மன், அத்தியூரை புறக்கணித்ததும், அத்திவரதரை தரிசிக்காமல் இருந்ததும், அத்தியூர்வாசிகளுக்கு புகைச்சலைக் கிளப்பிவிட்டது. தொடர்ந்து அரண்மனை மற்றும் அரசாங்கப் பகுதிகள் இருந்த காரணத்தால் ஒத்தாடை முக்கியத்துவம் பெற, அத்தியூர் ஒதுக்கப்பட்டது.[1] முக்கூடல் கடிகைக்கு செல்பவர்கள் அத்தியூர் வழியாகச் செல்லவேண்டி இருந்ததால் அரச குடும்பத்தினர் வரும்போதும், போகும் போதும் அத்தியூர்வாசிகளுக்கு பல தடை உத்தரவுகள் போடப்பட்டன. இதனால் அத்தியூர்வாசிகள் போராட்டத்தில் குதித்தனர். ஒத்தாடை அதிகாரிகள் சிலர் அத்தியூர் வழியாகச் சென்ற போது தாக்கப்பட்டதால் வன்முறை வெடித்தது.

இரு தனி ஊர்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு, அவர்களுக்குள் ஒரே நகரத்தை நாம் சேர்ந்தவர்கள் என்கிற எண்ணம் தோன்றாமல், அடிக்கடி வன்முறைகள்

வெடித்ததால், பிரச்னையை எப்படித் தீர்ப்பது என்பதை ஆலோசிக்க சபையைக் கூட்டியிருந்தான், சிம்மவர்மன்.

அத்தியூர் தலைவர்களும், ஒத்தாடை தலைவர்களும் இருபக்கமும் அமர்ந்திருக்க விவாதங்கள், மோதல்கள் என்று சபை நீண்டு கொண்டே போனது.

“எங்கள் அத்தியூரனை மையமாகக் கொண்டுதான் காஞ்சி மாநகரே அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் அத்திமலையானின் ஆலயத்திற்கு கவனிப்பு இல்லை. அரண்மனை வளாகத்தில் இருப்பதால் ஒத்தாடையானுக்கு நல்ல கவனிப்பு கிடைக்கிறது!” - அத்தியூர்வாசிகள் கூறினர்.

"அரண்மனையின் ஒரு பகுதி எங்கள் ஆலயம். உங்கள் ஆலயமே

https://telegram.me/aedahamlibrary

அரண்மனையைப் போல் உள்ளது. அப்படியிருக்க, பீதாம்பரக்காரனுக்கு, ஏகாம்பரக்காரனின் மீது ஏன் இவ்வளவு காழ்ப்புணர்ச்சி?” ஒத்தாடைவாசிகள் பதிலுக்குக் கேட்டனர்.

பீதாம்பரக்காரர்களுக்கும், ஏகாம்பரக்காரர்களுக்கும் இடையே வாதம், பிரதிவாதம் என்று அம்பர வம்புகள் நீடித்துக்கொண்டே போக, சிம்மவர்மன் தலைமை அமைச்சர் மச்ச வாசுதேவரை சங்கடத்துடன் நோக்கினான். அவரும் என்ன செய்வது என்று தெரியாமல் மன்னரைப் பார்த்து மலங்க மலங்க விழித்தார்.

கொலுமண்டபம் முழுவதும் ஒரே ஆரவாரமாக இருந்தது. ஜெயவர்மனைத் தவிர மற்ற இளவரசர்கள் அந்த மோதலை ரசித்துக்கொண்டு இருக்க, ஜெயவர்மன் தனது இருக்கையில் இருந்து எழுந்து நின்றான்.

ஜெயவர்மன் எழுந்து நிற்பதைக் கண்டதும் சபையில் மெதுவாகக் கூச்சல் அடங்கி அமைதி நிலவத் தொடங்கியது. அனைவரும் ஜெயவர்மனைப் பார்க்க, அவன் தந்தையைப் பார்க்க, அவர் தலையசைத்ததும் சபையோரைப் பார்த்துப் பேசத் துவங்கினான்.

"காஞ்சி நகரம் சான்றோர் உடைத்து! உலகிற்கே பாடம் நடத்தும் முக்கூடல் கடிகையைக் கொண்டிருக்கிறோம். புராணம், சரித்திரம், அரசியல், கலை, சிற்பக் கலை என்று எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் நாமே முன் நிற்கிறோம். மூன்று நதிகள், பாலாறு, செய்யாறு, வேகவதி என்று மூன்றும் முக்கூடலை உருவாக்கும் போது, ஐந்து ஊர்கள் இணைந்து காஞ்சி என்னும் ஐங்கூடலை காண முடியாதா? முக்கூடலில் சங்கமித்துவிட்டதால், வேகவதி பெருமை இழந்து விட்டதா? இல்லை பாலாறுதான் ஓடுவதை நிறுத்தி விட்டதா? ஒரு நகரின் பகுதிகளுக்குள் ஒற்றுமை இல்லையென்றால் நமது பல்லவம் பெரும் சாம்ராஜ்யமா எங்ஙனம் திகழ்வது? ஒத்தாடைக்கும், அத்தியூருக்கும் யார் முக்கியமானவர்கள் என்பதுதானே பிரச்னை? காஞ்சியின் ஐந்து பகுதிகளும் முக்கியமானவைதான்!” என்ற ஜெயவர்மன், மன்னனை நோக்கினான்.

"அரசே! இந்தச் சிறியவனுக்கு ஒரு யோசனை. காஞ்சியாக இணைவதற்கு முன் அத்தியூர், ஒத்தாடை, பழமுதிர்சோலை என்கிற மாலிருஞ்சோலை மலை, முக்கூடல் கடிகை மற்றும் தருமநகரம் ஆகிய பகுதிகள் தன்னாட்சியைப் பெற்றிருந்தன. காஞ்சியாக இணைந்த பிறகு, கவனிப்பு போதவில்லை என்கிற புகார் எழுந்துள்ளது. எனவே! காஞ்சி

https://telegram.me/aedahamlibrary

நகரின் ஐந்து பகுதிகளுக்கும் தனித்தனியாக நகர சபைகளை அமைத்து குடவோலை முறையின் கீழ் அவர்கள் தங்கள் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கட்டும். தேர்ந்தெடுத்த ஐந்து பகுதியின் தலைவர்களும் சேர்ந்து பஞ்சவர் சபை ஒன்றை அமைத்து அதன் வழியாக காஞ்சி நகரில் அதிகாரம் செய்யட்டும். அந்தந்தப் பகுதியின் தலைவர்களை அவற்றிற்குப் பொறுப்பாளர்கள் ஆக்குவோம்!”

“ஆஹா... பலே! இவனல்லவோ ராஜதந்திரி!”

ஜெயவர்மனைப் பாராட்டி ஆங்காங்கே குரல்கள் கேட்க, மன்னன் சிம்மவர்மன் பெருமிதத்துடன் ஜெயவர்மனை நோக்கினான். அவனிசிம்மனும், மற்ற சகோதரர்களும் எரிச்சலுடன் அவனைப் பார்க்க, பிரச்னை தீர்ந்த நிம்மதியில் சபையைக் கலைத்தான், சிம்மவர்மன்.

பஞ்சவர் சபைத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்க குடவோலை முறையில் மக்கள் வாக்களிக்க இருந்தனர். முக்கூடல் கடிகையில் ஜெயவர்மனின் நண்பன், விஸ்வக்ஷேனன், அத்தியூரில் ஜெயவர்மனின் நண்பரும் கோயில் அதிகாரியுமான வரதநாரயண நம்பி, ஒத்தாடையில் ஜெயவர்மனின் சிற்றப்பாவின் மூத்த மகன், ராஜவர்மன், பழமுதிர்சோலையில் ஜெயவர்மனின் மல்யுத்த களரியில் பணியாற்றும் முத்ரன் மற்றும் தருமநகரத்தில் விசாகவர்மன் என்கிற வியாபாரி ஆகியோர் வேட்பாளர்களாக நின்றனர்.

மறுநாள் விஜயவர்மன் அவசரமாக அவனிசிம்மனைக் காண வந்தான்.

“அண்ணா! பட்டத்து இளவரசனாக இருந்து கொண்டு நீ ஏன் எதிலும் ஆர்வத்தை காட்டமாட்டேன் என்கிறாய்? உனது தம்பி ஜெயவர்மனைப் பார்! பஞ்சவர் சபையை அமைக்கும்படி கொலுமண்டபத்தில் யோசனை கூறி நற்பெயரைப் பெற்றவன், சந்தடி செய்யாமல் ஐந்து ஊர்களிலும் தனது நண்பர்களை தலைவர் பதவிக்கு வேட்பாளர்களாக நிறுத்தியுள்ளான். அவர்கள் வெற்றி பெற்றால் காஞ்சியின் முழு அதிகாரமும் ஜெயவர்மனிடம் சென்றுவிடும். பிறகு பட்டத்து இளவரசனான உன்னைக் காட்டிலும் அவனுக்கு காஞ்சியில் மதிப்பு அதிகமாக இருக்கும்!”

கடைக்குட்டியும் சிற்றப்பனின் இளைய மகனுமான விஜயவர்மன் கூறியதும்தான் விழித்துக்கொண்டான், அவனிசிம்மன்.

யோசனை கூறிய தம்பியை அன்புடன் நோக்கினான்.

https://telegram.me/aedahamlibrary

"அப்படி ஒரு திட்டத்தை அவன் தீட்டியிருக்கிறான் என்றால், அதை முளையிலேயே கிள்ளி எறிவோம். ஒத்தாடையில் உனது அண்ணன் ராஜவர்மன் அவனது வேட்பாளராக நின்றால், நீ எனது வேட்பாளராக அவனை எதிர்த்து நில்! அத்தியூரில் தானவர்மனும், தருமநகரத்தில் பீமவர்மனும் நிற்கட்டும். முக்கூடல் கடிகையில் எனது சிற்றப்பர் விஷ்ணுவர்மரும், பழமுதிர்சோலையில் நமது தலைமை அமைச்சர் மச்ச வாசுதேவரின் மகன் பவுண்டர சிகாமணியும் போட்டியிடட்டும். பார்த்து விடுகிறேன்! பஞ்சவர் சபை என்னுடையதா, இல்லை ஜெயவர்மனுடையதா என்று?"

குடவோலை முறையில் வாக்களித்து, முடிவுகளும் அறிவிக்கப்பட்டன. தருமசேனை என்று பெயரிடப்பட்ட ஜெயவர்மனின் நலவிரும்பிகளான ராஜவர்மன், வரதநாராயண நம்பி, விஸ்வக்க்ஷேஷனன், முத்ரன் மற்றும் விசாகவர்மன் ஆகிய ஐந்து பேருமே பஞ்சவர் சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். பஞ்சவர் சபை ஜெயவர்மனின் சபையாகத் திகழ்ந்தது. ஐந்து பகுதி மக்களும் பஞ்சவர் சபையின் நல்லாட்சியில் நலம் பெற, ஜெயவர்மன்தான் அடுத்த பல்லவ மன்னனோ என்று ஐயுறும்படியாக அவனது புகழ் பல்லவ நாடெங்கும் பரவியது.

சிம்மவர்மனே, சிக்கலான விஷயங்களை ஜெயவர்மனிடம் கொடுத்துக் கையாளச் சொன்னான்.

ஒரு நாள் மாலை.

அன்றைய நிகழ்வுகள் முடிந்து, சபை கலையும் நேரம். அப்போது காவலன் ஒருவன் ஓடி வந்தான்.

“அரசே! புத்தபரர் என்கிற வம்சத்தைச் சேர்ந்த ரணதிலகன் என்னும் மன்னன் வந்திருக்கிறார். தங்களைச் சந்திக்க வேண்டும் என்கிறார். வெகு தொலைவில் இருந்து வந்திருப்பதாகக் கூறுகிறார்!” -- காவலாளி கூறியதும் மன்னர் சிம்மவர்மன் தலையசைக்க காவலாளி அகன்றான்.

காடவன் ரணதிலகனாக ஆடியசைந்து மன்னரின் முன்பாக வந்து நின்றான்.

'இவன் அரசனில்லை!' ஜெயவர்மனின் உள்ளுணர்வு எச்சரித்தது. 'காஞ்சியில் நடமாடும் நிழல் மனிதர்களில் இவன் ஒருவனாக இருக்கக்கூடும்.' அவனது மனம் தொடர்ந்து எச்சரிக்க, ரணதிலகனைக் கூர்ந்து கவனித்தான்.

https://telegram.me/aedahamlibrary

"சபை கலையும் நேரம்! வந்த காரணத்தை கூறிவிட்டு, உடனே புறப்படுங்கள்!" தலைமை அமைச்சர் மச்ச வாசுதேவர் கூற, ரணதிலகன் மன்னரைப் பணிவுடன் பார்த்தான்.

"அரசே! புத்தபரம் என்கிற சிறு நாட்டின் மன்னன் நான்… குப்தத்திற்கும் கலிங்கத்திற்கும் இடையே உள்ள சிறு ராஜ்யம். உங்கள் ஒத்தாடையின் அளவுதான் இருக்கும். அந்த நாட்டின் தலைவன் நான். சோழ நாட்டைக் காண வேண்டும் என்கிற ஆவலில் தெற்கே வந்தேன். கரிகாலன் இமயம் வரை படை எடுத்து வந்தான் அல்லவா… அவனது நாட்டைக் காண வேண்டும் என்கிற ஆவல். எனது படைகளுடன் உங்கள் நாட்டின் வழியாகச் செல்வதற்கு அனுமதி வேண்டும். அதை பெறுவதற்காகத்தான் தங்களைச் சந்திக்க வந்திருக்கிறேன்."

"சோழ நாட்டைக் காண விரும்புபவர் பல்லவத்திற்கு வருவானேன்?" ஜெயவர்மன் கேட்டான்.

"இங்கு உள்ள ஆலயங்களை தரிசித்துவிட்டு, பிறகு சோழம் செல்லும் உத்தேசத்துடன் காஞ்சிக்கு வந்தேன்." ரணதிலகன் கூறினான்.

சிம்மவர்மன் அந்தப்புரம் செல்லும் அவசரத்தில் இருந்தான். தனது பட்டத்து இளவரசன் அவனிசிம்மனை நோக்கினான்.

"என்ன செய்யலாம், அவனிசிம்மா? அனுமதி கொடுத்துவிடலாமா?" --- சிம்மவர்மன் கேட்டான்.

"சோழம் செல்ல வழிதானே கேட்கிறார்! கொடுப்போம்!" அவனிசிம்மன் சொல்ல ஜெயவர்மன் இடைமறித்தான்.

"இல்லை அரசே! எனக்கு இவரைப் பற்றி சந்தேகம் எழுகிறது. புத்தபரம் என்கிற நாடு பற்றிய தகவல்களை அறியாமல் நாம் இவருக்கு அனுமதி கொடுப்பது தவறு. மேலும் படைகளுடன் இவர் சோழம் போவதற்கு காரணம் என்ன? இவர் வருவதைப் பற்றி சோழம் அறியுமா? நாம் இவரை அனுமதித்தால், பின்விளைவுகளுக்கு நாமே பொறுப்பாகத் திகழ்வோம். எனவே. இவரை நமது பல்லவ நாட்டிற்குள் நுழைவதை அனுமதிக்கக் கூடாது. வேறு வழியாக அவர் சோழம் செல்வதாக இருந்தால் நாம் தடை சொல்லப் போவதில்லை. காரணம் நாம் சோழர்களுக்கோ, பாண்டியர்களுக்கோ பதில் கூற வேண்டிய தேவையில்லை. நம் நாட்டின் வழியாக தீய சக்திகளை அனுமதித்தோம் என்று நாளைய சரித்திரம் நம்மை இகழக் கூடாது!" ஜெயவர்மன் கூற, அவனது கூற்றில் நியாயம் இருப்பதாகப் பட்டது.

https://telegram.me/aedahamlibrary

"உனக்கு அனுமதி தர மறுக்கிறோம். பல்லவத்தின் வழியாக சோழத்திற்கு நீங்கள் செல்லக் கூடாது!" என்று கட்டளையிட்ட சிம்மவர்மன் சபையைக் கலைத்தான். அவனிசிம்மன் தம்பியைத் தவிர்த்தபடி கோபத்துடன் சபையைவிட்டு நீங்கினான்.

பாலகாடத்தை மீட்டு கடம்ப மன்னனைப் பணிய வைத்து இளவரசி ராஜஸ்ரீயை சிறைபிடித்து வந்ததற்கு ஜெயவர்மன் காரணம்.

அத்தியூர், ஒத்தாடை ஆகிய பகுதிகளுக்கு இடையே நிலவிய பிரச்னையை தீர்த்து பஞ்சமர் சபையை அமைத்து, அதன் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க நிகழ்ந்த தேர்தலிலும் தனது ஆதரவாளர்களை நிறுத்தி வெற்றியைக் கண்டு, காஞ்சியின் அதிகாரத்தை மறைமுகமாகப் பெற்றிருக்கிறான். அவனது புகழ் இதனால் உயர்ந்து கொண்டே இருக்கிறது.

ரணதிலகனை அனுமதிக்கலாம் என்று பட்டத்து இளவரசனான இவன் கூற, அவனை அனுமதிக்கக் கூடாது என்று கூறி சிம்மவர்மனை தனது சொல்லைக் கேட்கும்படி செய்து தனது அதிகாரத்தை சபையிலேயும் காட்டி வருகிறான் என்றால், எனக்கு எதற்கு பட்டத்து இளவரசன் பதவி?

ஜெயவர்மன் இருக்கும் வரை தன்னை யாரும் மதிக்கப் போவதில்லை என்பது திண்ணம். எரிச்சலுடன் நினைத்தபடி தனது அறையை நோக்கி நடந்தான், அவனிசிம்மன்.

சபை கலைந்ததும், ஜெயவர்மன் முக்கூடல் கடிகைக்குச் சென்றுவிட்டான். களரியில் பஞ்சமர் சபை உறுப்பினரும் தனது நண்பனுமான முத்ரனுடன் மற்போர் புரிந்துவிட்டு, முக்கூடலில் நீராடிவிட்டு, அத்திமலைத் தேவனை தரிசித்துவிட்டு, பிறகே அரண்மனைக்குத் திரும்புவான்.

களரியில் பயிற்சி நடந்து கொண்டிருந்தது. முத்ரனின் பார்வை தற்செயலாக களரியின் வாயிலை கவனிக்க அவன் முகம் பரபரப்படைந்தது.

“இளவரசே! இளவரசியார் உங்களைக் காண வந்திருக்கிறார்!” முத்ரன் கூற, திரும்பிப் பார்த்தான் ஜெயவர்மன்.

நவரத்தின பல்லவிதான் சிரித்த முகத்துடன் நின்றிருந்தாள்.

“ஏது இந்தப் பக்கம்?” - ஜெயவர்மன் தங்கையைப் பரிவுடன் கேட்டான்.

https://telegram.me/aedahamlibrary

"அண்ணா! முக்கூடலில் புதுவெள்ளம் ஓடுகிறதாம். முக்கூடல் வேங்கடவனை தரிசித்தும் நாளாகிவிட்டது. நீ களரி ஆடுவதையும் பார்த்துவிட்டு, வேங்கடவனையும் தரிசித்துவிட்டு, முக்கூடலின் புதுவெள்ளத்தையும் பார்த்துவிட்டு, அரண்மனைக்குத் திரும்பப் போகிறேன்!" ரத்னா கூறினாள்.

"எச்சரிக்கை தேவை, ரத்னா! நான் வரும் போது பார்த்தேன். வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது!" தங்கையைக் கவலையுடன் பார்த்தான்...

"கவலைப்படாதே அண்ணா! ஒரு கையை அத்திமலையானும், மற்றொரு கையை ஒத்தாடையானும் பிடித்துக்கொண்டே இருக்கிறார்கள். எனக்கு ஒன்றும் ஆகாது. நான் வேங்கடவன் கோயிலுக்குச் செல்லுகிறேன். நீ தொடர்ந்து உனது களரி பயிற்சியை செய்!" என்றபடி நவரத்னா வேங்கடவன் கோவிலுக்குப் புறப்பட்டாள்.

வேங்கடவனை தரிசித்துவிட்டு, முக்கூடலுக்குச் சென்று கரையில் நின்றபடி வெள்ளத்தை வேடிக்கை பார்க்கத் தொடங்கினாள்.

பொங்கி வரும் வெள்ளத்தை குதூகலத்துடன் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த சமயம் -

அவளருகே ஒரு அசைவு.

வெள்ளை உடையில், உச்சி கொண்டையுடன் கடுமையான முகத்துடன் அவளருகே நின்றிருந்தாள் ஒரு மூதாட்டி. அவளது அருகில் ஒரு இளங்குமரன் இவளையே வெறித்துப் பார்த்தபடி நின்றான்.

"பெண்ணே! தண்ணீரில் குதித்துவிடு. இவன் உன்னை காப்பாற்றுவான்!" அங்கு நின்ற பிரக்ஞுதாரா கூற, மறுபேச்சில்லாமல் பொங்கிப் பாயும் முக்கூடல் தண்ணீரில் குதித்தாள், நவரத்னா.

"ரணதிலகா! தண்ணீரில் குதித்து உனது சொத்தை எடுத்துக்கொள். நவரத்னமும் உனது. பல்லவமும் உனது! ம்ம்... எடுத்துக்கொள்!" - பிரக்ஞுதாரா கூற, ரணதிலகன் தண்ணீரில் பாய்ந்தான். சுழலில் சிக்கிவிட்ட இளவரசியின் கூந்தலைப் பற்றி இழுத்து வந்து கரையில் சேர்த்தான்.

"ஆபத்திலிருந்து மீண்டுவிட்டீர்கள் இளவரசி! நான் மட்டும் வரவில்லையென்றால் நீங்கள் மூழ்கி இருப்பீர்கள்!" - ரணதிலகன் கூற, மயக்க நிலையில் இருந்த ரத்னா மெதுவாகக் கண்களைத் திறந்தாள்.

https://telegram.me/aedahamlibrary

“உயிரை மீட்டதற்கு கூலியாக அவளது இதயத்தைக் கேட்டு வாங்கிப் பெற்றுக்கொள். நடந்ததை தனது தகப்பனிடம் கூறி உனக்கு அனுமதியைப் பெற்றுத் தருவாள்!” பிரக்ஞுதாரா அங்கிருந்து அகன்றாள்.

ஆற்றில் விழுந்த அதிர்ச்சியால் உண்டான மயக்கத்திலிருந்து மீண்ட ரத்னா ரணதிலகனின் காதல் பார்வையால் மற்றொரு மயக்கத்தில் நழுவினாள்.

கொடூரத்தைத் தவிர வேறு உணர்வுகளைக் காட்டத் தெரியாத களப்பிர காடவன் என்கிற ரணதிலகனுக்கு, ரத்னாவுடன் சரசமாடுவது புதிய அனுபவமாக இருந்தது.

அன்று இரவு –

களரிப் பயிற்சி முடிந்து முக்கூடலில் நீராடும் எண்ணத்தை கைவிட்டு அரண்மனைக்குத் திரும்பினான் ஜெயவர்மன். கொலுமண்டபத்தைக் கடக்கும் போது ஆலோசனை அறையில் பேச்சுக்குரல்கள் கேட்க, வியப்புடன் நின்றான். ஆலோசனை அறையில் இருந்து அன்று மாலை கொலுமண்டபத்திற்கு வந்திருந்த ரணதிலகன் இவனை நோக்கி அலட்சியத்துடன் சிரித்தபடி நின்றிருந்தான். உடன் அவன் அத்திமலைத் தேவனின் ஆலயத்தில் பார்த்த அந்த மூதாட்டி பிரக்ஞுதாரா நின்றிருந்தாள்.

“இளவரசே! உங்கள் தந்தையார் அனுமதி தந்து விட்டார்!” கேலியுடன் கூறியபடி பிரக்ஞுதாரா நடந்து போக, அவளை மௌனமாகப் பின்தொடர்ந்தான், ரணதிலகன்.

அவர்கள் இருவருமே மிகவும் ஆபத்தானவர்கள் என்பதை உணர்ந்த ஜெயவர்மன் தங்கை ரத்னாவைக் கேள்வியுடன் பார்த்தான்…

“என்ன நடந்தது ரத்னா? இவர்கள் எப்படி தந்தையை சந்தித்தார்கள்? எதற்காக தந்தை அவனுக்கு அனுமதி வழங்கினார்? நான் தான் வேண்டாம் என்று சொல்லி, மன்னரும் சபையில் ஒப்புக்கொண்டாரே!”

"முக்கூடல் நீரில் விழுந்து மூழ்கிக்கொண்டிருந்தேன். ரணதிலகர்தான் என்னைக் காப்பாற்றினார். அதற்கு பரிசாக தந்தையார் அவருக்கு பல்லவம் வழியாக சோழம் செல்வதற்கு அனுமதி வழங்கியுள்ளார்.” - ரத்னா கூறினாள்.

“எப்படி நீரில் நழுவி விழுந்தாய்?” --- ஜெயவர்மன் கேட்டான்.

https://telegram.me/aedahamlibrary

“கால் இடறி விழுந்துவிட்டேன், அண்ணா!” மனம் ரணதிலகனையே சுற்றி வர, சுரத்தில்லாமல் பதில் தந்தாள் ரத்னா.

அவளது மனம் எங்கோ சுற்றிக்கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்த ஜெயவர்மன் ஆலோசனை அறையினுள் நுழைந்தான். அவன் வந்ததைக் கூடக் கவனியாமல், சாளரத்தின் வழியாக எங்கோ வெறித்துப் பார்த்த நிலையில் அமர்ந்திருந்தான் சிம்மவர்மன்.

[1] இன்றுவரை அத்தியூர் விஷ்ணு காஞ்சி என்றும் சின்னகாஞ்சி என்றும், ஒத்தாடை சிவ காஞ்சி என்றும் பெரிய காஞ்சி என்றும் அழைக்கப்பட்டு வருகின்றன.

*****

https://telegram.me/aedahamlibrary

# 44. யட்ச நேத்திரங்கள்

பழமுதிர்சோலை மலை என்கிற மாலிருஞ்சோலை மலை. மலையடிவாரத்தில் மூங்கில் காடுகளும் கரும்புத் தோட்டங்களும், பச்சைப்பசேல் என்று வயற்காடுகளும் பார்ப்பவர்களின் கண்களுக்கு விருந்தை வாரி வழங்கின.

காம்போஜ இளவரசி ககனமயி பிரமிப்பின் உச்சத்தில் இருந்தாள். காஞ்சி நகரைக் கண்டு மலைத்து விட்டிருந்தாள். முக்கூடல் கடிகை, முக்கூடல் சங்கமம், அத்திமலைத் தேவனின் ஆலயம், தருமநகரம், ஒத்தாடை கோயில் என்று காஞ்சியை அணுவணுவாக ரசித்தாள். 'காஞ்சியின் வனப்புக்கு நமது ஐராவத மலை பிச்சை வாங்க வேண்டும்!' மனதினுள் நினைத்தாள்.

அத்திமலைத் தேவனின் ஆலயத்திற்குச் சென்று வந்த பிறகு ககனா, சோமஸ பண்டிதர், தீபன், மற்றும் காம்போஜ வீரர்கள் அனைவருமே மலைத்துப் போய், எதுவும் பேசத்தோன்றாமல் அமர்ந்திருந்தனர். அவர்கள் தங்கியிருந்த மாலிருஞ்சோலை மாளிகை காம்போஜ வியாபாரியுடையது. அவர்களது விஜயம் மிகவும் ரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தது. காம்போஜ வியாபாரி சுகந்தப்ரியன் அவர்களுக்கு எவ்வித குறையும் வைக்காமல் அனைத்து வசதிகளையும் செய்திருந்தான். ககனாவின் உதவிக்காக மேகலை என்கிற பெண்ணை அமர்த்தியிருந்தான். முக்கூடல் கடிகையின் சுவடிகளை பத்திரப்படுத்தி, காஞ்சியின் புராண, இதிகாச மற்றும் சரித்திரச் சுவடிகளை வரிசைப்படுத்திய சுபாங்கர் என்பவர் தனது பணியில் இருந்து ஓய்வு பெற்றிருந்தார். அவர்தான் மேகலையின் பாட்டனார்.

"காஞ்சியின் ரகசியங்களை அறிந்த யாரையாவது அறிமுகப்படுத்த முடியுமா?" சோமஸ பண்டிதர் சுகந்த ப்ரியனைக் கேட்க, அவன் தான் தேடிப்பார்ப்பதாகக் கூறிவிட்டுச் செல்ல, அதைக் கேட்டுக்கொண்டிருந்த மேகலை தனது பாட்டனாரை பற்றி கூறினாள். பண்டிதர் அவரை அழைத்து வரும்படி கூற, மேகலை தனது பாட்டன் சுபாங்கரை அழைத்து வரச் சென்றிருந்தாள்.

சுபாங்கர் வந்ததும், பரஸ்பர அறிமுகங்களுக்குப் பிறகு, ககனாவும், பண்டிதரும், தீபனும் அவரைச் சுற்றி அமர்ந்து கொள்ள, மேகலை அடுக்களையில் இருந்து ஒரு தட்டில் கனிகளைக் கொண்டு வந்து அவர்கள் முன்பாக முக்காலியில் வைத்தாள். -

https://telegram.me/aedahamlibrary

சுபாங்கர் பேசத் துவங்கினார்.

“மகாபாரதத்தில் துவங்கி இன்றைய சிம்மவர்மனின் ஆட்சி வரை காஞ்சியில் தான் எவ்வளவு நிகழ்வுகள்? அஸ்வத்தாமாவின் இரட்டை பிள்ளைகள் ஒன்று வேமுலத்திற்கும், மற்றொன்று சாவகத் தீவிற்கும் சென்றன. அதன்பிறகு அவர்கள் அமைத்த ராஜ்யங்கள் இன்று ஆலமரமாக பரந்து விரிந்திருக்கின்றன. நகரேஷு காஞ்சி என்று சான்றோர்கள் போற்றும் அளவுக்கு காஞ்சி உலக பிரசித்தி பெற்றதற்கு காரணமே அத்திமலைத் தேவன் இங்கே கோயில் கொண்டிருப்பதுதான்.

அத்திமலைத் தேவன் தன்னை அண்டி தொழுபவர்களுக்கு நன்மை செய்பவன். தனக்கு தீங்கினை நினைப்பவர்களை அழித்துவிடுவான். சைத்ர மாதம் அஸ்த நட்சத்திரத்தில் அவனுக்கு ஆற்றல் அதிகரிக்கும். அன்று அவனுக்கு குபேரன் அளித்த ஸ்ரீதள மணியை அணிவிப்பார்கள்.

குபேரபுரியில் உள்ள யக்ஷ தடாகத்தில், யட்ச நேத்திரங்கள் என்கிற ஒருவகைக் கற்கள் கிடைக்கும். மிகவும் சக்தி வாய்ந்தவை இந்தக் கற்கள். இவற்றின் ஒளி கடலைக் கடந்துகூட பாயுமாம்..." என்று சுபாங்கர் கூறியதும்தான் தாமதம்.

ககனா திகைப்புடன் பண்டிதரைப் பார்த்தாள். அவரும் அவளைத் திரும்பி நோக்கியவர் மீண்டும் சுபாங்கரைப் பார்த்தார்.

“சுவாமி! யட்ச நேத்திர கற்களின் தன்மைகளைப் பற்றி கூறுங்கள்...” - பண்டிதர் கேட்டார். –

"என்னுடைய பால்யத்தில் எனது தந்தையின் நண்பர் அது பற்றி என்னிடம் கூறியிருக்கிறார். அவர் ஒரு பொற்கொல்லர். அத்திமலைத் தேவனுக்கு பல ஆபரணங்களைச் செய்து கொடுத்திருக்கிறார். ஒருமுறை, பட்டர்கள் அவரிடம் ஸ்ரீதள மணியினைக் காண்பித்து அதன் மதிப்பைக் கேட்டார்களாம்.

அதன் மதிப்பினை ஆராய முற்பட்ட அந்த பொற்கொல்லரால் அந்த ஹாரத்தின் மதிப்பைக் கூற முடியவில்லையாம். அவரால் கூற முடிந்ததெல்லாம், அந்த ஹாரத்தில் பதிக்கப்பட்டுள்ள யட்ச நேத்திர கற்கள் நிலவுலகில் கிடைக்காது என்பதே. அந்தக் கற்களின் வீர்யத்தை மனிதர்களால் தாங்கவே முடியாது. அத்திமலைத் தேவன் போன்ற ஆற்றலை படைத்தவன் தான் அதனை அணிய முடியும். குபேரன் கொடுத்த அந்த மணி ஹாரத்தை வருடத்திற்கு ஒருமுறைதான் அணிவிக்கிறார்கள். அதனை களவாடவும் பலமுறை முயற்சிகள்

https://telegram.me/aedahamlibrary

நடந்தன.” சுபாங்கர் கூறிக்கொண்டே போக, ககனா பொறுமை இழந்தாள்

“சுவாமி! இந்தக் கேள்விக்கு பதில் தாருங்கள். காம்போஜ தீவுகளில் எனது தோழி ஒருத்தி இருக்கிறாள். அவள் ஒவ்வொரு சைத்ர மாத அஸ்த நட்சத்திரத்தன்று குடதிசை அடிவானில் ஒரு ஒளிவட்டத்தை பார்க்கிறாள். அது ஒருவேளை அத்திமலையில் இருந்து வருகிறதோ என்கிற சந்தேகம் அவளுக்கு?” ககனா கூறினாள்.

"எதற்கு சந்தேகப்பட வேண்டும். ஸ்ரீதள மணியின் ஒளிதான் அவ்வளவு தூரம் தெரிகிறது. இன்னும் சொல்கிறேன் கேளுங்கள். அதன் வீர்யம் பல பட்டர்களை பார்வை இழக்கச் செய்திருக்கிறது. சிலர் அதன் வீர்யம் தாங்காமல் சித்த சுவாதீனத்தை இழந்திருக்கின்றனர். அவ்வளவு ஏன்? யட்ச நேத்திர கற்களின் ஒளி நிலநடுக்கத்தையும் உண்டு செய்யும் என்று அந்த பொற்கொல்லர் கூறி இருக்கிறார்!” - சுபாங்கர் சொல்ல, தீபனும், பண்டிதரும், ககனாவும் பார்வைகளைப் பரிமாறிக் கொண்டனர்.

தொடர்ந்து அத்திமலை ஆலயம், அதன் வழிபாடுகள், பின்தொடரும் ஆகமங்கள் என்று ஆலயத்தைப் பற்றி பெருமிதத்துடன் கதை கதையாக அவர் விவரித்துக் கொண்டே போனார். யாரோ யாத்ரீகர்கள் அத்தியூர் பெருமைகளைக் கேட்கின்றனர் என்கிற எண்ணத்தில் அனைத்து தகவல்களையும் சுபாங்கர் அடுக்கிக் கொண்டே போக, தங்களுக்கு தேவையான தகவல்களை பெற்றுக்கொண்டுவிட்ட திருப்தியில் அவர் புறப்பட்டுச் செல்வதற்காகக் காத்திருந்தனர். மேகலையுடன் அவர் புறப்பட்டு போனதும், தீபன் அறையின் கதவை சாற்றி தாளிட்டான்…

"ஆக... நமது நாட்டில் ஏற்படும் நிலநடுக்கத்திற்கு காரணம் ஸ்ரீதள மணிதான் என்பது நிரூபணம் ஆகிவிட்டது. அடுத்த கட்ட நடவடிக்கை என்ன? உங்கள் இறைவனின் ஆபரணத்தால்தான் எங்கள் நாட்டில் நில நடுக்கம் வருகிறது என்று கூறி போரிட முடியுமா? அப்படியே போரிட்டாலும் கடல் கடந்து வந்து பல்லவத்தை வீழ்த்த முடியுமா என்ன?” - ககனா கேட்டாள்.

“இளவரசி! காஞ்சியின் வளத்திற்கும், கல்விக்கும், புகழுக்கும் காரணம் தேவ உடும்பர அத்தி மரத்தால் ஆராதிக்கப்படும் அத்திவரதனே. மக்கள் சுபிட்சத்துடன் எல்லா வளங்களையும் பெற்று வாழ்வதற்காக சதுர்முகன் விஸ்வகர்மாவிடம் சொல்லி தேவ உடும்பரத்தில் தேவராஜனை படைத்திருக்கிறான். இவர்கள் தேவராஜனை வணங்குகிறார்கள். ஆனால் நமது மார்க்கமே தேவராஜ மார்க்கம். எனவே, இவர்களைக்

https://telegram.me/aedahamlibrary

காட்டிலும் தேவராஜன் நமக்குதான் மிக நெருங்கியவன்."

ககனாவும், தீபனும் அவரை ஆச்சரியத்துடன் பார்த்தனர். சோமஸ் பண்டிதர் எதற்கோ அடித்தளம் அமைக்கிறார் என்பது அவர்களுக்கு புரிந்தது.

"கிழக்கு பார்த்து நிற்கும் தேவராஜனின் ஸ்ரீதள மணியின் வீர்யம் நமது தருமநகரத்தில் நிலநடுக்கத்தை உண்டு பண்ணுகிறது என்றால்... நாம் அந்த நிலநடுக்கத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும். அதற்கு ஒரே வழி...”

சோமஸர் தனது தாடியை வருடியபடி அவர்களை ஆழமாக நோக்கினார்.

“அதற்கு ஒரே வழி?” தீபன் குரலில் ஆர்வம் கொப்பளித்தது.

“தேவராஜன் நமது மார்க்கத்தின் கடவுள். அவனை காஞ்சியிலிருந்து நமது ஐராவத மலையின் உச்சியில் தேவராஜனாக மேற்கே பார்த்து எழுந்தருளச் செய்வோம். அதன்பின் நமது நாட்டில் நிலநடுக்கம் ஏற்படாது! இங்கிருந்து தேவராஜன் நமது நாட்டைப் பார்த்து நிற்பதால்தானே, ஸ்ரீதளத்தின் வீர்யம் நம்மைப் பாதித்து நிலநடுக்கம் ஏற்படுகிறது. அவனை ஐராவத மலையின் மீது மேற்கு நோக்கி நிற்க வைத்துவிட்டால்...?” பண்டிதர் கூறினார்.

ஐராவத மலையின் மீது மேற்கே பார்த்து அத்திமலையானை நிற்க வைத்து பல்லவத்தில் நிலநடுக்கத்தை உண்டு பண்ணுவோம்! என்று கூறாமல் கூறின அவரது கண்கள்.

"நடக்கக்கூடிய காரியமா இது?” - ககனா கேட்டாள்.

“நடத்திக் காட்டுவோம். நமது மார்க்கத்தின் மூர்த்தியை நாமே வைத்துக் கொள்வோம்!” - பண்டிதர் கூற அவரது குரலில் தொனித்த தீவிரத்தைக் கண்டு திகைத்துப் போய் அமர்ந்திருந்தனர், ககனாவும், தீபனும்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 45. சிம்மத்தை அடக்கிய சீனப் புலி

முக்கூடல் கடிகை –

பஞ்சமர் சபையின் கூட்டம் காஞ்சி நகரின் ஐந்து பகுதிகளிலும் சுழற்சி முறையில் நடைபெறும். கூட்டம் முடிந்ததும், அந்தப் பகுதி மக்களின் குறைகளைக் கேட்டு அறிவார்கள். அன்றைய கூட்டம் முக்கூடல் கடிகையில் நடைபெற்றது. கூட்டம் முடிந்ததும், பஞ்சமர் சபையின் உறுப்பினர்கள் அவசரமாக கடிகையின் களரிக்குப் புறப்பட்டனர். அங்கே ஒரு இரகசிய சந்திப்பு நிகழ இருந்தது. இளவரசர் ஜெயவர்மன்தான் அந்த இரகசிய கூட்டத்திற்கு அழைத்திருந்தான்.

களரியின் மைதானங்களில் எப்போதும் வாலிபர்கள் பயிற்சிகளைச் செய்து கொண்டிருப்பார்கள். ஆனால் களரியின் தியான அறைக்கு யாரும் வருவதில்லை. அவ்வப்போது ஜெயவர்மன் மட்டுமே அங்கே தியானத்தில் ஈடுபட்டிருப்பான். அங்கேதான் தனது இரகசிய கூட்டத்தை வைத்திருந்தான்.

பஞ்சமர் சபையைச் சேர்ந்த ராஜவர்மன், விஸ்வக் ஷேனன், வரதநாராயண நம்பி, முத்ரன் மற்றும் விசாக வர்மன் ஆகிய ஐவரும் களரியின் தியான அறைக்குள் நுழைந்த போது ஜெயவர்மன் தியானத்தில் இருந்தான். அவனது தியானம் கலையும் வரை ஐவரும் அமைதியாக அமர்ந்திருக்க, ஜெயவர்மன் கண்களைத் திறந்து வந்திருப்பவர்களை ஒவ்வொருவராகப் பார்த்துத் தலையசைத்தான்.

"நீங்கள் ஐவரும் எனது நலவிரும்பிகள் என்பது எனக்குத் தெரியும். எனக்காக எதையும் செய்வீர்கள் என்பதையும் நான் அறிவேன். எனவேதான் உங்களை காஞ்சி நகரத்தின் நலவிரும்பிகளாகவும் மாற்றினேன். உங்கள் ஐவரையும் வைத்து காஞ்சியின் பாதுகாப்பை பலப்படுத்த எண்ணிய நான், அத்திமலைத் தேவனை வேண்டினேன். அவனும் இந்த பஞ்சமர் சபை யோசனையை எனக்கு அளித்தான். நான் உங்களை இங்கே அழைத்ததற்கு முக்கிய காரணம், காஞ்சியில் தற்போது நிலவும் சூழ்நிலை.

“காஞ்சியிலும், அத்திமலைத் தேவனின் ஆலயத்திலும் பல நிழல் மனிதர்கள் தென்படுகின்றனர். நேற்று அரண்மனைவரை அவர்கள் வந்துவிட்டனர். காஞ்சியின் பாதுகாப்பு குறித்து எனக்கு சில கவலைகள் ஏற்பட்டுள்ளன. எனவேதான் உங்களிடம் சில பணிகளை ஒப்படைக்கும் எண்ணத்துடன் உங்களை அழைத்திருக்கிறேன்.

https://telegram.me/aedahamlibrary

“விஸ்வக்ஷேனா! அன்று அத்திமலையானின் ஆலயத்தில் விசித்திரமாகக் காட்சி தந்த ஒரு மூதாட்டியைக் கண்டேன். அவளது கண்களில் ஒருவித காந்த சக்தி இருக்கிறது. அவளது கண்களை நோக்கினாலே மனதில் ஒருவித குழப்பம் மேலிடுகிறது. நேற்று அவளும், ரணதிலகன் என்கிற வாலிபனும் ஒத்தாடை அரண்மனைக்கே வந்துவிட்டனர். பல்லவ நாட்டின் வழியாக சோழம் செல்வதற்கு அனுமதி கேட்டு வந்திருந்தான், ரணதிலகன் என்பவன். தன்னை மன்னன் என்று கூறிக்கொள்கிறான். ஆனால் காண்பதற்கு ஒரு கொடியவனாக தோன்றுகிறான். நான் வழியளிக்க மறுத்துவிட்டேன். இரவு அரசரைச் சந்தித்து அனுமதியை பெற்றுவிட்டார்கள். முத்ரா! களரியில் நானும், நீயும் பயிற்சி செய்த போது, என்னைக் காண இளவரசி ரத்னா வந்திருந்தாளே! அதன் பிறகு முக்கூடல் தண்ணீரில் அவள் விழுந்துவிட்டாளாம். முக்கூடல் சங்கம வெள்ளத்தில் சிக்கிய அவளை அந்த ரணதிலகன் காப்பாற்றி கரை ஏற்றினானாம். அதனால், தந்தையிடம் சொல்லி அவள் ரணதிலகனுக்கு அனுமதி பெற்றுத் தந்திருக்கிறாள். அவள் எப்படி ஆற்றில் விழுந்தாள் என்கிற கேள்விக்கு சரியான பதில் இல்லை. எனக்கு அந்த மூதாட்டியைப் பற்றியும், ரணதிலகனைப் பற்றியும் முழு தகவல்களும் வேண்டும். அவர்கள் யார், எங்கிருந்து வந்திருக்கின்றனர், காஞ்சியில் அவர்கள் எதற்கு தங்கி உள்ளனர், எதற்காக ரணதிலகன் சோழத்திற்கு போக நினைக்கிறான்? - போன்ற கேள்விகளுக்கு விடைகள் வேண்டும். மேலும், அந்த மூதாட்டியின் கண்களைப் பற்றி விவரம் சேகரித்து வா!”

ஜெயவர்மன் கூற, விஸ்வக்ஷேனன் தலையசைத்தான்.

முத்ரா! பழமுதிர்சோலையில் மாலிருஞ்சோலை மலையடிவாரத்தில், காம்போஜத்தில் இருந்து வந்திருக்கும் ஒரு குழாம் தங்கியிருக்கிறது. அடிக்கடி அத்திமலையான் ஆலயத்தில் அவர்கள் தென்படுகிறார்கள். அவர்களைப் பற்றி நீ விசாரித்து எனக்கு தகவல்களைத் தா.”

ஜெயவர்மன் கூற, முத்ரன் அவனைப் பணிவுடன் பார்த்தான்.

“உத்தரவு இளவரசே!”

“விசாகவர்மா! தருமநகரத்தில் புத்த பிக்கு புண்ய மித்ராவின் ஜாகையில் இலங்கையைச் சேர்ந்த சிலர் தங்கியுள்ளனர். அவர்களது நடவடிக்கைகளின் மீது ஒரு கண் இருக்கட்டும்!”

ஜெயவர்மன் கூற, விசாகவர்மனும் தனது தலையை மேலும் கீழுமாக அசைத்தான்.

https://telegram.me/aedahamlibrary

ஜெயவர்மன் அடுத்ததாக வரதநாராயண நம்பியை நோக்கினான்.

“நம்பி! உமக்குத்தான் முக்கியமான பணி காத்திருக்கிறது. அத்திமலைத் தேவன் ஆலயத்தினுள் அந்நியர்கள் யார் நுழைந்தாலும் அவர்களைப் பற்றி விசாரித்து எனக்கு குறிப்புகளை அனுப்ப வேண்டும். அத்தியூர்வாசிகளின் க்ருஹங்களுக்கு புதிதாக யாராவது வந்தால், உடனே அவர்களைப் பற்றி தகவல் திரட்டப்பட வேண்டும்!” என்றவன் கடைசியாக தனது அண்ணன் ராஜவர்மனை நோக்கினான்.

"அண்ணா! அரண்மனைக்கு வருபவர்கள், மன்னரைச் சந்திப்பவர்கள், ஆகியோர் குறித்து நீங்கள் தகவல்களைச் சேகரியுங்கள். அரண்மனையில் நமது அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஆபத்து சூழ்ந்திருக்கிறது. குறிப்பாக, மன்னருக்கும், நமது தங்கை இளவரசி நவரத்னாவுக்கும்! அவர்களைச் சுற்றி என்ன நடக்கிறது என்று கவனியுங்கள். உங்கள் தகவல்களைக் கொண்டுதான் நாம் பெரும் பணிகளை ஆற்ற வேண்டியிருக்கிறது. காஞ்சியை காப்பாற்றும் பொறுப்பு நமக்கு இருக்கிறது. அதற்கும் மேலாக அத்திகிரியில் உள்ள பொக்கிஷத்தை பாதுகாக்கும் பொறுப்பும் நமக்கு இருக்கிறது. அத்திமலையானை நாம் கோட்டைவிட்டோம் என்று வருங்கால சந்ததியர் நம்மை குற்றம் சொல்லக் கூடாது. உடனே நான் கேட்ட தகவல்களைச் சேகரித்து வாருங்கள்!” என்றதும் பஞ்சமர் சபை உறுப்பினர்கள் கலைந்து சென்றார்கள்.

அன்றைய வகுப்புகளை முடித்துவிட்டு தருமநகரத்தில் இருந்த தனது ஜாகைக்கு புறப்பட்டார், புண்ய மித்ரா. தேஜோமித்ரா, அபயகிரி, அமுல தேஜா, வஜ்ர சிங்கே பத்ம நேத்ரா, உபேந்திர சேனா என்று தற்போது இவருடன் அறு நபர்கள் அதிகமாக தங்குகின்றனர். இவர் தனியாக வசித்த காலங்களில், இரவு வெறும் கோதுமை ரொட்டியையும், பசும்பாலையும் மட்டுமே அருந்துவார். ஆனால் இவருடன் ஆறு பேர் அதிகமாக தங்கியிருக்கின்றனர் என்கிற போது அவர்களின் வயிற்றுப்பாட்டினை இவர்தானே கவனிக்க வேண்டும்.

ராஜவீதி அருகில் உள்ள ஒத்தாடை கடைத் தெருவுக்குச் சென்று உணவு சமைக்க, திரவியங்களை வாங்கிக் கொண்டு பிறகே தருமநகரம் செல்ல வேண்டும், என்று நினைத்தவர், தனது அறையில் இருந்து புறப்பட்டார்.

அவருக்குத் தெரியாமல் விசாக வர்மன் அவரைப் பின்தொடர்ந்து சென்றான். பிரக்ஞுதாராவையும், ரணதிலகனையும் தேடிச்சென்ற விஸ்வக்சேஷனன், அவர்களை ஒத்தாடை கடைவீதியில் தற்செயலாகக்

https://telegram.me/aedahamlibrary

கண்டான். பிரக்ஞதாரா, ரணதிலகன், மற்றும் சீன தேசத்தவன் ஒருவன் என மூன்றுபேர் ஒரு கடையில் கனிகளை வாங்கிக் கொண்டிருந்தனர்.

கனிகளை வாங்கிக் கொண்டு அதற்குரிய பணம் கொடுக்காமல் அவர்கள் செல்ல, ஆட்சேபணை எதுவும் சொல்லாமல், கடைக்காரன் தனது வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

விஸ்வக்ஷேனன் மெதுவாக அந்த வியாபாரியை நெருங்கினான். "ஏனப்பா! அந்த புத்த பிக்குணி உன்னிடம் கனிகளை வாங்கிக் கொண்டு, பணம் தராமல் போகிறாள். நீ வாளாயிருக்கிறாயே!" அவனிடம் கேட்டான்.

அந்த வியாபாரி மலங்க மலங்க விழித்தான். "அவர்கள் எப்போது என்னிடம் கனிகளை வாங்கினார்கள்!? எனது கடைக்கு யாரும் வரவில்லையே!" என்று சொல்ல, விஸ்வக்ஸேனன் திகைத்தான். பிரக்ஞதாராவையும் மற்றவர்களையும் நழுவவிடக் கூடாது என்பதற்காக அவர்கள் பின்பாகவே, சற்று இடைவெளி தந்து தொடர்ந்தான்.

ஜினிங் ஓரிருமுறை திரும்பிப் பார்த்தான். சடாரென்று நின்று, வியாபாரம் செய்வது போன்று பாவனை செய்தான், விஸ்வக்ஷேனன். இளவரசன் ஜெயவர்மன் கூறியது போல் அந்த பிக்குணி மற்றும் சீன தேசத்தவனுக்கும் கண்களில் ஏதோ சூட்சுமம் உள்ளதாக தோன்றியது, விஸ்வக்ஷேனனுக்கு.

சரியாக கடைத்தெருவினுள் புண்ய மித்ராவும் நுழைந்தார். அவரை பின்தொடர்ந்து கொண்டிருந்த விசாகவர்மனும் கடைவீதியினுள் நுழைந்தான்.

விசாகவர்மனும், விஸ்வக்ஷேனனும் கண்களினால் சமிக்ஞை செய்து கொண்டனர்.

சரியாக –

தெரவாட தத்துவங்களை கடிகையில் போதிக்கும் புண்ய மித்ராவும், சித்து விளையாட்டுகளில் ஈடுபட்டு மகாயான தத்துவங்களைப் பரப்பும் பிரக்ஞதாராவும் நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டனர்.

பிரக்ஞதாராவைக் கண்டதும் புண்ய மித்ராவின் கண்களில் அச்சம் படர்ந்தது. அவளைத் தவிர்க்க எண்ணி எதிர்புறமாகச் செல்ல நினைக்க, புண்யமித்ராவை பார்த்த மாத்திரத்தில் பிரக்ஞதாராவின் கண்களிலும்

https://telegram.me/aedahamlibrary

அசூயையும், அருவருப்பும் தோன்றின.

அவரது கண்களினுள் உறுத்துப் பார்த்தாள். அவ்வளவுதான். புண்ய மித்ரா திடீரென்று ஓடிச் செல்லத் துவங்கினார். கடைத்தெருவின் முனையில் நின்றிருந்த தீபஸ்தம்பத்தின் கருங்கல் தூணில் தனது தலையை மோதிக்கொள்ளத் தொடங்கினார்...

"தெரவாட தத்துவத்தை போதிப்பவன் முழுமூடன்!" என்று அலறியபடி அவர் தனது தலையை தூணில் மோதியதால், அவரது நெற்றி உடைந்து குருதி பாயத் துவங்கியது. விஸ்வக்ஷேனன், விசாகமித்ரன் இருவருமே இந்தக் காட்சியைப் பார்த்தார்கள். விசாகனுக்கு சமிக்ஞை செய்துவிட்டு, விஸ்வக்ஷேனன் பிரக்ஞுதாரா பின்பாக தொடர்ந்து செல்ல, விசாகன் பாய்ந்து வந்து புண்ய மித்ராவைத் தடுத்தான்.

அவனை இலட்சியம் செய்யாமல் அவர் தொடர்ந்து தனது தலையை கல்தூணில் மோத முயற்சிக்க, வலுவான உடற்கட்டினை கொண்டிருந்த விசாகன் அவரை பலவந்தமாகத் தூக்கிச் சென்று தெருவோரத் திண்ணையில் கிடத்த அவர் மூர்ச்சையானார். நீரை தருவித்து அவரது முகத்தில் தெளிக்க, புண்ய மித்ரா மெதுவாகக் கண்களைத் திறந்தார். அவரது நெற்றியில் வழிந்த குருதியை தனது மேல் துண்டினால் துடைத்து அவரது நெற்றியில் கட்டுப்போட்டு, குருதியின் பெருக்கை நிறுத்தினான், விசாகன்.

“சுவாமி! என்ன இது அனர்த்தம்? முக்கூடல் கடிகையில் தெரவாட பௌத்த தத்துவங்களை போதிக்கும் தாங்கள், 'தெரவாட தத்துவத்தை போதிப்பவன் முழுமூடன்' என்று முச்சந்தியில் கோஷம் எழுப்பலாமா?” - விசாகன் கேட்டான்.

விக்கித்துப் போனார், புண்ய மித்ரா.

"நானா அப்படிக் கூவினேன்? எல்லாம் அந்த சூன்யகாரி பிரக்ஞுதாராவின் லீலை. மிகவும் ஆபத்தான சித்தினி அவள். பௌத்த கொள்கைகளுக்கே அவமானச் சின்னம் அவள். அவளுடன் திரியும் சீனக்காரனின் பெயர் ஜினிங் டியாண்டை. இருவருமே நோக்கு பார்வையும், வர்மக்கலைகளையும் பிரயோகித்து உடலை முடக்குவதிலும் திறமையானவர்கள். அவர்கள் கண்களினுள் நோக்கினால், தங்களை பார்த்தவர்களை தற்கொலை செய்யத் தூண்டுவார்கள். எனது கண்கள் அவளது கண்களில் சிக்கிவிட்டதால்தான் நான் அப்படி நடந்து கொண்டேன்!" தனது ஆவேசத்திற்கான காரணத்தை விளக்கினார், புண்ய மித்ரா.

https://telegram.me/aedahamlibrary

"இம்மாதிரி ஆபத்தானவர்களின் நோக்கு பார்வையை எப்படித் தவிர்ப்பது?" - விசாகன் கேட்டான்.

"பெரிய இரகசியம் ஒன்றுமில்லை . கரிய துணியால் நமது கண்களை கட்டினால் போதும். அவர்களது நோக்கு பார்வை பலிக்காது. கரிய நிறத்தை எவ்வித அலைகளும் ஊடுருவ முடியாது. அலைகளின் மூலம் நோக்கு பார்வையைச் செலுத்தி மற்றவர்களை வசியப்படுத்தும் பிரக்ஞுதாராவிடம் இருந்து தப்பிக்க கரிய துணியால் கண்களைக் கட்டிக் கொண்டால் போதும். அவள் காஞ்சியில் இருக்கும் வரை, இனி நான் எப்போதும், கரிய துணியுடன்தான் நடமாடுவேன்!" புண்ய மித்ரா கூறினார்.

நடந்த சம்பவத்தையும், தான் சேகரித்த தகவல்களையும், ஜெயவர்மனின் செவிகளில் பாய்ச்சிவிட்டான், விசாகன்.

விசாகன் கூறிய தகவல்களைப் பற்றி சிந்தித்தபடி அரண்மனைக்குச் சென்ற ஜெயவர்மன் திகைத்தான். அரண்மனை வாயிலில் ஏராளமான இரதங்களும், சிவிகைகளும், வில் வண்டிகளும் நின்றிருந்தன. அரண்மனையில் என்ன நடக்கிறது?

வியப்புடன் அரண்மனையின் கல்யாண கூடத்திற்குச் சென்றான். அங்கே பெருங்கூட்டம் குழுமியிருந்தது. அரச தம்பதிகள், இவனது மூன்று சகோதரர்கள், சிற்றப்பன் விஷ்ணுவர்மன், அவனது மனைவி காஞ்சனை, ராஜவர்மன், விஜயவர்மன், அத்தை ராஜமாதங்கி, அவளது இரு மகள்கள் ஆகியோர் இருந்தனர்.

ஒரு மூலையில் நவரத்னாவும், ராஜஸ்ரீயும் வெட்கத்துடன் நின்றிருந்தனர்... தனது குடும்பத்தினரை நோக்கியவன், திரும்பியதும் திகைத்துப் போனான். அங்கிருந்த இருக்கைகளில் பிரக்ஞுதாராவும், ரணதிலகனும் அமர்ந்திருக்க, எதிரே முக்காலியில் தட்டுகள் நிறைய கனிகள் வைக்கப்பட்டிருந்தன. அன்று மாலை அவள் கனிகளை வாங்கியதாக விசாகன் தெரிவித்திருந்தானே, அந்த கனிகள் இவையாக இருக்குமோ? அவற்றில் என்ன சூனியங்களை வைத்திருக்கிறாளோ? வியாபாரியை மயக்கி கள்ளத்தனமாகப் பெற்ற கனிகள்தானே! வெறுப்புடன் அந்த கனிகளை நோக்கினான், ஜெயவர்மன்.

"இதோ அண்ணன் வந்துவிட்டானே!" - நவரத்னா கூறினாள்.

சிம்மவர்மன் இயந்திரகதியில் ஜெயவர்மனைப் பார்த்தான். "ஜெயவர்மா! இன்று நமது குடும்பத்திற்கு முக்கியமான தினம்.

https://telegram.me/aedahamlibrary

இளவரசர்களுக்கும், இளவரசிகளுக்கும் திருமணம் நிச்சயமாகிவிட்டது. அவனிசிம்மனுக்கும், அத்தை மகள் புவனமாதேவிக்கும், நம் நவரத்னாவுக்கும் ரணதிலகருக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டுவிட்டது!" - மன்னர் கூறினார்.

திடுக்கிட்டு ராஜஸ்ரீயை பார்த்தான், ஜெயவர்மன். அவளோ அவனை வெட்கத்துடன் ஓரக்கண்களால் பார்த்தபடி நின்றிருந்தாள். அவளை அவனிசிம்மனுக்கு திருமணம் செய்விக்கிறோம் என்று கூறித்தானே பாலகாடத்திலிருந்து சிறைபிடித்து வந்திருந்தான். இப்போது கதையை மாற்றுகிறார்களே!

"அப்போது கடம்ப இளவரசியின் நிலை என்ன?" -- ஜெயவர்மன் கேட்டான்.

"அவளுக்குத்தான் நீ இருக்கிறாயே!" நவரத்னா சிரித்தாள்.

"என்னை மன்னியுங்கள் தந்தையே! நான் நமது அத்தை மகள் சாயாதேவியைத்தான் மணந்து கொள்வேன்!" - உறுதியுடன் ஜெயவர்மன் கூறினான்.

ராஜஸ்ரீ திடுக்கிட்டு அவனைப் பார்த்தாள். அவளது கண்களில் நீர் திரண்டது.

"அவனிசிம்மனுக்கு பிறகு தானவர்மன் வரிசையில் இருக்கிறான். அவனது திருமணத்திற்கு பிறகே உனது திருமணத்தைப் பற்றி யோசிக்க முடியும்!" - காஞ்சனை கூறினாள்.

"தேவையில்லை! தம்பி ஜெயவர்மன் திருமணம் செய்து கொள்ளட்டும். நான் எனது மனதுக்கு இனியவளை சந்திக்கும்வரை திருமணம் செய்து கொள்ளப் போவதில்லை" தானவர்மன் பிடிவாதமாகக் கூறினான்.

அனைவரும் திகைத்து நின்றிருந்தனர்.

"நீ சாயாவைத்தான் மணக்கப் போகிறாய் என்றால் எதற்காக ராஜஸ்ரீயை சிறைபிடித்து வந்தாய்?" சிற்றப்பன் விஷ்ணுவர்மன் கேட்டார். தனது மகன் விஜயவர்மன் காதலிக்கும் சாயாவை மணப்பெண் என்று ஜெயவர்மன் கூறியதால் எரிச்சலை அடைந்திருந்தார் போலும். விஜயவர்மன் தனது பங்குக்கு அவனை குரோதத்துடன் பார்த்துக்கொண்டிருந்தான்.

ஜெயவர்மன் ராஜஸ்ரீயை நோக்கினான். தலைகுனிந்தபடி தனது

https://telegram.me/aedahamlibrary

விதியை நொந்து கொண்டிருந்தாள்.

“நான் கடம்ப இளவரசியை நமது அவனிசிம்மனுக்காகத்தான் சிறைபிடித்து வந்தேன். அவனே அவளையும் மணந்து கொள்ளட்டும்!” ஜெயவர்மன் கூற, அவனிசிம்மன் எரிச்சலுடன் அவனைப் பார்த்தான்.

"நீ கடத்தி வந்த பெண்ணை நான் எதற்கு மணந்து கொள்ள வேண்டும்?” - அவனிசிம்மன் கூற, ஜெயவர்மன் ராஜஸ்ரீயை பரிதாபமாகப் பார்த்தான். இப்படி அந்த பெண்ணை ஏலம் போடுவதால் அவளது மனம் எவ்வளவு பாடுபடும்?

“ராஜஸ்ரீயை என்ன செய்வது? பேசாமல் அவளைக் கடம்பத்திற்கே அனுப்பிவிடலாம்!” - விஷ்ணுவர்மன் கூறினான்.

"தேவையில்லை. இளவரசிக்கு ஆட்சேபம் இல்லையென்றால், நான் அவரை மணந்து கொள்கிறேன்!” மெல்லிய குரலில் ராஜவர்மன் கூறினான்.

ஜெயவர்மன் அண்ணனை நன்றியுடன் நோக்கிவிட்டு, பிறகு ராஜஸ்ரீயை நோக்க, அவள் நேராக நடந்து சென்று ராஜவர்மனின் பாதங்களைத் தொட்டு பணிந்து தனது தலையில் வருடிக் கொண்டாள்.

பிரக்ஞதாரா களிப்புடன் குரல் எழுப்பினாள். "பிறகென்ன! எல்லாம் நன்மையாகவே முடிந்தது. பல்லவ இளவரசி எங்கள் நாட்டின் அரசியாகத் திகழப்போவது குறித்து எனக்கு மெத்த மகிழ்ச்சி!” - பிரக்ஞதாரா கூறினாள்.

"எங்கிருக்கிறது உங்கள் நாடு? நவரத்னா ரணதிலகனை மணப்பதற்கு நான் ஆட்சேபம் தெரிவிக்கிறேன்? அவர்களைப் பற்றிய தகவல்கள் சந்தேகத்திற்கு உரியதாக உள்ளது!" - ஜெயவர்மன் கூற, நவரத்னாவின் முகம் சூம்பியது. தனது பிரிய அண்ணனே தனது காதலுக்கு தடையாக இருக்கிறானே!

சிம்மவர்மன் [1] மகனை சினத்துடன் பார்த்தான். "உனது தங்கை ரணதிலகனை காதலிக்கிறாள். அதன் பிறகு நாம் என்ன முடிவு கட்டுவது. நான் உனது தந்தை. நாட்டின் மன்னனும் கூட. நீ பட்டத்து இளவரசன் கூட இல்லை. உனது ஆட்சேபம் எங்களுக்கு ஒரு பொருட்டே இல்லை!” - சிம்மவர்மன் ஆவேசத்துடன் கூறினான்.

ஜெயவர்மனுக்கு எல்லாம் புரிந்து போனது. தனது தந்தை, தங்கை, இருவருமே பிரக்ஞதாராவின் நோக்கு பார்வை வசியத்தில்

https://telegram.me/aedahamlibrary

இருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டான். இல்லையென்றால் இவனுடன் நெகிழ்ச்சியுடன் பேசும் தந்தை, இப்படி சினந்து பேசுவாரா?

தந்தையையும், தங்கையையும் பிரக்ஞுதாராவிடமிருந்து எப்படிக் காப்பாற்றுவது? ரணதிலகனைப் பார்த்தாலே குரூரமாகத் தென்படுகிறான். அவனை எப்படிக் காதலிக்கத் தொடங்கினாள் ரத்னா? அவள் முக்கூடல் நீரில் விழுந்தது, காதல் வசப்பட்டது, இப்போது திருமணம் நிச்சயமானது எல்லாமே பிரக்ஞுதாராவின் நோக்கு பார்வையால்தான் நடந்தேறி வருகிறது. இந்த சதியை எப்படி உடைப்பது?

யோசித்துக்கொண்டே இருந்தான், ஜெயவர்மன்.

[1] பல்லவ மன்னன் மூன்றாம் சிம்மவர்மனை வசியப்படுத்தி தனது அடிமையாக பிரக்ஞுதாரா வைத்திருந்ததாக பிரக்ஞுதாராவின் சரித்திரம் கூறுகிறது.

*****

https://telegram.me/aedahamlibrary

# 46. நான்கு ஐந்தானது

ஒத்தாடை அரண்மனை –

அவனிசிம்மன் - புவனா, ராஜவர்மன் - ராஜஸ்ரீ, ஜெயவர்மன் - சாயா, நவரத்னா - ரணதிலகன் ஆகியோரின் திருமணங்கள் சுபமாக நடந்தேறின. கடம்ப மன்னன் ஸ்கந்தவர்மன் மனைவி அஸ்வதியுடன் வந்து தனது மகள் ராஜஸ்ரீயின் திருமணத்தை நடத்திக் கொடுத்தான். காஞ்சி நகரமே கோலாகலத்துடன் காணப்பட்டது. திருமணத் தம்பதிகளுடன் அரச குடும்பத்தின் மற்றவர்களும் அத்திமலைத் தேவனின் ஆலயத்திற்கு வந்திருந்தார்கள். திருமணம் முடிந்த கையோடு அத்திமலையானின் ஆசியைப் பெறுவது பல்லவ அரச குடும்பத்தின் வழக்கம்தானே.

சரியாக, தங்களது காஞ்சிப் பயணத்தை முடித்துக் கொண்டு காம்போஜத்திற்குத் திரும்ப முடிவு செய்து, கடைசியாக ஒருமுறை அத்திமலைத் தேவனை தரிசிக்கும் எண்ணத்துடன் ஆலயத்திற்கு வந்திருந்தாள், ககனாவும், பண்டிதரும்.

அரச குடும்பத்தினர் ஒருபுறம் நிற்க, எதிரே ககனாவும், பண்டிதரும் தந்தையும் மகளையும் போல நின்றிருந்தனர். இளவரசியின் ஆடம்பர ஆடை ஆபரணங்கள் எதுவுமின்றி மிகவும் எளிமையாகக் காணப்பட்டாள் ககனமயி. இருந்தாலும் எதிரே நின்ற அரச குடும்பப் பெண்களைக் காட்டிலும் மிகவும் கவர்ச்சியாகவும், கண்ணுக்கு குளிர்ச்சியாகவும் தோன்றினாள். அவள் மீது பார்வை பதிந்ததுமே சிம்மவர்மனின் இரண்டாவது மகன் தானவர்மன் சுவாசிக்கவும் மறந்து நின்றான்.

'யார் இவள்? தேவலோகத்து பெண்ணைப் போன்று இருக்கிறாளே. பார்ப்பதற்கு அந்நிய தேசத்து பெண் போலத் தோன்றுகிறாள். அவளது பேரழகும், யௌவனமும், இந்த பக்கத்தைச் சேர்ந்த பெண்களுக்கு கிடையாதே?' அத்திமலைத் தேவனை தரிசிக்கக் கூட தோன்றாமல் அவளையே நோட்டம்விட்டுக் கொண்டிருந்தான். தனது முன்பாக தமையன்களும் தங்கையும், மணக்கோலத்தில் நிற்க, ககனாவைக் கண்டதும் அவன் மனதிலும் திருமண ஆசை துளிர்த்தது. ககனாவின் பேரழகில் தானவர்மன் மயங்கிவிட்டான்... தனது மனதுக்கு இனியவளைக் காணும் வரை தான் திருமணம் செய்து கொள்ளப் போவதில்லை என்றவன், ஆலயத்தில் ககனாவைக் கண்டதுமே

https://telegram.me/aedahamlibrary

திருமணம் செய்து கொள்ள முடிவு செய்துவிட்டான். தனது மனக்கிடக்கையை அண்ணன் அவனிசிம்மனிடம் சொல்ல, அவன் பண்டிதரிடமே அணுகி ககனாவை பற்றி விசாரித்தான். பல்லவ இளவரசனுக்கு காம்போஜ இளவரசி ககனாவை பெண் கேட்கிறார்களே. அதுவும் அத்திமலைத் தேவனின் சன்னிதி. இது ஒருவேளை அவனின் திருவுள்ளமா? தேவ உடும்பர அத்திமலையானை எப்படி காம்போஜத்திற்கு கடத்துவது என்று யோசித்துக்கொண்டிருந்தவருக்கு, மின்னல் வெட்டுவது போன்று ஒரு யோசனை உதித்தது. எதற்கு கவர்ந்து செல்லவோ, களவாடவோ வேண்டும். பல்லவ இளவரசனுக்கு ககனமயியை மணமுடித்து, அவள் கணவனையும், அத்திமலைத் தேவனையும் திருமணச் சீராகவே பெற்றுக்கொள்ளலாமே! ககனாவின் மனதை அறிய அவளிடம் தனியாக பேசினார், சோமஸ பண்டிதர். தானவர்மனைப் பார்த்திருந்த ககனாவிடமும் அவன் மீது ஈர்ப்பு தோன்றியிருந்தது. ஆனால் அவளுக்கு ஒரு சந்தேகம் எழுந்தது.

"ராஜகுருவே! பல்லவர்களும் அஸ்வத்தாமாவின் வாரிசுகள். நாமும் அஸ்வத்தாமாவின் வாரிசுகள். அஸ்வத்தாமா வளர்த்த மகனின் வழித்தோன்றல்கள் பல்லவர்களாகத் திகழ, நாக சோமா வளர்த்த அஸ்வதனின் வாரிசுகளாக தருமநகர மன்னர்கள் திகழ்கிறோம். இருவருக்கும் சகோதர முறை அல்லவோ வருகிறது!” சந்தேகத்துடன் பண்டிதரைப் பார்த்தாள், ககனா.

“நானும் அது குறித்து யோசித்தேன். உனது கொள்ளுப்பாட்டனார் புரசங்கவர்மனுக்கு மகன் பிறக்கவில்லை. தனது தங்கை மகன் சூடாமணிவர்மனை தனக்குப் பிறகு மன்னன் ஆக்கினார். அதன்படி நீ தானவர்மனுக்கு அத்தை மகளாகத் திகழ்கிறாய். எனவே நீ அவனை தாராளமாக மணக்கலாம்." - பண்டிதர் கூறினார்.

ககனா காம்போஜ இளவரசி என்பதை அறிந்ததும் பல்லவ அரச குடும்பம் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. பண்டிதர் சிம்மவர்மனிடம் ஒரே ஒரு நிபந்தனையைத்தான் விதித்தார்.

“[1] காம்போஜ மன்னன் சூரியவர்மனுக்கு ஆண் வாரிசு இல்லை. ககனாவின் கணவன்தான் அரசனாக நாட்டை ஆள வேண்டும். எனவே, தானவர்மன் திருமணத்திற்குப் பிறகு தருமநகரத்தில்தான் ககனாவுடன் வசிக்க வேண்டும்” என்று கேட்டுக் கொண்டார். மன்னனாக காம்போஜத்தில் திகழ தானவர்மனுக்கு என்ன கசக்குமா? அண்ணன் அவனிசிம்மனுக்கு நிகராக தானும் மன்னனாகத் திகழும் வாய்ப்பை

https://telegram.me/aedahamlibrary

நழுவ விடுவானா என்ன? உடனே தனது இசைவினைத் தெரிவித்து விட்டான்.

பண்டிதர் முஹூர்த்த நேரம் இன்னும் மிகுதி இருப்பதை உணர்த்த அங்கேயே தானவர்மனும் - ககனாவும் மாலை மாற்றி, திருமணம் செய்து கொண்டனர். அரச குடும்பத்திற்கு மகிழ்ச்சி. நான்கு தம்பதிகளுடன் ஆலயத்திற்குச் சென்ற அரச குடும்பம், ஐந்து தம்பதிகளுடன் திரும்பி வந்தனர்.

திருமணம் முடிந்து அவரவர் ஜாகைக்குச் சென்றனர் திருமணத் தம்பதிகள். அப்போது விசாகன் நாசுக்காக நடந்து வந்து ஜெயவர்மனின் செவிகளில் ஏதோ கூறினான். ஜெயவர்மனின் முகம் பயங்கரமாக மாறியது.

சாயாதேவியை உரிமையுடன் நோக்கினான், ஜெயவர்மன்.

“சாயா! எனக்காகக் காத்திரு! களரியில் சிறிது பணி இருக்கிறது. இதோ வந்துவிடுகிறேன்!” என்றபடி அகன்றான்.

தேவ உடும்பர சிலையைக் குறி வைத்து மூன்று குழாம்கள் காஞ்சியில் காயை நகர்த்துகின்றனர்

பிரக்ஞுதாரா, ஜினிங்டியாண்டை மற்றும் ரணதிலகன் சீன மகாயான புத்தர்களால் அனுப்பப்பட்டுள்ளனர்.

புண்ய மித்ரா மற்றும் இலங்கை அரசனின் படை வீரர்கள் ஆகியோர், புத்தகயைக்கு தேவ உடும்பரத்தை கவர்ந்து செல்ல நினைக்கிறார்கள்.

தானவர்மனின் மனைவி காம்போஜ இளவரசியும், பண்டிதரும், தீபன் சமந்தரையனும் காம்போஜத்திற்கு தேவ உடும்பரத்தைக் கடத்த நினைக்கிறார்கள்.

பஞ்சவர் சபையினர் திரட்டிய தகவல்களைக் கண்டு மனம் நொந்தான், ஜெயவர்மன்.

அத்திமலைத் தேவனுக்கே சோதனையா?

‘உன்னைக் காப்பாற்றும் ஆற்றல் எங்களுக்கு இல்லை. உன்னை நீயே காப்பற்றிக் கொள்!' - மனதினுள் வேண்டிக் கொண்டான்.

“இனி நாம் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும்!” என்று மட்டும் கூறிவிட்டு அகன்றான், ஜெயவர்மன்.

https://telegram.me/aedahamlibrary

களரியில் ஆலோசனையை முடித்துவிட்டு, தனது அரண்மனைக்குப் புறப்பட்டான், ஜெயவர்மன், யோசனையுடன் முக்கூடல் கடிகையை நெருங்கியவனின் செவிகளில் ஒரு பெண்ணின் அலறல் விழுந்தது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

கடிகையின் வெளிநாட்டு பிரமுகர்கள் தங்கும் ஜாகைகளின் பக்கமாகத்தான் அந்த அலறல் கேட்டது. அந்தப் பகுதியை நோக்கி ஓடிச் செல்ல, ஒரு குறிப்பிட்ட ஜாகையில் ஒரு பெண் தேம்பி அழும் ஒலி கேட்டது. விரைந்தோடிச் சென்று அந்த ஜாகையின் கதவைத் தட்ட, உள்ளே தாளிடப்பட்டிருந்தது. ஆவேசத்துடன் கதவினை ஓங்கி உதைத்தான் ஜெயவர்மன். கதவு பிளந்து விழ, உள்ளே சாளுக்கிய தேசத்தின் நாட்டிய தாரகை வித்யுதா, விஜயவர்மன் என்கிற குரங்கிடம் சிக்கிய பூமாலையாக அவதிப்பட்டுக் கொண்டிருந்தாள்.

"தம்பி! நிறுத்து உனது அக்கிரமத்தை! நமது நாட்டிற்கு விருந்தாளியாக வந்திருக்கும் ஒரு பெண்ணை இப்படித்தான் நடத்துவதா?" - ஜெயவர்மன் கேட்டான்.

"நீ சென்று உனது முதலிரவை கவனி! எனக்கு புத்தி சொல்லாதே. நான் காதலித்த சாயாவை நீ மணந்து கொண்டாய்... என்னை அவளுடன் வாழாமல், இங்கே வந்து எனக்கு புத்தி கற்பிக்கிறாய்? இதற்கு உனக்கு திருமணம் எதற்கு? சாயாவை எனக்கே நீ விட்டுக் கொடுத்திருக்கலாம்! போ. போ. இந்த வித்யுதாவில் நான் சாயாவைக் காண்கிறேன்!" விஜயவர்மன் கூறியதும், வெகுண்டான் ஜெயவர்மன்.

அவனுக்கு கோபம் வருவதே மிகவும் அரிது. ஆனால் கோபம் வந்துவிட்டால் அதை விலை கொடுத்து வாங்கியே தீர வேண்டும். விஜயவர்மனின் பிடரியை பிடித்து வித்யுதாவின் மேல் பரவிக்கிடந்த அவனை இழுத்து அப்பால் தள்ளினான். நிலைகுலைந்திருந்த வித்யுதா தன்னை சுதாரித்தபடி ஜெயவர்மனை நோக்கிக் கைகளை கூப்பினாள்..

விஜயவர்மனை நையப்புடைத்தபடி அவனை கடிகையின் மைதானத்தில் ஊர்வலமாக அழைத்துச் செல்ல, அதை கடிகையைச் சேர்ந்த பலரும் பார்த்தனர்.

ஒரு கட்டத்தில் திமிறிய விஜயவர்மன், ஜெயவர்மனின் பிடியில் இருந்து நழுவி தப்பி ஓடத் துவங்கினான்.

"பார்த்துக்கொண்டே இரு, ஜெயவர்மா! இன்னும் மூன்றே நாட்களில் சாயாதேவியை விதவை ஆக்குகிறேன்!" சபதம் செய்தபடி ஓடினான்,

https://telegram.me/aedahamlibrary

விஜயவர்மன்.

“பார்ப்போம்... யார் யாரைக் கொல்கிறார்கள் என்பதை. எனது சிற்றப்பனுக்கு இனி ஒரு மகன்தான்!” ஜெயவர்மன் கொக்கரிக்க, அவன் அப்படிக் கூறியதையும் பலரும் கேட்டனர்.

அன்றிரவு –

மகள் ராஜ்ஸ்ரீயின் திருமணத்திற்கு வந்திருந்த கடம்ப மன்னன் ஸ்கந்தவர்மன் உறக்கம் பிடிக்காமல் உப்பரிகையில் காற்று வாங்கிக்கொண்டிருக்க, தருமநகர மாளிகைக்கு புறப்படும் நவரத்ன பல்லவியையும், ரணதிலகனையும் கவனித்தான். காலை திருமணத்தின் போது பார்த்திருந்த ரணதிலகன் தற்போது சாதாரணமாகத் தோன்ற, ஸ்கந்தவர்மன் புருவங்கள் உயர்ந்தன. ரணதிலகனை எங்கோ கண்டிருப்பதாகத் தோன்றியது.

[1] ஒரு முக்கிய குறிப்பு: சிம்மவர்மனின் இரண்டாவது மகன் தானவர்மன் ககனாவை மணந்து கொண்டு தருமநகரத்தில் மன்னனாக ஆட்சி செய்கிறான். இவனது ஆறாவது தலைமுறை வழித்தோன்றல்தான் பல்லவ மன்னன் நந்திவர்மன். அவனிசிம்மன் வழி வந்த பல்லவ மன்னரான இரண்டாம் பரமேஸ்வரன் வாரிசு இல்லாமல் மரணம் அடைய, தானவர்மனின் வழி வந்த நந்திவர்மனை அழைத்து வந்து பல்லவ மன்னராக கிபி 730இல் பதவி ஏற்றுக் கொள்ளச் செய்தனர்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 47. மலைகளின் சங்கமம்

ஒத்தாடை அரண்மனையின் ஒரு சயன அறை. ககனா வெட்கத்துடன் தானவர்மனின் பக்கலில் அமர்ந்தாள்.

“உப்பரிகையில் நீராடிவிட்டு ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தேன். மேற்கு வானில் ஓர் ஒளிவட்டம் தெரிந்தது. அந்த ஒளிவட்டத்தினை நோக்கி பயணித்தேன். கடைசியில் அது எனது அன்புக் கணவனின் கண்ணொளி என்பதை புரிந்து கொண்டேன்.” கவிதை நடையில் பேசினாள் ககனமயி.

தானவர்மன் மட்டும் சளைத்தவனா என்ன? கவித்துவம் பெருகியோடும் காஞ்சியைச் சேர்ந்தவன் அல்லவா? –

“பிருத்வி என்னும் பூமியை எந்த ஆண்மகன் வேண்டுமானாலும் ஆளலாம். ஆனால் ககனம் என்னும் வானத்தை ஆளும் ஒரே ஆண்மகன் நான்தான். கொடைவள்ளல் என்று வானை சொல்வார்கள். நீயும் ஒரு கொடைவள்ளல் தான். மற்ற பெண்களைக் காட்டிலும் அதீதமான அழகைக் கொண்டிருக்கிறாய். கணவனை அரசனாகவே திகழ வைக்கப் போகிறாய். மிக அழகான நாட்டிற்கு என்னை அழைத்துச் செல்லப் போகிறாய்.” - தானவர்மன் கூறினான்.

ககனமயி கலகலவென்று சிரித்தாள்.

“உங்கள் நகரத்தில் ஒரு முக்கூடல். எனது நகரத்திலும் ஒரு முக்கூடல்...

“உங்கள் நாட்டிலும் ஒரு தருமநகரம். எனது நாட்டிலும் ஒரு தருமநகரம்...

“உங்கள் நாட்டில் ஒரு யானைமலை. எங்கள் நாட்டிலும் ஒரு கஜமலை...

“உங்கள் நாட்டில் ஒரு தேவராஜன். எங்கள் நாட்டிலும் ஒரு தேவராஜன்...

“எல்லாமே ஒற்றுமையாக இருக்க, நம்மை இணைய வைத்ததும் அந்த தேவராஜன்தான்!” ககனா கூற, தானவர்மன் தலையசைத்தான்.

“ஆம் ககனா! தேவராஜன் சன்னிதியில்தான் நாம் இணைந்தோம். எனக்கும் அப்படிதான் தோன்றுகிறது. எனது சகோதரர்களை விட நான் பாக்கியசாலி!” தானவர்மன் கூறினான்.

“நான் இன்று மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன்!” ககனா கூறினாள்.

https://telegram.me/aedahamlibrary

மனதினுள் சோமஸ பண்டிதர் இவளிடம் கூறியிருந்த இரகசிய திட்டத்தை எப்படிச் செயல்படுத்தலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தாள்.

“நாம் இப்படியே பேசிக்கொண்டே இருக்கப் போகிறோமா?” கேட்டபடி அவளை தனது மார்பினில் சரித்தான் தானவர்மன்.

"தருமபுரத்து மன்னரே! எனக்கு நீங்கள் ஒரு வாக்குறுதியை தர வேண்டும்...” சரியான தருணம் பார்த்து தனது ஆயுதத்தை பிரயோகித்தாள். விண்ணை அளக்கத் துடித்துக் கொண்டிருந்த தானவர்மன், பொறுமையின்றி அவளைப் பார்த்தான்.

“என்ன வேண்டும் ககனா?”

“அழகான நாடு, பேரழகு கொண்ட மனைவி. கம்பீரமான மன்னன் என்கிற பட்டம் எல்லாம் உங்களுக்கு உரித்தாகிவிட்டன. இன்னும் ஒன்றே ஒன்றுதான் பாக்கி. அதுவும் தங்களுக்கு உரித்தாகி விட்டால்... உலகத்தின் சக்கரவர்த்தி நீங்கள் தான். அதையும் தாங்கள் பெற வேண்டும்." - ககனா கூறினாள்.

“என்ன அது ககனா?” பொறுமை இன்றி அவளைப் பார்த்தான்.

“தேவ உடும்பர தேவராஜனின் பிரதிமை. எல்லா வளங்களையும் வழங்கும் அந்த பிரதிமையை நம்முடன் தருமநகரம் எடுத்துப் போகலாமா...? அங்கே நமது தேவராஜா மார்க்கத்தின் மூல மூர்த்தியாக ஐராவத மலையின் மீது நின்று அவன் நமக்கு வளங்களை வாரி வழங்கட்டும்!” ககனா வேண்டினாள்

தனது அவசரத்தையும் மறந்து அதிர்ந்து போய் அவளைப் பார்த்தான், தானவர்மன். சற்றே சிந்தித்தவன், பிறகு அவளை நோக்கி நகர்ந்தான்.

அந்த அறையில் சங்கம உற்சவம் தொடங்கி இருப்பதை அறிகிறோம். அதனால் தருமநகர தேவராஜன் மார்க்கத்துடன் அத்திமலைத் தேவராஜனை சங்கமம் செய்ய தானவர்மன் ககனாவிடம் இசைவு தெரிவித்திருக்க வேண்டும் என்றே தோன்றுகிறது.

*****

https://telegram.me/aedahamlibrary

# 48. உடைந்து போன நவரத்னம்

காஞ்சி தருமநகரத்தில் ஆதி சரஸ்வதி கோயிலின் அருகே ஒரு மாளிகையை வழங்கியிருந்தது அரண்மனை. அங்கேதான் நவரத்ன பல்லவிக்கும் ரணதிலகனுக்கும் முதலிரவு நடக்க இருந்தது. முதலிரவு என்பதால், அன்று மாலை நோக்கு வசிய பந்தனத்தில் இருந்து நவரத்னாவை விடுவித்திருந்தாள், பிரக்ஞுதாரா.

“எதற்கு தாயே, ரத்னாவின் வசியத்தை விடுவித்து விட்டீர்கள்?” ரணதிலகன் கேட்டான்.

“இன்பம் அனுபவிக்க தம்பதியர் இருவரும் நல்ல மனநிலையில் இருக்க வேண்டும், காடவா! ஒருவன் சம்போக மனநிலையிலும், மற்றொருவர் வசிய நிலையிலும் இருந்தால் அங்கே இன்பம் தோன்றாது!”

பிரக்ஞுதாராவும், ரணதிலகனும் நவரத்ன பல்லவி நந்தவனத்தில் இருப்பதை அறியாமல் அந்த அறையில் பேசிக்கொண்டிருக்க, அந்த அறையின் கீழே பூத்திருந்த பவழ மல்லிகளைச் சேகரிப்பதற்காக வந்திருந்த நவரத்னா, அவர்களது உரையாடலைக் கேட்டு திகைத்து நின்றாள். என்னை வசியத்தில் கட்டுப்படுத்தியா ரணதிலகன் திருமணம் செய்து கொண்டிருக்கிறான்?

"எச்சரிக்கை ரணதிலகா! புது மனைவி கிடைத்த மோகத்தில் நமது பணியை மறந்துவிடப் போகிறாய். ஜினிங் பொறுமையை இழந்துகொண்டே இருக்கிறான். இந்த நாட்டின் வெப்பத்தை அவனால் பொறுக்க இயலவில்லை. மீண்டும் ஜின்ஜியாங் செல்ல வேண்டும் என்று துடிக்கிறான். அதற்குள் நாம் தேவ உடும்பர அத்திமலையான் சிலையை சீனத்துக்கு கவர்ந்து செல்ல வேண்டும். அதற்காகத்தானே ஸ்வேத ஹூனனான உன்னை பல்லவ மாப்பிள்ளையாக மாற்றியிருக்கிறோம். உடனே காரியத்தில் இறங்க வேண்டும். அரச குடும்பத்தையே நோக்கு வர்மத்திற்கு அடிமையாக்கி அவர்கள் உதவியுடனேயே தேவ உடும்பர சிலையை கடத்துகிறோம்! தருமநகரத்தை சீதனமாகப் பெற்று இங்குள்ள ஆதிசரஸ்வதி கோவிலை [1] நமது மகாயான தாராதேவி கோவிலாக மாற்றுவோம். தருமநகரத்தில் உள்ள எழுமால் கோயில்களை [2] தருமநகரத்தில் இருந்து அப்புறப்படுத்துவோம்!

தன்னைச் சுற்றி பின்னப்பட்ட சதிவலையை உடனே புரிந்து கொண்டாள், நவரத்ன பல்லவி… மனம் சுக்கு நூறாக உடைந்தது.

https://telegram.me/aedahamlibrary

அண்ணன் ஜெயவர்மன் ஆயிரம் முறை எச்சரித்தும் இவள் அவனது பேச்சை அலட்சியம் செய்ததால்தானே நாட்டிற்கும், தெய்வத்திற்கும் அல்லவா இவளால் தீங்கு நேருகிறது. தன் மீதே வெறுப்பு கொண்டவள், தன்னைச் சுற்றிலும் நோக்கினாள். நல்லவேளையாக, பல்லவ அரண்மனையின் காவல் வீரர்கள் இருவர் அங்கே நிறுத்தப்பட்டிருந்தனர். அவர்களது குதிரைகள் நந்தவனத்தில்தான் நின்றிருந்தன. தனது திருமணத்திற்காக [3] சீதன வெள்ளாட்டிகளாக அளிக்கப்பட்டிருந்த விருசோதரன், சந்திராத்லி, கம்பீரன் மற்றும் ரவிவர்மனை அவசரமாகத் திரட்டிக்கொண்டு புறப்பட்டாள். நவரத்னாவையும், வெள்ளாட்டிகளையும் சுமந்துகொண்டு ஐந்து புரவிகள் கிழக்கே விரைந்தன.

தான் செய்த தவறுகளுக்கு தானே பிராயசித்தங்களைத் தேட வேண்டும். குதிரையை செலுத்திக்கொண்டு புயல் போல அத்தியூருக்குச் சென்று கொண்டிருந்தாள், நவரத்னா...

நவரத்னாதேவி அங்கிருந்து புறப்பட்டுச் சென்றதை அறியாமல் பிரக்ஞுதாராவும் ரணதிலகனும் இன்னும் பேசிக்கொண்டிருக்க, புதுமணத் தம்பதிகளின் முதலிரவுக்கு இடைஞ்சலாக இருக்கக் கூடாது என்பதற்காக உப்பரிகையில் உலாவிக்கொண்டிருந்த ஜினிங், நவரத்னா அவசரமாக புறப்பட்டுச் செல்வதை பார்த்து பரபரப்புடன் பிரக்ஞுதாராவிடம் கூறுவதற்காக விரைந்தான்.

[1] காமாட்சி அம்மன் ஆலயத்தை சுற்றியுள்ள பகுதிதான் அன்றைய தருமநகரம். ஆதி சரஸ்வதி கோயிலாக இருந்த ஆலயத்தை களப்பிரர் தாராதேவி கோயிலாக மாற்ற, காஞ்சிக்கு வந்த ஆதிசங்கரர், காமாட்சிக்கு புதிய கோவிலை கட்டி தாராதேவி என்று மாற்றப்பட்ட ஆதி சரஸ்வதியை ஆதி காமாட்சியாக பிரதிஷ்டை செய்தார். தற்போது காமாட்சி அம்மன் ஆலயத்தின் பின்பாக ஆதி சரஸ்வதி என்கிற ஆதி காமாட்சி கோயில் உள்ளது. –

[2] அத்திமலைத் தேவன் முதல் பாகத்தில் எழுமால் கோவில்களின் பட்டியலையும் அவை தற்போது உள்ள இடங்களையும் குறிப்பிட்டுள்ளேன் (பக்கம் 537-38).

[3] சீதன வெள்ளாட்டிகள்: சீதனமாக அளிக்கப்பட்ட பணியாளர்கள்

*****

https://telegram.me/aedahamlibrary

# 49. ஓலையில் அதிர வைக்கும் சேதி

புண்ய மித்ரா புத்த கயை தலைமைபீடத்திற்குத் தகவலை தயார் செய்தார்.

‘தலைமை பிக்கு சம்பூர்ண மித்ராவுக்கு,

புண்ய மித்ரா எழுதியது. பிரக்ஞுதாராவும், ஜினிங் டி யாண்டையும் தேவ உடும்பரத்தை நெருங்கிவிட்டனர். காடவன் என்னும் ஸ்வேத ஹூனனை ரணதிலக ஆதித்யபதி என்னும் பௌத்தபரம் அரசனாக நம்ப வைத்து பல்லவ இளவரசி நவரத்னா பல்லவியை அவனுக்கு திருமணம் செய்வித்திருக்கிறார்கள். இளவரசியின் மூலம் தருமநகரம் என்கிற பகுதியை சீதனமாக பெற்றிருக்கிறார்கள். தேவ உடும்பரத்தை கைப்பற்ற வேண்டும் என்பதில் குறியாக இருக்கிறாள் பிரக்ஞுதாரா. சித்தினியான அவளுக்கு, அஷ்டமா சித்திகளை அளிக்கக்கூடிய தேவ உடும்பரம் கிடைத்தால் மிகவும் ஆபத்து. தனது சுயநலத்திற்காக அதனை களவாட விரும்பி, அரசர் சிம்மவர்மனையே தனது வசியத்தில் வைத்திருக்கிறாள். இந்த நிலையில், நமது தெரவாட தருமத்திற்காக நாம் அந்த தேவ உடும்பர பிரதிமையை உடனே கைப்பற்றுவது அவசியமாகிறது. இலங்கை மன்னனின் ஆட்கள் நமக்கு உதவியாக இருந்தாலும், நம்மால் ஆலயத்தினுள் பிரவேசிக்க முடியவில்லை.

இந்நிலையில் ஒரு நல்ல தகவல் கிடைத்துள்ளது. அரச குடும்பத்தைச் சேர்ந்த ஒரு இளவரசன் நமது வலையில் விழுந்திருக்கிறார். தேவ உடும்பரத்தை புத்த கயைக்கு கடத்த அவர் உதவி செய்ய முன்வந்திருக்கிறார். அவர் மூலம் நமது திட்டத்தை செயல்படுத்தி, விரைவில் தேவ உடும்பர சிலையுடன் தேஜோ மித்ரா, புத்த கயைக்கு வருவார்.

தேவ உடும்பர சிலையைக் கடத்தி முக்கூடல் கடிகையின் புத்த தத்துவ துறையில் பதுக்கப்படும். பிறகு காஞ்சியில் பதற்றம் அடங்கிய பிறகு, ரகசியமாக மாவிலக்கை துறைமுகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு புத்தகயைக்கு அனுப்பப்படும்.'

தகவலை சுவடியில் பதித்து அபயகிரியை அழைத்தார்.

“அபயகிரி! இதனை பத்திரமாக தலைமை பிக்கு சம்பூர்ண மித்ராவிடம் தந்துவிடு… அவர் அளிக்கும் ஓலையை வாங்கி வா!” புண்ய மித்ரா கூற, தலையசைத்த அபயகிரி புத்த கயைக்கு புறப்பட்டான்.

https://telegram.me/aedahamlibrary

தங்கள் திட்டத்தை புத்த கயைக்கு அனுப்பிவிட்ட நிம்மதியில் தனது இருக்கையில் சாய்ந்தார், புண்ய மித்ரா.

அபயகிரி பல்லவ எல்லையைக் கடந்திருக்க மாட்டான். வழியில் மூன்று பேர் ஒரு வயதான வைணவரை சூழ்ந்து கொண்டு கத்திகளை நீட்டி வழிப்பறி செய்து கொண்டிருந்தனர். அவர் அணிந்திருந்த வைரச் சங்கு மற்றும் சக்கரத் தோடுகளையும், ஸ்வர்ண ஆபரணங்களையும் பிடுங்க முயற்சித்துக் கொண்டிருக்க, அந்த வைணவர் அலறிக்கொண்டிருந்தார்.

“அய்யா! என்னைக் காப்பாற்றுங்கள்!” புரவியில் வந்த அபயகிரியை பார்த்து அந்த வைணவர் கதறினார்.

அபயகிரி என்று பெயரை வைத்து கொண்டு அபயம் கொடுக்காமல் சென்றால் எப்படி? தனது வாளை உருவிக்கொண்டு அந்த வழிப்பறிக் கள்வர்களை எதிர்கொண்டான், அபயகிரி. அவனது வாள்வீச்சினால் திணறத் தொடங்கிய அந்த மூன்று கள்வர்களும், தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடிச்சென்றனர்.

வைணவருக்கு ஆறுதல் சொல்வதற்காக திரும்பிய அபயகிரி, அவரைக் காணாமல் திகைத்தான். அச்சத்தினால் அவர் ஓடிச்சென்று இருக்கக்கூடும் என்று எண்ணியபடி தனது புரவியை நோக்கிச் சென்றான். மேலும் அவனுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. குதிரையில் அவன் வைத்திருந்த அந்தத் துணிப்பையை இப்போது காணவில்லை. அதில் தானே புண்ய மித்ரா கொடுத்திருந்த சுவடியை வைத்திருந்தான்.

வழிப்பறி செய்த அந்த மூவரும், விஸ்வக்ஸேஷனன், விசாகவர்மன் மற்றும் முத்ரன். வழிப்பறி செய்யப்பட்ட வைணவர், வரதநாராயண நம்பி என்பதை அபயகிரி எப்படி அறிவான்? ஓலையைப் பறிக்க பஞ்சமர் சேனை செய்த சூழ்ச்சிதானே இது.

ஓலையைப் படித்த ஜெயவர்மன் திகைத்தான். புண்ய மித்ராவுக்கு உதவுகிறேன் என்று சொன்ன அந்த பல்லவ இளவரசன் யார்? ஜெயவர்மன் யோசித்துக்கொண்டே இருந்தான்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 50. மறுபிறவியை நோக்கி...

நடுநிசி!
காஞ்சி அடங்கிவிட்டது! ஜெயவர்மன் மட்டும் தனது மாளிகையில் உறங்காமல் உலாவிக்கொண்டிருந்தான்.

"உறங்கப் போகவில்லையா?" சாயா அவனைத் திகைப்புடன் பார்த்தாள்.

அவளைப் பரிவுடன் நோக்கினான், ஜெயவர்மன். "இன்று நான் உறங்கினேன் என்றால் காஞ்சி நிரந்தரமாக உறங்கிவிடும். நீ உறங்கச் செல்! சாயா!" என்று சொல்ல, தனது கண்களை மூடி உறக்கத்தில் ஆழ்ந்தாள், சாயாதேவி. தனது ஆருயிர் கணவன் ஜெயவர்மனை தான் காண்பது அதுவே கடைசி முறை என்பதை தெரிந்திருந்தால் நிச்சயம் உறங்கச் சென்றிருக்கமாட்டாள்.

ஜெயவர்மன் பதற்றத்துடன் அரண்மனையின் வாயிலுக்கும், தனது சயன அறைக்குமாக நடந்து கொண்டிருந்தான்.

விசாகன் ஓடிவந்தான். "இளவரசே! எல்லா ஏற்பாடுகளும் தயார். நீங்கள் இப்போது வந்தால் சரியாக இருக்கும்!" விசாகன் சொல்ல, ஒருமுறை தனது அறைக்குள் சென்று உறங்கிக்கொண்டிருந்த சாயாதேவியை ஆதுரத்துடன் பார்த்தான். அவளது தலையை வருடிக் கொடுத்தவன், பிறகு அரண்மனை வாயிலை நோக்கி நடந்தான். தனது மனைவி சாயாவை தான் பார்ப்பது அதுவே கடைசி முறை என்று அவனது உள்ளுணர்வு எச்சரித்துவிட்டதோ என்னவோ...

அரண்மனையின் வாயிலில் பஞ்சவர் சபையின் மற்ற உறுப்பினர்கள் இவனுக்காகக் காத்திருந்தார்கள்.

"ஆலயத்தினுள் நடப்பது எதுவாக இருந்தாலும் அரண்மனைக்கோ, மக்களுக்கோ தெரியக் கூடாது. அத்திமலையானுக்கே ஆபத்து என்றால், அவன் மீதுள்ள நம்பிக்கை குறைந்துவிடும். எதிரிகளின் திட்டங்களை முறியடித்து அவர்களை இரகசியமாக காஞ்சியில் இருந்து அப்புறப்படுத்தப் போகிறோம். எனவேதான் இந்த சூழ்ச்சிகளைப் பற்றி மன்னருக்கோ, தலைமை அமைச்சருக்கோ தெரிவிக்காமல் இருக்கிறோம்..." ஜெயவர்மன் கூறினான்.

"ஒருபுறம் ரணதிலகனும், பிரக்ஞுதாராவும் தேவ உடும்பர தேவராஜனை

https://telegram.me/aedahamlibrary

குறி வைத்துள்ளனர். மறுபுறம், எனது அண்ணன் தானவர்மனும், காம்போஜ இளவரசி ககனாவும் தங்கள் ஆட்களோடு தேவ உடும்பரத்தை அபகரிக்கத் திட்டமிடுகின்றனர். புத்த கயையும் இலங்கையும் சேர்ந்து தங்கள் பங்குக்கு சதி செய்து தேவ உடும்பரத்தை அபகரிக்க ஆட்களை அனுப்பி உள்ளது. அவர்களுக்கும் ஒரு பல்லவ இளவரசனின் ஆதரவு உள்ளது. இவர்கள் அனைவரிடம் இருந்து அத்திமலைத் தேவனை காப்போம் என்கிற உறுதியை காஞ்சிக்கு தருகிறேன்" என்று கூறிய ஜெயவர்மன், பஞ்சவர் சபை உறுப்பினர்களை நோக்கினான்.

"என்ன நடந்தாலும் சரி! யாரும் என்னை பின் தொடரக் கூடாது. உங்கள் நன்மைக்காகவே சொல்லுகிறேன்!" என்றவன் தனது குதிரையை அத்திமலைக்குச் செலுத்தினான்.

தாங்கள் ஜெயவர்மனை காண்பது அதுவே கடைசி முறை என்பதை அறியாமல் அனைவரும் அவன் போவதையே பார்த்துக்கொண்டிருந்தனர்.

அத்திமலையை அடைந்த ஜெயவர்மன், குதிரையில் இருந்து கீழே இறங்கி, தெற்கு புற மதிலை ஒட்டிய மரம் ஒன்றில் கிடுகிடுவென்று ஏறி மதிலைக் கடந்து ஆலயத்தினுள் இறங்கினான்.

ஆலய பிராகாரத்தினை ஒருமுறை சுற்றி வந்தான்.. பொற்றாமரைக் குளத்தருகே சென்று தனது கைகளையும், கால்களையும் சுத்தம் செய்து கொண்டான். அத்திமலையானின் சந்நிதிக்குள் நுழையப் போகிறாமே. சுத்தத்துடன் இருக்க வேண்டுமே. குளத்தினுள் இருந்து தன்னைச் சுற்றி நோக்கியவன், திகைத்தான். அங்கே இருந்த ரத்ன மண்டபத்தில் ஏதோ ஊசலாடுவது போன்று உள்ளதே! திகைப்புடன் மண்டபத்தை நோக்கிச் சென்றான். அங்கிருந்த மண்டபத்தின் கூரையில் இருந்த ஊஞ்சல் கொக்கியில் கயிறு ஒன்று தொங்க, அதன் சுருக்கில் ஒரு பெண் ஊசலாடிக் கொண்டிருந்தாள்.

அருகே ஓடிச்சென்று பார்த்தான்.

அதிர்ச்சியில் சிலையாக நின்றான்.

அவனது அருமை தங்கை நவரத்ன பல்லவிதான் தூக்கில் ஊசலாடிக்கொண்டு இருந்தாள்.

துடிதுடித்துக் கதறினான் ஜெயவர்மன்.

https://telegram.me/aedahamlibrary

“என்ன காரியம் செய்தாய்? அத்திமலைத் தேவன் உன்னைக் காக்கத் தவறிவிட்டானே. போதாத குறைக்கு, தந்தை, மற்றும் நான்கு அண்ணன்கள் இருந்தும் உன்னை எங்களால் காப்பாற்ற முடியவில்லையே. இந்த முடிவினை ஏன் எடுத்தாய்?” அவளது கையைப் பற்றி தனது நெற்றியில் பதித்து அவன் கதறி அழ, ரத்னாவின் கரத்தில் இருந்த சுவடி ஒன்று அவனது நாசியை தாக்கியது. கண்களில் பொங்கிய கண்ணீரைத் துடைத்தபடி சுவடியை வாசித்தான், ஜெயவர்மன்,

'அண்ணா! இந்த முடிவை எடுத்ததற்கு என்னை முதலில் மன்னித்துவிடு. நமது பல்லவத்திற்கும், அத்திமலைத் தேவனுக்கும் கேடு விளைவிக்கும் ஒரு கொள்ளையனுக்கு மனைவியாகத் திகழ்கிறேன். நீ அன்றே என்னை எச்சரித்தாய். நான்தான் கேட்கவில்லை. கேட்கும் நிலையிலும் இல்லை. என்னை வசியப்படுத்தி ரணதிலகனின் மனைவியாக வைத்திருக்கிறாள். இது எல்லாம் பிரக்ஞுதாராவின் திட்டம்தான். அதனை அறியாமல் நான் காதல் வலையில் விழுந்துவிட்டேன். அதற்கு எனக்கு நானே தரும் தண்டனை இது. இந்த சுவடியை மிகவும் பத்திரமாக வைத்துக்கொள்... நான் செய்த பிராயசித்தங்களின் ஆதாரம். காலம் வரும் போது இது உனக்கு கை கொடுக்கும். அடுத்த பிறவியிலும் உனக்கே நான் தங்கையாகப் பிறக்க வேண்டும்!'

என்ன பிராயசித்தங்களை செய்திருக்கிறாள்? அந்த சுவடிகளை வாசிக்க முற்பட்டவன் சட்டென்று அந்த எண்ணத்தைக் கைவிட்டான்.

அவனது வாய் உலர்ந்து போனது. அதிர்ச்சியின் உச்சத்தில் திகழ்ந்தான். அந்த ஓலை குறிப்பிட்டிருந்த தகவல்கள் அவனை உறைந்து போகச் செய்தன.

மூடியிருந்த ஆலயத்தினுள் நவரத்னா எப்படி உள்ளே வந்தாள்? ஒருவேளை தற்கொலை செய்யும் எண்ணத்துடன் ஆலயக் கதவுகள் சாற்றப்படுவதற்கு முன்பே வந்து இங்கே பதுங்கி, ஊரடங்கியதும் தன்னை மாய்த்துக்கொண்டிருக்க வேண்டும்.

அவன் அதிர்ச்சியில் நின்றிருந்த அதே சமயம், ஆலயத்தின் கிழக்கு வாசலில் வந்து நின்றனர் இருவர். ஆலயத்தின் வாயிலில் நின்ற இரு காவலர்களும் தங்கள் முன்பாக இருவர் வந்து நிற்பதைக் கண்டு சந்தேகத்துடன் அவர்களை நோக்கி நடக்க, அங்கு நின்ற பிரக்ஞுதாராவும், ஜினிங்கும் அவர்களது கண்களை குறிவைக்க, தங்கள் நினைவுகளை இழந்தனர் காவலர்கள். மறுபேச்சில்லாமல் ஆலயக் கதவுகளைத் திறந்தனர்.

https://telegram.me/aedahamlibrary

தங்கை வரைந்திருந்த ஓலையை வாசித்து அதிர்ச்சியுடன் பொற்றாமரைக் குளத்தருகே நின்றிருந்த ஜெயவர்மன், ஆலயத்தின் கதவுகள் திறக்கப்படும் ஒலியைக் கேட்டு இருளில் நகர்ந்து மறைந்து கொண்டான். அங்கிருந்து ஆலய வாயிலை கவனித்தான்.

பிரக்ஞுதாராவும், ஜினிங்கும்தான் உள்ளே நுழைந்தனர். ஜெயவர்மன் எச்சரிக்கையுடன் அவர்களை கவனித்தான். அவர்கள் இருவரும் குளக்கரையின் அருகே பேசியபடி நின்றார்கள்.

பொற்றாமரைக் குளத்தருகே வந்த அவர்கள் இருவரும் பேசத் தொடங்கினார்கள்.

“ஜினிங்! நிச்சயம் ஜெயவர்மன் இங்கே வருவான். அவனை நோக்கு பார்வையால் வசியம் செய்து அவன் மூலமாகவே சிலையைக் கடத்துவோம். அத்திமலைத் தேவனை காப்பதற்கு அவன் திட்டங்களைத் தீட்டி வருகிறான். அவன் அதனை செயல்படுத்த இன்று நள்ளிரவு ஆலயத்திற்கு வரப்போவதாக எனக்கு தகவல் வந்தது. ரணதிலகன் நவரத்னாவைத் தேடி ஒத்தாடை அரண்மனைக்குச் சென்றிருக்கிறான்! நாம் ஒருமுறை பிராகாரத்தை சுற்றிப் பார்த்து எங்காவது ஜெயவர்மன் தென்படுகிறானா என்று பார்ப்போம்!” – பிரக்ஞுதாரா கூறினாள்.

“எப்படியோ, விடிவதற்குள் அந்த சிலை நமக்குக் கிடைக்க வேண்டும். எனக்கு இந்த நாட்டில் இருக்க முடியவில்லை. எப்போது ஜின்ஜியாங்கிற்கு போவோம் என்று துடிக்கிறேன்! இன்றே நமது திட்டம் முடிய வேண்டும்!” ஜினிங் சொல்ல, பிரக்ஞுதாரா தலையசைத்தாள்.

"எல்லாம் நல்லபடியாக நடக்கும். வா... பிராகாரங்களில் ஜெயவர்மனைத் தேடுவோம்!”

அவர்கள் இருவரும் தெற்கு பிராகாரத்தை நோக்கி நடக்க, அவர்கள் நடவடிக்கைகளை கண்காணிக்க நினைத்தான் ஜெயவர்மன். அவர்கள் பின்பாகவே, இரகசியமாக நடந்தான். ஒரு தூணின் பின்பாக நின்று அவர்களை நோட்டம்விட, நடந்து கொண்டிருந்த பிரக்ஞுதாரா மற்றும் ஜினிங் திடீர் என்று அசையாமல் நின்றுவிட்டனர்.

எதிரே வீரகொசுவன் வாளை வைத்துக்கொண்டு உக்கிர நடனம் ஆடியபடி வந்தான்.

https://telegram.me/aedahamlibrary

பிரக்ஞுதாராவைக் கண்டதும் வீரகொசுவன் வெறியாட்டம் ஆடத்துவங்கி, அவளை வெறித்துப் பார்க்க, அந்த நொடியில் அவனை தனது வசப்படுத்தினாள் பிரக்ஞுதாரா. அவளது வசியத்தினால் கட்டுப்பட்ட வீரகொசுவன் தனது வாளினால் தன்னையே வெட்டிக்கொண்டு நிலத்தில் சாய்ந்தான்.

இந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்த ஜெயவர்மன் பதைபதைத்தான்.

பிரக்ஞுதாராவும், ஜினிங்கும் தொடர்ந்து நடக்க, அவர்கள் சற்று தூரம் செல்லட்டும் என்று காத்திருந்தான்.

அப்போது இலங்கை மன்னன் திஸ்ஸன் அனுப்பிய அபயகிரியும், விஜயவர்மனும் மதிலைக் கடந்து ஆலயத்தினுள் இறங்குவதைக் கண்டு திகைத்துப் போனான், ஜெயவர்மன். பல்லவ இளவரசன் ஒருவன் தங்களுக்கு உதவ வாக்களித்து இருப்பதாக புண்ய மித்ரா தனது ஓலையில் குறிப்பிட்டிருந்தது விஜயவர்மனைத் தான் என்று உடனே புரிந்து கொண்டான்.

இது என்ன அநியாயம்? பல்லவத்தை வாழ வைக்கும் அத்திமலைத் தேவனை பல்லவ அரச குடும்பமே காட்டிக் கொடுப்பதா?

தானவர்மன் தேவ உடும்பர பிரதிமையை தன்னுடன் காம்போஜத்திற்கு எடுத்துச் செல்ல நினைக்கிறான்…

விஜயவர்மனோ புத்த கயைக்கு தேவ உடும்பர தேவராஜனை அனுப்ப, புண்ய மித்ராவுடன் சதி செய்கிறான்…

மனம் வெதும்பினான், ஜெயவர்மன். அரச வாழ்கையின் மீதே அவனுக்கு வெறுப்பு ஏற்பட்டது.

ஜினிங்கின் உள்ளுணர்வு அவனை எச்சரிக்க அவன் தற்செயலாகத் திரும்பிப் பார்க்க, அவனது கண்களில் அபயகிரியும், விஜயவர்மனும் பட்டனர். பிரக்ஞுதாராவை உடனே அவன் எச்சரிக்க, அவர்கள் விஜயவர்மனை நோக்கி விரைந்து வந்தார்கள்.

“தெரவாட இலங்கையின் அபயகிரியா? விஜயவர்மனை கைக்குள் அடக்கமாக வைத்து தேவ உடும்பரத்தை கைப்பற்ற வந்திருக்கின்றீரா? நல்ல வேடிக்கைதான். மகாயானம் ஜெயவர்மனை நம்பி இருக்க, தெரவாடம் அவன் தம்பி விஜயவர்மனை நாடுகிறதா?”

https://telegram.me/aedahamlibrary

இடி இடியென பிரக்ஞுதாரா சிரிக்க, அவளது குரல் பிராகாரத்தின் மதில் சுவர்களில் மோதி ஜெயவர்மனுக்கு பயங்கரமாகக் கேட்டது. இவள் பெண்ணா அல்லது இட்சிணியா? என்பது போன்று அவளை கவனித்தான்...

இனி அங்கே என்ன நடைபெறப் போகிறது என்பதை ஜெயவர்மன் யூகித்தான். தனது தம்பியை அவர்கள் கொன்றுவிடுவார்கள். தன்னையே அவன் வெட்டிக் கொண்டு பிணமாக விழச் செய்வார்கள். வேறு வழியில்லை. அவனைக் காப்பாற்ற வேண்டும். அதே சமயம் பிரக்ஞுதாரா மற்றும் அந்த ஜினிங்கின் கண் பார்வையை தவிர்க்க வேண்டும். தன்னிடம் இருந்த கரிய துணியால் கண்களைக் கட்டிக்கொண்டு, தம்பியை காப்பதற்காக தனது மறைவிடத்திலிருந்து அவர்களிடம் சென்று நின்றான்.

அவனைப் பார்த்ததும் பிரக்ஞுதாராவின் முகம் மலர்ந்தது.

“வந்துவிட்டாயா? ஜெயவர்மா? உனக்காகத்தான் நான் காத்திருக்கிறேன். அதற்குள் உனது தம்பி வந்து எங்களுக்கு இடைஞ்சலைத் தருகிறான்! கண்களை கரிய துணியால் கட்டியிருக்கிறாய் போலும்! பரவாயில்லையே! எச்சரிக்கையானவன் தான்..." சிரித்த பிரக்ஞுதாரா, ஜினிங்கை நோக்கி சமிக்ஞை செய்ய, அவன் தனது கண்களை இடுக்கியபடி விஜயவர்மனின் குரல்வளையை வெறிக்க, ஆரம்பித்தான்.

யாரோ தனது குரல்வளையை நசுக்குவது போன்று விஜயவர்மன் துடிதுடிக்க, அவன் அலறினான். “அண்ணா! என்னைக் காப்பாற்று..." என்று அவன் இறைஞ்ச...

பிரக்ஞுதாரா தனது கண்கட்டினை களைவதற்காக செய்யும் சூழ்ச்சி என்பதாக நினைத்து ஜெயவர்மன், பேசாமல் நின்றான்.

ஆனால் விஜயவர்மனின் திணறல் அதிகரிக்க, திடீரென்று அவனது குரல் நின்று போனது. அந்த பிராகாரத்தில் மௌனம் நிலவியது. திகைத்துப் போன ஜெயவர்மன், வேறு வழியின்றி, தனது கண்களைக் கட்டியிருந்த கருப்புத்துணியை அவிழ்த்தான். குனிந்து பார்த்தவன் திகைத்தான். கீழே அபயகிரியும், விஜயவர்மனும் பிணமாகக் கிடந்தனர். ஒருவரையொருவர் வெட்டிச் சாய்த்துக் கொண்டிருந்தனர்.

“ஜெயவர்மா! எங்களுக்கு தேவ உடும்பர சிலையை கொடு. நாங்கள் எங்கள் வழியே போகிறோம். பல்லவத்திற்கு இனி தொல்லைகளை

https://telegram.me/aedahamlibrary

கொடுக்கமாட்டோம்!” பிரக்ஞுதாரா கூறினாள்.

‘கொடுத்த தொல்லைகள் போதாதா என்ன?' தனக்குள் கூறியவன் நிமிர்ந்து பார்த்தான். தனது அகன்ற கண்களால் இவனுக்கு வலை விரித்துக்கொண்டிருந்தாள், பிரக்ஞுதாரா.

அவ்வளவுதான் –

சட்டென்று திரும்பிய ஜெயவர்மன், ஆலய வாசலை நோக்கித் தலைதெறிக்க ஓடினான். தெற்கு பிராகாரத்தை கடந்து, வாயிலை மின்னல் வேகத்தில் அடைந்து, திறந்திருந்த ஆலயக்கதவுகள் வழியாக ஐயம்படுகையை நோக்கி ஓடினான். காவலர்கள் இருவரும் வசியத்தில் பிரம்மை பிடித்தவர்களாக சிலைகளைப் போன்று நின்றிருந்தனர்...

“ஜினிங்! பிடி அவனை... விடாதே!” பிரக்ஞுதாரா அலற, ஜினிங் ஜெயவர்மனை விரட்டத் தொடங்கினான். ஜெயவர்மன் ஐயம்படுகையை நோக்கி தொடர்ந்து ஓடினான். ஜினிங் விடாமல் அவனைத் துரத்த, சட்டென்று வழியில் ஒரு வீட்டின் நந்தவனத்தில் குதித்து ஜினிங்கின் பார்வையில் இருந்து பதுங்கினான். ஜினிங் அந்த வீட்டைக் கடந்து போக, சற்று அப்படியே அமர்ந்த நிலையில் சுவாசம் வாங்கியவன், அந்த வீட்டின் வாயிலைக் கவனித்தான்.

அட! இது அனந்த பட்டரின் குடில் அல்லவா! சரியான இடத்திற்குத்தான் வந்திருக்கிறோம்... எழுந்து சென்று குடிலின் கதவைத் தட்டினான்.

“பட்டரே... பட்டரே.” அவசரமாக அழைத்தான். அதே சமயம், தனது குரல் அக்கம்பக்கம் கேட்காத வகையில் குரலையும் தாழ்த்தினான். ஜினிங் காதில் விழக்கூடாது என்கிற எச்சரிக்கையில் அவன் குரலை தாழ்த்தி இருந்தான்.

அவனை சிரமப்படுத்தாமல், உடனேயே அந்த குடிலின் கதவு திறந்தது. கையில் விளக்கை ஏந்தியபடி நின்றிருந்தாள் அஞ்சிலை அணங்கு, அனந்த பட்டரின் மகள்... இளவரசர் ஜெயவர்மனைக் கண்டதும் அவள் கண்கள் வியப்பால் விரிந்தன.

"பட்டர் எங்கே?” ஜெயவர்மன் கேட்டான்.

“உறங்குகிறார்!” அஞ்சிலை கூறினாள்.

"உறங்கட்டும்... பரவாயில்லை!” என்றவன் தனது மேலாடையினில்

https://telegram.me/aedahamlibrary

பதுக்கியிருந்த நவரத்ன பல்லவியின் சுவடிகளை எடுத்தான்.

“அஞ்சிலை! நாட்டின் பொக்கிஷத்தைப் பற்றிய தகவல் இது. யாரிடமும் இதனைத் தராதே. பல்லவ மன்னன் ஒருவன் வந்து உன்னிடம் கேட்பான். அப்போது அவனிடம் இதைக் கொடு. மற்றபடி நீயாக இதனை யாருக்கும் தரக்கூடாது!” என்று சொன்னவன், அவளை ஏறிட்டான்.

"அத்திமலையானை பத்திரமாக பார்த்துக்கொள்ள வேண்டும் என்று நான் சொன்னதாக உனது தந்தை அனந்த பட்டரிடம் கூறு!” என்றவன் அங்கிருந்து மீண்டும் ஓடிச் செல்லத் துவங்கினான்.

அவன் ஓடிச் செல்வதை திகைப்புடன் நோக்கிக் கொண்டிருந்தாள் அஞ்சிலை அணங்கு.

சற்றுத் தொலைவே சென்றிருப்பான், ஜெயவர்மன். அவனை வழிமறித்தனர், பிரக்ஞுதாராவும், ஜினிங்கும்.

“எனது கண்களை உன்னால் தவிர்க்கவே முடியாது, ஜெயவர்மா. நீதான் தேவ உடும்பரத்தை எங்களுக்கு பெற்றுத்தரப் போகிறாய்! வா என் பின்னால்!” தனது நோக்கு வர்மத்தால், அவனை பந்தனம் செய்ய எண்ணி அவனை நோக்கினாள்.

அவள் கண்களை தவிர்த்தபடி பேசினான் ஜெயவர்மன்.

"பிரக்ஞுதாரா! நீங்கள் என்னை வசியம் செய்யத் தேவையில்லை. தேவ உடும்பர சிலையை நானாகவே உங்களுக்குத் தருகிறேன். உங்கள் புத்த மார்க்கத்தையும் ஏற்று உங்களுடன் வருகிறேன். ஆனால் எனது பல்லவ அரச குடும்பத்தை நீங்கள் விட்டுவிட வேண்டும்! அந்த நிபந்தனையின் கீழ் நான் தேவ உடும்பரத்தை எடுத்துக் கொண்டு உங்களுடன் வருகிறேன்!” - ஜெயவர்மன் கூறினான்.

“நல்லது ஜெயவர்மா! உன்னை இருகரம் விரித்து எங்கள் மகாயான மார்க்கத்திற்கு வரவேற்கிறோம். நீயே தேவ உடும்பரத்தைத் தருகிறேன் என்று சொன்ன பிறகு, உன் குடும்பத்தை நான் ஏன் தொல்லை செய்யப் போகிறேன்!”

பிரக்ஞுதாரா அவனது சிரசில் தனது கையை வைத்து ஆசிர்வதித்தாள். “இனி நீ எனது சீடன்! மகாயான தத்துவத்தை பரப்பி பேரும் புகழும் அடைவாய். சீனத்தில் உனக்கு பெரும் புகழ் காத்திருக்கிறது!” பிரக்ஞுதாரா கூறினாள்.

https://telegram.me/aedahamlibrary

தன்னை பிரக்ஞுதாராவிடம் ஒப்படைத்து அவளது வசியத்தில் இருந்து தன்னை காத்துக்கொண்டான் ஜெயவர்மன். தனது குடும்பத்தை அவளது பிடியில் இருந்து காக்க வேண்டுமென்றால், தான் அவளிடம் சரணாகதி அடைய வேண்டும் என்று தீர்மானித்திருந்தான். விடிவதற்கு முன்பாக தனது ஆட்கள் கொண்டு வந்து வைத்திருந்த தேக்கு மரப் பெட்டகம் ஒன்றைத் திறந்து, தான் கொண்டு வந்திருந்த அத்திமலையானின் சிலையை பிரக்ஞுதாராவுக்கு காட்டியதும் அவள் பரமானந்தத்தில் திளைத்தாள்.

“இனி நாம் சீனம் செல்லலாம்...” பிரக்ஞுதாரா கூறியதும், ஜினிங்கும் உற்சாகம் அடைந்தான்.

அத்திமலையானின் சிலையுடன், தன்னையே தியாகம் செய்து பல்லவத்தைக் காப்பாற்ற, பிரக்ஞுதாராவின் பின்பாக சென்று கொண்டிருந்தான், ஜெயவர்மன்.

‘என்னை மன்னித்துவிடு அத்திமலையா! இனி நான் உனது ஆலயத்திற்கு எப்போதும் வரப் போவதில்லை. இது எனது விதி!' தனக்குள் புலம்பியபடி சென்றான், ஜெயவர்மன்.

'சாயா! நீயும் என்னை மன்னித்துவிடு!' என்றபடி சென்று கொண்டிருந்தான், ஜெயவர்மன்...

சரித்திரத்தில் போதிதர்மாவாக மறுபிறவி எடுக்க உள்ளான், நமது ஜெயவர்மன்.

இளவரசன் ஜெயவர்மனாக பல்லவ மக்களின் அன்பினைப் பெற்றவன், போதிதர்மா என்னும் மகாயான பௌத்தத்தின் சித்தனாக மாறுவதற்காக சீனம் சென்று கொண்டிருந்தான், ஜெயவர்மன்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 51. புதிய அத்தி

மறுநாள் –

காஞ்சி சந்நிதியை திறந்த பட்டர்கள் அலறியடித்துக் கொண்டு அதிகாரி வரதநாராயண நம்பியிடம் ஓடினர்.

“தேவ உடும்பரத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட தேவராஜனின் சிலையைக் காணவில்லை!”

பட்டர்கள் கூற, அவர் அதிர்ச்சியுடன் சன்னிதிக்கு விரைந்தார். அதற்குள் இளவரசன் விஜயவர்மன், அபயகிரி மற்றும் வீரகொசுவனின் சடலங்களும் கைப்பற்றப்பட்டன. அதிகாரிகள் பதைபதைப்புடன் அரண்மனைக்குச் செல்ல அங்கே அரண்மனையே அல்லோலகல்லோலப் பட்டுக்கொண்டிருந்தது. இளவரசன் ஜெயவர்மனை காணவில்லை... காவலர்கள் அவனை நாலாதிக்கிலும் தேடிக் கொண்டிருந்தனர்.

“கடைசியில் ஜெயவர்மன் தான் தனது தம்பி விஜயவர்மனையும், வீரகொசுவனையும் கொன்றுவிட்டு, அத்திமலைத் தேவனையும் கடத்திச் சென்றிருக்கிறான். தான் பல்லவ மன்னனாகத் திகழ ஆசைப்பட்டிருக்கிறான். அது நடக்காது என்பதால் வளத்தை கொடுக்கும் அத்தியுடன் மகாராஜாவாகத் திகழ ஒரு சாம்ராஜ்யத்தை உருவாக்கச் சென்றிருக்கிறான்!” என்று அதிகாரிகளிடம் ரகசியமாகக் கூறினான் அவனிசிம்மன்.

முக்கூடல் கடிகையில் நாட்டியக்காரி வித்யுதாவை நாசம் செய்ய விஜயவர்மன் முயன்ற போது, அவனை தடுத்து, நையப்புடைத்து, விரட்டினானே, ஜெயவர்மன். அப்போது அவன் கூறிய வார்த்தைகள் அவனுக்கே எதிராகத் திரும்பின.

இனி எனது சிற்றப்பன் விஷ்ணுவர்மனுக்கு ஒரு மகன்தான்! என்று கூறி ஜெயவர்மன் விஜயவர்மனை கொலை செய்வேன் என்று சபதமிட்டதாக சாட்சிகள் கூறினார்கள்.

தேவ உடும்பர வரதரை ஜெயவர்மன் கடத்திச் சென்ற விஷயம் மக்களுக்குத் தெரியாமல் ரகசியமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று உத்தரவிட்டான். வரதநாராயண நம்பியை அழைத்து அதிகாரிகளுடன் அவரை மாலிருஞ்சோலை மலைக்கு அனுப்பி அங்கே மேலே வரதநாராயணராக அருள் பாலித்த மூல மூர்த்தியை, அத்தி

https://telegram.me/aedahamlibrary

வரதராக, அத்திமலையின் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்தான்.

கணவன் ஜெயவர்மன் திரும்பி வருவான் என்று சாயாதேவியும் காத்திருக்கிறாள். அவளுக்கு இப்போது துணையாக இருப்பது ராஜவர்மனும், ராஜஸ்ரீயும்தான். ஜெயவர்மன் நிச்சயம் தன்னைத் தேடி வருவான் என்று ராஜஸ்ரீயிடம் கூறிவருகிறாள், சாயா.

இன்னும் ஒரு பெண்ணும் ஜெயவர்மன் தன்னைத் தேடி வருவான் என்று காத்திருக்கிறாள். அவள்தான் அனந்த பட்டரின் மகள் அஞ்சிலை அணங்கு. ஜெயவர்மன் தன்னிடம் கொடுத்திருந்த சுவடியை ஒரு துணியில் சுற்றி தங்கள் வீட்டு ஆராதனை அறையில் உள்ள தனது பெட்டகத்தில் பத்திரமாக வைத்திருக்கிறாள். அந்த சுவடியில் இருப்பதை அவளே இன்னும் வாசிக்கவில்லை. ஜெயவர்மன் திருப்பிக் கேட்டால் மட்டுமே, அதைத் தர வேண்டும் என்று அவனுக்காகக் காத்திருக்கிறாள், அஞ்சிலை அணங்கு.

(முற்றும்)